வெளியீடு : 25-11-2011 Issued: 25-11-2011

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஆகஸ்ட் 18, 2011—தொகுதி 8—எண் 1
Thursday the 18th August, 2011—Volume 8—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ.3.00] [Price Rs. 3.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நடவடிக்கைக் குறிப்புகள்

தொகுதி 8 (எண் 1), நாள்: 18-8-2011

பிழைத் திருத்தச் சீட்டு

பக்க எண்.	தற்போது உள்ளது	திருத்தம்
உள்ளடக்கம் பக்கம் iii	திரு. எம்.கே. செல்வராஜ்	திரு. எம்.கே. செல்வராஜ்
77 முதல் 86 வரை	கேரி ஓவர் பெயர் — செல்வி கே. பாரதிபாரதி	செல்வி கே. பாலபாரதி
121	கேரி ஓவர் பெயர் — திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்	கேரி ஓவர் பெயர் தேவையில்லை
144	கேரி ஓவர் பெயர் — மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா	செல்வி ஜெ ஜெயலலிதா
153	கேரி ஓவர் பெயர் — திரு. கே.பி. முனுசாமி	செல்வி ஜெ ஜெயலலிதா
155	கேரி ஓவர் பெயர் மாண்புமிகு பேரவைத் தலைவர்	கேரி ஓவர் பெயர் தேவையில்லை

சட்டமன்ற பேரவை
தமிழ்நாடு
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

18–8–2011

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	v-x
Governor and Council of Ministers	xi-xv
பேரவைத் தலைவர், துணைத் தலைவர் மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xvii-xx
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxi-xxxi
1. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—	
தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) நீக்கச் சட்டமுன்வடிவு, 2011	1-3
*மாண்புமிகு திரு. பி. தங்கமணி	1,3
*திரு. க. பாலகிருஷ்ணன்	2
திரு. எம். ஆறுமுகம்	2
டாக்டர் க. கிருஷ்ணசாமி	2
2. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி	3-155
(அ) கோரிக்கை எண் 14 – சாரிசக்தித் துறை (ஆ) கோரிக்கை எண் 44– சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை (இ) கோரிக்கை எண் 27– தொழில் துறை	–தொடர்ச்சி 3-38
மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்	3-30 32, 34-35
திரு. ப. மோகன்	30

பக்கங்கள்

2. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை (ஆ) கோரிக்கை எண் 44 – சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை (இ) கோரிக்கை எண் 27 – தொழில் துறை	–தொடர்ச்சி
மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி	30-31
டாக்டர் க. கிருஷ்ணசாமி	31-33
*மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு	33
திரு. சு. குணசேகரன்	33-34
*திரு. க. பாலகிருஷ்ணன்	35
*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	35-36
மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்	36
(ஈ) கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (உ) கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	–தொடர்ச்சி 38-155
மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி	38-39,49,57, 69 125-154
*திரு. கு. நல்லதம்பி	58-65
*திரு. கே.பி. அன்பழகன்	66-76
மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா	71,138, 143-144 152-153

பக்கங்கள்

2. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(ஈ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
(உ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
} - தொடர்ச்சி

செல்வி கே. பாலபாரதி	44,54, 76-86
*திருமதி பா. வளர்மதி	86-94
*திரு. கே. உலகநாதன்	44-45,54-55, 94-98
முனைவர் செ.ரு. தமிழரசன்	98-104
*திருமதி எஸ். விஜயதரணி	48-49,57, 104-109
* திரு. எம்.கே. செல்வராஜ்	109-116
*திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்	43, 117-125

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 156

சட்டமன்ற பேரவை
தமிழ்நாடு
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:

பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் துறை, உள் துறை

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள்

3. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

4. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கச்சண்டு

5. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

7. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

8. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

வணிக வரிகள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

9. அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

–

10. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, பின்னணுவியல் மற்றும் அறிவியல்-தொழில்நுட்பவியல்

11. பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்

12. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

13. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

14. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

15. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

16. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

17. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:**

தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

18. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:**

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

TRUTH ALONE TRIUMPHS

19. சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

தேர்தல் அறிக்கை அமலாக்கம் உள்ளிட்ட சிறப்புத் திட்டங்கள் அமலாக்கம்

20. வருவாய்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், எடைகள் – அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

21. செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் திருவாசகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு

22. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்

23. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:**

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

24. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம்:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம்

25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

26. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:**

தகவல் தொழில்நுட்பம்

27. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

28. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம்

29. மீன் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:**

மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

TRUTH ALONE TRIUMPHS

30. உணவுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. புத்திசந்திரன்:** *உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு*
31. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** *தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*
32. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்*
33. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** *கால்நடை பராமரிப்பு, பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*
34. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** *பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள் மற்றும் அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு) உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

   Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home

2. **Minister for Finance** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

   Finance, Planning, Legislative Assembly, Elections and Passports

3. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K.A. Sengottaiyan:**

   Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development

4. **Minister for Electricity & Prohibition and Excise** .. **The Hon. Thiru Natham R. Viswanathan:**

   Electricity and Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses

5. **Minister for Municipal Administration & Rural Development** .. **The Hon. Thiru K.P. Munusamy:**

   Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

6. Minister for Rural Industries	..	**The Hon. Thiru C. Shanmugavelu:** Rural Industries including Cottage Industries and Small Industries
7. Minister for Housing and Urban Development	..	**The Hon. Thiru R. Vaithilingam:** Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority
8. Minister for Commercial Taxes and Registration	..	**The Hon. Thiru Agri S.S. Krishnamoorthy:** Commercial Taxes & Registration and Stamp Act
9. Minister	..	**The Hon. Thiru C. Karuppasamy:**
10. Minister for Higher Education	..	**The Hon. Thiru P. Palaniappan:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology
11. Minister for School Education, Sports & Youth Welfare	..	**The Hon. Thiru C.Ve. Shanmugam:** School Education and Archaeology, Sports and Youth Welfare
12. Minister for Co-operation	..	**The Hon. Thiru Sellur K. Raju:** Co-operation, Statistics and Ex-Servicemen Welfare

13. Minister for Forests	..	**The Hon. Thiru K.T. Patchaimal:** Forests and Cinchona
14. Minister for Highways & Minor Ports	..	**The Hon. Thiru Edappadi K. Palanisamy:** Highways & Minor Ports
15. Minister for Hindu Religious and Charitable Endowments	..	**The Hon. Thiru S.P. Shanmuganathan:** Hindu Religious and Charitable Endowments (H.R. & C.E.) and Tamil Official Language & Tamil Culture
16. Minister for Public Works	..	**The Hon. Thiru K.V. Ramalingam:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works
17. Minister for Industries	..	**The Hon. Thiru S.P. Velumani:** Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives
18. Minister for Environment	..	**The Hon. Thiru T.K.M. Chinnayya:** Environment and Pollution Control
19. Minister for Special Programme Implementation	..	**The Hon. Thiru M.C. Sampath:** Implementation of Special Programmes including implementation of the Election Manifesto

20. Minister for Revenue	..	**The Hon. Thiru P. Thangamani:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies
21. Minister for Information, Law, Courts and Prisons	..	**The Hon. Thiru G. Senthamizhan:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press, Law, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption
22. Minister for Khadi and Village Industries	..	**The Hon. Thiru P. Sendur Pandian:** Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan
23. Minister for Tourism	..	**The Hon. Tmt. S. Gokula Indira:** Tourism, Tourism Development Corporation
24. Minister for Social Welfare	..	**The Hon. Tmt. Selvi Ramajayam:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently abled and Social Reforms
25. Minister for Handlooms and Textiles	..	**The Hon. Thiru B.V. Ramanaa:** Handlooms & Textiles
26. Minister for Information Technology	..	**The Hon. Thiru R.B. Udhayakumar:** Information Technology

27. Minister for Adi Dravidar & Tribal Welfare	..	**The Hon. Thiru N. Subramanian:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour
28. Minister for Transport	..	**The Hon. Thiru V. Senthil Balaji:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act
29. Minister for Fisheries	..	**The Hon. Thiru K.A. Jayapal:** Fisheries and Fisheries Development Corporation
30. Minister for Food	..	**The Hon. Thiru Budhichandhiran:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control
31. Minister for Labour	..	**The Hon. Thiru S.T. Chellapandian:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment
32. Minister for Health	..	**The Hon. Dr. V.S. Vijay:** Health, Medical Education and Family Welfare
33. Minister for Animal Husbandry	..	**The Hon. Thiru N.R. Sivapathi:** Animal Husbandry, Milk and Dairy Development
34. Minister for Backward Classes and Minorities Welfare	..	**The Hon. Thiru A. Mohammedjan:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf

சட்டமன்ற பேரவை
தமிழ்நாடு
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

மாற்றுத் தலைவர்கள்#

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

திரு. செ. தாமோதரன்

திரு. எல். வெங்கடேசன்

திரு. ப. டில்லி பாபு

திரு. க. குணசேகரன்

செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்

7-6-2011 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திரு. க. பாலச்சந்நர், பி.ஏ., பி.எல்.	- சிறப்புச் செயலாளர்
திருமதி சீ. நிர்மலா, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ.	- இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.ஏல்.	- இணைச் செயலாளர்
திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல்.	- இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல்.	- துணைச் செயலாளர்
திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ.	- துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ம. பன்னீர் செல்வம், எம்.ஏ.	- துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ஸ. பத்மாவதி, பி.எஸ்சி., எஸ்.ஓ.ஜி.இ.	- குழு அலுவலர்
திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	- துணைச் செயலாளர்
திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல்.	- துணைச் செயலாளர்
திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல்.	- துணைச் செயலாளர்
செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல்.	- துணைச் செயலாளர்
திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	- துணைச் செயலாளர்
திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல்.	- குழு அலுவலர்
திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல்.	- துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. இரா. பழனிச்சாமி, பி.ஏ., பி.எல்.	- குழு அலுவலர்

திரு. க. சந்திரன், பி.ஏ., பி.எல்.	.. குழு அலுவலர்
திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல்.	.. தலைமை நிருபர்
திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல்.	.. சார்புச் செயலாளர்
திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. க. சங்கர், பி.காம்., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திருமதி கோ.மு. வனஜா, எம்.ஏ.	.. தலைமை நிருபர்
திரு. வே. ரவிசங்கர், பி.எஸ்சி., எம்.ஏ., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திரு. கி. சீனிவாசன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.ஜி.எல்., சி.எல்.ஐ.எஸ்.	.. பேரவைத் தலைவரின் தனிச் செயலர்
திரு. ந. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. க. சக்திவேலு, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல்.	.. சார்புச் செயலாளர்
திருமதி க. செந்தாமரை, பி.ஏ.	.. சார்புச் செயலாளர்
திரு. எம். கோபாலகிருஷ்ணன், பி.ஏ.	.. சார்புச் செயலாளர்
திரு. இரா. கோபிநாத், பி.காம்.	.. சார்புச் செயலாளர்
திரு. இராமசோ. மிதிதரன், பி.ஏ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்

திருமதி அ. ராஜலெட்சுமி, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. இரா. விஜயகுமார், பி.ஏ.	..	சார்புச் செயலாளர்
திரு. ப. தேவபிரான், பி.எஸ்சி., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி.	..	தலைமை திருப்பர்
திரு. கு. தண்டபாணி, பி.காம்.	..	செயலாளரின் தனிச் செயலர்

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு.	.. கலசப்பாக்கம்
2.	அசோக், திரு. எம்.கே.	.. வேளச்சேரி
3.	அண்ணாதுரை, திரு. இரா.	.. மதுரை தெற்கு
4.	அப்துல் ரஹீம், திரு. எஸ்.	.. ஆவடி
5.	அரங்கநாதன், திரு. ஆக.	.. கிழ்பென்னாத்தூர்
6.	அருண் சுப்பிரமணியன், திரு. மு.	.. திருத்தணி
7.	அருண் பாண்டியன், திரு. செ.	.. பேராவூரணி
8.	அருள்செல்வன், திரு. ஆர்.	.. மயிலாடுதுறை
9.	அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு.	.. சேலம் வடக்கு
10.	அழகுவேலு, திருமதி க.	.. கள்ளக்குறிச்சி (செவ.)
11.	அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு.	.. திருச்செந்தூர்
12.	அன்பழகன், திரு. க.	.. கும்பகோணம்
13.	அன்பழகன், திரு. கே.பி.	.. பாலக்கோடு
14.	அன்பழகன், திரு. ஜெ.	.. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி
15.	அஸ்லம் பாஷா, திரு. அ.	.. ஆம்பூர்
16.	ஆறுக்குட்டி, திரு. வி.சி.	.. கவுண்டம்பாளையம்
17.	ஆறுமுகம், திரு. எம்.	.. வால்பாறை (செவ.)
18.	ஆனந்தன், திரு. மு.சு.மு.	.. திருப்பூர் வடக்கு
19.	இந்திராகாந்தி, திருமதி த.	.. துறையூர் (செவ.)

20. இராமகிருஷ்ணன், திரு. நா. - கம்பம்
21. இராமச்சந்திரன், திரு. ச. - ஆலந்தூர்
22. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
23. இராமலிங்கம், திரு. கே.வி. - ஈரோடு மேற்கு
24. இராஜி, திரு. வி.எஸ். - செய்யூர் (செ.வ.)
25. இராஜேந்திரன், திரு. இரா. - குறிஞ்சிப்பாடி
26. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
27. உதயகுமார், திரு. ஆர்.பி. - சாத்தூர்
28. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
29. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. - எடப்பாடி
30. கடம்பூர் ராஜு, திரு. - கோவில்பட்டி
31. கணிதா சம்பத், திருமதி எஸ். - மதுராந்தகம் (செ.வ.)
32. கணேசன், திரு. பா. - உத்திரமேரூர்
33. கணேஷ்குமார், திரு. அ. - செஞ்சி
34. கதிரவன், திரு. பி.வி. - உசிலம்பட்டி
35. கந்தன், திரு. கே.பி. - சோழிங்கநல்லூர்
36. கருணாநிதி, திரு. மு. - திருவாரூர்
37. கருப்பசாமி, திரு. ஏ.ர. - அவினாசி (செ.வ.)
38. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரன்கோவில் (செ.வ.)
39. கருப்பையா, திரு. பழ. - துறையூர்
40. கருப்பையா, திரு. மு.வீ. - சோழவந்தான் (செ.வ.)
41. கலை அரசு, திரு. ம. - அணைக்கட்டு
42. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்

43. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்
44. காமராஜ், திரு. என்.வி. .. வேதாரண்யம்
45. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
46. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி
47. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
48. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.ச. .. பர்கூர்
49. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி
50. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்
51. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செ.வ.)
52. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
53. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
54. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்
55. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை
56. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்
57. கோகுல இந்திரா, திருமதி எஸ். .. அண்ணா நகர்
58. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்
59. கோபிநாத், திரு. கே. .. ஒசூர்
60. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
61. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செ.வ.)
62. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
63. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்
64. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்
65. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு

66. சந்திரசேகர், திரு. ஆர். - மணப்பாறை

67. சம்பத், திரு. எம்.சி. - கடலூர்

68. சம்பத்குமார், திரு. கோவி. - வாணியம்பாடி

69. சம்பத்குமார், திரு. ப. - திருச்செங்கோடு

70. சரத்குமார், திரு. ரா. - தென்காசி

71. சவுந்தரராசன், திரு. அ. - பெரம்பூர்

72. சாந்தி, திருமதி ஆர். - சேந்தமங்கலம் (ஆதா.)

73. சாமி, திரு. ஆர். - மேலூர்

74. சிவக்கொழுந்து, திரு. ப. - பண்ருட்டி

75. சிவசங்கர், திரு. எஸ்.என். - குன்னம்

76. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். - நெல்லை

77. சிவபதி, திரு. என்.ஆர். - முசிறி

78. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்

79. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்

80. சின்னையா, திரு. டி.கே.எம். - தாம்பரம்

81. சீனிவாசன், திரு. ஆர். - ஆற்காடு

82. சுந்தரம், திரு. பி.எல். - பவானிசாகர் (செவ.)

83. சுந்தரராஜ், டாக்டர் ச. - பரமக்குடி (செவ.)

84. சுந்தர்ராஜன், திரு. ஆர். - மதுரை மத்தி

85. சுபா, திருமதி ர. - கெங்கவல்லி (செவ.)

86. சுப்பிரமணியன், திரு. ந. - செய்யாறு

87. சுப்பையா, திரு. இ. - அம்பாசமுத்திரம்

88. சுப்ரமணியன், திரு. ந. - கந்தர்வகோட்டை (செவ.)

89. சுரேஷ்குமார், திரு. டி. .. செங்கம் (செ.வ.)
90. செங்குட்டுவன், திரு. டி.. .. வேப்பனஹள்ளி
91. செங்கோட்டையன், திரு. கே.வ. .. கோபிசெட்டிப்பாளையம்
92. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
93. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்
94. செந்தில் பாலாஜி, திரு. வி. .. கரூர்
95. செந்தூர் பாண்டியன், திரு. பூ. .. கடையநல்லூர்
96. செல்லப்பாண்டியன், திரு. சித. .. தூத்துக்குடி.
97. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு
98. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
99. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு
100. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி
101. செழியன், திரு. கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)
102. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி
103. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்
104. சோழன் சித. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி
105. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. வால்குடி
106. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
107. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
108. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
109. தங்கவேலன், திரு. கூட. .. திருவாடானை
110. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு
111. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு

112. தமிழரசன், முனைவர் செகு. .. கீழவைத்திணான்குப்பம் (செவ.)

113. தமிழழகன், திரு. க. .. திட்டக்குடி (செவ.)

114. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செவ.)

115. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி

116. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செவ.)

117. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்

118. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்

119. தாமோதரன், திரு. செ. .. இணத்துக்கடவு

120. திராவிடமணி, திரு. மு. .. கடலூர் (செவ.)

121. தினகரன், திரு. க. .. சூலூர்

122. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்

123. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு

124. துரைமுருகன், திரு. .. காட்பாடி

125. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செவ.)

126. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்

127. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. சாங்கேயம்

128. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்

129. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி

130. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செவ.)

131. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்

132. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்

133. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி

134. நாராயணன், திரு. பி.ஜி. .. பவானி

135. நீலகண்டன், திரு. வ. .. திரு. வி.க. நகர் (செ.வ.)

136. பச்சைமால், திரு. கேடி. .. கன்னியாகுமரி

137. பரமசிவம், திரு. கே.பி. .. பல்லடம்

138. பவுன்ராஜ், திரு. சு. .. பூம்புகார்

139. பழனிசாமி, திரு. கே.சி. .. அரவக்குறிச்சி

140. பழனிச்சாமி, திரு. ச. .. வேடசந்தூர்

141. பழனியப்பன், திரு. பி. .. பாப்பிரெட்டிப்பட்டி

142. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்

143. பாண்டியராஜன், திரு. க. .. விருதுநகர்

144. பாபு முருகவேல், திரு. ரா.ம. .. ஆரணி

145. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை

146. பார்த்தசாரதி, திரு. ப. .. விருகம்பாக்கம்

147. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். .. மேட்டூர்

148. பாலகிருஷ்ணன், திரு. க. .. சிதம்பரம்

149. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்

150. பாஸ்கர், திரு. அ. .. தருமபுரி

151. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்

152. பிரபாகர், திரு. ஜே.சி.டி. .. வில்லிவாக்கம்

153. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்

154. பீம்ராவ், திரு. க. .. மதுரவாயல்

155. புத்திசந்திரன், திரு. .. உதகமண்டலம்

156. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்

157. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்

158. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

159. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

160. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

161. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ஆ.வா.)

162. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை

163. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)

164. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)

165. போஸ், திரு. ஏ.கே. .. மதுரை வடக்கு

166. மகாலிங்கம், திரு. பெ. .. கீழ்வேளூர் (செ.வ.)

167. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)

168. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்

169. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு

170. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

171. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்

172. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்

173. மனோரஞ்சிதம், திருமதி .. ஊத்தங்கரை (செ.வ.)

174. மாதேஸ்வரன், திரு. க. .. ஆத்தூர் (செ.வ.)

175. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்

176. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி

177. முத்துக்குமரன், திரு. எஸ்.பி. .. புதுக்கோட்டை

178. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்

179. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

180. முருகன், திரு. மு. .. முதுகுளத்தூர்

181. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

182. முருகேசன், திரு. து. .. செங்கல்பட்டு

183. முனுசாமி, திரு. கே.பி. .. கிருஷ்ணகிரி

184. முஹம்மத்ஜான், திரு. அ. .. இராணிப்பேட்டை

185. மூர்த்தி, திரு. வி. .. மாதவரம்

186. மைக்கேல் ராயப்பன், திரு. சி. .. ராதாபுரம்

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

188. மோகன், திரு. ப. .. சங்கராபுரம்

189. ரமணா, திரு. பி.வி. .. திருவள்ளூர்

190. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. அந்தியூர்

191. ரமேஷ், திரு. கா.கோ. .. திருப்பத்தூர்

192. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

193. ராமசாமி, திரு. ஆ. .. நிலக்கோட்டை (செ.வ.)

194. ராமச்சந்திரன், திரு. கா. .. குன்னூர்

195. ராமமூர்த்தி, திரு. ஆர். .. விக்கிரவாண்டி

196. ராஜநாயகம், திரு. மு. .. அறந்தாங்கி

197. ராஜலட்சுமி, திருமதி ஆர். .. மயிலாப்பூர்

198. ராஜா, திரு. ஏ.கே.டி. .. திருப்பரங்குன்றம்

199. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

200. ராஜா, திரு. பொன். .. பொன்னேரி (செ.வ.)

201. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

202. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்

203. ரெங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

204. ரெத்தினசாமி, திரு. மு. .. திருவையாறு

205. லாசர், திரு. ஏ. .. பெரியகுளம் (செ.வ.)

206. லிங்கமுத்து, திரு. கு. .. குடியாத்தம் (செ.வ.)

207. வளர்மதி, திருமதி பா. .. ஆயிரம் விளக்கு

208. விஜயகாந்த், திரு. .. விஷிவந்தியம்

209. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

210. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

211. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. .. சங்கரி

212. விஜய், டாக்டர் வி.எஸ். .. வேலூர்

213. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

214. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

215. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

216. வெங்கடேசன், திரு. எல். .. திருக்கோவிலூர்

217. வெற்றிவேல், திரு. பு. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

218. வேணுகோபாலு, திரு. கோஸ்என். .. பழனி

219. வேதாச்சலம், திரு. எஸ். .. அம்பத்தூர்

220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

221. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்

222. வைகைச்செல்வன், டாக்டர் .. அருப்புக்கோட்டை

223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

224. வைரமுத்து, திரு. பி.கே. .. திருமயம்

225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. இராமநாதபுரம்

226. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்

227. ஜானகிராமன், திரு. ஐ. .. வானூர் (செ.வ.)

228. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

229. ஜெயசுதா, திருமதி எல். .. போளூர்

230. ஜெயபால், திரு. கே.ஏ. .. நாகப்பட்டினம்

231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஸ்ரீரங்கம்

232. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

233. ஹரிதாஸ், டாக்டர் த. .. திண்டிவனம் (செ.வ.)

234. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் .. நியமனம்

235. (வெற்றிடம்) .. திருச்சிராப்பள்ளி மேற்கு

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஏ. நவநீதகிருஷ்ணன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சட்டமன்ற பேரவை
தமிழ்நாடு
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 1

2011 ஆகஸ்ட் 18, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்."

என் குடிமக்களை உயர்த்துவேன் என்று மிகுந்த மன உறுதியுடன் முயற்சி செய்யும் ஒருவருக்கு, தெய்வமே வரிந்து கட்டிக்கொண்டு உதவி செய்வதற்காக அவர் முன் வந்து நிற்கும்.

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

1. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

* **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2011 ஆகஸ்ட் 18

* **திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டத்தை நீக்கம் செய்வதற்கான இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து பதிவு செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டத்தை நீக்குவதற்கு முன்மொழியப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் detail ஆகப் பேசாதீர்கள். அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன் என்று சொல்லுங்கள்.

திரு. எம். ஆறுமுகம்: அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன் என்பதைப் பதிவு செய்துகொள்ளவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நானும் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

2011 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கின்றேன்.

2. மானியக் கோரிக்கைகள், 2011-2012, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ)	கோரிக்கை எண் 14 –எரிசக்தித் துறை	தொடர்ச்சி
(ஆ)	கோரிக்கை எண் 44–சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் திறுவனங்கள் துறை	
(இ)	கோரிக்கை எண் 27–தொழில் துறை	

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011–2012 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். 17–8 2011 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்று தனக்காக வீசுவது இல்லை; கடல் தனக்காக வாழ்வது இல்லை; நதிகள் தனக்காக ஓடுவது இல்லை; மலர்கள் தனக்காக மலர்வது இல்லை; கனிகள் தனக்காக காய்ப்பது இல்லை; வானம் தனக்காகப் பொழிவது இல்லை. அதேபோல, எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) தனக்காக வாழாமல், தமிழ்நாட்டு மக்களுடைய நலனுக்காகவும், ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் நலனுக்காகவும் (மேசையைத் தட்டும் ஒலி) தன்னையே அர்ப்பணித்து, தியாகத் தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கின்ற எங்களுடைய உயிரினும் மேலான தலைவி அம்மா அவர்கள், மொத்தத்தில் எங்களுக்கு வழிகாட்டுவதோடு நிற்காமல், வாழ்ந்து காட்டுகிற தலைவியாகவும், வரலாற்றுத் தலைவியாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2011 ஆகஸ்ட் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் சட்டமன்றத் தொகுதியில் என்னை 4 முறை தொடர்ந்து வேட்பாளராக நிறுத்தி வெற்றிபெறச் செய்து, கழகத்திலும் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர், மாவட்ட புரட்சித் தலைவி அம்மா பேரவைச் செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர் என்று கட்சியிலும் உயர் பதவிகள் வழங்கி, 2 முறை அமைச்சராக என்னை நியமனம் செய்து, சாதாரண 1½ கோடி தொண்டர்களில் ஒருவனான எனக்கு இவ்வளவு பெரிய பெருமையை வழங்கிய எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, நானும், என்னுடைய குடும்பத்தாரும், என்னுடைய சுற்றத்தினரும் என்றைக்கும் நன்றிக் கடன்பட்டிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–05

நத்தம் சட்டமன்றத் தொகுதியில், தொடர்ந்து நான்கு முறை என்னை வெற்றி பெறச் செய்த, குறிப்பாக இந்த முறை தமிழகத்தினுடைய முதலமைச்சராக ஒப்புயர்வற்ற தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் வரவேண்டும் என்ற உணர்வோடு, நத்தம் தொகுதியில் என்னை ஏறத்தாழ 53,000 வாக்குகள் வித்தியாசத்திற்குமேல் (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி பெறச் செய்த தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காக உழைத்த அனைவருக்கும் முதற்கண் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்துகொண்டு தங்களுடைய அரிய கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்கியிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ப. பார்த்தசாரதி, திரு. ஜேசிடி. பிரபாகர், திரு. அ. சவுந்தரராசன், திரு. கேபி. பரமசிவம், திரு. எம். ஆறுமுகம், திரு. எம்பிஎஸ். சிவகுப்பிரமணியன், திரு. க. பாண்டியராஜன் ஆகியோருக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் மத்திய அரசின் சட்டத்தின்படி, இரண்டு கம்பெனிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் என்றும், மற்றொன்று தமிழ்நாடு மின்சார தொடரமைப்புக் கழகம் என்றும், இரண்டு கம்பெனிகளும் ஒரே தலைவரின்கீழ் இயங்கி வருகின்றன.

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

தற்பொழுது தமிழ்நாட்டு மக்களுக்கு இருக்கின்ற மிகப் பெரிய பிரச்சினை மின்வெட்டு என்பதை நீங்கள் எல்லோரும் நன்றாக அறிவீர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்பதற்கு முன்பாகவே, ஒட்டுமொத்த தமிழக மக்கள் அனைவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது வைத்துள்ள அளப்பரிய நம்பிக்கையின் காரணமாகவே அவர்களை, மாண்புமிகு முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்தவுடன் (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக மின்வெட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள்.

தமிழகத்தில், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், அவர்களுடைய மோசமான நிர்வாகத்தினாலும், இயலாமையினாலும், திறமையின்மையினாலும், ஊழல் நிறைந்த ஊதாரித்தனமான நிர்வாகத்தினாலும், மின்வெட்டுப் பிரச்சினை தலை விரித்தாடியது. மாண்புமிகு அம்மா அவர்களும் பொது மக்களின் நம்பிக்கைக்கு வீண் போகாமல், அவர் பதவி ஏற்ற மூன்று மாதங்களுக்குள் கடந்த ஆட்சியில் ஏற்பட்ட மின்வெட்டுப் பிரச்சினைகளைக் களைந்தார்கள். அவர்கள் எடுத்திருக்கிற அளப்பரிய முயற்சியின் காரணமாக மின்வெட்டுப் பிரச்சினை படிப்படியாகக் குறைந்து வருவதை நீங்கள் நடைமுறையில் நேரிடையாக உணரலாம்.

அடுத்து, உற்பத்தி நிலவரத்தை உங்களுக்குக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டு மின்சார வாரியத்தின் மொத்த நிறுவு திறன் 10,237 மெகாவாட் ஆகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001–2006 ஆம் ஆட்சிக் காலத்தில் புதியதாக மின் உற்பத்தி நிறுவுத் திறன் 2,047 மெகாவாட்—ஆக ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் அடுத்து வந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, ஐந்து ஆண்டுக் காலத்தில் புதியதாக ஏற்படுத்தப்பட்ட மின் உற்பத்தி நிறுவுத் திறன் வெறும் 206 மெகாவாட்தான் என்பதை இந்த நேரத்தில் உங்களுக்குப் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

முற்பகல் 10—10

நாங்கள் சென்ற முறை எதிர்க் கட்சி வரிசையில் இருந்தபோது, அப்போதைய மின்சாரத் துறை அமைச்சரிடம் நாங்கள் ஆரம்பத்தில் கேட்டோம். முதல்வரிடத்திலேயே பிரச்சினை ஆரம்பமாகிவிட்டது. இந்த மின்சாரப் பிரச்சினையால், புரட்சித் தலைவி அம்மா காலத்திலே ஒளிமயமாகத் திகழ்ந்த தமிழகம் இன்றைக்கு இருள்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2011 ஆகஸ்ட் 18

சூழ்ந்த மாநிலமாக உங்கள் ஆட்சிக் காலத்திலே உருவாகிவிட்டதே, அம்மா ஆட்சிக் காலத்திலே மின்சாரத்தை மிகை உற்பத்தி செய்து, மின்சார உற்பத்தியில் தமிழகம் மிகை மாநிலம் என்ற சூழ்நிலையை, பெருமையை ஏற்படுத்தி, பக்கத்து மாநிலங்களுக்கும் அதை விற்பனை செய்கின்ற ஒரு பொற்கால ஆட்சியாக இருந்ததே (மேசையைத் தட்டும் ஒலி), இப்போது உங்களுடைய ஆட்சியிலே ஏன் இந்த மின் வெட்டுப் பிரச்சினைக்கு உங்களால் தீர்வு காண முடியவில்லை என்று கேட்டதற்கு, அன்றைக்குச் சொன்னார். அதை நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். இது சபைக் குறிப்பிலேயே இருக்கிறது. அன்றைக்கு இருந்த மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார், "நாங்கள் ஆட்சிக்கு வந்து இப்போதுதான் ஒரு வருடம் ஆகின்றது. நீங்கள் இப்போதே கேட்டால் நாங்கள் எப்படிச் சொல்ல முடியும்? எங்களுடைய ஆட்சிக் காலம் முடிகின்றபோது கேளுங்கள், முடிகின்ற வரைகூட காத்திருக்க வேண்டியதில்லை, எங்களுடைய ஆட்சிக் காலத்தின் 4-வது ஆண்டு முடியும்போது, நாங்கள் 40,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்து, நீங்கள் பக்கத்து மாநிலங்களுக்குத்தான் மின்சாரத்தை வழங்கினீர்கள், நாங்கள் தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே வழங்குவோம்" என்று அன்றைக்கு ஆற்காடு வீராசாமி அவர்கள் அள்ளிவிட்டார்கள். ஆனால், அதற்குப் பின்பு, 5-வது ஆண்டு, கடைசி வருடத்தில் அதாவது, 4-வது ஆண்டு முடிந்து 5-வது வருடத்தில் கேட்டாலும் எதற்குமே பதில் சொல்ல இயலவில்லை, முடியவில்லை.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒன்றைச் சொல்ல மாட்டார்கள், சாதாரணமாக. சொல்வதற்கு முன்பு ஒருமுறை அதனுடைய சாதக பாதகங்களைச் சிந்தித்து, merits and demerits-ஐ சிந்தித்து அதற்குப் பின்புதான் தன்னுடைய முடிவுகளை அறிவிப்பார்கள். ஆனால், திமுக. ஆட்சியில் எதற்கெடுத்தாலும், எதையாவது வாய்க்கு வந்ததை அப்படியே சொல்லிவிடுவார்கள். கிராமத்திலே சொல்வார்களே, 'வெந்ததைத் தின்று வந்ததைப் பேசுகின்ற வீணர்கள்' என்று அதைப்போல, எதையாவது வாய்க்கு வந்ததைச் சொல்லிவிடுவார்கள், அது பொறுப்பற்ற பதிலாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்படியல்ல.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இலக்கணமாகத் திகழக்கூடியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே இப்போது இந்தப் பிரச்சினைக்காக ஞானுரை ஏற்று, 'மின்சாரப் பிரச்சினையை, மின்வெட்டுப் பிரச்சினையை தீர்த்தே தீருவேன்' என்று ஞானுரை ஏற்று அதற்காக இந்த 90 நாட்களுக்குள் அம்மா அவர்கள், 3 மாதத்திற்குள் இந்தத் துறைக்காக பலமுறை ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, அதற்கு இந்தத் துறை எப்படிச் செயல்பட வேண்டும், எப்படிச் செயல்பட்டால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதற்கு ஒரு நல்ல வழிகாட்டி நெறிமுறைகளை, நல்ல ஆலோசனைகளை, திட்டங்களை, அதுவும் குறுகிய காலத் திட்டம், உடனடியாகச் செய்ய வேண்டிய திட்டம், இடையிலே மின்வெட்டுப் பிரச்சினைக்காக உடனடியாக நடவடிக்கை எடுத்து படிப்படியாகக் குறைப்பதற்கான நடவடிக்கைகள், அடுத்த கட்டமாக மின் வெட்டை முழுமையாக நீக்குவது, அடுத்த கட்டமாக தமிழகம் பலமுற காலத்தில், புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்திலே இருந்ததைப்போல மின் உற்பத்தியில் மிகை மாநிலம் என்ற சொல்லை உருவாக்கி மற்ற மாநிலங்களுக்கும் விநியோகம் செய்கிற சூழ்நிலையை உருவாக்குவது என்ற 3 காலத் திட்டங்களை, 3 திட்டங்களாக ஒவ்வொன்றிற்கும் ஒரு கால நிர்ணயம் செய்து, அதற்காக என்னென்ன திட்டங்களை எடுக்க வேண்டும், என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று எங்களுக்கு வழிகாட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனையின்படி இப்போது நடைபெற்று வருகிற இந்த அரசு, அம்மாவினுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

என்னென்ன நடவடிக்கைகளை எடுத்தோம் என்பதை மட்டும் உங்களுக்கு இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். 90 நாட்களுக்குள் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகளின் காரணமாக இப்போது மின்சார வெட்டு தமிழகத்தில் சென்னை நீங்கலாக, தமிழகத்தினுடைய பிற பகுதிகளில், ஊரகப் பகுதிகளில் 3 மணி நேரமாக இருந்த மின்வெட்டு ஒரு மணி நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முன்பாக இந்த 90 நாட்களில் அம்மா அவர்களுடைய அரசு, போர்க்கால அடிப்படையிலே என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முதல் முறையாக ஒன்றைச் சொன்னார், முதல் ஆய்வுக் கூட்டத்திலேயே. ஏற்கெனவே மின்சார வாரியத்தில் இருக்கின்ற

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2011 ஆகஸ்ட் 18

மொத்த நிறுவுத் திறன்களை, existing installed capacity–அதில் எது எது பழுதடைந்திருக்கிறதோ அந்தப் பழுதுகள் எல்லாம் நீக்கப்பட்டு, உடனடியாக installed capacity—நிறுவுத் திறன்களுடைய முழு சக்தியைப் பயன்படுத்தி உற்பத்தித் திறனை முழுமையாகப் பயன்படுத்திட வேண்டுமென்று ஓர் ஆணை வழங்கினார்கள். அந்த அடிப்படையிலே இன்றைக்கு எடுத்த நடவடிக்கையின் காரணமாக 9–1–2010 முதல் மூடப்பட்டிருந்த வழுதூர் எரிவாயு மின் நிலையம் நிலை–2, 92.2 மெகா வாட் மீண்டும் 17–5–2011 அன்று இயக்கி வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 92.2 மெகா வாட் உற்பத்தி செய்யும் நிலையம் ஓராண்டுக் காலம் பழுதடைந்திருக்கிறது, ஆனால் முந்தைய அரசு அதைப் பற்றி நினைக்கவும் இல்லை; பொறுப்பற்ற அரசு அதைப் பற்றிச் சிந்திக்கவும் இல்லை, அதைப் பற்றி கவலையேபடவில்லை. பொது மக்கள் எக்கேடு கெட்டால் என்ன, தான் பெற்ற மக்கள் மட்டும் நன்றாக இருந்தால் போதும் என்று நினைத்துச் செயல்பட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த அளவிற்குத் தமிழ்நாட்டிலே மின்சார வெட்டுப் பிரச்சினை தலை விரித்து ஆடிக் கொண்டிருக்கிறது? வழுதூரிலே 92.2 மெகா வாட் நிலையம் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது, அதைப் பற்றிச் சிந்தித்தார்களா? ஆனால் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன், உடனே நடவடிக்கை எடுத்து அந்த 92 மெகாவாட் நிலையம் இயக்கத்திற்கு வந்தது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–15

அது மட்டுமல்ல, கடந்த ஓராண்டுக் காலமாக 17–7–2010 முதல் மூடப்பட்டிருந்த குற்றாலம் எரிவாயு மின் நிலையத்தில் 101 மெகாவாட் பாரத மிகு மின் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட புதிய எரிவாயு இணைப்பான் மாற்றப்பட்டு 28–5–2011-ல் மீண்டும் இயக்கி வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) குற்றாலத்தில் 101 மெகாவாட் ஓராண்டுக் காலம் பழுதடைந்திருக்கிறது. ஏதாவது முயற்சி எடுத்தார்களா? ஆனால் அம்மா பொறுப்பேற்றதற்குப் பின்பு எடுத்த நடவடிக்கையின் காரணமாக அப்போதைக்கப்போது நேரடியாக கவனம் செலுத்தி இந்தத் துறையில் இருக்கிற அதிகாரிகள், அமைச்சர்கள் உட்பட அப்போது நான் போட்ட உத்தரவு ஆணை என்னவானது? ஆணை போடுவதோடு மட்டுமல்லாமல் அந்த ஆணையைச் செயல்படுத்துவதற்கு இந்தத் துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைக் கண்காணித்ததன் விளைவாக (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

இவையெல்லாம் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. 101 மெகாவாட் எரிவாயு மின் நிலையம், அதுவும் இயக்கி வைக்கப்பட்டது. அதேபோல, Gare Pelma என்று ஒரு நிலக்கரிச் சுரங்கம் மத்திய அரசுக்கும் நமக்கும் சொந்தம், 73 சதவிகிதம், 27 சதவிகிதம் என்ற வகையில். இதுவும் ஏறத்தாழ 4 ஆண்டுகாலமாக கிடப்பில் இருக்கிறது. திமுக. ஆட்சியிலே அக்கறை எடுத்திருந்தால் இந்த Gare Pelma Coal Mines, அதாவது நிலக்கரிச் சுரங்கத்தை மத்திய அரசு வழங்குகிறது. ஆனால் அவர்களுக்கு royalty கொடுத்திட வேண்டும். அந்த நிலக்கரிச் சுரங்கத்தை நாம் பயன்படுத்தி மின்சார உற்பத்தியைத் தொடங்க வேண்டும். இதற்கு அன்றைக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து இருந்தால், அன்றைக்கே இந்த உற்பத்தியைத் தொடங்கி அந்த ஆட்டிக் காலத்திலேயே 630 மெகாவாட் நமக்குக் கிடைத்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதை அந்த அரசு செய்யத் தவறிவிட்டது. ஆனால், அம்மா அவர்கள் வந்ததற்குப் பின்பு அதற்கென்று பல முயற்சிகளை எடுத்து அதற்குப் பின்பு இப்போது அந்தப் பிரச்சினைக்கு ஒரு தனியார் துறையின்மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, இறுதி செய்து இப்போது அந்த ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மிக விரைவிலே அங்கே உற்பத்தி தொடங்கும். அதுவும் 630 மெகாவாட் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு யூனிட் ஒன்றுக்கு 1 ரூபாய் 99 காசு விலையிலேயே கிடைக்க இருக்கிறது என்பதை உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாம் இப்போது உற்பத்தியிலே மட்டுமல்ல, உற்பத்திக்கு இணையாக parallel activities, விநியோகத்திலும் அங்கே கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட வேண்டுமென்று அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதனாலே, ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டிருந்த அந்தப் பணிகள், distribution, அதாவது விநியோகத் துறையிலே நடைபெற்றுக் கொண்டிருந்த அந்தப் பணிகள் அமை வேகத்தில் அங்கே உயர்ந்து சென்றன. அந்தப் பணிகள் வேகமில்லாமல் உரிய காலத்தில் முடிக்க முடியாமல் இருந்தன. இப்போது அந்தப் பணிகளையெல்லாம் distribution, மின் பகிர்மானத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற கட்டமைப்பு வசதிகளை, பணிகளையெல்லாம் விரைவுபடுத்தி இரண்டு நாட்களுக்கு முன்பாக அம்மா அவர்கள் தலைமையிலே 16-8-2011 அன்று அம்மா அவர்களே அந்த 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம், அதனைச் சார்ந்த மின்னூட்டிகளையும் ரூபாய் 22.35 கோடி செலவில்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2011 ஆகஸ்ட் 18

சுங்குவார்சத்திரத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய இருக்கரத்தால் தொடங்கி வைத்தார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் அந்தப் பகுதியிலே இருக்கிற load shed பிரச்சினைகள், மின் தடை ஏற்படுகின்ற பிரச்சினைகள் வெகுவாக தீக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, அம்மா ஆட்சிக்கு வந்ததற்குப் பின்பு காற்றாலைகள் மூலமாக 178 மெகாவாட் புதிய உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, மே 2011-லிருந்து எண்ணூர் அனல் மின் நிலையம் தவிர்த்து, அனைத்து அனல் மின் நிலையங்களிலும் செயலாக்கம் கணிசமாக அதிகரிக்கப்பட்டு உற்பத்தித் திறனில் 90 விழுக்காடு, எப்போதும் இல்லாதவகையில் 80, 85 சதவிகிதம்தான் Thermal Power Stations-S, அனல் மின் நிலையங்கள் உற்பத்தி செய்யும். ஆனால், அம்மா அவர்களுடைய கடுமையான முயற்சியின் காரணமாக இப்போது 90 விழுக்காட்டிற்கு மேல் அங்கே உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, Solar Energy-யிலும் அம்மா அவர்கள் வந்ததற்குப் பின்பு 2 மெகாவாட் அளவிற்கு இங்கே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அதேபோல, 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையம், 53.25 கிலோ மீட்டர் நீளமுள்ள கற்றுப் பாதை ஒத்தக்கால் மண்டபத்திலிருந்து பல்லடம் வரை பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. மிக விரைவில் இந்த மாதத்தின் இறுதிக்குள்ளாகவே அம்மா அவர்கள் அதைத் தொடங்க இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-20

அதைப்போல, இந்த 400 கிலோ வோல்ட் சுங்குவார்சத்திரம் துணை மின் நிலையத்தையும், 400 கிலோ வோல்ட் புதுச்சேரி-ஸ்ரீபெரும்புதூர் மின்னூக்கியையும் இணைக்கும் line in and line out, உள்ளே இருந்து வெளியே வருகிற மாதிரி, அதுமாதிரி 16.28 கிலோ மீட்டர் கற்றுப்பாதை நீளமுள்ள இணைப்புப் பாதை பணிகள் முடிவடைய இருக்கின்றன. அதையும் அம்மா அவர்கள் விரைவிலே, இந்த மாதத்திற்குள்ளாகத் தொடங்கி வைக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

அதைப்போல, தாம்பரம் பகுதி சுற்றுவட்டாரத்திலுள்ள தாழ்வழுத்த மின் பகிர்மான குறைபாடுகளைச் சீர்செய்வதற்கு சென்னை (தெற்கு) மண்டலத்தில் இரண்டு புதிய 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களில், ஒன்று கோவிலம்பாக்கத்தில் ரூ.21.22 கோடி செலவிலும் மற்றொன்றை ராஜகீழ்ப்பாக்கத்தில் ரூ.12.89 கோடி செலவிலும் இந்த மாத இறுதிக்குள் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்கள் என்பதை உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, பவானி-கட்டளை தடுப்பணை 2.15 மெகாவாட் அதாவது 30 மெகா வோல்ட். இது நீர் மின் உற்பத்தி. 400 கோடி ரூபாய் செலவில் புனல் மின்நிலையத்தில் அலகு-I 15 மெகா வாட் வரும் செப்டம்பர் மாதம்—அதிலே இரண்டு பகுதிகள் 15 மெகாவாட் விதம் 2— அதிலே முதல் பகுதி வருகின்ற செப்டம்பர் மாதம், அதாவது அடுத்த மாதத்திற்குள் உற்பத்தியைத் தொடங்கவிருக்கிறது. அதை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைக்க இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மொத்தத்தில், சென்ற ஆட்சியில், கலவரமாக இருந்த மின்சாரம் இன்றைக்கு நிலை மாறி, கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கிறது, மின் நிலவரம். கலவரமாக இருந்த நிலவரம் மாறி இன்றைக்கு மின் நிலவரம் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இது 90 நாட் களுக்குள் எடுத்த நடவடிக்கைகள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்வதெல்லாம் இந்த 90 நாட்களுக்குள் எடுத்த நடவடிக்கையை, கடந்த 5 ஆண்டுக் காலத்திலே இருந்த தி.மு.க. அரசு எடுக்கவில்லை. 90 நாட்கள் சாதனையைக்கூட கடந்த 5 ஆண்டுக் காலத்திலே சாதிக்க முடியாத அந்த மோசமான மக்கள் விரோத மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியை மக்கள் இன்றைக்கு நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதன் வெளிப்பாடுதான் கடந்த தேர்தல்.

அதுமட்டுமல்ல, மின்வெட்டு இதற்கடுத்து உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கை. அம்மா அவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கையாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்; எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். 2012, ஆகஸ்ட் மாதத்திற்குள் மின்வெட்டு முழுமையாக நீக்கப்பட வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2011 ஆகஸ்ட் 18

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததன்படி 2012, ஆகஸ்ட் மாதத்தில் முழுமையாக மின்வெட்டை நீக்குவதற்கு இந்தத் துறை குதிரைத் திறன் வேகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த திமுக ஆட்சியிலே சண்டிக் குதிரையாக இருந்த இத்துறை, அம்மாவினுடைய ஆட்சியிலே இன்றைக்கு ரேஸ் குதிரையாக (மேசையைத் தட்டும் ஒலி) மாறி விரைவாக ஓட ஆரம்பித்திருக்கிறது. நிச்சயமாக வெற்றி இலக்கை எட்டும் என்பதை உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, அதற்குரிய நடவடிக்கைகள் என்ன, எதற்காக, ஏன் அந்த யோசனைகளை, அதனுடைய merits and de-merits, சாத்தியக்கூறுகள் எல்லாம் ஆய்வு செய்துதான் அறிவிப்பார்கள் என்று சொல்வதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். இதை அறிவிப்பதற்கு முன்பு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியும், அக்கறையும் அளப்பரியது. அதனுடைய விளைவு என்ன என்பதையும், இப்போது இருக்கின்ற வாய்ப்புகளைக் கண்டறிந்ததற்கு பின்புதான் அதை அறிவித்திருக்கிறார்கள். அதுதான் 2012, ஆகஸ்ட் மாதத்தில் மின்சார வெட்டினை முழுமையாக நீக்க முடியும் என்பதற்கு சில ஆதாரங்களை உங்களிடத்தில் முன்வைக்க விரும்புகிறேன். வடசென்னை மின் உற்பத்தியில் ஏறத்தாழ 4,640 மெகா வாட் 2012–இல் உற்பத்திக்கு வர இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே ஒருசில பணிகள் எல்லாம் அம்மா ஆட்சிக்காலத்தில் தொடங்கிய பணிகள்கூட அவர்கள் முடிக்கவே இல்லை. எந்த வேளையிலும் அதைப் பற்றி கவலைப்படவில்லை. இதையெல்லாம் முழுமையாக இந்தத் துறையின்மீது அக்கறை எடுத்து, தமிழக மக்கள்மீது உண்மையான அக்கறை இருந்திருந்தால் இதையெல்லாம் சென்ற ஆட்சிக் காலத்திலேயே உற்பத்திக்கு வந்து, மின்சார வெட்டுப் பிரச்சினையே இருந்திருக்க முடியாது. ஆனால், அவர்களுடைய கவனக்குறைவின் காரணமாகவும் அல்லது மக்களைக் காட்டிலும் அவர்களுடைய சொந்த மக்கள் பிரச்சினையில் நேரத்தை அதிகமாக செலவழிக்க வேண்டிய காரணத்தினாலும் அவர்கள் இதிலே கவனம் செலுத்த முடியாமல் போய்விட்டது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதனால் மக்களுக்குச் செய்த துரோகத்தை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, வருகின்ற ஆண்டுகளில் வட சென்னையிலே நிலை–II, ஏறத்தாழ 1200 மெகா

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

வாட். அலகு–1–இல் 600 மெகா வாட். Phase–II, Unit–II ஆக 1200 மெகா வாட் ஜனவரி, 2012–ல் அலகு–2–ம், பிப்ரவரி, 2012–ல் அலகு–1–ம் உற்பத்தி நிச்சயமாகத் தொடங்கும். அதைப்போல, மார்ச், 2012–இல் மேட்டூர் நிலை–3 மூலமாக 600 மெகா வாட் உற்பத்தி தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–25

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், என்டிபிசி. மூலமாக கூட்டு முயற்சியிலே 1500 மெகாவாட். அங்கே உற்பத்தி செய்யப்படுவதில், 1040 மெகாவாட் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குரிய பங்கு கிடைக்கும். அதேபோல, தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தோடு கூட்டு ஒப்பந்தத்திலே நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கு 339 மெகாவாட். மின்சாரம் டிசம்பர் 2012–லே கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, சிறிய மற்றும் மிகச் சிறிய 7 புனல் மின் திட்டங்கள் மூலம் 90 மெகாவாட் மின்சாரம் டிசம்பர் 2011-க்குள்ளே கிடைப்பதற்குரிய வாய்ப்பு உள்ளது. நிச்சயமாகக் கிடைக்கும்.

அதேபோல, கூடங்குளத்திலே, இது ஒன்றுதான் எங்களுடைய கையிலே இல்லை. மத்திய அரசினுடைய கையிலே இருக்கிறது. இருந்தாலும் ஷெட்யூல்படி, அக்டோபர் 2011–லே யூனிட். 1–ம், மார்ச் 2012–ல் யூனிட் 2–ம் உற்பத்தி செய்ய வேண்டும். அதில் தமிழ்நாட்டினுடைய அளவாக, மின்சார வாரியத்திற்குக் கிடைக்க வேண்டிய பங்கு 935 மெகாவாட். ஆனால், அதிலே ஏதோ ஒருசில காரணங்களால் காலதாமதம் ஆகக்கூடும் என்று அவர்கள் சொல்கிறார்கள். அவ்வாறு காலதாமதமானால் அதற்கு அம்மா அவர்களுடைய அரசு காரணம் அல்ல. அப்படி காலதாமதமானால் அதற்கு மத்திய அரசுதான் பொறுப்பு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, கல்பாக்கத்திலே கிடைக்கின்ற கூடுதல் அணு மின் நிலையத்திலிருந்து அதில் கிடைக்க வேண்டிய பங்கு 167 மெகாவாட். 2012 மார்ச்சிலே கிடைக்கும். அதேபோல, ஆகஸ்ட் 2012-லே யூனிட் 1–ம், ஜனவரி 2012–லே யூனிட் 2–ம் நெய்வேலியிலிருந்து 500 மெகாவாட் உற்பத்தி செய்ததிலே, நம்முடைய பங்கு 230 மெகாவாட் அதிலே கிடைக்க இருக்கிறது. ஆக மொத்தம் 4640 மெகாவாட் நமக்கு நிச்சயமாகக் கிடைக்கும். அதன்மூலமாக அம்மா அவர்கள்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2011 ஆகஸ்ட் 18

அறிவித்தபடி 2012 ஆகஸ்ட்டில் நிச்சயமாக மின்வெட்டு முழுமையாக நீக்கப்படும் என்பதை உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, அதேமாதிரி இதற்கு அடுத்தக் கட்டம் உடனடி நடவடிக்கை. அதற்கு அடுத்தபடியாக படிப்படியாக மின்வெட்டைக் குறைத்து, முழுமையாக நீக்கி, அடுத்த கட்டம் 'தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய நீண்டகால திட்டங்களையும் அம்மா அவர்கள் செயல்படுத்த வேண்டுமென்று இங்கே அறிவுறுத்தி அதற்கான திட்டங்களையும் வடிவமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைநோக்குப் பார்வையுடன் அம்மா அவர்கள் புதியதாகத் திட்டங்களைச் செயல்படுத்தச் சொல்லியிருப்பது, ஆணையிட்டிருப்பது 5100 மெகாவாட்டிற்கான உற்பத்திகளை நமது ஆட்சிக் காலத்திலே தொடங்க வேண்டுமென்று அம்மா அவர்கள் அடுத்த ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

அந்தத் திட்டங்களின் விவரம், வடசென்னையில் ஸ்டேஜ் 3, 800 மெகாவாட் நமக்கு பங்கு கிடைக்கக்கூடிய அந்த வடசென்னை உற்பத்தி நிலையப் பணிகளைத் தொடங்கி 2015-க்குள் முடிக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதேபோல, வடசென்னை ஸ்டேஜ் 4-ல், 1600 மெகாவாட் உற்பத்தி தொடங்கப்பட்டு 2016-க்குள் முடிக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள், அம்மா ஆட்சிக் காலத்திற்குள்ளே. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, உடன்குடியிலே 1200 மெகாவாட் உற்பத்தியைத் தொடங்கி 2016-க்குள் முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எண்ணூர் இணைப்பிலே 600 மெகாவாட் உற்பத்தியைத் தொடங்கி 2016-க்குள் முடிக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, குந்தா நீரேற்று புனல் மின் நிலையத்தை 2500 மெகாவாட் 2016-க்குள் முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆக மொத்தம், 5100 மெகாவாட் 2016-க்குள் அம்மா அவர்கள் ஆட்சிக்காலத்திற்குள்ளாக இந்தத் திட்டங்களைத் தொடங்கி முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சிலபேர் நினைக்கக்கூடும், சொல்லக்கூடும், அம்மா ஆட்சிக் காலத்திற்குள்ளே என்று சொன்னால், ஏதோ அம்மா ஆட்சிக்காலம் 2016-ல் முடியப்போகிறது

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

என்று யாரும் நினைக்காதீர்கள். அம்மா ஆட்சிக்காலம் எத்தனை தேர்தல்கள் வந்தாலும்-இனி ஒவ்வொரு முறை தேர்தல் வந்தாலும் வரும்போது அம்மா ஆட்சிதான். ஆனால், நான் சொல்வது அம்மா காலத்தில் முடிக்கப்படும் என்று சொல்வது இந்த ஆட்சிக்குள் முடிக்கப்படும். 2016-க்குள், இந்தச் சட்டமன்ற ஆயுள்காலத்திற்குள்ளே முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். குந்தா நீரேற்று புனல் மின் நிலையம், அதில் ஒன்றில் மட்டும் சில நடைகள் இருக்கின்றன. அதிலும் நம்முடைய அம்மா அவர்கள் அரசு எடுக்கும் முயற்சிகள் காரணமாக இவையெல்லாம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுவிடும். வழக்கம்போல நமக்கு நத்தியாக இருக்கின்ற மத்திய அரசு அதிலே குறுக்கே நிற்கிறது. ஏற்கெனவே, நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் கேட்டபோதுகூட இவை விளக்கங்களைச் சொல்லியிருக்கிறேன். குந்தா நீரேற்று மின் நிலையம் என்பது மிக முக்கியமான, தமிழகத்தினுடைய மின் உற்பத்தி பிரச்சினையில் மிக முக்கிய பங்கு வகிக்கக்கூடிய ஒரு நல்லத் திட்டம். காடம்பாறையிலே எப்படி ஒரு நீர் நிலை உருவாக்கி—அதாவது காற்றாலை மூலமாகக் கிடைக்கின்ற மின் உற்பத்தியை இரவு நேரங்களில் பயன்படுத்த முடியவில்லை. அப்படிப்பட்ட அந்த மின்சார உற்பத்தியை, காற்றாலை மூலமாக இரவு நேரங்களில் கிடைக்கக்கூடிய அந்த மின் உற்பத்தியைப் பயன்படுத்தி கீழே இருக்கின்ற தண்ணீரை, அணைக்கட்டில் இருக்கின்ற தண்ணீரை பம்ப்செட் மூலம் மேலே ஏற்றிவிடுகிறோம். மேலே ஏற்றியதற்குப் பின்பு இரவு நேரம் முழுவதும் ஏற்றிவிட்டு காற்றாலை மின்சாரத்தைப் பயன்படுத்தி பகலிலே தேவைப்பட்ட அந்த peak hours-ல் நமக்குத் தேவையான நேரத்திலே அந்த மின்சார உற்பத்தி அங்கு கிடைக்கிறது. ஆக, இது ஒரு அற்புதமான திட்டம்.

முற்பகல் 10-30

காடம்பாறை வெற்றிகரமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இதற்கும் அதே concept தான். இன்றைக்கு குந்தாவிலே உற்பத்திச் செய்யும்பொழுது 1200 கோடி ரூபாயில் 500 மெகாவாட். அதிலே உற்பத்திச் செலவும் குறைவு, முதலீடு செலவும் குறைவு. Cost of production, unit cost-உற்பத்தியினுடைய செலவும் குறைவு. ஆக, இப்படிப்பட்ட ஒரு அற்புதமான திட்டத்தைத் தேவையில்லாமல் மத்திய அரசு தடுக்கிறது. என்னவென்று பார்த்தால் காவிரி நதிநீர் ஆணையத்திடம் நீங்கள் அனுமதி

பெறவேண்டும். முதலிலே அவர்களிடம் அனுமதி பெறவேண்டும் என்கிறார்கள். காவிரி நதிநீர் ஆணையம் மற்றொன்றையும் தேவையில்லாமல் உள்ளே புகுத்துகிறது. பக்கத்திலே இருக்கின்ற காவிரி ஆற்றோடு தொடர்புடைய கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களிலிருந்து நீங்கள் அனுமதிபெற வேண்டுமென்று தேவையில்லாமல் அங்கே முட்டுக்கட்டைப் போடுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் அது நேரடியாக காவிரியினுடைய நீரே கிடையாது. அந்த குந்தா ஆறு காவிரி ஆற்றின், துணை ஆற்றின் துணை ஆறு. காவிரி நீருக்கும் அதற்கும் நேரடியாக தொடர்பே கிடையாது. அதேபோல, அந்த நீர்மின் திட்டத்தைப் பயன்படுத்துவதற்கு, இந்த நீருக்காக இன்னும் சொல்லப்போனால் அந்த குந்தா நீர் ஏற்றும் மின்நிலையம் அமைந்திருப்பது தமிழகத்தினுடைய உட்பகுதி. Border-ல்கூட இல்லை. சம்பந்தமே இல்லாமல் நமது தண்ணீர், நமது இடம், ஆனால் நாம் அனுமதி வாங்க வேண்டியது, பிற மாநிலங்களிடமிருந்தாம். இது என்ன வேடிக்கை என்பதே புரியவில்லை. ஆனாலும்கூட நமது அம்மா அவர்களும் விடாமுயற்சியாக, பிரதம மந்திரியை சந்தித்தபொழுதுகூட கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இன்னும்கூட ஏற்கெனவே, அடுத்தக்கட்ட தொடர் முயற்சி எடுத்து வருகிறார்கள். நிச்சயம் அதிலே மத்திய அரசுடன் போராடி அந்த அனுமதியைப் பெற்று அதற்கு அடுத்தபடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய முயற்சிகளை அம்மாவினுடைய அரசு தொடர்ந்து எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் எல்லாத் திட்டங்களிலும் அனுமதி நமக்கு உதவிதான் செய்யவில்லை என்று சொன்னாலும் உபத்திரம் செய்யாமலாவது இருக்கலாம் என்று கிராமத்திலே சொல்வார்கள் இல்லையா? தேவையில்லாமல் முட்டுக்கட்டை போடுவதையாவது தவிர்த்திருக்கலாம் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இப்போது இந்த நீண்டகாலத் திட்டத்திலே அடுத்த கட்டமாக 3800 மெகாவாட்டிற்கான நீண்டகாலத் திட்டத்திற்கும் அம்மா அவர்கள் இங்கே வழிவகைக் கண்டு அதைத் தொடங்கிட வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த விவரம். ஏற்கெனவே இருக்கின்ற உடன்குடி திட்டத்திலே விரிவாக்கப் பகுதியாக 800 மெகாவாட் 2016-க்குள் முடிக்கப்பட வேண்டும். அதேபோல், உப்பூர் அனல் மின் நிலையம் 1600 மெகாவாட் 2016-க்குள் முடிக்கப்பட வேண்டும். அதேபோல், எண்ணூர்

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

அனல்மின் நிலையம் மாற்று. இப்போது எண்ணூர் அனல்மின் நிலையத்தில் 160 மெகாவாட் மட்டும்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. காரணம், அதிலே முற்றிலுமாகப் பழுதடைந்துவிட்டது. பழுதுநீக்குவதற்கு வாய்ப்பு இல்லையென்பதால் அதை replace செய்து, முற்றிலுமாக அகற்றிவிட்டு புதிய மின்நிலையத்தை உருவாக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதிலே இரண்டாவது யூனிட்டாக 600 மெகாவாட் உற்பத்தித் திட்டத்தை அங்கே தொடங்கி 2016-க்குள் முடிக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தூத்துக்குடி அனல்மின் நிலையத்துடைய நிலை 4-ல் 800 மெகாவாட் மின் உற்பத்திப் பணியை 2016-க்குள் முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆக மொத்தம் 3800 மெகாவாட் அம்மாவினுடைய ஆட்சியிலே, உற்பத்தி செய்ய வேண்டுமென்று அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதைத்தான் அம்மா அவர்கள் அன்றைக்குக்கூட சொன்னார்கள். ஒட்டுமொத்தமாக அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்திலே 23 ஆயிரம் மெகாவாட் உற்பத்தி செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே இப்போது நான் சொன்ன விவரங்களிலிருந்து 15 ஆயிரம் மெகாவாட் இந்தப் புதிய உற்பத்தித் திட்டங்களில் வருகின்றது. இஃதன்னியில், காற்றாலை மற்றும் சூரியஒளி மின் உற்பத்தி மூலமாக 8 ஆயிரம் மெகாவாட் உற்பத்தி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆக, 15,123 மெகாவாட்டோடு, இந்த 8 ஆயிரத்தையும் சேர்த்து 23,140 மெகாவாட் அம்மா ஆட்சிக் காலத்திலே உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. அதிலே நான் சொன்ன மத்திய அரசு தொடர்புடைய திட்டங்களைத் தவிர, மற்ற திட்டங்கள் அனைத்தும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் நிறைவேற்றியே தீரும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக உங்களுக்கு உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

அது மட்டுமல்ல, இன்றைக்கு உற்பத்தித் திட்டங்களைப் பற்றி விரிவாகச் சொல்லி இருக்கிறேன். மூன்று காலத் திட்டங்களையும் சொல்லிவிட்டு, அதற்கு அடுத்தபடியாக இங்கே சொல்கிறபோது நமது அன்புக்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஒரு முக்கியமான விஷயமாக, இந்த விவசாய மின்னிணைப்புகள் பற்றிக் குறிப்பிட்டு இங்கே பேசினீர்கள். நிச்சயமாகப் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள் அதற்கும் ஒரு வழிவகை கண்டிருக்கிறார்கள். கடந்த ஆட்சியிலே 2 இலட்சம் விவசாய மின்னிணைப்புகள் வழங்கப்படும் என்று சொல்லிவிட்டு, வெறும் 56 ஆயிரம் மின்னிணைப்புகள் மட்டும் வழங்கி இருக்கிறார்கள். கடந்த 5 ஆண்டுக் காலத்தில் 1½ இலட்சம் மின்னிணைப்புகள் வழங்கப்படவில்லை. அது வழங்கப்பட வேண்டுமென்று நமது அன்புக்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்தார்கள். அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திட்டங்களின்மூலமாக மின் உற்பத்தி அதிகரிக்க, அதிகரிக்க அதற்கேற்ற வகையிலே இங்கே மின் இணைப்புகளும் வழங்கப்படும் என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மின்னிணைப்பு மட்டும் கொடுத்துவிட்டு திமுக. ஆட்சியில் விவசாயிகள் பட்ட கஷ்டம் நம் எல்லோருக்கும் தெரியும். கடந்த திமுக. ஆட்சியில் 5 ஆண்டு காலம் விவசாயிகள் பட்ட பாடு ஆண்டவனுக்கே வெளிச்சம். பாவம் அந்தத் தொழிலே பாவகரமான தொழிலாக மாறி, பாதகமான தொழிலாக மாறி, விவசாயிகள் வாழ்விழந்து இருந்தார்கள். ஏனென்றால் விவசாயத்தின் முக்கிய காரணிகளில் ஒன்று மின்சாரம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது மக்கள் குறிப்பாக தமிழ்நாட்டு விவசாயிகள் பெரிதும் நம்பி இருப்பது மின்சாரத்தை. ஆகையினால் அவர்களுடைய வாழ்வாதாரத்தை வளப்படுத்துகின்ற வகையிலே மின் உற்பத்தியைப் பெருக்கி, அந்த உற்பத்திப் பெருக்கத்திற்கு ஏற்ப மின்னிணைப்புகளும் வழங்கப்படும். அதுவட்டுமல்ல, வழங்கப்படுகின்ற மின்னிணைப்பிற்கு உரிய வகையிலே அவர்களுக்குத் தேவையான அளவுக்கு மின்சாரமும் வழங்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இணைப்புகளையும் கொடுத்து தேவையான அளவிற்கு மின்சாரமும் வழங்கப்படும் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காரணம், அம்மாவினுடைய அரசு வந்ததிலிருந்து அந்த முதன்மைத் துறையான விவசாயத் துறைக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள் என்பதை மானியக் கோரிக்கையிலேகூட நீங்கள் பார்த்திருப்பீர்கள். அந்த அளவிற்கு திமுக. ஆட்சியிலே விவசாயிகள் பட்ட துயரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று வள்ளுவர் பெருமைப்படுத்திப் பாடி இருக்கிறார்கள். ஆனால் வள்ளுவரே அன்றைக்கு திமுக ஆட்சியில் இருந்திருந்தால்

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று பாடியிருக்க மாட்டார்.

"கைகட்டி வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
கைகட்டி பின்செல் பவர்"

என்று பாடியிருப்பார். அந்த அளவிற்கு விவசாயிகளினுடைய நிலை மிக மோசமான நிலை. இப்பொழுது அம்மா அவர்கள் விவசாயிகளுடைய நிலையை மேம்படுத்துவதற்காக எடுத்து வருகின்ற ஒரு நடவடிக்கையின் காரணமாக இன்றைக்கு

"கழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்று மீண்டும் வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப அந்தப் பெருமையை நிச்சயம் விவசாயிகளுக்கு அம்மா ஆட்சிக் காலத்திலேயே தருவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு இவ்வளவிற்குப் பின்பும் சிலபேர் சொன்னார்கள் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அதிகமாகச் சொன்னது எங்கு பார்த்தாலும் டிரான்ஸ்ஃபார்மர்கள் இல்லை, கேபிள் இல்லை, மீட்டர் இல்லை, எதுவும் இல்லை இல்லையென்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு அன்போடு சொல்லிக்கொள்கிறேன், திமுக ஆட்சியில் இருக்கின்றபொழுது, Meterial கொள்முதல், அதாவது மின்சாரத்திற்குத் தேவையான உபகரணங்கள் எதையும் அவர்கள் வாங்கவில்லை. அதன் காரணமாக அம்மா ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னால், அம்மா அவர்கள் ஆய்வு செய்து பார்த்தார்கள். அந்த ஆய்விலே கண்ட உண்மை, உள்ளபடியே எந்தப் பொருளும், எந்த மின் உபகரணங்களும் கையிருப்பில் இல்லை. மின் மாற்றிகள் இல்லை, மீட்டர்கள் இல்லை, மின் ஊக்கிகள் இல்லை, மின் தேக்கிகள் இல்லை, மின் கடத்திகள் இல்லை, மின் கம்பங்கள் இல்லை, நிதி இருப்பும் இல்லை.

(மேசையைத் தட்டும் ஒலி) போதுமான அளவுக்கு மின் உற்பத்தியும் இல்லை. விட்டுச் சென்றதோ கடன் தொல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இல்லை, இல்லை எதுவும் உருப்படியாக இல்லை. எனவே உங்களுக்கு வாக்கும் இல்லையென்று தமிழக மக்களும் முடிவு செய்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இனி எப்போதும் உங்கள் ஆட்சியும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவல நிலையை மாற்றி மாண்புமிகு அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் இனிமேல் இல்லை இல்லை என்ற நிலை மாறி, இல்லை, இல்லை என்ற நிலை மாறி எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கும், இங்கு இல்லாமை இல்லாத நிலை ஏற்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—40

அடுத்தபடியாக, இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள், சிறப்புப் பொருளாதார மண்டலத்திலே இருக்கின்ற தொழிற்கூடங்களுக்கு மின்சார கட்டணச் சலுகை வழங்கப்படுகிறதா என்று கேட்டார்கள். சிறப்புப் பொருளாதார மண்டலத்திலே இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு மின்சார கட்டணச் சலுகை எதுவும் வழங்கப்படுவதில்லை என்பதை அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அவர்களுக்கு தொழிலை ஊக்கப்படுத்துவதற்காக 5 சதவிகிதம் மின் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. மற்றொன்று, அவர்களுக்கு 24 மணி நேரமும் தடையில்லா மின்சாரம் வழங்கப்படுகிறது. இந்த இரண்டையும் தவிர, அவர்களுக்கு வேறு எந்தச் சலுகையும் வழங்கப்படவில்லை.

அதேபோல, Corporate Industries — பெரும் தொழில்களுக்கு, சிறப்புப் பொருளாதார மண்டலத்திலே இல்லாத பகுதியில் அமைக்கப்படுகின்ற தொழிற்சாலைகளுக்கு முதலீடுக்கு ஏற்ற வகையிலே, மூன்று ஆண்டுகள் முதல் ஐந்தாண்டு காலத்திற்கு 5 சதவிகிதம் மின்சார வரி தள்ளுபடி செய்யப்படுகிறது. அதற்குப் பின்பு, அவர்களுக்கு வரி உண்டு. ஆக, இது ஒன்றுதான் சலுகையே தவிர, மற்ற எந்தச் சலுகையும் மின்சாரத் துறைமூலமாக அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சலுகைகூட, பக்கத்து மாநிலங்களோடு போட்டிபோட்டு இங்கே தொழில்களைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகக் கொடுக்கிற சிறிய சலுகை, அவ்வளவுதான்.

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

அடுத்ததாக, மின்சாரத் துறையினுடைய Tamil Nadu Energy Development Agency, அதாவது, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை. இந்த தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின்மூலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற நட்சத்திரத் திட்டமான சாதாரண ஏழை எளிய மக்களுக்கு 3 இலட்சம் பசுமை வீடுகள், சூரிய எரிசக்தியுடன்கூடிய வீடுகள் கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருப்பதற்கு அந்த 3 இலட்சம் வீடுகளுக்கு, ஆண்டுக்கு 60 ஆயிரம் வீடுகள் வீதம் செயல்படுத்துவதற்கு, 131-4 கோடி ரூபாய் செலவிலே சூரிய மின் சக்தியைக் கொண்டு 60 ஆயிரம் வீடுகள் ஏற்படுத்துவதற்கு எரிசக்தி மேம்பாட்டு முகமை துரிதமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதற்கான ஆயத்தப் பணிகளையும் செய்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தச் சூரிய மின்சக்தியைப் பயன்படுத்துவதிலே சில பிரச்சினைகளும் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், நேற்றுகூட பேசுகிற அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும் சூரிய மின்சக்தியை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். விவசாயிகள் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கு, இந்த சூரிய மின்சக்தியைப் பயன்படுத்தினால், இலவச மின்சாரத்திற்கு ஏற்படுகின்ற இழப்பு குறையுமே என்று சொன்னார்கள். என்ன செலவாகிறது என்று நாங்கள் கணக்குப் போட்டுப் பார்த்தோம். ஒரு 7.5 எச்.பி. மோட்டாரை சூரிய சக்தி மூலமாகப் பயன்படுத்த வேண்டுமென்றால், ஏறத்தாழ 15 இலட்சம் ரூபாயை அதற்கு முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது. 15 இலட்சம் ரூபாய் முதலீடு செய்து ஒரு மின் இணைப்பைக் கொடுப்பது என்பது நடைமுறையில் இயலாத செயல் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதிலேகூட, விவசாயிகளும் அவ்வளவு முதலீடு செய்வது சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மற்றொரு முக்கியமான விஷயம். ஒரு மெகாவாட் உற்பத்தி செய்வதற்கு ஏறத்தாழ 12 கோடி ரூபாய் முதலீடு தேவைப்படுகிறது. மற்ற மின்சார உற்பத்திக்கு, அது அனல் மின் நிலையமாக இருந்தாலும் சரி, புனல் மின் நிலையமாக இருந்தாலும் சரி, காற்றாலை மூலமாக உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரமாக இருந்தாலும் சரி, Bio–gas மூலமாக இருந்தாலும் சரி, அல்லது gas

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2011 ஆகஸ்ட் 18

மூலமாக இருந்தாலும் சரி – மற்ற வகை மின்சார உற்பத்திக்கு 5 முதல் 5.50 கோடி ரூபாய் முதலீடு போதுமானது. ஆனால், இதற்கு ஏறத்தாழ 12 கோடி ரூபாய் முதலீடு தேவைப்படுவதால், இதிலே தனியார்கள் முன்வருவதற்கு ஆர்வம் காட்ட மறுக்கிறார்கள். வருகிறவர்களும் நம்மை கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால், அதைக் கொள்முதல் செய்தால், அதற்குரிய தொகை ஏறத்தாழ அன்றைக்கு ஒரு யூனிட் 15 ரூபாய் என்று இருந்தது. இன்றைய நிலையில்கூட 12 ரூபாய்க்குக் குறையாமல் அதற்கு அடக்க விலையாகிறது. ஆனால், ஒரு வகையிலே, இந்தச் செலவுகளைப் பற்றிக் கவலையில்லை என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். Non-polluting Energy என்று சொல்லக்கூடிய அந்த பசுமை மின் உற்பத்தியில், சுற்றுச்சூழல் மாசுபடாத மின்சக்தி உற்பத்தியாவதால், அதை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக, பொருட்செலவையும் பொருட்படுத்தாமல், 50 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட Solar Park ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது நிச்சயமாக ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் பார்த்து மற்ற தனியார்களும் அதனைப் பயன்படுத்த ஆர்வம் காட்டுவதற்கு அது ஒரு முன்னுதாரணமாக அமையும் என்ற காரணத்தினால் 50 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி மூலமாகத் தயாரிப்பதற்கான ஆயத்தப் பணிகளையும் இங்கே எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 10–45

மின்சார வாரியத்தைப் பற்றி ஒரு முக்கியமான செய்தியை இங்கே மீண்டும் நினைவுபடுத்தி எனது உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன். அதுமட்டுமல்ல, நேற்று பேசுகின்றபொழுது சில மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். மின் பற்றாக்குறைக்காக, தனியாரிடம் கூடுதல் விலை கொடுத்து மின்சாரம் வாங்கப்பட்டதன் விளைவாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அளப்பரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இறுதியாக, அந்த நிதிநிலையை மட்டும் சொல்லி எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

இன்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இருக்கின்ற மொத்த கடன் தொகை 45,000 கோடி ரூபாய். அதில் 40,000 கோடி ரூபாய் கடன், 5,000 கோடி ரூபாய் உபகரணங்கள் வாங்கியதற்கு பணம் பட்டுவாடா செய்யப்படாததால் ஏற்பட்ட கடன். நிலக்கரி வாங்கியது, டிரான்ஸ்பார்மர்கள் போன்ற உபகரணங்கள் வாங்கியது,

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

அது மட்டுமல்லாமல் மின்சாரம் கொள்முதல் செய்தது, இப்படி எல்லா வகைகளிலும், எல்லாப் பணிகளுக்கும் செலவு செய்தது உபகரணங்கள் வாங்கியாகிவிட்டது. இப்போது அவர்களுக்கு 5,000 கோடி ரூபாய் கடன் பாக்கி வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். 40,000 கோடி ரூபாய் கடன், மேற்கொண்டு 5,000 கோடி ரூபாய்க்கு உபகரணங்கள் வாங்கியதற்குப் பணம் பட்டுவாடா செய்யவில்லை. இந்த 5,000 கோடி ரூபாயையும் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு உடனடியாகப் பட்டுவாடா செய்ய வேண்டிய இக்கட்டான சூழ்நிலையை முந்தைய அரசு உருவாக்கிவிட்டுச் சென்றுவிட்டது.

அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு, 5,000 கோடி ரூபாய்க்கு உபகரணங்கள் கொள்முதல் செய்ததற்குப் பணம் பட்டுவாடா செய்யப்படாததால் அவர்களெல்லாம் வந்துகொண்டே இருந்தார்கள். அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டார்கள், இனிமேல் நமக்குப் பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வருகிறார்கள். நான் அவர்களிடம், 'தி.மு.க. ஆட்சியில் supply செய்ததற்கு தி.மு.க. ஆட்சியிலேயே பணம் வாங்கியிருக்க வேண்டியதுதானே, அப்போது ஏன் வாங்காமல் விட்டீர்கள்?' என்று கேட்டேன். அவர்கள் சொன்னார்கள், 'இல்லை, அவர்களுக்குக் கொடுத்தே பழக்கம் இல்லை, வாங்கி, வாங்கித்தான் பழக்கம், அதனால் அவர்கள் கொடுக்கவில்லை' என்று சொல்லிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சரி, இப்போது வந்திருக்கிறீர்களே, தி.மு.க. ஆட்சியில் supply செய்ததற்கு தி.மு.க. ஆட்சிக்கு வரும்பொழுது வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். இவற்றை வெறும் நகைச்சுவையாகச் சொன்னேன் என்று அதற்குப் பொருள் எடுத்துக்கொள்ள வேண்டாம். அதற்கு அவர்கள், 'அப்படியும் வாங்கிக்கொள்ளலாம் சார், ஆனால், தி.மு.க. இனிமேல் எப்போதுமே ஆட்சிக்கு வராதே, எப்படி வாங்க முடியும்' என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சியே தலையெடுக்க முடியாதபடி அம்மா அவர்கள் முடித்துவிட்டார்கள். தி.மு.க. இனி எப்போதுமே ஆட்சிக்கு வராது. ஆனால், கட்சியை அவர்களே முடித்துக்கொள்வார்கள். இதை நான் சொல்லவில்லை. அவர்களே சொல்கிறார்கள். அவர்கள் சாதாரண பொதுமக்கள், எந்தக் கட்சியையும் சாராதவர்கள், யதார்த்தமாகச் சொல்கிறார்கள்.

அது மட்டுமல்ல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வரும்பொழுது 5524.58 கோடி ரூபாய் மட்டுமே கடன் இருந்தது. 2006–ல் ஆட்சி முடியும்பொழுது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு

இருந்த கடன் 9323.68 கோடி ரூபாய். ஆனால், தி.மு.க. ஆட்சி முடியும் வரை திரண்ட இழப்பு 38,044.06 கோடி ரூபாயும், அதுபோக, 45,000/–கோடி ரூபாய் கடன் பாக்கியும் வைத்திருக்கிறார்கள். இப்பொழுது, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் திட்ட நிலையைச் சொல்லிவிடுகிறேன். இந்த இக்கட்டான நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்று சொன்னால், மீண்டும் தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் வாங்கியே தீரவேண்டும், வேறு வழியில்லை என்ற இக்கட்டான சூழ்நிலையை தி.மு.க. அரசு உருவாக்கிவிட்டது என்பதை நான் உங்களுக்குப் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, கொள்முதல் விவரத்தையும் சொல்லிவிடுகிறேன்.. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி வந்ததற்குப் பிறகு— இந்த ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாரும் முடிக்கச் சொல்லவில்லையே. நான் சொல்லவேயில்லை. (சிரிப்பு)

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கொள்முதலைப் பற்றி பல உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே ஒரு புள்ளிவிவரத்தை நான் இங்கே தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். நேற்றுகூட தி.மு.க. அரசு ஒரு யூனிட்டுக்கு ரூ.5.50–க்கு வாங்கியது என்று சொன்னேன். 5 ரூபாய் 50 காசுகளுக்கு வாங்கியது ஒருமுறைதான். ஆனால், கடந்த 4 ஆண்டுகளில், தி.மு.க. ஆட்சியில் 4 ஆண்டுகளாகக் கொள்முதல் செய்திருக்கிறார்கள். முதல் ஓர் ஆண்டைத் தவிர, அதிலே மொத்தம் வாங்கியதிலே, பல்வேறு விலைகளுக்கு வாங்கியதிலே, மொத்தம் சராசரியாக யூனிட் ஒன்றுக்கு 6.035 ரூபாய் என்ற அளவிற்கு விலை கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது. ஆக, 6 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள் யூனிட் ஒன்றுக்கு. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்பு, இப்பொழுது ஆட்சிக்கு வந்தவுடன் 500 மெகாவாட் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே யூனிட் ஒன்றுக்கு என்ன விலை தெரியுமா? 3 ரூபாய் 85 காசுகள். (மேசையைத் தட்டும் ஒலி) 3 ரூபாய் 85 காசுகளுக்கு வாங்கியிருக்கிறது. ஆனால், இன்றைய நிலையில் சொல்லிக்கொள்கிறேன், இந்த விலைகூட சற்று மார்க்கெட் நிலவரத்திற்கு ஏற்ப ஏறலாம், இறங்கலாம். ஆனால், எந்தச் சூழ்நிலையிலும் இந்த விலைகூட

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

யூனிட் ஒன்றுக்கு 4 ரூபாய் 50 காசுகளுக்கு மேல் வருவதற்கு வாய்ப்பே இல்லை. இதை உறுதியாக இனிமேல் வருகின்ற கொள்முதலில்கூட அந்தச் சூழ்நிலையை நீங்கள் தெரிந்துகொள்ளலாம். ஆக, இப்பொழுது இதனைக் கணக்கிட்டுப் பார்த்தோம். மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு 500 மெகாவாட் வாங்கிய கொள்முதல் விலைக்கும், திமுக. ஆட்சியிலே சராசரியாக 6.035 ரூபாய்க்கு வாங்கியதற்கும் உள்ள வித்தியாசம், அவர்கள் வாங்கிய அளவிற்கு மொத்தம் ஆயிரம் மெகாவாட் வீதம் 4 வருடங்களுக்கு 4,000 மெகாவாட் வாங்கியதிலே வித்தியாசம் மட்டும் 7,200 கோடி ரூபாய் கூடுதல் விலை. 3.55 காசுகளுக்கு work–out செய்து சொல்லியிருக்கிறேன். இதை 4 ரூபாய் 50 காசுகள் என்ற விலைக்கு வாங்கினாலும், ஏனென்றால் 4 ரூபாய் 50 காசுக்கு வரக்கூடிய அளவுக்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த நிலைக்கு வந்தாலும், 5,120 கோடி ரூபாய் கூடுதல் விலை கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது. ஆக, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றுதான். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஏனென்று சொன்னால், உற்பத்திச் செலவிற்கும், விநியோகத்திற்கும் இடையே உள்ள இடைவெளி யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் 50 காசுகள் இருக்கின்றது. ஆகவே, அந்த நட்டம் வருவது நியாயமானது. ஆனால், இது செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட நட்டம். அவர்களுடைய நிர்வாகத் திறமையின்மை காரணமாக, ஊழல் நிறைந்த, ஊதாரித்தனமான, (மேசையைத் தட்டும் ஒலி) பொறுப்பற்ற நிர்வாகத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கின்றது இந்த நட்டம். அதைத்தான் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆக, 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்று சொல்வார்கள். அதைப்போல, இந்த 7,200 கோடி நட்டத்தை சரியாக, முறைப்படியாகத் தவிர்த்திருந்தால் குறைந்தபட்சம் 5,000 கோடி ரூபாய் நட்டத்தைக் குறைத்திருக்க முடியும். மேலும், இதுபோல் பல்வேறு விஷயங்களிலே இந்த முயற்சியை எடுத்திருந்தால் பெருமளவு அந்த நட்டத்தைக் குறைத்திருக்க முடியும் என்பதைத்தான் இந்த நேரத்திலே உங்களுக்கு நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக, இப்படிப்பட்ட பொறுப்பற்ற ஆட்சியை நடத்தி, பொறுப்பற்றவர்கள் அந்தத் துறையையே வீணடித்துவிட்டார்கள். அந்தத் துறையையே சீரழித்துவிட்டார்கள். திமுக. ஆட்சிக் காலத்திலே சீரழிந்துவிட்ட அந்தத் துறையைச் சீரமைக்கின்ற சீரிய பணியில் அம்மா அவர்கள் இன்றைக்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களினுடைய ஆளுமைத் திறமையினாலும்,

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2011 ஆகஸ்ட் 18

அவர்களுடைய மதிநுட்பத்தாலும், அறிவாற்றலாலும், அவருடைய அனுபவத்தாலும் நிச்சயமாக, தமிழ்நாடு மின்சார வாரியம் இழந்த பெருமையைப் பெற்று, புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலே மீண்டும் தமிழகம் ஒளிமயமான தமிழகமாக மாறும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே Power Finance Corporation என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. அது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கடன் வழங்கும் நிறுவனம். அதுவும் இந்த எரிசக்தித் துறையினுடைய கட்டுப்பாட்டிலே இருந்து இயங்குகின்ற நிறுவனம். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கடன் வழங்குகின்ற பணியைச் செய்துகொண்டிருக்கிறது அந்த நிறுவனம்.

அதேபோல, அரசுத் துறையின் சார்பாக மின் ஆய்வுத் துறை இருக்கிறது. தமிழக மின்சார ஆய்வுத் துறை என்பது தமிழக அரசின் சார்பாக நடைபெறுகின்ற துறை. அந்தத் துறையினுடைய தலைவரின்கீழ் CEIG – Chief Electrical Inspector to Government என்பவருடைய தலைமையிலே இயங்குகின்ற அந்தத் துறை, 4 மாடிகளுக்கு மேல் உள்ள கட்டடங்களுக்கு அனுமதி கொடுப்பது, wiring சரியாக இருக்கிறதா, பாதுகாப்பு இருக்கிறதா என்பதைக் கண்டறிவது, Lift-களுக்கு அனுமதி கொடுப்பது இதுபோன்ற பணிகளைச் செய்துகொண்டு வருகிறது. காண்டிராக்டர்களுக்கு டி-லைசென்ஸ் கொடுப்பது, wiring காண்டிராக்டர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பது, இப்படிப்பட்ட பணிகளை அந்தத் துறையும் செய்து வருகிறது. அந்தத் துறையும் தன்னுடைய பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்கு அதற்கு வேண்டிய வழிமுறைகளும், ஆலோசனைகளும், அறிவுரைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களுக்கு நான் இங்கே சொல்லிய பதிலில் உங்களுக்குத் திருப்தி இருக்கும் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) மன்னிக்க வேண்டுகிறேன். அதற்கு முன்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணையின்படி அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கின்ற இந்த அறிவிப்புகளை நான் வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

(முற்பகல் 10—55

புதிய அறிவிப்புகள்

1. பெருகி வரும் மின் நுகர்வோர்களின் எண்ணிக்கையினாலும், அவர்களின் மின் தேவையை ஈடுகட்டும் பொருட்டும், 55 துணை மின் நிலையங்களும் அவற்றுடன்கூடிய 2,500 கி.மீ. மிக உயர் அழுத்த மின் பாதைகளும் சுமார் ரூபாய் 1,365 கோடி செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தமிழகத்தில் ஒட்டுமொத்த தொழில்நுட்பம் மற்றும் வணிக இழப்புகளைக் (Aggregate Technical and Commercial Losses) குறைக்கவும் மின் தரப்பு மேலாண்மையை மேம்படுத்தவும் ஊரக மின்னூட்டிகள் பிரிக்கப்படும். இத்திட்டம் முதல் கட்டமாக விழுப்புரம் மண்டலத்தில் சுமார் 100 மின்னூட்டிகளில் ரூபாய் 300 கோடி செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அனைத்து உயர் அழுத்த மின் இணைப்புகளின் பயனீட்டை மையமாக ஆய்வு செய்யும்பொருட்டும் பட்டியல்களைச் கலமாகத் தயாரிக்கவும் ரூபாய் 20 கோடி செலவில் அனைத்து உயர் அழுத்த மின் இணைப்புகளிலும் புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய தானியங்கி மின் அளவிகள் (AMR) பயிற்சியாகப் பொருத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. மின் நுகர்வோர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாலும், தரமான மின்சாரம் விநியோகிக்கவும், விழுப்புரம் மின் பகிர்மான வட்டத்தைப் பிரித்து கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மின் பகிர்மான வட்டம் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தற்போது தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் மின் பகிர்மான வட்டம் கிருஷ்ணகிரி மாவட்டத்தையும் உள்ளடக்கி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதனையடுத்து தருமபுரி மின் பகிர்மான வட்டத்தினைப் பிரித்து கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டொன்றுக்கு ரூபாய் 20 இலட்சம் செலவில் புதிதாக ஒரு மின் பகிர்மான வட்டம் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. எந்த நேரமும் மின் கட்டணம் செலுத்தும் பொருட்டு சென்னையில் மின் கட்டணம் பெறும் இயந்திரங்கள் (Any Time

Payment Machine) வாயிலாக மின் கட்டணம் செலுத்தும் வசதி உள்ளது. இவ்வசதி கோவை மண்டலத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து மண்டலங்களுக்கும் இவ்வசதி விரிவுபடுத்தப்படும். இதன்மூலம் மின் நுகர்வோர்கள் தங்களது மின் கட்டணத்தை எந்த நேரத்திலும் (24 X 7 மணி நேரமும்) 365 நாட்களும் செலுத்த முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. இணையதளம் வாயிலாக மின் கட்டணம் செலுத்தும் வசதி தற்போது 6 வங்கிகளில் (ஆக்ஸிஸ் வங்கி, ஐசிஐசிஐ வங்கி, இந்தியன் வங்கி, ஐஒபி, சிட்டி யூனியன் வங்கி மற்றும் கரூர் வைஸியா வங்கி) உள்ளது. இதுமேலும் விரிவுபடுத்தப்பட்டு பாரத ஸ்டேட் வங்கி, கனரா வங்கி, எச்டிஎப்சி வங்கி மற்றும் தற்போது வாரியத்தின் மின் கட்டண வசூலுடன் தொடர்புடைய இதர வங்கிகளிலும் இந்தச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டு மின் நுகர்வோர் சேவைகள் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. 2012 ஆம் ஆண்டில் மின் உற்பத்தி துவங்கப்படவுள்ள வட சென்னை அனல் மின் நிலையம் நிலை II, அலகு I மற்றும் அலகு II, மேட்டூர் அனல் மின் நிலையம் நிலை III, அலகு I, பவானி கட்டளை தடுப்பணை புனல் மின் நிலையம் II மற்றும் III, பவானி தடுப்பணை I மற்றும் II மற்றும் பெரியார் வைகை சிறு புனல் மின் நிலையங்களை இயக்கவும், பராமரிக்கவும் 600 உதவிப் பொறியாளர்கள் பணியமர்த்தப்படுவர். (மேசையைத் தட்டும் ஒலி)

9. 5,516 பகுதி நேர துப்புரவுப் பணியாளர்களின் பணி (Sweepers & Sanitary workers) காலநிலை ஊதியத்துடன் தொடர்ந்தாப்படுத்த ஆணைகள் வெளியிடப்படும். இதற்கான செலவு ஆண்டிற்கு ரூபாய் 6.8 கோடி ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. மூன்று தரம் உயர்த்தப்பட்ட ஆறும்ப சுகாதார நிலையங்களில் ரூபாய் 41.85 இலட்சம் செலவில் 5 கிலோவாட் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படும். இதில் மாநில அரசின் பங்கு ரூபாய் 29.7 இலட்சம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. பொதுக் குடிநீர் விநியோகத்திற்கென ரூபாய் 16.34 இலட்சம் செலவில் 5 குதிரைத் திறன் சக்தியுடன் சூரிய ஒளிமூலம் நீர் இறைப்பான்கள் 2 தொலை தூரக் கிராமங்களில் அமைக்கப்படும். இதில் மாநில அரசின் பங்கு ரூபாய் 11.78 இலட்சம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

12. ரூபாய் 25 இலட்சம் செலவில் ஒருமித்த சமுதாயக் கழிப்பறைக் கழிவிலிருந்து உற்பத்தியாகும் உயிரி வாயுவைக் கொண்டு சமுதாய சமையலறைக் கூடம் ஒன்று அமைக்கப்படும். ஒருமித்த சமுதாயக் கழிப்பறைக் கழிவிலிருந்து உற்பத்தியாகும் உயிரி வாயுவைக் குழாய்கள்மூலம் கொண்டு சென்று சமுதாய சமையலறைக் கூடத்தில் உபயோகப்படுத்தப்படும்.

13. புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவது தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (தகமை)யின் மிக முக்கியமான ஒரு நோக்கமாகும். மேலும், தகமை இந்தியத் தொழில்நுட்பக் கழகம் சென்னையில் அமைந்துள்ள இந்தியக் கிராமத் தொழில்நுட்ப அறிவியல் மையம் மற்றும் கிராமிய தொழில்நுட்பம் மற்றும் வணிகப் பொறியமைப்புடன் இணைந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 11.00

14. மின் ஆய்வுத் துறையில் வெளிப்படையான அணுகுமுறையை ஏற்படுத்தும் வகையில் அடுக்குமாடிக் குடியிருப்புகள், வணிக வளாகங்கள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் போன்றவற்றில் உள்ள மின் தூக்கிகளுக்கு, அதன் உரிமையாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.20.48 இலட்சம் செலவில் மின்தூக்கி சான்றிதழ்கள் இணையதளம் வழியாக வழங்கப்படும்.

15. பன்னாட்டினர் அளவில் உள்ள ஆய்வுக் கூடங்களிடையே சோதனை மற்றும் அளவுகள் நிர்ணயம் ஒப்புக்கொள்ளப்படும் வகையில் சோதனைப் பணிகள் மேம்படுத்த ஏதுவாக, இத்துறையின்கீழ் அமைந்துள்ள சோதனைக் கூடத்திற்கு ரூ.5 இலட்சம் செலவில் சோதனை மற்றும் அளவுகள் நிர்ணய ஆய்வுக் கூடங்களை ஏற்பளிக்கும் தேசிய வாரியத்தின் ஏற்பளிப்பு பெறப்படும்.

16. வீணாகும் வெப்ப சக்தியை மீட்கவல்ல எரிசக்தி சேமிப்புத் திட்டங்களை நிறைவேற்ற எரிசக்தித் திறனுக்கச் செயலாக்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 2 கோடி மின் ஆய்வுத் துறைக்கு ஒதுக்கப்பட்டு, திட்டங்கள் நிறைவேற்றப் பயன்படுத்தப்படும்.

17. டிசம்பர் 14 ஆம் நாள் எரிசக்தி சேமிப்புத் தினமாக அனுசரிக்கும் வகையில், எரிசக்தி சேமிப்பு குறித்த செய்திகளை மக்களிடையே கொண்டு செல்லும் நோக்கில் ரூ.5.25 இலட்சம்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2011 ஆகஸ்ட் 18

செலவில் அனைத்து மாவட்டங்களிலும் கூட்டங்கள் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நிறைவாக, பேரவைத் தலைவர் அவர்களே, நித்திரை மறந்து நித்தம் உழைத்திடும் சத்தியத் தலைவியின் சாதனைகளுக்குத் துணை நிற்பது எங்கள் இலட்சியம். (மேசையைத் தட்டும் ஒலி) நடமாடும் நல்லறிவுக் களஞ்சியமே, நான் வணங்கிடும் குல தெய்வமே, உங்கள் வாய்மொழி எங்கள் தாய்மொழி எனக் கூறி நன்றிப் பெருக்கோடு உரையை நிறைவுசெய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்கள் அத்தனையையும் நான் படித்துப் பார்த்தேன். அவற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் மற்றும் கோரிக்கைகள் எல்லாம் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்து, நான் அளித்த விளக்கம் போதுமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். அதை ஏற்றுக்கொண்டு வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தரும்படி உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன்.

திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மின் பகிர்மான வட்டத்தைப் பிரித்து கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மின் பகிர்மான வட்டம் ஏற்படுத்தித் தந்த தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை அந்தப் பகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் நிர்வாக வசதியின் காரணமாக தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்டம் வழங்கியதோடு மட்டுமல்லாமல், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கல்விப் புரட்சி ஏற்படுகின்ற அளவுக்கு பல்வேறு கல்லூரிகளையும் வழங்கி,

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

இன்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே மின் பயனீட்டாளர்களுக்காக மின் பகிர்மான வட்டத்தை விஸ்தரித்துக் கொடுத்ததற்காக கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் சார்பாகவும், கிருஷ்ணகிரியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற, இந்த மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற மின் பயனீட்டாளர்கள் . சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 முதல் 2011 வரையிலும் சீரழிவில் இருந்த மின்சார வாரியத்தை இன்று சீரமைத்து, தொண்ணூறே நாட்களில் தமிழக மக்கள் போற்றக்கூடிய வகையிலே இந்தத் துறையைச் சீரமைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அதேபோல, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மிக முக்கியமானது, மின்சார வாரியத்திலே ஏறக்குறைய கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் 33,000 கோடி ரூபாய்க்கு மேலாகக் கடன் சுமை ஏற்றப்பட்டிருக்கிறது. தற்பொழுது 3 ரூபாய் 85 காசுகளுக்கு மின்சாரம் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், அதே சமயத்தில் தி.மு.க.-வினுடைய ஆட்சிக் காலத்தில் 6 ரூபாய் 35 காசுகளுக்குக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 2¼ ரூபாய் ஒரு யூனிட்டுக்கு அதிகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வழக்கமாக, இந்த மின்சாரம் மத்திய தொகுப்பிலிருந்து, மத்திய அரசினுடைய வாயிலாகத்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. அப்படியென்று சொன்னால், இலட்சக்கணக்கான யூனிட்டுகள், கோடிக்கணக்கான ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்குவதற்கு மத்திய அரசும் துணைபோய் விட்டதா அல்லது அதில் என்ன தவறு நடந்தது என்பதையும், அதேபோல, 2006 முதல் 2011 வரையிலும் இந்தோனேசியாவிலிருந்தும், சீனாவிலிருந்தும் . .

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர், உங்களுடைய clarification-ஐ மட்டும் கேளுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: 20 இலட்சம் டன் நிலக்கரி வாங்கப்பட்டிருக்கிறது. அது உலக அளவில் விலை 70 ரூபாய்

இருந்தபோது, 100 ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். 1,000 கோடி ரூபாய் கூடுதலாகக் கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது. எனவே, இதுகுறித்து நம்முடைய மின்சாரத் துறையின் வாயிலாக முழுமையான விசாரணை மேற்கொள்ளப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயர்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, மின்சாரக் கொள்முதல் என்பது மத்திய அரசு மூலமாகக் கொள்முதல் செய்யப்படுவதில்லை. நிலக்கரி மட்டும் மத்திய அரசினுடைய நிறுவனத்தின் மூலமாக, அதாவது M.M.T.C., ஷி.ஜி.சி. போன்ற நிறுவனங்கள் மூலமாகக் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், மின் கொள்முதலைப் பொறுத்தவரையில் தனியாரிடமிருந்துதான் கொள்முதல் செய்கிறார்கள். அதுவும் டெண்டர் மூலமாகக் கொள்முதல் செய்யப்படுகிறது. அதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அம்மா ஆட்சிக் காலத்திலே ஏற்பட்ட இந்த விலையேற்றம்கூட சற்று மாறுபட்டால், 4 ரூபாய் 50 காசுகள் என்ற அளவில்தான் வரும். ஆனால், இவ்வளவு முறைகேடு செய்திருக்கிறார்கள் என்பதைத்தான் நான் ஏற்கெனவே பதிலாகச் சொல்லியிருக்கின்றேன். ஆகவே, நிலக்கரியைப் பொறுத்த அளவிலே மத்திய அரசு நிறுவனம் கொள்முதல் செய்து தருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். (குறுக்கீடு) சரி, டாக்டர் கிருஷ்ணசாமி, சொல்லுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: அதாவது, அதைத் தனியார் நிறுவனத்திடமிருந்து வாங்கினாலுங்கூட இரண்டு ரூபாய் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியென்று சொன்னால் அது பட்டவர்த்தனமான, வெளிப்படையான ஊழலே. எனவே, அதுகுறித்து தமிழ்நாடு அரசு விசாரணை மேற்கொள்ளுமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

அதேபோல், நேற்றைய ஊரகத் தொழில் துறை சம்பந்தப்பட்ட ஒரு சிறிய கேள்வி உள்ளது. அந்தக் கேள்வியையும் கேட்டுவிடுகிறேன். தென் தமிழகத்திலே சிறு தொழிலாக, கைத்தொழிலாக தீப்பெட்டித் தொழிலில் ஆயிரக்கணக்கான மக்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

2011 ஆகஸ்ட் 18] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

ஆனால், அந்தத் தொழில் இயந்திரமயமாக்கப்பட்டதன் மூலமாக, தற்காலிகமாக அந்தத் தொழில் மெல்ல மெல்ல நைந்து வருகிறது. எல்லா தொழில்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வரக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தென் தமிழகத்தின் விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களிலே, ஆயிரக்கணக்கான பெண்கள் தங்களுடைய வீடுகளிலே இருந்து தீப்பெட்டித் தொழிலைக் கைத் தொழிலாகச் செய்து வருகிறார்கள். அந்தத் தொழில் இப்போது மெல்ல மெல்ல நைந்து வருகிறது. எனவே, அந்தக் கைத் தொழிலான தீப்பெட்டித் தொழிலைக் காப்பாற்றுவதற்காக, இயந்திரமயமாக்குவதைத் தென் தமிழகத்திலே தடை செய்வதற்குண்டான வாய்ப்பிருக்கிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய தீப்பெட்டித் தொழிலுக்கு cluster முறையிலே பல்வேறு சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. தொழில் முனைவோர்கள் எந்தெந்த அளவுக்கு சலுகைகள் கேட்கிறார்களோ அந்தந்த அளவுக்கு அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்யப்படுகின்றன என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீரழிந்திருந்த மின் துறையைச் சீரமைத்து தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு, சிறப்பான உற்பத்தியைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுத்ததற்காக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கூறுகிற நேரத்தில், கடன் சுமார் 40 ஆயிரம் கோடியைத் தாண்டியிருப்பதாகச் சொல்லி, எங்களையெல்லாம் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, மின்சாரத்தை விலைக்கு வாங்குவதில் 7,000 கோடி ரூபாய் அளவிலே ஊழல் நடந்திருப்பதாகவும், ஏற்கெனவே நிலக்கரி வாங்கியதிலும் ஊழல் நடந்திருப்பதாகவும் பல்வேறு செய்திகள்

[திரு. சு. குணசேகரன்] [2011 ஆகஸ்ட் 18

வந்துகொண்டிருக்கின்றன. எனவே, ஒட்டுமொத்தமாக ஊழலின் மூலமாக ஏற்பட்டிருக்கிற இந்த நிலையை மாற்றியமைப்பதற்கும், கடந்த ஆட்சியில் ஏற்பட்ட அந்தச் சீர்கேடுகளை வெளியுலகத்திற்குக் கொண்டுவருவதற்கும் ஒரு விசாரணை கமிஷன் அமைக்கப்படுமா? அந்த எண்ணம் அரசுக்கு உண்டா என்று நான் இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

அதோடு, கூடங்குளம் அணுமின் நிலையம் துவக்கப்படக்கூடிய சூழ்நிலையில் அங்கேயிருக்கிற சில அமைப்புகள் ஏதோ ஓர் உள்நோக்கத்தோடு பாதுகாப்பு குறித்த அச்சத்தைத் தெரிவித்து, மக்களிடையே பதட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே நடைபெறுகிற போராட்டங்களிலெல்லாம் பள்ளிக்கூட மாணவர்களையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நீண்ட நாட்களாக செயல்பாட்டுக்கு வராமல் இருக்கின்ற அந்தக் கூடங்குளம் அணுமின் நிலையம், அதனுடைய பாதுகாப்பு அம்சங்களை, அது மத்திய அரசு சம்பந்தப்பட்டதாக இருந்தாலும், மாநில அரசு கவனத்திலே எடுத்துக்கொண்டு அந்தப் பகுதியிலேயுள்ள மக்களிடத்திலுள்ள அச்சத்தைப் போக்கி, பதற்றத்தைத் தணித்து, காலத்தில் அந்தக் கூடங்குளம் அணு மின் நிலையம் துவக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கரியைப் பொறுத்தளவிலே மத்திய அரசு நிறுவனம்தான் நமக்கு கொள்முதல் செய்து அனுப்புகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களுக்கு Purchase Order மட்டும் கொடுக்கிறது, அவர்கள் கொள்முதல் செய்து அனுப்புகிறார்கள். ஆகவே, இதிலே பொறுப்பு மத்திய அரசுதான். மத்திய அரசுமீது விசாரணை மேற்கொள்வதற்கு மாநில அரசுக்கு எந்தவிதத்திலும் அதிகாரம் இல்லை என்று கருதுகிறேன். ஆனால், ஊழல் நடந்திருப்பது உண்மைதான். அதிலே மாற்றம் இல்லை. ஆனால், அதை prove செய்வதிலே ஒரு சட்டச் சிக்கல் இருக்கிறது. அதுபோல, இந்த மின் கொள்முதலிலே ஏற்பட்டிருக்கிற

2011 ஆகஸ்ட் 18] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

குறைபாடுகளைப் பற்றி, அதிலே இருக்கின்ற முறைகேடுகளைப் பற்றி துறை வாயிலாகவே ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், சுருக்கமாக clarification கேளுங்கள்.

*** திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்கெட்டு இருக்கிற மின்சாரத் துறையை சீர்படுத்துவதற்கு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொண்டு, தோட்டக்கலை உற்பத்தியைக் கூடுதலாக்க வேண்டுமென்று அரசு திட்டமிட்டிருக்கிறது. எனவே, தோட்டக்கலைப் பயிர்களுக்கு சிறு, குறு விவசாயிகளுக்காவது இலவச மின்சாரத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தொழில் துறையிலே தோட்டக்கலைப் பயிர்களுக்கு ஏற்கெனவே இலவச மின்சாரம் இல்லை. ஆகவே, அது விரிவுபடுத்தப்படுமா? தொழில் துறை குறித்து கடந்த சட்டமன்றக் கூட்டத்திலேகூட திருமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியினுடைய குடும்பத்தினர் பினாமியாக வாங்கிக் குவித்திருக்கிற தரிக நிலங்களுக்கு விலையேற்றம் வேண்டுமென்பதற்காக, விவசாயிகளுடைய நிலங்களைக் கையகப்படுத்தி 1,478 ஏக்கர் சிப்காட் உருவாக்குவதற்குத் திட்டமிட்டு அங்கே கல்லூரி உருவாக்கினார்கள். அதைத் தவிர்க்க வேண்டுமென்கிற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. ஒட்டப்பிடாரத்திலேயும் விளைநிலங்கள் 1,533 ஏக்கர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லா தொகுதிகளுக்கும் போய்க் கொண்டிருக்காதீர்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் இதைப் பற்றி கூறுகிறபோது மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், சிவரக்கோட்டை, கரிசல்காலப்பட்டி மற்றும் சுவாமிமலைப்பட்டி ஆகிய கிராமங்களில் நில எடுப்பு செய்துள்ளார்கள். முன்னாள் முதலமைச்சருடைய மகன் அழகிரி அந்த ஆக்கிரமிப்புகளையெல்லாம் கல்லூரி கட்டுவதற்காக செய்துள்ளார் என்று சொன்னார்கள்.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2011 ஆகஸ்ட் 18

உடனடியாக அழகிரி சம்பந்தப்பட்ட இடம் இருக்கிறதா, ஆக்கிரமிப்பு செய்துள்ளாரா என்று அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், மாவட்ட ஆட்சியருக்கு எடுத்துச்சொல்லி, மாவட்ட வருவாய்க் கோட்ட அலுவலருக்கும் எடுத்துச் சொல்லி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம்தான் மிகப் பெரிய பின்தங்கிய மாவட்டம். தமிழகத்தில் இருக்கிற 12,618 ஊராட்சிகளிலே 1,104 ஊராட்சிகள் கொண்ட மிகப் பெரிய பின்தங்கிய மாவட்டம். அப்படிப்பட்ட அந்த பின்தங்கிய மாவட்டத்திற்கு 100 மின்னூட்டிகளை 300 கோடி ரூபாயிலே வழங்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை, 17-8-2011 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,91,02,87,000/-, மூலதனக் கணக்கில் ரூ.600,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.3,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2011 ஆகஸ்ட் 18] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 44– குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை. 17–8–2011 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.127,03,49,000/–, மூலதனக் கணக்கில் ரூ.72,03,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கோரிக்கை எண் 27 – தொழில் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 27 – தொழில் துறை. 17-8-2011 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,180,01,75,000/–, மூலதனக் கணக்கில் ரூ.14,92,18,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.157,32,03,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஈ) கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,087,07,19,000/–, மூலதனக் கணக்கில் ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ரூ.381,06,29,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 5, திரு. வி.சி. சந்திரகுமார்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 504, திரு. ஆர். சுந்தர்ராஜன்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 681, திரு. அ. கணேஷ்குமார்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. அ. கணேஷ்குமார்] [2011 ஆகஸ்ட் 18

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 590, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 797, திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 55, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை நகராட்சி கட்டடம் பழுதான நிலையில் உள்ளதால், புதியதாகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2011 ஆகஸ்ட் 18] [திரு. எஸ்.பி. முத்துக்குமரன்]

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 164, திரு. எஸ். ஜான் ஜேக்கப்.

திரு. எஸ். ஜான் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரலையினால் குடிநீர்த் திட்டங்கள் சேதமானதால் பெரிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் போட்ட பைப் உடைந்து சாலை பழுதடைந்துள்ளதால், அதனைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 375, திரு. அ. சவுந்தரராசன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாநகராட்சியில் உள்ளடங்கிய பெரம்பூர் தொகுதி மூன்றாவது கோட்டத்தில் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்ட குப்பை அள்ளும் பணி முடங்கிக் கிடப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 402, திரு. சி. மைக்கேல் ராயப்பன்.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், மிட்டதார்குளம், கஸ்தூரி ரெங்கபுரம், சியோன் மலை, வல்லான்விளை, குட்டம், பெருங்கண்ணன்குளம், வடக்கு பெட்டைகுளம், பெருங்குளம் ஆகிய ஊர்களில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள குடிநீர்த் தேக்கத் தொட்டிகளை அகற்றிவிட்டு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 512, திரு. து. முருகேசன்.

திரு. து. முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி நகராட்சி நிருவாகத்தில் துப்புரவுப் பணியாளர்கள் எண்ணிக்கை குறைந்துவிட்ட காரணத்தால் குப்பைகள் தெருவெங்கும் தேங்கிக் கிடப்பதைத் தடுக்க காலியாகவுள்ள துப்புரவுப் பணியாளர்கள் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 540, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் தொகுதியில் ஏற்கெனவே செயல்பட்டு வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பத்து வருடங்களுக்கு முன்னர் திட்டமிடப்பட்டவை என்பதால் அதிகரித்து வரும் இன்றைய

2011 ஆகஸ்ட் 18] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

தேவையைக் கருத்தில் கொண்டு புதிய திட்டங்கள் மற்றும் கடல்நீரை நன்னீராக்கும் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/-,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/-மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 644, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் விதத்தில் சேலம் மையப் பகுதியான செவ்வாய்ப்பேட்டை இடுகாட்டில் மின் தகன மேடை அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/-,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/-மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 729, திரு. ம. கலை அரசு.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாநகராட்சியால் வெளியேற்றப்படும் கழிவுகள், குப்பைகள் முழுவதும் அணைக்கட்டு தொகுதியில் உள்ள சதுப்பேரி கிராமத்தில் கொட்டப்பட்டு, மலைபோல் குவிக்கப்பட்டுள்ளதால், சுற்றுப்புறச் சீர்கேடு அடைவதைத் தடுப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2011 ஆகஸ்ட் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 749, செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் இன்னும் முடிவடையாமல் தேக்கமடைந்துள்ளன. இப்பணிகளை விரைவில் தொடர்வதற்கும், நகரின் வீதிகளில் சாலை சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 801, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், பிளவக்கல் அணை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 807, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குச் சொந்தமான குளங்களைத் தூர் வாரி அப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் சீரமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே. உலகநாதன்]

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 846, திரு. க. பாலகிருஷ்ணன்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை ஒன்றியம், கடலோரப் பகுதியைச் சார்ந்துள்ளதால் நிலத்தடி நீர் நாளுக்கு நாள் உப்பு நீராக மாறி, பொதுமக்கள் குடிநீருக்குப் பெரிதும் கஷ்டப்படுவதால், இப்பகுதிக்கென கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 857, திரு. ப. சம்பத்குமார்.

திரு. ப. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு நகராட்சியில் 15 நாட்களுக்கு ஒருமுறை வரும் குடிநீர் விநியோகத்தைச் சீர்செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 929, திரு. வி. முத்துக்குமார்.

[2011 ஆகஸ்ட் 18

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாச்சலம் நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்து, நவீன எரிவாயு தகன மேடை உடனடியாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 980, திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1027, திரு. எம். ஆறுமுகம்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2011 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1050, திரு. பி.எல். சுந்தரம்.

திரு. பி.எல். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானிசாகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சத்தியமங்கலம் நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1059, திருமதி ர. சுபா.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களுக்கும், பேரூராட்சிகளுக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1134, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் தொகுதிக்குட்பட்ட பொது இடங்களில் தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால், இரு சக்கர வாகனங்களை ஓட்டுவோர் நாய்களின் குறுக்கீட்டால் விபத்துக்குள்ளாவதும், பல நேரங்களில் இந்த நாய்கள் வெறிநாய்களாய் மாறி பொது மக்களைக் கடித்துக் குதறுவதால் மரணங்களும் ஏற்படுகின்ற அபாய நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2011 ஆகஸ்ட் 18

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1222, திரு. ஏ. லாசர்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரியகுளம் தொகுதி, தேனி நகரில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க, வைகை அணையிலிருந்து குடிநீர் கொண்டு வர, நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2231, திரு. க. பாண்டியராஜன்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி ஒன்றியம், செங்கமலப்பட்டி ஊராட்சியை மானூர் கூட்டுக் குடிநீர் திட்டத்துடன் இணைத்து அப்பகுதியின் குடிநீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2594, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டத்தில்

2011 ஆகஸ்ட் 18] [திருமதி எஸ். விஜயதரணி]

பேருந்து நிலையப் பணிகளை விரைவாக முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,087,07,19,000/-,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,195,52,19,000/-மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.381,06,29,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

(உ) கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மானியக் கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,200,30,39,000/-மூலதனக் கணக்கில் ரூ.1,950,01,00,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 6, திரு. வி.சி. சந்திரகுமார்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2011 ஆகஸ்ட் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 508, திரு. ஆர். சுந்தர்ராஜன்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 687, திரு. அ. கணேஷ்குமார்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 385, திரு. அ. சவுந்தரராசன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 776, திரு. டி. இராமச்சந்திரன்.

2011 ஆகஸ்ட் 18]

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 95, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தொகுதி, முள்ளங்குறிச்சி ஊராட்சியில் உள்ள காரைக்குறிச்சி குளத்தை ஆழப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 177, திரு. எஸ். ஜான் ஜேக்கப்.

திரு. எஸ். ஜான் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் தொகுதியில் உள்ள ஊராட்சிகளில், இலவச இந்திரா குடியிருப்புத் திட்டத்தின்மூலம் இலவச வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

[2011 ஆகஸ்ட் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 401, திரு. சி. மைக்கேல் ராயப்பன்.

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் குப்பைகளை அகற்றிட துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/-,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/-மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 525, திரு. து. முருகேசன்.

திரு. து. முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு தொகுதியில் 100 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டத்தின்படி திட்ட வேலைகளை ஏப்ரல் முதல் ஜூன் வரை செயல்படுத்தினால் விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும். வடகிழக்குப் பருவ மழையைச் சார்ந்து விவசாயம் செய்வதால் 100 நாள் வேலை திட்டத்தை ஏப்ரல் முதல் ஜூன் வரை செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/-,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/-மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 542, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட மாப்பிள்ளையூரணி, அத்திமரத்துப்பட்டி, குலசேகரநல்லூர், தருவைக்குளம், ஓட்டப்பிடாரம், புதியமுத்தூர், பெள்ளப்பட்டி, முடிவைத்தானேந்தல்,

செக்கரக்குடி, வில்லராடு போன்ற பகுதிகளில் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 572, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தின் உள்ளாட்சி அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 593, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதிக்குட்பட்ட சித்தேரி மலைக் கிராமங்களான வாச்சாத்தி சாலையிலிருந்து கலசப்பாடி வரையிலும், சித்தேரி முதல் மண்ணூர் வரையிலும் சாலை வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

[2011 ஆகஸ்ட் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 745, செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் தொகுதி, திண்டுக்கல் ஒன்றிய கிராமப்புறங்களில் பழுதடைந்து, குண்டும் குழியுமாக உள்ள கிராமப்புறச் சாலைகளைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/-,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/-மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 803, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள திருவண்ணாமலை சிற்றூராட்சி மற்றும் பிள்ளையார்குளம், விழுப்பனூர், படிக்காசுவைத்தான்பட்டி ஆகிய சிற்றூராட்சிகளை இரண்டாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/-,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/-மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 806, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், கொருக்கை, தொத்தமங்கலம், வரம்பியம், இராநல்லூர் ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே. உலகநாதன்]

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 918, திரு. வி. முத்துக்குமார்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதாச்சலம் தொகுதிக்கு உட்பட்ட பல கிராமங்களில் உள்ள ஊரக நூலகத்தை அரசு நூலகத் துறையின்கீழ் பராமரிப்பு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 978, திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் வேலை நேரத்தை 2 மணி வரை என்று நிர்ணயம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/–,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/–மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1010, திரு. ந. நஞ்சப்பன்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஒன்றியத்தையும், பெரிய அளவு

[திரு. ந. நஞ்சப்பன்] [2011 ஆகஸ்ட் 18

மக்கள் தொகை உள்ள ஊராட்சிகளையும் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/-,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/-மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1066, திருமதி ர. சுபா.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம் கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் (கிராமங்கள்) கிராமச் சாலைகளைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/-,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/-மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2229, திரு. க. பாண்டியராஜன்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஒன்றியம், N.G.O. காலனி பகுதியில் 'நமக்கு நாமே திட்டம்' மூலம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/-,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/-மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

2011 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2606, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு தொகுதியில் ஊராட்சிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,200,30,39,000/-,மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,950,01,00,000/-மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு

@ 157. முதல் 432 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

[பேரவைத் தலைவர்] [2011 ஆகஸ்ட் 18

வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் தேமுதிக கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

முற்பகல் 11—20

*திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமீதான மானியக் கோரிக்கைகள்மீது பேச அனுமதியளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழைப் பெண்களுக்கு நல்ல மனதோடு தாலிக்குத் தங்கம் வழங்கி 2011–2012 ஆம் ஆண்டில் மக்கள் போற்றும் மகத்தான நிதிநிலை அறிக்கையையும் வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்து, சென்னை பெரியமேடு தோல் கம்பெனியில் பணியாற்றிய கூலித் தொழிலாளியின் மகனான எனக்கு, தனது ரசிகர் மன்றத்தில் ரசிகனாக இருந்த எனக்கு சைக்கிள் கடை வைத்துக் கொடுத்தும், 2005 ஆம் ஆண்டு மதுரையில் தேசிய முற்போக்கு திராவிட கழகம் துவங்கியபோது மாவட்டச் செயலாளராகவும், தற்போது மாநில இளைஞரணியின் துணைச் செயலாளராகவும் பல்வேறு பொறுப்புகள் வழங்கியும், வெளியிலிருந்து இதுதான் சட்டப் பேரவையா! என்று வியந்துப் பார்த்த என்னை மக்கள் பணியாற்றிட வாய்ப்பு வழங்கியும், "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன்" என்று கூறிய பேரறிஞர் அண்ணாவின் சொல்லை செயல்படுத்தி என்போன்ற ஏழைகளை வாழவைத்து எழும்பூர் சட்டமன்ற உறுப்பினராக சட்டப் பேரவையில் அமரவைத்து அழகு பார்த்த என் குடும்பத் தலைவர் அண்ணன் கேப்டன் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் சிரம் தாழ்ந்த வணக்கங்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எழும்பூர் தொகுதியில் படுத்துக்கொண்டே ஜெயிப்பேன் என்று கூறியவரை படுக்க வைத்தும் (மேசையைத் தட்டும் ஒலி) எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் முடியாது என்பதை முடித்துக்காட்டியும் வெற்றிக்கு வித்திட்ட தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலைவர் அவர்களுக்கும், அதிமுகவின் தலைவர்களுக்கும் மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் கொட்டும் முரசு கொட்டிய வாக்காளப்

2011 ஆகஸ்ட் 18] [திரு. கு. நல்லதம்பி]

பெருமக்களுக்கும் என் வெற்றிக்கு வியர்வை சிந்திய கழகத் தொண்டர்களுக்கும் மற்றும் கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கடந்தகால ஆட்சியில் "சிங்காரச் சென்னை" என்று அறிவிக்கப்பட்டு பின்னர் "டிஸ்கோ கிளப்புகள்" நிறைந்த சீரழிந்த சென்னையாக மாறியுள்ள சென்னை மாநகரை, மாண்புமிகு தமிழக முதல்வரின் ஆட்சிக் காலத்தில் சீர்மிகு சென்னையாக மாற்றும் பணி விரைவாக முடிக்கப்பட்டு அனைத்து அடிப்படை வசதிகளும் அடங்கிய புகழ்பெற்ற, உலகம் போற்றும் உண்மையான சீர்மிகு சென்னையை உருவாக்க வேண்டுமென்று தமிழக அரசை கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிக்கு உட்பட்ட துப்புரவுத் தொழிலாளர் அலுவலகம், குடிநீர், மலேரியா, தெருவிளக்குப் பராமரிப்பு அலுவலகங்களிலும் பணியாட்கள் மற்றும் உபகரணப் பொருட்கள் பற்றாக்குறையாக இருப்பதாக நான் அறிகிறேன். குறிப்பாக, துப்புரவு ஆய்வாளர் அலுவலகங்களில் குப்பை சேகரிக்கும் மிதி வண்டிகள், குப்பை சேமிக்கும் பெரிய மற்றும் சிறிய குப்பைத் தொட்டிகள் உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் துப்புரவுப் பணியாளர்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது. இதனால், நகர் முழுவதும் அசுத்தமாகக் காட்சியளிக்கின்ற நிலையை மாற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் மற்றும் கழிவுநீர் அலுவலகங்களில் தேவையான கழிவு நீரகற்று வாகனம், கழிவுநீர் தூர்வாரும் இயந்திரம், துரிதமாகக் குப்பை அகற்றும் பாப்காட் போன்ற வாகனங்கள் மற்றும் பணியாட்கள் பற்றாக்குறையாலும், கழிவுநீர்க் கசிவு மற்றும் அடைப்புகளை சரி செய்வதற்கு ஆட்கள் இல்லாமலும், தெருக்கள்தோறும் துர்நாற்றம் வீசுகிற நிலையை மாற்றிடவும் மேலும் குடிநீர் குழாய்களின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ஆட்கள் இல்லாமல் மிகவும் அவதிப்படும் நிலையை மாற்றிடவும், தகுந்த பணியாட்களைப் பணியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தெருவிளக்கு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களான பல்பு, சுவிட்ச், கணரக கேபிள் வயர்கள் போன்ற

[திரு. கு. நல்லதம்பி] [2011 ஆகஸ்ட் 18

மின்சாதனப் பொருட்கள் தேவையான அளவுக்கு அலுவலகங்களில் இல்லாததாலும், தெருவிளக்குகள் இயக்குவதிலும், அவற்றின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் தாமதம் ஏற்படுகிறது. இதனால் பல இடங்களில் இருள்சூழ்ந்து காட்சியளிக்கின்ற நிலையைப் படிப்படியாக மாற்றிட வேண்டுகிறேன்.

ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் பொது மக்கள் மற்றும் நோயாளிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள்.

மேலும், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் அனைத்து அலுவலகங்களின் பணியாட்கள் மற்றும் உபகரணப் பொருட்கள் பற்றாக்குறையால் பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதில் சற்று தொய்வு ஏற்படுகிறது. குறிப்பாக, ஒரு துப்புரவு ஆய்வாளர் அலுவலகத்தில், பணியாட்களின் மொத்த எண்ணிக்கை 50 ஆக இருப்பின், வருகை தரும் பணியாட்களின் எண்ணிக்கையோ வெறும் 20 ஆகத்தான் இருக்கிறது. இதில் கையெழுத்துப் போட்டுவிட்டு வேலைக்குச் செல்வதாய் கூறி அதிகாரிகள் துணையோடு வீட்டிற்குச் செல்பவர்களும் உண்டென்று அறிகிறேன். ஆகவே, ஒரு கோட்டத்தில் 50 பேர் செய்யக்கூடிய வேலையை 15 பேரைக் கொண்டு செய்து முடிக்க முடியாமல் திருவாகம் மிகவும் திணறிக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 11–25

மேலும் அரசு அலுவலகங்கள் மற்றும் அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் ஓய்வு பெற்றாலோ அல்லது பணியில் இருக்கும்போது மரணம் அடைந்தாலோ, அப்பணியிடத்தை நிரப்பாமலேயே எஞ்சியுள்ள பணியாளர்களை வைத்துதான் மற்றப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த நிலை சென்னையில் மட்டும் என்றில்லை, தமிழகம் முழுவதும் இதே நிலைதான் இருக்கிறது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நகராட்சி, ஊராட்சி மற்றும் மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு அலுவலகங்கள் மற்றும் அரசுப் பள்ளிகளில் இருக்கும் குறைகளைக் களைந்து, நகராட்சி திருவாக மானியக் கோரிக்கையின்மூலம் நிரப்பப்படாத பணியிடங்களுக்குப் பணியாளர்களை அமர்த்தி, சீரான, சிறப்பான திருவாகத்தைச் செயல்படுத்திடுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

2011 ஆகஸ்ட் 18] [திரு. கு. நல்லதம்பி]

விருத்தாசலம் நகரை அழகுபடுத்தும் திட்டத்திற்கு 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தத் திட்டம் கடந்த திமுக ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டது. இத்திட்டத்தினை விரைவில் செயல்படுத்தி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விருத்தாசலம் வளர்ந்து வரும் நகரம் என்பதால், இதனைக் கருத்தில்கொண்டு பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூவனூர் முதல் கோ. பவழங்குடி சாலையிலுள்ள தரைப் பாலத்தையும், புலியூர் முதல் கன்னியாங்குப்பம் செல்லும் சாலையிலுள்ள தரைப் பாலத்தையும் மேம்பாலங்களாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்லூர் முதல் கண்டப்பங்குறிச்சி, கோ. பூவனூர் முதல் கட்டியநல்லூர் சாலை, மங்கலம்பேட்டை முதல் பட்டி பரூர் வழியாக விருத்தாசலம் செல்லும் சாலை ஆகியவற்றைச் சீரமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கும்மிடிப்பூண்டி தொகுதியில் தேர்வாய்கண்டிகை, திருகண்டலம் மற்றும் ராமஞ்சேரி ஆகிய பகுதிகளில் 4.5 டி.எம்.சி. தண்ணீரைத் தேக்குவதற்கு 1,800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நீர்த்தேக்கத் திட்டத்திற்காகக் கையகப்படுத்தப்படும் நிலங்கள், ஏரி மற்றும் அரசுப் புறம்போக்கு நிலங்களை மட்டும் கையகப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், விவசாய விளை நிலங்களைக் கையகப்படுத்தும் எண்ணத்தை இந்த அரசு கைவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாநகராட்சி, நகராட்சி மற்றும் ஊராட்சி பள்ளிகளின்மீது அரசு அதிக கவனம் செலுத்தி, அப்பள்ளிகளின் தரத்தை உயர்த்திடவும், மாணவர்களின் எதிர்க்கால நலனை காத்திடவும் தாங்கள் ஆவன செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

அதேபோன்று, காவிரிக் குடிநீர்த் திட்டத்தில் ஆற்காடு வரை வரும் குடிநீரை, ஆரணிக்கு கொண்டுசெல்லும் ஆழ்துளைக் குழாய்களுக்கு இணைப்பு வழங்கி, ஆரணி மக்களின் நெடுநாள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு அன்போடு வேண்டுகிறேன்.

[திரு. கு. நல்லதம்பி] [2011 ஆகஸ்ட் 18

முந்தைய தி.மு.க. ஆட்சியில் அமைச்சர் தொகுதியாக இருந்த எழும்பூர் தொகுதியில் அடிப்படை வசதிகள் வளர்ச்சி அடைந்ததாகவும் தெரியவில்லை, அதற்கானப் பணிகள் நடைபெற்றதாகவும் தெரியவில்லை. மேலும், புளியந்தோப்பு, கே.பி. பார்க், குருசாமி நகர், பி.கே. காலனி, பட்டாளம், சூளை, பெரியமேடு, சேத்துப்பட்டு, சாஸ்திரி நகர், புரசைவாக்கம், புல்லாபுரம், தானாதெரு, பொன்னன் தெரு, சதாசிவம் தெரு ஆகிய இடங்களில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரமான குடிநீரில் கழிவுநீர் கலந்து வருவது வாடிக்கையாகிவிட்டது. இதனை பொது மக்கள் பலமுறை முந்தைய ஆட்சியாளர்களிடம் முறையிட்டும் எந்தப் பலனும் இல்லை. எனவே, இதை உடனே சரி செய்து, நல்ல குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு தங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எழும்பூர், கும்மிடிப்பூண்டி, ஆரணி, விருத்தாசலம் போன்ற பல்வேறு தொகுதிகளின் கோரிக்கைகளை எழுதி தங்களிடம் கொடுத்துள்ளேன். அவற்றை அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளும்படி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 61-வது வட்டத்தில் 'திடீர் நகர்' என்ற குடிசைப் பகுதியில் சுமார் 750 குடும்பங்கள் கடந்த 40 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் அடிப்படை வசதியின்றி சுகாதாரமற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த திடீர் நகர் திட்டப் பகுதி வாரியத்தின் MUDP எடுத்தபோது வரைபடம் தயாரிக்கப்பட்டு MMDA மூலம் பெற்ற ஒப்புதலில் 90 மனைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் தற்போது வரைபடத்தில் உள்ளதுபோல் திடீர் நகர் மனை பூமி அமைப்பில் இல்லை, வரைபடத்தில் 90 குடும்பங்கள் மட்டுமே உள்ளன. ஆனால் தற்போது 700-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். மேலும் இந்த திட்டப் பகுதி அமைந்துள்ள இடம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமானது. இருந்தாலும், அங்கு 750 வீடுகள் கட்டி முடிக்க போதுமான இட வசதி கிடையாது. எனவே, இத்திட்டப் பகுதியின் மேற்கிலுள்ள சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான காலி மனை உள்ளது. அதில் இந்த 750 குடும்பங்களுக்கு எவ்வளவு தேவையோ, அதனை திட்டப் பகுதியின் பின்புறமுள்ள காலி மனையை சென்னை மாநகராட்சிமூலம் பெற்று, இப்பகுதியின் ஏழை, எளிய மக்களுக்கு

மாடி வீடுகள் கட்டித் தந்தால் ஏதுவாக இருக்கும். மேலும் இப்பகுதி திடீர் நகர் என்ற பெயரிலேயே கடந்த 40 வருடங்களாக அழைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பெயரை மாற்றி அமைத்து, மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரை இப்பகுதியின் புதிய குடியிருப்புக்கு வைத்திடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டா. எழும்பூர் தொகுதி, குடிசைப் பகுதிகள் அதிகம் உள்ள தொகுதியாகும். இங்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் அதிகம் வசிக்கின்றனர். ஆனால் இங்கு வசிக்கும் மக்கள், நம் வீடு நமக்குச் சொந்தம்தானா என்ற கேள்விக்குறியோடுதான் இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, இவர்கள் 40 வருடங்களாக வீட்டுமனைப் பட்டா கேட்டு, பலமுறை முந்தைய அரசிடம் முறையிட்டும் பலனில்லை. ஆனால், தற்போது ஆட்சி பொறுப்பேற்று இருக்கும் புதிய அரசு, நமக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் என்ற நம்பிக்கையுடன் என்னிடம் மனு கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், 104–வது வட்டம், சேத்துப்பட்டு, ஜெகன்னாதபுரம், எம்.எல். நகர், பிருந்தாவனம், 61–வது வட்டம், சாலை மாநகர், 72–வது வட்டம் சாஸ்திரி நகர், புல்லாபுரம், சுமார் 361 குடும்பங்கள் வசிக்கும் 42–வது வட்டம் புளியந்தோப்பு பகுதி, கார்ப்பரேஷன் லைன் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு கருணை உள்ளம் கொண்டு வீட்டுமனைப் பட்டா வழங்கி, தொகுதி மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றிடுமாறு தங்களை மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியம். எழும்பூர் தொகுதிக்குட்பட்ட குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளின் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்தும், உடைந்தும், இடிந்து விழும் நிலையிலுள்ளன. குறிப்பாக 45–வது வட்டம், கேபி. பூங்கா, 42–வது வட்டம், பி.கே. காலனி, 61–வது வட்டம் ஆர்.கேபுரம், 72–வது வட்டம், வேம்புலி அம்மன் காலனி, 104–வது வட்டம் சேத்துப்பட்டு ஓசான் குளம், 105–வது வட்டம், சந்தோஷ் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் பழுதடைந்த இடங்களில் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு மறுசீரமைத்திட நடவடிக்கை எடுக்குமாறும், அதேபோல், காவல் குடியிருப்புகளையும் அரசு கவனத்தில் வைத்து, பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு முடிப்பதற்கு மாண்புமிகு

[திரு. கு. நல்லதம்பி] [2011 ஆகஸ்ட் 18

முதல்வர் அவர்கள் தாராளமாய் நிதியுதவி வழங்கிடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மழைநீர்க் கால்வாய். எழும்பூர் தொகுதி முழுவதும் மழைக் காலங்களில் பெரும்பாலான இடங்களில் மழைநீர் தேங்கி அது வடிவதற்கே கிட்டத்தட்ட ஒரு வாரம் ஆகிவிடுகிறது. இதனால் எழும்பூர் பகுதி மக்கள் குறிப்பாக, 61-வது வட்டம், சண்முகராயன் தெரு, சாலை மாநகர் மற்றும் ரத்தின சபாபதி தெரு, 102-வது வட்டம், சூளைகாளத்தியப்பா தெரு, A.P. ரோடு, சூளை நெடுஞ்சாலை சந்திப்பு, 72-வது வட்டம், சாஸ்திரி நகர், புல்லாபுரம் மற்றும் G-3 காவலர் குடியிருப்பு, 105-வது வட்டம், எழும்பூர் சுரங்கப்பாதை பாலம், 101-வது வட்டம், வடமலை தெரு ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் மழைக் காலங்களில் மிகவும் அவதிக்கு உள்ளாகிறார்கள். பல நாட்கள் தண்ணீர் தேங்கி விடுவதால் அப்பகுதி மக்களை காலரா, வாந்தி, மயக்கம் போன்ற தொற்று நோய்கள் தாக்கக்கூடிய அபாயம் ஏற்படுகிறது. ஆகவே, குறிப்பாக பிரிக்ளின் சாலையில் உள்ள 1,400 மீட்டர் நீளம் கொண்ட ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பழமையான மழைநீர்க் கால்வாய் நீண்ட நாட்களாக தூர் வாரப்படாமல் பழுதடைந்து கிடக்கிறது. அதனை உடைத்து, தூர் வாரி செப்பனிட அரசு நிதி ஒதுக்கீடு செய்தும், இன்னும் பணி ஆரம்பிக்கப்படாமலேயே இருக்கிறது. எனவே, இப்பணியைத் துரிதப்படுத்தி முடிப்பதற்கும், மேலும் சூளைகாளத்தியப்பா தெரு மற்றும் A.P. ரோடு ஆகிய பகுதிகளில் பள்ளிகள் அதிகம் உள்ளதால் மழைக் காலங்களில் மாணவ, மாணவிகள் பள்ளி செல்ல முடியாமல் தொடர்ந்து 10 நாட்களுக்கு விடுமுறை எடுக்கும் சூழல் ஏற்படுகிறது. இதனை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு வருவதோடு, எழும்பூர் தொகுதி முழுவதும் உள்ள மழைநீர்க் கால்வாய்களைத் தூர் வாரிச் செப்பனிட நாங்கள் ஆவன செய்வதோடு, அதிக நிதியும் ஒதுக்கித் தருமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 72-வது வட்டம், பச்சையப்பன் கல்லூரியின் இடதுபுறம் உள்ள அப்பாராவ் கார்டன், அவ்வைபுரம், வெங்கடாசலபதி ஒன்று முதல் மூன்றாவது தெரு வரை, சுப்பாராமன் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, கந்தன் தெரு மற்றும் ஜோதியம்மா நகர் ஆகிய இடங்களில் சுமார் 20,000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அப்பகுதி

2011 ஆகஸ்ட் 18] [திரு. கு. நல்லதம்பி]

மக்கள் குடிநீர் வரி, வீட்டு வரி மற்றும் கழிவுநீர் வரி ஆகிய வரிகளை முறையாகச் செலுத்தியும், குடிநீர்க் குழாய் இணைப்பு இருந்தும், சீராக தண்ணீர் வராமல் வறட்சிக் காலங்களில் வழங்குவதுபோல் டேங்கர் லாரிகள் மூலமாக தண்ணீர் வரவழைக்கப்பட்டு, சுமார் 51 தண்ணீர்த் தொட்டிகள் வழியாகத்தான் (sintex) 15 ஆண்டுக்காலமாக குடிநீரை உபயோகித்து வருகிறார்கள். தமிழகத்தின் தலைநகரமான சென்னை, 'சிங்கார சென்னை' என்று வாயார அழைக்கப்படுகிறது. சென்னைக் குடிநீர் வழங்கல் வாரிய அலுவலகத்திலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில்தான் இப்பகுதி உள்ளது என்பதைத் தங்களுக்குக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். மேலும், அப்பகுதி மக்களுக்கு நிரந்தரமாக குடிநீர்க் குழாய்கள் மூலமாகத் தொடர்ந்து சுத்தமான, சுகாதாரமான குடிநீர் கிடைத்திட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியத்தின்மூலம் இதனை சரி செய்திட மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எழும்பூர் தொகுதி குடிசைகள் நிறைந்தத் தொகுதியாகும். இங்கு வாழும் மக்கள் அடிப்படை வசதிகளின்றி சிரமத்துடன்தான் வாழ்ந்து வருகிறார்கள். எனவே, எனது தொகுதி முழுவதும் உள்ள குடிசைகளை அகற்றி அவர்களுக்கு அடிப்படை வசதிகளுடன்கூடிய பாதுகாப்பான குடியிருப்புகளை (கல்நார் வீடுகள்) அமைத்துத் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மானியக் கோரிக்கையின்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், மாநகராட்சி, நகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகள் தி.மு.க.-வினரின் வசம் உள்ளதால் மக்கள் நலப் பணிகள் முடங்கிக் கிடக்கின்றன. அதனால், மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வரும் உள்ளாட்சித் தேர்தலில் நல்லதொரு மாற்றம் ஏற்பட்டால்தான் மக்கள் நலப் பணிகளை முடுக்கிவிட முடியுமென்று நம்புகிறேன். நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியத்தில் தேவையான நிதி ஒதுக்கியதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எழும்பூர் சட்டமன்றத் தொகுதியின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியத்தின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய குடும்பத் தலைவர் கேப்டன் அவர்களுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

[2011 ஆகஸ்ட் 18

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.

*** திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'அன்பு வழிக்கும், அறநெறிக்கும் குறளே ஆதாரம்; அகில உலகத்தின் ஆனந்த வாழ்விற்கு பொருளே ஆதாரம்; தொல்லை தரும் தீயவர்களுக்கு இருளே ஆதாரம்; கோடானுகோடி தொண்டர்களுக்கும், பாமர மக்களுக்கும் அம்மா, உங்கள் அருளே ஆதாரம்.' (மேசையைத் தட்டும் ஒலி) இலட்சியப் பாதையில், மாற்றார் உருவாக்கிய தடைக்கற்களையெல்லாம் தகர்த்தெறிந்துவிட்டு, தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்திச் செல்ல, 3-வது முறையாகத் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு, இயக்கத்தில் அம்மா பேரவையினுடைய மாவட்ட இணைச் செயலாளராகவும், ஒன்றிய கழகச் செயலாளராகவும் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்புகளை வழங்கியும், 1996-லே மாவட்ட உள்ராட்சி மன்ற உறுப்பினராகவும், 2001-லே சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் வாய்ப்பளித்து, மீண்டும் 2006-லே சட்டமன்ற உறுப்பினராகவும், 2011-லே சட்டமன்ற உறுப்பினராகவும் வாய்ப்பளித்து, நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் கடுமையான வெயிலையும் பொருட்படுத்தாமல், தருமபுரி மாவட்டத்தில் இரண்டு இடங்களில் தேர்தல் பிரச்சாரம் செய்து, மாவட்டத்திலுள்ள ஐந்து தொகுதிகளிலும் வெற்றிபெறச் செய்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், மாவட்ட மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பாலக்கோடு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், மாவட்டத்தின் ஏனைய தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், வெற்றிக்காகப் பாடுபட்ட கழகப் பொறுப்பாளர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2011 ஆகஸ்ட் 18] [திரு. கேபி. அன்பழகன்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மானியக் கோரிக்கை எண் 42, கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம் பக்கம் 53-ல், தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (தாய்) என்ற திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் கிராமத்திலிருந்து நகர்ப்புறத்தை நோக்கி இடம் பெயர்தல் அதிகரித்துள்ளது. இதைத் தடுப்பதற்கு, நகர்ப்புறங்களிலுள்ள வசதிகளை ஊரகப் பகுதிகளிலும் ஏற்படுத்தித் தருவதுதான் தீர்வாக அமையும். எனவே, அம்மா அவர்களுடைய அரசு குக்கிராமங்கள் அளவில் திட்டமிட்டு, அடிப்படைத் தேவைகளைக் கண்டறிந்து நிறைவேற்றும் வகையில் ஒரு புதிய திட்டமாக இதைத் தொடங்கியிருக்கிறது. இந்தத் திட்டமானது ஊரகத் திட்டமிடுதல் மற்றும் செயலாக்கத்தில் ஓர் அடிப்படை மாற்றமாகக் கருதப்படுகிறது. அனைத்து குக்கிராமங்களுடைய வசதிகளைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆண்டுக்கு ரூ.680 கோடி வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு இந்தத் திட்டத்திற்காக ரூ.3,400 கோடியை ஒதுக்கித் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், 2001 முதல் 2006 வரையிலான பொற்கால ஆட்சியிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப் பகுதியினுடைய வளர்ச்சிக்காக, அடிப்படைக் கட்டமைப்புக்காக, தனிப்பட்ட முறையிலே நிதியை ஒதுக்கித் தந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி தொலைநோக்குப் பார்வையோடு, கிராமப்புற வளர்ச்சிக்காகப் பாடுபடும் மாண்புமிகு அம்மா அவர்கள், கடந்தகால ஆட்சியில் இந்திய துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலும் ஏற்படாத சிந்தனையாக கிராமப்புற மக்களுடைய தேவைகளை அறிந்து, அன்றாட காலைக் கடனைக் கழிப்பதற்காகப் பெண்கள் சிரமப்படுகிறார்கள் என்ற அவல நிலையை உணர்ந்து, மகளிருக்காக 13,062 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களை அமைத்துக் கொடுத்து, பெண்களின் சுகாதார வாழ்விற்கு உத்தரவாதம் அளித்த தலைவர்

[திரு. கே.பி. அன்பழகன்] [2011 ஆகஸ்ட் 18

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதை அறிந்த மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் ரகுவீர் பிரதாப் சிங் அவர்கள் இத்திட்டத்தினைப் பார்வையிட்டு, ஊரக மகளிர் சுகாதார இயக்கம் தமிழ்நாட்டில் மிகச் சிறந்த முறையில் செயல்படுவதாக பாராட்டினார்கள். அதேபோன்று, தேசிய ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு. குமார் அசோக் அவர்கள் இந்தத் திட்டத்தின் முழு விவரங்களை அனுப்பி வைத்தால், அதை பிற மாநிலங்களிலும் செயல்படுத்த வசதியாக இருக்குமென்று கேட்டுக்கொண்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். நம்மை எதிர்ப்பவர்களைக்கூட பாராட்டுகின்ற வகையில், சிறப்பான வகையில் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியவரே நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு அம்மா அவர்களுடைய ஆட்சி அன்றையதினமே தேசம் எங்கும் பாராட்டப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட மகளிர் சுகாதார வளாகங்களைப் பராமரிக்காமல் மைனாரிட்டி திமுக அரசு விட்டுவிட்டது. மீண்டும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து சுகாதார வளாகங்களையும் உடனடியாகச் சீரமைத்துப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். இது தமிழகம் எங்குமுள்ள, குக்கிராமங்களிலுள்ள, குறிப்பாக பெண்களிடத்திலே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுபோன்று தூய்மையான கிராம இயக்கம் அம்மா அவர்களால் கடந்தகால ஆட்சியில் கொண்டுவரப்பட்டது. இந்தத் திட்டம் 100 விழுக்காடு சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகளுக்கு, ஆண்டுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வீதம், 15 ஊராட்சிகளை ஆண்டுக்குத் தேர்வு செய்து, ஒரு ஊராட்சிக்கு ஐந்து இலட்சம் வீதம் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்தினை மைனாரிட்டி திமுக அரசு

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. அன்பழகன்]

கிடப்பில் போட்டுவிட்டது. மீண்டும் இதே திட்டத்தினைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுகாதாரத்தை மேம்படுத்துகிறவகையிலே, இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளார்கள். இது கிராம மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தை அம்மா அவர்கள் 2003 ஜூலையிலே ஆரம்பித்தார்கள். அதன்பிறகு இதுபோன்ற திட்டங்களை ஊக்குவிக்கின்ற வகையிலே மத்திய அரசானது 2005இல் உள்ளூர் சுகாதாரத் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையிலே நிர்மல் கிராம புரஸ்கார் விருது வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது. ஆக, மத்திய அரசுக்கும் முன்னோடியாகத் திகழ்கின்ற முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு திருத்தம். இந்த ஆண்டு அனைத்து மாவட்டங்களுக்கும் அந்த சிறப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற ஏழைகள் பயன்பெறும்வகையிலே, சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டத்தில், 300 சதுர அடியில் ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் செலவிலே, இந்த ஆண்டு 60,000 வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.080 கோடியை அம்மாவினுடைய அரசு ஒதுக்கியுள்ளது. இது எந்த நாட்டிலும், எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத புதுமையானத் திட்டம் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் கிராமப்புற மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

[திரு. கே.பி. அன்பழகன்] [2011 ஆகஸ்ட் 18

மேலும், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகளுக்கு, கடந்தகால மைனாரிட்டி திமுக அரசு ரூ.75,000/– மட்டும் வழங்கியது. இதை உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது ஒரு இலட்சமாகத் தரப்படும் என்று அறிவித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது பயனாளிகளிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

2011–2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் ஒரு இலட்சத்து 553 வீடுகள் கட்டித் தரப்படும் என்றும், இதற்கு மாநில அரசின் நிதியாக ரூ.666.16 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மத்திய அரசினுடைய நிதியாக 75 சதவிகிதமும், மாநில அரசினுடைய நிதியாக 25 சதவிகிதமும் செயல்படுத்துவதுதான் இத்திட்டத்தின் நோக்கம். ஆகவே, இந்தத் திட்டத்திற்காக மாநில அரசினுடைய 25 சதவிகிதமான 113 கோடியே 12 இலட்சத்து 21 ஆயிரத்து 250 ரூபாய் கொடுத்திருந்தாலுங்கூட, மீதம் இருக்கின்ற பணமானது மாநில அரசுக்கு மீதமாகியிருக்கும். இருந்தாலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூபாய் ஒரு இலட்சத்தில்தான் நல்ல முறையிலே கட்ட முடியும் என்ற நோக்கத்தோடு, மாநில அரசினுடைய நிதியைக் கூடுதலாகக் கொடுத்து ரூ.666.16 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசால் நிர்ணயிக்கக்கூடிய தொகை ஒரு வீட்டிற்கு 45,000 ரூபாய். இதில் மத்திய அரசினுடைய பங்களிப்பு 75 சதவிகிதமான ரூ.33,750/– என்றால் மாநில அரசினுடைய பங்கு ரூபாய் 11,250/–, இதை நாம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. நம்முடைய மாநிலத்திற்கு அருகில் இருக்கின்ற கர்நாடகத்தை எடுத்துக்கொண்டோம் என்றால், மத்திய அரசு 33,750 ரூபாய் வழங்குகிறது. மாநில அரசு ரூ.16,250 வழங்குகிறது. ஆக, ஒரு வீட்டிற்கு கர்நாடக அரசானது 50,000 ரூபாய் மட்டும் வழங்குகிறது. ஆந்திர அரசைக் கணக்கெடுத்தோம் என்றால், மத்திய அரசு ரூபாய் 33750/–, மாநில அரசின் பங்கு 11,250/– ஆக ஒரு வீட்டிற்கு மத்திய அரசு நிர்ணயிக்கின்ற 45,000/– ரூபாய் மட்டும்தான் வழங்குகிறது. இராஜஸ்தான் மாநிலத்தை எடுத்துக்கொண்டோம் என்றால் மத்திய அரசு 33,750/– ரூபாய், மாநில அரசு 11,250/– ரூபாய் ஆக 45,000/– ரூபாய் வழங்குகிறது. இந்தியாவிலேயே இருக்கின்ற பிற மாநிலங்களை

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. அன்பழகன்]

ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற ஏழையெளிய மக்கள் நல்ல வீட்டில் வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு வீட்டிற்கு மத்திய அரசு நிர்ணயித்த தொகையைவிட 55,000/- ரூபாய் கூடுதலாக வழங்கி மக்களுடைய மனதிலே நீங்காஇடம் பிடித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்த அவையில் தெளிவாகக் கூறியிருக்கிறேன். இந்த Indira Awaas Yojana திட்டத்தின்கீழ் மத்திய அரசு 200 சதுர அடி கொண்ட ஒரு வீட்டிற்கு 33,000/- சொச்சம் ரூபாய்தான் வழங்குகிறது. மாநில அரசு, அதாவது நம்முடைய தமிழக அரசு 66,000/- சொச்சம் ரூபாயை அதற்கு சேர்த்து ஒரு இலட்சம் ரூபாய் என்ற மதிப்பில் 200 சதுர அடி உள்ள ஒரு வீட்டைக் கட்டிக் கொடுக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 42-கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம் பக்கம் 136-ல் கொடுக்கப்பட்டுள்ளவாறு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள இணை இயக்குநர் முதல் சாலை ஆய்வாளர் வரை, மொத்தமுள்ள 6,124 காலிப் பணியிடங்களால் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பாதிப்புகள் ஏற்படும் என்பதால், அவ்விடங்கள் அனைத்தையும் நிரப்பி, அதன்மூலம் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முனைப்போடு செயல்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டமானது, 1991-1992 ஆம் ஆண்டு, தருமபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியைக்

[திரு. கே.பி. அன்பழகன்] [2011 ஆகஸ்ட் 18

(I.F.A.D.) கொண்டு பரிசோதனை முறையில் தொடங்கப்பட்டது. அது தாளை வில் மகளிர் சுய உதவிக் குழுக்களாக வளர்ச்சி பெற்று, இன்றைக்கு மிகப் பெரிய வளர்ச்சியடைந்திருக்கிறது. இதுவரையில் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை ரூபாய் 11,603.83 கோடியாகும். 2011–2012 ஆம் ஆண்டில் வங்கிக் கடன் பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு 4 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கிட உயரிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற வகையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பொருளாதாரக் கடனுதவியாக ரூபாய் 10 இலட்சம் உயர்த்தி, 25 சதவிகிதம் மானியத்துடன் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். சொன்னதைச் செய்யும் ஒரே தலைவி இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், 2011–2012 ஆம் நிதியாண்டில் 65 ஆயிரம் புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிராமப்புற மகளிர் பொருளாதார வளர்ச்சியில் மிகுந்த அக்கறை உள்ளவர் என்பதைக் காட்டுகிறது என்பதைப் பணிவோடு இம்மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி நிதியுடன் மாண்புமிகு அம்மா அவர்களால், 2005 ஆம் ஆண்டு "புது வாழ்வு" என்ற திட்டமானது, ரூபாய் 717 கோடி நிதி ஒதுக்கீட்டில் 5.85 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன்பெறும் வகையிலே தொடங்கப்பட்டது. மேலும், தற்போது அந்தத் திட்டத்தை ஊக்குவிக்கின்ற வகையிலே, 950 கோடி ரூபாய் நிதியாதாரத்துடன், இன்னும் 3.8 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறுகின்ற வகையிலே, 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து, 2014 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அந்தப் பகுதிகளில், கிராமப்புற பொருளாதார வளர்ச்சி கணிசமாக உயர வாய்ப்பு ஏற்படும் என்பதை இம்மாமன்றத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு நடத்திய உள்ளாட்சித் தேர்தலில், வன்முறை, குண்டர்களை ஏவி விட்டு வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றுதல், கள்ள ஓட்டு, சட்டம்–ஒழுங்கு சீர்கேடு, எதிர்க்கட்சி வேட்பாளர்களைத் திட்டமிட்டு தாக்குதல், எங்கும் நடைபெறாத ஜனநாயகப் படுகொலை சம்பவங்கள் போன்றவற்றைக் காவல்

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. அன்பழகன்]

துறையினரின் கண் முன்னே அரங்கேற்றி, உண்மைக்கு மாறாகச் செயல்பட்டது. சென்னை மாநகராட்சித் தேர்தலில் நடைபெற்ற முறைகேடுகள் பற்றி மாண்புமிகு அம்மா அவர்கள் கூறிய கருத்துகளை உறுதிப்படுத்தும் வகையிலே, சென்னை உயர் நீதிமன்றம், 155 வார்டுகளில் 99 வார்டுகளுக்கு மறுதேர்தல் நடத்த உத்தரவிட்டதுடன், வெற்றி பெற்றவர்களின் சான்றிதழ்களைத் திரும்பப் பெற வேண்டுமென்று அன்றையதினமே தீர்ப்பும் வழங்கியது. ஆனால், வருகின்ற உள்ளாட்சித் தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும், சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் வகையிலும், குறிப்பிட்ட காலத்திலும் நடத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 903 தற்காலிகப் பணியாளர்களுக்கு அனுமதி வழங்கி, அதற்கான செலவினமாக ரூபாய் 9.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பது, அம்மா அவர்கள் ஜனநாயகத்தின்மீது கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டு, ஊரக, நகரப் பகுதிகளில் உள்ள மக்கள், தங்களது தேவைகளைத் தாங்களே நிறைவேற்றிக்கொள்ளும் வகையிலே, பொது மக்களின் பங்களிப்புடன்கூடிய தன்னிறைவுத் திட்டத்தினைக் கொண்டு வந்தார்கள். அதேபோல், இப்போது 2011–2012 ஆம் ஆண்டு முதல் அத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக 100 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேலை மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பங்களிப்பு செய்ய வேண்டுமென்பதைக் கனிவுடன் பரிசீலனை செய்து, ஏற்கெனவே 2001 ஆம் ஆண்டு அறிவித்ததைப்போல, 25 சதவிகித பங்குத் தொகையை மட்டும் செலுத்திட ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு மின்விசை இறைப்பான் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாகச் செயல்படுத்திய இந்தத் திட்டத்தை, கடந்த மைனாரிட்டி திமுக அரசு நிறுத்திவிட்டது. அதேபோன்று, மழைநீர் சேகரிப்புத் திட்டத்தையும் நிறுத்திவிட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி

[திரு. கே.பி. அன்பழகன்] [2011 ஆகஸ்ட் 18

அம்மா அவர்களின் 2001–2006 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில், தாய்மார்கள் நாள் முழுவதும் பணி செய்துவிட்டு, காலை நேரங்களிலும், மாலை நேரங்களிலும் கையிறைப்பான்கள்மூலம் தண்ணீர் அடிப்பது சிரமம் என்ற காரணத்திற்காகவும், நிலத்தடி நீர் 100 அடிக்கும் கீழே சென்றுவிட்டால், கையிறைப்பான்மூலம் நீர் வராது என்ற காரணத்திற்காகவும், சிறு மின்விசைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக, 39,796 சிறு மின்விசை இறைப்பான்கள் பயன்பாட்டிற்காகக் கொண்டுவரப்பட்டன. மேலும், சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி மூலமாகவும், சிறு மின்விசை இறைப்பான்கள் திட்டம் செயல்படுத்தப்பட்டது. நிலத்தடி நீர் வெகுவாக குறைந்துவிட்ட காரணத்தினாலும், 100 அடிக்கு கீழே உள்ள தண்ணீர் கை இறைப்பானால் வராத காரணத்தினாலும், மீண்டும் சிறு மின்விசை இறைப்பான் திட்டத்தினை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மாவினுடைய பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மூன்று நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் திருக்கரங்களால் 19–10–2005 ஆம் நாளன்று 1,925 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலே தொடங்கி வைக்கப்பட்டன. மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் 3–12–2005–லே தொடங்கி வைக்கப்பட்டது. மேலும், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் மற்றும் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி போன்ற வெளிநாட்டு நிதி ஆதாரங்கள் மூலமாகப் பாதாளச் சாக்கடைத் திட்டம், மழைநீர் வடிகால் திட்டம், சாலை மேம்பாட்டுப் பணிகள், பேருந்து நிலையங்கள், குடிநீர் வசதிகள், குடிசை வீடுகளை மேம்படுத்துதல் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்குக் குடியிருப்புகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளுக்காக உள் கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக நிதி ஆதாரத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் பெருக்கித் தந்தும்கூட, கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. அரசு எந்தப் பணிகளையுமே வேகமாக நடைமுறைப்படுத்தாது இன்றுவரை காலதாமதத்தில் விட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

2011 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: மாநிலத்திலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் என்ற திட்டத்தினை மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது தொடங்கியுள்ளது. இதற்காக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ரூபாய் 750 கோடி ஒதுக்கியுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

தொகுதி கோரிக்கைகள்:

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி, பஞ்சப்பள்ளி சின்னாறு அணையிலிருந்து வெளியேறும் உபரி நீரைக் கால்வாய் அமைத்து செங்கன் பஸ்த்தலாவ் ஏரி முதல் தண்டுகார அள்ளி ஏரி வரையில் இடைப்பட்ட 11 ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி, பஞ்சப்பள்ளி சின்னாறு அணையிலிருந்து வெளியேறும் உபரி நீரைக் கால்வாய்மூலம் எர்ரன அள்ளி ஏரி முதல் பேகார அள்ளி ஏரி வரையில் உள்ள இடைப்பட்ட 14 ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை வளாகத்தில் 57.01 ஏக்கர் உபரி நிலம் இருப்பதால் அங்கே புதியதாக அரசு பொறியியல் கல்லூரியும், காரிமங்கலம் ஒன்றியத்தில் புதியதாக அரசு மகளிர் கலைக் கல்லூரியும் அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நிருவாகத்தின்கீழ் செயல்பட்டுவரும் பல்தொழில்நுட்பக் கல்லூரி தற்போது சுய நிதிக் கல்லூரியாகச் செயல்பட்டு வருவதால் அக்கல்லூரியை அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரியாக மாற்றம் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி, மாரண்ட அள்ளி–பஞ்சப்பள்ளி சாலையிலிருந்து அகரம் மற்றும் கல் அகரம் கிராமத்திற்குச் செல்லும் சாலைக்கு சின்னாற்றின்

[திரு. கேபி. அன்பழகன்] [2011 ஆகஸ்ட் 18

குறுக்கே உயர்மட்டப் பாலம் மற்றும் நல்லூர் ஊராட்சியில் தொள்ளாகாது என்ற இடத்தில் சின்னாற்றின் குறுக்கே அணை கட்ட நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே எண்ணேகொள்புதூரில் உள்ள தடுப்பணையிலிருந்து தருமபுரி மாவட்டம், தூம்பல அள்ளி அணைக்குத் தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்றும், தண்ணீர் கொண்டுவரும் வழியில் உள்ள 36 ஏரிகளுக்கும் கால்வாய் அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தானமடுவு மலைப் பகுதியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அரியாலம் அணைக் கட்டிலிருந்து வெளியேறும் உபரி நீரைப் புதிய கால்வாய் அமைத்து தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில் கும்மனூர் ஊராட்சியில் தூள்செட்டி ஏரிக்கு தண்ணீர் கொண்டுவரவும், தூள்செட்டி ஏரியின் கிழப்புறத்தில் புதிய தடுப்பணை ஒன்று கட்டி சிகம்புதூர் ஏரி வரை 17 ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறத்தினுடைய வளர்ச்சி, நகர்ப்புறத்தினுடைய வளர்ச்சி அனைத்திலும் முழு கவனத்தோடு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசானது செயல்பட்டு, தமிழ்நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்ற வகையிலே, ஒரு தொலைநோக்குப் பார்வையோடு இந்தியாவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்குவதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சித் துறைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சபையின் உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

2011 ஆகஸ்ட் 18] [செல்வி கே. பாரதிபாரதி]

இந்தத் துறையின் விவாதத்திற்கு முன்னால் எடுத்துக்கொள்ளப்பட்ட துறை மின்சாரத் துறை. மின்சாரத் துறையைப் போன்று இந்தத் துறை இருந்தால்தான், மாநில அரசினுடைய திட்டங்களை மக்கள் மத்தியிலே கொண்டுபோய் சேர்க்க முடியும். மாநில அரசுக்கும், மக்களுக்கும் இடையில் ஒரு மிகப் பெரிய பாலமாக இருந்து செயல்பட வேண்டிய ஒரு துறை, இந்த நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்தாக நான் பதிவு செய்கிறேன். ஆகவே, இந்தத் துறை எந்த அளவுக்கு வெற்றி பெறுகிறதோ, அந்த அளவுக்கு மக்கள் மத்தியில் நம்பிக்கையைப் பெற முடியும். சென்ற ஆட்சியில், இந்தத் துறை துணை முதலமைச்சர் அவர்களுடைய கரங்களில் இருந்தது; கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால், இந்தத் துறையின் நடவடிக்கைகள் படுதோல்வியாக இருந்தன என்பதை நாங்கள் நேரடியாகப் பார்த்தோம். (மேசையைத் தட்டும் ஒலி)

திண்டுக்கல்லில் ஒரு பெரியவர், "வங்கியில் லோன் கேட்டேன்; எனக்கு லோன் கிடைக்கவில்லை. நீங்கள் வாங்கிக் கொடுங்கள் அம்மா" என்று என்னிடம் வந்தார். "என்ன லோன்?" என்று கேட்டேன். "வாகன லோன்" என்றார். வாகன லோனே கிடைக்கவில்லையா என்று நானும் மேனேஜருக்கு போன் செய்தேன். "வாகன லோன் கேட்டிருந்தால் கொடுத்திருக்கலாம் அம்மா! அவர் குதிரை 2 வேண்டுமென்று கேட்கிறார்" என்று அவர் சொன்னார். அந்தப் பெரியவரிடம் கேட்டபோது, "இந்தச் சாலையில் வாகனமெல்லாம் போக முடியாது. நான் எப்படிப் போவது? அதனால் குதிரை வாங்குவதற்கு லோன் வாங்கிக் கொடுங்கள்; அப்போதுதான் நான் போக முடியும்" என்றார். அந்த அளவுக்குத் தலைவிரி கோலமாக நகராட்சியின் சாலைகள் இருந்தன என்பது யதார்த்தமான உண்மை. இதை எல்லா பத்திரிகைகளிலும், பொதுக் கூட்டங்களிலும் நாங்கள் பேசிவிட்டுத்தான் இந்த உண்மையை நான் பதிவு செய்கிறேன்.

கடந்த ஆட்சியில், பாதாளச் சாக்கடைத் திட்டம் 22 நகராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அது மாநில அரசினுடைய திட்டம் மட்டுமல்ல; மக்களே அதற்காக ரூபாய் 10,000 கட்டணமாகக் கொடுத்திருக்கிறார்கள். அது மக்களுடைய வரிப் பணம். ஒவ்வொரு வீட்டிலும் உள்ளவர்கள் ரூபாய் 10,000 கொடுத்திருக்கிறார்கள். 92 கோடி ரூபாய் செலவில் அத்திட்டத்தைச் செயல்படுத்துவதாகச் சொன்னார்கள். ஆனால், 2½ ஆண்டுகள்

ஆகியும் இன்னும் முடியவில்லை. இதில் என்ன நடந்தது என்றால், பாதாளச் சாக்கடைக் குழி தோண்டுவதற்கு ஒருவர் வருவார்; அதற்கு Highways Department அனுமதி கொடுக்க வேண்டும். அவரைக் கேட்டால் cutting order வரவில்லை என்று சொல்வார். இவர்கள் இரண்டுபேரும் cutting order-ஐ பற்றிப் பேசும்போது, பக்கத்தில் இருக்கும் ஒருவர், "எங்களுக்கெல்லாம் cutting ஒன்றும் வரவில்லையே, எங்களுக்கு cutting வந்தால்தான் உங்களுக்கெல்லாம் cutting order வரும்" என்றார். இந்த cutting system என்பது நகராட்சி அமைப்புகளில் மிகப் பெரிய அளவிற்கு இருக்கிறது.

முற்பகல் 11–50

நம்முடைய சுதந்திர தினத்தில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுடைய உரையிலும், பாரதப் பிரதமர் அவர்களுடைய உரையிலும் பெரும் பகுதி இலஞ்ச, ஊழலைப் பற்றியே குறிப்பிட்டிருக்கிறார்கள். உலக நாடுகள் முழுவதும் சுதந்திர தின உரையைக் கவனித்துக் கொண்டிருந்த நேரத்தில், இந்தியாவில் எது பிரதானமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அப்பொழுது இந்த நகராட்சி அமைப்புகளில் இந்த cutting system என்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு cutting ஆக அதை cut பண்ணி ஒழித்தால்தான் நகராட்சி மூலமாக குடிநீரைக் கொடுக்க முடியும், சாலைகளைச் சீரமைக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இதிலே என்ன சிக்கல் என்று பார்த்தீர்கள் என்றால், நம்முடைய அதிகாரிகள் நேர்மையானவர்கள், அரசு நேர்மையாக செயல்பட முடியும். அங்கு இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகள், அது ஒரு மக்கள் சபை. ஆக, இந்த மக்கள் சபையினுடைய ஜனநாயகத்தை மீறவும் முடியாது. ஆனால், அதே சமயத்திலே அந்த மக்கள் சபை பல நேரங்களில் நிர்வாகத்தை அழுத்தும். எங்களுக்கு இதைச் செய்து கொடுங்கள் என்பார்கள். அப்பொழுது அதிகார துஷ்பிரயோகம் வருகிறபொழுது, இந்த பாதாளச் சாக்கடைத் திட்டப் பணியிலே என்ன முறைகேடு நடந்தது, என்ன ஊழல் நடந்தது என்று அதிகாரிகளால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட அன்றைக்குக் கேள்வி நேரத்திலே, அது தி.மு.க. ஆட்சியிலேயே எடுத்தோம், கவிழ்த்தோம் என்று போட்டார்கள், நம் அரசு அப்படி இருக்காது என்று சொன்னார்கள். அத்திட்டத்தை எடுத்தோம், கவிழ்த்தோம் என்று சாதாரணமாகச் சொல்ல முடியாது. திட்டத்திலேயிருந்து நிதியை எடுத்துவிட்டார்கள், திட்டத்தைக் கவிழ்த்து விட்டுவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே,

2011 ஆகஸ்ட் 18] [செல்வி கே. பாரதிபாரதி]

இதற்காக அங்கே என்ன நடந்தது என்பதை அறியும் உரிமை எனக்கும், மக்களுக்கும் இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே ஒரு ஆய்வு செய்து, பாதாள சாக்கடைத் திட்டத்தின் உள்ளே என்னதான் நடந்தது என்ற உண்மையை மக்களுக்குச் சொல்ல வேண்டும். சொல்லுங்கள். அதற்கு அடுத்து, இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து சிறப்பாக முடிக்க வேண்டும். இப்பொழுது புதிய மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டுபோக வேண்டும் என்று இன்றைக்கு முடிவு செய்திருக்கிறீர்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம்.

அதேபோன்று குடிநீர். சென்ற ஆட்சியில் இண்டுக்கல்லிலே 17 நாட்களுக்கு ஒரு நாள்தான் தண்ணீர் விட்டார்கள். தேனிக்குப் போனால், பக்கத்திலே வைகை ஆறு ஓடிக்கொண்டே இருக்கிறது. அங்கே 15 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர். கோவில்பட்டிக்குப் போங்கள், 18 நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர். இப்படி நம்மிடம் இருக்கக்கூடிய மக்கள் எத்தனை நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பிடிக்கிறீர்கள் என்று கேட்க வேண்டாமா? இந்தக் குடிநீர் வழங்குவதிலேயே தோல்வி அடைந்ததனால்தான் கடந்த ஆட்சி என்பது மக்கள் மத்தியில் மிகப் பெரிய தோல்வியாக இருந்தது. ஆகவே, இந்தக் குடிநீரிலே மாண்புமிகு முதல்வர் அவர்களும், அரசும் மிகச் சரியாக இந்தக் கொள்கையைப் பிரதிபலித்திருக்கிறார்கள். இந்தத் தொகுதி, அந்தத் தொகுதி என்று இல்லை. தமிழகம் முழுவதும் குடிநீர் வழங்குவது எங்களுடைய கடமை என்று சொல்லி இருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய புதிய திட்டங்களைத் தீட்டுங்கள். இண்டுக்கலுக்குக்கூட நம் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நான் கோரிக்கை மனு கொடுத்திருக்கிறேன். ஆகவே, தமிழகம் முழுவதும் தண்ணீர் கொடுப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக துப்புரவுப் பணி. துப்புரவுப் பணியிலே இப்பொழுது e–mail முகவரி M.L.A.–களுக்கு ஒதுக்கியதாலே, வருகிற mail எல்லாம் கொசுவைப் பற்றிதான் வருகிறது. என்ன கொடுமை என்று பார்த்தீர்களானால், இன்றைக்கு இருக்கக்கூடிய, இயற்கைச் சூழலிலே, பூச்சிகள், கொசுக்களினுடைய தொல்லை தாங்கவே முடியவில்லை. அதை முற்றிலுமாக ஒழிக்க முடியாது. ஆனால், துப்புரவுப் பணிக்கான ஊழியர்கள் நியமனமே கிடையாது. நம்முடைய மின்சாரத் துறையிலே மிகவும் அருமையாகச்

சொல்லியிருக்கிறீர்கள். 5,000 துப்புரவுப் பணியாளர்களை நிரந்தரப்படுத்தப் போகிறோம் என்று சொல்லி. மின்சாரத் துறையில் துப்புரவுப் பணியில் இருப்பவர்களை நிரந்தரப்படுத்தியது வரவேற்கக்கூடிய ஒரு அம்சம். ஆனால், நகராட்சியில் இந்தத் துப்புரவுப் பணியை தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக அதைக் கொண்டுபோய் தனியார் கையிலே ஒப்படைத்துவிட்டார்கள். 160 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தவருக்கு 75 ரூபாய் கூலி. அவர் எப்படி வேலை செய்வார்? அந்தத் துப்புரவுத் தொழிலாளியின் வாழ்க்கை எப்படி இருக்கும்? காலையிலே குழந்தைகளையெல்லாம் தாய்மார்கள், பெண்கள் வீட்டிலேயிருந்து பள்ளிக்கூடத்திற்கு அவசரமாக அனுப்புவார்கள். ஆனால், அந்தத் துப்புரவுப் பெண் தொழிலாளி 6 மணிக்கு வந்து தெருவைக் கூட்டிக்கொண்டிருப்பார். கழிவுகளைக் கூட்டி சுத்தம் செய்வார். அவர்களின் குழந்தைகளை வீட்டிலே பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்கு எந்தப் பெண்ணும் இருக்க மாட்டார்கள். அப்படி, இதுபோன்ற ஒரு சமூகப் பணியிலே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய துப்புரவுத் தொழிலாளிகளை ஓர் அரசு ஊழியராக நியமனம் செய்ய வேண்டாமா? ஏற்கெனவே இருந்த அரசிலே நான் முன்னாள் துணை முதலமைச்சர் அவர்களிடம் இதே சபையிலே பேசி இருக்கிறேன். மாண்புமிகு சபைத் தலைவர் அவர்களும் கேட்டுக்கொண்டுதான் இருந்தீர்கள். ஆகவே, உங்களுக்கு மீண்டும் நினைவூட்டுக்கூடிய வகையில் இதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

தயவு செய்து அந்தத் துப்புரவுப் பெண் தொழிலாளிகள் கையை இன்றைக்குப் பாருங்கள். அதிலே பச்சை குத்தப்பட்டிருக்கும். அந்தப் பச்சையில் யாரைக் குத்தினார்கள்? உங்களைப் பற்றி, உங்களுக்குத் தெரியும், நான் சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய படம் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் சார்ந்த அரசியல் கட்சி இருக்கும். அப்படிப்பட்ட அந்தப் பெண்கள், ஏழைகள் உங்களை நேசிக்கிறார்கள். உங்களையென்றால் மாண்புமிகு முதல்வர் அவர்களை நேசிக்கக்கூடியவர்கள் அந்த தாழ்த்தப்பட்ட துப்புரவுப் பெண் தொழிலாளிகள். இன்றைக்கு அந்த இளைஞர்கள் சமூகத்தினுடைய வேறு திசைக்கு, வழிக்குச் சென்று சமூக விரோத சக்திகளாக மாறக்கூடிய அளவிற்கு வெளியில் நிலைமைகள் இருக்கின்றன. எனவே, அவர்களையெல்லாம் இந்தப் பணியில் அரசு ஊழியர்களாக நியமனம் செய்வதற்கு முன்வர வேண்டும். இதற்கு

2011 ஆகஸ்ட் 18] [செல்வி கே. பாரதிபாரதி]

நகராட்சியினுடைய அதிகாரம், நகராட்சி வருமானத்திலிருந்து 40 சதவிகிதம் அளவில் மட்டும்தான் எடுத்து ஊழியர்களுக்கு, மாத ஊதியமாகக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. ஆனால், அது முடியாது. Sixth Pay Commission–படி, அதிகபட்சமான ஊதியம் கொடுக்க வேண்டியது வரும். ஆகவே, ஊழியர் நியமனமே கிடையாது நகராட்சியிலே. ஊராட்சி அமைப்புகளில் துப்புரவுப் பணியாளர்கள் கிடையாது, Technicians கிடையாது, Fitter-கள் கிடையாது. ஆக, இப்படி இருக்கும்போது ஊழியர்கள் நியமனத்திற்கு நகராட்சியினுடைய வருமான வரம்பை நாம் அதிகப்படுத்துவதற்கு இந்தத் துறை ஆலோசிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அடுத்து, துப்புரவுப் பணி சம்பந்தமாகச் சுய உதவிக் குழு என்று மாற்ற வேண்டாம். இந்தப் பணியை தனியார்களிடமும் கொடுக்க வேண்டாம். தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இருக்கிற துப்புரவுப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். துப்புரவுப் பணிகள் மட்டுமல்லாமல் ஊராட்சி அமைப்புகளில், நகராட்சியினுடைய அதிகாரங்கள் 18 துறைகளுக்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவர்களிடம் பிறப்பு, இறப்பு சான்றிதழ் கொடுப்பதற்கான அதிகாரம் மட்டும்தான் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த பிறப்பு, இறப்பு சான்றிதழைக்கூட கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் கொடுக்க முடியாது. அவர்களுடைய குழந்தைகளுக்குப் பிறப்புச் சான்றிதழ் வேண்டும் என்றாலும்கூட அவர், வி.ஏ.ஓ.-விடம்தான் போய் நிற்க வேண்டும். ஒரு பிறப்பு, இறப்புச் சான்றிதழை நகராட்சி கொடுக்க முடிகிறது. ஆனால் கிராமப் பஞ்சாயத்தால் கொடுக்க முடிவதில்லை, என்ன அதிகாரம் அவர்களிடம் இருக்கிறது? மக்கள்தான் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆகவே, கிராம மற்றும் நகரப் பஞ்சாயத்துகளுக்கு மத்திய ஆட்சியினுடைய பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின்படி என்ன அதிகாரங்கள் ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றனவோ அந்த அதிகாரங்களை ஒப்படைப்பதற்கு நமது மாநில அரசு ஒரு திட்டமிடுதலை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, இந்த துப்பரவுப் பணியாளர்களுக்கு நிதியாக 10 சதவிகிதம்தான் வழங்கப்படுகிறது. உங்களுக்கு உள்ள நிதிச் சிரமம் நன்றாகப் புரிகிறது. எனவே, கூடுதலாக நிதி கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கிராமப் பஞ்சாயத்தில் இருக்கக்கூடிய Clerk-களை செயலாளர்களாக மாற்றி அவர்களுக்கான காலவரை ஊதியம் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். கிராமப் பஞ்சாயத்தில் கிட்டத்தட்ட 350 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. 100 ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும்தான் கை பம்ப் பழுதடைந்து போனால், அதனைச் சரி செய்வதற்கான technician இருக்கிறார். Fitter கிடையாது, Electrician கிடையாது, ஊழியர்களே இல்லாமல் இருக்கும்போது, அந்த கை பம்ப்-களை யார் சரி செய்ய முடியும்? தண்ணீர் எப்படிக் கொடுக்க முடியும்? தெரு விளக்குகள் சரியாக எரியவில்லையென்றாலும்கூட மின்சாரத் துறையைத்தான் நாட வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தக் கிராமப்புற, நகர்ப்புற பஞ்சாயத்து அமைப்புகள் தங்களுடைய வேலைகளைச் செய்வதற்காவது, ஊழியர்களை நியமனம் செய்வதற்கு நாம் அனுமதிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இது தவிர, நம்முடைய ஊராட்சி, நகராட்சிப் பகுதிகளில் இப்போது மிகப் பெரிய தேர்தலை நாம் சந்திக்க இருக்கிறோம். அந்தத் தேர்தல் ஊராட்சி ஒன்றியத்திற்கும், மாவட்ட ஊராட்சிக்கும் நேரடி தேர்தல் நடத்துவது சரியாக இருக்கும். நீங்கள் நகராட்சிக்கு நேரடித் தேர்தலை அறிவித்திருக்கிறீர்கள். ஊராட்சிக்கும், மாவட்டத்திற்கும் அதேபோல் அறிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் அங்கேயும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை ஊட்டிக்கும், கொடைக்கானலுக்கும் கடத்திக் கொண்டுபோய் விடுவார்கள். அவர்களைக் கண்டுபிடிக்க அதன்பின் தேர்தல் ஆணையர் அலைய வேண்டி வரும். ஆகவே, நேரடித் தேர்தல் என்பது ஏற்கெனவே அதிமுக. அரசினுடைய கொள்கை ரீதியாக இருந்த நடவடிக்கை. அதனை மீண்டும் நீங்கள் கொண்டு வர வேண்டும்.

50% பெண்கள் பஞ்சாயத்துத் தேர்தலில் பங்கு எடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்பது மாவட்டங்களில் பெண்களை மாவட்ட ஆட்சித் தலைவராக நீங்கள் நியமனம் செய்திருக்கிறீர்கள்; வரவேற்கக்கூடிய விஷயம். நம்முடைய திருச்சி R.D.O-விற்கு கல்பனா சாவ்லா விருது மேஜையைத் தட்டும் ஓலி கொடுத்திருப்பது என்பது மிகப் பெரிய பாராட்டக்கூடிய ஒரு விஷயமாகும். மேலும்,

2011 ஆகஸ்ட் 18] [செல்வி கே. பாரதிபாரதி]

பெண்கள் அதிகாரத்தில் இருக்கிறபொழுதுதான் அவர்களுக்கும் பாதுகாப்பாக இருக்கும். அரசியலில் பங்கேற்பதற்கான பயிற்சியும் கிடைக்கிறது. ஆகவே, ஊராட்சி அமைப்புகளில் 50% பெண்கள் பங்கெடுப்பதற்குரிய ஒதுக்கீடு செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் எடுத்த நடவடிக்கைகளில் என்னைக் கவர்ந்த ஒரு நடவடிக்கை என்னவென்றால், நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் Flex Board–ஐ அகற்றச் சொல்லி உத்தரவு போட்டதுதான். இப்பொழுதுதான் மதுரை மீனாட்சியம்மன் கோபுரமே தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையென்றால் தெரியவே தெரியாது. மதுரை மீனாட்சி அம்மன் மட்டுமல்ல மதுரையில் வாழும் எல்லா மீனாட்சி அம்மன்களும் இப்பொழுதுதான் பெருமூச்சே விடுகிறார்கள். அப்படி ஒரு Flex Board கலாச்சாரம். இரவு 2–00 மணிக்கு Flex Board–ஐ பார்த்தால் பயமாக இருக்கும். அவர் மட்டும் தன்னந்தனியாக வானத்தைப் பார்த்து சிரித்துக் கொண்டிருப்பார். இப்படிப்பட்ட Flex Board கலாச்சாரம் இப்போது நகரங்களில் அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறது. மக்கள் மத்தியில் இது வரவேற்பைப் பெற்றுள்ளது. நான் Flex Board வேண்டாம் என்று சொல்லவில்லை. குறிப்பிட்ட தலைவர்களுக்கு, குறுகிய காலத்திற்கு வேண்டும், அதையும் நான் மறுக்கவில்லை. ஆனால், அந்த ஜனநாயக உரிமையை ரொம்ப தூரத்திற்குப் பயன்படுத்தக்கூடாது. ஆகவே, இதற்கு எடுத்த முடிவு ரொம்ப நல்ல முடிவு. அதனையும் நாம் வரன்முறைப்படுத்த வேண்டும்.

நண்பகல் 12–00

இரண்டாவது முடிவு, தேர்தலில் வெற்றி பெற்றவுடன், மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்கள் கட்சிக்கு சொன்னது, "நீங்கள் நன்றி சொல்லப் போகும்பொழுது எளிமையாகப் போங்கள்" என்றார். பார்த்தால், வெற்றி பெற்றவுடன் பயங்கர பட்டாசு. இந்தப் பட்டாசு சில பேர் மேல் விழுந்து அவர்கள் பதறியடித்து ஓடுகிறார்கள். இனிப்பு கொடுக்கிறோம் என்று கொடுத்தால் சில பேருக்குக் கிடைக்காது. அவர் ஒரு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொள்கிறார். இந்தக் கலாச்சாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, எளிமையாகப் போங்கள்; எளிமையாகப் போங்கள் என்பதை உடை, அலங்காரம் இதை நான் சொல்லவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மக்களிடத்திலே எளிமையான முறையில் அணுகும்

முறை. அவர்கள் வருகிறபோது அவர்களைச் சந்திப்பது, பிரச்சினைகளைக் கேட்பது, அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்வது. ஆகவே, அரசின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எளிமையோடு இருக்க வேண்டும் என்ற முறையில் எளிமையோடு நன்றி சொல்லுங்கள் என்று அவர் கட்சிக்குச் சொன்னாலும், ஒரு முதலமைச்சர் சொன்ன அந்த வார்த்தை என்பது (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மத்தியில் எங்களைப் போன்றவர்களைக் கவர்ந்தது, அதை நம்முடைய அரசியல் நடவடிக்கையில் நாம் கடைப் பிடிப்போம். அதிகாரிகளையோ, நிர்வாகத்தையோ ஒரு சாதாரண எளியவர் பார்க்க வந்து, பார்க்க முடியாமல் போனால், அவரைத் தேடிச் சென்று பார்ப்பது மிகச் சரி. எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை நன்றாக, சரியாக நியமனம் செய்திருக்கிறீர்கள். திங்கட்கிழமை மக்கள் சந்திப்பு நடந்தது. அப்போது அவர் என்ன செய்தார் என்றால் கீழே இறங்கிப் போய் பெட்டிஷன் வாங்கியிருக்கிறார். சில பெண்கள் தர மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் கலெக்டரிடம்தான் கொடுப்போம் என்று சொல்லிவிட்டார்கள். (சிரிப்பு) நான்தான் கலெக்டர் என்று சொல்லியிருக்கிறார், 'இல்லை, கலெக்டர் எல்லாம் இப்படி இறங்கி வர மாட்டார்கள்' என்று சொல்லிவிட்டார்கள். அப்படி ஒரு சரியான, பொருத்தமான மாவட்ட ஆட்சித் தலைவர். மக்களை நாம் இறங்கிப் போய் பார்க்கக்கூடாதா? அப்படி மாவட்ட ஆட்சித் தலைவர் உள்பட இறங்கிச் செல்கிறபோது, இந்த ஆட்சி வித்தியாசமாக இருக்கிறது, அரசு நிர்வாக அமைப்பு வித்தியாசமாக இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று மக்கள் புரிந்துகொள்வதற்கு அது உதவியாக இருந்தது.

தில்ஷன் என்ற சிறுவன் படுகொலையிலே இராணுவத்தின்மீது விசாரணையைத் தொடுத்து அந்த மீனவச் சகோதரிக்கு நியாயம் பெற்றுக் கொடுத்தது என்பது ஒரு நல்ல அம்சம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு எங்களுடைய கூட்டணி அரசு என்று நாங்கள் வெளியிலே பெருமையோடு சொல்லிக்கொள்வதற்கு இவையெல்லாம் சாதகமாக இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும் சில நண்பர்கள் என்ன, சிபிஎம். எல்லாம் இப்படிப் பேச ஆரம்பித்து விட்டார்கள் என்று சொல்கிறார்கள். நல்ல நடவடிக்கைகளைப் பாராட்டுவது தவறே கிடையாது. எப்போதும் கம்யூனிஸ்டு இயக்கத்திலுள்ள நாங்கள் மக்கள் கோரிக்கைகளை முன்வைப்போம், பேசுவோம். நாம் போர்க்களத்தில் போராடுவோம், சாதாரண காலங்களில் மக்கள் மத்தியில்,

2011 ஆகஸ்ட் 18] [செல்வி கே. பாரதிபாரதி]

அரசின்மீது மிக நம்பிக்கை வைத்து மக்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள், அந்தக் காத்திருப்பு நேரத்தில் கோரிக்கைகளை நாம் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு செல்கிறோம் என்ற முறையிலேதான் இந்தக் கருத்துகளை நாங்கள் பதிவு செய்ய விரும்புகின்றோம்.

அதேபோன்றுதான் நம்முடைய திருப்பூரில் திருப்பூர் மேம்பாட்டுக் கழகம் என்றவொரு அமைப்பு இருக்கிறது. ஆனால், தண்ணீரை, ஆயிரம் லிட்டர் 3 ரூபாய் 50 பைசா என்பதை 20 ரூபாயாக உயர்த்துவதற்கு ஒரு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே திருப்பூரை பல சிக்கல்களிலே, தொழில் சிக்கலிலே இருந்து மீட்பதற்கு இப்போது அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. இப்போது தண்ணீரிலேயும் சிக்கல் வராமல் அந்தக் கட்டணத்தை முறைப்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து, பேரூராட்சிகளில் ஒரு துப்புரவுத் தொழிலாளி இறந்துவிட்டால், ஓர் ஊழியர் இறந்துவிட்டால், வேலை கேட்கும் வாரிசு அதிகமாகப் படித்திருப்பார். ஆனால், அந்த வாரிசிடம், 'நீ துப்புரவுப் பணிக்குத்தான் போக வேண்டும்' என்று சொல்லக்கூடிய ஓர் அரசாணை இருக்கிறது. அந்த அரசாணையை மாற்ற வேண்டும். ஏனென்றால் அவர் தந்தை பார்த்த வேலை வேறு. இவருடைய கல்வித் தகுதி வேறு. வாரிசு அடிப்படையில் தரக்கூடிய வேலை என்பது இவருக்கு இவருடைய கல்வித் தகுதியை வைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையையும் இந்த நேரத்திலே உங்கள் மத்தியில் வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, மகளிர் சுய உதவிக் குழுக்கள் நகராட்சி அமைப்புகளிலே இருக்கின்றன. நம்முடைய திண்டுக்கல்லில் சாதாரண மக்கள், ஏழை மக்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினை என்னவென்றால் விலைவாசி 3 மடங்கு, வீட்டு வாடகை 4 மடங்கு உயர்ந்துவிட்டது. நகர்ப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்களுக்கு வாடகை வீடு பிடித்து அந்த வீட்டில் குடியிருப்பதை விட ஒரு மோசமான காரியம் எதுவுமே இல்லை. அவ்வளவு வாடகை உயர்வாக இருக்கிறது. வீடே இல்லாத அந்த ஏழைகளுக்கு—ஏற்கெனவே தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டதை நினைவுபடுத்த விரும்புகிறேன்; 3 சென்ட் இடம்தான். நகராட்சிப் பகுதிகளில் எங்கெல்லாம் அந்த இடங்கள் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, அந்தப் பகுதிகளைக் கண்டறிந்து வீடற்ற

[செல்வி கே. பாரதிபாரதி] [2011 ஆகஸ்ட் 18

ஏழைகளுக்கு அந்த இலவச வீட்டுமனை கொடுக்கக்கூடிய திட்டத்தை எப்படியாவது நீங்கள் அமல்படுத்தினால் அது தமிழக மக்களுக்கு, நகர மக்களுக்கு, நகர்ப்புற ஏழைகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்ற முறையிலே இதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

அடுத்து, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் 100 ரூபாய் கூலி சம்பந்தமாக கொள்கை விளக்கக் குறிப்பிலே மிகத் தெளிவாக நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். மரியாதைக்குரிய உறுப்பினர் தம்பி திரு. தனியரசு அவர்கள்கூட, இதுதான் விவசாயத்தையே கெடுக்கிறது என்பது மாதிரி சொன்னார். தலைவலி வந்தால் தலையையே எடுத்துவிட முடியாது. ஆகவே, பிரச்சினை இருக்கிறது; வேளாண்மைக்குப் பாதிப்பு இருக்கிறதா என்றால் அதற்கு வேறு வகையிலே பாதிப்பு இருக்கிறது. ஆனால், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் என்பது கிராமப்புற மக்களுக்கு வேலை மட்டுமல்ல, கூலியையும் கொடுக்கக்கூடியது, ஊதியத்தைக் கொடுக்கக்கூடியது. பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்தத் திட்டம் என்பது மிகப் பெரிய அளவிற்குப் பயன்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தைப் பலப்படுத்துவதற்கு குளம், கண்மாய், ஏரிகளைத் தூர் வாருவதற்கு இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தலாம். கட்டுமானப் பணிகளுக்கு இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தலாம். ஆகவே, இந்தத் திட்டத்தை மேலும் சிறப்பாக்குவதற்கு மாநில அளவில் சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஒரு குழு அமைத்து, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சில தொண்டு நிறுவனங்கள் போன்ற குழுக்களை அமைத்து, நல்ல கருத்துகளைப் பெற்றுக்கொண்டு, நாம் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி சிறப்பாகக் கொண்டு சென்றால் நமது கிராமப்புற மக்களுக்கு, கிராமப்புற சொத்துக்களை உருவாக்குவதற்கு, பாதுகாப்பதற்கு மிகவும் பயன்படும் என்ற முறையிலே இந்த உள்ளாட்சி, நகராட்சி மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பா. வளர்மதி.

***திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொற்றாமரைக் குளத்தினில் பூத்திட்ட புது மலரே! பொதிகை மலை மேலையில் விளைந்திட்ட மாமணியே! ஓய்வுக்கு

2011 ஆகஸ்ட் 18] [திருமதி பா. வளர்மதி]

ஓய்வு தந்து உழைப்பின் வெற்றியை உலகத்திற்குச் சொன்ன எங்கள் தாயே! ஊருக்கு நிழல் வழங்க தன் தலையில் வெயில் தாங்கும் ஆலமரமே! இத்தோடு முடிந்தது என்றோரின் இடுப்பு எலும்பை முறித்தெறிந்த எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மடி நிறைய மலர்களை அள்ளி வரும் வைகரை போல வந்த எங்கள் தாயே! முட்டுக்கட்டைகளையும் முறித்து சக்கரமாக்கி சத்தியத் தேரோட்டும் எங்கள் பார்த்தசாரதியே! (மேசையைத் தட்டும் ஒலி) நெற்றி வியர்வையில் வெற்றி நித்தமும் வளர்ப்பவரே! வீணையை நீக்கி ஓர் வில்லை ஏந்திய எங்களின் வெற்றிக் கலைமகளே! சோதனைத் தீயினில் தினமும் சுட்ட பொன்னாய் மிளிரும் சாதனைத் தலைவியே! விளம்பரங்களில் மட்டுமே பார்த்து மலைத்த நாப்கின்களை ஏழைக் கிராமத்துப் பெண்ணுக்கும் இலவசமாகத் தந்த எங்கள் அம்மா! உங்களின் திருவடிகளை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது நடக்கும் இந்த விவாதத்தில் என்னையும் பேசப் பணித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மானியக் கோரிக்கைகளிலே சொல்லி இருக்கிற திட்டங்களுக்கு விளம்பரங்கள் தேவையில்லை. காரணம், விளம்பரங்களுக்குத்தான் வெளிச்சம் தேவை. வெளிச்சங்களுக்கு விளம்பரம் தேவையில்லை என்கிற வகையில் விரல்களில் மாட்டி அழகு பார்த்துக்கொள்ளும் மோதிரங்களைப்போல ஒவ்வொரு திட்டமும் ஒரோர் அழகுதான். மல்லிகைப் பூக்களைக் கல்லால் அடிக்க முடியாது. மணக்கும் மல்லிகைச் சரம் இந்த மானியக் கோரிக்கை. எங்கே தொட்டாலும் மணக்கும் சந்தனம் போல எல்லா பகுதிகளும் மணக்கும் சந்தனமாக இந்த மானியக் கோரிக்கை மணந்து கொண்டிருக்கிறது.

கிராமங்களே ஒரு நாட்டின் உண்மையான ஜனநாயகம். அதற்காக உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் வரும் அக்டோபர் திங்களில் நடத்தப்படும் என்று மானியக் கோரிக்கையில் சொல்லி இருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஓர் அம்சம். தற்போது, ஊராட்சி மன்றங்களில் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவெடுத்திருப்பது வரவேற்கத்தகுந்த அம்சம்.

[திருமதி பா. வளர்மதி] [2011 ஆகஸ்ட் 18

தொடக்கக் கல்வி, குடிநீர் விநியோகம், பொதுச் சுகாதாரம் ஆகியவற்றை மனதிலே இருத்தி உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த நிதியாண்டில் 6,509 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒதுக்கியிருக்கிறது என்று சொன்னால், கிராம மக்கள்மீது மாண்புமிகு அம்மா அவர்கள் வைத்துள்ள அக்கறையை இந்த மானியக் கோரிக்கை தெளிவுபடுத்துகிறது.

மைனாரிட்டி கட்சி உறுப்பினரும் உள்ளாட்சி, நகராட்சித் துறை அமைச்சராக இருந்தவரும், சட்டமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்கப் போவதாக அறிவித்தார்கள். எல்லோருமே வருவார்கள் என்று எதிர்பார்த்தோம். தள்ளாத வயது என்றாலும் தள்ளிக்கொண்டாவது வருவார்கள் என்று எதிர்பார்த்தோம். தள்ளிக்கொண்டே திருவாரூருக்குப் போனார்கள், தள்ளிக்கொண்டே டில்லிக்குப் போனார்கள். இலாருக்கும் போனார்கள். ஆகவே, சட்டமன்றத்திற்கும் வருவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு. When the devil cannot come, he will send somebody. 'சாத்தான் தான் வரமுடியாவிட்டாலும் யாரையாவது அனுப்புவான்' என்ற பழமொழி உண்டு. சொன்னது போலவே கட்டமாக வந்தார்கள்; கட்டமாகவே திரும்பிச் சென்றார்கள். மக்கள் நலனில் அக்கறைக் கொண்டது அவ்வளவுதான். நினைவூட்டுகிறேன். சென்ற ஆட்சிக் காலத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூண்டோடு சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். செய்தி கேட்டதும் பிடரிமயிர் சிலிர்க்க பெண் சிங்கம்போல இந்தச் சபையிலே தன்னந்தனியாக வந்து நின்று முழக்கமிட்டவர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு இந்தச் சபையிலே அலை அடித்தது; புயல் வீசியது; பூகம்பம் வெடித்தது. தான் தனியாகவா, தன்னோடு எத்தனைப் பேர் என்று எதைப் பற்றியும் கவலைப்படாத, தனி மனித வீரம்தான் நம்முடைய அம்மாவின் வரலாறு.

பிற்பகல் 12-10

ஆட்சி என்பது தேரின் சக்கரம் போன்றது; சுழன்றுகொண்டே இருக்கும். நாங்கள் தெரிந்து வைத்திருக்கிறோம். தெரியாதவர்கள் ஆடிய ஆட்டங்கள் ஒன்றா, இரண்டா? பதில் சொல்ல வேண்டிய பழைய பாக்கிகள் நிறையவே இருக்கின்றன. 'மானாட, மயிலாட' பார்த்துவிட்டு, மகாபலிபுரம் போய்விட்டு, ஓய்ந்த நேரத்தில் ஒரு நடை சட்டமன்றமும் வந்துவிட்டுப் போய் இருக்கலாம்.

2011 ஆகஸ்ட் 18] [திருமதி பா. வளர்மதி]

சறுக்கியதுதான் சாக்கு என்று போய்விட்டார்கள். வந்து, இருந்து, ஓராயிரம் நிலவு ஒன்றாய் வந்ததுபோல், ஒரு கோடி செம்பருத்தி ஒன்றாய் குவிந்ததுபோல் எங்கள் அம்மா அமர்ந்திருக்கும் அழகை, அவரின் அரியாசனத்தை, அவரின் சிம்மாசனத்தை ஒரு முறையாவது பார்க்க வேண்டாமா? பார்த்தவர்கள் சொன்னதைக் கேட்டே பற்றி எரிந்திருக்கும். இருந்தாலும், நேரில் ஒரு முறையாவது பார்க்க வேண்டாமா?

மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்த அம்மா முதன்முறையாக டெல்லிக்குப் போனார். உலக ஊடகங்கள் முதல் டெல்லி ஊடகங்கள் வரை "Storm hits Capital" டெல்லியைப் புயல் தாக்குகிறது என்று அம்மாவின் வருகையைப் பிரகடனப்படுத்தின. 'Special Car, special care' என்று டெல்லி Media-க்கள் செய்தி வெளியிட்டன. இதுவரை எந்த முதலமைச்சருக்கும் பிரதமர் அலுவலகம் இந்த மரியாதையை (மேசையைத் தட்டும் ஒலி) செய்ததில்லை என்று செய்தி வெளியானது. 2011, ஜூன் 15ஆம் நாள் வெளிவந்த 'Deccan Chronicle' என்ற ஆங்கில இதழ் "Prime Minister was waiting at the door with flowers to welcome the charming Lady". (Thumping of Desks) அந்த அழகுப் பெண்மணியை வரவேற்க அலுவலக வாசலில், கையில் பூங்கொத்துகளோடு பிரதமர் காத்திருந்தார் என்று செய்தி வெளியிட்டது. உலகப் பத்திரிகையாளர்கள், ஊடகங்கள் எல்லாம் அம்மாவை மொய்த்துக்கொண்டே போட்டி கண்டார்கள். "அம்மா வந்தார், கண்டார், வென்றார்" என்று செய்தி வெளியிட்டது.

உலக வரலாற்றில் சீசரைப் பற்றி மட்டுமே இப்படிக் குறிப்பிடுவார்கள். சீசரின் கண்பட்ட இடமெல்லாம் அவர் கைக்கு வந்தது; கால்பட்ட இடமெல்லாம் அவர் கொடி பறந்தது. சீசருக்குப் பின்னால் அம்மாவுக்கு மட்டுமே அப்படி ஒரு சரித்திரம் அமைந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதப் புனிதர் அன்னை தெரசா, அம்மாவைப் பார்க்க போயஸ் தோட்டம் வந்தார். அண்மையிலே, அமெரிக்காவின் ஹிலாரி கிளிண்டன் வந்தார்; அம்மாவைப் பார்த்தார். இருவரும் இலங்கையின்மீது பொருளாதாரத் தடை விதித்திருப்பது குறித்துப் பேசினார்கள். கருணாநிதியின் ஆட்சியிலேயும் அமெரிக்காவின் பில்கேட்ஸ் வந்தார். ஊடகச் சாம்ராஜ்யத்தை எப்படி விஸ்தரிப்பது என்று பில்கேட்ஸோடு பிசினஸ் பேசினார்கள். பெரியார் வீட்டு சமையலறைக் கதவு எப்போது திறக்கும் என்று சத்திரச்

சாப்பாட்டுக்குக் காத்துக் கிடந்தவர்கள், பின்னாளிலே உலகப் பணக்காரர் பில்கேட்ஸோடு பிசினஸ் பேசினார்கள். சாய் பாபா வந்து பார்த்தால்கூட, சாமர்த்தியமாக மோதிரம் கேட்டு வாங்கினார்கள்.

சென்ற ஆட்சியின் சாதனையாக கடந்த ஆட்சியிலே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த ஸ்டாலின் பேசிய பேச்சு பதிவாகி இருக்கிறது. புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தைப் பற்றி ஒவ்வொரு கல்லிலும், மணலிலும், ஒவ்வொரு படியிலும், ஒவ்வொரு அறையிலும், ஒவ்வொரு தூணிலும் கருணாநிதியின் பார்வையும், வியர்வையும் இருப்பதாக அவர் சொல்லியிருக்கிறார். மிகப் பாடுபட்டு அந்தக் கட்டடத்தை அவர் கட்டியதாகச் சொல்லியிருக்கிறார். இராமாயண இராமன் அணை கட்ட எந்தக் கல்லூரியிலே என்ஜினியரிங் படித்தார் என்று கேள்வி கேட்ட அதிமேதாவிகள் அந்தக் கட்டடம் கட்ட கருணாநிதி எந்தக் கல்லூரியிலே என்ஜினியரிங் படித்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா ஒரு முறை சொன்னார். அம்மா அவர்கள் அழகாகச் சொன்னார்கள் பாண்டிச்சேரியிலே போலீஸ் வைத்திருக்கின்ற தொப்பியைப்போல அந்தப் புதிய தலைமைச் செயலகம் இருப்பதாக அம்மா அவர்கள் வேடிக்கையாகக் குறிப்பிட்டார்கள்.

பிற்பகல் 12–15

கிராமப் பகுதிகளில், அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு, ஒருங்கிணைந்த கிராமக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 'THAI' ஒன்றை தொடங்கியிருக்கிறார்கள். தற்போதுள்ள பல திட்டங்களையும் ஒருங்கிணைத்து, கிராமக் குடியிருப்புகளை அடிப்படையாகக் கொண்டு, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை இன்றைக்கு கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற மக்கள் பெரிதும் வரவேற்பார்கள்.

அதேபோல, ஒருங்கிணைந்த கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் 680 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, ஐந்தாண்டுக் காலத்தில் அனைத்து கிராமக் குடியிருப்புகளும் படிப்படியாகப் பயனடையும் இதுவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்து மக்களும் இன்றைக்கு இந்த அறிவிப்பைப் பார்த்து, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி 2 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதிலேயும், சட்டமன்ற

2011 ஆகஸ்ட் 18] [திருமதி பா. வளர்மதி]

உறுப்பினர்கள் நிதியிலே மக்களுக்கு சேரக்கூடிய பணிகள் குறித்து, இன்றைக்குப் பெரிதும் சட்டமன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள்.

கிராமப்புற மக்களுக்கு 100 நாள் வேலைவாய்ப்பை உறுதியளிக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக இந்த ஆண்டு, 3,472 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளார்கள். இந்த ஒதுக்கீடு கிராம மக்களின் அடிப்படை வாழ்க்கைக்கு ஒரு ஆணி வேராகத் திகழும் என்பதில் சிறிதுகூட ஐயமில்லை.

கிராமங்களைப் போலவே நகரங்களும் இன்றைக்கு புனரமைப்பு செய்யப்பட்டிருக்கின்றன. நகரமயமானாலும், கிராமப்புறங்களிலிருந்து வேலைவாய்ப்பிற்காக கிராம மக்களின் இடப்பெயர்வினால் நகரங்கள் இன்றைக்கு அல்லோகல்லோலப்படுகின்றன. நகரங்களின் கட்டமைப்பு, அதன் வீட்டு வசதித் திட்டங்களுக்காக 1961 கோடி ரூபாயை இந்த ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் செலவிடத் திட்டமிட்டிருக்கிறார்கள். வரவேற்கத்தகுந்த அம்சம் என்று மக்கள் பாராட்டுகிறார்கள்.

அதேபோல, சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்காக 500 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்காக 750 கோடி ரூபாயும், சிறப்பு நிதியாக இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. சென்னையிலே இருக்கின்ற சாலைகள், தெருக்கள், குடிநீர் வசதிகள், கழிவுநீர் சுத்திகரிப்புகள், வெள்ள நீர் வடிகால்கள், திடக் கழிவு மேலாண்மை, பேருந்து நிறுத்த வசதிகள், வாகன நிறுத்தும் இடங்கள் என்று திட்டங்கள் திட்டப்பட்டிருக்கின்றன. கடந்த ஆட்சியிலே சிங்காரச் சென்னை ஆக்குவோம் என்று சொன்னவர்கள், சென்னையைச் சிங்காரிக்காமல், பொருளாதார ரீதியாக தங்களைச் சிங்காரித்துக்கொண்டிருந்தார்கள். அதனால்தான் இன்றைக்கு சென்னை சீரழிந்து கிடக்கிறது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த மாநகராட்சிப் பகுதிக்கும் பல்வேறு திட்டங்களை இன்றைக்குத் தந்திருக்கிறார்கள்.

பசுமை வீடுகள் திட்டம், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார சீரமைப்பு. இந்த ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார சீரமைப்பு என்பது மிகமிக முக்கியமான ஒன்று. கிராமப்புறங்களிலே இருக்கின்ற பெண்கள் காலைக் கடனையேகூட மாலைக் கடனாக இருட்டும் வரை காத்திருந்து செய்யக்கூடிய மிக முக்கியமான இந்தப்

[திருமதி பா. வளர்மதி] [2011 ஆகஸ்ட் 18

பிரச்சினையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒவ்வொரு பெண்ணின் பிரச்சினையை நேரடியாக அறிந்து, இந்த சுகாதார வளாகங்கள் கட்டுவதற்கு உத்தரவிட்டு, அது கட்டப்பட்டு, அது நடைபெற்று வந்தது. ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் அது பயனற்றுப் போனது. தூய்மையான கிராம இயக்கம். இந்தக் கிராம இயக்கத்தின்மூலம் அங்கன்வாடிகள், பள்ளிகள், பொது இடங்கள் ஆகியவற்றிற்குச் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரங்களை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அதேபோல, சுய உதவிக் குழுக்களைச் சார்ந்திருக்கின்ற பெண்களுக்கு அடையாள அட்டை வழங்குவது. இந்த அடையாள அட்டை வழங்குவது என்பது, மிகச் சிறப்பான அம்சம். ஆனால், இந்த அடையாள அட்டை, கடந்த திமுக ஆட்சியிலே வழங்கப்பட்டு, இந்த அடையாள அட்டையைக் கொண்டுவந்தால்தான் இலவசமான பொருள்கள் உங்களுக்கு கிடைக்கும் என்று சொல்லி, ஓட்டுக்காக மட்டுமே இந்த அடையாள அட்டை வழங்கப்பட்டு, பல்வேறு குளறுபடிகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. உண்மையான குழுக்களைக் கண்டறிந்து அவர்களுக்கு அட்டை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தாழ் பணிந்து வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—20

அதுமட்டுமல்ல, இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் ஸ்டாலின் அவர்கள் கின்னஸ் சாதனை புரிந்ததாக 100 மணி நேரம், 50 மணி நேரம், 60 மணி நேரம், 7 மணி நேரம் நின்று கொண்டே கொடுத்தார் என்று பத்திரிகைகளிலே செய்தி வந்தது. ஆனால், அதனுடைய இலட்சணம் என்னவென்றால் கடன் கொடுத்தவருக்கே திரும்பி அந்தக் கடன் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு மேடைக்கு வரவழைத்து அந்தக் கடன் பத்திரத்தைத் தந்து இவர் தந்ததைப்போல் புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். ஆனால், அந்தக் கடன் பத்திரத்தைப் பெற்றவர்கள் இன்றைக்கு வரை பலபேர் கடன் பெறாமல் அலைந்துகொண்டிருக்கிறார்கள். இதுதான் திமுக ஆட்சியின் அவலட்சணம்.

கின்னஸ் சாதனை புரிந்தவர்கள் சுய உதவிக் குழுவைத் தொடங்கினார்களா என்று கேட்டால், இல்லை. ஒரே ஒரு

2011 ஆகஸ்ட் 18] [திருமதி பா. வளர்மதி]

புள்ளிவிவரத்தை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்டதுதான் இந்த சுய உதவிக் குழு என்பது. சொந்தக் காலிலே நிற்க வேண்டும் என்பதற்காகத் தொடங்கப்பட்ட குழு. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 2001–லிருந்து 2006 வரைக்கும் 2 இலட்சத்து 40 ஆயிரத்து 580 குழுக்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், 2006–லிருந்து 2011 வரைக்கும் 1 இலட்சத்து 75 ஆயிரத்து 484 குழுக்கள்தான் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆக, தி.மு.க ஆட்சியில் கின்னஸ் சாதனை புரிந்தவர்கள், சுழல் நிதி வழங்கியவர்கள், கடன் கொடுத்தவர்கள் அம்மா அவர்கள்தான். புகைப்படம் எடுத்துக்கொண்டவர்கள், எந்த விழாவாக இருந்தாலும் சுய உதவிக் குழுக்களுக்குச் செய்கிறோம் என்று சொன்னவர்கள், அதிகமான குழுக்கள் ஆரம்பிக்காமல் முடக்கிப்போட்டு வைத்திருந்ததுதான் உண்மை. அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் தி.மு.க ஆட்சியைவிட 65 ஆயிரத்து 96 குழுக்களைத் தொடங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் ஆறு பேர் பேச வேண்டும்.

திருமதி பா வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரே ஒரு நிமிஷம். இது பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுய உதவிக் குழு, பெண்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன் உதவிகளையெல்லாம் தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து அதைச் சீரமைக்க வேண்டுமென்று தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் பல்வேறு நல்ல பணிகள் எல்லாம் நடைபெற்றன.

ஒரே ஒரு கோரிக்கை. வள்ளுவர் கோட்டம் அருகே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. மேம்பாலம் கட்ட வேண்டும். நெல்சன்மாணிக்கம் சாலையிலே குறுகிய சுரங்கப் பாதை இருக்கிறது. போக்குவரத்து நெரிசல் இருக்கிறது. ஒரு சுரங்கப் பாதை கட்டவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையாகட்டும், நிதிநிலை அறிக்கையாகட்டும், மானியக் கோரிக்கையாகட்டும் எல்லாமே அம்மாதான். எல்லாமே அம்மாவின் வெவ்வேறு முகங்கள்தான் ஷேக்ஸ்பியர் சொன்னதைப்போல – Your face is a book where men may read strange matters – அம்மா!

[திருமதி பா. வளர்மதி] [2011 ஆகஸ்ட் 18

உங்கள் முகம் ஒரு புத்தகம். அதில் மனிதர்கள் புதிய விஷயங்களைப் படிக்கலாம். அம்மா மலைச் சிகரங்கள் எல்லாம் இனி உங்களுக்கு மணல் குன்றுகள்தான். எட்டும் தூரத்தில்தான் இமயத்தின் சிகரம் இருக்கிறது. அம்மாவின் பாதம் படாதா என்று பாராளுமன்ற படிக்கட்டுகள் காத்துக்கிடக்கின்றன. இந்திரா காந்திக்குப் பிறகு அந்தச் சிம்மாசனம் இன்னொரு இரும்புப் பெண்மணிக்காகக் காத்துக்கிடக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்து, பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து உரையை முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள். 7 நிமிடங்களில் பேசி முடிக்க வேண்டும். நீங்கள் பேசிய பிறகு இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. அவர்களும் 7 நிமிடங்களில் முடித்தால்தான் இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்க முடியும். எனவே, ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டுக்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் கருத்துகளைக் கூற வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவின் ஆன்மா கிராமங்களில்தான் வாழ்கிறது என்றார் மகாத்மா காந்தி. கிராமங்கள்தான் மனித குலத்தின் வாழ்வாதாரங்களுக்கு ஆதாரமாக விளங்குகிறது. அத்தகைய கிராமப்புறங்களில் மாறி வரும் சமூகச் சூழலில் மக்கள் வாழ்வதற்கு விருப்பம் இல்லாமல் நகர்ப்புறங்களை நாடி ஓடுகிறார்கள். அதற்கு அடிப்படையான காரணங்கள், கிராமப்புற பொருளாதாரத்தின் அடித்தளமாக விளங்கும் விவசாயம் வருமானம் ஈட்டக்கூடிய தொழிலாக இல்லாததும், மாறி வரும் வளர்ச்சிக்கேற்ப மனிதனுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம், சாலை போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இல்லாததும்தான். எனவேதான், கிராமங்களில் மனித வாழ்வாதாரத்தை உருவாக்கிட நமது அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறது. இத்திட்டங்களை முறையாக, முழுமையாகச் செயல்படுத்திட நிருவாக

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே. உலகநாதன்]

அமைப்பு முறைகளாகத்தான் மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் என்று பிரிக்கப்பட்டு ஜனநாயக அடிப்படையில் தேர்தல்கள்மூலம் உறுப்பினர்களை, தலைவர்களைத் தேர்வு செய்து செயல்படுத்தப்படுகிறது.

பிற்பகல் 12—25

இதில் ஊராட்சி அமைப்புகள், கிராம மக்களை நேரடியாக அன்றாடம் தொடர்புகொள்ளும் அமைப்பாகும். இவ்வமைப்பின்மூலமே அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும் குடிநீர், சுகாதாரம், தெருவிளக்கு போன்ற பணிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இத்தகைய திட்டங்களின் செயல்பாடுகளை வளப்படுத்துவதன்மூலம்தான் கிராமங்களில் உண்மையான வளர்ச்சியை மேம்படுத்த முடியும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சிகள் சிறப்பாகச் செயல்பட கிராமங்களில் வசதிகளை மேம்படுத்த போதுமான நிதியாதாரங்களை மாநில அரசு ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். ஊராட்சிகள் நிறைவேற்றித் தரும் தீர்மானங்களை, கோரிக்கைகளைச் செயல்படுத்திட நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மொத்தம் 12,618 ஊராட்சிகள் இருந்தாலும், இதில் 29,374 குக்கிராமங்கள் உள்ளடங்கியுள்ளன. ஊராட்சி அமைப்புகளைத் திறம்பட செயல்படுத்திட ஊராட்சிகளில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை, மக்கள் தொகை எண்ணிக்கை இவற்றைக் கிட்டத்தட்ட சம விகிதத்தில் இருக்கும்படி ஊராட்சி அமைப்புகளைப் பிரித்தமைக்க வேண்டும்.

இன்றைக்கும் பொருத்தமில்லாத வகையில் ஊராட்சிகள் 60 ஆண்டுகளுக்கு முன்னாலே உருவாக்கப்பட்டவைகளாக உள்ளன. அவை அப்படியே நீடிப்பது சரிதானா என்று யோசிக்க வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் வளர்ச்சியை ஏற்படுத்துகிறவிதமாக அரசின் நிதியில் திட்டங்களைச் செயல்படுத்த ஊராட்சி என்று எடுத்துக்கொள்ளாமல், குக்கிராமங்களை மையமாக வைத்து தமிழ்நாடு குக்கிராமங்கள் கூட்டமைப்பு மேம்பாடு திட்டத்தை உருவாக்கியதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். இத்தகைய திட்டம் கிராமப்புறங்களில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்று நம்புகிறோம்.

[திரு. கே. உலகநாதன்] [2011 ஆகஸ்ட் 18

ஊராட்சி மன்ற அமைப்புகளில் கிராம சபை மிகப் பெரிய பங்களிப்பாக உள்ளது. கிராம சபையின் நடவடிக்கைகளை முறையாகச் செயலுக்குக் கொண்டு வந்தாலே, மக்கள் நலத் திட்டங்கள் பாகுபாடில்லாமல் உண்மையான பயனாளிகளுக்குச் சென்றடையும். ஊழலைத் தடுக்கவும் முடியும். அத்தகைய கிராம சபைகளை மக்கள் பங்கேற்கிற நோக்கில் நடத்துவதற்கு மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும். அதற்கான தனித் திட்டத்தை அறிவிக்க வேண்டும்.

மேலும், ஊராட்சியின் உயிர் நாடியான கிராம சபைக் கூட்டங்களை அரசு விடுமுறைத் தினமான ஜனவரி 26, மே 1, அக்டோபர் 2, ஆகஸ்ட் 15 போன்ற தேசத்தின் முக்கிய நாட்களில் நடத்தி, அதன் முக்கியத்துவத்தைக் குலைக்காமல், கிராம சபைக் கூட்டங்களைத் தனியாக ஒரு இயக்கமாக நடத்திட, அனைத்து மக்கள் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் கலந்துகொள்ளும் விதத்தில், மாவட்டச் சூழ்நிலைக்கேற்ப நாட்களை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நாட்களைத் தேவையப்பட்டால் விடுமுறை நாட்களாக அறிவிக்கவும், அதேபோல ஊராட்சி ஒன்றியங்கள் மாநிலத்தில் ஒரே சீராக ஒன்றிய கவுன்சில்களை உள்ளடக்கியதாக மாற்றியமைத்திட வேண்டும். சிறிய அளவிலான ஒன்றியங்களை உருவாக்குவதன்மூலம் நிருவாகத்தினை மேம்படுத்திட முடியும்.

மாவட்ட திட்டக் குழுச் செயல்பாடுகளை அபிவிருத்தி செய்திட வேண்டும். இதன்மூலம் தீர்மானங்களை நிறைவேற்றி மாவட்ட ஊராட்சித் திட்டங்களுக்கு மாநில அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும். திட்டங்களைச் செயலாக்குவதில் மாவட்டத் திட்டக் குழுவின் கண்காணிப்பை சட்ட ரீதியாக உருவாக்கிட வேண்டும். இத்தகைய செயல்களைத் திறம்படச் செய்திட அனைத்து ஊராட்சி அமைப்புகளுக்கும் நிதியாதாரத்தை உத்தரவாதப்படுத்திட வேண்டும்.

தற்போது மாநில சொந்த வரி வருவாயில் வழங்கப்படும் 10 சதவிகித நிதியொதுக்கீட்டை கேரளாவைப்போல் 30 சதவிகிதமாக உயர்த்தித் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த மூன்று மாதங்களாக 13-வது மாநில நிதிக் குழு நிதியை ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாநில அரசு வழங்கவில்லை. அவற்றை உடன் வழங்க வேண்டும். இதன் காரணமாக சிறிய கிராமங்களில், ஊராட்சிகளில் ஏற்படக்கூடிய குடிதண்ணீர், மின்சார விளக்கு போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் இருக்கிறது.

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே. உலகநாதன்]

தேர்தல் முறையில் மாற்றங்கள் கொண்டு வரவேண்டும். மாநகராட்சி, ஒன்றியப் பெருந்தலைவர், பேரூராட்சி நகராட்சித் தலைவர்கள் நேரடியாக தேர்வு செய்யப்பட வேண்டும். அதற்கான சட்டத்தை, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்றித் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள்தொகையில் சரிநிகர்சமமாக உள்ள பெண்களும், கேரளாவைப்போல, இந்த உள்ளாட்சித் தேர்தலிலே 50 விழுக்காடு இடஒதுக்கீடு செய்திட சட்டம் கொண்டுவர வேண்டும்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. கே. உலகநாதன்: பசுமை வீடு கட்டும் திட்டத்திற்கு சூரிய விளக்கு, தெரு விளக்குகளுக்கு சூரிய மின்சக்தியைப் பயன்படுத்தும் திட்டம் வரவேற்கத்தக்கது. இத்தகைய மின்சார சக்தியை ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரே இடத்தில் உற்பத்தி செய்திட திட்டமிட வேண்டுகிறேன்.

ஊரக வளர்ச்சிக்கு, மக்கள் போக்குவரத்திற்கு, பொருள்கள் கொண்டு செல்வதற்கு சாலைகள் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன. வரும் 5 ஆண்டுகளில் சின்னஞ்சிறிய கிராமத்திற்கும் தரமான சாலைகளை, பாலங்களை, தெருவில் சிமெண்ட் சாலைகளை, கிராம இணைப்புச் சாலைகளை அமைத்திட வேண்டும். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் திட்டம் அறிவித்திட வேண்டும்.

தமிழகம் முழுவதும், ஒன்றியங்கள் பொறுப்பிலுள்ள கண்மாய்கள், ஊரணிகள், குடிநீர்க் குளங்கள் இவற்றை மராமத்து செய்திட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். இதுவரை முப்பது ஆண்டுகளுக்கு மேலாக மராமத்து செய்ய முடியாமல் ஒன்றிய கண்மாய்கள், ஊரணிகள் இருக்கின்றன. இந்தியாவில் தமிழகத்தில்தான் நகரமயமாக்கல் அதிகமாக நடந்து வருகிறது. சுமார் 45 சதவிகிதம் மக்கள் நகரங்களில் வசிக்கிறார்கள். நகரங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செகு. தமிழரசன் அவர்கள். 5 நிமிடங்கள் கடந்தவுடன் மணி அடிப்பேன், அலெர்ட்டாகிவிடுங்கள். அதற்குப் பிறகு இரண்டு நிமிடங்கள்தான் தருவேன். (குறுக்கீடு) இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசிக்கொள்ளலாம். நீங்கள் உட்காருங்கள்.

[2011 ஆகஸ்ட் 18

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு கே. உலகநாதனுக்கு மைக் கொடுங்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டித் தொகுதியில் இருக்கக்கூடிய கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் மிகப் பெரிய 49 ஊராட்சி, சிற்றூராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியமாகும். நிர்வாக வசதி, பொதுமக்கள் நலன் கருதி, பெருகவைந்தன் ஊராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைத்திட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் அமைக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு கே. உலகநாதன் ஏற்கெனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாக அறிவுரை, ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். தொகுதி சம்பந்தமான பிரச்சினைகளை நீங்கள் சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலே எழுதிக் கொடுத்துவிட்டால், அவைக் குறிப்பில் அவை பதிவு செய்யப்படும். உங்கள் மாவட்டத்திற்குப் போய், நாளிதழில் கொடுத்து, நான் சட்டமன்றத்தில் பேசியிருக்கேன் என்று சொல்லிவிடுங்கள். (சிரிப்பு)

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது எனது கருத்துகளைப் பதிவு செய்ய வாய்ப்பு அளித்த உங்களுக்கு எனது நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். நேரத்தின் அருமை கருதி, மிகச் சுருக்கமாக எனது கருத்துகளைப் பதிவு செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்.

2011 ஆகஸ்ட் 18] [முனைவர் செ.கு தமிழரசன்]

"தொண்டு செய்வாய் தமிழுக்கு துறைதோறும், துறைதோறும் துடித்தெழுந்தேன்"

என்று அன்றைக்குப் பாவேந்தர் பாரதிதாசன் பாடினார். இன்றைக்கு இருந்திருந்தால்,

"தொண்டு செய்வாய் தூய நீ அம்மா;
தமிழ்நாட்டிற்கு துறைதோறும் துறைதோறும்"

என்று (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பாடி இந்தப் பாரும் புகழ்ந்து வியக்கிறவண்ணம் இன்றைக்கு, துறைதோறும் துறைதோறும் தொட்ட துறையெல்லாம் துலங்கும் என்கிற வகையிலே பல புரட்சிகளை மேற்கொண்டிருக்கிற நம்முடைய புரட்சித் தலைவியினுடைய இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்பதிலே நான் மகிழ்கிறேன்.

இந்தியாவிற்கே முன்னுதாரணமாக, இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சித் துறையிலே ஒரு சிறப்புத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம். வெறும் ஊராட்சிகளையே அலகுகளாக நாம் கருத்திலே கொண்டிருந்த இந்தக் காலத்தில், ஆயிரக்கணக்கான குக்கிராமங்களையும் கணக்கிலே அலகாகக் கொண்டு வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு 'THAI' என்கிற ஓர் அமைப்பை நிறுவி, கோட்டையிலே இருந்தாலும்கூட, என்னுடைய எண்ணம், என்னுடைய இலட்சியமெல்லாம் குக்கிராமங்களை, அங்கே இருக்கிற கோடிக்கணக்கான குடிசைகளை மாற்றுவது மேம்படுத்துவதுதான் என்கிற அந்த உணர்வோடு 'THAI' என்கிற திட்டத்தைக் கொண்டுவந்திருக்கின்ற அம்மா அவர்களை நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். 'புரட்சித் தலைவி THAI அமைப்பு' என்று அந்தத் திட்டத்திற்குப் பெயர் வைத்தால் மிகப் பொருத்தமாக இருக்கும் என்பது என்னுடைய ஒரு சிறிய கருத்து. தமிழகத்திலே இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான குக்கிராமங்கள் ஒளி விளக்கு பெறும் ஆகவே, வெறும் 'THAI' என்று இல்லாமல் 'புரட்சித் தலைவி THAI திட்டம்' என்று நீங்கள் அதற்குப் பெயரிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12–35

300 சதுர அடி வீடுகளை பசுமை வீடுகளாகத் தருகின்ற திட்டமானது சர்வதேச அளவிலான திட்டம். அப்படிப்பட்ட குடியிருப்புகளில் வெறும் 100 அடி, 120 அடி., கண்ணகி நகரிலும்,

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2011 ஆகஸ்ட் 18

செம்மஞ்சேரியிலும் நான்கு குடும்பங்களுக்கு ஒரு கழிவறை என்கின்ற அடிப்படையிலே கடந்த ஆட்சியிலே இருந்த அப்படிப்பட்ட திட்டத்தை மாற்றி இன்றைக்கு 300 சதுர அடி, அதிலே சூரிய ஒளியோடு அவர்களுக்கு மின் வசதி, அதற்கும் மேலே பசுமைத் திட்டம் என்கின்ற வகையிலே ஒரு சுற்றுச்சூழல், இதனை உருவாக்கி, சர்வதேச அடிப்படையிலே 300 சதுர அடி குடியிருப்புகளைத் தருகின்ற இந்த அரசை நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், இதற்கு மேலே இன்றைக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்கின்ற அளவிற்கு கிராமங்கள்தோறும் அடிப்படை வசதிகளை நிவர்த்தி செய்வதற்காக உள்ளாட்சித் துறையை முடுக்கிவிட்டிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய முனைப்பை நான் பாராட்டுகிறேன்.

கல்லூரிகளைக் கட்டினால் மட்டும் போதாது, கழிவறைகளையும் கட்ட வேண்டும். கல்லூரிகளைக் கட்டுவதைவிட கழிவறைகள்தான் இந்த நாட்டிற்கு இன்றியமையாதது என்ற உணர்வோடு, தூய்மையான கிராமங்களை உருவாக்குவதற்கு, கழிவறைகளை மேம்படுத்துவதற்காக கடந்த ஆட்சிக் காலத்தில் கேட்பாரற்றுக் கிடந்தவற்றையெல்லாம் இன்று புனரமைப்பு செய்வதற்காக புதிய அறிவிப்புகளை மேற்கொண்டிருக்கின்ற இந்த உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையினை நான் பாராட்டுகிறேன்.

ஒன்றியக் குழு. அதற்கு நேரடித் தேர்தல் நடத்த வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்த விரும்பினாலும்கூட, அது இன்று நம்முடைய மாநில முதல்வருடைய அதிகாரத்திலே இல்லை. ஒன்றியக் குழுவிற்கு நேரடித் தேர்தல் நடத்தினால், அந்த நேரடி அதிகாரத்தை இடஒதுக்கீடு பெறுபவர்கள் முழுமையாகப் பெறமுடியும். இல்லாவிட்டால், பல பகுதிகளிலே துணைத் தலைவர்களே ஒன்றியக் குழுத் தலைவர்களாக பெண்கள் உறுப்பினர்களாக இடம் பெற்றிருக்கக்கூடிய இடத்திலே, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு பெற்றிருக்கக்கூடிய இடத்திலே, நடைமுறையில் குளறுபடிகள் இருந்து வருகின்றன. அதற்காக பஞ்சாயத் ராஜ் சட்டத்திலே, தேசிய அளவிலே, பாராளுமன்றத்திலே ஒரு திருத்தம் கொண்டுவருவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முயற்சிக்க வேண்டும்.

2011 ஆகஸ்ட் 18] [முனைவர் செ.கு தமிழரசன்]

நகராட்சியைப் பொறுத்த அளவிலே, அது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அதிகாரத்திலே இருக்கிறது. அங்கே நகர்மன்றத் தலைவர் தேர்தலை நேரடியாகவும் நடத்தலாம், விருப்பப்படி வேறு வகையிலும் நடத்தலாம். ஆனால், பஞ்சாயத்துக்களைப் பொறுத்த அளவிலே, இந்தத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று நான் என்னுடைய உணர்வை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

ஒரு முன்னுதாரணமாக, ஊராட்சித் தலைவர்களுக்கு இன்றைக்கு மதிப்பீட்டு ஊதியமாக ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கின்ற அந்தத் தாயுள்ளத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் மிகச் சுருக்கமாகவும், வேகமாகவும் சில கருத்துகளை இங்கே பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக எனக்கு ஐந்து நிமிடங்கள் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், அது ஒரு பழம்பெரும் முன்னோடி மாநகராட்சியாகும். வரலாற்றுப் பெருமை மிகுந்தது சென்னை மாநகராட்சி. இங்கே 26 சதவீதம் ஒடுக்கப்பட்ட, தலித் மக்கள் வசிக்கிறார்கள். 500-க்கும் மேற்பட்ட குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. ஆனால், மாநகராட்சி மேயர் பதவிக்கு பத்தாண்டு காலத்திற்கு ஒருமுறை, சுழற்சி முறையிலே, இடஒதுக்கீட்டு முறையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று இருந்தாலும், கடந்த 30 ஆண்டுக் காலத்திற்கும் மேலாக சென்னை மாநகராட்சியில் ஒரு தலித், ஒடுக்கப்பட்டவர் மேயராக வரமுடியவில்லை. கடந்த காலத்தில் மகனுக்காகவே அது மாற்றியமைக்கப்பட்டது என்பதுதான் நிதர்சனமான உண்மை. ஆகவே, அம்மா அவர்களே, இந்த முறை சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் நடத்துகின்றபொழுது, 30 ஆண்டுக் காலமாக புறக்கணிக்கப்பட்டு வருவதை, சுழற்சியின் அடிப்படையிலே ஒரு தலித் மேயர் சென்னை மாநகராட்சிக்கு வருவதற்கு நீங்கள் வாய்ப்பளிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கு முன்வைக்க விரும்புகின்றேன். ஏனென்றால், இப்போது 19 சதவீதம் என்பது சட்டபூர்வமாக இருந்தாலும்கூட, ஊராட்சி மன்றத் தலைவர்களைப் பொறுத்த அளவில், இன்றைக்கு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற அறிவிப்பிலே, 25 சதவீதம்

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2011 ஆகஸ்ட் 18

மக்கள்தொகை அடிப்படையிலே தலித் மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கின்றது. ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு 26 சதவீதம் வழங்கப்பட்டிருக்கிறது. சமூக நீதி காத்த வீராங்கனையாக இன்று ஒடுக்கப்பட்ட மக்களின் மொத்த விகிதாசாரத்திற்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) கால் பங்கு ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகளை–19 சதவீதம் என்பது நடைமுறையில் இருந்தாலும்கூட, அதற்கும் மேலே 25 சதவீதமாக வழங்கியிருக்கின்ற அந்த வள்ளலுக்கு இந்தக் கோரிக்கையை நான் முன்வைக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

பிற்பகல் 12-40

பஞ்சாயத்து ராஜ்–நகர் பாலிகா என்பது இன்றைக்கு மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட சட்டம் என்றாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான், இந்தச் சட்டத்திற்கு முன்பாகவே தமிழகத்திலே அந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தினார். (மேசையைத் தட்டும் ஒலி). அன்றைக்கு நீதிமன்றத்தில் அதற்குத் தடை கிடைத்துவிட்டது. ஆகவே, அப்படிப்பட்ட புரட்சித் தலைவர் அவர்களுடைய வாரிசாக இன்றைக்கு இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள், இதை அமல்படுத்த வேண்டுமென்கிற அந்த வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். (குறுக்கீடு) இன்றைக்கு கொஞ்சம் co–operate பண்ணுங்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டேயிரண்டு நிமிடங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டேயிரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்.

துப்புரவுப் பணியாளர்களுடைய அந்தத் துயர நிலையை சகோதரி, சட்டமன்ற உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். துப்புரவுப் பணியாளர்களுக்காகப் புரட்சித்

2011 ஆகஸ்ட் 18] [முனைவர் செகு தமிழரசன்]

தலைவி அம்மா அவர்கள் எப்படிப்பட்ட உள்ளத்தோடு செயல்பட்டார்கள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். சுனாமி நிகழ்ந்தபோது உலகமே வியந்தது. நாகப்பட்டினத்திலே ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்த அந்தத் துயர நேரத்திலே, அவர்களுக்கெல்லாம் பரிசு வழங்கியபோது, வாடிக்கையாக மேல் அதிகாரிகளுக்குத்தான் பரிசு வழங்குவார்கள். ஆனால், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், துப்புரவுப் பணியாளர்களுக்கு 5,000 ரூபாய் அன்றைக்கு பரிசு அளித்து, அதிலே ஈடுபட்டவர்களையெல்லாம், சிறப்பித்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

'வெட்டியான்' என்ற சொல்லை மாற்றுவிக்க வேண்டுமென்று 1994–லே தமிழக முதல்வராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது, இங்கே கோரிக்கை வைத்தபோது, அந்த 'வெட்டியான்' என்பதை, நிரந்தரமாக அந்தப் பெயரை மாற்றுவிக்க வேண்டுமென்கிற அந்த நிலையை அன்றைக்குக் கொண்டுவந்தார்கள். அது பின்னாளிலே கிடப்பிலே போடப்பட்டது. ஆகவே, அப்படிப்பட்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய காலத்திலே, ஆயிரக்கணக்கான துப்புரவுத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்யுங்கள். தேசிய துப்புரவு ஆணையம் தமிழகத்திற்கு வந்தபோது, அவர்களுக்காக ஒதுக்கிய நிதியை கடந்த ஆட்சியிலே முறைகேடாகப் பயன்படுத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டியது.

நான் கடைசியாக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இங்கே சொல்ல வேண்டுமென்று விரும்பிய ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். பச்சையப்பன் கல்லூரியில் இன்றைக்கு மெட்ரோ இரயில் திட்டத்தின்கீழ், அதி விரைவு இரயில் திட்டத்தின்கீழ், மூன்றேகால் ஏக்கர் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே 169 ஆண்டுக் காலம் பழமையான கல்லூரி, பேரறிஞர் அண்ணா அவர்களை உருவாக்கிய கல்லூரி. 'பச்சையப்பன் படிக்கட்டும் பைந்தமிழ்ப் பாடும்' என்று சொல்வார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே 150–வது ஆண்டு விழாவிலே பங்கேற்றபோது, 'சமூக நீதி காத்த கல்லூரி' என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதைப் பாராட்டினார்கள். அப்படிப்பட்ட கல்லூரியிலே கடந்த ஆட்சிக் காலத்திலே மூன்றேகால் ஏக்கர் அதி விரைவு இரயில் நிலையத்திற்காகக் கையகப்படுத்தப்பட்டது. அன்றைய ஆட்சியாளர்களுடைய சில ஆதரவாளர்களைக் காப்பாற்ற,

[முனைவர் செகு தமிழரசன்] [2011 ஆகஸ்ட் 18

பெரும் முதலாளிகளைக் காப்பாற்ற, அவர்களுடைய தொழில் நிலையங்களைக் காப்பாற்ற, அவற்றையெல்லாம் காப்பாற்றுவதற்காக அக்கல்லூரியின் மூன்றேகால் ஏக்கர் நிலம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

* **திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். வெட்டுத் தீர்மானங்கள் பரிசீலிக்கப்படும் என்று எல்லா மானியக் கோரிக்கைகளிலும் கூறியிருக்கிறீர்கள். அதற்காக நன்றி கூறுகிறேன்.

நேற்று நடைபெற்ற மானியக் கோரிக்கைகளில் மணல் தட்டுப்பாடு தவிர்க்க, உற்பத்தி மணல் பற்றிய ஆய்வுகளைத் தமிழ்நாடு கனிம வள நிறுவனம் (TAMIN) வழியாகச் செய்யப்படும் என்ற முயற்சிக்கு நன்றி கூறுகிறேன்.

குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட மார்த்தாண்டத்தில் சிட்கோ தொழிற்பேட்டைக்கு உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 30 வருடங்களாக கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் குடிநீர்த் திட்ட உடனாளிகள் 181 பேர் தினக் கூலிகளாகப் பணிப் பாதுகாப்பின்றி பொதுமக்களுக்குத் தண்ணீர் வழங்கி வருகின்றனர். அவர்களுக்கு தினசரி சம்பளமாக ரூபாய் 100 மட்டுமே வழங்கப்படுகிறது. இது அவர்கள் வாழ்வாதாரங்களுக்குப் போதுமானதல்ல. அவர்கள் நிலைமை பரிதாபகரமாக உள்ளது. எனவே, அவர்களைப் பணி நிரந்தரம் செய்தும், பணிக்கொடை வழங்கியும், காலமுறை ஊதியம் வழங்கிடவும் அரசு தகுந்த ஆணைகளைப் பிறப்பித்து ஏழைக் குடிநீர்த் திட்ட உடனாளிகளின் வாழ்வில் ஒளியேற்றிட வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

2011 ஆகஸ்ட் 18] [திருமதி எஸ். விஜயதரணி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு அளித்து சட்டம் இயற்றியுள்ளது. அதுபோன்று தற்போது தமிழகத்தில் 33 சதவிகித இடஒதுக்கீடு அமலில் உள்ளது. எனவே, வரும் 2011 அக்டோபரில் நடைபெறவிருக்கும் தமிழக உள்ளாட்சி மன்றத் தேர்தலில் மகளிருக்கு 50 சதவிகிதம் இடஒதுக்கீடு செய்யவும், ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி, நகராட்சி நிருவாகங்களில் 50 சதவிகிதப் பணியிடங்களில் பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்யவும், மாற்றுத் திறன் படைத்தோர்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்களிலும், பணியிடங்களிலும் தேவையான அளவு ஒதுக்கீடு செய்யவும் தமிழக அரசு சட்டம் இயற்றி ஆவன செய்ய வேண்டும்.

பிற்பகல் 12—45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் நாகர்கோவில் நகராட்சி பாதாளச் சாக்கடை திட்டத்திற்கு ரூபாய் 65.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கொள்கை முடிவு எடுக்கப்பட்டதற்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக 2011-2012 ஆம் நிதியாண்டில் வேலை தொடங்கப்படும் என்ற அறிவிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது. பாராட்டுகள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம உதவியாளர்கள், மின் சாதனம் பொருத்துபவர், துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் கணினி உதவியாளர்கள் பேரூராட்சி நிருவாகம்மூலம் தினக்கூலி அடிப்படையில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும், 385 ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் மாற்றுத் திறனாளிகளாகிய கணினி உதவியாளர்கள், பி.எஸ்ஸி., கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்து வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் தொகுப்பு ஊதியத்தில் பணி வழங்கப்பட்டு பணியாற்றுகின்றனர். இவர்களைப் பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழித்துறை நகராட்சிக்குட்பட்ட ஞாறான்விளையில் உறை கிணறுமூலம் நீரை உறிஞ்சி சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கொண்டு வந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின்மூலம் குழித்துறை நகராட்சி மக்களுக்குக் குடிநீர் வழங்கப்படுகிறது. குடிநீர் வழங்கும் குழாய்கள் சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு பதிக்கப்பட்ட அந்தக் குழாய்கள் பெரிதும்

[திருமதி எஸ். விஜயதரணி] [2011 ஆகஸ்ட் 18

சேதமுற்று பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. இதற்காக நகராட்சி நிருவாகம் சார்பில் பழுதுபட்ட குழாய்களை மாற்றம் செய்து புதிய குழாய்கள் பதிப்பதற்கு வசதியாக ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் புதிய பிரேரணை தயாரித்து அரசுக்கும் மற்றும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணையை அரசு ஆய்வு செய்து தகுந்த நிதி ஒதுக்கீடு செய்தும் நிருவாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி ஆகியவற்றை வழங்கியும் உடனடியாக பணிகளைச் செயல்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

குழித்துறை நகராட்சியில் துப்புரவுப் பணியாளர்கள் 15 பேர் ஓய்வு பெற்றுள்ளனர். இதனால் துப்புரவுப் பணிகள் சரிவர நடைபெறாததால் சாக்கடைகள் அடைத்தும், சாக்கடை நீர் சாலைகளில் பாய்ந்தும், போக்குவரத்துக்குப் பெரிதும் இடையூறாக துர்நாற்றம் வீசிக்கொண்டும் உள்ளது. எனவே, ஓய்வுபெற்ற துப்புரவுப் பணியாளர்களுக்குப் பதிலாக புதிய துப்புரவுப் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும்.

குழித்துறை நகராட்சியில் தற்போது ஆணையாளர் பதவி, மேலாளர் பதவி, வரி வசூலிப்பவர் ஆகிய ஐந்து பேர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இரண்டு வரி வசூலிப்பவர் மட்டும் பணியில் உள்ளதால் வரியை முறையாக வசூலிக்க முடியவில்லை. வீட்டு வரி, தொழில் வரி, தண்ணீர்க் கட்டணம் என ரூபாய் 1.5 கோடி பாக்கி உள்ளது. எனவே, உடனடியாக காலியான பணியிடங்கள் அனைத்தையும் குழித்துறை நகராட்சிக்கு வழங்கி, அங்கு சிறப்பான நிருவாகம் நடந்திட அரசு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்புறம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இரண்டு கணக்கர்கள், மூன்று உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் என பல பணியிடங்கள் காலியாக உள்ளன. இப்பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்ய வேண்டும். கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்மூலம் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றைச் சுத்தப்படுத்த துப்புரவுப் பணியாளர்கள் இல்லை. எனவே, ஊராட்சி ஒன்றியங்களில் துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் சுவர் விளம்பர வரி மற்றும் கேபிள் டி.வி. மூலம் அரசுக்கு

2011 ஆகஸ்ட் 18] [திருமதி எஸ். விஜயதரணி]

குறைந்தபட்சம் 5,000 கோடி ரூபாய் வரி வசூலிக்க வாய்ப்பு உள்ளது. அதனைக் கருத்தில்கொண்டு விளம்பர வரி மற்றும் கேபிள் டி.வி. விளம்பர வரியினைக் கண்காணித்து வரி வசூல் செய்திடவும், சென்னை உட்பட 10 மாநகராட்சிகள், 150 நகராட்சிகள், 559 பேரூராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 12,618 கிராம ஊராட்சிகள் என இவற்றிற்குப் பொதுவான விளம்பர வரி வசூல் வாரியம் புதியதாக ஏற்படுத்தி வரி வசூல் செய்து, அவற்றை உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளித்து உள்ளாட்சிகளின் நிதி ஆதாரம் மேம்பாடு அடைய அரசு ஆவன செய்ய வேண்டும்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் பொது நிதியில் கடும் நிதிப் பற்றாக்குறையுள்ளது. இதன் காரணமாக குடிநீர், தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே, ஊராட்சி நிதி ஆதாரங்களைப் பெருக்க அரசு தகுந்த மானியங்கள் வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கைகளை எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்து விடுங்கள்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம ஊராட்சிகளுக்கு மத்திய அரசிடமிருந்து நேரடியாக அதிகமான நிதிகளைப் பெறவும், வாழ்வாதாரத் திட்டங்களான இந்திரா வீடு கட்டும் திட்டம், பிரதம மந்திரி சாலை வசதித் திட்டம், பாரத் நிர்மாண் திட்டம், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம், சுனாமி அவசரகால மறு சீரமைப்புத் திட்டம், ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் போன்ற திட்டங்கள்மூலம் ஏழைகளின் வாழ்வாதாரம் மேம்படவும், ஏழையெளிய கிராம மக்கள் பொருளாதார வசதி பெறவும், கிராமங்கள் சாலை வசதி, போக்குவரத்து வசதி, சுகாதார வசதி, உட்கட்டமைப்பு வசதி, குடியிருப்பு வசதிகள் பெறவும், சிறப்பு செயலாக்கத் திட்டங்கள்

[திருமதி எஸ். விஜயதரணி] [2011 ஆகஸ்ட் 18

எளிதில் கிடைத்திடவும், தமிழ்நாட்டில் வருமானம் குறைந்த இரண்டாம் நிலையில் உள்ள பேரூராட்சிகளை 1-10-2004 அன்று தங்கள் அரசு சிறப்புச் சிற்றூராட்சிகளாகத் தரமாற்றம் செய்ததுபோன்று, மீண்டும் வருமானம் குறைந்த பேரூராட்சிகளை சிற்றூராட்சிகளாகவோ, கிராம ஊராட்சிகளாகவோ மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜ் அவர்கள். (குறுக்கீடு) எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வினவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குழித்துறை நகராட்சியில் மார்த்தாண்டம் பேருந்து நிலையப் பணிகளைத் துரிதமாக முடிக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

ஒருங்கிணைந்த கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தமிழ்நாடு வடிகால் வாரியம் குடிநீர்த் திட்டங்களை கிராம ஊராட்சிகளுக்குச் செயல்படுத்தி தண்ணீர் வழங்குகிறது. கிள்ளியூர், முஞ்சிறை, மேல்புறம் ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் உள்ள கிராம ஊராட்சிகள் போதிய நிதி ஆதாரமின்றி உள்ளது. இதனால் குடிநீர் வடிகால் வாரியத்திற்குக் கிராம ஊராட்சிகளால் செலுத்த வேண்டிய தண்ணீர்க் கட்டணம் ரூ.30 இலட்சம் முதல் ரூ.40 இலட்சம் வரை நிலுவையில் உள்ளது. குடிநீர் வடிகால் வாரியம் ஊராட்சிகளுக்குப் பணம் செலுத்த வேண்டி அறிவிப்பு அனுப்பி உள்ளது. ஊராட்சிகளின் நிதிப் பற்றாக்குறையை மனதில் கொண்டு தொகையை தள்ளுபடி செய்யவோ, அல்லது மானியம் வழங்கிடவோ அரசு ஆவன செய்ய வேண்டும்.

நிதி நிலைமையில் நலிந்த கிராம ஊராட்சிகளால் மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய மின் கட்டணம் (தெரு விளக்கு, குடிநீர் பராமரிப்பு, மின் மோட்டார் கட்டணம்) செலுத்த முடியாமல் நிதிநிலை மோசமாக உள்ளது. இதனையும் அரசு மானியம் வழங்கியோ அல்லது தள்ளுபடி செய்யவோ கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமம் பெற்ற மின் கம்பியாளர்கள் மற்றும் மின் ஒப்பந்தக்காரர்களுக்கு உள்ளாட்சி மற்றும் பொதுப் பணித் துறைமூலம் கட்டும் கட்டடங்களில் மின் சம்பந்தமான பணிகளைத் தனி ஒப்பந்தமாக

2011 ஆகஸ்ட் 18] [திருமதி எஸ். விஜயதரணி]

உருவாக்கி ஏழை நடுத்தர மின் உரிமம் பெற்ற ஒப்பந்தக்காரர்களுக்குத் தொழில் மற்றும் வேலைவாய்ப்புகள் அளிக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

நாகர்கோவில் மீனாட்சிபுரத்தில் அண்ணா பேருந்து நிலையத்தில் நடைபெறும் பணிகளை விரைவுபடுத்தி முடிக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

மேல்புறம், கிள்ளியூர், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் புதிய குடிநீர் ஆதாரங்களைக் கண்டறிந்து போதிய குழாய்கள் அமைத்தும் தகுந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டவும், அரசுக்கும், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கும் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இதனை பரிசீலித்து நிதியொதுக்கீடு செய்து நிர்வாக அனுமதியும், தொழில்நுட்ப அனுமதியும் வழங்கி குடிநீர்த் திட்டப் பணிகளை விரைவுபடுத்தி கிராம மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்ற அரசு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழித்துறை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை செய்யவும் மற்றும் மக்கும் குப்பை, மக்கா குப்பைகளைத் தரம் பிரித்து ரீ-சைக்கிளிங் செய்ய வலியுறுத்தியும், கழிவுகள் கொட்ட இடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மாற்றிடம் கண்டறிய அரசு ஆவன செய்ய வேண்டும்.

***திரு. எம்.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக 14-வது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் 2011–2012 ஆம் ஆண்டு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், நிரந்தர பொதுச் செயலாளர் அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் முதலில் எனது நன்றிகலந்த வணக்கத்தைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

புராணங்களில் படைத்தல், காத்தல், அழித்தல் மூன்றுக்கும் மூன்று தெய்வங்கள் என்று கேட்டும், படித்தும் உள்ளோம். ஆனால், மூன்று தொழில்களையும் ஒருங்கே, உலகமே வியக்கும் வண்ணம் நேற்றும், இன்றும், நாளையும் செய்தும், செய்யப்போகும், நான் அனுதினமுமும் நினைத்து பூஜிக்கும் எங்கள் தாயே, கல்லுக்குள்

[திரு. எம்.கே. செல்வராஜு] [2011 ஆகஸ்ட் 18

உள்ள தேரைக்கும், கருப்பையில் உள்ள உயிருக்கும் அமுது படைக்கும் கடவுள் என்று கேட்டதையும், படித்ததையும் மாண்புமிகு அம்மா அவர்களே, தங்களால் இன்று உண்மை என்று உணர்ந்தோம்.

'பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்ற பழமொழியைக் காப்பதும் தாங்களே, அதே புலவன் எழுதிய

"தனியொரு வனுக் குணவிலை எனில்
ஜகத்தினை யழித்திடு வோம்'

என்ற வரிகளை 20 கிலோ விலையில்லா அரிசி தந்து, பொய்யாக்கவும் தாயே தங்களால் தான் முடியும்.

எளிய கைத்தறி நெசவாளர் குடும்பத்தில் பிறந்த தங்களின் தொண்டனான என்னை அம்மாபேட்டை பகுதி கழகச் செயலாளராக இரண்டு முறையும், 35-வது வட்ட கழகச் செயலாளராக இரண்டு முறையும், மாநகராட்சி மாமன்ற உறுப்பினராக இரண்டு முறையும், மாநகராட்சியினுடைய கழக ஆளுங்கட்சித் தலைவராகவும், நியமனக் குழு உறுப்பினராகவும், சேலம் பாராளுமன்றத் தொகுதி பொறுப்பாளராகவும், சேலம் மாநகர் மாவட்ட கழகச் செயலாளராகவும் பணியாற்ற வாய்ப்பளித்த வாழும் வரலாறே, எங்கள் தாயே, கழகம் கண்ட நம் தலைவர் நம்மை விட்டுப் பிரிந்த பிறகு, வட்டமிடும் வல்லூறுகளிடமிருந்து தன்னுயிர் கருதாது தன் சேய்களைக் காக்கும் தாயினம் போல், நமது இந்திய தேசியக் கொடிக்கு அடுத்து, உலகமே பார்த்து வியக்கும் கழகக் கொடியையும், சின்னத்தையும், கழகத்தையும் அன்றைக்கு காத்து நாங்களெல்லாம் கம்பீரமாக கறைவேட்டி கட்டுவதற்குக் காரணமாகிய தியாகத்தின் திருவுருவமே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய திருநாடு வெள்ளையர்களிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டது. இந்தக் குடும்ப ஆட்சி நடத்தும் கொள்ளையர்களிடமிருந்து தமிழ்நாட்டிற்கு விடுதலை வேண்டும் என்று தேர்தல் நேரத்தில் வீர முழக்கமிட்டு, தேர்தலில் மகத்தான வெற்றிபெற்று தமிழகத்திற்கு விடுதலைப் பெற்றுத் தந்த எங்கள் வாழும் வீரமங்கை நாச்சியாரே, கொள்ளையடிப்பதும், கொலை செய்வதும் கலையப்பா கலை' என்று வசனம் எழுதி அதன்படியே இந்த நாட்டை ஆண்ட வன வியாபாரியிடமிருந்து தமிழகத்தை மீட்டெடுக்க அம்மா தாங்கள் தலைமையேற்று சத்தியின்றி, இரத்தமின்றி, அகிம்சா வழியில் நடத்திய போரில் என்னையும், மாங்கனி மாநகர் தெற்குத் தொகுதியில் சிப்பாயாக களம் நிறுத்தி, தங்களின் கடுமையான உழைப்பாலும், தங்களின்மீது மக்கள்

2011 ஆகஸ்ட் 18] [திரு. எம்.கே. செல்வராஜு]

வைத்திருந்த மகத்தான நம்பிக்கை மற்றும் பாசத்தாலும் 1,12,691 வாக்குகள் பெற வைத்து, தமிழகத்திலே மூன்றாவதாக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்த, வெற்றி மாலைகளை நிரந்தரமாகச் சூடும் எங்கள் வீரத்தாயே, எனது தொகுதி மக்களின் சார்பாகவும், எனது குடும்பம் சார்பாகவும், தங்களின் பொற்பாதம் பணிந்து கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். அதேநேரத்தில், எனது வெற்றிக்கு உழைத்த கழகத் தொண்டர்கள், வாக்களித்த சேலம் தெற்குத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்தில் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—55

சிறுமதியாளர்கள் தவிர மாற்றாரும் மகிழும்வண்ணம் வரியில்லாத, 173 கோடியே 87 இலட்சம் ரூபாய்க்கு உபரி பட்ஜெட் தந்தீர்கள். ரூ.8,900 கோடிக்கு புதிய திட்டங்கள், சலுகைகள் தந்தீர்கள். தமிழகத்தில் முதன்முதலாக ஒரு இலட்சம் கோடிக்கு மேல் பட்ஜெட் தந்தீர்கள். தமிழகத்திலேயே நில அபகரிப்பில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள சேலம் மாவட்ட மக்கள் மட்டுமின்றி, 'தமிழகம் முழுவதும் உள்ள பாதிக்கப்பட்ட மக்கள், தாங்கள் இழந்த சொத்துக்களைத் திரும்பப் பெற வைப்போம்' என்று தேர்தல் சுற்றுப்பயணத்தில் முழக்கமிட்டு அது இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்படுவது கண்டு அனைவரும் அகம் மகிழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பூஞ்சோலையாக இருந்த சேலம் மாவட்டத்தைக் கொலைகார, நில அபகரிப்பு மாவட்டமாக ஆக்கிய பெருமை தி.மு.க.—வினரையே சாரும். வீரபாண்டி ஆறுமுகம், அவரது பினாமிகள், அடியாட்கள் செய்த சட்ட விரோத அராஜகச் செயல்களால் அவர்கள் கைது செய்யப்பட்டதை எங்கள் மாவட்ட மக்கள், ஆடிப்பெருக்கு திருவிழாவை மறந்து, நரகாசுரனை வதம் செய்த தீபாவளிப் பண்டிகையாகக் கொண்டாடி மகிழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

காலைச் சிற்றுண்டியை முடித்துவிட்டு மதிய உணவிற்குள் உண்ணாவிரத நாடகமாடிய வசன வியாபாரிபோல் அல்லாமல், உண்மைத் தாயுள்ளத்தோடு, தமிழர்கள்மீதுள்ள உண்மையான அன்பின் காரணமாக, 'இலங்கையை சர்வதேசப் போர்க் குற்றவியல்

[திரு. எம்.கே. செல்வராஜு] [2011 ஆகஸ்ட் 18

நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிறுத்த வேண்டும்; இலங்கைமீது இந்திய அரசு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்' என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியதோடு, எங்களின் நல்லரசைப் பாராட்டி வந்த வல்லரசிடம் இலங்கைமீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்க கோரிக்கை வைத்து, வெற்றியும் பெற்று, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற ஒரே தலைவியாகிவிட்ட எங்கள் தாயே! தமிழே! தமிழர்களின் உயிர் மூச்சே! (மேசையைத் தட்டும் ஒலி) கொய்யாத் தோப்பிற்கு குரங்கினைக் காவலுக்கு வைத்ததுபோல, கரும்புத் தோட்டத்தை யானையின் பராமரிப்பில் விட்டதுபோல, திருடன் கையிலே கொத்துச் சாவியைக் கொடுத்து வீட்டிற்குக் காவல் வைத்ததுபோல, இமாலயக் குற்றவாளியே நீதிபதி ஆசனத்தில் அமர்ந்து தீர்ப்பு சொன்னதுபோல, கடந்த 5 ஆண்டுக் காலமாக இருண்ட தமிழகத்தை மீட்டெடுத்த எங்கள் அம்மா அவர்களே, 'அப்பளத்தை நொறுக்க சம்மட்டி எடுப்பவர்கள் அற்பர்கள்' என்பதை உலகிற்கு உணர்த்திவிட்டீர்கள். 'மதுரைக்கு வந்து பார்' என்று கொக்கரித்த அற்பர்கள், இன்று எந்த நாட்டிற்குச் செல்லுவது என்று விசா எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை நம்பி கெட்டவர்கள் இம்மண்ணில் இல்லை. நம்பாமல் கெட்டவர்கள் நிறைய உண்டு. எதிர்காலத்தை மனதில் கொண்டு, தீர்க்க தரிசனத்தோடு 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்தில் 3 மணி 1 நிமிடம் படிக்கப்பட்ட ஒவ்வொரு வரிகளும் மக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்ட நிதிநிலை அறிக்கை சாதனைமேல் சாதனைகளைப் படைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடைபெறுவது மானியக் கோரிக்கை மீதான விவாதம். மானியத்தில் பேசுங்கள்.

திரு. எம்.கே. செல்வராஜு: நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் இந்தத் தொண்டனுக்குப் பேச வாய்ப்பளித்தமைக்குக் கோடானு கோடி நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். கடந்த 5 ஆண்டுகளாகச் சீரழிந்து கிடந்த நகராட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறையைச் சீரமைக்கும் விதமாக 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மிகவும் சீர்பெறக்கூடிய வகையில் நிதியினையும் நல்ல திட்டங்களையும் தந்துள்ளீர்கள்.

2011 ஆகஸ்ட் 18] [திரு. எம்.கே. செல்வராஜு]

2010–2011–ல் நிதிப் பகிர்வு 10 விழுக்காடாக இருந்ததை, தாயே, தங்களின் வள்ளல் தன்மையினால் 2011–2012 ஆம் ஆண்டு நிதிப் பகிர்வு 6,509 கோடி ரூபாயாகத் தந்து இன்றைய தலைமுறை மட்டுமல்ல, அடுத்து வரும் தலைமுறையும் வியக்கும்வண்ணம் செய்துள்ளீர்கள். கிராமப்புற மக்கள், நகர்ப்புறங்களுக்குக் குடிபெயருவதைத் தடுக்கும்பொருட்டு, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக ஒட்டுமொத்த தமிழக மக்களும் பாராட்டும்வண்ணம் திட்டங்களைத் தந்து, அதற்குத் தேவையான நிதியினையும் தாராளமாக வழங்கியுள்ளீர்கள்.

கிராமப்புறச் சாலைகள் மேம்பாடு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிவுநீர் அகற்ற தரமான சாக்கடைக் கட்டமைப்புகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கு 680 கோடி ரூபாய் ஒதுக்கி கிராமப்புற மக்களின் ஏகோபித்த பாராட்டுகளையும், போற்றுதலையும் பெற்றுள்ளீர்கள் தாயே!

மேலும், சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியினை இரண்டு கோடி ரூபாயாக உயர்த்தி, கிராமப்புற, ஊரகப் பகுதிகளில் பள்ளிகள், சாலைகள் மேம்பாடு அடைய, சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு உத்தரவிட்டு, ஊரகப் பகுதிகளின் மேம்பாட்டில் உரிய அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களே, எனது உளமார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். முந்தைய அராஜக ஆட்சியாளர்களால் கடனாளிகளாக ஆக்கப்பட்ட கிராம மக்கள் பாராட்டும் வகையில், வீட்டற்ற ஏழை எளியவர்களுக்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் இரண்டு நிமிடங்களில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

பிற்பகல் 1–00

திரு. எம்.கே. செல்வராஜு: 300 சதுர அடி பரப்பளவில் சூரிய ஒளி மின்சாரத்தோடு 60,000 பசுமை வீடுகளுக்கு 1,080 கோடி ரூபாய் ஒதுக்கி ஆணையிட்டுள்ளீர்கள். கிராமப்புற 100 நாள் வேலைவாய்ப்பினை ஊரகப் பகுதிகள் வளர்ச்சியடையும்விதமாகவும், விவசாய உற்பத்தி பாதிக்கப்படாத வகையிலும் செயல்படுத்துவோம் என்ற அறிவிப்பு விவசாயப் பெருமக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது தாயே!

[திரு. எம்.கே. செல்வராஜ்] [2011 ஆகஸ்ட் 18

கிராமப்புறங்கள் மேம்பாடு என்பது அங்குள்ள மகளிர் மேம்பாட்டில் அடங்கியுள்ளது என்பதை நன்றாக அறிந்துள்ள மாண்புமிகு அம்மா அவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக மட்டுமே இதனை சாதிக்க இயலும் என்று கருதி, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் மத்திய அரசின் சுவர்ண ஜெயந்தி ஆகிய திட்டங்கள்மூலம் 950 கோடி ரூபாய் ஒதுக்கி, கிராமப் பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு நிலையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளீர்கள் தாயே!

மாநகரம், நகரம் இவற்றின் மக்கள்தொகை பெருக்கம், கிராம மக்களின் குடிபெயர்வால் 2030 ஆம் ஆண்டில் 67 விழுக்காடாக உயர்வடையும் என்பதையறிந்து அன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக சாலைகள், கட்டமைப்பு வசதி, கழிவு நீர், சாக்கடை வசதி, அன்றைய மின் வசதி, (மணியடிக்கப்பெற்றது) குடிநீர் வசதி, சுகாதார வசதி போன்றவற்றைப் பெருக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகர் பொதுமக்களின் சார்பாக மிக, மிக அத்தியாவசியமான கோரிக்கைகளாக கீழ்க்கண்டவற்றை தங்களின் வாயிலாக மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

திருப்பூர் மக்களின் நீண்டகாலப் பிரச்சினையான சாயக் கழிவு நீர்ப் பிரச்சினைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் நிரந்தத் தீர்வு வேண்டி நடவடிக்கை எடுத்து நலிந்து வந்த பின்னலாடை மற்றும் ஜவுளித் தொழிலினை சீர் செய்துள்ளீர்கள்.

எனது தொகுதிக்குட்பட்ட அம்மாப்பேட்டை, குகை, கொண்டலாம்பட்டி போன்ற பகுதிகள் நெசவாளர்கள் அடங்கிய மிகவும் பின் தங்கிய பகுதிகளாகும். இதில் ஏறக்குறைய 1000-க்கும் மேற்பட்ட சாயப்பட்டறைகள் மற்றும் சலவைப் பட்டறைகள் உள்ளன. இதிலிருந்து வெளியேறும் கழிவு நீர் அந்தந்தப் பகுதியில் திறந்த வெளியில் நின்று நிலத்தடி நீர் மாசு ஏற்படுவதுடன் சுகாதாரக் கேடும் ஏற்படுகிறது. மேலும் பொதுமக்களின் அன்றாட சுகாதாரம் பேணுவது பெரும் பிரச்சினையாக உள்ளது. இது ஒரு புறம் இருக்க, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினால் ஆட்சேபனை எழுப்பப்பட்டு கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலே செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. இந்தத் தொழிலை சுமார் 50,000-க்கும் மேற்பட்ட மக்கள்

செய்து வருகின்றார்கள். இவர்களது வாழ்வாதாரம் பாதிக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் திருப்பூர் சாயப் பட்டறைத் தொழில் பிரச்சினையைத் தீர்க்க அங்கு செயல்படுத்தப்படும் தொழில்நுட்ப முறையினைச் செயல்படுத்தி, சேலம் தெற்குத் தொகுதியிலுள்ள சாயப்பட்டறைகளிலிருந்து வெளிவரும் கழிவுகளைச் சுத்தம் செய்து தர புதியதொரு திட்டத்தினைச் செயல்படுத்தித் தருமாறு தங்களின் பாதம் தொட்டு பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதிக்குட்பட்ட குமரகிரி ஏரி சுமார் 15 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரியாகும். இந்த ஏரி மிகவும் பழமைவாய்ந்த ஏரியாகும். இந்த ஏரிக்குத் தண்ணீர் வழங்கும் கால்வாய்கள் அருகில் உள்ள நாமமலை, குமரகிரி கரடு, ஜல்லுத்து மலை போன்ற மலைகளில் பெய்யும் மழையினை நீராதாரமாகக் கொண்டுள்ளது. இந்த ஏரியில் வருடம் முழுவதும் தண்ணீர் இருக்கும். இந்த ஏரியின் நீர் ஆதாரத்தினைக் கொண்டு அம்மாப்பேட்டை, கிச்சிப்பாளையம் போன்ற பகுதிகளில் மாநகராட்சி கோட்டம் எண்கள் 36, 37, 38, 39, 40, 41, 42 போன்ற கோட்டங்களின் தண்ணீர்ப் பிரச்சினையைச் சமாளித்ததுடன், நிலத்தடி நீர் மாசு ஏற்படாமல் இருந்தது. மேற்படி ஏரி தற்போது கழிவு நீர் சாக்கடைகளால் நிரம்பி உள்ளது. இதனால் இதில் மீன் வளர்ப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் பாதிப்பும் ஏற்படுகின்றது. மாண்புமிகு அம்மா, தாங்கள் கடந்த முறை முதலமைச்சராக இருந்தபோது, மழைநீர் சேமிப்புத் திட்டத்தினை அறிவிப்பு செய்து நாடெங்கும் வியக்கும்வண்ணம் செயல்படுத்தித் தந்தீர்கள். இத்திட்டத்தினால் நிலத்தடி நீர் மாசு ஏற்படுவதினைத் தவிர்ப்பதுடன் நிலத்தடி நீர் மட்டமும் குறையாமல் இருந்தது. அதேபோல், இந்தப் பழமை வாய்ந்த குமரகிரி ஏரியினைத் தூர் வாரி சாயக் கழிவுகள் மற்றும் கழிவுநீர் கலக்காமல் செய்து, இந்த ஏரியினைக் குடிநீர் ஆதாரமாகச் செய்து தருவதுடன் சுற்றுலாத்தலமாக அமைக்க ஆவன செய்யுமாறு பணிவுடன் தங்களின் பொற்பாதங்கள் தொட்டு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகரின் மத்திய பகுதியில் எனது தொகுதிக்குட்பட்ட கிச்சிப்பாளையம், எருமாபாளையம் பகுதிகளில் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேல் குப்பை கொட்டப்பட்டு வந்தது. தற்சமயம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் செட்டிச்சாவடி பகுதியில் திடக் கழிவுகளை விஞ்ஞான முறையில் அழிக்கும் திட்டம்

[திரு. எம்.கே. செல்வராஜு] [2011 ஆகஸ்ட் 18

செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கெனவே கடந்த 100 ஆண்டுகளுக்கு மேல் குப்பை கொட்டி வந்த எருமாபாளையம் எருக்கிடங்கில் சுமார் 150 இலட்சம் டன்களுக்கு மேல் குப்பைகள் உள்ளன. இது ஒரு மலைபோல் காட்சியளிக்கிறது. இந்தக் குப்பை கிடங்கின் அருகில் தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் சுமார் 50,000 குடும்பங்களுக்கு மேல் வசிக்கின்றனர். மழைக் காலங்களில் இந்தக் குப்பைகளிலிருந்து வரும் கழிவு நீரினால் நிலத்தடி நீர் மாசு ஏற்பட்டு அந்தப் பகுதி முழுவதும் தொற்று நோய்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தப் பகுதி மக்கள் பல்வேறு நிலைகளில் கடந்த 5 ஆண்டுகளில் போராட்டம் நடத்தி எந்த ஒரு நடவடிக்கையும் இல்லை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாய் உள்ளத்தோடு இந்தக் கிச்சிபாளையம் பகுதி மக்களின் அன்றாட பிரச்சினையான எருமாபாளையம் குப்பை மேட்டில் தேங்கிக் கிடக்கும் குப்பைக் குன்றுகளை விஞ்ஞான முறையில் மூடி புல் தரைகள் அமைத்து அதனை சோலைவனமாக மாற்றித் தருவதுடன், அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் மாசு ஏற்படாமல் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு பணிவுடன் தங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட மாநகரின் எல்லைப் பகுதியில் உள்ள குகை, திருச்சி சாலை, போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலையாக உள்ளது. இந்தச் சாலையில் தினந்தோறும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு கல்லூரி, பள்ளிகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகளும், பொது மக்களும், வாகன ஓட்டுநர்களும் மிகுந்த சிரமப்படுகின்றனர். இந்தச் சாலைக்கு மாற்றுச் சாலையாக திருமணிமுத்தாறின் கரையில் புதியதாக ஒரு சாலை அமைத்து அதனை நெத்திமேடு அருகில் பைபாஸ் செல்லும் சாலை வரை அமைத்துத் தந்தால், மாநகரில் திருச்சி மெயின் ரோட்டிற்கு மாற்றுச் சாலையாக அமைவதுடன், போக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் இருக்கும். எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் இத்திட்டத்தினை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வாய்ப்பினை நல்கிய தமிழக நிரந்தர முதலமைச்சர், கழக நிரந்தர பொதுச் செயலாளர் அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியினை தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

2011 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

*** திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டின் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய எனது தலைவர், கடந்தகால ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்த, அல்லல்பட்டுக் கொண்டிருந்த, தமிழக மக்களின் உரிமைகளை மீட்பதற்காக தமிழகம் மட்டுமல்ல, இந்திய தேசமே பிரமிக்கின்ற அளவிற்கு ஒரு மாபெரும் "மக்கள் உரிமை மீட்பு மாநாட்டை" சேலம் மாவட்டத்திலேயே, குறிப்பாக என்னை மாவட்டச் செயலாளராக பணிபுரிய வாய்ப்பு வழங்கிய, சேலம் கிழக்கு மாவட்டப் பகுதியில் நடத்த அனுமதியளித்த எங்களின் இதய வேந்தர், எங்களின் சுவாசக் காற்று, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவரும், தமிழக சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவருமான மாண்புமிகு புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) தெய்வங்களாக என் குடும்பத்தையும், என்னையும் வாழவைத்துக் கொண்டிருக்கின்ற என்னை ஈன்றெடுத்த என் தாய், தந்தையரை வணங்கி எனது மானியக் கோரிக்கை உரையைத் துவங்குகின்றேன்.

தமிழகத்திலே உள்ள 29 மாவட்ட ஊராட்சிகள், 10 மாநகராட்சிகள், 152 நகராட்சிகள், 561 பேரூராட்சிகள் மற்றும் 12,618 ஊராட்சிகளைச் சேர்ந்த மக்களின் அடிப்படை வசதிகளுக்காகவும், குடிநீர் தேவைக்காகவும் சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையிலே காணப்பட்ட அனைத்துத் திட்டங்களும் சிறப்பாக அமைந்துள்ளதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேநேரத்தில், கடந்தகால ஆட்சியில் அவர்களுக்காகவும், அவர்களின் சுய தேவைகளுக்காகவும் உருவாக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைபோல் அல்லாமல் இந்த அரசு மக்கள் நலத் திட்டங்கள் சிந்தாமல், சிதறாமல் அனைத்து மக்களுக்கும் சென்றடையுமென அறிவித்துள்ளது.

குறிப்பாக, மக்கள் நலத் திட்டங்களெல்லாம் சரியாக நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைக் கண்டறிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட மாவட்ட அளவிலான கண்காணிப்புக்

[திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்] [2011 ஆகஸ்ட் 18

குழு இருப்பதைப்போல, மாநில அரசின் திட்டங்களைக் கண்காணிக்க சட்டமன்ற உறுப்பினர் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளைக் கொண்டு முழு அதிகாரத்துடன் ஒரு கண்காணிப்புக் குழு (Vigilance Monitoring Committee) அமைத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைப் பொறுத்தவரையில், கடந்த ஆட்சிக் காலத்தில் அவர்களது ஆட்சிக் காலத்திற்கு மட்டுமல்லாது இனி அவர்களது ஆட்சிதான் தொடர்ந்து நீடிக்கும் என்ற கற்பனையில் ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்று சொல்லி 20 இலட்சம் பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு, பெரும்பாலான ஏழை மக்கள் இதை நம்பி, தாங்கள் குடியிருந்த குடிசைகளும் இடிக்கப்பட்டு, தற்போது நடுத்தெருவில் நிற்கும் நிலை தமிழகமெங்கும் காணப்படுகிறது. இந்த மாயாஜாலத்தின்படி 207 சதுர அடி பரப்பளவில் வீடு கட்டி முடிக்க ரூ.75,000/– மட்டுமே நிதியுதவி என்ற ஆட்சியாளர்களால் வழங்கப்பட்டது. இந்தத் தொகையில் பயனாளிகளால் வீடு கட்ட இயலாது. இதனால், முடிக்கப்பட்டதாக கூறப்படும் வீடுகள்கூட குடிபுக இயலாத நிலையில் பணிகள் முடிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஆனால், தற்போது அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ஏழைகளுக்கான பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தை மனதார வரவேற்கின்றோம்.

கடந்த ஆட்சியின் அலங்கோலத்தால் தற்போது வளர்ந்துவரும் தேவைகளுக்கேற்ப போதுமான நிதியாதாரம் இல்லாத காரணத்தினால் பெரும்பாலான ஊராட்சிகளில் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, பொதுச் சுகாதாரம் மற்றும் தெரு விளக்குப் பராமரிப்பு போன்ற பணிகள் முழுமையாக நிறைவேற்ற இயலாததுடன், ஊராட்சியில் பணியாளர்களுக்கு ஊதியம்கூட வழங்க இயலாத நிலையுள்ளது. எனவே, ஊராட்சிகளின் நிதியாதாரங்களை அதிகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசினை கேட்டுக்கொள்கின்றேன்.

ஊரக வளர்ச்சித் துறையில் தற்போதுள்ள மூன்றடுக்கு, உள்ளாட்சிகளின் நிருவாகத்தில் மாவட்ட அளவில் ஊராட்சிகளின் நிருவாகப் பணிகளை ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் ஊராட்சி கணக்குகள் தணிக்கைப் பணிகளை ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) அவர்களாலும்

2011 ஆகஸ்ட் 18] [திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்]

கண்காணிக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள இந்த நடைமுறையில், எந்த ஒரு ஊராட்சியையோ, ஊராட்சி ஒன்றியத்தையோ முழுமையாக மேற்படி அலுவலர்களால் ஆய்வு செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, நிர்வாகக் குறைபாடுகளும், திட்டச் செலவாகத்தில் கணக்கமும், பாரபட்சமும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதால், ஊரக வளர்ச்சித் துறை நிர்வாகத்தைப் பொறுத்த அளவில் பழைய முறைப்படி வருவாய்த் துறையில் உள்ளது போலவே, கோட்ட வளர்ச்சி அலுவலர்களின் நிர்வாகத்தினை உருவாக்கிட அரசினைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–05

மாவட்ட ஊராட்சி நிர்வாகத்தின்கீழ் செயல்படும் திட்டக்குழு (District Planning Cell) தற்போது எவ்வித செயல்பாடுமின்றி உள்ளதால் அதனைச் சீரமைத்து, திட்டங்களைத் திறம்பட செயல்படுத்த அரசினைக் கேட்டுக்கொள்கின்றேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல், அக்டோபர் திங்களில் நடத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சித் தேர்தல் கடந்த கால ஆட்சியில் நடைபெற்றதைப்போல் அல்லாமல், மாநகராட்சி, நகராட்சி, ஒன்றியம், உள்ளாட்சி அமைவற்றின் பிரதிநிதிகள் மக்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டால்தான் உண்மையான மக்களாட்சியின் தத்துவத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கும். ஆகவே, மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் முறையை தமிழக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உள்ளாட்சியில் நீண்டகாலமாகப் பணிபுரியும் உள்ளாட்சி எழுத்தர்களை தேர்தல் அறிக்கையிலே அறிவித்தவாறு, உள்ளாட்சி செயலாளர்களாக நியமிக்க ஆணையிட்டு அவர்கள் வாழ்விலே ஒளியேற்ற வேண்டும் எனக் கேட்க இருந்தேன். ஆனால், கொள்கை விளக்கக் குறிப்பிலே, பக்கம் 135, பத்தி 6 உட்பிரிவு (1) மற்றும் (2)—ன்கீழ் இவையெல்லாம் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக எனது உளமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் உள்ள நகராட்சி மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் விரிவாக்கம் செய்யப்பட்ட அனுமதி பெறாத மனை

[திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்] [2011 ஆகஸ்ட் 18

நிலங்களை உரிய கட்டணத்தோடு வரன்முறைப்படுத்துவதற்கு, கால அவகாசம் அளித்து நகர்ப்புற மக்களின் நெரிசலைக் குறைத்திட உதவிட வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகம் முழுவதும் உள்ள மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்று இம்மாமன்றத்தில் உறுதியளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் நீர்த்தேக்கம் மூலமாக பல மாவட்டங்களின் குடிநீர்த் தேவை நிறைவேற்றப்படுவதைப்போல், சேலம் மாவட்டத்தில் உள்ள குடிநீர் இல்லாத அனைத்து கிராம மக்களுக்கும் மேட்டூரிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கிராமப்புறங்களிலே வசிக்கின்ற மக்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி அலுவலகங்களிலே பிறப்பு, இறப்புச் சான்றுகள் வழங்குவதைப்போல, ஊராட்சி அலுவலகங்களிலும் பிறப்பு, இறப்புச் சான்றுகள் வழங்கிட வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இந்த ஆண்டு அதிகரிக்கப்பட்ட 25 இலட்ச ரூபாய் முழுமையும், மாணவ மாணவிகளின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்காகக் குடிநீர், கழிப்பிட வசதி செய்ய வேண்டும் என்று, மாணவ மாணவியரின் நலன் காக்க இந்த அரசு எவ்வாறு பாடுபடுகிறது என்பதை உணருகின்ற அதே நேரத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடித்து விடுங்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: உரையை முடித்துவிடுகிறேன். வகுப்பறைகள் பற்றாக்குறை உள்ள உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் நடைபெறும் பள்ளிகளில் உடனே புதிய வகுப்பறைகள் கட்டத் தகுந்த நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், 5,000 கோடி ரூபாய் கலைஞர் கருணாநிதி குடும்பத்தாலே கபளீகரப்பட்டது என்று சொன்னார்கள்.

2011 ஆகஸ்ட் 18] [திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மின்சாரத் துறை பற்றிய விவாதம் இன்று காலையிலே முடித்துவிட்டது. இப்பொழுது பேசுகிறீர்களே! நன்றி தெரிவியுங்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் தற்போது செயல்பட்டு வருகிறது. இதுவரை 30 சதவீதப் பணிகள்தான் முடிக்கப்பட்டுள்ளன. பாதாள சாக்கடைக்காகச் சாலையைத் தோண்டிப் போட்ட இடத்தில் மீண்டும் சாலையைச் சீரமைக்காததாலும், பெண்கள், குழந்தைகள் ஆகியோர் அடிக்கடி சிரமத்துக்கு உள்ளாகின்றனர். தற்போது மழைக்காலம் வருவதாலும், உடனடியாக அந்தச் சாலைகளைச் சீரமைத்துத் தர வேண்டும் என்றும், பாதாள சாக்கடைத் திட்டம் முழுமையும் விரைந்து முடித்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியில் தற்போது 60 கோட்டங்கள் உள்ளன. இவற்றில் 2, 3, 6, 8, 9, 24, 29, 36, 37, 40, 43, 50, 57, 59 ஆகிய கோட்டங்கள் மிகவும் பெரிய கோட்டங்களாக உள்ளன. ஏற்கெனவே, சேலம் மாநகராட்சியின் 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சேலம் மாநகராட்சி 75 முதல் 90 கோட்டங்கள் வரை விரிவுபடுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. சேலம் மாநகராட்சி மக்களின் அடிப்படைத் தேவைகளை உடனே நிறைவேற்ற சேலம் மாநகராட்சி கோட்டங்களைப் பிரித்து கோட்டங்களை அதிகரித்துக் கொடுக்குமாறு தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகரம், ஆங்கிலேயர்கள் ஆண்டபொழுது உருவாக்கப்பட்ட நகரம். 1996இல் சேலம் மாநகராட்சியாக உருவாக்கப்பட்டபொழுது 60 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. அதில் எனது சேலம் வடக்குத் தொகுதியில் 22 கோட்டங்களும், ஏற்காடு அடிவாரத்தில் உள்ள கன்னங்குறிச்சி பேரூராட்சியும் அடங்கும். ஏற்கெனவே பழைய சேலம் மாநகராட்சியில் உள்ள சாலைகளெல்லாம் இன்றுவரை குறுகிய சாலைகளாகவே உள்ளன. விரிவாக்கப்பட்ட மாநகராட்சிப் பகுதியில் அடிப்படை வசதிகளான சாலை வசதி, கழிப்பிட வசதி, சாக்கடை வசதி, தெரு விளக்குகள் ஆகிய பணிகளெல்லாம் முழுமை பெறாமல் உள்ளன.

[திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்] [2011 ஆகஸ்ட் 18

ஆகையால் 8.50 இலட்சம் மக்கள் தொகை கொண்ட சேலம் மாநகராட்சிக்கு, மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் மூலமாக நிதியுதவி பெற்று, சேலம் மாநகரில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகளில் நடை மேம்பாலம் புதியதாகச் சேர்க்கப்பட்ட மாநகராட்சிப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளான சாக்கடைக் கழிப்பிட வசதி, சாலை வசதி, பழைய நகராட்சிப் பகுதியில் குறுகலான சாலைகளைக் கான்கிரீட் சாலைகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமெனவும், மாண்புமிகு தமிழக முதல்வரின் ஆட்சிக் காலத்தில் முழுமைப் பெற்ற சேலம் மாநகராட்சியாக உருவாக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எனது சேலம் வடக்குத் தொகுதியில் முக்கிய வர்த்தகப் பகுதியான சேலம் கடைவீதி, சின்ன கடைவீதி, முதல் அக்ரஹாரம், 2-வது அக்ரஹாரம், லீபஜார், செவ்வாய்ப்பேட்டை மொத்த வியாபாரப் பகுதி, லாரி மார்க்கெட், சேலம் அதிநவீன மருத்துவமனை, சேலம் பொது மருத்துவமனை, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், மாவட்ட உயர் அதிகாரிகள் குடியிருப்புப் பகுதி, நீதிபதிகள் குடியிருப்புப் பகுதி, அரசு ஊழியர் குடியிருப்புப் பகுதி, மத்திய சிறைப் பகுதி, அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் கலைக் கல்லூரி, இந்து, முஸ்லீம், கிறிஸ்துவ மக்களின் முக்கிய பெரிய ஆலயங்கள், பழைய பஸ் நிலையம் ஆகிய அனைத்து முக்கியமான பகுதிகளையும் உள்ளடக்கியது.

சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பகுதி மக்களும் தங்களுடைய வர்த்தகத் தேவைகளுக்காகவும், சுய தேவைகளுக்காகவும் வருகின்ற மிக முக்கியமான இணைப்புப் பாலங்களான ஆனந்தா பாலமும், திருச்சி மெயின் ரோட்டிலிருந்து இஸ்லாமிய மக்கள் அதிகம் வசிக்கின்ற 31-வது கோட்டத்தை இணைக்கின்ற குண்டுபோடும் தெரு பாலமும் கட்டி முடிக்கப்பட்டு மூன்றாண்டுகளாக மூடிக் கிடக்கிறது. ஏனென்றால், கடந்தகால ஆட்சியாளர்களின் அவசர நடைமுறையால் பாலத்தின் இரண்டு புறமும் உள்ள தனியார் நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்காததால் இப்பணி முடிவடையவில்லை. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு, உரிய ஆணையைப் பிறப்பித்து சேலம் மாநகர மக்களுக்கு உதவிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

2011 ஆகஸ்ட் 18] [திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்]

கடந்த ஆண்டு 20-8-2010 ஆம் தேதியன்று கடந்தகால முதல்வரால் அவசரமாக முடிவடையாமல் இருந்த சேலம் அதிநவீன மருத்துவமனை திறக்கப்பட்டு ஒரு வருடமாகியும் இன்றுவரை பொதுமக்களின் செயல்பாட்டுக்கு வரவில்லை. அரசுப் பணத்தை வீணடித்து, ஆடம்பர விழா எடுத்து திறக்கப்பட்ட அதிநவீன மருத்துவமனையைப் பொதுமக்களின் நலன் காக்கும் இந்த அரசு உடனடியாக மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தண்ணீர்ப் பற்றாக்குறை இருந்து தண்ணீர் தட்டுப்பாடு வரலாம். ஆனால், சேலம் மாநகராட்சிக்கு மேட்டூரிலிருந்து தினமும் 60 MLD குடிநீர் சேலம் மாநகர எல்லையான மாமாங்கம் வரை வருகிறது. அதன்பிறகு, அந்தக் குடிநீர் கடந்த கால ஆட்சியின் திருவாகச் சீர்கேட்டினால், சேலம் மாநகர மக்களுக்கு 12 நாட்கள், 15 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வரும் அவல நிலை இருந்தது. தற்போது 5 அல்லது 6 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வருமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மிக்க நன்றி.

கடந்த கால ஆட்சியில் உள்ள அவர்களின் தலைவர்களைப் போலவே, சேலம் மாமன்ற தி.மு.க. உறுப்பினர்களும். மக்கள் விரோதிகளாக இருக்கிறார்கள். 'தவித்த வாய்க்கு தண்ணீர் கொடு' என்று சொல்லுவார்கள். ஆனால், இவர்கள் தங்களை உயர்த்திக் கொள்வதற்காக அந்தத் தண்ணீரையும் விற்று பொது மக்களைப் பெரிய சங்கடத்துக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். ஆகவே, சேலம் மாநகருக்கு தனிக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தி சேலம் மாநகர மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

2001 முதல் 2006 வரை தற்போதைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தாய்மார்களின் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்கக் கொண்டுவரப்பட்ட நவீன ஒருங்கிணைந்த சுகாதார வளாகத்தில் எனது சேலம் வடக்குத் தொகுதியில் 10-வது வார்டுத்தில் உள்ள இரண்டு நவீன சுகாதார வளாகங்களை அப்பகுதியில் உள்ள தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்வது மட்டுமல்லாமல், அப்பகுதியில் வாழும் குழந்தைகளுக்கும், பொதுமக்களுக்கும் கொடிய தொற்று நோய் பரப்புகின்ற பன்றிப் பண்ணையை நடத்தி வருகிறார்கள். ஆகவே, உரிய நடவடிக்கை எடுத்து அந்தப் பன்றிகளைக் கொல்வதோடு மட்டுமல்லாமல், அந்தச் சுகாதார வளாகத்தை பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்] [2011 ஆகஸ்ட் 18

சேலம் மாநகரில் மின்சாரம் சப்ளை செய்யும் 110 KV துணை மின் நிலையம் அமைக்க வேண்டும்.

சேலம் மாநகரில் பெருகி வரும் வாகனப் போக்குவரத்தைச் சீர்படுத்த சேலம் அம்மாபேட்டை சக்தி கைலாஷ் மகளிர் கல்லூரிப் பிரிவு ரோட்டிலிருந்து காமராஜர் வளைவு வரை மேம்பாலம் அமைத்திட வேண்டும்.

சேலம் மாநகர் அம்மாபேட்டையில் உள்ள 23 ஏக்கர் விஸ்தீரணமுள்ள கூட்டுறவு நூற்பாலை பல ஆண்டுகளாக மூடிக்கிடக்கிறது. நெசவாளர்களும், நெசவுத் தொழிலும், கைத்தறி மற்றும் விசைத்தறித் தொழில் மிகுந்த சேலம் மாவட்ட நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும், கைத்தறி மற்றும் நெசவுத் தொழில் மேம்பாடு செய்திடவும் மேற்படி கூட்டுறவு நூற்பாலை இடத்தில் ஒரு மாபெரும் "ஆயத்த ஆடை பூங்கா" (Apparel Park) அமைத்திட வேண்டும்.

சேலம் மாநகரின் மிக முக்கிய வர்த்தகப் பகுதியாக விளங்கும் செவ்வாய்ப்பேட்டை, லீபஜார், லாரி மார்க்கெட், இரயில் நிலையம், பால் மார்க்கெட், வஉசி. மார்க்கெட், சின்ன கடைவீதி, பெரிய கடைவீதி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மூட்டைத் தூக்கும் தொழிலாளிகள், சுமை தூக்கும் தொழிலாளிகள், வண்டி ஓட்டும் தொழிலாளிகள் என வாழ்நாள் முழுவதும் எவ்வித உத்தரவாதமும் இன்றி உழைத்துக் கொண்டிருக்கும் அந்த மூட்டை, சுமை தூக்கும் மற்றும் வண்டி ஓட்டும் தொழிலாளர்களுக்கு அவர்கள் வயதான பின்னர், பிற்கால வாழ்க்கைக்கு ஏற்றவாறு, உரிய காப்பீடும், உதவித் தொகையும் வழங்கிடும் வகையில் தொழிலாளர் நல வாரியத்தின் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

சேலம் வடக்குத் தொகுதியில் உள்ள ஏழை மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் உள்ள அரசு கலைக் கல்லூரி, சேலம்–7 மற்றும் அரசு பெண்கள் கலைக் கல்லூரி, சேலம்–8–இல் அடிப்படை வசதிகள் இருந்தும் தொடங்கப்படாமல் உள்ள முதுகலைப் பட்டப் படிப்புகள் தொடங்கிட வேண்டும். பெண்கள் கலைக் கல்லூரியில் 'கலை அரங்கம்' இந்த ஆண்டே கட்டித் தர வேண்டும் எனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வடக்கு தொகுதிக்குட்பட்ட 6–வது, 10–வது, 12–வது, 15–வது, 27–வது மற்றும் 28–வது கோட்டங்களில் முப்பது

2011 ஆகஸ்ட் 18] [திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்]

ஆண்டுகளுக்கு மேலாக அரசுப் புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் ஏழை மக்களுக்குப் பட்டா வழங்கிடவும், சேலம் மாநகராட்சி 28–வது கோட்டத்தில் பொதுமக்கள் நெரிசல் மிகுந்த குடியிருப்புப் பகுதியான செவ்வாய்ப்பேட்டை இடுகாட்டில் சுற்றுச்சூழலைப் பாதிக்காவண்ணம் நவீன மின் தகன மேடை அமைத்திடவும், சேலம் மாநகராட்சி 27–வது கோட்டத்தில் வர்த்தக மையப் பகுதியில் நீண்ட வருடங்களாகப் பராமரிப்பின்றி இருக்கும் இராஜேந்திரா சத்திரத்தை இடித்துவிட்டு அதே பெயரில் நவீன வணிக வளாகமும், தங்கும் விடுதியும் கட்டித் தர வேண்டும்.

சேலம் மாவட்டத்திலுள்ள சுற்றுலா மையமான ஏற்காடு அடிவாரத்தில் அமைந்துள்ள கன்னங்குறிச்சி பேரூராட்சியின் பழைய குடியிருப்புப் பகுதிகளில் உள்ள குறுகலான சாலைகளைக் கான்கிரீட் சாலைகளாக மேம்படுத்தியும், விரிவுபடுத்தப்பட்ட புதிய மனைப் பகுதிகளுக்குச் சாலை வசதி, சாக்கடை வசதி செய்திட வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கன்னங்குறிச்சி சாந்தி நகர் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நவீன ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் அமைத்திட வேண்டும்.

சேலம் மாநகர எல்லையையொட்டி அமைந்துள்ள கன்னங்குறிச்சி மூக்கனேரி ஏரியைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து அதற்கான திட்டங்களை ஏற்படுத்த வேண்டும்.

மொத்தத்தில் நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் உள்ள திட்டங்கள் அனைத்தும் எங்களின் டாக்டர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களின் மனித நேயத்தோடு வறுமை ஒழிக்கப்பட வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற கொள்கை முழக்கத்தைப் பறைசாற்றுவதாக அறிவிக்கப்பட்ட திட்டங்களாகும். இத்திட்டங்களை வரவேற்று அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை உருவாக்கிய தாயே, உருவாக்கி வளர்த்த தாயே, வளர்த்து ஆளாக்கிய தாயே, ஆளாக்கி அங்கீகாரம் அளித்த தாயே, அங்கீகாரம் அளித்து இந்தச் சமூகத்திற்கு

[திரு. கே.பி. முனுசாமி] [2011 ஆகஸ்ட் 18

அடையாளம் காட்டிய தாயே, இந்தச் சமூகத்திற்கு அடையாளம் காட்டி, கழகத்திலே பல்வேறு பொறுப்புகளைக் கொடுத்து, கழகப் பணி ஆற்றிட உத்தரவு அளித்த தாயே, கழகப் பணி ஆற்றியிருப்பதோடு மட்டுமல்லாமல், தேர்தல் களத்திலே 'நில்' என்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்கள், பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றதிலிருந்து, அறிவித்த தேர்தல் களத்திலே, 1989-ல், 1991-ல், 1996-ல், 1998-ல், 1999-ல், 2001-ல், 2006-ல், 2011-ல் வேட்பாளராக நிறுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) மூன்று முறை வெற்றிபெறச் செய்து, இன்று நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற என் அம்மா அவர்களின் தலைமையில் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அமைச்சரவையில், என்னை அமைச்சராக்கி, இன்று இந்த அவையிலே பதிலுரை கூறுவதற்குரிய நல்ல வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற என் அன்னைக்கு மனமார்ந்த நன்றியினை மலர்ப் பாதங்களில் வைத்து, இந்த மானியக் கோரிக்கையின்மேல் எனது பதிலுரையைத் துவக்குகின்றேன் என்பதைப் பணிவோடு சமர்ப்பிக்கின்றேன் அம்மா.

அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர், எங்களுடைய கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அம்மா அவர்கள் வேட்பாளராக நிறுத்தியபோதெல்லாம், கடுமையாக உழைத்து வெற்றிக்காகப் பாடுபட்ட காவேரிப்பட்டினம் மற்றும் கிருஷ்ணகிரிவாழ் கழகத் தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சி நண்பர்களுக்கும் எனக்கு வாக்களித்து வெற்றியைக் கொடுத்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றங்கரையிலிருந்து ஆரம்பமான மனித நாகரிகம் இன்று நகர்ப்புறங்களிலே மக்கள் நெருக்கமாக வாழ்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 31.6 விழுக்காடு மக்கள் நகரத்தில் வசிக்கின்றார்கள் என்ற நிலையில், சென்னையில் வாழக்கூடிய மக்களுடைய கணக்கின்படி தமிழகத்தில் 48.46 விழுக்காடு நகர்ப் பகுதிகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலுள்ள 10 மாநகராட்சிகள், 150 நகராட்சிகள், 559 பேரூராட்சிகளில் கிட்டத்தட்ட 3 கோடியே 49 இலட்சம் மக்கள் வசித்து கொண்டிருக்கிறார்கள்.

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

இவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்படுவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் பல்வேறு திட்டங்களை நிதிநிலை அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், தெரு விளக்குகள், கல்வி, சுகாதாரம், சாலைப் பணிகள், திடக் கழிவு மேலாண்மை, மழைநீர் வடிகால் ஆகியவற்றில் அக்கறை செலுத்த வேண்டிய நல்லரசாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு தற்போது செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படைத் தேவையான குடிநீரை ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே—இங்கே மிக விளக்கமாகச் சொன்னார்கள்—தமிழகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற கடைகோடி மனிதனுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமென்கிற உறுதியை இந்த மாமன்றத்தில் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதனடிப்படையிலே தமிழகத்திலே இருக்கின்ற பெரிய நகரமான சென்னை மாநகரத்திலே ஒருகாலத்தில் குடிப்பதற்குத் தண்ணீர் தேவையென்று சொன்னால், இந்த மாநகரத்திலே இருக்கின்ற சகோதரிகள் மணிக்கணக்காக குழாய் அடியில் நிற்க வேண்டும். எப்போது தண்ணீர் லாரி வருமென்று காத்திருந்து, லாரி வந்தவுடனே ஓடோடிச் சென்று, அந்த வரிசையில் நிற்கும்போதே சண்டை ஏற்படும். அப்படிக் குடிதண்ணீர் தட்டுப்பாடாக ஒருகாலத்தில் இருந்தது இந்த நகரம். அது எந்தக் காலமென்று சொன்னால், கருணாநிதி ஆட்சி செய்த காலம். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டில் பொறுப்பேற்றபோது நிரந்தரமாக இந்தத் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பதற்காக "புதிய வீராணம் திட்டத்தைக்" கொடுத்தார்கள். அந்தப் "புதிய வீராணம் திட்டம்" ஒரு நாளைக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் சென்னை மாநகருக்கு வழங்கி, சென்னை மாநகரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெருமக்களுக்கு நீராதாரத்தைக் கொடுத்தது. அதைத் தொடர்ந்து இப்போது 2011 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே ஒரு நல்ல முடிவை எடுத்தார்கள். என்னவென்று சொன்னால், நிரந்தரமாக மக்களுக்கு நீராதாரம் கொடுக்க வேண்டும், எப்படிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், இங்கே இருக்கின்ற நீராதாரங்கள், இங்கே இருக்கின்ற ஏரிகளில் அதிகபட்சமான கொள்ளளவு 11 டிஎம்சி தண்ணீர்தான். ஆனால் மக்கள்தொகை 15 ஆண்டுகள்

[திரு. கே.பி. முனுசாமி] [2011 ஆகஸ்ட் 18

கடந்தால் இது 67 விழுக்காடாக நகர்ப்புறங்களிலே உருவாகுமென்ற நிலையிருக்கின்ற காரணத்தினால் மேலும் நீராதாரத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காக இந்த நிதியாண்டிலே ரூபாய் 1,851 கோடி ஒதுக்கி மேலும் 4.2 டி.எம்.சி. கொள்ளளவு கொள்ளக்கூடிய 3 ஏரிகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக கரிகால் சோழன், ஓடுகின்ற ஆற்றிலே கல்லணைக் கட்டி இன்றுவரை அவருடைய பெயரும் புகழும் நாட்டிலே உலாவிக் கொண்டிருக்கிறது. இன்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 4.2 டி.எம்.சி. தண்ணீரைச் சேர்க்கக்கூடிய இந்த ஏரிகளை அமைத்து நிரந்தரமாக இந்தப் பகுதிவாழ் மக்களுக்குக் குடிக்கின்ற தண்ணீரை 30 ஆண்டுகள் அல்ல, 100 ஆண்டுகள் ஆனாலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் கொடுத்துச் சென்றார்கள் என்ற நிலைமையை புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

அதைவிட ஒருபடி மேலாக இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானம் பொய்க்கிறது என்று வைத்துக்கொள்வோம். இயற்கை நம்மை ஏமாற்றிவிடுகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்ட நிலை வந்தால்கூட, கடல் தண்ணீர் வற்றாமல் இருக்கிறது. கடல் தண்ணீரை எடுத்துக் கொடுத்து, சென்னை மாநகருக்குத் தண்ணீர் கொடுப்பேன் என்று, 400 M.L.D. தண்ணீரைக் கொடுப்பதற்காக ஒரு நிதிய திட்டத்தை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே மீஞ்சூரில் 100 M.L.D. , நெம்மேலியில் 100 M.L.D., இந்த 400 M.L.D. அளவுத் தண்ணீர் வந்தால் 600 M.L.D. அளவு தண்ணீர், இயற்கை பொய்த்தாலும்கூட, இந்த மக்களுக்கு நான் தண்ணீர் கொடுப்பேன் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சூளுரைத்து, செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்லாமல், மாநகராட்சியில் இந்தமாதிரி திட்டம் இருக்கிற அதேநேரத்தில், மற்ற 9 மாநகராட்சிகளுக்கும், 150 நகராட்சிகளுக்கும் முறையாகத் தண்ணீர் வழங்கப்பட வேண்டும்

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

என்பதற்காக பல புதிய திட்டங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். 9 நகராட்சிகளுக்கும் நாள் ஒன்றுக்குத் தேவையான குடி தண்ணீர் அளவு 507 M.L.D. ஆகும். ஆனால், தற்போது நீராதாரங்களிலிருந்து 465.20 M.L.D. அளவு குடிநீர்தான் வழங்கப்படுகிறது. மீதம் 41.80 M.L.D. அளவு தண்ணீர் தேவைப்படுகிறது. இந்தத் தண்ணீரை ஈடுசெய்கின்ற வகையில், எதிர்காலத்திலே மேலும் தண்ணீர் வழங்கக்கூடிய வகையிலே புதிய திட்டங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோல, 150 நகராட்சிகளின் குடிநீர்த் தேவை நாள் ஒன்றுக்கு 842.0 M.L.D. எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு 684.25 M.L.D. அளவு தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. குடிநீர் விநியோகப் பற்றாக்குறையைப் போக்க 157.85 M.L.D. குடிநீர் வழங்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

ஊரகக் குடியிருப்புகள். 93,699 குடியிருப்புகள் இருப்பதாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கணக்கிட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே வாழ்கின்ற மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 40 M.L.D. குடிநீர் வழங்க வேண்டுமென்ற நிலையில், கிட்டத்தட்ட இப்பொழுது 86,679 குடியிருப்புகளுக்கு முழுமையாகத் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 7,020 குடியிருப்புகளுக்குக் குடிநீர் முழுமையாகக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்காக 206.61 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு புதிய திட்டத்தையும், நகர்ப்புறங்களில் குறைவாக வருகின்ற தண்ணீரின் அளவை நிறைவு செய்கின்றவகையிலே சுமார் 367.48 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 46 திட்டங்களும் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்லாமல், கிட்டத்தட்ட 3,777 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர், விருதுநகர், நாகப்பட்டினம், சேலம் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் ஒரு பெரும் திட்டத்தை எடுத்துக்கொள்ளும் ஆயத்த நிலையில் – கிட்டத்தட்ட 8 திட்டங்களுக்கான technical bid open செய்து, விரைவில் டெண்டர்விட இருக்கிறதென்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், நீலகிரி,

[திரு. கே.பி. முனுசாமி] [2011 ஆகஸ்ட் 18

ஈரோடு, நாமக்கல், கரூர், மதுரை, திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 15 மாவட்டங்களில் 33 குடிநீர்த் திட்டங்களுக்கு ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு சுமார் 19 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.568 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் 21 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ626.57 கோடி மதிப்பீட்டில் கடலூர், தஞ்சாவூர், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், தேனி மற்றும் தூத்துக்குடி ஆகிய 8 மாவட்டங்களில் 15 குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது என்பதையும், ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டவுடன், உடனடியாக இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, நடைமுறைக்கு வருமென்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதோடு மட்டுமல்லாமல், ஏற்கெனவே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், தருமபுரி கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் நீராதாரமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2001-லே உருவாக்கப்பட்ட திட்டம். இந்தத் திட்டம், கடந்தகால ஆட்சியில் தொடங்கப்பட்டாலும்கூட, தொய்வாக இருந்த திட்டம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே இந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை ஆய்வு செய்து, உடனடியாக, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக, அதாவது அடுத்த ஆண்டு 2012, டிசம்பர் மாதத்திற்குள்ளாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையிலே இந்தத் திட்டம் வேகமாகச் செயலாக்கத்திற்கு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, இன்னொன்றையும் இங்கே நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஆட்சியில் தந்தையும், பிள்ளையும் சேர்ந்து இராமநாதபுரத்திலே மக்களுக்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்து, மேடையிலே தந்தை ஒரு பக்கம், பிள்ளை ஒரு பக்கம் என்று பட்டனை அமுத்தினார்கள்; முடித்துவிட்டதாகச் சொல்லி மோதிரத்தையும் மாற்றிக் கொண்டார்கள்; முதலிலே பட்டனை

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

அழுந்தினார்கள்; அப்பொழுது இந்தத் திட்டம் முடிந்தது என்று சொல்லி, தந்தையையும், பிள்ளையையும் வைத்து, சில அதிகாரிகளையும் வைத்து மோதிரத்தை மாற்றிக் கொண்டார்கள். ஆனால், என்ன நிலைமை என்று ஆய்வு செய்தால், திட்டத்துட்ட 611 கோடி ரூபாயில் தொடங்கப்பட்ட அந்தத் திட்டத்தில், இதுவரையில் எல்லா குடியிருப்புகளுக்கும் முறையாக தண்ணீர் சென்றடையாத அவல நிலையிலே, இப்பொழுது அந்தத் திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அதை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில் என்னென்ன தவறுகள் நடந்திருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து, அதன்மீது இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடிநீரைக் கொடுக்கின்ற அதேநேரத்தில், குடித்து, பயன்படுத்தி, கழிவுநீராக வெளியே வருகின்றபொழுது, அந்த நீரினால் எந்த வகையிலும் மக்களுக்குத் தீங்கு ஏற்படாமல், முறையாக பாதாளச் சாக்கடைகள் அமைத்து வெளியேற்றி, அதைச் சுத்தம் செய்து, ஏரியிலே கலக்கக்கூடிய ஒரு பெரும் திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

கடந்த 24-6-2011 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மிக அழகாகச் சொன்னார்கள்; நாங்கள் அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்தபோது, இன்னின்ன இடங்களிலே பாதாள சாக்கடைத் திட்டம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னோம்; ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்; "இந்த இடம், அந்த இடம் என்று தேவையில்லை; என்னைப் பொறுத்தவரையில், 10 மாநகராட்சிகளிலும், 150 நகராட்சிகளிலும், 559 பேரூராட்சிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும்; அதற்குரிய நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும்" என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையிலேயே, இந்திய துணைக் கண்டத்திலே எந்த மாநிலத்திலும் இவ்வளவு பெரிய திட்டத்தை எந்த முதலமைச்சரும் துணிந்து சொல்ல முடியாத திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், இது ஒரு சவாலானத் திட்டம். பாதாள சாக்கடைத் திட்டம் என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டாலும்கூட, இது இயந்திரங்களை முழுமையாகப் பயன்படுத்த முடியாத திட்டம். சிறு, சிறு சந்துகள் இருக்கும்; அங்கே பெரிய இயந்திரங்கள்

[திரு. கே.பி. முனுசாமி] [2011 ஆகஸ்ட் 18

செல்லாது; மனித உழைப்பின் அடிப்படையிலேதான் அந்தத் திட்டங்களைத் திட்ட வேண்டும். ஆனால், மக்களையே நேசிக்கின்ற, மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றுகிறோம்; அதுவும் ஐந்தாண்டு காலத்திற்குள்ளாகவே நிறைவேற்றுகிறோம் என்று எங்களிடத்திலே உறுதியாகச் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அப்படிச் சொல்லுகின்ற நேரத்தில், சொல்லுகின்ற விதம் இருக்கிறதே, அவர்களுடைய வேகம் 'நாளைக்கே மக்களைச் சென்றடையக்கூடிய திட்டங்களை நீங்கள் உருவாக்க வேண்டுமேயொழிய, இதற்குக் காரணம் சொல்லக்கூடாது' என்று சொல்லிவிட்டார்கள். அப்படியென்றால், மக்களை எவ்வளவு நேசிக்கின்றார்கள் என்று பாருங்கள். ஆனால், கடந்த ஆட்சியாளர்கள் இந்தத் திட்டத்தைக் கையில் எடுத்தார்கள். 2010–லே ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். என்னவென்று சொன்னால், 1,535.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 திட்டப் பணிகளை, கிட்டத்தட்ட மாவட்டத் தலைநகரங்களில் எல்லா இடங்களிலும் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டு வருவதாகச் சொன்னார்கள்.

ஏற்கெனவே ஒரு கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே சொன்னேன், குடியாத்தம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவரப்படுமா என்பதற்குச் சொன்னேன்; 31.24 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டப்பட்டது; மத்திய அரசின் ஒருங்கிணைப்பு சிறு மற்றும் நடு நகரங்களுக்கான உள் கட்டமைப்புத் திட்டத்தின் வாயிலாக நிதியைக் கேட்டார்கள்; மைய அரசு கொடுக்கவில்லை; கொடுக்காதவுடனேயே திட்டத்தைக் கைவிட்டார்கள். இதிலே இன்னொரு குறை, ஏன் கட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால், திட்டம் தீட்டப்பட்டது; ஆனால், அந்தக் கழிவு நீரை எந்த இடத்திலே கொண்டுபோய் நிறுத்தி, சுத்தப்படுத்தி வெளியேற்றுவது என்று நிலத்தைக் கையகப்படுத்தவில்லை. இப்படி முழுமையாக அந்தத் திட்டங்களை உருவாக்காமல், திட்டங்களை மட்டும் தயார் செய்து வைத்திருந்தார்கள். அந்தத் திட்டங்கள்தான் இந்தத் திட்டங்கள். 1,535.76 கோடி ரூபாயில் திட்டங்களைப் போட்டு, உடனடியாக 729.67 கோடி ரூபாய் மதிப்பிலான 25 திட்டங்களை அவர்களே வாபஸ் பெறுகிறார்கள். அதிலே, குடியாத்தம் நகராட்சியும் ஒன்று.

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

பிற்பகல் 1—25

ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதுபோன்ற திட்டங்களை உருவாக்காமல், பாதாளச் சாக்கடைத் திட்டம் என்று வருகின்றபோது, அதற்குத் திட்ட மதிப்பீட்டோடு மட்டுமல்லாமல், கழிவுநீரை எங்கே எடுத்துச் செல்வது என்றும் திட்டமிடுகிறார்கள். ஏனென்றால், கழிவுநீரை இப்பொழுது வெளியிலே எடுத்துச் செல்வதற்கு, அருகிலே உள்ள கிராமத்து மக்கள் ஏற்றுக்கொள்வதில்லை. மிகத் தொலைவிலே அதைக் கொண்டுவந்து சுத்தம் செய்தால்தான் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். கழிவுநீரை எடுத்துச்செல்வதற்கான இடம் அடையாளம் காட்டப்பட்டு, அது முழுமைபெற்ற பின்புதான் திட்டமே ஒப்பந்தப்புள்ளிக்கு வரவேண்டும். ஆனால், இவர்கள் ஏதோ தான்தோன்றித்தனமாக இந்தத் திட்டத்தை அறிவித்ததோடு மட்டுமல்லாமல், எந்தத் திட்டத்தையும் முழுமையாகச் செயல்படுத்தவில்லை. மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள்கூட, அந்தத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது, குதிரை வாங்க வேண்டும் என்று சொன்னார், ஏனென்று சொன்னால், அந்தச் சாலையிலே கார் போகாது, வாகனம் போகாது என்று சொன்னார்கள். அதுதான் கருணாநிதி ஆட்சியினுடைய இலட்சணம்; மு.க. ஸ்டாலின் ஆட்சியினுடைய இலட்சணம். ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை முடித்துவிட்டால், நீங்கள் காரிலும் செல்லலாம், லாரியிலும் செல்லலாம், சைக்கிள், மோட்டாரிலும் செல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு திட்டத்தைக் கொண்டுவருகின்றபோது அல்லது பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவருகின்றபோது, சாலையில் ஒரு பகுதி தோண்டப்படுகிறது என்று சொன்னால், அந்தப் பகுதியில் அந்தப் பணி முழுமைபெற்ற பின்பு, அந்தச் சாலையை மேம்பாடு செய்த பின்புதான் அடுத்த பகுதிக்குச் செல்ல வேண்டும். அதுதான் இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவருகின்ற மிகப் பெரிய திட்டம் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, எப்படிக் கழிவுநீரை வெளியேற்றி, சுத்தப்படுத்த வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்களோ அதைப்போல, மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் குப்பைக்

[திரு. கே.பி. முனுசாமி] [2011 ஆகஸ்ட் 18

கூளங்கள் முறையாக அப்புறப்படுத்தப்பட வேண்டும். அதற்காகத் திட்டக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை அறிவித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 5-8-2011 அன்று சென்னை மாநகராட்சியிலே வாள்வழியாகச் சென்று, சென்னை மாநகராட்சியில் எவ்வளவு குப்பைக் கூளங்கள் இருக்கின்றன, எங்கெங்கெல்லாம் கழிவுநீர் தேங்கியுள்ளது என்பதை ஆய்வு செய்து, அவற்றையெல்லாம் உடனடியாக சுத்தம் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதுவும் மூன்று மாத காலத்திற்குள் அவற்றைச் சுத்தம் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள்.

நாம் குடியிருக்கின்ற வீட்டினைச் சுத்தம் செய்வதற்கு தினமும் 15 நிமிடங்கள் அல்லது 20 நிமிடங்கள் ஆகும். அதேபோல, ஒரு வீடு போலத்தான் ஒரு நகரமும். கடந்த ஆட்சியாளர்கள் முறையாகச் சுத்தம் செய்திருந்தால், இந்த மாநகராட்சியை நான்கு நாட்களுக்குள்ளாகச் சுத்தம் செய்திருக்க முடியும். ஆனால், மூன்று மாதம் தேவைப்படுகிறது என்று சொன்னால் — மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் சொன்னதுபோல, சென்னை மாநகராட்சிப் பகுதிகளைக் குப்பை மேடாக கருணாநிதி ஆட்சியின்போது வைத்திருந்தார்கள்; அதுதானே உண்மை! (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துக் குப்பைகளையும் வெளியேற்ற மூன்று மாத காலம் ஆகும். அனைத்துக் குப்பைகளையும் வெளியேற்றுவதற்கு மூன்று மாத காலம் தேவைப்படுகிறது என்ற நிலையிலேதான் சென்ற ஆட்சியாளர்கள் வைத்திருக்கிறார்கள்.

அதோடு, இந்தக் குப்பைக் கூளங்களை வைத்து, மின்சாரம் எடுக்க வேண்டுமென்றும் அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இப்போது சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், ஒரு நாளைக்கு 3,500 மெட்ரிக் டன் குப்பைகள் சேருகிறது. அதேபோல, மற்ற ஒன்பது மாநகராட்சிகளையும், 150 நகராட்சிகளையும் எடுத்துக்கொண்டால், ஒரு நாளைக்கு 7,000 மெட்ரிக் டன் குப்பை சேருகிறது. அதேபோல, 559 பேரூராட்சிகளை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், 13,153 மெட்ரிக் டன் குப்பைகள் சேருகிறது. இங்கே மற்ற தலைவர்களுக்கு இல்லாத சிந்தனை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வந்திருக்கிறது. சென்னை மாநகராட்சியிலே இந்தக் குப்பைகளைக் கொட்டுவதற்கு இரண்டு இடங்கள் இருக்கின்றன. மற்ற மாநகராட்சிகளிலும் இடங்கள் இருக்கின்றன. நகராட்சிகளில்

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

குப்பைகள் கொட்டுவதற்குப் போதிய இடம் இருக்கிறதா? பேரூராட்சிகளில் குப்பை கொட்டுவதற்குப் போதிய இடம் இருக்கிறதா? இதை ஆய்வு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேகமாக, இந்திய துணைக் கண்டத்திலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர, இவ்வளவு கீழே இறங்கி எவரும் இந்த ஆராய்ச்சியைச் செய்திருக்க மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு பெரிய திட்டம்! இது நிதர்சனமான உண்மை. இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிரம்பத் தெரியும்; அந்தந்த நகராட்சிகளில், பேரூராட்சிகளில் குப்பைகள் கொட்டுவதற்கு இடமில்லை; இடமில்லாமல், சாலைகளில் கொட்டிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையை மாற்ற வேண்டுமென்பதற்காகத்தான், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தத் திடக்கழிவு மேலாண்மையில் தனிக் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல குடிதண்ணீர்; குடிதண்ணீர் கழிவுநீராக மாறுகின்றபோது, அதைச் சுத்தம் செய்வது; குப்பைகளைச் சுத்தம் செய்வது போன்றவற்றிற்கு அடுத்தபடியாக, மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் மழைநீர்; மழைநீரை முறையாக வெளியேற்றவில்லை என்று சொன்னால், அந்த மழைநீர் தேங்குகின்ற நேரத்தில், அது கழிவுநீராக மாறி விடுகிறது. எனவே, மழைநீரை உடனடியாக வெளியேற்றுவதற்குரிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீட்டி, சென்னை மாநகராட்சிக்கு மட்டும் 750 கோடி ரூபாய் நிதியொதுக்கி, மழைநீரை உடனடியாக வெளியேற்றிட ஏதுவாக வடிகால்கள் ஏற்படுத்துவதற்குரிய ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, மாநகராட்சியானாலும் சரி; நகராட்சியானாலும் சரி; பேரூராட்சியானாலும் சரி; நல்ல சாலை வசதிகள் வேண்டும். தமிழகத்தில் உள்ள 10 மாநகராட்சிகளிலும், 150 நகராட்சிகளிலும், 559 பேரூராட்சிகளிலும், ஒட்டுமொத்தமாகச் சேர்த்து 40,307 கிலோ மீட்டர் சாலைகள் உள்ளன. இதிலே மாநகராட்சிகளில் சாலைகள் ஓரளவிற்குச் சரியாக இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். பாதாள

[திரு. கே.பி. முனுசாமி] [2011 ஆகஸ்ட் 18

சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வந்த எல்லா நகராட்சிகளிலுமே, இப்பொழுது நிறைய சாலைகள் பழுதுபட்டிருக்கின்றன. இதைச் சீர்செய்வதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கி, சிறப்பு நிதியை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல்; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளுக்கு முறையாக எல்லா அடிப்படை வசதிகளையும் மேம்படுத்த வேண்டுமென்பதற்காக, ஒரு சிறப்புத் திட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதில் ஒன்று; சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்; அதற்காக 500 கோடி ரூபாயில் ஒரு திட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, சென்னை மாநகரைத் தவிர்த்து, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்காக, திட்டத்துட்ட 750 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையிலே உதித்த திட்டம்; நீரினுடைய அவசியத்தை எந்த அரசியல் தலைவரும் உணராத நிலையில், கடந்த 2001-ல் ஆட்சிப் பொறுப்பிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது, மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை இந்த நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்திய சென்னை மாநகராட்சிப் பகுதிகளானாலும் சரி; மற்ற நகரங்களானாலும் சரி; நிலத்துடி நீர் உயர்ந்து, நிலத்துடியிலே இருக்கக்கூடிய தண்ணீரினுடைய தன்மையே மாறியது. இதனைக் கண்டு உலகத்திலே இருக்கின்ற பல தலைவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை, கடந்த ஆட்சியாளர்கள் ஒதுக்கி வைத்துவிட்டார்கள்; ஒதுக்கி வைத்துவிட்டதோடு மட்டுமல்லாமல், அதைக் கவனிப்பார் யாரும் இல்லாமல் இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இன்றிலிருந்து இந்தத் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படும் இது மாநகராட்சிகளானாலும் சரி; நகராட்சிகளானாலும் சரி; பேரூராட்சிகளானாலும் சரி; இந்தத்

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

திட்டத்தை அமல்படுத்தினால்தான், அனுமதி கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை வரும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைத் தொடர்ந்து, நம்முடைய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினுடைய அமைப்பைப் பற்றி இங்கே நான் கூற விரும்புகிறேன். உள்ளாட்சி அமைப்பு முறையை உலகிற்கே அறிமுகப்படுத்திய பெருமை பெற்ற மாநிலமாகத் தமிழகம் திகழ்வதை உத்திரமேரூர் கல்வெட்டின்மூலம் அறியலாம். அதைப்போலவே, இந்திய அரசியலமைப்புச் சட்டம், 73-வது திருத்தத்தின்படி, கடந்த 1994 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை இயற்றி, அதனடிப்படையில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுவதையும், உள்ளாட்சி நிர்வாகத்தில் மகளிருக்கு மூன்றில் ஒரு பங்கு மற்றும் ஆதி திராவிடர், பழங்குடியினருக்கான உரிய ஒதுக்கீட்டினையும் உறுதி செய்திட்ட பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-35

அதோடு, அப்படி ஒரு வாய்ப்பினை தந்திட, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லுகின்ற அதேநேரத்தில், மீண்டும் உள்ளாட்சித் தேர்தல் வரும் அக்டோபர் திங்கள் 24 ஆம் தேதி வர இருக்கிறது. இங்கே, மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்தலைப் பற்றி, தேர்தல் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதைப்பற்றி பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். உள்ளாட்சித் தேர்தல்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்தல்கள், நகரமன்றத் தலைவர் தேர்தல்கள் மற்றும் மாநகராட்சிகளுக்கு நேரடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று இங்கே கூறினார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் மட்டும் உள்ளாட்சித் தேர்தலில் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்க முடியாது. காரணம், அரசியல் சட்டத்திலே, மையரசு சட்டத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இந்தத் தேர்தலை உரிய நேரத்தில், உரிய முறையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிப்பார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் துறையின் சார்பாக . . .

[2011 ஆகஸ்ட் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்கள் அக்டோபர் 24 ஆம் தேதிக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: இந்தத் துறையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். தேர்தல் அறிக்கையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் எல்லா வசதிகளுடன்கூடிய வீடு ஒவ்வொரு ஏழைக்கும் கட்டித் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் "பசுமை வீடுகள் திட்டம்" என்ற பெயரையும் கொடுத்து 300 சதுர அடியில் வீடுகள் கட்டிக் கொடுப்பதாகக் கூறினார்கள். அதை நிறைவேற்றுகின்ற முகத்தான் 3 இலட்சம் ஏழை மக்களுக்கு இந்த வீடுகள் கட்டித் தரப்படும் என்ற உறுதியை புரட்சித் தலைவி அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 3 இலட்சம் வீடுகளை ஆண்டொன்றுக்கு 60 ஆயிரம் வீடுகளாக, ஐந்தாண்டுகளில் கட்டி முடிக்கப்படும் என்று சொல்லி, இதற்காக ரூபாய் 5,400 கோடி ஒதுக்க இருக்கிறார்கள். இந்த ஆண்டு மட்டும் 60 ஆயிரம் வீடுகளுக்கு 1,080 கோடி ரூபாயை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் இங்கேகூட, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்தத் திட்டம் 300 சதுர அடியாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே நான் இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறேன். இந்தப் "பசுமைக் குடில் திட்டம்" மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்த திட்டம். இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் நீண்டகாலமாக இருந்து கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 300 சதுர அடியில், ஒரு நல்ல வரவேற்பறை, ஒரு குளியல் அறை, ஒரு படுக்கை அறை, ஒரு

சமையல் அறை என்று ஒரு வசதி படைத்தவன் எப்படி வாழ்கிறானோ அதேபோல் ஒரு ஏழையும் வாழ வேண்டுமென்பதற்காக இந்தத் திட்டத்தை அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மத்தியிலே ஆட்சியிலே இருக்கின்றவர்களுக்கு இந்தச் சிந்தனை வரவில்லை. அதற்காக நாங்கள் என்ன செய்ய முடியும்? மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொடுத்ததைப்போலவே ஏழை, எளியோர்களுக்கும் இலவசமாக மாடு கொடுத்திருக்கிறார்கள்; ஆடு கொடுத்திருக்கிறார்கள்; குழந்தைகளுக்கு 4 சட்டை கொடுத்திருக்கிறார்கள்; பெண் குழந்தைகளுக்கு சுடிதார் கொடுத்திருக்கிறார்கள். அதைவிட, பசியில்லாமல் இருக்க வேண்டுமென்பதற்காக விலையில்லாத அரிசியை மாதம் ஒன்றுக்கு 20 கிலோ கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு பெரிய உன்னதத் திட்டம்! மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை தமிழக மக்கள் மட்டும்தான் அனுபவிக்கிறார்கள். என்னுடைய ஆசையெல்லாம் "இறைவன் கருணையால் இந்திய துணைக் கண்டத்திலே இருக்கின்ற 110 கோடி மக்களும் இந்தத் திட்டத்தை அனுபவிக்க வேண்டும்". (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் காலம் விரைவில் வரும் என்ற நம்பிக்கையிலே, நான் இந்தக் கருத்தை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். எவ்வளவு பெரிய உன்னதத் திட்டம். ஏதோ ஆட்சிக்கு வந்தோம்; சில திட்டங்களை அறிவித்தோம் என்று சென்றுவிடாமல், இந்தத் திட்டத்தை முன்மாதிரியாக உலக அளவிலே கொண்டுவரலாம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உச்ச நீதிமன்றத்திலே, ஒவ்வொரு மனிதனுக்கும் உணவு கொடுக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்ற நீதிபதி ஒரு உத்தரவைப் பிறப்பித்தார். அந்த உத்தரவு ஒரு பக்கம் இருந்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நான் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றபொழுது, என் மாநிலத்திலே இருக்கின்றவர்கள் யாரும் பட்டினியாக இருக்கக்கூடாது என்பதற்காக இந்தத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—40

பசுமைக் குடில் திட்டம். அதையும் பார்த்தால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழகத்திலே இருக்கின்ற எல்லோருமே இரண்டு கண்கள். இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தில் ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னாலும், அதோடு சேர்ந்து நானும் கூறுகிறேன்.

[திரு. கே.பி. முனுசாமி] [2011 ஆகஸ்ட் 18

33750 ரூபாய் மட்டும்தான் மத்திய அரசு கொடுக்கிறது. நான் கேட்கிறேன், அங்கே நிதி ஒதுக்குகிறார்களே, மையத்திலே ஆட்சியில் இருக்கின்றவர்கள். சற்று சிந்திக்க வேண்டாமா? 33750 ரூபாய் கொடுத்தால் வீடு கட்டிவிட முடியுமா? சிமெண்டினுடைய விலை என்ன? கம்பியினுடைய விலை என்ன? மணல் விலை என்ன? இதையெல்லாம்கூட பரிசீலிக்காமல் ஏதோ ஒரு திட்டத்தைக் கொடுத்தோம், நிதி ஒதுக்குகிறோம் என்ற நிலையில் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், என்ன மாதிரி திட்டத்தைக் கொடுத்தாலும், அந்தத் திட்டத்தை முறைப்படுத்தி, செயல்படுத்தி ஏழை மக்களுக்குக் கொடுக்கக்கூடிய வகையிலே அந்தத் திட்டம் இருக்கும் என்று சொல்லி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 66,250 ரூபாயை சேர்த்துக் கொடுக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே ஒரு கணக்கு சொல்கிறேன், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்த அளவிற்கு இந்த இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்திற்கும் நிதி ஒதுக்குகிறார் என்பதை பசுமைக் குடில் திட்டத்திற்கு 300 சதுர அடி, ஒரு சதுர அடிக்கு 500 ரூபாய்; 300 சதுர அடிக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், முடிந்ததா? அதேபோல, இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்திற்கு (குறுக்கீடு) வருகிறேன், வருகிறேன், அப்புறம் வருகிறேன். சதுர அடிக்கு 500 ரூபாய், 200 சதுர அடி, ஒரு இலட்சம் ரூபாய், முடிந்ததா? வீடு கட்டுவதற்கு உரிய நிதி ஆதாரத்தை 300 சதுர அடிக்கு எவ்வளவு நிதி கொடுக்கிறோமோ அந்த நிதியை இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்திற்குக் கொடுக்கிறார்கள். உடனடியாக, அவர்கள் சிந்தனையில் உதித்தது, சூரிய ஒளியிலே மின்சாரம் வழங்க வேண்டும் என்பதற்காக தனியாக 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்குகிறார்கள். அதனால்தான், ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் இந்தத் திட்டத்திற்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஒரு இலட்சம் ரூபாயும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த அரசும் முயற்சி செய்யாத ஒரு முயற்சி. நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர்கூட ஒரு கருத்தைச் சொன்னார். சூரிய ஒளி சக்தியின்மூலம் தெரு விளக்குகள். ஒரு பெரிய முயற்சி. எப்படி என்று சொன்னால், சூரிய ஒளியிலே மின்சாரத்தை பசுமை வீட்டிற்குக் கொடுப்பதைப் போலவே கிராமங்களிலே, மலைப்

பகுதியிலே இருக்கின்ற அங்கே குடியிருக்கின்றவர்களுக்கு மின்சாரம் கிட்டவில்லை என்று சொன்னாலும்கூட, ஆங்காங்கே இந்த Panel Board–ஐ அமைத்து அவர்களுக்கு சூரிய ஒளியிலே, தெரு விளக்குகளை அமைக்கின்ற ஓர் உன்னதத் திட்டத்தைப் பரிட்சார்த்தமாக தமிழகத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இந்தியத் துணைக் கண்டத்திலே இதை அறிமுகப்படுத்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய தொடக்கமாக இந்த ஆண்டு மட்டும் 20 ஆயிரம் சூரிய ஒளி மின் விளக்குகள் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், கடந்த கால ஆட்சியில் பள்ளிச் சீரமைப்பு என்று சொன்னார்கள். நன்றாகத் தெரியும், இங்கே நிறைய மக்கள் பிரதிநிதிகள் இருந்துகொண்டிருக்கிறோம். கிராமப்புறங்களிலே இருக்கின்றவர்கள் எப்படியெல்லாம் நடந்துகொள்கிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். கடந்த கால ஆட்சியில் பள்ளிச் சீரமைப்பு என்று சொல்லி 10 மூட்டை பவுடர் வாங்கிக்கொண்டு, ஒரு பிரஷ் எடுத்துக்கொண்டு திமுககாரர் போய் வெள்ளை அடித்துவிட்டு, பள்ளியைச் சீரமைத்தாகிவிட்டது என்று சொல்லி காசு வாங்கிக்கொண்டு போய்விடுவான். ஆனால், அது கருணாநிதி ஆட்சிக் காலம். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அவ்வாறு திட்டங்கள் தீட்டப்படவில்லை. மாறாக, ஒரு பள்ளி என்று சொன்னால், அதற்குத் தேவையான உள் கட்டமைப்பு வசதிகள், நல்ல குடிநீர், நல்ல கழிப்பிட வசதி, நல்ல காற்றோட்டமுள்ள கட்டடங்கள் போன்றவற்றைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பள்ளிகளைச் சீரமைக்கக்கூடிய நிலையிலே ஒரு நல்ல திட்டத்தைத் தீட்டி, 5 ஆண்டுகளுக்குள்ளாக தமிழகத்திலே இருக்கின்ற எல்லா நகராட்சி, ஊராட்சிப் பள்ளிகள் அத்தனையும் புதுமைப் பொலிவோடு இருக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–45

அதேபோல, ஒரு புதிய திட்டம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செகு. தமிழரசன் அவர்கள், நம்முடைய

[திரு. கே.பி. முனுசாமி] [2011 ஆகஸ்ட் 18

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருநாமத்தைத் தாங்கி, 'தாய் திட்டம்' என்று இந்தத் திட்டத்தை அறிவித்தால் மகிழ்ச்சியாக இருக்கும் என்று இங்கே சொன்னார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவது எல்லாம், தமிழகத்திலே தாய் என்று சொன்னால், அது புரட்சித் தலைவி மட்டும்தான் தாய் (மேசையைத் தட்டும் ஒலி) என்று எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை இந்திய துணைக் கண்டத்தில் எங்குமே, எந்த மாநிலமும் கொண்டு வரவில்லை. தயவுசெய்து தோழர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. Communism உள்ள மாநிலங்களில் இந்தத் திட்டம் வரவில்லை. Socialist-கள் ஆட்சி நடத்துகின்ற மாநிலங்களிலே இந்தத் திட்டம் வரவில்லை. Capit list-கள் ஆட்சி நடத்தக்கூடிய மாநிலங்களிலே இந்தத் திட்டம் வரவில்லை. மாறாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்கின்ற இந்த மாநிலத்தில்தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) காரணம் பொதுவுடைமை கொள்கை வைத்துக் கொண்டிருக்கின்ற Socialist-களானாலும் சரி குக்கிராமங்களுக்கு அவர்களுடைய சிந்தனை செல்லவில்லை. குக்கிராமங்களுக்கும் சிந்தனையை கொண்டு சென்ற ஒரே தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கால ஆட்சியிலேகூட அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தை அறிவித்து, முன்னாலே இருக்கிற ஊர்களுக்கு மட்டும் அந்தத் திட்டம் வரும். பிரதானமாக அவர்கள் போடுவது சிமெண்ட் ரோடுதான். சிமெண்ட் ரோடு போடுவதில்தான் கமிஷன் அதிகம். இதைப் போட்டு முடித்துவிட்டுப் போய் விடுகிறார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 25 வீடுகள் இருந்தாலும் சரி, அந்த வீடுகளுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர், மின் விளக்கு, அந்த 25 வீடுகளின் சாலைகள் எங்கு துண்டிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தக் கிராமத்திலிருந்து அந்த வீடுகளுக்குச் சாலை அந்த 25 வீடுகளுக்கு வழிபடக்கூடிய மயானம், மிகமிக முக்கியம். (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு பெரிய திட்டம்? இந்தத் திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று அறிமுகம் செய்திருக்கிறார்கள். அறிமுகம் செய்துதோடுமட்டுமல்லாமல், ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக தமிழகத்திலே இருக்கின்ற எல்லா குக்கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும், சாலைகள் இணைக்கப்படும், மின் விளக்குகள் கொடுக்கப்படும், மயானங்கள் ஏற்படுத்தப்படும், அவர்கள் அமைதியான வாழ்க்கையை அனுபவிக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்கிற

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

உத்தரவாதத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நிச்சயமாக இந்த நாட்டு மக்கள் நன்றியோடு இருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, சுகாதார வளாகம். நான் இங்கே ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். பல்வேறு வகைகளில் முன்னேறிய மாநிலமாக தமிழகம் இருக்கிறது. ஆனால், சுகாதாரத்தில் பீஹார் நம்மைவிட முன்னிலையில் இருக்கிறது. இது மறுக்க முடியாத உண்மை. அதைப் புரிந்து கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2001 இல் அனைத்து வசதிகளுடன்கூடிய சுகாதார வளாகத்தை ஒவ்வொரு கிராமத்திலும், ஊராட்சியினுடைய பகுதியிலும் உருவாக்கினார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருமதி வள்ளிமதி அம்மையார், காலைக் கடனை மாலைக் கடனாக மாற்றக்கூடிய அவல நிலைமை இங்கே இருக்கிறது. இதனை மாற்றிக் கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா என்று சொன்னார்கள். அந்தச் சுகாதார வளாகங்களை கடந்த ஆட்சியாளர்கள் கிடப்பில் போட்டு விட்டார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே ஆய்வுக் கூட்டத்தில் கூறினார்கள், மூன்று மாதத்திற்குள்ளாக அனைத்து சுகாதார வளாகங்களையும் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி, என்னுடைய அன்புச் சகோதரிகள் அதனைப் பயன்படுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார்கள். இப்பொழுது 170 கோடி ரூபாய் செலவு செய்து, அந்தத் திட்டத்தை மேம்படுத்துகிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றைத் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். 2001 அன்று நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, ஊரகப் பகுதிகளில், கிராமங்களில், பெண்கள் தங்கள் இயற்கைக் கடன்களைக் கழிக்கவும், குளிக்கவும் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராமங்களிலும் ஊராட்சிகளிலும், சுகாதார வளாகங்கள் அமைப்பது, அதாவது பெண்களுக்கென்றே பிரத்தியேகமான சுகாதார வளாகங்கள் அமைப்பது என்ற ஒரு திட்டத்தை நாங்கள் வகுத்து, ஐந்து ஆண்டுகளுக்குள் செயல்படுத்தி முடித்துவிட்டோம். இந்த

12,618 ஊராட்சிகளிலும் இந்தச் சுகாதார வளாகங்கள் பயன்பாட்டில் இருந்தன. அந்தந்தக் கிராமங்களில் பெண்கள் அனைவரும் அதைப் பயன்படுத்தி, அங்கே கழிவறைகள் இருக்கும், குளியல் அறைகள் இருக்கும், துணிகளைத் துவைப்பதற்கான ஏற்பாடுகள் இருக்கும், தண்ணீர் வசதியும் இருக்கும். இவையெல்லாம் பயன்பாட்டில் இருந்தன. அப்படிப் பயன்பாட்டில் இருந்த சுகாதார வளாகங்களை 2006-ல் ஆட்சிக்கு வந்த திமுக. அப்படியே தொடர்ந்து இருக்கலாம். ஆனால், வேண்டுமென்றே நான் கொண்டு வந்த திட்டம் என்பதற்காக, இதனால் கிராமப் பகுதிகளில் இருக்கிற தாய்மார்கள் சிரமப்படுவார்களே என்பதைக்கூட சிந்திக்காமல், அந்தச் சுகாதார வளாகங்களுக்குத் தண்ணீர் இணைப்பைத் துண்டித்து, அந்தச் சுகாதார வளாகங்களைச் செயல்பட விடாமல், பயன்படுத்த முடியாதபடி செய்து அவற்றையெல்லாம் கிடப்பில் போட்டுவிட்டார்கள். கிடப்பில் போட்டுவிட்டார்கள் என்று சொன்னால் இத்தனை விவரங்களும் புரியாது, அதனால்தான் விவரமாகச் சொல்கிறேன். நல்லமுறையில் செயல்பாட்டிலிருந்த சுகாதார வளாகங்களுக்குத் தண்ணீர் வசதியைத் துண்டித்து, வேண்டுமென்றே அவற்றைப் பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி மீண்டும் தாய்மார்களைச் சிரமப்பட வைத்தார்கள். ஆகவேதான், இந்த முறை ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அத்தனை சுகாதார வளாகங்களையும் புதுப்பித்து, புனரமைத்து 3 மாத காலத்திற்குள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வருகின்ற நல்ல திட்டங்களையெல்லாம் கடந்த ஆட்சியாளர்கள் முடக்கிவிட்டார்கள். எப்படிச் சுகாதார வளாகங்களைச் சீரழித்தார்களோ அதேபோல ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு ஊராட்சியும் தூய்மையான ஊராட்சி என்று வருகின்ற ஊராட்சிகளுக்கு ஒரு நல்ல தூய்மையான கிராம இயக்கம் என்றவொரு இயக்கத்தை உருவாக்கி அதற்கு 5 இலட்சம் ரூபாய் பரிசாகக் கொடுத்து, கேடயத்தை வழங்கி அங்கே வாழ்ந்து

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

கொண்டிருக்கின்ற மக்களுக்கு மேலும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தை கடந்த ஆட்சியாளர்கள் அப்படியே கிடப்பில் போட்டு விட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் கிராமம் சுத்தமாக இருக்க வேண்டியதில்லை. இந்த இயக்கத்தின் சார்பாக அந்த ஊராட்சி எப்படி இருக்க வேண்டும், அந்த விருது எப்படிக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், தூய்மையான தெருக்கள், மழைநீர் சேகரிப்பு, மரங்கள் வளர்த்தல் போன்ற சுற்றுச்சூழலுக்கு வழிவகுக்கும் நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் கிராம ஊராட்சிக்கு 5 இலட்சம் ரொக்கம், பதக்கம் வழங்கப்படும்; இது எவ்வளவு பெரிய திட்டம்? சுத்தமான குடிதண்ணீர், மரம் வளர்த்தல் இப்படி நல்ல அம்சங்களை ஓர் ஊராட்சியிலே கொண்டு வருவார்கள் என்று சொன்னால், அவர்களை மேலும் வேகப்படுத்துவதற்கு, முறையாகச் செயல்படுத்துவதற்கு ஒரு விருதினை ஓர் அரசு கொடுக்கிறது என்று சொன்னால், அடுத்து வருகின்ற அரசு கொடுத்திருக்க வேண்டுமா, வேண்டாமா; கொடுக்கவில்லை. மாறாக அதைக் கிடப்பிலே போட்டுவிட்டது. மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே இந்தத் திட்டம் 10 மாவட்டங்களுக்கு மட்டுமல்ல, 31 மாவட்டங்களுக்கும் அமல்படுத்தப்படும் என்பதை இங்கே அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு மேலாக இங்கே ஒரு கருத்தை நான் பதிய வைக்க விரும்புகிறேன். பொதுவாக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதையும் எதிர்பார்த்துச் செய்யக்கூடியவர் இல்லை. அவர் சித்தனையில் எழுகின்ற கருத்துகளுக்கேற்ப, நல்லது என்று சொன்னால் உடனே செய்துவிடக் கூடியவர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆய்வுக் கூட்டத்திற்கு வருகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி ஒரு கோடியே 75 இலட்சம் என்றிருந்ததை 2 கோடி ரூபாயாகக் கொடுத்துவிடலாமே என்று அவர்களாகவே சொல்லிவிட்டார்கள், யாரும் கேட்காமலேயே. (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சங்க காலத்திலே—ஏனென்றால் சொல்லியாக வேண்டும். சங்க காலத்திலே பரிசுகள் பெறுவதற்காக புலவர்கள் அரசர்களிடம் சென்று பாடல் பாடி, பரிசுகளைப் பெறுவார்கள். அதேநேரத்தில் குறிப்பறிந்து, வேதனையறிந்து, 'நீ பாட வேண்டாம், உன்னுடைய வேதனை தெரிகிறது, எடுத்துச் செல்' என்று சொல்கிற அரசர்களும்

இருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடைவேழு வள்ளல்களில் ஒருவரான பாரி தேரிலே செல்கின்றான். செல்கின்றபோது ஒரு முல்லைக் கொடி ஆடிக் கொண்டிருக்கிறது, சிந்திக்கின்றான். இந்த முல்லைக் கொடிக்கு கொழுகொம்பு இல்லாத காரணத்தினால், அது படருவதற்கு கொழுகொம்பு இல்லாத காரணத்தினால் ஆடிக் கொண்டிருக்கிறது என்பதை குறிப்பறிந்து, தேரில் சென்ற பாரி இறங்கி தேரை கொடியருகே நிறுத்தி, அந்த முல்லைக் கொடியை தேரின்மீது படரவிட்டான். அது அவனுடைய பெருந்தன்மை. அதுபோலத்தான் கடந்த ஆட்சியிலே இருந்த முதலமைச்சர் இந்தச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சட்டசபையிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் புகழ் பாடி, புகழ் பாடி, புகழ் பாடி, கிடைக்குமா, கிடைக்காதா என்று புகழ் பாடியும் (குறுக்கீடு) வெளியிலே புகழ் பாடினாலுங்கூட உள்ளுக்குள்ளே திட்டிக் கொண்டு, இந்தப் பாவியை இவ்வளவு புகழ்கிறோமே, கொடுப்பாரா, கொடுக்க மாட்டாரா என்ற நிலை இருந்த காலம். கடைசியில் கொடுத்த நிதி வெறும் ஐந்து இலட்சம் ரூபாய். கடந்த ஆண்டு கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் கருணாநிதியினுடைய புகழைப் பாடிப் பெற்ற தொகை ஐந்து இலட்சம் ரூபாய். ஆனால் எப்படி பாரி, கொடி அசைகிறது, அது படருவதற்குக் கொழுகொம்பு இல்லையென்று துடித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்தவுடன் தேரைக் கொண்டுபோய் நிறுத்தினானோ, அதைப்போல இந்தச் சட்டமன்றத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குச் செல்லுகின்றபோது அங்கே மக்கள் குறைகளைச் சொல்லுவார்களே, அந்தக் குறைகளை நீக்குவதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய் ஒன்றே முக்கால் கோடியோடு 25 இலட்சத்தையும் கொடுக்கிறேன். மகிழ்ச்சியாகச் சென்று மக்களிடத்திலே நீங்கள் உங்களுடைய பணியை ஆற்றுங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று வாரி வழங்கி இருக்கின்ற இந்தப் பாரி வள்ளலுக்கு உங்கள் அத்தனைபேர் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–55

காரணம், ஒரு சிறுசிறு நிகழ்ச்சியில்தான் அவருடைய அடிமனதில் இருக்கின்ற சிந்தனை நமக்குத் தெரியும். நாம் இப்போது இரண்டு கோடியை வைத்துக்கொண்டு தொகுதிக்குப் போகிறோம். அங்கு மக்கள் இந்த ரோடு போட்டுக் கொடுங்கள், பள்ளிக்குத் தண்ணீர்

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

கொடுங்கள் இன்னும் சில வசதிகளைச் செய்துகொடுங்கள் என்கிறபோது எழுதிக்கொள்ளுங்கள், எழுதிக்கொள்ளுங்கள் என்று சொல்கிறோம். எங்கே எழுதுவது, அம்மா கொடுக்கவில்லையென்றால் எங்கே எழுதுவது? கொடுத்ததினால் மகிழ்ச்சியாக இருக்கிறது. எவ்வளவு பெரிய சிந்தனை! இப்படி வாரி வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதைத் தொடர்ந்து சாலை. பொதுவாக, ஊராட்சியில், ஊரகப் பகுதிகளில் சாலைகள் சரிபாதியாக நிலை குலைந்திருக்கின்றன. கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் அந்த ஆட்சியாளர்கள் எதையுமே செய்யவில்லை. கிட்டத்தட்ட மொத்தமுள்ள 71,433 கிலோ மீட்டர் சாலைகள் 33,014 கிலோ மீட்டர் அதாவது 47 விழுக்காடு சாலைகள் இன்னும் மண், சரளை மண் மற்றும் ஜல்லிச் சாலைகளாகவே இருக்கின்றன. இந்தச் சாலைகளை மேம்படுத்துகின்றவிதத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு பெரும் நிதியைக் கொடுத்திருக்கிறார்கள். ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக எல்லா சாலைகளும் மேம்படுத்தப்பட வேண்டும். இங்கே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். என்னவென்று சொன்னால் National Highways-ல் இருக்கின்ற சாலைகளுடைய தரம், நெடுஞ்சாலையிலே இருக்கின்ற மாநிலச் சாலைகளுடைய தரம், ஊராட்சிச் சாலைகள் என்று வருகின்றபோது அதற்குத் தரம் வருகிறது. அதற்குக் கிட்டத்தட்ட 3 ஆண்டுகளுக்கு, 4 ஆண்டுகளுக்கு மேல் அந்தச் சாலைகள் சரியாக அமைவதில்லை. அவற்றை எந்த வகையிலே மேம்படுத்தக்கூடிய நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்று செல்வி அழகாகச் சொன்னார்கள். சாலைகளில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்கு சைடிலே கால்வாய்களை முழுமையாக அமல்படுத்த வேண்டுமென்று சொல்லி இருக்கிறார். எவ்வளவு பெரிய சிந்தனை என்று பாருங்கள். நமக்கே தெரியாது. நாமே சிலநேரங்களில் செல்ல முடியாது. இப்படி மழைநீரை உடனே வெளியேற்றினால் அந்தச் சாலைகள் சரியாக இருக்கும். எனவே, அதுபோன்ற அமைப்புகளை ஏற்படுத்தி சாலைகளைச் செம்மைப்படுத்துங்கள் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாம் இந்தத் திட்டத்தை முதலிலே நமக்காக வாரி வழங்குகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொகுதியிலிருந்தே ஆரம்பிக்க வேண்டுமென்ற பெரும் அவாவின் காரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீரங்கம் தொகுதியிலேயிருந்து ஆரம்பிக்கப்பட்டு, தமிழகத்திலே இருக்கின்ற எல்லா கடைக்கோடி பகுதிகளுக்கும் இந்தத் திட்டம்

விரிவுபடுத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, கிராமத் தன்னிறைவுத் திட்டம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கூட நான்கில் ஒரு பங்கு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். கடந்த ஆட்சியாளர்கள் இதை வியாபாரமாகச் செய்தார்கள். என்னவென்று சொன்னால், யார் யாரெல்லாம் முடிக்க வேண்டும்? எந்தெந்த ஏழைகளுக்கு இந்த நிதியை ஒதுக்கினால் இலாபம் வரும். இதுதான் முக்கியம். இந்தத் தன்னிறைவுத் திட்டத்தில்கூட முதன்மையானத் திட்டமாக பள்ளிக் கட்டடங்களாக கொடுத்தால்தான் இதற்கு முறையாக வாய்ப்பு இருக்கும். இந்தச் சாலைகளை சிமெண்ட் சாலைகளாகப் போடுவது என்று வந்தால், நிச்சயமாக இது ஒரு வியாபாரப் பொருளாக மாறிவிடும். எனவே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் தன்னிறைவுத் திட்டம் பற்றி ஆய்வுக் கூட்டத்தில் சொல்லுகின்றபோது 50 கோடி என்பதை 100 கோடியாக வைத்துக்கொள்ளுங்கள். எவ்வளவு பெரிய மனசு! (மேசையைத் தட்டும் ஒலி) கிராமத்திலே இருக்கின்றவர்கள் அங்கே இருக்கின்ற ஓர் இடத்தில் ஒரு கட்டடத்தைக் கட்ட வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அவர்கள் மூன்றில் ஒரு பங்கைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: அப்படிக் கொடுக்கின்றவர்களுக்கு அரசு கொடுக்கின்ற நிதி குறைவில்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் 50 கோடியை 100 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதித் திட்டம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதுதான் 2005-இல் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டு ஆறு மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இந்தத் திட்டம் பல்வேறு வகையான

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

விமர்சனங்களுக்கு உட்பட்டாலும்கூட ஏழையெளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய திட்டம். இதை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆட்சியிலே பார்த்திருக்கலாம் என்று சொன்னால், இந்தத் திட்டத்தின் வாயிலாக ஒரு தொழிலாளி 50 ரூபாய், 60 ரூபாய்க்கு மேல் கூலி வாங்கவில்லை-இதை மாற்றி, இந்தத் திட்டத்தின் வாயிலாக ஒரு தொழிலாளிக்கு 119 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று இதிலே சட்டம் இருக்கிறது. அதற்கு என்னென்ன அமைப்புகள், என்னென்ன வகையிலே பணியாற்ற வேண்டுமோ அந்தப் பணிகளைச் செய்வதற்குரிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திக் கொடுங்கள் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு (குறுக்கிடு) ஆம். மூன்றில் ஒரு பங்குதான். குறுக்கிடு இல்லை, இல்லை. மூன்றில் ஒரு பங்குதான். நான்கில் ஒரு பங்கு என்று ஓர் உறுப்பினர் சொன்னார். எந்தெந்தத் திட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டுமோ அப்படிக் கொண்டுவரவேண்டுமென்று சொல்லி கடந்த ஆட்சியில் ஓர் ஊராட்சியில் ஒரு பணிக்கு மேல் எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற நிலைமை இருந்தது. ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பார்த்தார்கள். ஓர் ஊராட்சியில் ஒரு வேலை என்று சொன்னால், எல்லோரும் ஒரே இடத்தில் வருவார்கள். சிலருக்கு வேலை கிடைக்கும், சிலருக்கு வேலை கிடைக்காமல் போய்விடும். அதனால் ஒரு வேலையோடு கூடுதலான வேலை, வேறு பகுதிகளிலும் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்த உத்தரவின் அடிப்படையிலே ஓர் ஊராட்சியில் இரண்டு இடங்களில், மூன்று இடங்களில்கூட பணியை மேற்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, நம்முடைய சுனாமி (சிரிப்பு) நம்முடைய சுனாமி நிவாரணத் திட்டங்கள். இதிலே வேதனையாக இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலிருந்தபோது இந்த ஆழிப் பேரலை தமிழகத்தையே எடுத்து விழுங்கியது. தமிழகம் மட்டுமல்ல, உலக மக்கள் அனைவருமே வேதனைக் கடலிலே இருந்த நேரம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துணிவோடு எழுந்து நின்று, அடுத்த நிமிடமே பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று, ஒரு வார காலத்திற்குள்ளாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய துயரங்களைப் போக்கி அமைதியான வாழ்க்கை வாழ்வதற்குரிய ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

[திரு. கே.பி. முனுசாமி] [2011 ஆகஸ்ட் 18

அப்படி ஏற்படுத்திக் கொடுத்த பின்பு, ஆட்சிக்கு வந்த முன்னாள் ஆட்சியாளர்கள் என்ன செய்தார்கள் என்று சொன்னால், இவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலக வங்கியின் சார்பாக கிட்டத்தட்ட 14,385 வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று 2009-இல் நிதி ஒதுக்கப்பட்டது. 2009-இல் ஒதுக்கப்பட்ட இந்த நிதி—இன்றுவரை வேதனையான ஒரு செய்தி, மிகப் பெரிய அளவிலே பேசிக்கொள்கின்ற முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி, இந்தத் துறையினுடைய முன்னாள் அமைச்சர் முக. ஸ்டாலின் இங்கே இருந்திருந்தால் இதற்கு அவர்கள் பதில் சொல்லியிருப்பார்கள். இதற்கெல்லாம் பதில் சொல்லக்கூடிய ஒரு நிலைமை வந்துவிட்டால் என்ன சொல்வது என்பதற்காகவேதான், ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி இந்த அவையைவிட்டு ஓடி இருக்கிறார்கள். 2009இல் கொண்டுவரப்பட்ட திட்டம் உலக வங்கியிலேயிருந்து நிதி ஒதுக்கி 14,385 வீடுகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கொண்டு வந்த திட்டத்தில் கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் ஒருவருக்குக்கூட வீடு ஒதுக்கப்படாத நிலைமை இருக்கிறது என்று சொன்னால், இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே அவர்கள் என்ன ஆட்சி செய்தார்கள்? இதை ஆய்வு செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக இன்னும் மூன்று, நான்கு மாதங்களுக்குள்ளாக அனைவருக்கும் வீடு கிடைக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

அதைப்போல நம்முடைய இந்த சுனாமி. (சிரிப்பு) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'நம்முடைய சுனாமி' என்று சொல்லியிருக்கிறார்கள். 'நம்முடைய சுனாமி' அல்ல.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மன்னிக்க வேண்டுகிறேன். ஏனென்று சொன்னால் அது வழக்குச் சொல். நான் சில நேரங்களில், கிராமத்தில் பேசுகின்றபொழுது, எனக்கு இயற்கையாக வருகின்ற சொல் இங்கே வந்து விட்டது. மன்னிக்க வேண்டுகிறேன்.

பிற்பகல் 2-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியின்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்பட்டவிதம் பற்றி உலகத் தலைவர்கள் எல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். 'பிட்ஸ்' என்ற உலக நிறுவனம், மாண்புமிகு அம்மா அவர்களைப் பெரிதாகப்

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

பாராட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டுவதற்குக் காரணம், இதிலே பாதிக்கப்பட்டது ஒரு மாநிலம் மட்டும் அல்ல. இந்தோனேஷியா பாதிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. பிலிப்பைன்ஸ் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாடுகளெல்லாம் மாதக் கணக்கிலானாலும்கூட அங்கு நிவாரணத்தைக் கொடுக்க முடியவில்லை. இலங்கை மிகப் பெரிய பாதிப்பிற்கு உள்ளானபின்பு, எப்படியெல்லாம் இந்த நிவாரணத்தைச் செய்கின்றார்கள் என்பது தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை அந்த நாடு அணுகியபோது இங்கேயிருந்து 2 அதிகாரிகளை அனுப்பி, அந்த நிவாரணப் பணிகளை எப்படிச் செய்ய வேண்டுமென்ற வழிமுறைகளைச் சொல்லி, அங்கு நிவாரணத்தை ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் எவ்வளவு பெரிய விஷயம்! (மேசையைத் தட்டும் ஒலி)

பல்வேறு வகைகளிலே முன்னணியிலே இருக்கின்ற அமெரிக்காவை உலக வல்லரசு என்று சொல்கிறார்கள், விஞ்ஞானபூர்வமாக முதன்மையிலே இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். 'கேத்ரினா' புயல் வந்தது. மாதக் கணக்கிலே அங்கே இருந்தவர்கள் சடலங்களை எடுக்க முடியாமல் இருந்த அவல நிலை. இங்கேதான் பார்க்க வேண்டும். நாட்டிலே விஞ்ஞானம் முக்கியமா அல்லது ஒரு தனி மனிதனுடைய சிந்தனை முக்கியமா என்று பார்க்கின்றபோது, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மனித நேயம்மிக்க சிந்தனைதான் முக்கியம் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், அந்த உத்வேகம், செய்ய வேண்டும், அவர்களுக்கு உதவ வேண்டும், அவர்களைக் காப்பாற்ற வேண்டும், அவர்களைக் கைதூக்கிவிட வேண்டும் என்ற அந்த உத்வேகம்தான் இன்றைக்கு தமிழகத்திலே இவ்வளவு பெரிய வெற்றியைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, இங்கே பணியாளர்களைப் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறீர்கள். கிட்டத்தட்ட 6,124 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முறையாக இந்தப் பணியாளர்களுக்கு வாய்ப்பு கொடுக்கின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கே கூறியிருக்கின்றார்கள்.

[திரு. கே.பி. முனுசாமி] [2011 ஆகஸ்ட் 18

அதோடு புது வாழ்வுத் திட்டம். உலக வங்கியின் சார்பிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆட்சியில் இருந்தபோது, இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது 15 மாவட்டங்களில் 2,509 கிராம ஊராட்சிகளில் உள்ள 5.8 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன்பெறும் வகையிலே இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. மீண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு, 9.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மேலும் 10 மாவட்டங்களில் 1,661 ஊராட்சிகளில் 3.8 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன்பெறுகின்ற வகையிலே இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு புதிய திட்டங்களை, புதிய அறிவிப்புகளை அறிவிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் நல்லாசியோடு, ஆணையோடு இந்த அறிவிப்புகளை இ வெளியிடுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அறிவிப்புகளை பொறுத்தவரையில் அவையிலே படித்ததாகக் கருத வேண்டுமென்று சொல்லிவிட்டால் அவைக்குறிப்பிலே அவை பதியப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புத்தகங்களில் இருக்கின்ற அறிவிப்புகளைப் படித்ததாகக் கருதி பதிவு செய்வதாக உத்தரவிட்டிருக்கிறீர்கள். இந்தப் புத்தகத்தில் இல்லாத ஒரு அறிவிப்பை நான் இப்போது பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்பு மழை நீர் சேகரிப்புத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 2001 முதல் 2006 வரையிலான கழக அரசில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டது. விரிவாக்கப்பட்டது. அப்போது ஓர் அரசாணையே

---

[1] 19—8—2011 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அவையில் படிக்கப்பெற்றது.

2011 ஆகஸ்ட் 18] [திரு. கே.பி. முனுசாமி]

பிறப்பித்திருந்தோம். புதியதாக ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்றால், அந்த பில்டிங் பிளானில், மழைநீர் சேகரிப்பதற்கான ஓர் அமைப்பு இருப்பதை அந்தப் பிளானிலேயே வரைந்து காட்ட வேண்டும். அப்போதுதான் அந்தக் கட்டடத்தைக் கட்ட, வீட்டைக் கட்ட, அலுவலகக் கட்டடத்தைக் கட்ட அனுமதி வழங்கப்படும் என்று தெளிவான அரசாணை இருந்தது. அதன் பின்னர், 2006 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அதை அப்படியே கைவிட்டுவிட்டார்கள். ஆகவே, இப்போது பேசுகின்றபோது மாண்புமிகு அமைச்சர் முனுசாமி அவர்கள் குறிப்பிட்டது என்னவென்றால், இனிமேல் மழைநீர் சேகரிப்பிற்கான ஓர் ஏற்பாடு இருந்தால்தான் கட்டடத்திற்கு அனுமதி வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலை வரும் என்றார்கள். இது ஏற்கெனவே, இருந்த ஓர் ஆணை, ஆனால் அது தி.மு.க. அரசால் கைவிடப்பட்டது. ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரை, இனிமேல் எந்தக் கட்டடத்தை யார் கட்ட விரும்பினாலும் மழைநீர் சேகரிப்பிற்கான ஓர் ஏற்பாட்டை அந்த பிளானில் சேர்த்தால்தான் அவர்களுக்கு அந்த அனுமதி வழங்கப்படும் என்று அரசு ஆணை மீண்டும் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2—10

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 34. (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல அறிவிப்புகள். இந்த நல்ல அறிவிப்புகளைப் படித்ததாக அவைக் குறிப்பிலே ஏற்கச் சொல்லியிருக்கிறீர்கள். நன்றி. மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு வகையிலே வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களுக்கு உரிய பதிலை நான் அளித்திருக்கிறேன் என்று கருதுகிறேன். அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது தங்களுடைய தொகுதிகளுக்கானப் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக்

[திரு. கே.பி. முனுசாமி] [2011 ஆகஸ்ட் 18

கோரிக்கைகளில் கிட்டத்தட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சாலை வசதி போன்றவற்றை எல்லாம் கேட்டிருக்கிறார்கள். அதற்கும் இந்த அவையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்ல கருத்துகளை அளித்திருக்கிறார்கள் என்று இந்த நேரத்திலே கூறி, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(ஈ) கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை எண் 34-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,087,07,19,000/–, மூலதனக் கணக்கில் ரூ.3,195,52,19,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.381,06,29,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

2011 ஆகஸ்ட் 18] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

(உ) கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை எண் 42–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,200,30,39,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,950,01,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 19–8–2011 (வெள்ளிக்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2011 ஆகஸ்ட் 18,

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

27. யாதொரு வணிகர், தொழிற்சாலையின் சொந்தப் பயனுக்காக மின் உற்பத்தி சாதனங்கள்மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்வதில் பயன்படுத்துவதற்காக, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள தொழிலக நுகர்வோருக்கு விற்பனை செய்கிற எரியுலை எண்ணெய் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு மற்றும் கால அளவிற்கு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2)த் துறையின் 5-10-2010 ஆம் நாளிட்ட 169 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

28. மானியக் கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

29. மானியக் கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

30. வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

31. தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

32. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

இணைப்பு I

(57ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012

முன்னுரை

2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 48.45 சதவீதம் மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்வதால் தமிழ்நாடு மிகுந்த நகர்மயமான மாநிலமாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டின் 7.21 கோடி மக்கள் தொகையில் 3.50 கோடி மக்கள் தற்போது நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். தமிழ்நாடு அடுத்த இரு பத்தாண்டுகளில் நகர்மயமாதலில் முன்னிற்கும். வேகமான நகர்மயமாக்கல் பெரும் பொருளாதாரத் தேவைகளையும், அதே சமயம் பெரும் வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளது. சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் பொருளாதார ரீதியான வாய்ப்புகள் சென்றடைய நகர்ப்புறப் பகுதிகளில் நிலையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் அவசியமாகும்.

திருவாளர்கள் மெக்கன்ஸி குளோபல் நிறுவனம், தனது நகர்ப்புற இந்தியா (2010) குறித்த ஆய்வறிக்கையில், 70 சதவீத புதிய வேலைவாய்ப்புகள் நகரங்களில் உருவாகும் என மதிப்பிட்டுள்ளது. நமது மாநிலம் பொருளாதார ரீதியிலான வாய்ப்புகளை முழுமையாக அடைய வேண்டுமெனில், நகர்ப்புறப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்திட வேண்டும். இதன்மூலம் பொது மற்றும் தனியார்த் துறைகள் முன்னேறவும், வளர்ச்சி அடையவும் இயலும். நகர்ப்புற உட்கட்டமைப்பின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, தொலைநோக்குப் பார்வையுடன், அயராது உழைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு சென்னைக்கும் அதன் புறநகர் பகுதிகளுக்குமென "சென்னை பெருநகர் வளர்ச்சித்

[2011 ஆகஸ்ட் 18

திட்டம்" ஒன்றையும், பிற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கென, "ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்" என்ற இரண்டு சிறப்புத் திட்டங்களை அறிவித்துள்ளது. இத்திட்டங்களின் நோக்கங்களை நிறைவேற்றிடும் வகையில், மத்திய அரசு மற்றும் பிற வெளிநாட்டு நிதி ஆதாரங்களைத் திரட்டிட ஆரம்பகட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் செயலாக்கம்மூலம், மாநிலத்தில் தன்னிறைவு பெற்ற நகரங்களை உருவாக்குவதுடன் அனைத்து சமூகத்தினரையும் ஒரே மாதிரியாகத் திட்ட பயன்கள் சென்றடையும் இலக்கினையும் எட்ட இயலும்.

வேகமாக நகரமயமாகும்போது, நகர்ப்புற ஏழ்மையும் அதிகரிக்கும் என அரசு உணர்ந்துள்ளது. இதற்குத் தீர்வு காணும் வகையில், நகர்ப்புற ஏழைகளுக்கு பல்வேறு சேவைகளை ஒருங்கிணைத்து இலக்குடன்கூடிய அணுகுமுறையை அறிமுகப்படுத்த உள்ளது.

நகரமயமாக்கல், பல இலட்சகணக்கான மக்களுக்கு குடிநீர் வழங்குதல் மற்றும் பாதுகாப்பாக கழிவுநீர் அகற்றுதல் ஆகிய பணிகளில் சவால்களை உருவாக்கியுள்ளது. இதனை எதிர்கொள்ளும் வகையில் புதிய குடிநீர் ஆதாரங்களை உருவாக்கவும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை வலுப்படுத்தவும், கடல் நீரைக் குடிநீர் ஆக்குவது உள்ளிட்ட நீர் நிலைகளை மேம்படுத்துவது ஆகியவற்றை உள்ளடக்கிய உறுதியான திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. தற்போது, மாநிலத்தில் பாதாளச் சாக்கடை அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நகரங்களில் மட்டுமே உள்ளன. புதிய உத்திகளைக் கையாள்வதன்மூலம் மாநிலத்தின் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் பாதாளச் சாக்கடை அமைப்புகள் படிப்படியாக ஏற்படுத்துவதே இவ்வரசின் நோக்கமாகும்.

அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் குப்பைகளை சேகரித்து பாதுகாப்பாக வெளியேற்றுதல் உள்ளிட்ட இடக்கழிவு மேலாண்மைப் பணி ஒரு சவாலாகவே உள்ளது. எனவே, இதனை எதிர்கொள்ளும்

2011 ஆகஸ்ட் 18]

வகையிலும், மண்டல அளவில் அறிவியல் ரீதியான திடக்கழிவு கட்டமைப்புகளை உருவாக்கி ஒரு முழுமையான வழிமுறையுடன்கூடிய செயல்திட்டம் தயாரிக்கப்படும்.

தற்போது, மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 10 சதவீதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. 4—வது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் விரைவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இப்பரிந்துரைகளின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களை மேலும் மேம்படுத்தும் வழிமுறைகளை அரசு பரிசீலிக்கும்.

மாநிலத்தின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை மேம்படுத்துவதும், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கடமையாகும்.

அரசின் நோக்கங்களை நிறைவேற்றும் பணியில் இத்துறையில், சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் பேரூராட்சிகள் இயக்ககம் ஈடுபட்டுள்ளன. சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகிய வாரியங்கள் மாநிலத்தின் உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர்த் திட்டம் மற்றும் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பிலுள்ளன. திருப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் பொது மக்கள் மற்றும் தொழில் துறையினருக்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளை அளிக்கும் பொறுப்பில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இவை தவிர, தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் ஆகிய இரண்டு நகர்ப்புற நிதி நிறுவனங்கள் நகர்ப்புற நிதி அளித்தல் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு நிதியினை பெற உரிய வழிகாட்டுதலை உருவாக்குவதில் முன்னோடியாகத் திகழ்கின்றன. இந்நிறுவனங்கள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், உட்கட்டமைப்பு வசதி

[2011 ஆகஸ்ட் 18

மேம்பாட்டிற்கான மத்திய அரசு, வெளிநாட்டு நிதி ஆதாரம் மற்றும் நிதிச் சந்தையிலிருந்து நிதி பெற்றிட உதவுகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், உள்ளாட்சிகளை ஆளும் திறன் கொண்ட தன்னிறைவு பெற்ற நிறுவனங்களாக மேம்படுத்துவதே இவ்வரசின் நோக்கமாகும். நகர்ப்புற ஆளுமையை நன்கு வழிநடத்த சிறந்த பயிற்சி பெற்ற பணியாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் தேவை என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. இதற்காக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை மிகச் சிறந்ததாக ஆக்குவதற்கு இவ்வமைப்பில் செயல்படுவோரின் திறன் மேம்பாட்டினை உயர்த்தும் நடவடிக்கைகளை இவ்வரசு செம்மைப்படுத்தி வலுப்படுத்தும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 ஆகஸ்ட் 18]

I. நகராட்சி நிருவாகம்

நகர்ப்புற வசிப்பிடங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தி மக்கள் சிறப்பாக வாழ தகுதியான சூழ்நிலையை ஏற்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நகர்ப்புற வறுமையானது வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளது. அரசு தற்போது பல்வேறு கொள்கைகளை வகுத்து மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல, பல்வேறு உள்கட்டமைப்பு வளர்ச்சிகள் மேற்கொள்வது உட்பட பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பாதாள சாக்கடைத் திட்டம், மழைநீர் வடிகால் திட்டம், சாலை மேம்பாட்டுப் பணிகள், பேருந்து நிலையங்கள், குடிநீர் வசதிகள், குடிசை வீடுகளை மேம்படுத்துதல் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கு குடியிருப்புகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்களை உலக வங்கி உதவியுடன் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—III, மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் மற்றும் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி போன்ற வெளிநாட்டு நிதி ஆதாரங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிருவாக அமைப்பு

நகராட்சி நிருவாக ஆணையரகத்தின்கீழ் 9 மாநகராட்சிகள் மற்றும் 12 மூன்றாம் நிலை நகராட்சிகள் உட்பட 150 நகராட்சிகளும் உள்ளன. நகராட்சிகளின் நிலை ஆண்டு வருவாய் / மக்கட் தொகை அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன.

வ. எண்	நிலை	ஆண்டு வருவாய் (ரூபாய் கோடியில்)	நகராட்சிகளின் எண்ணிக்கை
1	சிறப்பு நிலை	10.00 மேல்	22
2	தேர்வு நிலை	6.00–10.00	35
3	முதல் நிலை	4.00–6.00	36
4	இரண்டாம் நிலை	4.00 கீழ்	45
5	மூன்றாம் நிலை	மக்கள் தொகை 30,000 மேல்	12
	மொத்தம்		150

[2011 ஆகஸ்ட் 18

உட்கட்டமைப்பு வசதிகள்

மக்கள் வேலைவாய்ப்புக்காக அருகில் உள்ள நகரங்களுக்கு அதிக அளவு இடம்பெயர்வதால் நகரங்கள் அதிவேக வளர்ச்சியடைந்து வருவதால் இவற்றுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டியது அவசியமாகின்றது. இந்நகரங்களில் குடிநீர் வசதிகள், கழிவு நீர் வசதிகள், திடக்கழிவு மேலாண்மை வசதிகள், சாலை வசதிகள் மற்றும் தெரு விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மாநிலத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த "ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்" என்ற திட்டத்தினை துவங்கி உள்ளது. இத்திட்டத்திற்காக மாநில அரசு ரூ.750 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. வளர்ச்சி இலக்கை அடைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், மத்திய அரசு நிதி மற்றும் வெளிநாட்டு நிதி உதவித் திட்டங்கள்மூலம் கிடைக்கும் நிதியாதாரத்தைப் பெற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு இயக்கம்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு இயக்கம், பெருநகரங்களிலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசால் துவங்கப்பட்டது. தமிழநாட்டில் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாநகரங்கள் திட்ட செயலாக்க நகரங்களாகும்.

(1) நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுமை

(அ) மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சியில், 1. இரண்டாம் வைகை குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், 2. திடக்கழிவு மேலாண்மை, 3. மழை நீர் வடிகால் அமைத்தல், 4. பாதாள சாக்கடைத் திட்டம், 5. வைகை ஆற்றின் குறுக்கே மூன்று இடங்களில் தடுப்பணைகள் கட்டுதல் போன்ற ஐந்து திட்டங்களுக்கு ரூ.732.32 கோடி மதிப்பீட்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களில் மழைநீர் வடிகால் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதர பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2011 ஆகஸ்ட் 18]

(ஆ) மதுரை மாநகருக்கு தொகுப்புப் பகுதி அருகிலுள்ள நகர்ப்புற தொகுப்புப் பகுதி

மதுரை மாநகருக்கு அருகிலுள்ள நகராட்சிகளுக்கு ரூ.129.04 கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்)
1	திருமங்கலம் குடிநீர்த் திட்டம்	68.13
2	அவனியாபுரம் குடிநீர்த் திட்டம்	60.91
	மொத்தம்	129.04

(இ) கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சியில் இடக்கழிவு மேலாண்மை, இரண்டாவது பில்லூர் குடிநீர்த் திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் மழை நீர் வடிகால் ஆகிய 4 திட்டங்களுக்கு ரூ.767.38 கோடி மதிப்பீட்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இடக்கழிவு மேலாண்மைத் திட்டம் விரைவில் முடிவடையும் நிலையில் உள்ளது. மற்ற பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

(ஈ) சென்னை பெருநகருக்கு அருகிலுள்ள நகர்ப்புற பகுதிகள்

சென்னை பெருநகருக்கு அருகிலுள்ள நகராட்சிகளுக்கு 13 திட்டங்களுக்கு ரூ.1,180.27 கோடி மதிப்பீட்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)
1	தாம்பரம் நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்	32.62
2	தாம்பரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	160.97
3	ஆவடி நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்	103.84
4	ஆவடி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	158.05

5	மதுரவாயல் நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்	23.30
6	மதுரவாயல் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	57.46
7	உள்ளகரம்–புழுதிவாக்கம் நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்	24.24
8	உள்ளகரம்–புழுதிவாக்கம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	28.08
9	அம்பத்தூர் நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்	267.08
10	அம்பத்தூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	130.91
11	ஆலந்தூர் நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்	64.39
12	திருவொற்றியூர் நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்	85.12
13	ஒருங்கிணைந்த வேங்கடமங்கலம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை பல்லாவரம், ஆலந்தூர் மற்றும் தாம்பரம் நகராட்சிகளில் செயல்படுத்துதல்	44.21
	மொத்தம்	1,180.27

தாம்பரம் நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் முடிவடைந்துள்ளது. இதர பணிகளின் செயலாக்கம் பல்வேறு நிலைகளில் உள்ளன.

சீர்திருத்தங்கள்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, மாநில அரசுகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு துணை அமைப்பு முகமைகள் கட்டாயச் சீர்திருத்தங்கள் மற்றும் விருப்பச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த சீர்திருத்தங்கள் மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்தப்படுகின்றன.

2011 ஆகஸ்ட் 18]

மாநில அளவிலான சீர்திருத்தங்கள்

மாநில அளவில் கீழ்க்கண்ட கட்டாயச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன:

வ. எண்	சீர்திருத்தங்கள்	குறிப்பு
1	74-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தில் கண்டுள்ள அதிகாரப் பகிர்வாக்கலைச் செயல்படுத்துவது	18 செயல்பாடுகளில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி தவிர இதர 17 செயல்பாடுகள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்பட்டுள்ளன மாவட்டத் திட்டக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு பெருநகர திட்டக்குழு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
2	நகரமைப்பு சார்ந்த பணிகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுதல்	நகரமைப்பு பணிகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்பட்டு வருகின்றன.
3	நகர்ப்புற நில உச்ச வரம்பு மற்றும் வரன் முறைச் சட்டத்தை நீக்குதல்	நகர்ப்புற நில உச்ச வரம்பு மற்றும் வரன்முறைச் சட்டம், 1978 விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.
4	பொது மக்களுக்குத் தகவல் தருவதற்கான சட்டத்தை ஏற்படுத்துதல்	நிறைவேற்றப்பட்டுள்ளன. தமிழ்நாடு நகராட்சி சட்டம், (இரண்டாம் திருத்தம்) 2008-ல் திருத்தம் செய்யப்பட்டு, பொது வெளியீடுகள் விதிகள் (தமிழ்நாடு சட்டம் 37/2008) செப்டம்பர்-1, 2009 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
5	வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்ட திருத்தம்	அரசின் பரிசீலனையில் உள்ளது.
6	பொதுமக்கள் பங்களிப்புச் சட்டம் இயற்றுதல்	சட்ட மசோதா அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான விதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
7	முத்திரை வரியை 5% ஆகக் குறைத்தல்	அரசின் பரிசீலனையில் உள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அளவிலான சீர்திருத்தங்கள்

1	சொத்து வரி வசூலை திறம்பட மேம்படுத்துதல்	இலக்குகள் அடையப்பட்டுள்ளன.
2	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இரட்டைக் கணக்கீட்டு முறையினை செயல்படுத்துதல்	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இயல்பு நிலைக் கணக்கீட்டு முறை (Accrual Based Accounting System) செயல்பட்டு வருகிறது.
3	நிலம் (ம) சொத்துக்களைப் பதிவு செய்யும் முறையில் கணினி முறையைப் புகுத்துதல்	நிறைவேற்றப்பட்டுள்ளன.
4	மின் ஆளுமையை (e Governance) நடவடிக்கைகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைமுறைப்படுத்துதல்	நிறைவேற்றப்பட்டுள்ளன. 16 தொகுப்புச் சேவைகள் (modules) கணினிமயமாக்கப்பட்டுவிட்டன.
5	நகர்ப்புற ஏழை மக்களுக்கு 25 சதவீத நிதியினை அடிப்படை வசதிகளுக்காக உள் ஒதுக்கீடு (Internal earmarking) செய்தல்	அரசாணை எண் 187, நிதி(வ)துவ துறை, நாள் 15-4-2008-ல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களிலிருந்து குறைந்த பட்சம் 25 சதவீதம் நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகளுக்கு ஒதுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

2011 ஆகஸ்ட் 18]

விருப்பச் சீர்திருத்தங்கள்

1	அனைத்துக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிக்கும் வசதி ஏற்படுத்துதல்	நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகள் 1972–ன் பிரிவு 3ஏ–ன்படி அனைத்துக் கட்டடங்களிலும் மழை நீர் சேமிப்பு வசதி ஏற்படுத்த கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
2	கழிவுநீரைச் சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்துதல்	நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகள் 1972–ன் பிரிவு 17ஏ–ன்படி கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு மறுபயன்பாட்டிற்கு வழிவகைச் செய்யப்பட்டுள்ளது.
3	நிருவாக அமைப்பில் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல்	நிறைவேற்றப்பட்டுள்ளன.
4	நலிவடைந்த மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு மானிய உதவி முறையில் 20–25 சதவீத அளவிற்கு மனைகள் ஒதுக்கீடு செய்தல்	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் நலிவடைந்த மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு ஏற்கெனவே 40 சதவீதம் அளவிற்கு மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுவருகிறது. நகர வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளின்படி குறைந்தது 10 சதவீதம் மனைகள் நலிவடைந்த மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.
5	பொது மற்றும் தனியார் பங்களிப்பு மூலம் (PPP) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்களை செயல்படுத்துதல்	திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், தெருவிளக்குகளைப் பராமரித்தல், நீரேற்றும் நிலையம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய பராமரிப்புப் பணிகள், வாகனங்களை வாடகைக்கு எடுத்தல் போன்ற பணிகள் இதில் அடங்கும். இதற்காக அரசின் நிதித் துறையின்கீழ் பொதுமக்கள் தனியார் பங்களிப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இச்சீர்திருத்தங்களை அமல்படுத்த அரசு உறுதி கொண்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

(II) சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் ஆளுமைக்கான துணைத் திட்டத்தின்கீழ் வராத நகரங்களில் செயல்படுத்தப்படுகிறது. குடிநீர் விநியோகம், சாலைகள் மற்றும் வடிகால்கள், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம், பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) மூலம் வாகனங்கள் நிறுத்தும் இடங்களை மேம்படுத்துவது மற்றும் பழமை வாய்ந்த இடங்களை மேம்படுத்துதல் மற்றும் நீர்நிலைகளை மேம்படுத்துதல் போன்ற நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	திட்டத்தின் பெயர்	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்)	திட்டங்களின் எண்ணிக்கை	
				எடுத்துக் கொள்ளப்பட்டவை	முடிவுற்றவை
1	பகுதி I				
	சாலை மற்றும் வடிகால்	13	59.83	270	266
	குடிநீர் விநியோகம்	10	90.24	10	9
2	பகுதி II				
	சாலை மற்றும் வடிகால்	3	9.58	197	197
	குடிநீர் விநியோகம்	6	28.41	6	3
	திடக்கழிவு மேலாண்மை	1	3.58	1	1

	பாதாள சாக்கடைத் திட்டம்	1	3.75	1	0
3	பகுதி III				
	குடிநீர் விநியோகம்	5	192.66	5	5
4	பகுதி IV				
	குடிநீர் விநியோகம்	4	39.45	4	0
	பாதாள சாக்கடைத் திட்டம்	1	39.33	1	0
5	பகுதி V				
	குடிநீர் விநியோகம்	1	7.16	1	0
	பாதாள சாக்கடைத் திட்டம்	1	27.50	1	0
	மொத்தம்	**46**	**501.51**	**497**	**481**

நடைபெற்று வரும் மீதமுள்ள பணிகளை, மார்ச்—2012-க்கு முன்னர் முடிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனுடன், ரூ.227.40 கோடி மதிப்பீட்டில் 8 குடிநீர்த் திட்டங்களும், ஒரு பாதாள சாக்கடைத் திட்டமும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இதற்காக மத்திய அரசின் முதல் தவணைத் தொகை எதிர்பார்க்கப்படுகிறது.

நகர்ப்புற ஏழைகளுக்கான வீட்டு வசதி

நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு இயக்கத்தின் முக்கிய துணை இயக்கங்களாகும். நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய பெருநகரங்களிலும் மற்றும் அந்நகரங்களைச் சுற்றியுள்ள நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளிலும் செயல்படுத்தப்படுகிறது.

நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்

[2011 ஆகஸ்ட் 18

முக்கிய நோக்கம் தெரிவு செய்யப்பட்ட நகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு பணிகளான குடிநீர் வசதி, பாதாள சாக்கடை வசதி, மழைநீர் வடிகால், தெரு விளக்குகள், குடிசைப் பகுதி மக்களுக்கு பல்நோக்கு சமுதாயக் கூடம் மற்றும் குழந்தை பாதுகாப்பகம் போன்றவை உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்வதாகும். சமூகப் பொருளாதாரத்தினை மேம்படுத்துதல், கல்வி, சுகாதாரம் மற்றும் சமுதாய பாதுகாப்பு ஒருங்கிணைத்தலும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம்

தமிழ்நாட்டிற்கு 2005—2012 ஆண்டு வரையிலான இலக்க காலத்திற்கென நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டத்தின்கீழ் ரூ.2,327.30 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் மத்திய நிதியுதவி ரூ.1,041.79 கோடியாகும்.

அனுமதிக்கப்பட்டுள்ள 9,138 அலகுகளில், இதுவரை 7,627 அலகுகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அலகுகளை திட்டக் காலத்திற்குள் முடிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எடுத்துக்கொள்ளப்பட்ட 3,194 உட்கட்டமைப்பு பணிகளில் 2,398 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இத்திட்டத்தை செவ்வனே செயல்படுத்துவதற்கு, ஒரு திட்ட மேலாண்மை அலகு நகராட்சி நிர்வாக ஆணையரகத்திலும் மற்றும் 10 திட்ட செயலாக்க அலகுகள் பல்வேறு திட்ட செயலாக்க முகமைகளுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டம் (IHSDP)

நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற நகரங்கள் அல்லாத ஏனைய உள்ளாட்சி அமைப்புகளில் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் எடுத்துக்கொள்ளப்படாத நகரங்களில் ரூ.515.88 கோடி செலவில் 84 திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட 37,588 அலகுகளில், 21,228 அலகுகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அலகுகள் முன்னேற்ற நிலையிலுள்ளன. எடுத்துக்கொள்ளப்பட்ட 1,969

2011 ஆகஸ்ட் 18]

உட்கட்டமைப்பு பணிகளில் இதுவரை 1,599 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

குடிநீர்த் திட்டங்கள்

பல்வேறு நிதி நிறுவனங்களின் நிதி ஆதாரத்தைக் கொண்டு, பின்வரும் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்டங்களின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்)
1	தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III	8	390.57
2	நகர்ப்புற அடிப்படை கட்டமைப்பு மற்றும் ஆளுமைக்கான துணை இயக்கம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்)	13	931.36
3	சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்)	26	357.94
4	ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் (JICA)	6	338.71
5	ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW)	8	187.55
	மொத்தம்	61	2,206.13

மேற்காண் குடிநீர்த் திட்டங்களில், பின்வரும் திட்டப் பணிகள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வ. எண்	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பெயர்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்)	தற்போதைய நிலை
1	மதுரை மாநகராட்சி	நகர்ப்புற அடிப்படை கட்டமைப்பு மற்றும் ஆளுமைக்கான துணை இயக்கம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்)	71.23	பணி முடிவடைந் துள்ளது
2	பொடிநாயக்க னூர் நகராட்சி	தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்– III	2.32	பணி முடிவடைந் துள்ளது
3	பொள்ளாச்சி நகராட்சி	தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்– III	3.64	பணி முடிவடைந் துள்ளது
4	கோபிசெட்டி பாளையம் நகராட்சி	தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III	4.05	பணி முடிவடைந் துள்ளது
5	தேவக்கோட்டை நகராட்சி	சிறிய மற்றும் நடுத்தர நகரங் களுக்கான நகர உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டம்	0.30	பணி முடிவடைந் துள்ளது
6	கரூர் நகராட்சி	சிறிய மற்றும் நடுத்தர நகரங் களுக்கான நகர உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டம்	1.10	பணி முடிவடைந் துள்ளது

7	தஞ்சாவூர் நகராட்சி	சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டம்	9.04	பணி நடைபெற்று வருகிறது
8	கோயம்புத்தூர் மாநகராட்சி	நகர்ப்புற அடிப்படை கட்டமைப்பு மற்றும் ஆதரவைக்கான துணை இயக்கம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்)	113.74	பணி நடைபெற்று வருகிறது
9	ஈரோடு மாநகராட்சி	சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்)	5.88	பணி நடைபெற்று வருகிறது
10	திருநெல்வேலி மாநகராட்சி	ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW)	22.22	பணி நடைபெற்று வருகிறது
11	திருச்சிராப்பள்ளி மாநகராட்சி	ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் (JICA)	221.42	பணி நடைபெற்று வருகிறது
12	சேலம் மாநகராட்சி	தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்III	283.09	பணி நடைபெற்று வருகிறது
	மொத்தம்		743.03	

[2011 ஆகஸ்ட் 18

குடிநீர் அளவு மற்றும் தரம் குறித்த அளவுகோல்களை தொலையுணர்வுமூலம் கண்காணித்தல்

குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் பெறும் அளவு, மோட்டார் மற்றும் பம்புகளின் செயல்திறன் மற்றும் குடிநீரின் பௌதிக மற்றும் வேதியியல் தரத் தன்மைகளை அறிய கணினிமூலம் தேவையான பகுதிகளை ஒருங்கிணைத்து விவரங்களைச் சேகரித்துக் கண்காணிக்கும் முறையை (SCADA) திருநெல்வேலி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டு அதில் திருநெல்வேலி மாநகராட்சியில் பணிகள் முடிவுற்று பயனிலுள்ளது. இதர பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஏற்கெனவே உள்ள குடிநீர்த் திட்டங்களைப் புனரமைத்தல்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், ஏற்கெனவே உள்ள குடிநீர்த் திட்டங்களை புனரமைத்தலுக்காக அரசால் விரிவான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, கலந்தாலோசகர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். முதற்கட்டமாக, 54 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், குடிநீர் திட்டங்களின் புனரமைப்புப் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

நகர்ப்புற சாலைகள்

9 மாநகராட்சிகள் மற்றும் 150 நகராட்சிகளில் 18,112 கி.மீ. சாலைகள் உள்ளன. உள்ளாட்சி அமைப்புகளால் 4,158 எண்ணிக்கையிலான 1,826 கி.மீ. நீளச் சாலைப் பணிகளை ரூ.650 கோடி செலவில் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் 3,067 பணிகள் முடிவுற்றுள்ளன. 1,091 பணிகள் நடைபெற்று வருகின்றன.

பாதாள சாக்கடைத் திட்டம்

பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் தேசிய நதி நீர்ப் பாதுகாப்புத் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—III, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதியம் மற்றும் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி ஆகியவற்றின் நிதி ஆதாரங்களைக் கொண்டு செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2011 ஆகஸ்ட் 18]

47 நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 12 நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 35 நகரங்களில் இத்திட்டம் பல்வேறு செயலாக்க நிலைகளில் உள்ளன.

பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 11 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், 2011 ஆம் ஆண்டிலும், 6 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2012 ஆம் ஆண்டிலும், 18 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2013 ஆம் ஆண்டிலும் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மீதமுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் படிப்படியாக பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது.

திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மை உள்ளாட்சி அமைப்புகளின் அத்தியாவசியப் பணி என்பதால் அரசு "நகராட்சி திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள் 2000-ஐ செயல்படுத்திட அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள், நாமக்கல் நகராட்சி மற்றும் ஆலந்தூர், பல்லவபுரம் மற்றும் தாம்பரம் நகராட்சிகளுக்கென வேங்கடமங்கலத்திலும் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டங்களுக்கு மொத்தம் ரூ.218.59 கோடி வழங்கப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் நில நிரப்பு கிடங்கு வசதிகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மேம்படுத்தலும், உயர்த்தலும், திடக்கழிவுகளை ஆரம்ப நிலையிலேயே பிரித்து சேகரித்திட தகவல், கல்வி, தொடர்புமூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் அரசின் கொள்கையாகும்.

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (SJSRY)

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் 50 ஆவது இந்திய சுதந்திர தினத்தையொட்டி 01-12-1997 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் 75 சதவீதம் மத்திய அரசு நிதியுதவியுடனும் 25 சதவீதம் மாநில அரசு நிதியுதவியுடனும்

[2011 ஆகஸ்ட் 18

செய்யப்பட்டு வரும் திட்டமாகும். இத்திட்டம் முந்தைய நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டங்களான நேரு ரோஜ்கார் யோஜனா திட்டம், பிரதம மந்திரி ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் இவற்றை ஒருங்கிணைத்த திட்டமாகும்.

2011—12 ஆம் நிதியாண்டில் மத்திய அரசின் பங்கு ரூ.63.46 கோடியும், தமிழக அரசின் பங்குத் தொகையாக ரூ.21.15 கோடியும் ஆக மொத்தம் ரூ.84.61 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதிய வழிகாட்டி நெறிமுறைகளின்படி 1.4.2009 முதல் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (SJSRY) முற்றிலுமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. பொன்விழா நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் ஐந்து முக்கிய கூறுகள் பின்வருமாறு:-

(i) நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம் (USEP)

நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள், நகர்ப்புறத்தில் உள்ள ஏழைகளுக்கு குறுந்தொழில்மூலம் சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதுடன் வருமானம் தரக்கூடிய சுய வேலைவாய்ப்பு ஆரம்பிக்க தனி நபர் கடன்/ மானிய உதவித் திட்டம், நகர்ப்புற ஏழைகள் தயாரிக்கும் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவதற்காக அவர்களுக்கு தொழில்நுட்பம் / சந்தை / அடிப்படை வசதி மற்றும் பிற உதவிகள் அளிப்பது ஆகும். நடப்பாண்டில் இத்திட்டத்தின்மூலம் ரூ.15.56 கோடியில் 5,200 நகர்ப்புற ஏழைகள் பயனடைவர்.

(ii) நகர்ப்புற ஏழை மக்களிடையே வேலைவாய்ப்பு வசதிகளை மேம்படுத்தும் திறன் பயிற்சித் திட்டம் (STEPUP)

இப்பயிற்சி திட்டத்தின்கீழ், நகர்ப்புற ஏழை மக்கள் சுய வேலைவாய்ப்புத் தொழில் அமைப்பதற்கும் அல்லது பாதுகாப்பான வருமானத்தோடுகூடிய கூலி வேலைவாய்ப்பினை பெறுவதற்கும் பல்வேறு சேவை, வியாபாரம் மற்றும் உற்பத்தி தொழில்களோடு உள்ளூர் கைத்தொழில்களில் பயிற்சி வழங்கப்படும். அதன்மூலம் நகர்ப்புற பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடுதல் இதன்

2011 ஆகஸ்ட் 18]

நோக்கமாகும். இத்திட்டத்தின்மூலம் ரூ.23.35 கோடியில் 21,000 பேர் பயனடைவர்.

(iii) நகர்ப்புற பெண்களுக்கான சுய உதவித் திட்டம் (UWSP)

இந்தத் திட்டம் (1) நகர்ப்புற பெண்கள் குழுவிற்கு வருமானம் ஈட்டக்கூடிய சுய வேலைவாய்ப்பின்மூலம் சுய தொழில்களை ஏற்படுத்த கடன் மற்றும் மானியம் வழங்குதல் மற்றும் (2) நகர்ப்புற ஏழை பெண்களால் அமைக்கப்பட்ட 'சுய உதவிக் குழுக்களுக்கு, சேமிப்பு மற்றும் கடன் சங்கங்களுக்கு சுழல் நிதி வழங்குதல் போன்றவற்றிற்காக உருவாக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு துணைத் திட்டங்களுக்கு நடப்பாண்டில் ரூ.15.57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 7,000 நகர்ப்புற குழுக்கள் பயனடையவர்.

(iv) நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டம் (UWEP)

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனப் பகுதிகளில் உள்ள வறுமை கோட்டிற்குக்கீழ் வாழும் பயனாளிகளின் உழைப்பை பயன்படுத்தி சமூகம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் உள்ள பொது சொத்துகளை உருவாக்குவதாகும். 5 இலட்சம் மக்கள் தொகைக்குக் குறைவாக உள்ள (1991 கணக்கெடுப்பின்படி) அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 60:40 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் பொருட்கள் மற்றும் பயனாளிகளின் உழைப்பையும் கொண்ட திட்டம் ஆகும். சமுதாய மேம்பாட்டு சங்கங்களால் பணிகள் அடையாளம் காணப்படுகின்றன. இத்திட்டத்திற்கு ரூ.15.57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(v) நகர்ப்புற சமுதாய மேம்பாட்டு கூட்டமைப்பு (UCDN)

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் சமுதாய மேம்பாடு மற்றும் ஆற்றல் அளிப்பதற்கு ஆதாரமாக உள்ளது. இத்திட்டம், மேலிருந்துகீழ் அணுகுமுறை என்ற மரபு சார்ந்த முறையை அமல்படுத்துவதைக் காட்டிலும், சமுதாயம்

[2011 ஆகஸ்ட் 18

சார்ந்த அமைப்புகளை மேம்படுத்துவதன் வழியாக நகர்ப்புற வறுமையை நிரந்தரமாக தீர்க்க வழி வகுக்கும். அண்டை வீட்டுக் குழு, அண்டை வீட்டுக் கமிட்டி, சமுதாய மேம்பாட்டுச் சங்கம் போன்ற சமுதாயம் சார்ந்த அமைப்புகள் இத்திட்டத்தின்மூலம் நிரந்தர சமுதாயம் சார்ந்த அமைப்புகளாக செயல்படும். சமுதாயம் சார்ந்த அமைப்புகள், அப்பகுதி மேம்பாட்டிற்கான சரியான திட்டங்களைத் தேர்வு செய்யும் பெண்கள் சங்கத்தினை, மேம்படுத்துவதே இச்சமுதாயம் சார்ந்த அமைப்பின் முக்கிய செயல்பாடாகும். இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.7.78 கோடி சமுதாய குழுக்கள் அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள மூன்று அடுக்கு சமுதாய மேம்பாட்டுச் சங்கங்கள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:

சமுதாய குழு விவரங்கள்	அண்டை வீட்டுக் குழுக்கள்	அண்டை வீட்டுக் கமிட்டிகள்	சமுதாய மேம்பாட்டுச் சங்கங்கள்
	80,956	9,364	780

நகர்ப்புற ஏழைகள்

விரைவான நகர்ப்புறமயமாதல் காரணமாக நகர்ப்புற ஏழ்மை நிலை கணிசமான அளவில் உயர்ந்து கொண்டிருக்கிறது. நகர்ப்புற பகுதிகளில் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்பு என்ற பெரியதொரு திட்டம் செயல்படுத்தப்பட்டு அதன்மூலமாக 65,061 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

2004 ஆம் ஆண்டு கடைசியாக வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. புதியதாக வறுமை கோட்டிற்குகீழ் உள்ளவர்களின் கணக்கெடுப்பு எடுப்பதற்கு இவ்வாண்டு மத்திய அரசால் அறிவுரைகள் வழங்கப்படவுள்ளன. கணக்கெடுப்பு முடிந்த உடன் நகர்ப்புற ஏழை மக்களை குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு விதமான சேவைப் பணிகள் ஒருங்கிணைக்கப்படும்.

2011 ஆகஸ்ட் 16]

வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்கள்

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் (JCA)

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வசதிகள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்களை ரூ.3447.0 கோடி நிதியினை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனம் மூலம் பெற்று செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கடன் நிதியாக ரூ.198.25 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் மூலதன மானியமாக ரூ.84.98 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்கொள்ளப்பட்ட 6 குடிநீர்த் திட்டப் பணிகளில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் குடிநீர்த் திட்டப் பணி முடிவடையும் நிலையிலும் இதரப் பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையிலும் உள்ளன.

ஜெர்மன் மேம்பாட்டு வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் (KfW)

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வசதிகளை மேம்படுத்த தமிழ்நாடு அரசு ரூ.500 கோடி அளவிலான நிதியுதவியினை ஜெர்மன் மேம்பாட்டு வங்கியிடம் உதவி பெற்று செயல்படுத்த உத்தேசித்தது. இத்திட்டத்தின்கீழ் 8 குடிநீர்த் திட்ட பணிகள், 3 மழைநீர் வடிகால் பணிகள், 2 பாதாள சாக்கடைத் திட்ட பணிகள் ரூ.500.08 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பண்ருட்டி நகராட்சி மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மழை நீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டு மற்ற பணிகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III

அரசால், அரசாணை (நிலை) எண் 55, நகர்ப்புற துறை நாள் 29.04.2005—ல் வழங்கப்பட்ட, திருவாக அனுமதியின் அடிப்படையில் மாநிலத்தின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக,

[2011 ஆகஸ்ட் 18

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III, உலக வங்கியின் உதவியுடன் ரூ.1996.0 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், நிலையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையான நிதியினை வழங்குவதற்காக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தினை நிதி இடையீட்டாளராக மேம்படுத்துதல், நகர்ப்புற சீர்திருத்தங்களைப் பலப்படுத்துதல், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-II-ன்கீழ் அடைத்த சாதனைகளை ஒருங்கிணைத்தல் ஆகியன இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—III—ன் உட்கூறுகளுக்கான நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:

உட்கூறு		மறுகட்டமைப்புக்குப் பின் நிதி ஒதுக்கீடு			
		மொத்தத் தொகை	வங்கி நிதி	மொத்தத் தொகை	வங்கி நிதி
		(அமெரிக்க மில்லியன் டாலர்)		(ரூ. கோடியில்)	
அ	நிறுவன வளர்ச்சிக் கூறு				
அ1	நகராட்சிப் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்	8.85	6.90	40.70	31.70
அ2	தகவல் மற்றும் பரிமாற்றத் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல்	4.30	4.20	19.80	19.30
அ3	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் கடன் கண்காணிப்புப் பிரிவு அமைத்தல்	0.30	0.25	1.40	1.20
அ4	திட்டத் தயாரிப்பு வசதி	8.00	1.10	36.80	5.10

2011 ஆகஸ்ட் 18]

அ5	திட்ட மேலாண்மை மற்றும் கூடுதல் இயக்கத் தொகை	3.55	2.55	16.30	11.70
	உள் கூட்டுத் தொகை (அ)	25.00	15.00	115.00	69.00
ஆ	தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின்மூலம் நகர்ப்புற முதலீடு (TNUDF)				
ஆ1	(க) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு களுக்கு கடன்	181.00	125.00	832.60	575.00
	(ங) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு களுக்கு மூலதன மானியம்	176.50	112.50	811.90	517.50
	(ச) திட்ட மேம்பாட்டிற்கான ஆலோசனை வசதி	9.00	9.00	41.40	41.40
ஆ2	(க) போக்குவரத்துத் திட்டங்களுக்காக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் திற்கு மானியம்	38.00	34.00	174.80	156.40
	(ங) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் / நெடுஞ் சாலைத் திட்ட மேலாண்மை, கூடுதல் இயக்கத் தொகை	3.00	3.00	13.80	13.80
	உள் கூட்டுத் தொகை (ஆ)	407.50	283.50	1,874.50	1,304.10
	மொத்தம் (அ + ஆ)	432.50	298.50	1,989.50	1,373.10
	நுழைவுக் கட்டணம்	1.50	1.50	6.90	6.90
	மொத்தத் திட்ட மதிப்பு	434.00	300.00	1,996.40	1,380.00

[2011 ஆகஸ்ட் 18

செயல் திறனை மேம்படுத்துதல்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கட் பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணித்திறன், மேலாண்மை மற்றும் தொழில்நுட்பத் திறன் ஆகியவற்றை மேம்படுத்தத் தேவையான பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதே இந்த உட்கூறின் நோக்கம் ஆகும். இதனையடுத்து பணித்திறன் மேம்பாட்டுக்கென பல்வேறு பயிற்சிகள், ஆய்வரங்கங்கள், பயிலரங்குகள், கல்வி சுற்றுலாக்கள் மற்றும் சான்றிதழ் பயிற்சிகள், முதுநிலை பட்டயப் பயிற்சி போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. 31.07.2011 அன்றுள்ள நிலவரப்படி 64 பயிற்சித் திட்டங்கள் வாயிலாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 6,300 தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும், 11,203 அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—III—ன் திட்டக் காலத்தில் 64 பயிற்சித் திட்டங்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் செலுத்தப்பட்டு வரும் வருடாந்திர பங்குத் தொகையினைக் கொண்டு செயல்பட்டு வரும் ஒரு தனித்தன்மை வாய்ந்த நிறுவனமாகும். நகர்ப்புற மேலாண்மை, நகர்ப்புற மேம்பாடு ஆகியவை குறித்த தகவல்களை, பயிற்சி திட்டங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றின்மூலமும், ஆராய்ச்சி படிப்புகள் மற்றும் நகர்ப்புற மேலாண்மை குறித்த பொருட்கள் சம்பந்தமாக கலந்தாய்வுப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலமும் பரப்புவது இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். கோயம்புத்தூரில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்துடன் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் இணைந்து நகர்ப்புற நிதிக் கணக்கு மற்றும் மேலாண்மை என்ற முதுநிலைப் பட்டயப் படிப்பினையும் நடத்தி வருகிறது. மேலும் 2011—2012-ல் முதுநிலை பட்டயப் படிப்பாக திடக்கழிவு மேலாண்மையையும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வரும் காலத்தில் இவ்வாறான முதுநிலைப் பட்டயப் படிப்பினை பல்வேறு நகராட்சிப் பகுதிகளில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2011 ஆகஸ்ட் 18]

நிதி மேலாண்மை

மாநில நிதிக் குழு மானியம்

மாநிலத்தின் சொந்த வரி வருவாயிலிருந்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வினைத் தீர்மானிக்க அரசு ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை மாநில நிதிக் குழு ஒன்றினை அமைக்கிறது. மூன்றாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைக் காலம் 31.3.2012 உடன் முடிவடைகிறது. தற்போது மாநிலத்தின் சொந்த வரி வருவாயிலிருந்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்ற நிதிப் பகிர்வு 10 சதவிதமாக உள்ளது.

13—ஆவது மத்திய நிதிக்குழு பரிந்துரைகள்

13-வது மத்திய நிதிக்குழு தமிழகத்திலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2010—2011 ஆம் ஆண்டு முதல் 2014—2015 ஆம் ஆண்டு வரை மானியங்கள் அனுமதிக்க மத்திய அரசுக்கு கீழ்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளது:

		(ரூபாய் கோடியில்)
1	அடிப்படை மானியம்	1,550.97
2	செயல்பாட்டு மானியம்	820.25
	மொத்தம்	2,371.22

அரசு மேற்கண்ட மானியத்தைப் பயன்படுத்துவது குறித்து கீழ்க்கண்ட வழிமுறைகள் வழங்கியுள்ளது.

1 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைமுறையில் துவங்கப்பட்ட குடிநீர்த் திட்டப் பணிகளுக்கான பங்குத் தொகை மற்றும் / அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அல்லது சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் மேற்கொள்ளப்படும் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டப்பணிகளுக்கான பங்குத் தொகைக்கு செலவிடப்பட வேண்டும். (நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதிமூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது.)

[2011 ஆகஸ்ட் 18

2 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் செலுத்தப்படும் மின் கட்டணம்.

3 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அல்லது சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியத்திற்கு செலுத்தப்படும் தண்ட வட்டியில்லா தொகை மட்டும்.

4. திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளுக்காக தனியார் மூலம் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளுக்கான தொகை.

அரசு, 2011-2012 ஆம் ஆண்டிற்கு ரூ.184.25 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

மழைநீர் சேகரிப்பு

மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு திட்டம் ஜூலை 2003-ல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களை ஈடுபடுத்தி, மாநிலம் முழுவதும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள், திறந்தவெளி பூங்கா மற்றும் சாலைகள் போன்ற இடங்களில் மழைநீர் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. மேற்கண்ட தீவிர முயற்சிகள்மூலம் நிலத்தடி நீர்மட்டம் (2 மீட்டர் முதல் 3 மீட்டர்) மாநிலத்தின் பெரும்பாலான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் கணிசமாக உயர்ந்தது. அரசின் கொள்கையின்படி, அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் மழைநீர் சேகரிக்கும் அமைப்புகள் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. பழுதாகியுள்ள அமைப்புகளை அறிந்து சீர் செய்ய நடவடிக்கை எடுக்கவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சி கட்டட விதிகள், 1973-ல் உரிய சட்டத் திருத்தங்கள் மேற்கொண்டு, புதியதாகக் கட்டப்படும் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. இதற்கான விழிப்புணர்வு அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தொடர்ந்து ஏற்படுத்தப்படும்.

தெரு நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டம்

வெறி நாய்களால் ஏற்படும் தொந்தரவு மற்றும் நாய் கடியினால் ஏற்படும் நோயினையும் கட்டுப்படுத்த, கடந்த காலத்தில் நாய்கள்

2011 ஆகஸ்ட் 18]

கொல்லப்பட்டன. நாய்கள் கொல்லப்படுவதைத் தடுப்பதற்கான மாற்று வழியாக, தெரு நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டத்தை உலக சுகாதார நிறுவனம் பரிந்துரை செய்தது. இதனைத் தொடர்ந்து 1960 ஆம் ஆண்டு பிராணிகள் வதைத் தடுப்பு சட்டத்தின் பிரிவு 38 உட்பிரிவு 1 (ற)-ன்கீழ் 2001 ஆம் ஆண்டு பிராணிகள் (நாய்கள்) கருத்தடை அறுவை சிகிச்சை விதிகளை மத்திய அரசு வெளியிட்டது.

புதிய முயற்சிகளை செயல்படுத்துவதில் முன்னோடியான தமிழ்நாடு அரசு, தெரு நாய்கள் மற்றும் வீட்டு நாய்களின் எண்ணிக்கையைக் கண்டறிய மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் கணக்கெடுப்பு நடத்தியது. கணக்கெடுப்பின் அடிப்படையில், முதற் கட்டமாக இத்திட்டத்தை செயல்படுத்த 5 மாநகராட்சிகள் மற்றும் 50 நகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, இத்திட்டம் இதர நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதுவரையில் 1,20,769 தெரு நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் செலவிட்ட மொத்த தொகையில், 50% தொகை (ரூ.115 கோடி) திரும்பப் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற சுகாதார மையங்கள்

தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் தற்போது மிகச் சிறிய அளவிலேயே ஆரம்ப மருத்துவ வசதிகள் உள்ளன. இதில் பெரும்பாலான நகர்ப்புற சுகாதார மையங்களில் சுகாதார செவிலியர்கள் மற்றும் மகப்பேறு உதவியாளர்களை கொண்டும், சில மையங்களில் மருத்துவ அலுவலர்களைக் கொண்டும் பகல் நேரத்தில் மட்டுமே இயங்கி வருகின்றன. 60 நகராட்சிகளில், தேசிய ஊரக நல இயக்கத்தின்கீழ் (National Rural Health Mission) நகர்ப்புற சுகாதார மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள அனைத்து நகர்ப்புற சுகாதார மையங்களையும் முழு நேரமும் இயங்கும் மையங்களாக மேம்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

மதுரை மாநகராட்சி

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் 65 திட்ட செயலாக்க நகரங்களுள் மதுரை மாநகராட்சியும் ஒன்றாகும். நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் ஆளுமைக்கான துணை இயக்கத்தின்கீழ், மதுரை மாநகராட்சியில் 5 பெரிய உட்கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீடு (ரூ. கோடியில்)
1	இரண்டாம் வைகை குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்	71.23
2	வைகை ஆற்றின் குறுக்கே மூன்று இடங்களில் தடுப்பணைகள் கட்டுதல்	9.15
3	திடக்கழிவு மேலாண்மை	74.29
4	பாதாள சாக்கடைத் திட்டம்	229.34
5	மழை நீர் வடிகால் அமைத்தல்	348.31

மெகா சுற்றுலா திட்டத்தின்கீழ் மதுரை மாநகராட்சியில் கீழ்க்கண்ட சுற்றுலா உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன.

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீடு (ரூ.கோடியில்)
1	வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் அடிப்படை வசதிகளுடன்கூடிய சுற்றுலா வளாகம் கட்டுதல்	4.72
2	வரவேற்பு மையம், வந்து சேரும் மையம், ஓய்வு அறை, தானியங்கி பணம் எடுக்கும் மையம் மற்றும் மற்ற வசதிகளுடன்கூடிய மையம் கட்டுதல்	0.91

3	மீனாட்சி அம்மன் கோயில் உட்புறம் உள்ள புதுமண்டபத்தில் உள்ள கடைகளுக்கு பதிலாக குன்னத்தூர் வளாகத்தில் புதிய சுற்றுலா வசதிகள் கொண்ட வளாகம் கட்டுதல்	3.48
4	மீனாட்சி அம்மன் கோயில் சுற்றுப்புறங்களை ஒளிரச் செய்தல்	0.43
5	மீனாட்சி அம்மன் கோயிலுக்கருகிலுள்ள மீனாட்சி பூங்காவை மேம்படுத்துதல், சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் விரிவுபடுத்துதல்	0.35
6	சுற்றுலா தலமான வரலாற்றுச் சிறப்புமிக்க விளக்குத் தூணுக்குச் செல்லும் வழியில் வசதிகள் செய்தல்	0.29
7	புராதன பாரம்பரிய சர்க்கியூட் திட்டத்தின்கீழ் மதுரை கோட்டைச் சுவரை மேம்படுத்துதல்	0.75
8	வார்டு எண் 52–ல் உள்ள மாரியம்மன் கோயில் தெப்பக்குளத்தைச் சுற்றிலும் அழகுபடுத்துதல்	2.75
9	ஏற்கெனவே உள்ள மாநகராட்சி பூங்காவில் நீரூற்று, கிராணைட்டினால் ஆன உட்காரும் பலகைகள், பெயர் பலகை, மின்விளக்கு அமைத்தல், ஆகியவற்றின்மூலம் திருமலை நாயக்கர் மஹால் துளசிராம் பூங்காவில் சிறப்பு மேம்பாட்டு பணிகள் செய்தல்	0.21
10	திருமலை நாயக்கர் மஹாலின் தென்கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளைச் சுற்றிலும் உள்ள திறந்த வெளியில் நடைபாதை மற்றும் புல்வெளிகள் அமைத்தல்	0.84
	மொத்தம்	14.73

[2011 ஆகஸ்ட் 18

கோயம்புத்தூர் மாநகராட்சி

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் செயலாக்க நகரங்களுள் கோயம்புத்தூர் மாநகராட்சியும் ஒன்றாகும். நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் ஆளுமைக்கான துணை இயக்கத்தின் கீழ், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பெரிய உள்கட்டமைப்பினை மேம்படுத்தும் திட்டங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

வ.எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீடு (ரூ.கோடியில்)
1	இரண்டாவது பில்லூர் குடிநீர் திட்டம்	113.74
2	திடக்கழிவு மேலாண்மை	96.51
3	பாதாள சாக்கடைத் திட்டம்	377.13
4	மழை நீர் வடிகால் அமைத்தல்	180.00

திருநெல்வேலி மாநகராட்சி

திருநெல்வேலி மாநகராட்சியில் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.22.22 கோடிக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்ட நிதியின்கீழ் ரூ.52 கோடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந்துவிட்டன. பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளால் சேதமடைந்த சாலைகளை சிறப்பு சாலைத் திட்டத்தில் ரூ.25.23 கோடியில் சீரமைக்க எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2011 ஆகஸ்ட் 18]

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிகள் ரூ.24.30 கோடியில் 164 கி.மீ. நீளத்திற்கு ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியுதவியின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

ஒரு புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஐப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் நிதியில் ரூ.221 கோடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

சேலம் மாநகராட்சி

சேலம் மாநகராட்சியில் கீழ்க்கண்ட மூன்று பணிகள் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—3 ன்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீடு (ரூ.கோடியில்)
1	திருமணிமுத்தாற்றில் வெள்ளத் தடுப்புப் பணி	32.00
2	பாதாள சாக்கடைத் திட்டம்	149.00
3	தனிக்குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	283.00

மேற்கண்ட பணிகள் பல்வேறு செயலாக்க நிலைகளில் உள்ளன.

[2011 ஆகஸ்ட் 18

ஈரோடு மாநகராட்சி

ஈரோடு மாநகராட்சியில் ரூ.588 கோடிக்கு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நிதியின்கீழ் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. பாதாள சாக்கடைத் திட்டம், ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியின்கீழ் ரூ.209 கோடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சி

ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் திருப்பூர் மாநகராட்சியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிகள் ரூ.40 கோடியில் 164 கிலோமீட்டர் நீளத்திற்கு கட்டப்பட்டு வருகிறது. தற்போது இப்பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—3-ன்கீழ் ரூ.80 கோடிக்கு பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வேலூர் மாநகராட்சி

வேலூர் மாநகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 3-ன்கீழ் ரூ.41 கோடிக்கு பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

II. சென்னை மாநகராட்சி

இந்தியாவின் நான்காவது பெருநகரமான சென்னை மிகவும் செயல்பாடுடையதாகவும், பாரம்பரியமும் தொன்மையும் அதே நேரத்தில் புதுமையும் ஒருங்கே சேர்ந்த பழமைமாறா நவீன துடிப்புடன் காணப்படுகிறது. இந்தியாவில் முதன்முதலில் தோன்றிய அமைப்பான சென்னை மாநகராட்சி நான்கு நூற்றாண்டுகள் தொன்மையானதும், 1921 ஆம் ஆண்டில் 7150 சதுர கிலோ மீட்டரும் தற்போது 174 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் கொண்டு விரிவடைந்துள்ளது. சென்னை மாநகராட்சி, சென்னை மாநகர மாநகராட்சி சட்டம் 1919—ன்மூலம் அதன் அடிப்படை அதிகாரங்களைப் பெற்றதாக இருக்கிறது.

2011 ஆகஸ்ட் 18]

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் மூலமாக அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்:

சென்னை மாநகரின் மழைநீர் வடிகால்வாய்கள், கால்வாய்கள் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள்.

(அ) சென்னை மாநகராட்சியின் திட்டப் பணிகள்:

சென்னை மாநகரில் மழைநீர் வடிகால்வாய்களை மழைநீர் செல்ல ஏதுவாக அமைப்பதும், பராமரிப்பதும் சென்னை மாநகராட்சியின் பொறுப்பாகும். சென்னை நகரில் வெள்ள மீட்பு நடவடிக்கையாக சென்னை மாநகராட்சியும் பொதுப் பணித் துறையும் ஒருங்கிணைந்து ரூ.1,448 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெறப்பட்டது.

மத்திய அரசின் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் நான்கு நீர்தேக்கப் பகுதிகளுக்கு அளித்த அனுமதியின் விவரம் கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

வ. எண்	நீர்த் தேக்கப் பகுதியின் பெயர்	சென்னை மாநகராட்சி பங்கு	பொதுப் பணித் துறை பங்கு	ஒப்பளிப்புத் தொகை	மத்திய அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட நாள்
1	வடக்கு	277.17	82.69	359.86	19.12.08
2	மத்திய	261.11	83.89	345.00	29.12.08
3	கிழக்கு	140.40	303.67	444.07	14.01.09
4	தெற்கு	136.20	162.78	298.98	22.01.09
	மொத்தம்	814.88	633.03	1447.91	

இத்திட்டத்திற்குத் தேவைப்படும் மொத்தத் தொகையில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு 3.5 சதவீதம் ரூ.28.5.25 கோடியாகவும், மாநில அரசின் நிதி ஒதுக்கீடு 1.5 சதவீதம் ரூ.122.2.5 கோடியாகவும் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் துறையின் நிதி ஒதுக்கீடு 50 சதவீதம் ரூ.407.44 கோடியாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சிக்கான ரூ.407.44 கோடி பங்குத் தொகையை, தமிழ்நாடு

[2011 ஆகஸ்ட் 18

நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு நிறுவனம் (TUFIDCO) மூலம் ரூ.203.72 கோடியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) மூலம் ரூ.150 கோடியும் கடனாகப் பெறப்படும். மீதமுள்ள ரூ.53.72 கோடி சென்னை மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் சென்னை மாநகராட்சியால் மழைநீர் தேங்கும் மற்றும் மழைநீர் வடிகால்வாய்கள் இல்லாத இடங்களில் 290 கி.மீ. நீளத்திற்கு புதிய மழைநீர் வடிகால்வாய்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும், 183 கி.மீ. நீளத்திற்கு தற்போதுள்ள மழைநீர் வடிகால்வாய்களை மாற்றி மீண்டும் கட்டுதல், 29 கி.மீ. நீளமுள்ள 16 நீர்வழிக்கால்வாய்களை மேம்படுத்துதல் போன்ற பணிகளுக்காக ரூ.815 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் 4 நீர்தேக்கப் பகுதிகளில் 12 நீர்ப்பிடிப்பு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 17 தொகுப்புகளாக ஒப்பங்கள் கோரப்பட்ட விவரம் கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

வ. எண்	பணியின் வகை	மதிப்பீட்டு தொகை (ரூபாய் கோடியில்)	ஒப்பு உடன்படிக்கையின் படி பணி முடிவுறும் நாள்	தற்போதைய நிலை
1	கொளத்தூர் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி	25.53	27.12.11	பணி நடைபெறுகிறது
2	வேளச்சேரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி	47.52	20.10.12	பணி நடைபெறுகிறது
3	வடக்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி	20.50	06.07.12	பணி நடைபெறுகிறது
4	மத்திய பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி	47.17	17.05.12	பணி நடைபெறுகிறது

5	மாம்பலம் நந்தனம் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி	121.53	21.01.13	பணி நடை பெறுகிறது
6	இராயபுரம் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி	30.00	15.06.12	பணி நடை பெறுகிறது
7	தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி	39.96	09.06.12	பணி நடை பெறுகிறது
8	கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி	40.50	22.01.13	பணி நடை பெறுகிறது
9	கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதி கால்வாய் மேம்படுத்தும் பணி	67.68	22.09.12	பணி நடை பெறுகிறது
10	கூவம் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி	82.17	08.03.13	பணி நடை பெறுகிறது
11	கூவம் நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்படுத்தும் பணி	5.40	08.01.12	பணி நடை பெறுகிறது
12	விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி	53.85	21.02.13	பணி நடை பெறுகிறது
13	விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் நீர்ப்பிடிப்புப் பகுதி கால்வாய் மேம்படுத்தும் பணி	6.47	02.07.12	பணி நடை பெறுகிறது
14	ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி	92.15	23.04.13	பணி நடை பெறுகிறது
15	ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்புப் பகுதி கால்வாய் மேம்படுத்தும் பணி	14.49	23.08.12	பணி நடை பெறுகிறது

[2011 ஆகஸ்ட் 18

16	அடையாறு நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி	60.74	19.04.13	பணி நடைபெறுகிறது
17	அடையாறு நீர்ப்பிடிப்புப் பகுதி கால்வாய் மேம்படுத்தும் பணி	22.63	19.02.13	பணி நடைபெறுகிறது
	மொத்தம்	778.29		

(ஆ) பொதுப் பணித் துறைக்கான பணிகள்:

பொதுப் பணித் துறைக்கான பெரிய நீர்வழிக் கால்வாய் மேம்பாட்டு திட்டத்தில் 65.10 கி.மீ. நீளமுள்ள 4 புதிய இணைப்புக் கால்வாய்கள் மற்றும் 5 ஏரி வழிந்தோடும் கால்வாய்கள் என ரூ.633.03 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பொதுப் பணித் துறை திட்டத்திற்காக அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. பொதுப் பணித் துறை இத்திட்டப் பணிகளை விரைவாக செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டங்கள் பருவமழையினால் ஏற்படும் இன்னல்களிலிருந்து ன்டுபடும் பொருட்டு தொலை நோக்கு அடிப்படையில் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப் படவுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை

நடைமுறையில் உள்ள திடக்கழிவு மேலாண்மையின் செயல்பாட்டு முறைகளை மேம்பாடு செய்ய ரூ.255.32 கோடிக்கு ஒரு விரிவான திட்டம் சென்னை மாநகராட்சியினால் தயாரிக்கப்பட்டு அது மத்திய அரசின் நகர வளர்ச்சி அமைச்சகத்தினால் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டது. அதில் உள்ள முக்கியமான திட்டக்கூறுகளில் ஒன்று, கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி ஆகிய குப்பை கொட்டும் வளாகங்களில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை ரூ.190 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதாகும்.

தனியார், அரசு பங்களிப்பு அடிப்படையில், மத்திய அரசின் வழிகாட்டல்களின்படி இந்த இரண்டு குப்பை கொட்டும் வளாகங்களிலும் இந்தத் திட்டத்தினை வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் (Design, Build, Operate Maintain and Transfer) அடிப்படையில் செயலாக்க தொழில் முனைவோர்கள் இனம் காணப்பட்டு பணியாணைகள் வழங்கப்பட்டன.

2011 ஆகஸ்ட் 18]

பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு மாநில அளவில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பெருங்குடிக்கான திட்டத்தைப் பொறுத்தவரையில் தேவையான அனைத்து ஒப்புதல்களும் பெறப்பட்டுவிட்டன. கொடுங்கையூருக்கான திட்டத்தைப் பொறுத்தவரை, மத்திய அரசிடமிருந்து முறைப்படியான இசைவுச்சான்றிதழ் இதுவரையிலும் கிடைக்கவில்லை என்பதால், இந்த திட்டம் துவங்குவதில் காலதாமதமாகிறது. தேவையான இசைவுச்சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றவுடன் இந்தத் திட்டத்தை செயலாக்குவது குறித்து முடிவெடுக்கப்படும்.

இதுவரையில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களுக்காக இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் குப்பை மாற்று நிலையங்கள் கட்டிய வகையில் ரூ.37.56 கோடி திட்டச் செலவினமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேம்பாலங்கள் அமைத்தல்

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் விதமாக ரூ.2371 கோடி திட்ட மதிப்பீட்டில் இரயில்வே சந்திக்கடவுகளின் குறுக்கே 8 பாலப்பணிகள் (சுரங்கப்பாதை மற்றும் மேம்பாலம்) மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 3 பணிகள் முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து விடப்பட்டுள்ளன. ஏனைய 5 பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

1 மணியக்கார சத்திரத்தெரு இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே ரூ.10.55 கோடி திட்ட மதிப்பீட்டில் வாகனச்சுரங்கப்பாதை அமைக்கும் பணி வரும் டிசம்பர் 2011-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2 ரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே ரூ.15.74 கோடி திட்ட மதிப்பீட்டில் நடைபெற்று வரும் இரயில்வே மேம்பாலப் பணியில் ஒரு பகுதி பணி முடிக்கப்பட்டுள்ளது. மேம்பாலத்தின் மற்றொரு பகுதி பணியானது இரயில்வே துறையினரின் பணிகள் முடிக்கப்பட்ட 2 மாத காலத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3 சுத்திவாக்கம் நெடுஞ்சாலை மற்றும் காக்ரேன் பேசின் சாலை இரயில்வே சந்திக்கடவில் ரூ.12.20 கோடி திட்ட மதிப்பீட்டில்

[2011 ஆகஸ்ட் 18

நடைபெறும் இரயில்வே மேம்பாலப் பணி வரும் டிசம்பர் 2011-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

4 வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவின் சுறுக்கே ரூ.139 கோடி திட்ட மதிப்பீட்டில் நடைபெறும் வாகனச்சுரங்கப்பாதை பணியானது நவம்பர் 2011-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

5 கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கான திட்ட வரைபடம் இரயில்வே துறையால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இப்பணியானது சுத்திவாக்கம் நெடுஞ்சாலை–காக்ரேன் பேசின் சாலையில் நடைபெற்று வரும் மேம்பாலப் பணி முடிவுற்ற பின்னர் நடைமுறைப்படுத்தப்படும்.

பாரம்பர்யமிக்க தொன்மையான கட்டடங்களை புனரமைத்தல்

ஈ. வெ. ரா. பெரியார் சாலையில் 13 தொன்மையான பராம்பரியம் மிக்க கட்டடங்கள் உள்ளன. அதில் சென்னை மாநகராட்சியிடம் உள்ள ரிப்பன் மாளிகையும், விக்டோரியா பொது அரங்கமும் உள்ளது. மத்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் இந்த இரண்டு கட்டடங்களையும் புனரமைக்க ரூ.6.10 கோடி அளித்துள்ளது.

ரிப்பன் மாளிகையினை (1913-ல் கட்டப்பட்டு இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த ரிப்பன் பிரபு அவர்களின் பெயரிடப்பட்டது) புனரமைக்கும் பணி 2010 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்த பணி மார்ச் 2012-ல் முடிக்கப்படும். 1887 ஆம் ஆண்டு கட்டப்பட்ட விக்டோரியா பொது அரங்கத்தை புனரமைக்கும் பணி 2010 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இப்பணி டிசம்பர் 2011-ல் முடிக்கப்படும்.

நகர்ப்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டம் (BSUP) பகுதி – 1

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகத்தின்மூலம் சென்னை மாநகரில் 236 குடிசைப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டத்திற்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் ஒரு அங்கமான நகர்ப்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டத்தின்கீழ் (BSUP) ரூ.1274.3 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 1,370 தனி வீடுகள் கட்டுதல் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட

2011 ஆகஸ்ட் 18]

குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் பணிகள் உட்பட கான்கிரீட் சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், பொதுக்கழிப்பிடங்கள், சமுதாயக் கூடங்கள், அங்கன்வாடிகள் மற்றும் பல ஆகும். அனுமதிக்கப்பட்ட 1,370 தனி வீடுகளில் 724 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன 486 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் மொத்தமுள்ள 1,48 அடிப்படை வசதிகள் அளிக்கும் பணிகளில் ரூ.95.88 கோடி செலவினத்தில் 1,410 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள நடைபெறும் பணிகள் டிசம்பர்—2011-க்குள் முடிக்கப்படும்.

நகர்ப்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டம் (BSUP) பகுதி – 2

மேலும் கூடுதலாக 186 குடிசைப்பகுதிகளைத் தேர்ந்தெடுத்து 2-வது பகுதியாக நகர்ப்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டத்தின்கீழ் ரூ.72.63 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. இதில் மொத்தமுள்ள 537 பணிகளில் 404 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள நடைபெறும் பணிகளும் டிசம்பர் 2011-க்குள் முடிக்கப்படும்.

சென்னை மாநகராட்சியின் உள்கட்டமைப்பு பணிகள்

ரூ.23 கோடி திட்ட மதிப்பீட்டில் தங்கசாலை சந்திப்பில் நடைபெற்று வரும் மேம்பாலப்பணி டிசம்பர் 2011-ல் முடிக்கப்படும்.

ரூ.61.70 கோடி திட்ட மதிப்பீட்டில் கணேசபுரத்தில் மேம்பாலம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியானது எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் நெடுஞ்சாலைத் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாலப் பணி முடிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும்.

பெரம்பூர் இறைச்சிக்கூடம் மேம்படுத்தும் பணி

சென்னை மாநகரத்தின் மிகப் பழமையான பெரம்பூர் இறைச்சிக்கூடம் 9.408 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இவ்விறைச்சிக்கூடத்தின் நீண்டகாலத் தேவையை நிறைவேற்றுவதற்காகவும் நவீன தொழில்நுட்பத்துடன் மேம்படுத்துவதற்காகவும் மற்றும் கழிவுகளை நவீன முறையில் கத்திகரித்து வெளியேற்றும் நோக்கத்தில் சர்வதேச தரத்திற்கேற்ப இந்த இறைச்சிக்கூடத்தை வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் என்ற முறையில் பொது தனியாருக்கு வழங்க முறையான ஒப்பம் கோரப்பட்டது. நடைபெற்று வரும் இப்பணி டிசம்பர் 2011-க்குள் முடிக்கப்படும். இந்த நவீனப்படுத்தப்பட்ட

[2011 ஆகஸ்ட் 18

இறைச்சிக்கூடம் சிறு வியாபாரிகள் மற்றும் தனியாரின் தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் ஒருமணி நேரத்தில் 60 மாடுகள் மற்றும் 250 ஆடுகள் வெட்டும் திறன் கொண்டதாக இருக்கும்.

III. பேரூராட்சிகள் இயக்ககம்

பேரூராட்சிகள் நிருவாகம் சிறந்த அடிப்படை வசதிகள் வழங்குதல், கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் வேலைவாய்ப்பினை பெருக்குதல் மூலமாக பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட பாடுபட்டு வருகிறது.

நிருவாக அமைப்பு

மாநிலத்தில் 559 பேரூராட்சிகள் உள்ளன. இவை 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. பேரூராட்சிகள் ஆண்டு வருவாய் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

வ. எண்	நிலை	ஆண்டு வருவாய்	பேரூராட்சிகளின் எண்ணிக்கை
1	சிறப்பு நிலை	ரூ.20 இலட்சத்திற்கு மேல்	12
2	தேர்வுநிலை	ரூ.16 இலட்சத்திற்கு மேல்	244
3	முதல்நிலை	ரூ.8 இலட்சத்திற்கு மேல் ரூ.16 இலட்சத்திற்குள்	221
4	இரண்டாம் நிலை	ரூ.4 இலட்சத்திற்கு மேல் ரூ.8 இலட்சத்திற்குள்	82
	மொத்தம்		559

கற்றுலா, சமய வழிபாடு மற்றும் தொன்மையான வரலாற்று முக்கியவத்துவம் வாய்ந்த பல பேரூராட்சிகள் உள்ளன. 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தற்பொழுதுள்ள 559 பேரூராட்சிகளின் மொத்த மக்கள் தொகை 75,93,996 ஆகும். இது

2011 ஆகஸ்ட் 18]

மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை மற்றும் நகர்ப்புற மொத்த மக்கள் தொகையில் முறையே 12 மற்றும் 28 விழுக்காடாகும். பேரூராட்சிகளின் இயக்குநர் துறைத் தலைவராகச் செயல்படுகிறார். பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மாநிலத்தின் 16 மண்டலங்களிலுள்ள பேரூராட்சிகளின் நிர்வாகத்தை கவனிக்கின்றனர். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்கள் நிர்வாகத்தினை கண்காணித்து வருகின்றனர்.

செயல்பாடுகள்

மக்களுக்கு அடிப்படை சேவைகளை வழங்குவதில், பேரூராட்சிகள் பல்வேறு பணிகளை மேற்கொள்கின்றன. பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெருவிளக்குகள் அமைத்தல், பொது சுகாதாரத்தைப் பேணுதல், திடக்கழிவு மேலாண்மை, சாலைகள் அமைத்தல், மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதைகள் அமைத்தல், இடுகாடுகளைப் பராமரித்தல் மற்றும் இறைச்சிக் கூடங்கள் அமைத்தல் ஆகிய சேவைகளை பேரூராட்சிகள் வழங்குகின்றன. இவை தவிர சந்தைகள், பேருந்து நிலையங்கள் மற்றும் சமுதாயக்கூடங்கள் ஆகியவற்றை அமைத்து பராமரிக்கும் சேவைகளையும் பேரூராட்சிகள் வழங்குகின்றன. பிறப்பு / இறப்பு சான்றிதழ் வழங்குதல், வரி வசூலித்தல், திட்ட அனுமதியளித்தல், கட்டட உரிமம் மற்றும் வணிக உரிமம் வழங்குதல் பேரூராட்சிகளின் பிற முக்கியக் கடமைகளாகும்.

நிதி ஆதாரங்கள்

சொத்துவரி, தொழில் வரி, வாடகை, குத்தகை மற்றும் சேவை கட்டணங்கள், பேரூராட்சிகளின் முதன்மை வருவாய் ஆதாரங்களாகும். முத்திரைத்தாள் மேல்வரி, கேளிக்கைவரி, மாநில நிதி ஆணைய ஒதுக்கீடு மற்றும் 13-வது நிதிக்குழு மான்யம் ஆகியன பேரூராட்சிகளின் பிற முக்கிய வரவினங்களாகும். மேலும் பேரூராட்சிகளின் மொத்த வருவாயில் கணிசமான பங்களிப்பு வளர்ச்சித் திட்டங்களின்மூலம் கிடைக்கிறது. சுற்றுலா வளர்ச்சித் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதி வளர்ச்சித் திட்டம், நபார்டு வங்கி நிதி உதவி போன்ற திட்டங்கள் இதில் அடங்கும். இது தவிர ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (JnNURM) மற்றும் அதன் உபதிட்டங்களான சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT), ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி

[2011 ஆகஸ்ட் 18

மேம்பாட்டுத் திட்டம் (IHSDP) மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் (BSUP) மற்றும் சுவர்ணஜெயந்தி சகரி ரோஜ்கார் யோஜனா (SJSRY) போன்ற பெரும் திட்டங்களின் மூலமாகவும் பேரூராட்சிகளுக்கு நிதியுதவி கிடைக்கிறது.

நிதி வரவு

2010-2011 ஆம் ஆண்டில் பேரூராட்சிகளின் மொத்த நிதி வரவு ரூ.1816.34 கோடி. ஆகும். இதில் ரூ.333.04 கோடி பேரூராட்சிகளின் சொந்த வருவாயாகவும், ரூ.637.41 கோடி மத்திய மற்றும் மாநில நிதி பகிர்வு மானியமாகவும் மற்றும் ரூ.845.89 கோடி பல்வேறு திட்டப் பணிகளுக்கான ஒதுக்கீடாகவும் இருந்தது.

கட்டமைப்பு வசதி மேம்பாடு

நகரமயமாதல் மற்றும் நகர்ப்புற மக்கள்தொகை பெருக்கம் ஆகியவற்றில் தமிழ்நாடு அடைந்துள்ள முன்னேற்றம் காரணமாக, பேரூராட்சிகளில் குடிநீர் வழங்குதல், கழிவுநீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை, சாலை மேம்பாடு மற்றும் தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற பல்வேறு கட்டமைப்பு வசதிகளின் தேவை மிக அதிகரித்துள்ளது. இவற்றை நிறைவேற்றுவதில் தமிழக அரசின் சிறப்பு நகர்ப்புற இயக்கம் மிகப்பெரிய பங்கு வகிக்கும். இது தவிர ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் (JnNURM) மற்றும் அதன் உப திட்டங்களான சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம், (UIDSSMT), ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP), நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் (BSUP) மற்றும் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (SJSRY) ஆகிய திட்டங்களின் மூலமாகவும் வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி திரட்டப்படும்.

குடிநீர் வழங்கல்

கோயம்புத்தூர் மாவட்டம் நெ.4 வீரபாண்டி, பெரியநாயக்கன்பாளையம், நரசிம்மநாயக்கன்பாளையம், துடியலூர், வெள்ளக்கிணறு, இடிகரை, சரவணம்பட்டி, சின்னவேடம்பட்டி, காளப்பட்டி, வெள்ளலூர், மதுக்கரை, எட்டிமடை, இருகூர், பள்ளப்பாளையம், கண்ணம்பாளையம் மற்றும் சூலூர் ஆகிய 16

2011 ஆகஸ்ட் 18]

பேரூராட்சிகளில் ரூ.89.49 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாதாள சாக்கடைத் திட்டம்

திருவள்ளூர் மாவட்டம், போரூர் மற்றும் திருமழிசை பேரூராட்சிகளிலும், காஞ்சிபுரம் மாவட்டம், பெருங்குடி மற்றும் பள்ளிக்கரணை பேரூராட்சிகளிலும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் பணிகள் ரூ.137.56 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு, பின்வருமாறு முன்னேற்றத்தில் உள்ளன:

வ. எண்.	பேரூராட்சிகளின் பெயர்	திட்ட மதிப்பீடு	செலவு	தற்போதைய நிலை
1	போரூர்	38.29	6.78	நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 43,268 மீட்டர் நீளத்திற்கு 11,70 மீட்டர் நீளம் கழிவு நீர் குழாய் பதிக்கும் பணி முடிவுற்றுள்ளது நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 2,223 எண்ணிக்கை நுழை - வாயிலில் இதுவரை 55 நுழைவாயில் பணி முடிவுற்று உள்ளது. ஜூன் 2012–க்குள் பணி முடிவுறும்.
2	திருமழிசை	20.47	7.50	நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 26,590 மீட்டர் நீளத்திற்கு 15,411 மீட்டர் நீளம் கழிவு நீர் குழாய் பதிக்கும் பணி முடிவுற்றுள்ளது நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 1,028 எண்ணிக்கை நுழைவாயிலில் இதுவரை 741 நுழைவாயில் பணி முடிவுற்றுள்ளது. டிசம்பர் 2012-க்குள் பணி முடிவுறும்.

[2011 ஆகஸ்ட் 18

3	பெருங்குடி	20.19	5.45	நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 44,700 மீட்டர் நீளத்திற்கு 8,950 மீட்டர் நீளம் கழிவு நீர் குழாய் பதிக்கும் பணி முடிவுற்றுள்ளது. நிர்ணயிக்கப் பட்ட இலக்கான 1,759 எண்ணிக்கை நுழைவாயிலில் இதுவரை 444 நுழைவாயில் பணி முடிவுற்றுள்ளது. நவம்பர் 2012–க்குள் பணி முடிவுறும்.
4	பள்ளிக் கரணை	58.61	5.00	நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 86,459 மீட்டர் நீளத்திற்கு 11,548 மீட்டர் நீளம் கழிவு நீர் குழாய் பதிக்கும் பணி முடிவுற்றுள்ளது. நிர்ணயிக்க பட்ட இலக்கான 3,237 எண்ணிக்கை நுழைவாயிலில் இதுவரை 555 நுழைவாயில் பணி முடிவுற்றுள்ளது. டிசம்பர் 2012–க்குள் பணி முடிவுறும்.
	மொத்தம்	137.56	24.73	

TRUTH ALONE TRIUMPHS

சுகாதார வளாகங்கள் கட்டுதல்

பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் தூய்மையை மேம்படுத்தும் பொருட்டு நபார்டு வங்கி நிதி உதவியில் 47 பேரூராட்சிகளில் ரூ.4.88 கோடி மதிப்பீட்டில் 76 சுகாதார வளாகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, அதில் 75 சுகாதார வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஒரு பணி 2011-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

2011 ஆகஸ்ட் 18]

நகர்ப்புற ஏழைகளுக்கு வீடு கட்டும் திட்டம்

ஒருங்கிணைந்த வீட்டுவசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் ஆகியவை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் முக்கியமான உப திட்டங்களாகும். பேரூராட்சிகளில் குடிசைப் பகுதிகளிலுள்ள ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டித்தருவது மற்றும் குடிநீர், பாதாள சாக்கடை, மழைநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவது இத்திட்டங்களின் நோக்கமாகும்.

ஒருங்கிணைந்த வீட்டுவசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 25 பேரூராட்சிகளில் 4,624 பணிகள் ரூ.59.44 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. இதில் 3,466 பணிகள் ரூ.44.45 கோடி செலவில் முடிவடைந்துள்ளன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தின்கீழ் 17 பேரூராட்சிகளில் 3,099 பணிகள் ரூ.41.61 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. இதில் 1,812 பணிகள் ரூ.28.96 கோடி செலவில் முடிவடைந்துள்ளன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சாலைகள்

நபார்டு வங்கி நிதியுதவி

நபார்டு வங்கி நிதியுதவியுடன் பேரூராட்சிகளில் சாலை அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 390 பேரூராட்சிகளில் ரூ.109.57 கோடி மதிப்பீட்டில் 838.90 கி.மீ. நீளமுள்ள 658 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 655 பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சிய பணிகள் 2011-ஆம் ஆண்டு அக்டோபர் மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

சிறப்புச் சாலைகள் திட்டம்

குடிநீர்த் திட்டப் பணிகள், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மற்றும் இயற்கைச் சீற்றம் காரணமாக சேதமடைந்த சாலைகளை சீரமைக்க சிறப்பு சாலைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 540 பேரூராட்சிகளில் 1,573 கி.மீட்டர் நீளமுள்ள

[2011 ஆகஸ்ட் 18

தார் மற்றும் சிமெண்ட் சாலைகளை மேம்படுத்தும் பணிகள் ரூ.340 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் ரூ.248 கோடி செலவில் 906 கி.மீ. நீளமுள்ள சாலை பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

இயற்கை பேரிடர் நிவாரணப் பணிகள்

பெருமழை மற்றும் வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகளைச் செப்பனிட ரூ.48 கோடி மதிப்பீட்டில் 454 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் ரூ.24 கோடி செலவில் 277 பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறை மற்றும் இயக்க மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை

பேரூராட்சிகளில் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் பராமரிப்பதில் உள்ள நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காக ரூ.29.55 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்மூலம் பேருந்து நிலையங்கள் அபிவிருத்தி செய்தல், புதிய அலுவலக கட்டடங்கள் கட்டுதல், குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற 85 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. 2011-2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.34.99 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலா மேம்பாடு

சுற்றுலா மற்றும் புராதன நகர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் சங்ககிரி (சேலம்), பனகுடி (திருநெல்வேலி), திருவெறும்பூர் (திருச்சி), வேளாங்கண்ணி (நாகப்பட்டிணம்), மாமல்லபுரம் (காஞ்சிபுரம்) மற்றும் குறிஞ்சிப்பாடி (கடலூர்) ஆகிய பேரூராட்சிகளில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் அடிப்படை கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் மெகா சுற்றுலா திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி பேரூராட்சியில் ரூ.14.13 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2011 ஆகஸ்ட் 18]

வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

நகர்ப்புற ஏழை மக்களுக்கு சுய மற்றும் கூலி வேலைவாய்ப்புத் திட்டங்கள்மூலம் லாபகரமான வேலைவாய்ப்புகளை வழங்குவது அரசின் முக்கிய நோக்கமாகும். இதற்கென மத்திய மாநில அரசுகள், 75:25 என்ற விகிதத்தில் நிதியை பகிர்ந்தளிக்கும். பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் 1-12-1997 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 2011-12 ஆம் ஆண்டு ரூ.15.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் பின்வரும் ஐந்து உட்கூறுகளைக் கொண்டுள்ளது:

நகர்ப்புற சுய வேலைவாய்ப்பு திட்டம் (USEP)

நகர்ப்புறத்தில் உள்ள தனி நபர் பயனாளிகளுக்கு, குறுந்தொழில் துவங்க, மானியத்துடன்கூடிய கடன் வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தொழில்நுட்பம் மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான கட்டமைப்பு வசதிகளுக்கு இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2011-12 ஆம் நிதியாண்டு ரூ.2.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை மேம்படுத்தும் திறன் வளர்ப்பு பயிற்சித் திட்டம் (STEPUP)

நகர்ப்புற ஏழைகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பதன் மூலமாக அவர்களை திறன்மிக்க கூலித் தொழிலாளர்களாகவோ அல்லது வெற்றிகரமான சுயதொழில் முனைவோர்களாக மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் 2011—12 ஆம் ஆண்டு ரூ.4.01 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற பெண்களுக்கான சுய உதவித் திட்டம் (UWSP)

இத்திட்டத்தில், நகர்ப்புற ஏழைபெண்களால் அமைக்கப்பட்ட குழுக்கள் சுய தொழில் மேற்கொள்ள மானியத்துடன்கூடிய கடன் வழங்குதல் (UWSP), மற்றும் நகர்ப்புற ஏழை பெண்களின் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் சேமிப்பு மற்றும் கடன் சங்கங்களுக்கு சுழல் நிதி வழங்குதல் (UWSP-RF) ஆகிய இரு உப திட்டங்கள் அடங்கும். இத்திட்டத்தின்கீழ் 2011-12 ஆம் ஆண்டு ரூ.2.68 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

நகர்ப்புற கூலி வேலைவாய்ப்பு திட்டம் (UWSP)

நகர்ப்புறங்களில், வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் ஏழைகளை உடல் உழைப்பு சார்ந்த பணிகளில் ஈடுபடுத்துவதன் மூலம், சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் பொது சொத்துகளை உருவாக்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் மதிப்பீட்டில் மனித உழைப்பு மற்றும் இடுபொருட்களுக்கான ஒதுக்கீடு 60:40 என்ற விகிதத்தில் இருக்கும். இத்திட்டத்தின்கீழ் 2011-12 ஆம் ஆண்டு ரூ.3.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற சமுதாய மேம்பாட்டு கூட்டமைப்பு (UCDN)

நகர்ப்புற ஏழை மக்களைக் கொண்ட சமுதாய அமைப்புகளை ஏற்படுத்தி, அவர்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கித் தருவதன்மூலம் வறுமையை ஒழிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அண்டை வீட்டுக் குழுக்கள், அண்டை வீட்டு கமிட்டிகள் மற்றும் சமுதாய வளர்ச்சி சங்கங்களாக செயல்படக்கூடிய விதத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தகுதிப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இச்சமுதாய வளர்ச்சி சங்கங்கள், அந்தந்த பகுதிகளுக்கு ஏற்ற நடைமுறை சாத்தியமான திட்டங்களைக் கண்டறிவது இச்சமுதாய வளர்ச்சி சங்கங்களின் பணியாகும். இத்திட்டத்தின்கீழ் 2011-12 ஆம் ஆண்டு ரூ.134 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதி மேலாண்மை
மாநில நிதிக் குழு மானியம்

மாநில அரசின் வரி வருவாய் இனங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதிக் குழுவினை மாநில அரசு ஏற்படுத்துகிறது. மூன்றாவது மாநில நிதிக் குழுவின் பணிக்காலம் 31-03-2012 அன்று முடிவடைகிறது. தற்பொழுது மாநில அரசின் மொத்த வரி வருவாயில் 10 சதவிகிதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

2011 ஆகஸ்ட் 18]

பதின்மூன்றாவது நிதிக் குழு மானியம்

பேரூராட்சிகளுக்கு 2010—2011 ஆம் ஆண்டு முதல் 2014—2015 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில், ஆண்டு வாரியாக பதின்மூன்றாவது நிதிக் குழு மானியம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த ஒதுக்கீட்டில், அடிப்படை மானியம் மற்றும் செயல்திறன் மானியம் என இரண்டு உட்பிரிவுகள் உள்ளன. அடிப்படை மானியம் ஆண்டுதோறும் விடுவிக்கப்படுகிறது. 13-வது நிதிக் குழு வகுத்துள்ள, மாநில சொத்து வரி குழுமம் அமைத்தல், உள்ளாட்சிகள் வழங்கும் சேவைகளுக்கு அளவீடு நிர்ணயித்தல் (Service Level Benchmarking) போன்ற ஒன்பது சீரமைப்பு நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் செயல்திறன் மானியம் விடுவிக்கப்படுகிறது. 13-வது நிதிக் குழு ஒதுக்கீட்டினைப் பயன்படுத்த அரசு பின்வரும் வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்துள்ளது.

1. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் / சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் மூலம் நிறைவேற்றப்பட்ட / தற்போது நடைபெற்று வரும் குடிநீர் வழங்கல்/பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கு பேரூராட்சிகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகை முழுவதும் செலுத்தப்பட வேண்டும்.

2 தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய மின் பயனீட்டுக் கட்டண பாக்கித் தொகை முழுவதும் செலுத்தப்பட வேண்டும்.

3 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் / சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் ஆகிய நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவையில் உள்ள குடிநீர்க் கட்டணம் முழுவதும் செலுத்தப்பட வேண்டும். (குடிநீர்க் கட்டண நிலுவைக்காக விதிக்கப்படும் தண்டத் தொகை செலுத்தப்படுதல் கூடாது)

4 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் தனியார் நிறுவனம் (Outsourced Agencies) ஏதும் நியமனம் செய்யப்பட்டு, அந்நிறுவனத்திற்கு பேரூராட்சிகள் செலுத்த வேண்டிய கட்டணத்திற்காக மீதி மானியத் தொகையை பயன்படுத்தலாம்.

[2011 ஆகஸ்ட் 18

2011-2012 ஆம் ஆண்டு அடிப்படை மானியமாக ரூ.71.88 கோடி நிதியும், செயல்திறன் மானியமாக ரூ.24.57 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மழைநீர் சேகரிப்பு

2003 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டம், நிலத்தடி நீரை வலுப்படுத்துவதில் மிகப் பெரிய பலனை ஏற்படுத்தியுள்ளது. 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 215 ஏ மற்றும் கட்டட விதிமுறையில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களின் காரணமாக, புதியதாகக் கட்டப்படும் கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள பயன்களை உறுதிபடுத்தும் விதத்தில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொது மற்றும் தனியார் கட்டடங்களில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை புதுப்பித்தல் மற்றும் புதிய அமைப்புகளை ஏற்படுத்துவது ஊக்குவிக்கப்படுகிறது. இந்த உத்வேகத்தை நிலைப்படுத்த தேவையான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

தெரு நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டம்

தெரு நாய்களால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவற்றைக் கொல்வதற்குப் பதிலாக, அவற்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் திட்டத்தை உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரையைச் செயல்படுத்தும் விதமாக 1960 ஆம் ஆண்டு பிராணிகள் வதைத் தடுப்பு சட்டத்தின் பிரிவு 38 உட்பிரிவு 1(9)-ன்கீழ் 2001 ஆம் ஆண்டு பிராணிகள் (நாய்கள்) கருத்தடை அறுவை விதிகளை மத்திய அரசு வெளியிட்டது. அரசின் நடவடிக்கை காரணமாக கால்நடை துறையுடன் இணைந்து பேரூராட்சிகளில் இது தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 441 தெரு நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. தெரு நாய் தொல்லையில்லாத பேரூராட்சிகளை உருவாக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

2011 ஆகஸ்ட் 18]

IV. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF)

நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டங்களை நிறைவேற்றும்போது எதிர்காலத் தேவையை முக்கியமாக கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. ஆயினும், பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப உள்கட்டமைப்பு அமையவில்லை. தேவை மற்றும் அளிப்பிற்கிடையே உள்ள இடைவெளியை நிரப்பும்பொருட்டும், மூலதனச் சந்தையை உள்ளாட்சி அமைப்புகள் அணுகுதல் ஆகியவற்றுக்கும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் 1996 ஆம் ஆண்டில் தமிழக அரசால் பொது மற்றும் தனியார் பங்களிப்பில் தோற்றுவிக்கப்பட்டு, இந்திய பொறுப்பாட்சிகள் சட்டம், 1882-ன்கீழ் பதிவு செய்யப்பட்டது. இதில் தமிழ்நாடு அரசு மற்றும் ICICI வங்கி, HDFC மற்றும் IL&FS நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன.

தமிழ்நாட்டின் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் தனியார் முதலீடுகளை அதிகரித்து அதன் மூலமாக அவற்றை நீடித்த வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதும், உபயோகிப்பாளர்களுக்கு உயர்தரமான கட்டமைப்பு வசதிகளை செய்து, தொடர்ந்து நிதி இடையீட்டாளராக செயல்படுவதும்தான் தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதியத்தின் தொலைநோக்குப் பார்வை ஆகும்.

தமிழ்நாட்டின் உள்ளாட்சி அமைப்புகளில் உயர்தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் பெரும் பங்கு ஆற்றுவது அதன் மூலமாக உள்ளாட்சி அமைப்புகளில் புதுமையான திட்டங்களை மேம்படுத்துதல், தற்சார்பு நிதிநிலை பற்றிய ஆய்வு மற்றும் நீடித்த மேம்பட்ட நிதிநிலைகள் மூலமாக கட்டமைப்பு வசதிகளுக்கான சொத்துகளை உருவாக்குதல் ஆகியன தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதியத்தின் கனவாகும்.

[2011 ஆகஸ்ட் 18

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் குறிக்கோள்கள்

- நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு, நிதி அளிப்பதன் மூலம், நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
- பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி மூலமாக, உட்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்.
- நகர்ப்புற ஏழைகளின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் வகையில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மானிய நிதி என்னும் துணைத் திட்டத்தை செயல்படுத்துதல்.
- நகர்ப்புற வளர்ச்சி அமைப்புகள் மூலதன சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக, அவற்றின் நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் அடிப்படை வசதி திட்டங்களான சாலைகள், பாலங்கள், மழை நீர் வடிகால்கள், சுகாதாரத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை, ஆகியவற்றுக்கு நிதி உதவி அளிப்பதோடு மட்டுமல்லாமல், வணிக நோக்குடைய திட்டங்களான பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் போன்றவற்றுக்கும் நிதி உதவி அளிக்கிறது.

இந்த நிதியமானது, தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு பொறுப்பாட்சி நிறுவனத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது, தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின்மூலம் இயக்கப்படுகிறது.

தமிழக அரசின் பங்குத் தொகையான ரூ.142.91 கோடியையும் சேர்த்து இதன் மொத்த மூலதனம் ரூ.199.60 கோடியாகும். மீதமுள்ள ரூ.56.69 கோடியை மூன்று நிறுவனங்கள் கொடுத்துள்ளன. இவை தவிர, தற்போது இந்த நிதியமானது, உலக வங்கி நிதியுதவியுடன் மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், ஜெர்மானிய நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புற கட்டமைப்பு நிதியளிப்பு மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனம் நிதியுதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் என்ற மூன்று கடன் வரிசைகளை நிர்வகித்து வருகிறது. இந்த நிதியின் மொத்த மூலதன ஆதாரம், மேற்கூறிய கடன் வரிசைகளை எல்லாம் சேர்த்து, உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடனாகவும் மானியமாகவும் ரூ.2,368.41 கோடி அளிக்கப்படவுள்ளன.

2011 ஆகஸ்ட் 18]

அட்டவணை 1

அயல்நாட்டு கடன்வரிசைகளின் அளவு

(ரூ. கோடியில்)

வ. எண்	உட்கூறுகள்	உலக வங்கி	ஜெர்மானிய நிதி நிறுவனம்	ஜப்பானிய நிதி நிறுவனம்	மொத்தம்
1	கடன்கள்	602.60	271.20	180.50	1,054.30
2	மூலதன மானியம்	811.90	150.80	102.73	1,065.43
3	தொழில்நுட்ப மானியம்	41.40	13.00	16.81	71.21
4	போக்கு வரத்து வசதிக்கான மானியம்	188.60	0	0	188.60
	மொத்தம்	1,644.50	435.00	300.04	2,379.54
	மேலேயுள்ள கூடுதலில் ஒப்பளிக்கப் பட்டவை	1,478.40	422.46	275.19	2,176.05

மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNUDP-III)

இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை 1999 முதல் 2004 வரை உலக வங்கியின் தொடர் நிதியளிப்பின் மூலம் வெற்றிகரமாக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் அமல்படுத்தியது. மேலும் இரண்டாவது திட்ட காலத்தில் உலக வங்கியின் நிதியுதவி மட்டுமல்லாமல் கடன் பத்திரங்கள் வெளியீடு, உபயோகிப்பாளர் கட்டணம் வசூலித்தல் போன்ற இதர இனங்களிலிருந்தும் கூடுதலாக நிதி திரட்டியது.

இரண்டாவது நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் சாதனைகளைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென மூன்றாவது

[2011 ஆகஸ்ட் 18

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொடர்ந்து நிதி அளிக்கும் நோக்கத்தோடு செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் என்னும் அமைப்பை நிதி இடையீட்டாளராக மேம்படுத்துதல்.

- நகர்ப்புற சீர்திருத்தங்களை பலப்படுத்துதல் மற்றும் இரண்டாவது திட்டத்தின் சாதனைகளைத் தொகுத்து அத்திட்டத்தின் நிறுவன மற்றும் தொழில்நுட்ப திறமைகளை மேம்படுத்துதல்.

- சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட இடங்களில் சாலைகளை அகலப்படுத்துதல், சாலை மேம்பாலம், சாலை கீழ்பாலம் ஆகிய போக்குவரத்து துணைத் திட்டங்களை எடுத்துக்கொள்ள சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு மானியம் வழங்குதல்.

இத்திட்டம் இரண்டு கூறுகளைக் கொண்டது. அவையாவன, நிறுவன மேம்பாட்டுக் கூறு (IDC) மற்றும் நகர்ப்புற முதலீட்டுக் கூறு. (UIC) நிறுவன மேம்பாட்டுக் கூறு என்பது தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்றுவித்தல் மூலம் இத்திட்டத்தை மேம்படுத்துவதாகும். நகர்ப்புற முதலீட்டுக் கூறு என்பது, உள்ளாட்சி அமைப்புகளின் மேம்பாட்டிற்காக, அவற்றின் கட்டமைப்புத் திட்டங்களான குடிநீர் வழங்கல், சுகாதாரத் திட்டங்கள், நிடக்கழிவு மேலாண்மை, மழை நீர் வடிகால், சாலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்களால் ஏற்படுத்தித்தரத்தக்க பொது வசதிகள் ஆகிய திட்டங்களில் உள்ளாட்சி அமைப்புகளின் தேவையைப் பொறுத்து பயன்படுத்திக்கொள்ளப்படும். இந்தத் திட்டம் 19-10-2005 அன்று தொடங்கப்பட்டது. சாலை வசதி மற்றும் போக்குவரத்திற்கான உட்கூறு மிகவும் தாமததாக செயல்படுத்தப்பட்டதால், இந்த திட்டத்தின் உட்கூறுகள் மாற்றியமைக்கப்பட்டன.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.1,996.40 கோடி (434 மில்லியன் அமெரிக்க டாலர்), இதில் ரூ.1,380 கோடி (300 மில்லியன் அமெரிக்க டாலர்) உலக வங்கி நிதி உதவியாகும்.

2011 ஆகஸ்ட் 18]

அட்டவணை-2

மாற்றியமைக்கப்பட்ட மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற திட்டத்தின் விவரங்கள்

வ. எண்	உட்கூறு	உலக வங்கி நிதியுதவி	தமிழக அரசு நிதியுதவி	மொத்தம்	
		(மில்லியன் அமெரிக்க டாலர்)		(ரூ. கோடிகளில்)	
1	திறுவன மேம்பாட்டுக் கூறு	15.00	10.00	25.00	115.00
2	நகர்ப்புற முதலீட்டுக் கூறு				
	கடன்	125.00	56.00	181.00	832.60
	மூலதன மானியம்	112.50	64.00	176.50	811.90
	திட்ட மேம்பாட்டு ஆலோசனை	9.00	0.00	9.00	41.40
	CMDA-க்கு மானியம்	37.00	4.00	41.00	188.60
	மொத்தம்	283.50	124.00	407.50	1,874.50
3	மற்றவை– உலக வங்கி முன் கட்டணம்	1.50	0.00	1.50	6.90
	ஒட்டு மொத்தம்	300.00	134.00	434.00	1,996.40

(1 அமெரிக்க டாலர் ரூ.46-க்கு சமம் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.)

மொத்தமுள்ள ரூ.1,996.40 கோடியில், தொழில்நுட்பக் கூறு மேம்பாட்டிற்காக ரூ.156.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டமைப்புத் திட்டங்களை மேற்கொள்ளுவதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் மற்றும் மூலதன மானியமாக ரூ.1,414.50 கோடி வழங்கப்படவுள்ளது. சென்னை நகரைச் சுற்றிலும் சாலைகள் மற்றும் போக்குவரத்து மேம்பாட்டிற்காக ரூ.188.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொது மக்கள் பங்காக ரூ.230 கோடியும், மீதம் ரூ.6.90 கோடி உலக வங்கிக்கு முன் கட்டணமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது வரையில் மொத்தம் 101 திட்டங்களுக்காக ரூ.1,364.06 கோடியளவிற்கு (அதாவது ரூ.564.05 கோடி கடனாகவும் ரூ.800.01 கோடி மானியமாகவும்) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

[2011 ஆகஸ்ட் 18

அட்டவணை–3

மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறும் திட்டங்கள்

(ரூ. கோடியில்)

எண்	துறைகள்	திட்டங்கள்	திட்ட மதிப்பீடு	கடன் ஒப்புதல்	மானியம் ஒப்புதல்	மொத்த கூடுதல்
1	பாதாள சாக்கடை	25	1202.71	302.25	583.06	885.11
2	குடிநீர் வழங்கல்	18	402.04	108.31	191.77	300.08
3	திடக்கழிவு மேலாண்மை	32	26.33	15.30	8.01	23.31
4	பேருந்து நிலையங்கள்	7	29.30	17.72	1.32	19.04
5	சாலைகள்	18	185.86	101.93	6.48	108.41
6	ஆறுகள் மேம்பாடு	1	31.23	18.74	9.37	28.11
	மொத்தம்	101	1,877.47	564.05	800.01	1,364.06

மேற்கூறிய 101 திட்டங்களில், 72 திட்டங்கள் முடிந்துவிட்டன. 29 திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த 29 திட்டங்களில், 16 திட்டங்கள் 31 மார்ச் 2012-க்குள் முடிக்கப்படும். மீதமுள்ள 13 திட்டங்கள் (ஒரு குடிநீர் திட்டம் மற்றும் 12 பாதாள சாக்கடைத் திட்டங்கள்) முடிப்பதற்கு 31 மார்ச் 2014 வரை ஆகும். கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை WSP முறையில் கட்டுமானம் செய்வதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன்வராதது, WSP தொழில்நுட்ப முறையை வேறு முறைக்கு மாற்றுவது, கடற்கரை கட்டுப்பாட்டு மையத்தின் அனுமதி பெறுவது, நீரேற்றும் நிலையம் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டுவதற்கான இடத்தைத் தேர்வு செய்வது, பொது மக்கள் எதிர்ப்பு மற்றும் நீதிமன்ற வழக்குகள் ஆகியவை இதன் தாமதத்திற்குக் காரணங்கள் ஆகும். எனவே, மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தினை 31 மார்ச் 2014 வரை நீட்டிப்பு செய்யலாம் என்று தமிழக அரசு முடிவு செய்து, அதனை மத்திய அரசு மூலமாக உலக வங்கி ஒப்புதலுக்கு அனுப்பி வைத்துள்ளது.

2011 ஆகஸ்ட் 18]

நீடித்த கட்டமைப்பிற்கான நிதியுதவித் திட்டம் – தமிழ்நாடு திட்டம் (SMIF TN)

ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனமான KfW நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவிருக்கும் திட்டமான நீடித்த கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டம் — தமிழ்நாடு என்னும் திட்டத்திற்கு தமிழக அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இதனுடைய திட்ட காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

இதன் மொத்த திட்ட மதிப்பு ரூ.500 கோடியாகும் (77 மில்லியன் யூரோ) இதில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதியுதவியாக ரூ.422 கோடி (கடன் மற்றும் மூலதன மானியமாக) வழங்கப்படவுள்ளது. தொழில்நுட்பம் சார்ந்த வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்கு மானியமாக ரூ.13 கோடியும், ஒட்டுமொத்த நிதியளிப்பு ஒப்பந்தம் மூலமாக மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுவதற்காக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதிக்கு கடனாக ரூ.65 கோடியும் வழங்கப்படும்.

இதுவரை, இத்திட்டத்தின்கீழ் 14 திட்டங்களுக்கு ரூ.421.89 கோடி (கடன் ரூ.271.09 கோடி, மானியமாக ரூ.150.80 கோடி) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை–4

இந்தத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறும் திட்டங்கள்

(ரூ. கோடியில்)

எண்	துறைகள்	திட்டங்கள்	திட்ட மதிப்பீடு	கடன் ஒப்புதல்	மானியம் ஒப்புதல்	மொத்த கூடுதல்
1	பாதாள சாக்கடை	2	254.61	83.45	78.54	161.99
2	குடிநீர் வழங்கல்	8	188.20	90.33	56.26	146.59
3	சாலைகள் மற்றும் மழை நீர் வடிகால்கள்	3	67.64	44.87	16.00	60.87
4	பாலங்கள்	1	162.51	52.44	0	52.44
	மொத்தம்	14	672.96	271.09	150.80	421.89

[2011 ஆகஸ்ட் 18

மொத்தமுள்ள 14 திட்டங்களில், 2 திட்டங்கள் முடிந்துவிட்டன மீதம் 12 திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு திட்டம் (TNUIP)

ஜப்பானிய நாட்டு பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் மூலமாக தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு திட்டம் என்னும் திட்டத்தினைச் செயல்படுத்த தமிழக அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் மொத்த செயல்பாட்டுக் காலம் சுமார் 5 ஆண்டுகள் ஆகும்.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பு சுமார் 9,824 மில்லியன் யென் (ரூ.345 கோடி) ஆகும். இதில் இந்த நிறுவனத்தின் கடன் வரிசையின் அளவு சுமார் 8,551 மில்லியன் யென் (ரூ.300 கோடி) ஆகும். இந்தத் திட்டத்தில் நகர்ப்புற திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக ரூ.283.23 கோடி ஒதுக்கப்பட்டுள்ளன. இதுதவிர 473 மில்லியன் (ரூ.681 கோடிகள்) தொழில்நுட்ப உதவி மானியமாகவும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலமாக சுகாதாரத் திட்டங்கள் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டங்கள் ஆகியவற்றுக்கு நிதியுதவி அளிப்பதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் திட்ட முடிவு காலத்திற்குள் சுகாதாரத் திட்டங்களை முடிக்க இயலாது என்ற காரணத்தினால் இத்திட்டத்தின் நிதி ஆதாரங்கள் அனைத்தையும் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு பயன்படுத்திக்கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 6 குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. திருச்சி மாநகராட்சி, மாதவரம், பழநி, குன்னூர், இடப்பாடி மற்றும் தேவக்கோட்டை நகராட்சிகள்) இந்தத் திட்டத்தின்கீழ் உள்ள நிதி ஆதாரங்கள் அனைத்தையும் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு உபயோகித்து கொள்வதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்து, மத்திய அரசு மற்றும் ஜப்பானிய நிதி நிறுவன ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதுவரை, இத்திட்டத்தின்கீழ் 6 குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு ரூ.283.23 கோடி (கடன் ரூ.180.50 கோடி மற்றும் மூலதன மானியம் ரூ.102.73 கோடி) வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அனைத்துத் திட்டங்களும் பல்வேறு செயலாக்க நிலைகளிலும், ஒப்பந்தக்காரர்களை நியமிக்கும் நிலைகளிலும் உள்ளன.

2011 ஆகஸ்ட் 18]

2011–12-ல் உத்தேசமாக ஒப்புதல் அளிக்கப்படவிருக்கும் திட்டங்கள்

திடக்கழிவு மேலாண்மை, சுகாதாரம், மழை நீர் வடிகால், குடிநீர் திட்டங்கள், மற்றும் சாலைகள் ஆகிய திட்டங்களுக்கு ரூ.300 கோடியளவிற்கு ஒப்புதல் அளிக்கப்படலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதி (WSPF)

2002—ல் தொடங்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதி, அரசுக்குச் சொந்தமான ஒரு அறக்கட்டளையாகும். குடிநீர் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஏற்படுத்திக் கொள்வதற்காக அவற்றை ஒன்றிணைத்து மூலதனச் சந்தையில் நிதி திரட்டி அதன் மூலமாக கடன் சுமையை ஓரளவுக்குக் குறைப்பதற்காக இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் முதலீட்டாளர்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்தி அதன் மூலமாக பொதுச் சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டுள்ளதே தவிர இலாபம் ஈட்டுவதற்காக அல்ல. மேலும் இந்த அறக்கட்டளையானது, முதலீட்டாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே ஒரு நல்ல உறவினை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் நோக்கங்களாவன:

- உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி உதவி அளித்தல்
- கூட்டு நிதி திட்டத்தின்கீழ் மூலதனச் சந்தையில் நிதி திரட்டுதல்
- குடிநீர் மற்றும் கழிவுநீர் துறைகளில் தனியார் அதிக அளவில் ஈடுபடும் வகையில் பொது மற்றும் தனியார் துறை பங்களிப்பினை ஊக்குவித்தல்
- மூலதனச் சந்தையிலிருந்து நேரடியாக உள்ளாட்சி அமைப்புகள் நிதி திரட்ட உதவுதல்
- குடிநீர் மற்றும் சுகாதார பணிகளில் மத்திய / மாநில அரசின் நேரடி முகவராகச் செயல்படுதல்

[2011 ஆகஸ்ட் 18

குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் திரட்டிய மூலதனங்கள்

இதுவரை ரூ.120.30 கோடியளவிற்கு பத்திர வெளியீட்டின் மூலமாக இந்த அறக்கட்டளை மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டியுள்ளது.

வ. எண்	விவரங்கள்	ரூ. கோடியில்
1	9.20 சதவீதம் – 15 ஆண்டுகள் – மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு 2002 ஆம் ஆண்டு 13 உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து கடன் பத்திரங்கள் வெளியீட்டின் மூலமாக திரட்டப்பட்ட தொகை	30.41
2	7.25 சதவீதம் – 10 ஆண்டுகள் – மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப்பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு வரியில்லாத கடன் பத்திரங்கள் (முதல் பகுதி) 2008 ஆம் ஆண்டு ஏழு உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரியில்லாத கடன் பத்திரங்கள் வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை	6.70
3	7.50 சதவீதம் – 10 ஆண்டுகள் – மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப்பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு வரியில்லாத கடன் பத்திரங்கள் (இரண்டாம் பகுதி) 2010 ஆம் ஆண்டு ஏழு உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரியில்லா கடன் பத்திரங்கள் வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை	83.19
	மொத்தம்	120.30

2011 ஆகஸ்ட் 18]

இந்த கடன் பத்திரங்களின் தற்போதைய மொத்த அசல் தொகை ரூ104.08 கோடியாகும்.

ஒட்டுமொத்த நிதியளிப்பு ஒப்பந்தம் (Master Financing Indenture)

தமிழக அரசும் ஜெர்மானிய நிதி நிறுவனமும் (KfW) சேர்ந்து, நீடித்த நகர்ப்புற கட்டமைப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியை ஒட்டுமொத்த நிதியளிப்பு ஒப்பந்தமாக, கடன் பத்திரங்கள் வெளியிட்டு நிதி திரட்டுவதற்காக நியமனம் செய்தன. இந்தத் திட்டத்தில், 10 சதவீதத்தை தமிழக அரசு மூலதனமாக அளிக்கவும், ஜெர்மானிய நிதி நிறுவனம் தனது பங்காக 35 சதவீதத்தை அளிக்கவும், மீதமுள்ள 55 சதவீத பங்கினை கடன் பத்திரங்கள் வெளியிட்டு நிதி திரட்டவும் வகை செய்கிறது. அதன் அடிப்படையில், ஜெர்மானிய நிதி நிறுவனம், தனது பங்காக சுமார் ரூ65 கோடியை 40 ஆண்டு காலத்தில் திரும்பச் செலுத்தத்தக்க கடனாக 0.75 சதவீத வட்டியில் அளித்துள்ளது. இதில் தற்போது ரூ32.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் மூலதன பங்காக ரூ.19 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. கடன் பத்திர வெளியீட்டிற்கு தமிழக அரசு அனுமதியளித்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் கடன் பத்திரங்கள் வெளியீட்டு ரூ.02 கோடி இந்த நிதியாண்டு (2011—2012) நிதி திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL)

இந்திய நிறுவனங்கள் சட்டம், 1956—ன்படி, இது ஒரு பொது வரையறை நிறுவனமாக ரூ2 கோடி பங்குத் தொகையைக் கொண்டு 1996 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் செலுத்தப்பட்ட பங்குத் தொகையான ரூ1 கோடியில் தமிழக அரசின் பங்காக சுமார் ரூ49 இலட்சம் உள்ளது. இதன் மற்ற பங்குதாரர்கள் ICICI, HDFC மற்றும் IL & FS ஆகிய நிறுவனங்கள் ஆகும்.

[2011 ஆகஸ்ட் 18

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதி, மானிய நிதிகள் போன்ற அரசு அறக்கட்டளைகளை அரசின் ஆணைக்கேற்ப நிர்வகிக்கிறது. மேலும், இது நிதியளிப்புப் பணிகளான முகவர் செயல்பாடு, மூலதன திரட்டு, திட்ட மேம்பாடு, மதிப்பீடு, செயல்பாடு மற்றும் வடிவமைப்பு ஆகிய பல பணிகளை ஆற்றுகிறது.

கட்டமைப்பு திட்டங்களை வடிவமைப்பதில் இந்நிறுவனத்தின் பயன்பாட்டினை பல ஆண்டுகளாக அரசின் பல துறைகளில் பயன்படுத்தியுள்ளனர்.

திட்டத்தின் கருத்துருவாக்கம் முதல் செயலாக்கம் வரை தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் ஒட்டுமொத்த உதவியையும் அளித்து மாநிலத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டிற்காக பாடுபடுகிறது. இந்நிறுவனம் தொடங்கப்பட்டது முதல் இன்று வரை இலாபகரமாக செயல்பட்டு வருகிறது. மேலும், ஈவுத்தொகையை தொடர்ந்து வழங்கி வருகிறது.

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

சென்னை அடையாறு திருவிக. பாலத்தின் கிழக்கு பகுதியில் உள்ள அடையாறு கழிமுகப் பகுதி மற்றும் சிற்றோடை 358 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. வருவாய்த் துறை அரசாணை நிலை எண் 632—ன்படி, 22-12-2003-ல் மீன் வளத் துறைக்குச் சொந்தமான, நில அளவை எண் 4309/1, 2 மற்றும் 8 ஆகியன உள்ளடங்கிய 1,047 மனை மற்றும் 1,256 சதுர அடி நிலப்பரப்பு (58 ஏக்கர்) கொண்ட பகுதியினை சுற்றுச்சூழல் பூங்காவாக உருவாக்க ஆணையிடப்பட்டது. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண் 153 நாள் 10-11-2005-ன்படி, ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்து, அடையாறு சுற்றுச்சூழல் பூங்கா எனும் (Adyar Eco Park Ltd.) சிறப்பு நோக்கு நிறுவனத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் பணிகளை மேற்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2011 ஆகஸ்ட் 18]

அதன்பிறகு வெளியிடப்பட்ட அரசாணையின்படி, அரசின் தலைமைச் செயலாளரைச் தலைவராகக் கொண்டு "அடையாறு பூங்கா அறக்கட்டளை" என்ற அறக்கட்டளை, இந்திய அறக்கட்டளைச் சட்டம், 1882-ன்கீழ், "பூங்கா திட்ட செயல்பாட்டிற்காக", 11-10-2006 அன்று உருவாக்கப்பட்டது. பின்னர் இந்த அறக்கட்டளை "சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை" (Chennai Rivers Restoration Trust) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மேலும் இப்பூங்காவின் நிருவாகம் மற்றும் பராமரிப்பிற்காக கம்பெனி சட்டம் 1956, பிரிவு 25-ன்கீழ் அரசின் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு "அடையாறு பூங்கா" என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் மூலதன பங்குத் தொகையான ரூ10 இலட்சத்தை தமிழக அரசு வழங்கியுள்ளது.

சுமார் 58 ஏக்கர் நிலப்பரப்பில் சுற்றுச்சூழல் சீரமைப்பு வரைவு திட்டத்தை துவங்கி, பொதுமக்கள் மற்றும் அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளின் ஆலோசனைகளின்படி வரைவு பெருந்திட்ட அறிக்கையை தயாரித்து மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, முதல் கட்டமாக அடையாறு சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 58 ஏக்கர் சிற்றோடை பகுதியினை சுற்றுச்சூழல் பூங்காவாக மாற்றியமைக்க மே 2008—ல் பணிகள் துவங்கப்பட்டன. இத்திட்டத்திற்கென அரசு ரூ41 கோடி ஒதுக்கீடு வழங்கியுள்ளது. இதில் இதுவரை ரூ.23.94 கோடி மட்டும் செலவிடப்பட்டுள்ளது.

மாசுபட்ட அடையாறு சிற்றோடையை சீரமைப்பு செய்வதற்காகவே இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. முழுமையான சீரமைப்பு நிலையை அடைவதற்கு சில காலமாகும். எனவே, பூங்காவின் தனித்தன்மையினை கருத்தில் கொண்டு மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட கண்காணிப்பு குழு, பூங்காவினுள் பொதுமக்களை அனுமதிப்பதில் கட்டுப்பாடு வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. அதன்படி, அடையாறு

[2011 ஆகஸ்ட் 18

பூங்காவை சுற்றுச்சூழல் கல்வி மையமாகவும், சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கல்விக்காகவும் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டு, 15-02-2011 முதல் பள்ளி மாணவர்கள் மட்டும் ஆசிரியர்களுடன் அனுமதிக்கப்படுகிறார்கள்.

அடையாறு கழிமுகப் பகுதிகளுக்கான சுற்றுச்சூழல் சீரமைப்பிற்கான திட்டம் (300 ஏக்கர்)

திரு.வி.க. பாலத்தின் கிழக்கு பகுதியில் உள்ள அடையாறு சிற்றோடை மற்றும் கழிமுகப் பகுதியின் சுற்றுச்சூழலை மேம்படுத்தி, பாதுகாத்து, பராமரித்து உலகத் தரத்திலான சுற்றுச்சூழல் பூங்கா மற்றும் கண்காட்சியகத்தை பொதுமக்களின் நன்மைக்காக "அடையாறு பூங்கா" என்ற பெயரில் உருவாக்கிட ரூ.50 கோடியில் இருந்து ரூ.100 கோடியாக உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் சென்னை அதிவிரைவு வட்டச் சாலைகள் அமைக்கும் திட்ட பணியின் செய்யத்தக்கமை அறிக்கை (Feasibility Report) தயாரிக்கும் பணியும் உள்ளடங்கும். அடையாறு கழிமுகப் பகுதி சுற்றுச்சூழல் சீரமைப்பிற்கான பெருந்திட்ட அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்யப்பட்டு, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை முன் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், அரசின் அரசாணை நிலை எண் 312, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.1) துறை, நாள் 23-12-2010-ன்படி, 300 ஏக்கர் சுற்றுச்சூழல் சீரமைப்பு பணியினை செயல்படுத்துவதற்காக ரூ.18.93 கோடியும், பராமரிப்பிற்காக ரூ.5.79 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில கடற்கரை ஒழுங்கு முறை ஆணையம் மற்றும் இந்திய அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் தேவையான அனுமதியைப் பெற்று சீரமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

2011 ஆகஸ்ட் 18]

V. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO)

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தை (TUFIDCO), 1990 ஆம் ஆண்டு மாநில அரசு நிறுவனமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படைத் தேவைகளை முழு அளவில் நிவர்த்தி செய்யும் ஒரு சிறப்பு முகமையாக தமிழ்நாடு அரசு நிறுவியது.

தமிழ்நாடு அரசு, மத்திய அரசால் டிசம்பர் 2005-ல் அறிமுகப்படுத்தப்பட்ட அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்களாகிய ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்-நகர்ப்புற கட்டமைப்பு மற்றும் ஆளுமைக்கான துணைத் திட்டம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற கட்டமைப்புத் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றும் மாநில அரசின் முகவரமைப்பாக டுபிட்கோ நிறுவனத்தை நியமித்தது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்– நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் ஆளுமைக்கான திட்டம்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் என்னும் மிகப் பெரிய திட்டத்தை 3-12-2005 அன்று மத்திய அரசு துவக்கியது. இத்திட்டத்தின் காலம் 7 ஆண்டுகள் (2005-06 முதல் 2011-12 வரை) மாநில அரசின் நகர்ப்புறத்தின் வசதிகள் மற்றும் நகர்ப்புற சமுதாய நோக்கு ஆகியவற்றில் கணிசமான அளவிற்கு மாறுதல் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் இத்திட்டம் துவங்கப்பட்டது. இந்திய அளவில் 65 நகரங்களை தேர்ந்தெடுத்த இத்திட்டத்தில் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களும் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்,

[2011 ஆகஸ்ட் 18

கட்டாய சீர்திருத்தங்கள் மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் சில சீர்திருத்தங்களை செயல்படுத்த வேண்டும்.

இத்திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பணிகள்:

1. குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்
2. பாதாளச் சாக்கடை மற்றும் திடக்கழிவு மேலாண்மை
3. மழைநீர் வடிகால்
4. புராதன பகுதிகள்
5. நீர்நிலைகளைப் பாதுகாத்தல்
6. சாலைகள் மற்றும் போக்குவரத்து

நிதி கூறுபாடு

நகரம்	மத்திய அரசின் பங்கு மானியம்	மாநில அரசின் பங்கு மானியம்	நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன்/ உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு
சென்னை	35%	15%	50%
மதுரை மற்றும் கோயம்புத்தூர்	50%	20%	30%
கடல் நீர் சுத்திகரிப்புத் திட்டங்கள்	80%	10%	10%

மத்திய அரசு இத்திட்டத்திற்காக ரூபாய் 5,250.16 கோடி மதிப்பீட்டில் 48 திட்டங்களுக்கு சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களுக்கு ஒப்பளித்துள்ளது.

2011 ஆகஸ்ட் 18]

ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் நிதி நிலை விவரங்கள் கீழ்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

நகரம்	திட்டங்கள்	திட்ட மதிப்பீடு	மத்திய அரசின் பங்கு மானியம்	மாநில அரசின் பங்கு மானியம்	நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் / உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு
சென்னை	35	3,585.43	1,294.40	533.42	1,757.61
மதுரை	8	838.52	419.26	167.70	251.56
கோயம்புத்தூர்	5	826.20	413.10	165.24	247.86
மொத்தம்	48	5,250.16	2,126.76	866.36	2,257.03

ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் — பிரிவு வாரியாக முன்னேற்றம்

திட்டங்களின் பெயர்	சென்னை				மதுரை				கோயம்புத்தூர்			
	ஒப்பளிக்கப்பட்டது	முடிவுற்றது	செயல்பாட்டில் உள்ளவை	துவங்கப்பட உள்ளது	ஒப்பளிக்கப்பட்டது	முடிவுற்றது	செயல்பாட்டில் உள்ளவை	துவங்கப்பட உள்ளது	ஒப்பளிக்கப்பட்டது	முடிவுற்றது	செயல்பாட்டில் உள்ளவை	துவங்கப்பட உள்ளது
குடிநீர் வசதி	12	3	9		5	4	0	1	2	0	1	1
திடக்கழிவு மேலாண்மை	2		2		1	0	1	0	1	0	1	0
பாதாள சாக்கடைத் திட்டம்	13		12	1	1	0	1	0	1	0	1	0

[2011 ஆகஸ்ட் 18

மேம்பாலங்கள்	3	2	1		0	0	0	0	0	0	0	0
கழிவுநீர் வசதி	4		4		1	0	1	0	1	0	1	0
புராதன பகுதிகளை மேம்படுத்துதல்	1		1		0	0	0	0	0	0	0	0
மொத்தம்	35	5	29	1	8	4	3	1	5	0	4	1

அனுமதி அளிக்கப்பட்டுள்ள 48 திட்டங்களில் 9 திட்டங்கள் முடிவுற்றுள்ளன. பின்வரும் 36 திட்டங்கள் வெவ்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

(ரூபாய் கோடியில்)

வரிசை எண்	திட்டங்களின் பெயர்	திட்ட மதிப்பீடு
	சென்னை	
1	சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் – குடிநீர் வசதி	322.00
2	தகவல் தொழில்நுட்பச் சாலையில் குடிநீர் மற்றும் கழிவு நீர் வசதிகளை ஏற்படுத்துதல் – சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்	41.77
3	பெருங்குடியில் மேலும் ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் – சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்	31.48
4	சென்னை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்	36.57
5	சென்னை மாநகரின் இரயில்வே சந்திக் கடவுகளில் அமையவுள்ள இரயில்வே மேம்பாலம் மற்றும் சுரங்கப் பாதைகள் (6)	44.41
6	போரூர் பேரூராட்சியில் குடிநீர் வசதியை மேம்படுத்துதல்	12.36
7	மதுரவாயல் மூன்றாம் நிலை நகராட்சியில் குடிநீர் வசதியை மேம்படுத்துதல்	23.30

8	ஆவடி நகராட்சியில் குடிநீர் வசதியை ஏற்படுத்துதல்	103.84
9	உள்ளகரம் புழுதிவாக்கம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	28.08
10	ஆவடி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	158.05
11	அம்பத்தூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	130.91
12	ஆலந்தூர், பல்லவபுரம் மற்றும் தாம்பரம் நகராட்சிகளுக்கான ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்	44.21
13	நெசப்பாக்கத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு வசதியை ஏற்படுத்துதல்	54.57
14	வடிகால் வசதி – சென்னை மாநகராட்சி (வடக்கு பேசின்)	359.86
15	வடிகால் வசதி – சென்னை மாநகராட்சி (மத்திய பேசின்)	345.00
16	வடிகால் வசதி – சென்னை மாநகராட்சி (கிழக்கு பேசின்)	444.07
17	வடிகால் வசதி – சென்னை மாநகராட்சி (தெற்கு பேசின்)	298.97
18	தாம்பரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	160.97
19	மதுரவாயல் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	57.45
20	அம்பத்தூர் நகராட்சியில் குடிநீர் வசதி	267.08
21	ஈ.வெ.ரா. பெரியார் சாலையிலுள்ள புராதன சின்னங்களை மேம்படுத்துதல்	6.10
22	உள்ளகரம் புழுதிவாக்கம் நகராட்சியில் குடிநீர் வசதியை மேம்படுத்துதல்	24.24
23	நெற்குன்றம் கிராமத்தில் குடிநீர் வசதியை ஏற்படுத்தல்	19.17

24	போரூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	38.29
25	ஆலந்தூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	64.39
26	திருவொற்றியூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	85.11
27	பெருங்குடி பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	20.19
28	திருமழிசை பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	20.47
29	பள்ளிக்கரணை பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	58.61
	மொத்தம்	3,301.52
	கோயம்புத்தூர்	
30	கோயம்புத்தூர் மாநகராட்சியில் குடிநீர் வசதியை மேம்படுத்துதல்	113.74
31	கோயம்புத்தூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்	96.51
32	கோயம்புத்தூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம்	377.13
33	கோயம்புத்தூர் மாநகராட்சியில் வடிகால் வசதி	180.00
	மொத்தம்	767.38
	மதுரை	
34	மதுரை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்	74.29
35	மதுரை மாநகராட்சியில் வடிகால் வசதியை மேம்படுத்துதல்	251.81
36.	மதுரை மாநகராட்சியில் விடுபட்ட இடங்களுக்கான பாதாள சாக்கடைத் திட்டம்	229.34
	மொத்தம்	555.44
	பெரு மொத்தம்	4,624.27

2011 ஆகஸ்ட் 18]

கீழ்க்காணும் 2 திட்டங்கள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளன:

(ரூபாய் கோடியில்)

வரிசை எண்	திட்டங்களின் பெயர்	திட்ட மதிப்பீடு
1	கோயம்புத்தூர் மாநகராட்சியை சுற்றியுள்ள 16 பேரூராட்சிகளில் குடிநீர் வசதியை ஏற்படுத்துதல் – தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்	58.82
2	மதுரை மாநகரை சுற்றியுள்ள பகுதிகளுக்கு கூட்டுக்குடிநீர் திட்டம் – தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்	201.42
	மொத்தம்	260.24

கீழ்க்காணும் திட்டம் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் நிலையில் உள்ளது:

(ரூபாய் கோடியில்)

வரிசை எண்	திட்டங்களின் பெயர்	திட்ட மதிப்பீடு
1	நாளொன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன்கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு திட்டம் கோயம்பேட்டில் ஏற்படுத்துதல்–சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்	116.10

[2011 ஆகஸ்ட் 18

2011–12 ஆம் ஆண்டு

நடப்பு 2011-12 ஆம் ஆண்டில் கோயம்பேட்டில் ரூ.116.10 கோடி திட்ட மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் கழிவு நீர் சுத்திகரிப்பு திட்டம் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

இவ்வாண்டில் மேலும் 8 திட்டங்கள் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விவரங்கள் பின்வருமாறு:

வரிசை எண்	திட்டங்களின் பெயர்	திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்)
1	மதுரை மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்	74.29
2	கோயம்புத்தூர் மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்	96.51
3	போரூர் பேரூராட்சியில் குடிநீர் வசதியை மேம்படுத்துதல்	12.36
4	ஆலந்தூர், பல்லாவரம் மற்றும் தாம்பரம் நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை	44.21
5	ஈ.வெ.ரா. பெரியார் சாலையிலுள்ள புராதன சின்னங்களை மேம்படுத்துதல்	6.10
6	ஆலந்தூர் நகராட்சியில் குடிநீர்த் திட்டம்	64.39
7	பெருங்குடியில் மேலும் ஒரு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் – சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்	31.48
8	நெசப்பாக்கத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் – சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்	54.57
	மொத்தம்	383.91

2011 ஆகஸ்ட் 18]

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

நகரங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம், ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டமானது நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுமையின்கீழ் வரும் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று நகரங்கள் தவிர தமிழகத்திலுள்ள அனைத்து நகரங்களுக்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின் நிதி ஒப்பளிப்பு விகிதப்படி மத்திய அரசின் பங்கீடு 80%, மாநில அரசின் பங்கீடு 10%, நகர உள்ளாட்சி அமைப்பு மற்றும் நிதி நிறுவனங்களின் பங்கு 10% ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் நகர உட்கட்டமைப்பு திட்டங்களான குடிநீர், பாதாள சாக்கடை, நடக்கழிவு மேலாண்மை, சாலைகள், மற்றும் வடிகால்கள் ஆகியவை அனுமதிக்கத்தக்க திட்டங்கள் ஆகும்.

தமிழ்நாட்டிற்கு இத்திட்டத்திற்கான மத்திய அரசின் மொத்த திட்ட கால ஒதுக்கீடு ரூபாய் 705.97 கோடி ஆகும். இத்திட்டத்தின்கீழ் மாநில அளவிலான ஒப்பளிப்புக் குழு ஒப்பளித்துள்ள திட்டங்களுக்கு மத்திய அரசின் பங்கு ரூ.706.18 கோடி.

மாநில அளவிலான ஒப்பளிப்புக் குழு ஒப்பளித்துள்ள 122 திட்டங்களில் 88 திட்டங்கள் முடிவடைந்துள்ளன. 13 திட்டங்கள் முன்னேற்ற நிலையில் உள்ளன. எஞ்சிய 21 திட்டங்கள் துவங்கப்பட உள்ளன.

[2011 ஆகஸ்ட் 18

நடப்பு நிதியாண்டில் (2011-12) கீழ்க் கண்ட 10 திட்டங்கள் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வரிசை எண்	நகர உள்ளாட்சி அமைப்பு	திட்டம்	தொகை (ரூபாய் கோடியில்)
1	கரூர்	சாலைகள் மற்றும் வடிகால்கள்	8.30
2	பெரம்பலூர்	சாலைகள் மற்றும் வடிகால்கள்	1.88
3	தஞ்சாவூர்	குடிநீர்	9.04
4	ஈரோடு	குடிநீர்	5.88
5	இராசிபுரம்	குடிநீர்	6.69
6	விழுப்புரம்	குடிநீர்	9.55
7	மாமல்லபுரம்	பாதாளச் சாக்கடைத் திட்டம்	6.08
8	பாலையம்	குடிநீர்	1.59
9	கோடைக்கானல்	குடிநீர்	2.37
10	ஒட்டன்சத்திரம்	குடிநீர்	5.81

புதிய திட்டங்கள்

மாநில அளவிலான ஒப்பளிப்புக் குழு ஏற்கெனவே ஒப்பளித்துள்ள கீழ்க்கண்ட திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் (2011-12) மத்திய அரசின் ஒப்புதல் பெற்றபின் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

வரிசை எண்	நகர உள்ளாட்சி அமைப்பு	திட்டம்	தொகை (ரூபாய் கோடியில்)
1	காங்கேயம்	குடிநீர்	29.67
2	வந்தவாசி	குடிநீர்	9.31
3	காரைக்குடி	குடிநீர்	13.92
4	தாராபுரம்	குடிநீர்	9.18
5	ஆத்தூர்	குடிநீர்	4.59
6	கோவில்பட்டி	குடிநீர்	70.60
7	திருச்செங்கோடு	குடிநீர்	6.04
8	கம்பம்	குடிநீர்	18.53
9	நாகர்கோவில்	பாதாளச் சாக்கடைத் திட்டம்	65.56
		மொத்தம்	227.40

2011 ஆகஸ்ட் 18]

பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்ட நிதி

பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு பதிலாக மார்ச் 2005-ல் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

பெருநகரத் திட்டத்தின் நோக்கமானது அடிப்படை வசதி திட்டங்களை பெருநகரங்களில் தொடர்ச்சி அடிப்படையில் உருவாக்குவதாகும். மத்திய அரசின் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட வழிமுறைகளின்படி மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புகளிலிருந்து சுழற்சி நிதியை உருவாக்கி அந்த நிதியின் மூலம் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும். அதன் அடிப்படையில் இதுவரை ரூபாய் 953.30 கோடி சுழற்சி நிதியாக டுபிட்கோ உருவாக்கி உள்ளது.

பெருநகர திட்ட பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை மூலமாக உருவான சுழற்சி நிதிதான் பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் நிதி ஆதாரமாகும். மத்திய அரசால் வகுக்கப்பட்ட வழிமுறைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்த சுழற்சி நிதியினை சென்னை பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புறங்களில் அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்ற பயன்படுத்த வேண்டும்.

இத்திட்டத்தின்மூலம் டுபிட்கோ, இதுவரை ரூபாய் 3,243.68 கோடி மதிப்பீட்டில் 28 திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. இதனில் பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டு நிதி பங்கு ரூபாய் 662.42 கோடியாகும்.

நடப்பு நிதியாண்டு 2011-12-ல் இத்திட்டத்தின்கீழ். ரூபாய் 290.00 கோடியை பலதரப்பட்ட அடிப்படை வசதி திட்டங்களான

[2011 ஆகஸ்ட் 18

குடிநீர் விநியோகம், பாதாள சாக்கடைத் திட்டம், மழை நீர் வடிகால் திட்டம் போன்றவைகளுக்கு, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மாநகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுமதி அளிக்க உத்தேசித்துள்ளது.

டுபிட்கோ அடிப்படை வசதி நிதித் திட்டம்

டுபிட்கோ பலதரப்பட்ட அடிப்படை வசதி திட்டங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள், வாரியங்கள் மற்றும் பலதரப்பட்ட அரசு அமைப்புகளுக்கு தன் சொந்த நிதியான பங்கு மூலதனம், உபரி நிதி, வங்கிமூலம் பெறப்படும் கடன் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்பு நிதி போன்றவற்றிலிருந்து டுபிட்கோ அடிப்படை வசதி நிதி திட்டத்தின்கீழ் கடன் அளித்து வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் நூறு சதவீதம் வரை திட்ட மதிப்பீட்டிற்கு கடன் அளிக்கப்படுகிறது. மேலும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் குறைந்தபட்ச தேவைத் திட்டம் போன்ற திட்டங்களின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பிற்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் கடனை உள்ளாட்சி அமைப்புகள் வணிகம் சார்ந்த மற்றும் செலவு மீட்புத் திட்டங்களுக்கு 10 ஆண்டுகளிலும், சேவை திட்டங்களுக்கு 15 ஆண்டுகளிலும் திரும்ப செலுத்த வேண்டும்.

நடப்பு நிதியாண்டு 2011-12-ல் இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 300.00 கோடி பலதரப்பட்ட அடிப்படை வசதி திட்டங்களுக்கு அனுமதி அளிக்க உத்தேசித்துள்ளது.

2011 ஆகஸ்ட் 18]

VI. புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழகம்

இந்தியாவில் முதன் முறையாக பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பின் மூலம் திருப்பூர், அதன் சுற்றுப்புற பகுதிகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டது. தமிழக அரசு, முன்னாள் திருப்பூர் நகராட்சி மற்றும் சிறப்பு நோக்கு நிறுவனமாகத் துவக்கப்பட்ட புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றுடன் சலுகை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. திருப்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் திட்டமான 185 எம்.எல்.டி. குடிநீர்த் திட்டத்தை அமலாக்குவது இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும். இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா 20-06-2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு திட்டம் முடிவடைந்து 2005-ல் செயலாக்கப்பட்டது.

திருப்பூர் மாநகராட்சியின் குடிநீர் தேவையும் இத்திட்டம் மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும் 18 ஊராட்சிகள் மற்றும் 5 வழியோர ஒன்றியங்களுக்குட்பட்ட சுமார் 600 கிராமப்புற குடியிருப்புகள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்து வருகின்றன. இத்திட்டத்தின்மூலம் திருப்பூர் மாநகராட்சியின் பெரும்பாலான பகுதிகளில் பாதாள கழிவுநீர் அகற்றும் வசதியும் நிறைவேற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், மாநகராட்சியில் உள்ள அடித்தள மக்கள் பயன்பெறும் பொருட்டு குறைந்த செலவில் கழிப்பறை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு காரணங்களால் திருப்பூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள சலவை மற்றும் சாயப்பட்டறைகள் தங்களது தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் விதிக்கப்பட்ட விதிகளின்படி சுத்திகரிக்க முடியாத நிலை நீடித்து வந்தது. இப்பிரச்சினை உயர் நீதிமன்ற விசாரணையில் இருந்துபின் கடந்த சனவரி 2011-ல் உயர் நீதிமன்றம், தொழிற்சாலைகள் கழிவு நீரை மாசுக் கட்டுப்பாட்டு வாரிய விதிகளின்படி சுத்திகரிக்க தேவையான உபகரணங்கள் நிறுவும் வரை தொழிற்சாலைகளை மூடிவைக்க தீர்ப்பளித்தது. இதனால் திருப்பூரில் உள்ள மாசுக் கட்டுப்பாடு விதிகளை கடைப்பிடிக்காத

[2011 ஆகஸ்ட் 18

சாயத் தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. இதனைத் தொடர்ந்து இத்திட்டத்தின் தண்ணீர் தேவை படிப்படியாக குறைந்தது. இதன் விளைவாக கடந்த 4 மாதங்களில் தொழிற்சாலைகளுக்கான தண்ணீர் தேவை வெகுவாக குறைந்துள்ளது.

இருப்பினும், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம், திருப்பூர் மாநகராட்சி, ஊராட்சிகள் மற்றும் வழியோர குடியிருப்புகள் ஆகியவற்றிலுள்ள மக்களுக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகிறது. மேலும், தொழிற்சாலைகள் மீண்டும் செயல்பட ஆரம்பிக்கும்போது தொழிற்சாலைகளுக்கு தேவையான தண்ணீரை வழங்க இயலும் நிலையில் உள்ளது. தொழிற்சாலைகள் மீண்டும் செயல்பட துவங்கும்போது புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழக நிதி நிலைமையில் முன்னேற்றம் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

VII. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை அளிக்க தமிழக அரசு முன்னுரிமை அளித்து வருகின்றது. நகர மற்றும் ஊரக பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் அமைத்து தரும் சீரிய நோக்கோடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிறுவப்பட்டது. வாரிய நிறுவன கட்டமைப்பிற்கென வேலூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகரங்களை தலைமையிடமாகக் கொண்டு நான்கு தலைமைப் பொறியாளர் அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம், மேலாண்மை இயக்குநரை தலைவராகக் கொண்டு தொழில்நுட்பப் பிரிவு, கணக்குப் பிரிவு மற்றும் நிருவாகப் பிரிவுகளுடன் இயங்கி வருகிறது. ஓகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளூரைடு பாதிப்பு குறைப்பு திட்டத்திற்கென தனியாக திட்ட நிருவாகப் பிரிவு சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது. தலைமைப் பொறியாளர் மற்றும் உதவி அலுவலர்களுடனான திட்ட நிருவாகப் பிரிவும், திட்ட நிருவாக கலந்தாலோசகர் அலுவலகமும் தருமபுரியில் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் திறமை வாய்ந்த தொழில்நுட்ப மற்றும் உதவி அலுவலர்களைக் கொண்டுள்ளது.

2011 ஆகஸ்ட் 18]

செயல்பாடுகள்:

1. பின்வரும் திட்டங்களுக்கெனத் திட்டமிடுதல், ஆய்வு, வடிவமைப்பு, செயலாக்கம் மற்றும் மக்கள் பயனுக்குக் கொண்டு வருதல் ஆகியவை வாரியத்தின் செயல்பாடுகளில் முக்கியமானவை ஆகும்.

   - ஊரகக் குடிநீர்த் திட்டங்கள்
   - நகரக குடிநீர்த் திட்டங்கள்
   - பெரிய அளவிலான திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்
   - பாதாள சாக்கடைத் திட்டங்கள்

2. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்

3. குடிநீர் தரம் கண்காணித்தல்

4. தகவல் திறன் மேம்பாட்டு பிரிவு மூலமாக தகவல்—கல்வி—தொடர்பு மற்றும் மனித வள மேம்பாட்டிற்கான செயல்பாடுகள் மேற்கொள்ளுதல்.

குடிநீர் வழங்கு வரையறைகள்:

அ.	ஊரகக் குடிநீர் வழங்கல்	:	நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர்
ஆ.	நகரகக் குடிநீர் வழங்கல்	:	
i.	பேரூராட்சிகள்	:	நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர்
ii.	நகராட்சிகள்	:	நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர்
iii.	மாநகராட்சிகள்	:	நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர்

[2011 ஆகஸ்ட் 18

ஊரகக் குடிநீர்த் திட்டம்:

ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின்கீழ் மாநில அரசு நிதி உதவி மற்றும் தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மத்திய அரசு இந்திய ஊரகப் பகுதியில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வசதியினை உறுதி செய்யும் வகையில் திருத்தப்பட்ட விதிமுறைகளை வகுத்து வழங்கியுள்ளது. குடிநீர் மற்றும் சுகாதார வசதியில் இலக்கினை அடைய மத்திய அரசின் விதிமுறைகளின்படி சீரிய முறையில் ஊரகக் குடிநீர் திட்டங்களை செயலாக்க மாநில அளவிலான குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுவினை தமிழக அரசு அமைத்து ஆணை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஊரகப் பகுதிகளிலுள்ள அரசு பள்ளிகள், அங்கன்வாடிகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ விடுதிகள் போன்றவற்றிற்கு குடிநீர் வசதிகள் அமைக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் தற்போதைய ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர் வசதி நிலை பின்வருமாறு:

மொத்த குடியிருப்புகள்	—	93,699
முழுமையாக குடிநீர் வசதி பெற்றவை (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டருக்கு மேல்)	—	86,679
பகுதியான குடிநீர் வசதி பெற்றவை (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 முதல் 39 லிட்டருக்குள்)	—	7,020

2011–12 ஆம் ஆண்டின் திட்டங்கள்:

2011-12 ஆம் ஆண்டில் தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் நிதியுதவியாக ரூ.367 கோடியும், மாநில அரசின் நிதி உதவியாக ரூ.802.03 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திட்டங்கள் வாரியாக தேசிய ஊரகக் குடிநீர்த் திட்ட நெறிமுறைகளின்படி ஒதுக்கப்பட்டுள்ள நிதி மற்றும் அதற்குண்டான

2011 ஆகஸ்ட் 18]

மாநில அளவிலான பங்களிப்பாக ஒதுக்கப்பட்ட குறைந்தபட்ச தேவை திட்ட நிதி பற்றிய விவரங்கள்:

வ. எண்	திட்டங்கள் பற்றிய விவரங்கள்	ஒதுக்கப் பட்ட விழுக்காடு	மத்திய மற்றும் மாநில பங்களிப்புகளின் விவரம் மத்திய : மாநிலம்
1	ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குதல் (அரசுப் பள்ளி மற்றும் (பொது நிறுவனங்கள் உட்பட)	75	50:50
2	குடிநீர் தரம் பாதிக்கப் பட்ட குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குதல்		
3	நிலத்தை நீர்வளத்தை உருவாக்குதல்	10	100%மத்திய அரசு
4	பயனிலுள்ள திட்டங்களுக் கான இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள்	10	50:50
5	சார்பு நடவடிக்கைகள்	5	100%மத்திய அரசு
	மொத்தம்	100	

பகுதியளவே குடிநீர் பெற்று வரும் 7,020 ஊரகக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி கீழே குறிப்பிடப்பட்ட திட்டங்களின்மூலம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 6,000 ஊரகக் குடியிருப்புகளுக்கு 2011-2012 ஆம் ஆண்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளித்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

வ. எண்	விவரம்	குடிநீர் வசதி அளிக்கப் படவுள்ள குடியிருப்பு களின் எண்ணிக்கை
1	எடுத்துக்கொள்ளப்படவுள்ள குடியிருப்புகள் பராமரிப்பிலுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் மேம்படுத்தும் பணிகள் (நீரோதாரம் பெருக்குதல், நீருந்துகள் அமைத்தல், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்)	5,588
2	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான குடியிருப்புகளுக்கு தனி மின்விசைத் திட்டம் மூலம் குடிநீர் வழங்குதல்	338
3	குடிநீரின் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதிகள் அளித்தல்	77
4	செயலாக்கப்பட உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்குதல்	966
5	2010–11 ஆம் ஆண்டில் சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட குடியிருப்புகள்	51
	மொத்தம் ..	7,020

2011 ஆகஸ்ட் 18]

தோற்றுவிக்கப்பட்ட நீராதாரத்தின் நீடித்த நிலைத் தன்மையை உறுதி செய்ய, நீராதாரத்தின் அருகில் நீர்செறிவூட்டுக் கட்டமைப்புகள் நிறுவப்படுகின்றன.

நடப்பாண்டில் 703 நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் சுமார் ரூ.38.00 கோடியில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கூட்டுக் குடிநீர்த் திட்டம்:

ஒரே நீராதாரத்தைக் கொண்டு ஊரகநகரப் பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், குறைந்தபட்ச தேவைத் திட்டம், தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம் மற்றும் உலக வங்கி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன் செயலாக்கப்பட்டு வருகிறது.

15 மாவட்டங்களில் ரூ.378.79 கோடி மதிப்பீட்டில் 21.55 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 28 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தற்பொழுது செயலாக்கத்தில் உள்ளன. இவற்றில் 25 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.297.89 கோடி மதிப்பீட்டில் 18.34 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 2011-12-ல் முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது.

பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் :

ரூ3,276.62 கோடி மதிப்பீட்டிலான பின்வரும் பெரிய அளவிலான 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன.

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை ரூ.கோடியில்	மக்கள் தொகை
1	மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர் மற்றும் 2 நகராட்சிகள், 6 பேரூராட்சிகள் மற்றும் 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,430 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் ஒரு பேரூராட்சிக்கான காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	784.00	12,15,000
2	கோபம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள், 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 965 ஊரகக் குடியிருப்புகளுக்கான பில்லூர் அணையினை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.	224.92	9,88,000
3	விருதுநகர் மாவட்டத்தில் 7 பேரூராட்சிகள் மற்றும் 395 ஊரகக் குடியிருப்புகளுக்கான முக்கூடல் அருகே தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	173.00	3,84,000
4	விருதுநகர் மாவட்டத்தில் 755 ஊரகக் குடியிருப்புகளுக்கான சிவலப்பேரி அருகே தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	234.00	5,43,000

5	விருதுநகர் மாவட்டத்தில் 637 ஊரகக் குடியிருப்புகளுக்கான வல்லநாடு அருகே தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	190.00	3,53,000
6	நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி, கொள்ளிடம், செம்பனார்கோயில் மற்றும் மயிலாடுதுறை ஒன்றியங்களைச் சார்ந்த 295 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் 315 வறியோர் குடியிருப்புகளுக்கான கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	105.70	3,08,000
7	சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், நரசிங்கபுரம் நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,345 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	270.00	10,37,000
8	வேலூர் மாவட்டத்தில் வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரக குடியிருப்புகளுக்கான காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	1,295.00	18,68,000
	மொத்தம்	3,276.62	66,96,000

[2011 ஆகஸ்ட் 18

நகரக் குடிநீர்த் திட்டங்கள்:

நகரப் பகுதிகளுக்கான குடிநீர் வழங்கும் திட்டங்கள் மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (JnNURM) மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் (UIDSSMT), உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III (TNUDP-III) ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதி உதவித் திட்டம் (KfW), ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு நிதி உதவித் திட்டம் (JICA) மாநில அரசின் குறைந்தபட்ச தேவைத் திட்டம் மற்றும் நகரக் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னைப் பெருநகர் நீங்கலாக அனைத்து நகரங்களின் தற்போதைய குடிநீர் நிலவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

110 லிட்டர் மற்றும் அதற்கும் அதிகமாக பெறும் மாநகராட்சிகள்	70 – 109 லிட்டர் வரை பெறும் மாநகராட்சிகள்	70 லிட்டருக்கும் குறைவாக பெறும் மாநகராட்சிகள்	மொத்தம்
3	6	0	9
90 லிட்டர்கள் மற்றும் அதற்கும் அதிகமாக பெறும் நகராட்சிகள்	50 – 89 லிட்டர் வரை பெறும் நகராட்சிகள்	50 லிட்டருக்கும் குறைவாக பெறும் நகராட்சிகள்	
45	92	13	150
70 லிட்டர் மற்றும் அதற்கும் அதிகமாக பெறும் பேரூராட்சிகள்	40 – 69 லிட்டர் வரை பெறும் பேரூராட்சிகள்	40 லிட்டருக்கும் குறைவாக பெறும் பேரூராட்சிகள்	
348	206	5	559

2011 ஆகஸ்ட் 18]

நடைபெற்று வரும் திட்டங்கள்:

7 ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதியுதவி மற்றும் 4 ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் உள்ளடக்கிய 19 நகராட்சிகள் மற்றும் 27 பேரூராட்சிகள் பயன்பெறும் வண்ணம் 46 நகரக குடிநீர்த் திட்டங்கள் ரூ.367.48 கோடி மதிப்பீட்டில் 14.75 இலட்சம் மக்கள் பயன்பெறும் வண்ணம் நடைபெற்று வருகின்றன. இவற்றில் 30 நகரக குடிநீர்த் திட்டங்களை 4 நகராட்சிகள் மற்றும் 26 பேரூராட்சிகளில் உள்ள 5.68 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 2011-12-ல் முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது.

மேற்கூறியபடி ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன் பின்வரும் 7 நகராட்சிகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் ரூ.165.33 கோடி மதிப்பீட்டில் சுமார் 3.61 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் இந்த ஆண்டு செயலாக்கத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

1. திருவண்ணாமலை நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் — ரூ.36.66 கோடி.

2. உதகமண்டலம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் — ரூ.27.20 கோடி.

3. கடையநல்லூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் — ரூ.21.41 கோடி.

4. பள்ளிப்பாளையம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் — ரூ.11.66 கோடி.

5. இளாம் சூரர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் — ரூ.18.57 கோடி.

6. சூரர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் — ரூ.24.67 கோடி.

7 தாந்தோனி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் — ரூ.25.16 கோடி.

[2011 ஆகஸ்ட் 18

ஐப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவன நிதி உதவியுடன் பின்வரும் 4 நகராட்சிகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் ரூ.62.29 கோடி மதிப்பீட்டில் சுமார் 2.38 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் இந்த ஆண்டு செயலாக்கத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

1. பழனி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் — ரூ.21.60 கோடி

2. குன்னூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் — ரூ.13.85 கோடி

3. எடப்பாடி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் — ரூ.18.52 கோடி

4. தேவகோட்டை நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் — ரூ.18.32 கோடி

பாதாள சாக்கடைத் திட்டங்கள்:

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாவட்டத் தலைநகரங்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி நகரங்களில், பாதாள சாக்கடைத் திட்டங்களை உலக வங்கி நிதியம் தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டம்—III (TNUDP-III), ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW), மத்திய அரசின் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம் (NRCP), ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் / சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (JnNURM/UIDSSMT) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ஆகியவற்றின் நிதியுதவியுடன் செயல்படுத்தி வருகின்றது.

மொத்தமுள்ள 31 மாவட்டத் தலைநகரங்களில் (சென்னை நீங்கலாக)

- 7 நகரங்களில் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. (திருப்பூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர், கரூர் மற்றும் உதகமண்டலம்)

2011 ஆகஸ்ட் 18]

- 6 நகரங்களில் உள்ளாட்சி அமைப்புகளால் செயலாக்கப்பட்டு வருகிறது. (வேலூர், திண்டுக்கல், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் காஞ்சிபுரம்)

- 17 நகரங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் செயலாக்கப்பட்டு வருகிறது. (கடலூர், நாமக்கல், இராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர், புதுக்கோட்டை, சிவகங்கை, கிருஷ்ணகிரி, திருவாரூர், தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், திருவள்ளூர், பெரம்பலூர், தேனி, நாகப்பட்டினம் மற்றும் அரியலூர்)

- 1 நகரம் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. (நாகர்கோவில் — நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட வேண்டியுள்ளது)

நடப்பு நிதியாண்டில் 7 நகரங்களில் (கடலூர், திருவண்ணாமலை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாமக்கல், தருமபுரி மற்றும் விழுப்புரம்) இத்திட்டம் நிறைவேற்றி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்ட தலைநகரங்கள் அல்லாத பிற நகரங்களுக்கான பாதாள சாக்கடைத் திட்டங்கள்:—

- 2 நகரங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் முடிக்கப்பட்டுள்ளது. (மயிலாடுதுறை, இளம்சுரூர்)

- 2 நகரங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயலாக்கத்தில் உள்ளது. (சின்னமனூர் மற்றும் மறைமலை நகர்)

- 1 நகரத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ள நிலையில் உள்ளது. (உடுமலைப்பேட்டை)

2 நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டம் 2011-12-ல் முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது. (சின்னமனூர் மற்றும் மறைமலை நகர்)

பேரூராட்சிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டங்கள் :

- 2 பேரூராட்சிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் செயலாக்கத்தில் உள்ளது. (மாமல்லபுரம் மற்றும் திருச்செந்தூர்)

1 பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் 2011-12-ல் முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது. (மாமல்லபுரம்)

[2011 ஆகஸ்ட் 18

சிறப்புத் திட்டம்:

ஓகேனக்கல் குடிநீர் மற்றும் ஃப்ளோரைடு பாதிப்பு குறைப்பு திட்டம்.

ஃப்ளோரைடால் பாதிக்கப்பட்டுள்ள தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்கும் பொருட்டு ஓகேனக்கல் குடிநீர்த் திட்டம் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- திட்ட மதிப்பீடு — ரூ.1928.80 கோடி.
- ஆண்டு பராமரிப்பு மதிப்பீடு — ரூ.63.67 கோடி.

பயனாளிகள்:

- நகராட்சிகள் — 1. தருமபுரி
  2. கிருஷ்ணகிரி
  3. ஓசூர்
- பேரூராட்சிகள் — 17
- ஊராட்சி ஒன்றியங்கள் — 18
- வீடுகள் குடியிருப்புகள் — 6,755
- பயன்பெறும் மக்கள் தொகை — 2980 இலட்சம்

நிதி ஆதாரம்:

இத்திட்டத்திற்காக கடன் ஒப்பந்தம் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனம் மற்றும் இந்திய அரசுக்குமிடையே தொகுப்பு-1 மற்றும் 2-க்கான ரூ.1,585.60 கோடிக்கு கையெழுத்தானது. மேலும் இக்குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ரூ.307.48 கோடி குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின்கீழ் தமிழக அரசின் நிதியாகவும் ரூ.35.72 கோடி நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் பங்களிப்பாகவும் பெற்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் செவ்வனே செயல்படுத்தப்படும் வகையில் ஐந்து தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

2011 ஆகஸ்ட் 18]

தொகுப்பு – 1:

இத்தொகுப்பில் தலைமையிடம், நீர் சுத்திகரிப்பு நிலையம், நீர் உந்து நிலையம், இயல்பு நீர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீருந்து குழாய் 11.61 கி.மீ, பெரிய சமநிலை நீர்த் தேக்கத் தொட்டி மடம் என்ற இடத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தொகுப்பு 1-க்கான பணி 35 விழுக்காடு முடிவுற்றுள்ளது. இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தொகுப்பின் பணிகள் அனைத்தும் 2012 ஆகஸ்ட் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

தொகுப்பு – 2:

இத்தொகுப்பில் மடம் என்ற கிராமத்தில் அமைக்கப்படுகின்ற பெரிய சமநிலை நீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து ஊத்தங்கரை வரை 2,387 கி.மீ. நீளமுள்ள பிரதான குழாய்கள் மற்றும் நீர் கடத்தும் குழாய்கள்மூலம் தருமபுரி நகராட்சி, 5 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள (பெண்ணாகரம், நல்லாம்பள்ளி, தருமபுரி, மாத்தூர் மற்றும் ஊத்தங்கரை) 1,653 ஊரகக் குடியிருப்புகள், மற்றும் 2 பேரூராட்சிகளுக்கு (பெண்ணாகரம் மற்றும் ஊத்தங்கரை) குடிநீர் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகுப்பின்மூலம் 8.40 இலட்சம் மக்கள் பயன்பெறுவர். தொகுப்பு 2-க்கான பணி 52 விழுக்காடு முடிவுற்றுள்ளது. இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தொகுப்பின் பணிகள் அனைத்தும் 2012 ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

தொகுப்பு – 3:

இத்தொகுப்பில் தொகுப்பு 2 பிரதான குழாயிலிருந்து தருமபுரி அருகே பிரித்து எடுக்கப்பட்டு அரூர் வரை 1,572 கி.மீ. நீளமுள்ள பிரிவு பிரதான குழாய் மற்றும் பிரிவு குழாய்மூலம் தருமபுரி மாவட்டத்தில் 3 ஒன்றியங்களிலுள்ள (மொரப்பூர், அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி) 1,083 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 5 பேரூராட்சிகளுக்கு (பிமல்லாபுரம், அரூர், கடத்தூர், கம்பைநல்லூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி) குடிநீர் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகுப்பின்மூலம் 4.40 இலட்சம் மக்கள் பயன்பெறுவர். தொகுப்பு 3-க்கான பணி 19 விழுக்காடு முடிவுற்றுள்ளது. இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தொகுப்பின் பணிகள் அனைத்தும் 2012 டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

[2011 ஆகஸ்ட் 18

தொகுப்பு–4:

இத்தொகுப்பில் மூங்கில்புட்டியிலுள்ள பொது நீருந்து நிலையத்திலிருந்து ஓசூர் வரை 3,107 கி.மீ. நீளமுள்ள பிரதான குழாய் மற்றும் பிரிவு பிரதான குழாய்மூலம் ஓசூர் நகராட்சி, 5 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள (வேப்பனபள்ளி, கெலமங்களம், தளி, சூலகிரி மற்றும் ஓசூர்) 1,720 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 3 பேரூராட்சிகளுக்கு (மத்தகிரி, கெலமங்களம், தேன்கனிக்கோட்டை) குடிநீர் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகுப்பின் மூலம் 800 இலட்சம் மக்கள் பயன்பெறுவர். தொகுப்பு 4-க்கான பணி 33 விழுக்காடு முடிவுற்றுள்ளது. இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தொகுப்பின் பணிகள் அனைத்தும் 2012 செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

தொகுப்பு–5:

மடம் கிராமத்திலுள்ள பெரிய சமநிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பர்கூர் வரை 2,950 கி.மீ. நீளமுள்ள பொது பிரதான மற்றும் பிரிவு பிரதானக் குழாய்கள்மூலம் கிருஷ்ணகிரி நகராட்சி, 5 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள (பாலக்கோடு, காரிமங்கலம், பர்கூர், கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டிணம்) 2,299 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 7 பேரூராட்சிகளுக்கு (காரிமங்கலம், மாரண்டஹள்ளி, பாலக்கோடு, பாப்பாரப்பட்டி, பர்கூர், காவேரிப்பட்டிணம் மற்றும் நாகோஜனஹள்ளி) குடிநீர் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகுப்பின்மூலம் 900 இலட்சம் மக்கள் பயன்பெறுவர். தொகுப்பு 5-க்கான பணி 10 விழுக்காடு முடிவுற்றுள்ளது. இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தொகுப்பின் பணிகள் அனைத்தும் 2012 டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

இத்திட்டத்தில் மொத்தமாக 30 விழுக்காடு பணிகள் முடிவுற்றுள்ளன. மேலும் இதுவரை ரூ.525.69 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் டிசம்பர் 2012-க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள்:

அரசு கொள்கை முடிவின்படி, ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறுகின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

2011 ஆகஸ்ட் 18]

அனைத்தும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இயக்கி பராமரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது 5 மாநகராட்சிகள், 56 நகராட்சிகள், 270 பேரூராட்சிகள், 25,741 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 422 தொழிற்சாலைகள் / கல்வி நிறுவனங்கள் பயன்பெறும் வண்ணம் 507 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் வாரியத்தின் பராமரிப்பில் உள்ளன. இத்திட்டங்கள்மூலம் 2.53 கோடி மக்கள் பயன் பெறுகின்றனர்.

குடியிருப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகள் வாரியான திட்ட விவரங்கள்

- 1000 பயனாளி குடியிருப்புகளுக்கு அதிகமானவை — 2 எண்ணம்
- 1000 முதல் 750 பயனாளி குடியிருப்புகள் உள்ளவை — 3 எண்ணம்
- 750 முதல் 500 பயனாளி குடியிருப்புகள் உள்ளவை — 3 எண்ணம்
- 500 முதல் 250 பயனாளி குடியிருப்புகள் உள்ளவை — 13 எண்ணம்
- 250 முதல் 100 பயனாளி குடியிருப்புகள் உள்ளவை — 34 எண்ணம்
- 100-க்கும் குறைவாக பயனாளி குடியிருப்புகள் உள்ளவை — 452 எண்ணம்

குடிநீர் வழங்குதலின் தற்போதைய நிலை:

முழு அளவு குடிநீர் வழங்கப்படும் திட்டங்கள் — 283

50 விழுக்காட்டிற்கும் அதிகமாக குடிநீர் வழங்கப்பெறும் திட்டங்கள் — 163

50 விழுக்காட்டிற்கும் குறைவாக குடிநீர் வழங்கப்பெறும் திட்டங்கள் — 61

[2011 ஆகஸ்ட் 18

பராமரிப்பிலுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் குறைவான அளவு குடிநீர் வழங்குவதற்கான காரணங்கள் பின்வருமாறு:

- நீராதாரங்களின் நீர்கொடுநிறன் குறைவு
- மின்னிறைப்பான்களின் நீண்ட கால பயன்பாடு
- சாலை அகலப்படுத்துதலின் போது ஏற்படும் குடிநீர் குழாய்கள் மற்றும் தடுக்கிதழ்களின் சேதம்
- மின் பற்றாக்குறை

ரூ.10.69 கோடி மதிப்பீட்டில் 5,588 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 349 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் கீழ்க்கண்ட மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட உள்ளன:

- ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் 1,399 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 89 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் 33 நீராதாரங்களைப் பெருக்குதல் / கூடுதல் நீராதாரங்கள் அமைத்தல், 18 கூடுதல் நீருந்து நிலையங்கள் அமைத்தல், 91 கூடுதல் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல் ஆகிய பணிகள்.
- ரூ.35.80 கோடி மதிப்பீட்டில் 4,189 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 260 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் 185 மின்மோட்டார்கள் மாற்றும் பணிகள், 1,159 காற்றுத் தடுக்கிதழ்கள் மாற்றும் பணிகள், 587.02 கி.மீ. நீளத்திற்கு குழாய்கள் மாற்றும் பணிகள், 183 தனி மின்பாதை அமைக்கும் பணிகள்.

கனாமி மறுவாழ்வு திட்டப் பணிகள்:

உலக வங்கி நிதி உதவியுடன் நிரந்தரக் குடியிருப்புகளுக்கு சுகாதாரத் திட்டங்கள்:

நாகப்பட்டினம், கன்னியாகுமாரி, கடலூர், விழுப்புரம், தூத்துக்குடி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 6 கடலோர மாவட்டங்களில் நிரந்தரக் குடியிருப்புகளுக்கு சுகாதார வசதி செய்திட ரூ.300 கோடி மதிப்பீட்டிற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவை 16 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, 10 தொகுப்புகளில் பணிகள் நிறைவடைந்துள்ளன. இதர 6 தொகுப்புகளில் டிசம்பர் 2011-க்குள் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2011 ஆகஸ்ட் 18]

ஆய்வில் உள்ள குடிநீர்த் திட்டப் பணிகள்:

(அ) தற்போது, 33 குடிநீர்த் திட்டங்களுக்கு ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதனால் 35 பேரூராட்சிகள் மற்றும் 3,250 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெற உள்ளன. இத்திட்டங்களின் மொத்த உத்தேச மதிப்பீடு ரூ.567.67 கோடியாகும். இத்திட்டங்களினால் 18.94 இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.

(ஆ) மேலும், 15 குடிநீர்த் திட்டங்களுக்கு ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் 10 பேரூராட்சிகள் மற்றும் 4,468 குடியிருப்புகள் பயன் பெற உள்ளன. இத்திட்டங்களின் மொத்த உத்தேச மதிப்பீடு ரூ.626.57 கோடியாகும். இத்திட்டங்களினால் 20.73 இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.

அரசாங்க மருத்துவமனைகளுக்கான சுகாதார வசதிகள்:

17 அரசு மருத்துவமனைகளுக்கு ரூ.16.52 கோடி திட்ட மதிப்பீட்டில் சுகாதார வசதிகள் செய்து தர திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் சிதம்பரம், தாம்பரம், ஓசூர், சோளிங்கர், மணப்பாறை மற்றும் பத்மநாபபுரம் மருத்துவமனைகளுக்கான திட்டங்கள் முடிக்கப்பட்டு, பயனில் உள்ளன. மீதமுள்ள 11 மருத்துவமனைகளுக்கான திட்டங்கள் 31-10-2011-க்குள் முடிக்கப்பட உள்ளன.

குடிநீரின் தரப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு:

பொது மக்களுக்கு தூய்மையான மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை உறுதி செய்யும்பொருட்டு ISO 9001 : 2008 தரச் சான்றிதழ் பெற்ற ஒரு மாநில அளவிலான நீர் பரிசோதனைக் கூடமும், 31 மாவட்ட அளவிலான நீர் பரிசோதனைக் கூடங்களும் மற்றும் 51 உபகோட்ட அளவிலான நீர் தரப் பரிசோதனைக் கூடங்களும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் இயங்கி வருகின்றன. தனி மின்விசைத் திட்டம் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் நீராதாரங்களின் தரம் ஒவ்வொரு ஆண்டும் பரிசோதிக்கப்பட்டு அதன் முடிவுகள் மத்திய அரசின் இணைய

[2011 ஆகஸ்ட் 18

தளத்தில் (IMIS) பதிவு செய்யப்படுகின்றன. 2011-12 ஆம் ஆண்டில் 2.46 இலட்சம் குடிநீர் ஆதாரங்களின் தரம் பரிசோதிக்கப்பட்டுள்ளன. நீராதாரங்களின் தரத்தினை களத்திலேயே கண்காணிக்க ஊராட்சித் தலைவர்களுக்கு கள நீர் பரிசோதனை பெட்டிகளும், அதன் பயன்பாடு குறித்த பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் 2,388 ஊராட்சிகளுக்கு கள நீர் பரிசோதனைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

நிலத்தடி நீர்வளம் குறிக்கும் வரைபடங்கள்:

மத்திய அரசின் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை தமிழ்நாடு முழுவதும் நிலநீர் வளத்தைக் குறிக்கும் வரைபடங்களை தயாரிக்கும் பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ198.90 இலட்சம் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்கெனவே நிலத்தடி நீர்வளங்களைக் குறிக்கும் வரைபடங்களை தொலையுணர்வு நிழற்படங்கள் மற்றும் புவியியல் தகவல் முறைமைமூலம், தமிழ்நாடு முழுவதும் அமையப் பெற்றுள்ள, தாலுகா மற்றும் ஒன்றியங்கள் வாரியாக தயார் செய்து, அதனடிப்படையில் நீராதாரம் மற்றும் நீர் செறிவூட்டு கட்டமைப்புகளை தெரிவு செய்து வருகிறது.

தற்பொழுது தமிழகம் முழுவதும் தயாரிக்கப்பட்டிருக்கும் நிலத்தடி நீர்வள வரைபடங்கள், தமிழகத்தின் நிலத்தடி நில அளவீட்டு வரைபடங்கள் வாரியாக முறையே நிலவியல் அமைப்பு, நிலத்தடி நீர்வளம், நீரின் தரம், ஆழ்துளைக் கிணறுகளின் ஆழம், நீர்செறிவூட்டு கட்டமைப்புகள் இருப்பிடம் ஆகியவற்றைக் குறிப்பிடும் வரைபடங்களாக அமையும். இவ்வரைபடங்கள் இதற்கு முன் தயாரிக்கப்பட்ட வரைபடங்களைவிட அதிகப்படியான நீராதார விவரங்களைக் குறிக்கும் வண்ணம் அமையும்.

சுருங்கக்கூறின், இவ்வரைபடங்கள் களப்பணியில் ஈடுபடும் நிலநீர் வல்லுநர்களுக்கு ஆழ்துளைக் கிணறு மற்றும் நீர்செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைக்கும் இடங்களைத் துல்லியமாக தெரிவு செய்ய பயன்படும். மேலும் மத்திய, மாநில அரசுகளின் நோக்கங்களை நிறைவேற்றும் வண்ணம் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய பயனுள்ளதாக அமையும்.

2011 ஆகஸ்ட் 18]

அறிவியல் அடிப்படையில் நீராதாரங்கள் தேடுதல்:

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் நீராதாரங்கள் தோற்றுவிக்கும் பணி அறிவியல் பூர்வமாக முறையே தொலையுணர்வு தொழில்நுட்பம், புவியியல் தகவல் முறைமை மற்றும் புவி பௌதீக ஆய்வுப் பணிகள்மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

தொலைநோக்குப் பார்வையில் புதிய முயற்சிகள்:

ஆரம்ப காலங்களில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிநீர் வசதி வழங்கும்பொருட்டு, கையிறைப்பான் மற்றும் மின்விசைத் திட்டங்கள், ஆழ்துளை மற்றும் திறந்தவெளிக் கிணறுகளை நீராதாரமாகக் கொண்டு நிறைவேற்றி வந்தது. காலப்போக்கில் நீரின் தேவை மற்றும் பயன்பாடு அதிகரித்ததால், ஆழ்துளைக் கிணறுகளின் நீர்கொடு திறன் மற்றும் நீரின் தன்மை மாறுபட்டது. எனவே, நீடித்த நிலைத் தன்மை பெற்ற, தரம் மிக்க நீராதாரங்களைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. மேற்கண்ட மாறுதல்களைக் கருத்தில் கொண்டு ஆற்று நீரை, ஆதாரமாகக் கொண்டு குடிநீர்த் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன. இதன்மூலம், குடிநீர் வழங்கலில் நகரங்களையும், வழியோர கிராமங்களையும் எளிய முறையில் ஒருங்கிணைக்க முடியும் என்பதால், நீண்ட காலம் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதனைக் கருத்தில் கொண்டு, சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாத வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை அமைக்கும்பொருட்டு, தற்பொழுது அரசு பெரிய நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் காவேரி மற்றும் தாமிரபரணி போன்ற வற்றாத நதிகளில் இருந்து நீராதாரங்கள் அமைத்து, திட்டங்களை நிறைவேற்ற கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. குடிநீர் வழங்கல் முறையில் அரசு எடுத்துள்ள முடிவின் அடிப்படையில் தமிழகத்தில் நீர் வளம் குன்றிய பகுதிகளில் குடிநீர் வழங்குதலுக்காக கடல்நீரை நன்னீராக்கும் திட்டமும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

VIII. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் 1978 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு சென்னை மாநகர மக்களின் சேவையில் 34-வது வருடத்திற்குள் நுழைகிறது. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சேவையின் வளர்ச்சியில் சென்னைக் குடிநீர் வாரியம் முக்கிய பங்கு ஆற்றிவருகிறது. சென்னைப் பெருநகரப் பகுதியில் வாழும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட தேவையான குடிநீரை வழங்குவதே வாரியத்தின் குறிக்கோளாகும்.

பல்வேறு முயற்சிகளால் சென்னையில் அதிக அளவு குடிநீர் கிடைக்கவும் மற்றும் கழிவு நீரைத் திறம்பட சுத்திகரித்து வெளியேற்றவும் அரசு முனைப்புடன் செயல்படுகிறது. சென்னைப் பெருநகரப் பகுதியின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று அமைப்பின் எதிர்காலத் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு நீண்ட காலத் திட்டங்களைத் தயாரிக்க சென்னைக் குடிநீர் வாரியம், குடிநீரின் தேவை — வழங்கல் — இடைவெளி மற்றும் இருப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அரசு, சென்னைப் பெருநகரப் பகுதியில் வசிப்போருக்கு மிகுந்த பலன் அளிக்கும் வகையில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று அமைப்புகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை சென்னைக் குடிநீர் வாரியத்தின்மூலம் மேற்கொள்ள பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திட்டமிட்ட வளர்ச்சி:

வேகமாகப் பெருகி வரும் சென்னைப் பெருநகரின் வளர்ச்சிக்கேற்ப பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்கவும் மற்றும் முறையான கழிவு நீரகற்றல் பணிகளை மேற்கொள்ளவும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தொலைநோக்குப் பார்வையுடன் பல்வேறு திட்டப் பணிகளை குறிப்பாக, மக்கள் நலன் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு செயல்படுத்தி வருகிறது. இந்த இலக்கை அடைவதற்கு சென்னைக் குடிநீர் வாரியத்தின் சேவைகள் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

தற்போது வாரியம், சென்னை மாநகர் பகுதிகளில் வசிக்கும் 55 இலட்சம் மக்களுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் சேவைகளை நேரிடையாக அளித்து வருகிறது. தவிர, வாரியம்,

2011 ஆகஸ்ட் 18]

சென்னை மாநகரின் அருகிலுள்ள நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கும் ஏறத்தாழ 19 இலட்சம் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்து வருகின்றது.

சேவை வழங்கலின் வளர்ச்சி பற்றிய சில புள்ளிவிவரங்கள்:

(அ) குடிநீர் வழங்கல் பிரிவு:

1. *நாளொன்றுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு 1978-ல் 240 மில்லியன் லிட்டரிலிருந்து தற்போது 710 மில்லியன் லிட்டராக உயர்ந்துள்ளது.*

2. *குடிநீர்க் குழாய் உள்ள பகுதி 1978-ல் 80 விழுக்காடு ஆகும். தற்போது சென்னை நகரிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் குடிநீர்க் குழாய் பதிக்கப்பட்டுள்ளது.*

3. *குடிநீர் சுத்திகரிப்புத் திறன் 1978-ல் நாளொன்றுக்கு 182 மில்லியன் லிட்டர் ஆகும். தற்போது நாளொன்றுக்கு 1,400 மில்லியன் லிட்டராக உயர்ந்துள்ளது.*

4. *குடிநீர்க் குழாய்களின் நீளம் 1978-ல் 1,250 கிலோ மீட்டர் ஆகும். தற்போது 2,930 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது.*

5. *நுகர்வோர்களின் எண்ணிக்கை 1978-ல் 1,16,000 ஆகும். தற்போது 5,15,076 ஆக உயர்ந்துள்ளது.*

6. *குடிநீர் விநியோக நிலையங்களின் எண்ணிக்கை 1978-ல் 3 ஆகும். தற்போது 16 ஆக உயர்ந்துள்ளது.*

(ஆ) கழிவுநீரகற்று அமைப்பு:

1. *கழிவுநீரகற்று குழாய்கள் உள்ள பகுதி 1978-ல் 74 விழுக்காட்டிலிருந்து தற்போது 99 விழுக்காடாக உயர்ந்துள்ளது.*

2. *கழிவுநீரகற்று நிலையங்களின் எண்ணிக்கை 1978-ல் 58-லிருந்து தற்போது 197 ஆக உயர்ந்துள்ளது.*

3. *கழிவுநீர் சுத்திகரிப்புத் திறன் 1978-ல் நாளொன்றுக்கு 57 மில்லியன் லிட்டரிலிருந்து தற்போது நாளொன்றுக்கு 486 மில்லியன் லிட்டராக உயர்ந்துள்ளது.*

[2011 ஆகஸ்ட் 18

4. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை 1978-ல் 3-லிருந்து தற்போது 9-ஆக உயர்ந்துள்ளது.

5. கழிவுநீர்க் குழாய்களின் நீளம் 1978-ல் 1,223 கிலோ மீட்டரிலிருந்து தற்போது 2,677 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது.

6. கழிவுநீர் இணைப்புள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை 1978-ல் 1,14,000-லிருந்து தற்போது 6,10,318 ஆக உயர்ந்துள்ளது.

குடிநீர் விநியோகம்:

(அ) சென்னை நகரின் குடிநீர் வழங்கல் நிலவரம்:

சென்னைப் பெருநகர் அதிவேகமான மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்ப நல்ல தரமான குடிநீர் வழங்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பூண்டி, செங்குன்றம், சோழவரம் மற்றும் செம்பரம்பாக்கம் ஆகிய நீர்த்தேக்கங்களில் தற்போது அதாவது 14-08-11 நிலவரப்படி உள்ள 6,548 மில்லியன் கனஅடி நீர் இருப்பைக் கொண்டு அடுத்த வட கிழக்கு பருவ மழை துவங்கும் வரை குடிநீர் வழங்க இயலும். மேலும் கண்டலேறு மூலம் கிருஷ்ணா நதியிலிருந்து பெறப்பட்ட 3 டி.எம்.சி நீர் மற்றும் வீராணம் ஏரியிலிருந்து கிடைக்கப்பெறுகிற 180 எம்.எல்.டி. நீர் ஆகியவற்றைக் கொண்டும் வாரியம் தொடர்ந்து சென்னை மாநகருக்குப் போதிய அளவு குடிநீர் வழங்க இயலும்.

தற்போது, வாரியத்தால் சென்னை மாநகர மக்களுக்கு நாள்தோறும் 710 மில்லியன் லிட்டர் குடிநீரும், பெருநகர் பகுதியிலுள்ள தொழிற்சாலைகள், வணிக வளாகங்கள் மற்றும் உள்ளாட்சிப் பகுதிகளுக்கு நாள்தோறும் சுமார் 80 மில்லியன் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) குடிநீர் வழங்கல் திட்ட ஏற்பாடு :

நீர்தேக்கங்களின் இருப்பு + கண்டலேறுவிலிருந்து பெறப்பட்ட 3 டி.எம்.சி நீர் + வீராணம் ஏரியிலிருந்து பெறப்படுகிற 180 எம்.எல்.டி. நீர்	**162 நாட்கள்**	**19-01-2012 வரை**

2011 ஆகஸ்ட் 18]

5 டி.எம்.சி பருவமழை நீர் மூலம்	279 நாட்கள்	15-05-2012 வரை
5 டி.எம்.சி பருவமழை நீர் மூலம் + 5 டி.எம்.சி கண்டலேறு மூலம்	383 நாட்கள்	28-08-2012 வரை

சென்னைப் பெருநகரின் எதிர்கால குடிநீர்த் தேவையினைக் கருத்தில் கொண்டு புதிய நீர் ஆதாரங்களைக் கண்டறிவது அவசியமாகிறது. இதன் தொடர்ச்சியாக, சென்னை நகருக்கு வடக்கே மீஞ்சூரில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கொள்ளளவு உள்ள கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கொள்ளளவு உள்ள கடல் நீரைக் குடிநீராக்கும் மற்றொரு நிலையம் சென்னையின் தென்பகுதியில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள நெம்மேலியில் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் அரசு, நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை தென் சென்னை அருகே மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்கான விரிவான சாத்தியமான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக கலந்தறிதற்குரியரை நியமிப்பதற்காக 20-07-2011 அன்று 2 ஒப்பந்தங்கள் பெறப்பட்டு, ஆய்வில் உள்ளது.

சென்னை மாநகரிலுள்ள அனைத்து நீர்த்தேக்கங்களின் மொத்தக் கொள்ளளவு 11057 டி.எம்.சி. ஆகும். சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையின் அடிப்படையில் ஏற்படும் இடைவெளியினை நிவறவு செய்ய பல்வேறு இடங்களில் செயற்கை நீர்த்தேக்கங்களை உருவாக்குவதன் மூலமாகவும், தற்போதுள்ள நீர்த்தேக்கங்களை ஆழப்படுத்துவதன் மூலமாகவும், அதிகப்படியான குடிநீர் ஆதாரங்களை உருவாக்க இயலும்.

இதனால், சென்னை நகரின் தற்போதைய நீர்த் தேக்கங்களின் கொள்ளளவு 4.20 டி.எம்.சி. அதிகரிக்கப்படும்.

(இ) சென்னை மாநகருக்கு சமச்சீரான குடிநீர் வழங்கல்:

போதுமான அழுத்தத்துடன், சமச்சீரான அளவில் குடிநீர் வழங்குவதற்காக கீழ்ப்பாக்கம், கே.கே.நகர், தென்சென்னை நீரேற்று நிலையம் மற்றும் அண்ணா பூங்கா ஆகிய 4 பகிர்மான நிலையங்களில் மேம்பாட்டுப் பணிகள் சென்னைக் குடிநீர் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டன. இதில் 3 பகிர்மான

[2011 ஆகஸ்ட் 18

நிலையங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஒரு பகுதியான நிலையத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மொத்த நீளமான 161 கி.மீ. குடிநீர் பகிர்மான அமைப்பினை மேம்படுத்தும் பணியில் 74 கி.மீ. நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 87 கி.மீ. நீளத்திற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. குழாய்களை மாற்றி அமைக்கும் பணியில், மொத்த நீளமான 154 கி.மீ. நீளத்தில் 109 கி.மீ. நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 45 கி.மீ. நீளத்திற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக 8 மண்டலங்கள் முறையே ஈக்காட்டுத்தாங்கல், பள்ளிப்பட்டு, வேளச்சேரி, நந்தனம், மைலாப்பூர், பட்டேல் நகர், கொளத்தூர் மற்றும் வியாசர்பாடி ஆகிய இடங்களில் மண்டலங்களைப் பிரித்து வால்வுகள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மொத்தமுள்ள 821 வால்வுகள் பொருத்தும் பணியில் 385 வால்வுகள் பொருத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 436 வால்வுகள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

அனைத்துப் பணிகளையும் மார்ச் 2012-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) குடிநீர் தரம் கண்காணிப்பு:

சென்னை வாழ் மக்களுக்கு வழங்கும் குடிநீரின் தரத்தை பரிசோதனை செய்து தரநிர்ணயம் செய்ய தனியாக ஒரு பிரிவு அலுவலகம் செயல்பாட்டில் உள்ளது. நீரின் தரத்தை குடிநீர் ஆதாரப் பகுதி, சுத்திகரிப்புப் பகுதி, குடிநீர் விநியோகிக்கும் பகுதி மற்றும் நுகர்வோர் பகுதிகளிலும் சோதனை செய்து தர நிர்ணயம் செய்யப்படுகிறது.

தினசரி 60 குடிநீர் மாதிரிகளில் நுண்ணுயிர் பரிசோதனை மற்றும் 160 மாதிரிகளில் குளோரின் இருப்பு அளவும் பரிசோதனை செய்யப்பட்டு மக்களுக்கு தரமான குடிநீரினை வழங்குவதில் வாரியம் மிக கவனமாக செயல்பட்டு வருகிறது.

பெரும்பாலான குடிநீர் தரபரிசோதனைகள், குடிசைப் பகுதி, வணிகப் பகுதி, மக்கள் அதிகம் வசிக்கும் பகுதி மற்றும் குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் சிறப்பு கவனத்துடன் மேற்கொள்ளப்படுகிறது.

2011 ஆகஸ்ட் 18]

கீழ்க்கண்ட காரணிகள் ஆய்வு செய்யப்படுகின்றன:

காரணிகள்	அதிகபட்ச அளவு
கலங்கல் தன்மை	5 மி.கி./லிட்டருக்குக் குறைவாக
கரைந்துள்ள மொத்த உப்புகளின் அளவு	500 மி.கி./லிட்டருக்குக் குறைவாக
எஞ்சிய குளோரின்	0.2 மி.கி./லிட்டருக்குக் குறைவாக

கழிவுநீர் அகற்றுதல் அமைப்பு:

(அ) இயக்குதல் மற்றும் பராமரித்தல்:

வீடுகள், அலுவலகங்கள், மற்ற கட்டடங்கள் ஆகியவற்றிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் 2,677 கி.மீட்டர் நீளமுள்ள கழிவுநீர்க் குழாய்கள் மூலம் 197 கழிவுநீர் அகற்றும் நிலையங்களில் சேகரிக்கப்பட்டு, நாளொன்றுக்கு 486 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட 5 வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 9 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் தேவையான அளவு சுத்திகரிக்கப்பட்ட பின்னரே வெளியேற்றப்படுகிறது. நாளொன்றுக்கு 36 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரானது தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது.

சென்னை நகரில் 2,677 கி.மீட்டர் நீளமுள்ள கழிவுநீர்க் குழாய்களில் தேங்கும் வண்டல், மண் ஆகியவை குறித்த காலத்திற்கொருமுறை, ஜெட் ராடிங் மற்றும் தூர்வாரும் இயந்திரங்கள் மூலமாக அகற்றப்பட்டு வருகின்றன. கழிவுநீர் அமைப்பில் மனிதன் இறங்குவதை தவிர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது சென்னைக் குடிநீர் வாரியம் கழிவுநீர் அமைப்புகளை பராமரிக்க உயர் அழுத்த விசையுடன் நீரைப் பீய்ச்சும் இயந்திரங்கள், நீர்விசையால் இயங்கும் தூர்வாரும் இயந்திரங்கள் மற்றும் கையினால் இயக்கப்படும் வாளியாலான தூர்வாரும் இயந்திரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி வருகிறது.

[2011 ஆகஸ்ட் 18

(ஆ) கழிவு நீரகற்று கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்:

கழிவு நீரகற்று கட்டமைப்பு முறையை வலுப்படுத்தி திறனை விரிவுபடுத்த இவ்வாரியம் அயனாவரம், வியாசர்பாடி, நம்மாழ்வார்பேட்டை, பத்மநாபா நகர், கேகேநகர், இம்மசாமி தர்கா, ஜவகர் நகர், மேல்பட்டடை மற்றும் லாங்ஸ் கார்டன் ஆகிய பகுதிகளில் கழிவுநீர் குழாய்களை மேம்படுத்துதல் மற்றும் வில்லிவாக்கம் பகுதி-1, திருவான்மியூர், பெசன்ட் நகர்—2, சித்தம்மாள் காலனி, பட்டினப்பாக்கம் மற்றும் கிரீம்ஸ் சாலை ஆகிய கழிவுநீரேற்று நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் ரூ.22.16 கோடி மதிப்பீட்டில் சென்னை நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கூறிய இடங்களில் கழிவுநீர் குழாய்கள் மற்றும் கழிவு நீரேற்று நிலையங்களின் திறன் விரிவுபடுத்துவதன் மூலம், இந்த இடங்களில் 2021 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் கழிவுநீரினை அகற்ற இயலும்.

(இ) கூடுதலாக அமைக்கப்பட உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்:

சென்னைக் குடிநீர் வாரியம், பெருங்குடியில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கூடுதலான புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ரூ.61.19 கோடி மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளையும் 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், சென்னைக் குடிநீர் வாரியம் நெசப்பாக்கத்தில் நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மற்றொரு கூடுதலான புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ரூ.58.87 கோடி மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளையும் 2012 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகர் மற்றும் அருகிலுள்ள நகர்ப்புறப் பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்புத் திறனை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் வாரியம் கோயம்பேட்டில் கூடுதலாக நாள் ஒன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள், ரூ.130 கோடி மதிப்பீட்டில்

2011 ஆகஸ்ட் 18]

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும். இப்பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

நடைபெற்று வரும் குடிநீர் பெருந்திட்டங்கள்:

(அ) நெம்மேலியில் அமைக்கப்பட்டு வரும் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்:

விரைவாக வளர்ந்து வரும் சென்னை மாநகரின் குடிநீர் தேவையை சமாளிக்க, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மேலும் ஒரு கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் கிழக்கு கடற்கரைச் சாலையில் நெம்மேலியில் அமைக்கப்பட உள்ளது. இந்த நிலையம் இந்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இந்திய அரசு, மானியமாக ரூ.871.24 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் இரண்டு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் சிப்பத்தில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைத்தல் மற்றும் 7 ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி (ரூ.1033.68 கோடிக்கு (கட்டுமானப் பணி ரூ.533.38 கோடி + 7 வருடம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு ரூ.500.30 கோடி) வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது சிப்பத்தில் நகரின் பகிர்மான அமைப்பிற்கு குடிநீரை அனுப்பும் குழாய் பதித்தல் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு அமைக்கும் பணி ரூ.122.50 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளது. 7 வருடங்களுக்கு உள்கட்டமைப்பு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ரூ.102 கோடி இதில் உள்ளடங்கும்.

சிறப்புத் தன்மை வாய்ந்த பணி என்பதால் திட்ட மேலாண்மை மற்றும் கட்டுமானப் பணியை மேற்பார்வை செய்வதற்காக வாரியம் ஒரு கலந்தறிதற்குரியரை ரூ.13.46 கோடி ஒப்பந்த மதிப்பில் நியமித்துள்ளது. தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகளை ஜூன் மாதம் 2012—ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ) ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் நடைபெற்றுவரும் பணிகள்:

சென்னை மற்றும் சென்னைப் புறநகர்ப் பகுதிகளில் உள்ள உள்ளாட்சிப் பகுதிகளுக்கு இதுவரை இல்லாத அளவிற்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று திட்டங்கள் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் ரூ.2032 கோடி மதிப்பீட்டில் 28 பணிகள் மேற்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வ. எண்	பணியின் விவரம்	திட்ட மதிப்பீடு ரூபாய் கோடியில்	தற்போதைய நிலை
சென்னை மாநகரில் மேம்பாட்டுப் பணிகள்			
1	சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணிகள்	322.00	4 சிப்பங்களில் பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் மார்ச் 2012–ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
2	இராஜீவ் காந்தி தகவல் தொழில் நுட்ப சாலையில் குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதிகள் அமைக்கும் பணிகள்	41.77	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் மே 2012–ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
3	மீஞ்சூரில் (காட்டுப்பள்ளி) அமைந்து வரும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து குடிநீரை எடுத்துச் செல்லும் கட்டமைப்புப் பணிகள்	87.80	அனைத்துப் பணிகளும் முடிவுற்றன.
4	பூண்டி நீர்த் தேக்கத்திலிருந்து புழல் கத்திகரிப்பு நிலையத்திற்கு நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் நீரை	9.11	அனைத்துப் பணிகளும் முடிவுற்றன.

2011 ஆகஸ்ட் 18]

	கொண்டு செல்ல நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகள்		
5	பெருங்குடியில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்	31.48	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் ஆகஸ்ட் 2011–ல் முடிவடையும்.
6	நெசப்பாக்கத்தில் நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்	54.57	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் பிப்ரவரி 2012–ல் முடிவடையும்.
	மொத்தம்	546.73	
சென்னைக்கு அருகிலுள்ள பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் திட்டங்கள்			
	நகராட்சிகள்		
	குடிநீர் வழங்கல் திட்டங்கள்		
1	மதுரவாயல்	23.30	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் ஏப்ரல் 2012–ல் முடிவடையும்.
2	ஆவடி	103.84	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் நவம்பர் 2011–ல் முடிவடையும்.

3	உள்ளகரம்–புழுதிவாக்கம்	24.24	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் ஜூலை 2012–ல் முடிவடையும்.
4	திருவொற்றியூர்	85.11	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் ஜூலை 2012–ல் முடிவடையும்.
5	ஆலந்தூர்	64.39	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் டிசம்பர் 2011–ல் முடிவடையும்.
6	அம்பத்தூர்	267.08	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் நவம்பர் 2011–ல் முடிவடையும்.
	கழிவுநீரகற்றும் திட்டங்கள்		
7	உள்ளகரம்–புழுதிவாக்கம்	28.08	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் ஜனவரி 2013–ல் முடிவடையும்.
8	ஆவடி	158.05	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் நவம்பர் 2012–ல் முடிவடையும்.

9	அம்பத்தூர் –பிரிவு III	130.91	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் ஜூலை 2012–ல் முடிவடையும்.
10	மதுரவாயல்	57.45	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் செப்டம்பர் 2012–ல் முடிவடையும்.
11	தாம்பரம்	160.97	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் மே 2012–ல் முடிவடையும்.
	மொத்தம்	1,103.42	
	பேரூராட்சிகள்		
	குடிநீர் வழங்கல் திட்டங்கள்		
1	போரூர்	12.36	அனைத்துப் பணிகளும் முடிவுற்றன.
	கழிவுநீரகற்றும் திட்டங்கள்		
2	போரூர்	38.29	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் செப்டம்பர் 2012–ல் முடிவடையும்.
3	திருமழிசை	20.47	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் பிப்ரவரி 2012–ல் முடிவடையும்.
4	பெருங்குடி	20.19	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் நவம்பர் 2012–ல் முடிவடையும்.

5	பள்ளிக்கரணை	58.61	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் பிப்ரவரி 2013–ல் முடிவடையும்.
6	மாடம்பாக்கம்	54.45	கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தேவைப்படும் நிலங்களை நிலமாறுதல் செய்வதில் ஏற்படும் காலதாமதம் மற்றும் கூடுதல் நிதி ஆதாரம் கிடைக்கப்பெற்று அதன் நிதிநிலை முன்னேற்றம் அடையும் வரை தற்காலிகமாக தள்ளி வைக்கப்பட்டது.
7	செம்பாக்கம்	61.82	
8	சிட்லப்பாக்கம்	27.59	
9	பீர்க்கன்கரணை	21.29	
10	பெருங்களத்தூர்	47.61	
	மொத்தம்	362.68	
	ஊராட்சிகள்		
	குடிநீர் வழங்கல் திட்டங்கள்		
	நெற்குன்றம்	19.17	பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் ஜூலை 2012–ல் முடிவடையும்.
	மொத்தம்(22 பணிகள்)	1,485.27	
	ஆக மொத்தம் (28 பணிகள்)	2,032.00	

2011 ஆகஸ்ட் 18]

(இ) தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்–III (TNUDP-III)–ன்கீழ் திட்டங்கள்:

சென்னைக்கு அருகிலுள்ள நகர்ப்புற பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் திட்டங்கள் (6 திட்டங்கள்) தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்-III (TNUDP-III)ன்கீழ் மேற்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. 6 திட்டங்களில் சுத்திவாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம் ரூ.6.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றது. பல்லவபுரம் பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.72.10 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றது. அம்பத்தூர் கழிவுநீர் அகற்றல் திட்டம் பிரிவு II ரூ.7.33 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றது.

தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்—III (TNUDP-III)-ன்கீழ் நடைபெற்று வரும் மீதமுள்ள பணிகள்:

1. திருவொற்றியூர் பாதாள சாக்கடைத் திட்டம்:

திருவொற்றியூர் நகராட்சிப் பகுதியில் கழிவுநீர் அமைப்பை மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்தும் பணி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட நிதி உதவியுடன் ரூபாய் 87.63 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன இப்பணிகள் மார்ச் 2013-ல் முடிவுறும்.

2. மாதவரம் பாதாள சாக்கடைத் திட்டம்:

மாதவரம் நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் ரூபாய் 37.81 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மார்ச் 2012-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

3. அம்பத்தூர் பாதாள சாக்கடைத் திட்டம் முதற் கட்டம் (மீதமுள்ள இடங்கள்):

முதற்கட்ட அம்பத்தூர் பாதாள சாக்கடைத் திட்டத்தில் மீதமுள்ள இடங்களில் பணிகள் ரூ.35.86 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஜூலை 2012-ல் முடிவடையும்.

[2011 ஆகஸ்ட் 18

(ஈ) ஜப்பான் பன்னாட்டு நிதி உதவி நிறுவனத்தின் கீழ் நடைபெற உள்ள பணிகள்:

மாதவரம் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான பணிகள் ஜப்பான் பன்னாட்டு நிதி உதவி நிறுவனத்தின் கீழ் ரூபாய் 55 கோடி மதிப்பீட்டில் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும்.

நுகர்வோர் நலன்:

சென்னைக் குடிநீர் வாரியம் நுகர்வோரின் புகார்கள் / குறைகளை விரைவான முறையில் நிவர்த்தி செய்யும் சேவை வழங்கும் முறையை மேம்படுத்துவதற்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:

(1) வாரியத்தின் அனைத்து பகுதி அலுவலகங்கள், பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவை இணையதளத்தின்மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. நுகர்வோர் தங்களது சொந்த அலைபேசியை பற்றி பொருட்படுத்தாது அவர்களது புகார்களை ஏதாவது ஒரு வாரிய அலுவலகத்தில் தொலைபேசி தொடர்பு அல்லது நேரடியாக பதிவு செய்ய முடியும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்கள் உடனடியாக புகார் கண்காணிப்பு கணினி அமைப்பின் வாயிலாக உரிய நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட பணிமனை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. புகார்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்தும் இந்தப் புகார் கண்காணிப்பு கணினி அமைப்பின் மூலமாக கண்காணிக்கலாம்.

(2) சென்னைக் குடிநீர் வாரியம் குறுந்தகவல் சேவை முறையையும் (SMS) செயற்படுத்தியுள்ளது. இதன் மூலமாக நுகர்வோர் தங்களது புகார்களை தொலைபேசி தொடர்பு மூலமாக பதிவு செய்வதுடன் வாரியத்திடமிருந்து புகார் பெறப்பட்டதற்கான ஒப்புகையையும் குறுந்தகவல் சேவை மூலமாக பெற முடியும். வாரியத்தால் அவ்வாறு பெறப்படும் புகார்கள் தானாகவே புகார் கண்காணிப்பு கணினி அமைப்பு மூலமாக சம்பந்தப்பட்ட பணிமனை பொறியாளர்களுக்கு

2011 ஆகஸ்ட் 18]

புகார்களின் மீது தகுந்த தீர்வு நடவடிக்கை எடுப்பதற்காக குறுந்தகவல் சேவை வாயிலாகவே அனுப்பப்படுகிறது. புகார்கள் மீது குறை நிவர்த்தி நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு நுகர்வோருக்கு மீண்டும் குறுந்தகவல் சேவை மூலமாக அவர்கள் கொடுத்துள்ள கைபேசி எண்ணுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தெரியப்படுத்தப்படுகிறது.

(3) நுகர்வோர் தங்களின் புகார்களை வாரியத்தின் இணையதளம் www.chennaimetrowater.tn.nic.in மூலமாகவும் மற்றும் மின் அஞ்சல் சேவை cmwssb@md2.vsnl.net மூலமாகவும் பதிவு செய்ய முடியும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்கள் மீது வாரியத்தின் மக்கள் சாசனத்தின்படி குறை நிவர்த்தி நடவடிக்கை எடுக்கப்படுவதோடு மின் அஞ்சல் வாயிலாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரம் நுகர்வோருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

(4) சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்காக வாரியம், புகார்கள் மற்றும் ஆலோசனைக் கூட்டம் (Open House Meeting) வாரியத்தின் அனைத்துப் பகுதி அலுவலகங்களிலும், ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை மூத்த அதிகாரிகளின் தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டங்களில், புகார்கள்/குறைகள்/ ஆலோசனைகள் பெறப்பட்டு அவைகள் உடனுக்குடன் சரி செய்யப்படுகின்றன.

(5) சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் 24 மணி நேர குறைகள் களையும் மையமும் இயங்குகிறது. இம்மையத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண்கள் 28454040/45674567 மூலமாகவோ, நுகர்வோர், தங்களது புகார்களையும்/ குறைகளையும் பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட புகார்கள்/குறைகள் தாமதமின்றி அந்தந்த பணிமனைப் பொறியாளர்களுக்கு இணையதளம்மூலமும், குறுந்தகவல் சேவை மூலமும் அனுப்பப்பட்டு உடனுக்குடன் சரி செய்யப்படுகின்றன.

[2011 ஆகஸ்ட் 18

பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு சலுகைகள்.

500 சதுர அடிக்குள் உள்ள வீட்டில் வசிக்கும், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்கள் பயன் அடையும் வகையில் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகளுக்கு தலா ரூ100/- மட்டும் செலுத்தி இணைப்புகள் வழங்கப்படுகின்றன.

இதுவரை, குடிநீர் இணைப்புகளுக்குண்டான விண்ணப்பங்கள் 23,351 பதிவு செய்யப்பட்டுள்ளன. கழிவுநீர் இணைப்புகளுக்குண்டான விண்ணப்பங்கள் 18895 பதிவு செய்யப்பட்டுள்ளன.

முடிவுரை:

இவ்வரசு மிக மகத்தான, நிலையான, பொருளாதார ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான வாழ்வாதார நகரங்களை உருவாக்குவதற்கான அனைத்து முயற்சிகளிலும் முனைந்துள்ளது. "ஒவ்வொரு பயணமும் ஒரு சிறிய காலடி வைப்பதுடன் தொடங்குகிறது, அதேபோல, ஒவ்வொரு நாளும், சரியான திசையில் செல்ல புதியதொரு வாய்ப்பினை வழங்குகிறது."

சிறப்புத் திட்டங்களான 'சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம்' மற்றும் 'ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி திட்டம்' போன்ற திட்டங்களின்மூலம் உள்ளாட்சி உள்கட்டமைப்பில் புதுமையான யுக்திகளை அறிமுகப்படுத்தி, நிதி ஆதாரங்களை திரட்டி, முன்னுரிமைப் பணிகளை அடையாளம் காணும் முதற்கட்ட முயற்சிகளில் இவ்வரசு முனைந்து செயல்பட்டு வருகிறது. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகள் அக்டோபர் 2011—ல் பதவியேற்க உள்ளனர். இவ்வரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் நகர்ப்புற உள்ளாட்சிகளுடன் இணைந்து, குடிமக்களுக்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் செய்யும். நகர்ப்புறங்களில் தரமான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வறுமை குறைப்பு நடவடிக்கைகள் சிறந்த நகர்ப்புற மேலாண்மைக்கும், தமிழ்நாட்டினை மேலும் முன்னேற்றப் பாதைக்கும் இட்டுச் செல்லும் என்று நம்புகிறேன்.

2011 ஆகஸ்ட் 18]

கோரிக்கை எண் 34

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 2011–2012–ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

2011–2012 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
மானியக் கோரிக்கை அனுமதித்தது	5,087,07,19	3,195,52,19	381,06,29	8,663,65,67
மொத்த தொகை சாட்டியது	3	–	–	3

நிகர செலவு ரூபாய் ஆயிரத்தில்

கணக்குத் தலைப்பு		2009-2010 கணக்குகள்	2010-2011 திருத்த மதிப்பீடு	2011-2012 இடைக் கால வரவு-செலவு திட்ட மதிப்பீடு	2011-2012 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
2215	குடிநீர் வழங்கலும் துப்புரவும் ஆயிவு	164,81,02	400,31,64	333,48,55	339,28,55
2217	நகர்ப் பகுதி வளர்ச்சி	1,035,97,45	943,18,35	1,320,45,01	1,439,33,86
2251	தலைமைச் செயலகம்–சமூகப் பணிகள்	4,26,39	7,28,75	7,47,66	7,48,31
2515	ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்	4,38,45	12,26,75	7,05,79	9,97,79
2551	மலைப் பகுதிகள்	33,00	62,00	1	1
3475	ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள்	13,77,78	16,08,69	16,56,98	16,56,98

3604	உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	1,504,21,34	2,553,35,79	3,087,52,93	3,271,57,21
4215	குடிநீர் வழங்கல் துப்புரவு குறித்த மூலதனச் செலவு	803,96,05	868,10,08	1,545,03,08	1,553,71,08
4216	வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு	—	—	375,00,00	—
4217	நகர்ப் பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு	53,52,29	272,75,04	380,00,03	1,636,32,03
4515	ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு	26,20,00	138,25,39	7	5,49,07
5054	சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	—	1	1	1
6215	குடிநீர் வழங்கல் துப்புரவுக்கான கடன்கள்	53,54,06	175,95,41	39,58,28	39,58,28
6217	நகர்ப்பகுதி வளர்ச்சிக்கான கடன்கள்	120,00,00	118,00,00	340,78,00	340,78,00
7610	அரசு பணியாளர் முதலியோருக்குக் கடன்கள்	—	—	—	1

இணைப்பு II

(57—ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

கொள்கை விளக்கக் குறிப்புகள் 2011–2012

முன்னுரை:

"அடித்தளத்திலிருந்து உருவாக்குவதே மிகச் சிறந்த, விரைவான மற்றும் செயல்திறன்மிக்க வளர்ச்சியாகும். ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்ற குடியரசாக மாற வேண்டும். அதற்கு துணிவுமிக்க தீர்மானங்கள் அவசியமில்லை. மாறாக, மனத்துணிவும், கூட்டாண்மை சார்ந்த, அறிவுப்பூர்வமான பணியே தேவையாகும்."

— காந்தியடிகள்.

மக்கள் நலத்தைப் பேணுகின்ற மாநிலமான தமிழகத்தில், அரசின் முயற்சிகள் அனைத்தும் ஊரகப்பகுதிகளில் வாழும் மக்களின், சமூக, பொருளாதார, அரசியல் முன்னேற்றத்தை நோக்கியே அமைந்துள்ளன. கிராமப்புறங்களில் மக்கள் பங்கேற்புடன் கூடிய சமூக, பொருளாதார வளர்ச்சியே ஊரக வளர்ச்சியின் நோக்கமாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, ஊரக வளர்ச்சி என்பது அடிப்படை வசதிகளையும், தரமான சேவைகளையும் சிறந்த முறையில் கிராமப்புற மக்களுக்கு அளிப்பதன்மூலம் அவர்களின் பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி மற்றும் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை மேம்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

ஊரகப் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவது, சமுதாயத்திற்குத் தேவையான சேவைகளை அளிப்பது, வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் குடும்பங்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவது போன்றவையே அரசின் அடிப்படை நோக்கமாகும். "வறுமை ஒழிப்பு" மற்றும் "கிராமப்புற மக்களுக்குத் தரமான சேவைகளை வழங்குதல்" ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே ஊரக வளர்ச்சித் திட்டங்கள் அமைகின்றன. இந்த அரசின் தொடர் முயற்சிகள், வறுமையை ஒழித்துத் தரமான வாழ்விற்குத் தேவையான அடிப்படைகளை நிர்ணயம் செய்யும்.

[2011 ஆகஸ்ட் 18

மேற்கண்ட நோக்கங்களை அடைவதற்கு, தற்போதைய நிலையில் கிராம ஊராட்சிகளே, ஊரக வளர்ச்சித் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துவதற்கான அலகாக உள்ளன. ஆனால், ஊரகப்பகுதி மக்கள் இந்தத் திட்டங்கள் குக்கிராமங்கள் அளவில் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டால்தான் அவர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் கிடைக்கும் என்று கருதுகின்றனர். மக்களின் எதிர்பார்ப்பிற்கிணங்க, இந்த அரசானது, ஊரகப் பகுதிகளுக்கான திட்டமிடுதல் மற்றும் செயலாக்கத்தினை குக்கிராம அளவில் எடுத்துச் செல்ல முடிவு செய்துள்ளது. தமிழ்நாட்டில், மொத்தமுள்ள 12,620 கிராம ஊராட்சிகளில் 96 கிராம ஊராட்சிகள், நகராட்சி/மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள 12,524 ஊராட்சிகளில் 79,894 குக்கிராமங்கள் உள்ளதால், குக்கிராம அளவிலான திட்டமிடுதலே ஊரக மற்றும் நகர்ப்புற இடைவெளியினைக் குறைப்பதற்கு வழிவகை செய்யும். மேலும், தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் நகர்ப்புறத்தை நோக்கிய இடப்பெயர்வு அதிகரித்துள்ளது. இதைத் தடுப்பதற்கு, நகர்ப்புறங்களில் உள்ள வசதிகளை ஊரகப்பகுதிகளில் ஏற்படுத்தித் தருவதே தீர்வாக அமையும். எனவே, இந்த அரசு, குக்கிராம அளவில் திட்டமிட்டு, அடிப்படைத் தேவைகளைக் கண்டறிந்து நிறைவேற்றும் வகையில் ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துவுள்ளது. இது ஊரகத் திட்டமிடுதல் மற்றும் செயலாக்கத்தில் ஒரு அடிப்படை மாற்றமாகக் கருதப்படும். புதிதாக அறிமுகப்படுத்தப்படும் திட்டமானது "தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" (THAI) என அழைக்கப்படும்.

குறைந்த வருவாயுள்ள வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டு வசதி என்பது பெரும் சவாலாகவே இருக்கின்றது. நாட்டிலேயே முதன்முறையாக 300 சதுர அடி பரப்பளவுள்ள இலவச வீடுகளைத் தகுதியுள்ள கிராமப்புற மக்களுக்கு வழங்கும் புதிய திட்டத்தினை இந்த அரசு அறிமுகப்படுத்த உள்ளது. இத்திட்டம், ஊரகப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், வாழ்வாதாரத்தையும் நிச்சயம் மேம்படுத்தும். குறைந்த செலவிலான கட்டுமான முறை, நவீனக் கட்டுமான முறை மற்றும் வீடுகளுக்கு சூரிய சக்தி விளக்குகள் போன்ற பசுமை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இவ்வீடுகள் கட்டப்படும்.

வறுமை ஒழிப்பே சுதந்திர இந்தியாவின் முக்கியப் பிரச்சினையாக உள்ளது. மனிதனின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், உணவு, உடை, இருப்பிடம், கல்வி மற்றும் சுகாதார வசதி போன்றவை

2011 ஆகஸ்ட் 18]

சமுதாயம் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் நிறைவு செய்யப்படவில்லை. ஊரகப்பகுதி மக்களின் இயலும் திறனை அதிகரிக்கத் தேவையான அளவில் அரசின் உதவியோடு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. மத்திய, மாநில அரசுகள் பல்வேறு வறுமை குறைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்தும், 2005 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, வருடத்தில் 100 நாட்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் திட்டமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், வறுமைக் குறைப்பில் குறிப்பிடத்தக்க அளவில் தீர்வு காண முக்கியப் பங்காற்றியுள்ளது.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை இயற்றி, சட்ட வடிவமாக்கி, உள்ளாட்சி நிருவாகத்தை உருவாக்கிய குறிப்பிடத்தக்க பெருமை இந்த அரசுக்கு உண்டு. சமூக நீதியையும், திறமையான உள்ளாட்சி நிர்வாகத்தையும் இணைத்துச் செய்ல்படுத்தும் விதமாக, ஊராட்சிகளுக்குப் பல்வேறு பொறுப்புகளும், அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி அமைப்புகளை அரசியல் அதிகாரமிக்க அமைப்புகளாகவும், கயசார்புள்ள ஜனநாயக அமைப்புகளாக ஏற்படுத்திடவும் அவற்றைத் திட்டமிடுதல் மற்றும் திட்டச் செயல்பாடுகளுக்கான முன்னோடி அமைப்புகளாக மாற்றவும் தமிழக அரசு வழிவகை செய்துள்ளது. தற்போதைய உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம், அக்டோபர் 24, 2011 இல் முடிவடைவதால், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த அரசு உரிய காலத்தில் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தும். மேலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கும் வகையிலும், ஆற்றல் வாய்ந்த முடிவுகள் எடுப்பதற்கான கூடுதல் அதிகாரங்களை வழங்கும் வகையிலும், உயர்நிலைக் குழு ஒன்று இந்த அரசால் அமைக்கப்படும்.

மனித வாழ்வை மேம்படுத்தி முன்னோக்கிச் செலுத்திட "எரிசக்தி" இன்றியமையாததாகும். மனிதகுலத்தின் முன்னேற்றமும் எரிசக்திப் பயன்பாடும் ஒன்றோடொன்று நேரடி வீதத்தில் தொடர்பு கொண்டவைகளாகும். சமீபகாலமாக, மக்கள்தொகைப் பெருக்கம், வாழ்க்கைத்தர மேம்பாடு, தொழில்மயமாக்கம் போன்ற காரணங்களினால் எரிபொருள் பயன்பாடு பன்மடங்கு அதிகரித்துள்ளதால், இயற்கையிலேயே குறைவின்றிக் கிடைக்கும்

[2011 ஆகஸ்ட் 18

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினை மாற்று எரிசக்தியாக பயன்படுத்துவது அவசியமாகிறது. எரிசக்திப் பயன்பாடு மற்றும் பராமரிப்புச் செலவினைக் குறைக்கும் வண்ணம், இந்த அரசு, தற்போதைய தெருவிளக்குகளை, சூரிய சக்திமூலம் எரியும் விளக்குகளாக மாற்றி அமைத்திட உத்தேசித்துள்ளது. மேலும், புதிதாகக் கட்டப்படவுள்ள பசுமை வீடுகளிலும் சூரிய சக்தி விளக்குகள் பொருத்தப்பட உள்ளன.

தீங்கு ஏற்படுத்தும் கழிவுப்பொருட்களுடன் மனிதனுக்கு ஏற்படும் தொடர்பைத் தடுத்து, அதன்மூலம் நலமான வாழ்வை ஏற்படுத்துவதே சுகாதாரமாகும். "மனிதக் கழிவினைப் பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கான வசதிகளை அளித்தலே சுகாதாரம் எனப்படும்" என உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. போதிய அளவில் சுகாதாரமின்மை நோய்கள் ஏற்படுவதற்கான முக்கியக் காரணமாகும். சுகாதார மேம்பாட்டின்மூலம் குறிப்பிடத்தக்க விளைவுகளை, தனிமனித மற்றும் சமூக வாழ்வில் ஏற்படுத்த முடியும். திட மற்றும் திரவக் கழிவுகளை சரியான முறையில் அகற்றுவதும் சுகாதாரத்தின் முக்கிய அம்சமாகும். பாதுகாக்கப்பட்ட குடிநீர், தனிநபர் மற்றும் பொது சுகாதார வசதிகளை அளித்திட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. பழுதடைந்த நிலையிலுள்ள அனைத்து மகளிர் சுகாதார வளாகங்களும் பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்குக் கல்வி அடிப்படையானதாகும். இளம் வயதினர், அறிவு, ஒழுக்கம் மற்றும் உடல் வலிமையினை வளர்த்துக்கொள்ளும் இடமாகப் பள்ளிகள் திகழ்கின்றன. எனவே, மாணவர்களின் வளமான எதிர்காலத்திற்கான நல்ல சூழலை ஏற்படுத்திடும் வகையில், பள்ளிகளில் போதிய அடிப்படை வசதிகளை அமைத்திட இந்த அரசு முன்னுரிமை வழங்கும்.

நவீன உலகில், தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் மற்றும் அரசுத் துறைகளுக்கிடையேயும் பிற அமைப்புகளோடும் விரைவாகவும், தரமான முறையிலும் தகவல் பரிமாற்றம் செய்வதற்குக் கணினியின் அவசியத்தினை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, ஊரக வளர்ச்சித்துறையைச் சார்ந்த அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இணையதள வசதியுடன்கூடிய கணினி வழங்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும்.

2011 ஆகஸ்ட் 18]

பல்வேறு தரப்பினர் உரிமை கொண்டாடினாலும், இந்த அரசுதான், கல்வி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி உள்ளிட்ட ஒட்டுமொத்த மகளிர் மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தை அமைத்தது. ஆண், பெண் பேதமில்லா நிலையினை உறுதிப்படுத்திட இவ்வரசு முனைப்புடன் செயல்படும். மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது தற்போது மாபெரும் ஒரு இயக்கமாக வளர்ச்சியடைந்து மகளிருக்குப் பெருமளவில் அதிகாரமளித்துள்ளது.

சமூகத்தில் மிகவும் பாதிப்புக்குள்ளாகும் நிலையிலுள்ள வறியோரிலும் வறியோரை முக்கிய இலக்காகக் கொண்டு அப்பகுதி மக்கள் மூலமாகவே வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தத்தக்க வகையில், "புதுவாழ்வு" எனும் திட்டத்தினை இந்த அரசு 2005 நவம்பர் மாதம் தொடங்கியது. இத்திட்ட செயலாக்கத்தினை கூடுதல் நிதி ஆதாரத்துடன் மேலும் பல பகுதிகளுக்கு விரிவுபடுத்திட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

கடந்த 2004 டிசம்பர் 26 ஆம் நாள் ஆழிப்பேரலை, தமிழக கடற்பகுதியில் பேரழிவினை ஏற்படுத்தியபோது, இவ்வரசு தேவையான அனைத்து ஆதாரங்களையும் திரட்டி கடற்கரையோரம் வாழும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிரந்தர நிவாரண உதவிகளைச் செய்தது. அந்நேரத்தில் தமிழக அரசால் எடுக்கப்பட்ட கடினமான முயற்சிகள் அகில உலக அளவில் பாராட்டப்பட்டன. மேலும், உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற பன்னாட்டு நிறுவனங்களை அணுகி நிதி ஆதாரத்தினைப் பெற்று, ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோர் மட்டுமின்றி கடற்கரையோரம் வசிக்கும் அனைத்துத் தரப்பினருக்கும் நிரந்தரக் குடியிருப்புகளை அமைக்க நடவடிக்கை எடுத்தது. இப்பணிகள் அனைத்தும் 2011-2012இல் முடிவடையும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, கிராமப்புற மேம்பாட்டுக்காக பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவது மட்டுமல்லாது, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தங்களது கடமைகளை திறம்பட நிறைவேற்றி சுயாட்சி அமைப்புகளாக செயல்படவும் உதவி புரிகிறது. குக்கிராம அளவில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி சுகாதாரத்தினை மேம்படுத்தி, இயற்கை வளங்களைக் காத்து, கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் உள்ள இடைவெளியைக் குறைத்து, வறுமையை அகற்றி வளமான தமிழகத்தை உருவாக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

2. ஊராட்சி நிர்வாகம்

தமிழ்நாட்டில் உள்ளூர் அரசமைப்புகள் சோழர் ஆட்சிக் காலத்தில் செயல்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகள் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர வரதர் கோவிலில் உள்ள கல்வெட்டுகள்மூலம் கண்டறியலாம். அக்காலத்தில் கிராமக் கூட்டம் நடைபெற்ற இடத்தைச் சுற்றியுள்ள சுவர்களில் தேர்தல் விதிமுறைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் முறைகள் விரிவாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் பராந்தகச் சோழர் ஆட்சி செய்த கி.மு.920-ஆம் ஆண்டினைச் சார்ந்ததாகும். இத்தகைய மக்களாட்சி அமைப்பில் கிராமக் குழுக்களின் உறுப்பினர்கள் இரகசியக் 'குடவோலை' முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம அளவில் பொருளாதார மற்றும் நிருவாகப் பொறுப்புகளை முழுமையான சுதந்திரத்துடன் செயல்படுத்தி வந்தனர். அவ்வாறான இரகசிய வாக்குப்பதிவே இன்றைய வாக்குப்பதிவு முறையின் அடித்தளமாகும். பெரிய குடம் ஒன்று கிராமத்தின் முக்கியமான பகுதியில் வாக்களிப்பதற்காக வைக்கப்பட்டு, வாக்குரிமை பெற்றோர் தங்களுக்கு விருப்பமான பெயரைப் பனை ஓலைகளில் எழுதி அக்குடத்தில் போடுவர். இறுதியாகக் குடத்தில் உள்ள ஓலைகளை வெளியில் எடுத்து, வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் எண்ணப்பட்டு, அதிக வாக்குகள் பெற்றவரே கிராமக் குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கிராமக் குழுவின் உறுப்பினராகப் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைக்கான விதிகள் வகுக்கப்பட்டிருந்தது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களாகும்.

ஆங்கிலேயர்களின் வருகைக்குப்பின் உள்ளூர் அரசமைப்பு முறை நலிவுற ஆரம்பித்ததோடு நவீனத் தொழில்மயமானதால் அதிக அளவில் வேலைவாய்ப்பில்லாத நிலை ஏற்பட்டது. இவை, உள்ளூர் அரசமைப்பின் அடித்தளத்தையே சீர்குலைத்தது. எனினும், ஆங்கிலேயர்களால் அவர்களுக்கு ஏற்றவாறான உள்ளூர் அரசமைப்பு முறை கொண்டு வரப்பட்டது.

1854-ஆம் ஆண்டு 'மாவட்ட போர்டு நிதி' ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 1871-ஆம் ஆண்டு ஆளுநர் மேயோ என்பவரால் மெட்ராஸ் உள்ளாட்சி நிதிச் சட்டம் கொண்டு வரப்பட்டது. உள்ளாட்சி நிதிக் குழுமங்களும் அந்தந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டு சுறிப்பிட்ட செயல்பாடுகளுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. 1882-ஆம் ஆண்டு ரிப்பன் பிரபுவால்

2011 ஆகஸ்ட் 18]

கொண்டுவரப்பட்ட உள்ளூர் அரசமைப்புத் தீர்மானத்தின் வெளிப்பாடாக 1884-ஆம் ஆண்டு மெட்ராஸ் உள்ளாட்சிக் குழும சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம், மாவட்ட போர்டுகள், வட்டார போர்டுகள் மற்றும் கிராமங்களின் கட்டமைப்புகள் ஆகிய மூன்றடுக்கு முறைக்கு வழிவகுத்தது. 1920-ஆம் ஆண்டு இரண்டு சட்டங்களை அரசு கொண்டு வந்தது.

1. 1884-ஆம் ஆண்டு சட்டத்திற்குப் பதிலாக சென்னை லோக்கல் போர்டு சட்டம், மற்றும்

2. கிராம ஊராட்சிகள் சட்டம்

சென்னை கிராம ஊராட்சிகள் சட்டத்திற்கு மாற்றாக, சென்னை லோக்கல் போர்டு சட்டம் 1920 திருத்தியமைக்கப்பட்டு அனைத்து கிராம ஊராட்சிகளும் 1930-ல் சென்னை லோக்கல் போர்டு சட்டம் 1920-ன்கீழ் கொண்டு வரப்பட்டன. இவ்வாறு உள்ளூர் அரசமைப்புகளில் பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டாலும், நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் ஆய்வாளர்கள் மூலமாக உள்ளாட்சி அமைப்புகளை முழுக் கட்டுப்பாட்டில் அரசு வைத்திருந்தது.

நாடு விடுதலை அடைந்த பின்னர், ஊராட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கும் வகையில் 1950-ஆம் ஆண்டு 'சென்னை கிராம ஊராட்சிகள் சட்டம்' கொண்டு வரப்பட்டது. அரசியலமைப்புச் சட்டம் பகுதி IV, பிரிவு 40-ல் கிராம அவற்றுக்கு ஊராட்சிகளை அமைத்து அதிகாரங்களும் பொறுப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டது. மாவட்ட போர்டுகள், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றையும் கிராம ஊராட்சிகள், மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பல்வேறு பணிகளையும் பராமரித்து வந்தன. 1951-ஆம் ஆண்டு மதுரையில் பரிசோதனை முறையில் சில கிராம ஊராட்சிப் பகுதிகளை ஒன்று சேர்த்து 'மாதிரி ஊராட்சி ஒன்றியம்' அமைக்கப்பட்டது. வளர்ச்சி வட்டாரங்கள் மூலம் உள்ளூர்ப் பகுதி வளர்ச்சிக்காக 1952-ஆம் ஆண்டு மத்திய அரசால் சமுதாய வளர்ச்சி மற்றும் தேசிய விரிவாக்கத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

மத்திய அரசால் அமைக்கப்பட்ட திரு. பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையிலான குழு, மக்களாட்சி பரவலாக்கம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஊராட்சி அமைப்புகளை ஏற்படுத்திடப் பரிந்துரைத்து, 1957 ஆம் ஆண்டு சனவரி மாதம்

தனது அறிக்கையை சமர்ப்பித்தது. பல்வந்த்ராய் மேத்தா குழுவின் பரிந்துரைகளாவன:

1. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் அமைத்தல் மற்றும் அமைப்பு ரீதியிலான ஒருங்கிணைப்பினை மறைமுகத் தேர்தல் முறை மூலம் ஏற்படுத்துதல்.

2. நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு கிராம ஊராட்சிகளையும், மறைமுகத் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு, ஊராட்சி ஒன்றியங்களையும், மாவட்ட ஊராட்சிகளையும் அமைத்தல்.

3. அனைத்து வகையான திட்டமிடல் மற்றும் வளர்ச்சிப் பணிகளை மூன்றடுக்கு உள்ளாட்சிகளிடம் ஒப்படைத்தல்.

4. ஊராட்சி ஒன்றியங்கள், திட்டங்களைச் செயல்படுத்தும் அமைப்புகளாகவும், மாவட்ட ஊராட்சிகள், ஆலோசனை, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்புகளாகவும் செயல்பட வேண்டும்.

5. மாவட்ட ஊராட்சியின் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பார்.

6. நியாயமான முறையில் இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களும் பொறுப்புகளும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

7. உள்ளாட்சி அமைப்புகள் தங்களது கடமைகளை நிறைவேற்றிட ஏதுவாக போதுமான நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளித்தல்.

8. வருங்காலங்களிலும் இந்த அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் கிடைக்கும் வகையிலான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும்.

ஆனால், பல்வந்த்ராய் மேத்தா குழுவின் பரிந்துரைகளை அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளாத நிலையில், 1958 ஆம் ஆண்டு மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம் மற்றும் 1958 ஆம் ஆண்டு மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம் கொண்டு வரப்பட்டன. இச்சட்டங்களின் முக்கிய அம்சங்களாவன:

2011 ஆகஸ்ட் 18]

1. வளர்ச்சி வட்டாரங்களுக்குப் பதிலாக, ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்டு வருதல்.

2. மாவட்ட போர்டுகளைக் கலைத்தல்.

3. ஆலோசனை வழங்கும் வகையில் மாவட்ட வளர்ச்சி மன்றங்களை ஏற்படுத்துதல்.

4. பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் சமூக நலப் பணிகளைச் செயல்படுத்தும் பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்குதல். ஆயினும், நீதி வழங்கும் அதிகாரம் போன்ற பல அதிகாரங்கள் கிராம ஊராட்சிகளிடமிருந்து எடுக்கப்பட்டன.

பல்வந்த்ராய் மேத்தா குழு, மாவட்ட அளவில், மாவட்ட ஊராட்சியை உள்ளடக்கிய மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பு முறையினைப் பரிந்துரை செய்த. போதிலும், மதராஸ் அரசு, மாவட்ட அளவில் மாவட்ட ஊராட்சிகளுக்குப் பதிலாக மாவட்ட வளர்ச்சி மன்றங்களை ஏற்படுத்தியது. இதனால் கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் என 'இரண்டு அடுக்கு ஊராட்சி முறை' ஏற்படுத்தப்பட்டது. மாவட்ட போர்டுகள் கலைக்கப்பட்டதால் அதற்குப் பதிலாக ஊராட்சி ஒன்றியங்கள் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டன. மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பலர் இந்த அமைப்பின் உறுப்பினர்களாகவும் செயல்பட்டு வந்தனர். இவ்வாறாக ஊராட்சி ஒன்றியங்கள், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் முக்கிய அமைப்பாக விளங்கத் தொடங்கின.

73-வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் 1993, ஏப்ரல் மாதத்தில் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 243 ஜி-ன்படி ஊராட்சி அமைப்புகளுக்குப் பல்வேறு பொருள்களில் திட்டங்களைச் செயல்படுத்தும் முழுமையான அதிகாரங்களும், பொறுப்புகளும் கிடைப்பதற்கு அதிகமான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தில் 11-வது அட்டவணையில் 29 பொருள்கள் குறித்து வரையறுக்கப்பட்டுள்ளது. 74-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 'மாவட்ட திட்டக் குழு' உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

73-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்திற்கு ஒப்ப மாநில அரசுகள் தங்கள் ஊராட்சிச் சட்டங்களில் தேவையான திருத்தங்கள் செய்து புதிய சட்டத்தை இயற்ற வேண்டும். 73—வது அரசியலமைப்புச் சட்டம், உள்ளாட்சி அமைப்பு முறையில் புதிய மற்றும் முக்கியமான பரிணாம மாற்றங்களைக் கொண்டு வந்தது. அவற்றில் கிராம சபைக் கோட்பாட்டை அறிமுகப்படுத்துதல், மூன்றடுக்கு ஊராட்சி முறை ஏற்படுத்துதல், நேரடித் தேர்தலின் மூலம் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப ஊராட்சி அமைப்புகளின் பதவிகளுக்கு இட ஒதுக்கீடு செய்தல், மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாமல் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்தல், தலைமைப் பதவியிடங்களில் சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு, ஐந்தாண்டுகளுக்கொரு முறை உள்ளாட்சித் தேர்தல், உள்ளாட்சி அமைப்புகள் கலைக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்குள்ளாக தேர்தல் நடத்துதல், மாநில சட்டத்தின் மூலம் ஊராட்சிகளுக்கு பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை அளித்தல், மாநில அரசின் நிதி ஆதாரங்களை நகர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளித்தல், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையம் அமைப்பதன்மூலம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்களை ஆய்வு செய்து பரிந்துரை செய்தல் மற்றும் மாநிலத் தேர்தல் ஆணையத்தை அமைத்தல் ஆகியவை முக்கிய அம்சங்களாகத் திகழ்கின்றன.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ஆம் ஆண்டு இயற்றப்பட்டு 22-4-1994 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்படி, தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில், பல்வேறு முக்கியமான மாறுதல்கள் கொண்டு வரப்பட்டன.

- தமிழ்நாட்டில் மூன்றடுக்கு ஊராட்சி முறை நடைமுறைக்கு வந்தது.
- 'ஊராட்சி' என்ற பொதுப்படையான சொல் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களைக் குறிப்பதற்கெனப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், பேரூராட்சிகள், நகர்பாலிகா சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன.

2011 ஆகஸ்ட் 18]

- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சியின் தலைவர் ஆகியோர், வாக்காளர்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுகின்றனர். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், மாவட்ட ஊராட்சியின் தலைவர்களும் முறையே ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தலின்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக / தனித்தனியாக இயங்கக் கூடியவை. கிராம ஊராட்சியின் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்கள் அல்ல.

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப, பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்றில் ஒரு பங்கு, பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பதவியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு, 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை சுழற்சிமுறையில் மாற்றம் செய்யப்படும்.

- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் தலைவர்கள் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். காலியிடம் ஏற்பட்ட 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு பதவிகள் நிறைவு செய்யப்படும்.

- தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- மாநில நிதி ஆணையம் ஐந்தாண்டுக்கு ஒரு முறை அமைக்கப்பட்டு வருகிறது.

- ஒவ்வொரு மாவட்டத்திற்கும், மாவட்டத் திட்டக் குழு ஏற்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டக் குழு, ஊராட்சி மற்றும் நகராட்சிகளின் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்ட அளவில் திட்டத்தினைத் தொகுத்திடும்.

[2011 ஆகஸ்ட் 18

2.1 கிராம சபை

கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அமைப்பு கிராம சபை ஆகும். குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் கிராம சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு கிராம சபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் சட்ட ரீதியாக கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும். ஆயினும், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு ஆண்டில் குறைந்தது நான்கு முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக் கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இது தவிர, தேவையின் அடிப்படையில் விதிமுறைகளுக்குட்பட்டு கிராம சபைக் கூட்டம் நடத்தலாம்.

கிராம சபை பின்வரும் முக்கியமான பணிகளை நிறைவேற்றுகின்றன:

1. கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
2. கிராம ஊராட்சியின் வரவு—செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
3. தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் வழங்குதல்
4. திட்டப் பணிகள் செயல்பாட்டின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.
5. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல்.
6. கிராமத்தில் உள்ள பல்வேறு இன மக்களிடையே சமுதாய மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.

2011 ஆகஸ்ட் 18]

2.2 மாநிலத் தேர்தல் ஆணையம்

73-வது இந்திய அரசியலமைப்பு திருத்தச் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 239-ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் சனநாயகத்தை வலுப்படுத்தும் விதமாக சுதந்திரமான மற்றும் சுய சார்புடைய அமைப்பாக 1994 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஊராட்சிகளில் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகிய அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையாக தேர்தலை நடத்துதல் ஆகிய பணிகளைக் கண்காணித்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல், ஆணையரைத் தலைமையாகக் கொண்ட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தைச் சார்ந்ததாகும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 239, உட்பிரிவு (3)—ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு, ஆணையர் மற்றும் நிர்வாக பணியாளர்களும் நியமிக்கப்படுவார்கள். மாநில தேர்தல் ஆணையரின் பணி விதிகள், பதவிக்காலம் ஆகியவை குறித்த விதிகளை ஆளுநர் நிர்ணயிப்பார். ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். மேலும், இப்பதவியினை ஆறு ஆண்டுகளுக்கு மிகாமல் இரண்டு முறை நீட்டிப்பு செய்யலாம். ஆனால் மாநிலத் தேர்தல் ஆணையரை அவருடைய பதவியிலிருந்து நீக்க முடியாது. அவ்வாறு நீக்குவதாக இருந்தால், உயர் நீதிமன்ற நீதிபதியை நீக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், மாநிலத் தேர்தல் ஆணையர் நியமிக்கப்பட்ட பின்னர் அவருடைய பணி விதிகள் தொடர்பான நிபந்தனைகள் எதுவும் அவரைப் பாதிக்கக்கூடிய வகையில் இருக்கக் கூடாது.

2.3 தேர்தல்கள்

தற்போதைய ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் அக்டோபர் 24, 2011-ல் முடிவடைய உள்ளது. மேலும் சாதாரணத் தேர்தல்கள் அக்டோபர் 2011-ல் நடைபெற உள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

அக்டோபர் 2006ல் நடைபெற்ற தேர்தலில், மூன்றடுக்கு ஊராட்சிகளின் பதவிகள் மற்றும் தலைமைப் பதவியிடங்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1.	கிராம ஊராட்சி வார்டுகள்	40,879
2.	கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்	97,458
3.	ஊராட்சி ஒன்றிய வார்டுகள்	6,570
4.	மாவட்ட ஊராட்சி வார்டுகள்	656
5.	கிராம ஊராட்சித் தலைவர்கள்	12,618
6.	ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள்	385
7.	மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்	29

2.4 ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243 D—ன்படி ஊராட்சி அமைப்புகளில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்பட வேண்டும். அதில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் ஆதி திராவிடர், பழங்குடியினப் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும் எனவும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர், பழங்குடியினப் பெண்களுக்கு ஒதுக்கப்படும் எண்ணிக்கையையும் உள்ளடக்கி மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும். இதற்காக தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, உட்பிரிவுகள் 11, 20, 32 மற்றும் 57 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள் 1995 ஆகியவை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு செய்வது குறித்துத் தெளிவாக விளக்குகிறது.

2011 ஆகஸ்ட் 18]

2011 ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சித் தேர்தலுக்கான பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விவரம்

வ. எண்	இட ஒதுக்கீடு வகை	மொத்த பதவி இடங்கள்	மகளிருக்கான ஒதுக்கீடு		ஆதிதிராவிடருக்கான ஒதுக்கீடு		பழங்குடியினருக்கான ஒதுக்கீடு	
1	மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்	31	11	35%	7	24%	0	0%
2	ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள்	385	140	36%	87	23%	4	1%
3	கிராம ஊராட்சித் தலைவர்கள்	12,524	4,289	34%	3,136	25%	156	1%
4	மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்	655	228	35%	154	24%	8	1%
5	ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள்	6,471	2,285	35%	1,526	24%	64	1%
6	கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்	99,333	33,121	33%	25,360	26%	1,039	1%

எதிர்வரும் ஊரக உள்ளாட்சித் தேர்தலைச் சிறப்பாக நடத்திட ஏதுவாக 903 தற்காலிகப் பணியிடங்களுக்கு அனுமதி வழங்கி இதற்கான செலவினமாக ரூ.9.38 கோடி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்காக அரசு கீழ்க்கண்ட பணியிடங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது:

வ.எண்	பதவியின் பெயர்	பதவிகளின் எண்ணிக்கை
(அ) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்ககம் :		
1.	உதவி இயக்குநர்	1
2.	வட்டார வளர்ச்சி அலுவலர்	1
3.	உதவியாளர்	3
4.	கணினி இயக்குபவர்	1
	மொத்தம்	6
(ஆ) மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (வளர்ச்சிப் பிரிவு) :		
1.	நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்)	31
2.	வட்டார வளர்ச்சி அலுவலர்	32
3.	உதவியாளர்	32
4.	கணினி இயக்குபவர்	32
	மொத்தம்	127
(இ) ஊராட்சி ஒன்றியங்கள் :		
1.	உதவியாளர்கள்	385
2.	கணினி இயக்குபவர்	385
	மொத்தம்	770
	பெருமொத்தம் (அ + ஆ + இ)	903

2.5 மாநில நிதி ஆணையம்

73-வது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 198-ன்படி, தமிழ்நாடு மாநில நிதி ஆணையம் அமைத்திட வழி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில்

2011 ஆகஸ்ட் 18]

முதல் மாநில நிதி ஆணையம் 1994-ல் அமைக்கப்பட்டு, கீழ்க்கண்ட பொருள்களை ஆய்வு செய்து அரசிற்கு பரிந்துரை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது:

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள்மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கும் முறை.

2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.

3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.

4. ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

தமிழகத்தில் நான்காவது மாநில நிதி ஆணையம் டிசம்பர் 2009-ல், அரசாணை (நிலை) எண்.549, நிதித் துறை, நாள் 1-12-2009-ன்படி ஏற்படுத்தப்பட்டது. இதன்படி, 1-4-2012 முதல் ஐந்தாண்டுகளில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுடைய நிதி ஆதாரங்களை ஆய்வு செய்து தேவையான பரிந்துரைகளை 2011-ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதிக்குள் அறிக்கையாக அரசுக்கு அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தற்காலிக அறிவிக்கையின்படி ஊரக மற்றும் நகர்ப்புற மக்கள்தொகை விகிதாச்சாரம், தமிழ்நாட்டில் 52:48 என உள்ளது. இதனால், தற்போது உள்ள மாநில நிதி வருவாய்ப் பகிர்வான 58:42 என்ற விகிதாச்சாரத்தை மாற்றி, நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு அதிக ஒதுக்கீடு கிடைக்கக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, நான்காவது மாநில நிதி ஆணையத்திடம் நடைமுறையில் உள்ள விகிதாச்சாரப் பகிர்வினையே தொடர வேண்டிய அவசியம் குறித்தும், விகிதாச்சார மாற்றத்தால் நகர்ப்புற மற்றும் ஊரக மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தில் இடைவெளி மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது எனவும், ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தத் தவறினால்,

[2011 ஆகஸ்ட் 18

அவர்கள் அதிக அளவில் நகர்ப்புறங்களுக்கு இடம் பெயரும் அபாயம் ஏற்படலாம் எனவும், அதுவே நகராட்சிகளுக்குப் பெரும் நிதிச் சுமையாக மாறும் எனவும் தெரிவித்துள்ளது.

2011-12 ஆம் நிதியாண்டில் மாநில நிதி ஆணைய மானிய உத்தேச ஒதுக்கீடு ரூ.3,053 கோடியாகும்.

2.6 மாவட்டத் திட்டக் குழு

1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 241-ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்டத் திட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத் திட்டக் குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் இருப்பர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பர். மாவட்டத் திட்டக் குழுவின் பணிகள் பின்வருமாறு:

1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள் விவரங்களைச் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதிவரையான விவரங்களைப் பெறுதல்.

2. தேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளித்தல்.

3. மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.

4. மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். மாவட்டத் திட்டக் குழு தயாரிக்கும் வளர்ச்சித் திட்டம், மாநிலத் திட்டக் குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருக்கும்.

5. மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

6. வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.

2011 ஆகஸ்ட் 18]

7. மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.

8. மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.

2.7 மத்திய நிதி ஆணையம்

13-வது மத்திய நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி மத்திய அரசு 2010—11 முதல் 2014—15-ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகளுக்கு ரூ.2,016.30 கோடி நிதியினை அடிப்படை மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது. 2010—11-ஆம் ஆண்டுக்கான அடிப்படை மானியமாக ரூ.287.10 கோடி மத்திய அரசிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. இந்த நிதி கீழ்க்கண்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது:

- குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் மற்றும் சுகாதார வசதி, இவை தொடர்பான இயக்கம் மற்றும் பராமரிப்பு.
- குடிநீர் விநியோகம் மற்றும் தெரு விளக்குகளுக்கான மின் கட்டணம் செலுத்துதல்.

2011-12 ஆம் ஆண்டிற்கு ரூ. 333.00 கோடி, 13-வது மத்திய நிதி ஆணைய அடிப்படை நிதி மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதி விடுவிப்பினை எதிர்நோக்கித் தமிழ்நாடு அரசு, முதல் தவணையாக ரூ.166.50 கோடி நிதியினை அரசாணை (நிலை) எண் 43, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 20-07-2011-ன்படி, கிராம ஊராட்சிகளுக்கு விடுவித்துள்ளது. 2011-12 முதல் 2014-2015 வரையான நான்கு ஆண்டிற்கான செயல் திறன் சார்ந்த மானியமாக ரூ.1,067.50 கோடி தமிழ்நாட்டில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

2.8 கிராம ஊராட்சி

கிராம ஊராட்சி என்பது, அதற்கென உள்ள கிராமங்களை உள்ளடக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கையில் குறிப்பிட்ட தேதியிலிருந்து அமைக்கப்படும். சிறந்த நிருவாகம் என்ற அடிப்படையில் உரிய அறிவிக்கையின் வாயிலாக கிராம ஊராட்சிகளைப் பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தலாம். கிராம

[2011 ஆகஸ்ட் 18

ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை (தலைவர் நீங்கலாக) மக்கள் தொகை அடிப்படையில் ஊராட்சிகளின் ஆய்வாளரால் அறிவிக்கை செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாதவரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப் பின்னர் 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும். ஆயினும், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஊராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பினைக் கவனித்திட தனி அலுவலர்கள் நியமிக்கப்படுவர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் கீழ்க்கண்ட குழுக்களை அமைத்திட வேண்டும்:

1. நியமனக் குழு
2. வளர்ச்சிக் குழு
3. வேளாண்மை மற்றும் குடிநீர் வழங்கல் குழு
4. பணிகள் குழு
5. தற்காவிகக் குழு

1994 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 110-ன்படி கீழே குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டியது கிராம ஊராட்சிகளின் முக்கியக் கடமையாகும்:

1. அனைத்து கிராமச் சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள், தடுப்புச் சுவர்கள் மற்றும் தரைப் பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல். (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர)
2. பொது இடங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்.
3. கழிவுநீர்க் வாய்க்கால் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.
4. தெருக்களைச் சுத்தம் செய்தல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.
5. பொதுக் கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்

2011 ஆகஸ்ட் 18]

6. இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

7. குடிநீர் வழங்குதல்.

8. அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111-ன்படி பின்வரும் கடமைகளை ஊராட்சியின் தேவைக்கேற்பவும், நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் கிராமத்தில் உள்ள சாலைகளின் இரு பக்கங்களிலும் மரங்கள் நடுதல், தெரு விளக்குகள், சந்தைகள், விழாக்கள், பொருட்காட்சிகள், வண்டிகள் நிறுத்தும் இடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக் கூடங்கள், படிப்பகங்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் ஏற்படுத்தி நிர்வகித்தல் போன்றவை:

2.8.1 நிதி வருவாய்

கிராம ஊராட்சிகள் மட்டுமே தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பின்வரும் வரிகள், கட்டணங்கள் ஆகியவற்றை விதித்து வசூலிக்க அதிகாரம் பெற்றுள்ளது.

2.8.1.1 வரி வருவாய்

1. வீட்டு வரி
2. தொழில் வரி
3. விளம்பர வரி

2.8.1.2 வரியல்லாத வருவாய்

1. கட்டடங்கள் மற்றும் வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்
2. அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமம்
3. சந்தைக் கட்டணம்
4. குடிநீர்க் கட்டணம்
5. வண்டி நிலையங்களுக்கான கட்டணம்

[2011 ஆகஸ்ட் 18

6. சமூகக் காடுகள் ஏலம்

7. மீன்பாசி குத்தகை

8. 2சி மரப்பட்டா

9. சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்

10. பாதுகாப்பு மூலம் பெறப்படும் கட்டணங்கள்

11. அபராதங்கள் மற்றும் தண்டத்தீர்வை.

ஊராட்சி நிலங்களில் வைக்கப்பட்டுள்ள அலைபேசிக் கோபுரங்களுக்கான கட்டணம், கிராம ஊராட்சிச் சாலைகளில் கண்ணாடிக் கம்பி இழை பதித்தலுக்கான கட்டணம், நிலங்களை வகைப்படுத்தல் மற்றும் இதர கட்டணங்களை வசூலித்தல் மூலம் கூடுதல் வருவாயினை ஏற்படுத்தலாம். அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. இந்தக் குழு, ஊராட்சிகளுக்கு அதிக நிதி ஆதாரங்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிந்து அதற்கான பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும்.

2.8.2 ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்களான முத்திரைத்தாள் மீதான வரி மற்றும் கேளிக்கை வரி ஆகியவற்றின் ஒரு பகுதி வருவாய் கிராம ஊராட்சிகள் பெறத் தகுதியுடையனவாகும்.

2.8.3 மானியம்

1. **மத்திய நிதி ஆணைய மானியம்:** தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மத்திய நிதி ஆணைய மானியம் முழுவதும் குடிநீர் மற்றும் சுகாதாரப் பணிகளுக்காக கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2. **மாநில நிதி ஆணைய மானியம்:** ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் இருந்து ஒதுக்கப்படும் 10 சதவீத நிதியில் ஒதுக்கீடு செய்யப்படும் 58 சதவீத நிதியில், 60 சதவீதம் கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த

மானியம் ஒவ்வொரு மாதமும் ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது. அதில் குறைந்தபட்ச நிதியாக (Floor amount) ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுத் தனியாகக் கணக்குப் பராமரிக்கப்பட்டு, தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் வழங்கல் தொடர்பான மின்கட்டணம் செலுத்த வழி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை, மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மேற்காணும் 60 சதவீத நிதியில் 5 சதவீதம் கிராமங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ஏதுவாக, அடிப்படைக் கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்து கொடுப்பதற்கான நிதியாக (Infrastructure Gap Filling Fund) ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

3. மத்திய அரசு மற்றும் மாநில அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களுக்காக விடுவிக்கப்படும் வளர்ச்சி நிதி.

2.9 ஊராட்சி ஒன்றியம்

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், 3000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். வார்டு உறுப்பினர்கள் நேரடியாக வார்டில் உள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலில் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுவார்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கை	ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை
10– மற்றும் அதற்கு குறைவாக	24
11–20	75
21–30	83
31–40	82
41–50	68
51 மற்றும் அதற்கு அதிகமாக	53
மொத்தம்	**385**

[2011 ஆகஸ்ட் 18

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை விவரம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள பணியாளர்கள் இருப்பார்கள். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 112-ன்படி. ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமான சில பணிகளின் விவரம் பின்வருமாறு:

1. மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
2. ஊராட்சி ஒன்றியச் சாலைகள், சிறு பாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப் பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.
3. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.
4. தொற்றுநோய் பரவாமல் இருக்கத் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்
5. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.
6. ஊராட்சி ஒன்றியச் சந்தைகள்.

1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 114-ன்படி. பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளையும் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

2.9.1 நிதி

1. ஊராட்சி ஒன்றியக் குழு வரிகள் ஏதும் விதிக்க இயலாது.
2. ஊராட்சி ஒன்றியத்திற்கான வருவாய் இனங்களாவன: வரியில்லாத வருவாய், ஒப்பளிக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இனத்தில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டத்தொகை, அரசு மானியங்களான மாநில நிதி ஆணைய மானியம், தாய் சேய் நல விடுதிக்கான மானியம், ஊரக மருந்தக

2011 ஆகஸ்ட் 18]

மானியம், சமூகக் கல்வி மானியம், மகளிர் மற்றும் குழந்தைகள் நல மானியம், உள்ளூர் பாசன நிதி மற்றும் மத்திய மாநில அரசுத் திட்ட மானியங்கள்.

3. மாநில நிதி ஆணைய மானியம், மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 10 சதவீத நிதியில், 58 சதவீதம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதில், 32 சதவீதம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் விடுவிக்கப்படுகிறது. சீரான நிதி கிடைக்கும் வகையில் ரூ30 லட்சம் குறைந்தபட்ச நிதியாக (Floor amount) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மீதித்தொகை, மக்கள் தொகை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு விடுவிக்கப்படுகிறது.

2.10 மாவட்ட ஊராட்சி

1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 24-ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியும், உத்தேசமாக 50,000 மக்கள் தொகைக்கு ஒரு வார்டு என்ற அடிப்படையில் பல வார்டுகளைக் கொண்டுள்ளது. வார்டு உறுப்பினர்கள் மக்களால் நேரடித் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல்மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் செயலராக ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, பின்வரும் நிலைக் குழுக்களை அமைக்கலாம்:

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்
3. பொதுப் பணிகள்
4. கல்வி
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் நலத் திட்டங்கள்.

[2011 ஆகஸ்ட் 18

இக்குழுக்கள் மாவட்ட ஊராட்சியில் ஒப்படைக்கப்படும் பணிகளைச் செயல்படுத்தும். இக்குழுக்கள் தவிர, மாவட்ட ஊராட்சியால் கூடுதல் நிலைக் குழுக்களைத் தேவையின் அடிப்படையில் அமைத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார். மாவட்ட ஊராட்சியின் கடமைகளாவன:

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.

2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் திர்வாக அறிக்கையினை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.

3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால் வளம், கோழிப்பண்ணை, மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றைத் திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.

4. ஊரக வீட்டு வசதிக்கான திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல், குறிப்பாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு.

5. பெரிய அளவிலான குடிநீர்த் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.

2.10.1 நிதி

1. மாவட்ட ஊராட்சிக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை.

2. மாநில நிதி ஆணைய மானியம் மற்றும் மாவட்ட ஊராட்சிக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டடங்கள் வாயிலாகக் கிடைக்கும் வருவாய் ஆகியவை முதன்மை வருவாய் இனங்களாகும்.

3. மாநில நிதி ஆணைய மானியம் — மாநில சொந்த வரி வருவாயில் 10 சதவீத ஒதுக்கீட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் 58 சதவீத நிதியில்,

2011 ஆகஸ்ட் 18]

8 சதவீதம் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

2.11 ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியினை ஒருங்கிணைத்தல்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத் தாள் வரி, கேளிக்கை வரி ஆகியவற்றில் இருந்து பெறப்படும் வருவாய் நிதியினை மாநில அளவில் ஒருங்கிணைத்து ஊராட்சிகளுக்குப் பிரித்து வழங்க அரசு ஆணையிட்டுள்ளது (சமூகக் காடுகள் வருவாய் மற்றும் கனிம வளங்களுக்கான குத்தகை நீங்கலாக). 2010—2011 ஆம் ஆண்டில் ஒருங்கிணைக்கப்பட்ட வருவாயில் மூன்றில் இரண்டு பங்கு திட்டப் பணிகளுக்காக மாநில அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டு மீதி மூன்றில் ஒரு பங்கு நிதி மட்டும் ஊராட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டது. புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசு, ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கான அனைத்து வழிமுறைகளையும் ஆராய்ந்து கூடுதல் நிதி கிடைக்க வாய்ப்பினை ஏற்படுத்த உறுதி பூண்டுள்ளது. முதற்கட்டமாக ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதி மற்றும் திட்டங்களுக்கு அளிக்கப்படும் நிதியின் விகிதாச்சாரம் மாற்றப்பட்டுள்ளது. அதனடிப்படையில், 2011-2012 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்ட வருவாயாக ரூ.532.42 கோடி கணக்கிடப்பட்டதில், மூன்றில் இரண்டு பங்கு நிதியாக ரூ.354.95 கோடியினை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றிற்கு 2:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் விடுவிக்கவும், மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு நிதியான ரூ.177.47 கோடியினை முக்கியமான திட்டப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

2.12 ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மறு சீரமைப்பு செய்தல்:

பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைத்தல்.

கிராம ஊராட்சியில் தற்போது உள்ள பல உறுப்பினர் வார்டு முறையினால் பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்

[2011 ஆகஸ்ட் 18

ஆகியோருக்கு கிராம ஊராட்சி வார்டுகளில் இட ஒதுக்கீடு செய்வதில் மிகுந்த சிரமங்கள் உள்ளன. கிராமத்திலுள்ள வாக்காளர்களும் இந்த முறையிலான வாக்குச் சீட்டுகள் குழப்பமாக உள்ளதாகக் கருதுகின்றனர். மேலும், தேர்தல் சமயத்திலும், வாக்கு எண்ணிக்கையின்போதும் அலுவலர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பல உறுப்பினர்களைக் கொண்ட வார்டுகளின் எல்லைகள் தெளிவாகக் குறிப்பிடப்படாததால் ஒரு வார்டில் உள்ள உறுப்பினர்கள், தங்களது பகுதி எது என உரிமை கோர இயலாத நிலையில் உள்ளனர்.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, கிராம ஊராட்சியில், தற்போதுள்ள 40,879 பல உறுப்பினர் வார்டுகளில் 97,458 வார்டு உறுப்பினர்கள் உள்ளனர். எனவே, தேர்தல் நடைமுறையினை ஒழுங்குபடுத்தும் வகையில், கிராம ஊராட்சியில் உள்ள பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சியிலும் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வாயிலாக, கிராம ஊராட்சி உறுப்பினர் வார்டுகளின் எண்ணிக்கைக்கு இணையாக உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 99,333 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 2011-ல் நடைபெற உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில், கிராம ஊராட்சிகளின் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல், ஓர் உறுப்பினர் வார்டு அடிப்படையில்தான் நடத்தப்படும்.

2.13 கிராம ஊராட்சிகளை அருகிலுள்ள நகராட்சி/ மாநகராட்சிகளுடன் இணைத்தல்

கீழ்க்காணும் 96 கிராம ஊராட்சிகளை அருகில் உள்ள நகராட்சி / மாநகராட்சிகளுடன் இணைத்து அரசு ஆணையிட்டுள்ளது:

2011 ஆகஸ்ட் 18]

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	தொடர்புடைய வட்டாரங்கள் எண்ணிக்கை	மாநகராட்சியுடன் இணைக்கப்படும் கிராம ஊராட்சிகள் எண்ணிக்கை	நகராட்சியுடன் இணைக்கப்படும் கிராம ஊராட்சிகள் எண்ணிக்கை	மொத்தம் (4) + (5)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	காஞ்சிபுரம்	3	12	3	15
2	திருவள்ளூர்	3	13	0	13
3	விழுப்புரம்	1	0	5	5
4	வேலூர்	3	9	1	10
5	ஈரோடு	1	5	0	5
6	திருப்பூர்	1	8	0	8
7	கோயம்புத்தூர்	1	1	0	1
8	திருச்சிராப்பள்ளி	1	4	0	4
9	கரூர்	1	0	1	1
10	மதுரை	3	11	0	11
11	தூத்துக்குடி	1	5	0	5
12	கன்னியாகுமரி	2	0	4	4
13	புதுக்கோட்டை	1	0	1	1
14	நாமக்கல்	1	0	9	9
15	கிருஷ்ணகிரி	1	0	4	4
	மொத்தம்	24	68	28	96

[2011 ஆகஸ்ட் 18

நகராட்சி/மாநகராட்சியுடன் இணைக்கப்படும் ஊராட்சிகள் விவரம்

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	வட்டாரத்தின் பெயர்		கிராம ஊராட்சியின் பெயர்	ஊராட்சிகள் இணைந்துள்ள நகராட்சி/ மாநகராட்சியின் பெயர்
1	காஞ்சிபுரம்	1	குன்றத்தூர்	முகலிவாக்கம்	சென்னை மாநகராட்சி
		2		மணப்பாக்கம்	
		3	பரங்கிமலை	கொட்டிவாக்கம்	
		4		பாலவாக்கம்	
		5		நீலாங்கரை	
		6		ஈஞ்சம்பாக்கம்	
		7		காரப்பாக்கம்	
		8		ஒக்கியம்துரைப்பாக்கம்	
		9		மடிப்பாக்கம்	
		10		ஜல்லடம் பேட்டை	
		11		செம்மஞ்சேரி	
		12		உத்தண்டி	
		13	காஞ்சிபுரம்	ஓரிக்கை	காஞ்சிபுரம் நகராட்சி
		14		தேனம்பாக்கம்	
		15		நத்தபேட்டை	
2	திருவள்ளூர்	1	மீஞ்சூர்	இடையஞ்சாவடி	சென்னை மாநகராட்சி
		2	புழல்	சடையன் குப்பம்	
		3		கடப்பாக்கம்	
		4		தேயம்பாக்கம்	
		5		மாத்தூர்	

		6		வடபெரும்பாக்கம்	
		7		சூரப்பட்டு	
		8		கதிர்வேடு	
		9		புத்தகரம்	
		10	வில்லிவாக்கம்	நொலம்பூர்	
		11		காரம்பாக்கம்	
		12		நெற்குன்றம்	
		13		இராமாபுரம்	
3	விழுப்புரம்	1	கோலியனூர்	வழுதரெட்டி	விழுப்புரம் நகராட்சி
		2		சாலமேடு	
		3		காகுப்பம்	
		4		எருமனம் தாங்கல்	
		5		பாப்பாபட்டு	
4	வேலூர்	1	வேலூர்	அரியூர்	வேலூர் மாநகராட்சி
		2		சித்தேரி	
		3		கொணவட்டம்	
		4		அலமேலு மங்காபுரம்	
		5	கணியம்பாடி	விருப்பாட்சி புரம்	
		6		பழவன்சாத்து	
		7		இடையன் சாத்து	
		8	காட்பாடி	விருதம்பட்டு	
		9		காங்கேய நல்லூர்	
		10	திருப்பத்தூர்	திருப்பத்தூர்	திருப்பத்தூர் நகராட்சி
5	ஈரோடு	1	ஈரோடு	கங்காபுரம்	ஈரோடு மாநகராட்சி
		2		எல்லப் பாளையம்	
		3		வில்லி அரசம்பட்டி	

		4		திண்டல்	
		5		முத்தம் பாளையம்	
6	திருப்பூர்	1	திருப்பூர்	செட்டிப் பாளையம்	திருப்பூர் மாநகராட்சி
		2		மண்ணாரை	
		3		தொட்டிப் பாளையம்	
		4		ஆண்டிப் பாளையம்	
		5		வீரபாண்டி	
		6		முருகம் பாளையம்	
		7		நெருப் பெரிச்சல்	
		8		முத்தனம் பாளையம்	
7	கோயம்புத் தூர்	1	சர்க்கார்சாமக் குளம்	விலங்குறிச்சி	கோயம்புத் தூர் மாநகராட்சி
8	திருச்சிராப் பள்ளி	1	திருவெறும்பூர்	பாப்பாகுறிச்சி	திருச்சிராப் பள்ளி மாநகராட்சி
		2		எல்லக்குடி	
		3		கீழக்கல் கண்டார் கோட்டை	
		4		ஆலத்தூர்	
9	கரூர்	1	தாந்தோணி மலை	சணப்பிரட்டி	கரூர் நகராட்சி
10	மதுரை	1	மதுரை கிழக்கு	மேலமடை	மதுரை மாநகராட்சி
		2		உத்தங்குடி	
		3		வண்டியூர்	
		4	மதுரை மேற்கு	கண்ண னேந்தல்	
		5		நாகனாகுளம்	
				திருப்பாலை	

		7	திருப்பரங்குன்றம்	சின்ன அனுப்பானடி	
		8		சிந்தாமணி	
		9		ஐராவத நல்லூர்	
		10		புதுக்குளம் பிட்–2	
		11		தியாகராஜர் காலனி	
11	தூத்துக்குடி	1	தூத்துக்குடி	சங்கரப்பேரி	தூத்துக்குடி மாநகராட்சி
		2		தூத்துக்குடி ரூரல்	
		3		மீளவிட்டான்	
		4		முத்தையாபுரம்	
		5		அத்திமரப்பட்டி	
12	கன்னியாகுமரி	1	இராஜாக்கமங்கலம்	பெருவிளை	நாகர்கோவில் நகராட்சி
		2		வடக்கு சூரங்குடி	
		3		காந்திபுரம்	
		4	அகஸ்தீஸ்வரம்	கரியமாணிக்கபுரம்	
13	புதுக்கோட்டை	1	புதுக்கோட்டை	புதுக்கோட்டை	புதுக்கோட்டை நகராட்சி
14	நாமக்கல்	1	நாமக்கல்	சின்ன முதலைப்பட்டி	நாமக்கல் நகராட்சி
		2		முதலைப்பட்டி	
		3		கொசவம்பட்டி	
		4		கொண்டிச்செட்டிபட்டி	
		5		பெரியப்பட்டி	
		6		காவெட்டிப்பட்டி	
		7		நல்லிபாளையம்	

[2011 ஆகஸ்ட் 18

		8		அய்யம் பாளையம்	
		9		தும்மங் குறிச்சி	
15	கிருஷ்ண கிரி	1	ஒசூர்	சூசுவாடி	ஒசூர் நகராட்சி
		2		சென்னத் தூர்	
		3		மூக்காண் டப்பள்ளி	
		4		ஆவலப் பள்ளி	

மேற்கண்ட கிராம ஊராட்சிகள், அக்டோபர் 2011 உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின்னர் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பகுதிகளாக இருக்கும்.

2.14 இரண்டு புதிய கிராம ஊராட்சிகளைத் தோற்றுவித்தல்

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் பெருமாத்தூர், இந்திரா நகர் ஆகிய இரண்டு புதிய கிராம ஊராட்சிகளை உருவாக்கி கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இவை, அக்டோபர் 2011-ல் நடைபெறும் உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின் செயல்பாட்டுக்கு வரும்.

2.15 ஊராட்சி ஒன்றிய வார்டுகளை மறுசீரமைப்பு செய்தல்

பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றி அமைத்ததாலும், 96 கிராம ஊராட்சிகளை நகராட்சி மற்றும் மாநகராட்சியுடன் இணைத்ததாலும் சில ஊராட்சி ஒன்றிய வார்டு எல்லைகள் மாற்றியமைக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டு, தற்போது அவை மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன. அதனடிப்படையிலேயே ஊராட்சி ஒன்றிய வார்டுகளுக்கான தேர்தல் நடைபெறும்.

2.16 மாவட்ட ஊராட்சி வார்டுகளை மறுசீரமைப்பு செய்தல்

திருப்பூர் மற்றும் அரியலூர் ஆகிய இரண்டு புதிய மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டதால் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், பெரம்பலூர்

2011 ஆகஸ்ட் 18]

மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள சில மாவட்ட ஊராட்சி வார்டுகளின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதோடு, 96 கிராம ஊராட்சிகளை நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைத்ததால் சில மாவட்ட ஊராட்சி வார்டுகளின் எல்லைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது மாவட்ட ஊராட்சி வார்டு எல்லைகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டவாறு அக்டோபர் 2011-ல் நடைபெற உள்ள சாதாரணத் தேர்தல் நடைபெறும்.

2.17 இரண்டு மாவட்ட ஊராட்சிகளைப் புதிதாக ஏற்படுத்துதல்

அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து இரண்டு புதிய மாவட்ட ஊராட்சிகள் ஏற்படுத்தப்பட உள்ளன. அக்டோபர், 2011-ல் நடைபெறும் உள்ளாட்சித் தேர்தலுக்குப்பின் இந்த இரு மாவட்ட ஊராட்சிகளும் செயல்பாட்டுக்கு வரும்.

2.18 ஊராட்சித் தலைவர்களுக்கான மதிப்பூதியம் மற்றும் படிகள்

கிராம ஊராட்சித் தலைவர்கள், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர். கிராம ஊராட்சிகள் மற்ற இரு ஊராட்சி அமைப்புகளைவிட அதிகமான பொறுப்புகளைக் கொண்டதாக உள்ளன. ஊராட்சியில் உள்ள அடிப்படை வசதிகளையும், கிராம மக்களின் அன்றாடத் தேவைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டிய முக்கிய அமைப்பாக கிராம ஊராட்சி உள்ளது. எனவே, கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடக மாநிலங்களில் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் வழங்குவதைப்போல, தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சித் தலைவர்களுக்கும் அவர்களின் பணி மற்றும் பொறுப்புகளைக் கருத்தில் கொண்டு மாதம் ரூ.1000/- மதிப்பூதியமாக வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கப்படும் அமர்வுப்படியான ரூ.50/-ஐ ரூ.100/- ஆகவும், கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அமர்வுப்படியான ரூ.25/—ஐ ரூ.50/- ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

மேற்கண்ட இனங்களுக்கான செலவினம், மாநில நிதி ஆணைய மானியத்தில் இருந்து மேற்கொள்ளப்படும்.

[2011 ஆகஸ்ட் 18

3. மாநிலத் திட்டங்கள்

3.1. தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (தாய்)

தமிழ்நாடு அரசு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார வசதிகள், தரமான கல்வி, அனைத்து காலங்களுக்கும் ஏற்ற சாலை வசதி ஆகியவற்றை அளிப்பதன்மூலம் ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினைத் தொடர்ந்து மேம்படுத்துவது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. வறுமை ஒழிப்பு, சிறந்த வாழ்வாதாரத்தை வழங்குதல், அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு புதிய திட்டங்களை சிறந்த முறையில் செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. தற்போதுள்ள நடைமுறையின்படி திட்ட செயலாக்கம் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு கிராம ஊராட்சியை மட்டுமே அடிப்படை அலகாகக் கொண்டு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

ஊரக வளர்ச்சித் துறைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தற்போதுள்ள நடைமுறையைவிட ஒரு படி மேலாக, கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களைச் செயலாக்க அலகாக எடுத்துத் திட்டங்களைச் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. மாநிலத்தில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ள நிலையில், குக்கிராம அளவில் திட்டமிடுதல்மூலம் மட்டுமே கிராமங்களுக்கும், நகர்ப்புறங்களுக்கும் உள்ள வேறுபாட்டினைக் குறைக்க இயலும். கடந்த 10 ஆண்டுகளில் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு மக்கள் அதிகமாக இடம் பெயர்ந்ததால், நகர்ப்புற வளர்ச்சி விகிதாச்சாரம் அதிகரித்துள்ளது. மேற்கண்ட குறைபாடுகளைச் சரி செய்ய வேண்டுமெனில் நகர்ப்புறங்களில் உள்ள வசதிகள் அனைத்தும் கிராமப்புறங்களில் அமைத்திடல் வேண்டும். மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ள நிலையில், ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 7 குக்கிராமங்கள் உள்ளன. எனினும், கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கை

2011 ஆகஸ்ட் 18]

மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 37 குக்கிராமங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 3 குக்கிராமங்களும் உள்ளன. பல்வேறு எண்ணிக்கையிலான குக்கிராமங்களைக் கொண்ட கிராம ஊராட்சிகளுக்குச் சமமான அளவிலான நிதி ஒதுக்கீடு செய்வது வளர்ச்சி நிலையில் வேறுபாட்டினையும், பொதுச் சொத்துகள் உருவாக்கப்படுவதில் மாறுபாட்டினையும் முன்னேற்றத்தில் ஏற்ற தாழ்வுகளையும் உருவாக்கும்.

மேற்கண்ட குறைபாடுகளைக் களையும் நோக்கிலும், குறைந்தபட்ச அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்து குக்கிராமங்களுக்கும் சென்றடையும் வகையிலும் இந்த அரசு ஒரு முன்னோடித் திட்டமாக "தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" (தாய்) என்னும் புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. தேசிய அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழகத்தில்தான் குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்டு முதன்முறையாக இம்முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

அனைத்து குக்கிராமங்களுக்கும் சமமான நிதி ஆதாரம் சரியான விகிதாச்சார அடிப்படையில் அளிக்கும்போது பாரபட்சமற்ற, நியாயமான முறையில் வளர்ச்சிப் பணிகள் அனைத்து குக்கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டு சிறான வளர்ச்சியை அளிக்க இயலும். "தாய்" திட்டம் அறிமுகப்படுத்தப்படுவது, ஊரக வளர்ச்சித் துறையின் நோக்கில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தும்விதமாக அமைந்துள்ளது.

தமிழகத்தில் சென்னை நீங்கலாக உள்ள 31 மாவட்டங்களில் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின்படி தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகை 500-க்குக் குறைவாகவும், சில ஊராட்சிகளில் மக்கள் தொகை 10,000-க்கு அதிகமாகவும் உள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

மக்கள்தொகையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல் (2001 கணக்கெடுப்பின்படி)

வ. எண்	மக்கள்தொகை	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
1	500 மற்றும் அதற்குக்கீழ்	66
2	501–1000	1,175
3	1001–3000	7,228
4	3001–5000	2,554
5	5001–10000	1,354
6	10000–க்கு மேல்	147
	மொத்தம்	12,524

குக்கிராமங்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுக்கும்போது கிராம ஊராட்சிகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்

வ. எண்	குக்கிராமங்களின் எண்ணிக்கை	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
1	5–க்கும்கீழ்	6,241
2	5–15	5,434
3	16–25	637
4	25–க்கு மேல்	212
	மொத்தம்	12,524

நிதி ஒதுக்கீடு:

குக்கிராமங்களின் எண்ணிக்கையையும், ஊராட்சியில் உள்ள மக்கள் தொகையையும் ஒப்புநோக்கும் போது, குக்கிராமங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மக்கள் தொகையும் கூடுகிறது என்பது தெளிவாகிறது. பின்வரும் அட்டவணையே இதற்குச் சான்றாகும்.

2011 ஆகஸ்ட் 18]

"தாய்" திட்டத்திற்குத் தேவைப்படும் நிதி

வ. எண்	குக்கிராமங்களின் எண்ணிக்கை	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை	மொத்த மக்கள் தொகை	ஒரு ஊராட்சிக்கான சராசரி மக்கள் தொகை	ஓர் ஊராட்சிக்கான ஒதுக்கீடு (இடைச்சத்தில்)			மொத்த தேவை (ரூபாய் கோடியில்)
					குறைந்தபட்ச அடிப்படை பணியிட நிதி	கூடுதல் நிதி	மொத்த நிதி	
1	5–க்கும் கீழ்	6241	12534047	2008	20	0	20	1248.20
2	5–15	5434	17392688	3201	20	10	30	1630.20
3	16–25	637	3553429	5578	20	20	40	254.80
4	25–க்கு மேல்	212	1864689	8796	20	30	50	106.00
மொத்தம்		12524	35344853	19583	—	—	—	3239.20
கணக்கெடுப்பு, தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள், ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் விருதுகளுக்கான நிதி								160.80
பெருமொத்தம்								3,400.00

அதிக அளவிலான குக்கிராமங்களைக் கொண்ட ஊராட்சிக்கு அதிக அளவிலான நிதி தேவைப்படுகிறது. இதன் அடிப்படையில் அனைத்து ஊராட்சிகளும் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வகைக்கேற்பவும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதாவது, அதிகக் குடியிருப்புகள் மற்றும் அதிக மக்கள் தொகையுடைய ஊராட்சிகள் அதிக நிதி ஒதுக்கீட்டினைப் பெறும். மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி ஐந்து

[2011 ஆகஸ்ட் 18

ஆண்டுகளில் அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் ரூ.3,400 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும்.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் ரூ.680 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும். இதில் உத்தேசமாக ரூ.200 கோடி, இணைப்புச் சாலைகளை மேம்படுத்தவும், மண்சாலைகள்/சரளைச் சாலைகளை அனைத்துப் பருவகாலத்திற்கும் ஏற்ற சாலைகளாக மாற்றுவதற்கும் பயன்படுத்தப்படும்.

குக்கிராமங்களில் தற்போதுள்ள மற்றும் மேலும் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் குறித்த நிலையினை அறிய விரிவான கணக்கெடுப்பு நடத்த அரசு முடிவு செய்துள்ளது. குக்கிராமங்களுக்குத் தேவையான குறைந்தபட்ச அடிப்படை வசதிகளான குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், சாலைகள், இடுகாடு, இடுகாட்டிற்குப் பாதை ஆகியனவும் கூடுதல் தேவைகளான பொது விநியோகக் கட்டடம், அங்கன்வாடி மையம், சுயஉதவிக் குழுக் கட்டடம், கதிர் அடிக்கும் களம் மற்றும் விளையாட்டு மையம் ஆகியனவும் இத்திட்டத்தில் எடுத்துச் செய்யப்படும்.

3.1.1. குடிநீர் விநியோகம்

குடிநீர் விநியோகப் பணிகளான சிறு மின்விசை இறைப்பான், குடிநீர்க் குழாய் விரிவாக்கம், தற்போதுள்ள தனி மின்விசைத் திட்டத்திற்கான நீராதாரத்தினைப் பெருக்குதல் போன்ற பணிகள், தேவையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படலாம்.

3.1.2. தெரு விளக்குகள்

புதிய குக்கிராமங்கள், விரிவாக்கப் பகுதிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் தொகுப்பு வீடுகள் அடங்கிய குடியிருப்புகளில் தேவைக்கேற்ப புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படலாம். ஏற்கெனவே உள்ள இடங்களில் தெரு விளக்குகள் பற்றாக்குறையாக இருந்தால் கூடுதல் தெரு விளக்குகளும் அமைக்கலாம். சூரிய சக்தி தெரு விளக்குகளும் இத்திட்டத்தில் அமைக்கலாம்.

2011 ஆகஸ்ட் 18]

3.1.3 சாலைகள்

3.1.3.1 சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்

இருபுறங்களிலும் குடியிருப்புகள் அதிகமாக உள்ள இடம், தாழ்வான பகுதிகளில் அமைத்து, மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கும் தெருக்கள் அல்லது சந்துகள், ஏற்கெனவே சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்ட தெருக்களில் விடுபட்ட பகுதி ஆகியவை முன்னுரிமை அடிப்படையில் எடுக்கப்பட்டு சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்படலாம்.

3.1.3.2 இணைப்புச் சாலைகள்

பேருந்துகள் செல்லும் சாலைகள், கற்சாலைகளைத் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல், ஒரு கிராம ஊராட்சியில் இரண்டு அல்லது அதற்கு மேல் உள்ள குக்கிராமங்களை இணைத்துச் சாலை அமைத்தல், மண் சாலைகள் / சரளைச் சாலைகளை தரம் உயர்த்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம்.

3.1.4 சுடுகாடு / இடுகாடு

ஒவ்வொரு இடுகாடு/சுடுகாட்டிற்கும் அணுகு சாலைகள், சுற்றுச்சுவர், சுடுகாட்டுக் கொட்டகை, தண்ணீர் வசதி மற்றும் விளக்கு வசதிகள் தேவையின் அடிப்படையில் செய்து தரப்பட வேண்டும்.

3.1.5 சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதி செய்தல்

சாலை வசதி இல்லாத சுடுகாடு / இடுகாட்டிற்கு முன்னுரிமை அடிப்படையில் அணுகுசாலை அல்லது பாதை அமைக்கப்பட வேண்டும். ஏற்கெனவே சாலை வசதி உள்ளதெனில் மேற்படி சாலையின் தற்போதைய தன்மையைக் கருத்திற்கொண்டு தேவையின் அடிப்படையில் சாலை மேம்பாடு செய்ய வேண்டும்.

ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்கள் அல்லது பிற துறைகளில் உள்ள பல வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

3.2 பசுமை வீடுகள் திட்டம்

"இந்தியா கிராமங்களில் வாழ்கிறது" என்பது நமது திருநாட்டின் தந்தை மகாத்மா காந்தியடிகளின் புகழ்பெற்ற கூற்றாகும். அறுபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கூறிய கூற்று தற்போதும்

[2011 ஆகஸ்ட் 18

பொருத்தமானதாக உள்ளது. இந்திய மக்கள் தொகையில் 68.84 விழுக்காடு கிராமங்களிலும், தமிழ்நாடு மக்கள் தொகையில் 51.55 விழுக்காடு மக்கள் கிராமங்களிலும் வாழ்கின்றனர்.

வீட்டு வசதி என்பது மனித வாழ்வில் அடிப்படைத் தேவையாகக் கருதப்படுவதுடன், ஒரு வீட்டின் உரிமையாளர் என்பது அவருக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு அளிப்பதோடு சமுதாயத்தில் கவுரவமாகவும் வாழ்வதற்கு வழி ஏற்படுத்துகிறது. வீடற்ற ஒருவருக்கு சொந்தமாக ஒரு வீடு என்பது அவருடைய சமூக வாழ்வில் குறிப்பிடத்தக்க அடிப்படை மாற்றம் மற்றும் அங்கீகாரத்தினை அளிக்கிறது.

ஊரகக் குடியிருப்பு வசதியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, ஊரகப் பகுதிகளில் வீடுகள் கட்டுவது சமீபகாலத்தில் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. வீட்டு வசதித் தேவைகளைக் கண்டறிந்து, வீட்டு வசதி அளிப்பது ஊரக வளர்ச்சித் திட்டங்களின் முக்கியக் கூறாக உள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்துள்ளவாறு கடந்த ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வந்த ஊரக வீட்டு வசதித் திட்டம் பல குறைபாடுகளுடன் உள்ளது. கட்டுமானச் செலவு, இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரித்துவிட்ட நிலையில் அத்திட்டத்தில் ஒரு வீட்டிற்கு வழங்கப்படும் நிதியான ரூபாய் 75 ஆயிரம் மிகக் குறைந்த அளவாக உள்ளது. இதனால் ஏழை எளிய குடும்பங்கள் கடன் சுமையில் சிக்கியுள்ளனர். இதன் காரணமாக மிக அதிக எண்ணிக்கையில் வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவில்லை. எனவே, இத்திட்டத்தினைக் கைவிடுவதென இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு மாற்றாக, கிராமப்புற ஏழைகள் பயன்பெறும் வகையில் "சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டம்" தொடங்கப்படும். இத்திட்டத்தில் "300 சதுர அடி அளவில் ரூபாய் 180 இலட்சம் செலவில் வீடு கட்டப்படும்" என அறிவிக்கப்பட்டது. இத்திட்டமானது ஊரக வீட்டு வசதித் திட்டத்தில் நாட்டிலேயே ஒரு தனித்தன்மை வாய்ந்த திட்டமாகும். மேலும், நாட்டில் எந்த ஒரு மாநிலத்திலும் இலவச வீட்டு வசதித் திட்டத்தில் 300 சதுர அடி பரப்பளவில் வீடுகள் கட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் சூரிய ஒளி மின் சக்தியுடன்கூடிய

2011 ஆகஸ்ட் 18]

பசுமை வீடுகள் கட்டித் தருவதே இத்திட்டத்தின் நோக்கமாக இருக்கும். 2011—2012 ஆம் ஆண்டில் 60,000 பசுமை வீடுகள் கட்டப்படவுள்ளன.

ஒவ்வொரு பசுமை வீடும், 300 சதுர அடி பரப்பளவில், ரூ.180 இலட்சம் அலகுத் தொகையில் கட்டப்படவுள்ளது. இத்தொகையில் பசுமை வீடுகளில் சூரிய ஒளி சக்தி விளக்குகள் அமைப்பதற்கான ரூ.30,000/- தொகையும் அடங்கும். 2011-2012 ஆம் நிதியாண்டில் 60,000 பசுமை வீடுகள் கட்டிட ரூ.1,080 கோடி நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

3.2.1 சிறப்பு அம்சங்கள்

1. பசுமை வீடுகள் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு மாநில அரசால் முழுமையாக வழங்கப்படும்.
2. ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பத்தினர் மட்டுமே பசுமை வீடுகள் பெறத் தகுதியானவர்கள்.
3. ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவு கொண்டதாக இருக்கும்.
4. ஒரு வீட்டின் அலகுத் தொகை ரூ.180 இலட்சம் ஆகும்.
5. ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.
6. ஒவ்வொரு வீட்டிலும் சூரிய ஒளி சக்தியில் எரியும் அடர்குறு விளக்குகள் (CFL) பொருத்தப்படும்.
7. சூரிய ஒளி சக்தி விளக்குகள் அமைக்கும் பணி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலமாகச் செயல்படுத்தப்படும்.

3.3 சூரிய சக்தியுடன்கூடிய தெருவிளக்குகள்

தமிழக சட்டப் பேரவையில் ஏற்கெனவே அறிவித்தவாறு "இந்த அரசு பரிட்சார்த்த முறையில் தெரு விளக்குகளை சூரிய எரிசக்தி மூலம் அமைப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கும்." மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் 17,42,804 தெரு விளக்குகள் உள்ளன. மின்சாரக் கட்டணம் மற்றும் பராமரிப்புச் செலவினைக்

[2011 ஆகஸ்ட் 18

குறைப்பதற்கும், ஊரகப் பகுதிகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினை ஊக்குவிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டும் இந்த அரசு தற்போதுள்ள தெரு விளக்குகளை சூரிய சக்தி தெரு விளக்குகளாக மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளது. இந்தத் திட்டமானது, கிராம ஊராட்சிகளில் பரிட்சார்த்த முறையில் செயல்படுத்தப்பட உள்ளதால், வரும் ஐந்தாண்டுகளில், 2016 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 1,000 கிராம ஊராட்சிகளில் ஒரு இலட்சம் தெரு விளக்குகள் சூரிய சக்தி விளக்குகளாக மாற்றியமைக்கப்படும். 2011-2012 ஆம் ஆண்டில் 20,000 தெரு விளக்குகள் சூரிய சக்தி தெரு விளக்குகளாக மாற்றப்படுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் ரூ.49.60 கோடியாகும். இதில், ரூ.11.28 கோடி மத்திய அரசின் மானியமாகவும், மீதித் தொகை ரூ.38.32 கோடி, மாநில அரசும் வழங்கும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையுடன் ஒருங்கிணைந்து இத்திட்டத்தினைச் செயல்படுத்தும்.

3.4 ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

இந்த அரசு "ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" எனும் புதிய திட்டத்தை இந்த ஆண்டு முதல் செயல்படுத்தவுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான, புதிய கட்டடங்கள், சமையல் அறை, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறைகள் ஆகியவற்றை ஏற்படுத்துவது ஆகும். தேவைப்படும் இடங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளும் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப புதிய பள்ளிக் கட்டடங்கள் அனைத்தும் கான்கிரீட் கூரைகளுடன் தண்ணீர் கசியாத வகையில் தட்டோடு மற்றும் இதர வசதிகளுடன் கட்டப்படும். புதிய பள்ளிக் கட்டடங்கள், பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள காலி இடத்தில் அமைக்கப்படும். பள்ளிக் கட்டடம் கட்டத் தேவையான காலி இடம் இல்லாத நிலையில், ஏற்கெனவே உள்ள கான்கிரீட் பள்ளிக் கட்டடத்தின் உறுதித்தன்மையை சரிபார்த்து அதன் மேல் தளத்தில் புதிய கட்டடம் அமைக்கப்படும்.

2011 ஆகஸ்ட் 18]

சமையல் அறை இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் புதிய சமையல் அறைகள் அமைக்கப்படும். தேவையின் அடிப்படையில் பழுதுபார்த்தல்/புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே உள்ள சமையல் அறைக் கட்டடத்தில் மதிய உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களை இருப்பு வைத்துக்கொள்ளும் கூடுதல் அறைகளும் தேவையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஏற்கெனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின் அவை பழுது நீக்கிச் சீரமைக்கப்படும். குடிநீர்க் குழாய் நீட்டிப்பு பணிகள், புதிய குடிநீர் இணைப்புகள், கழிவறைக்குத் தேவையான தண்ணீர் வசதி, ஆகியன மேற்கொள்ளப்படும். அவசியமான இடங்களில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படும்.

அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் பயிலும் மாணவ, மாணவிகளுக்குத் தனித்தனியாக, போதுமான அளவில் கழிப்பறைகள் அமைக்கப்படும். மேலும், ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள பழுதடைந்த கழிப்பறைகளைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக பழுதுநீக்கம் செய்வதற்கும் இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும். நடுநிலைப் பள்ளிகளில் மாணவிகளின் வசதிக்காக எரியூட்டிகள் (Incinerator) அமைக்கப்படும். முழு சுகாதாரத் திட்டத்தின்கீழ் புதிய கழிப்பறைகள் அமைக்கப் போதிய நிதி இல்லையெனில், இத்திட்டத்தின்கீழ் புதிய கழிப்பறைகள் கட்டித் தரப்படும். பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ள மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்படும்.

2011—2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

3.5 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்குத் தேவைப்படும் முக்கியப் பணிகளைக் கண்டறிந்து செயல்படுத்திடவும், தேவையான கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளையும் நிரப்புவதே

[2011 ஆகஸ்ட் 18

இத்திட்டத்தின் நோக்கமாகும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், மாநில அரசின் முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் ஆகும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தனது தொகுதியில் தேவைப்படும் பணியினைக் கண்டறிந்து அப்பணியினைச் செயல்படுத்திடப் பரிந்துரைப்பார். இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் செயல்படுத்தப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியாகத் தற்போது ஒவ்வொரு தொகுதிக்கும் வழங்கப்பட்டு வரும் ரூ.175 கோடியானது, 2011–2012 ஆம் ஆண்டு முதல் ரூ.2.00 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்கிச் செயல்படுத்தும் முகமையினை நிர்ணயிப்பார். தொகுதிக்கான மொத்த ஒதுக்கீட்டில் ரூ1 கோடியே 12 லட்சத்து 50 ஆயிரம் அரசால் குறிப்பிடப்பட்ட முன்னுரிமைப் பணிகளையும், மீதமுள்ள ரூ87 லட்சத்து 50 ஆயிரம் நிதியினைச் சட்டமன்ற உறுப்பினர் தனது விருப்பப்படி திட்ட வழிக் காட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள பணிகளையும் தேர்வு செய்யலாம்.

3.5.1 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – வரையறுக்கப்பட்ட நிதியில் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

மேற்குறிப்பிட்டவாறு ஒதுக்கீட்டில் ரூ.1.125 கோடி வரையறுக்கப்பட்ட நிதியின்கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்குச் செலவிடலாம். 2011–2012 ஆம் ஆண்டிற்குச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான கழிப்பறை வசதி, குடிநீர் வசதி போன்ற வசதிகளை ஏற்படுத்த ரூ.25 இலட்சம் ஒதுக்கப்பட வேண்டும். மேலும், பெரும்பான்மையான அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், சத்துணவு சமையற்கூடங்கள், குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகளில் மற்றும் ஓரளவு ஊரகப் பகுதிகளில் பழுதடைந்த கட்டடங்களில் இயங்குவதாக அறியப்படுவதால், அவற்றிற்குப் படிப்படியாகப் புதிய கட்டடங்கள் கட்டித் தர இந்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ரூ.20 இலட்சத்தை அங்கன்வாடிக் கட்டடங்கள், சத்துணவு மையக் கட்டடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் எடுத்துச் செய்ய வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் ரூ.5.00

2011 ஆகஸ்ட் 18]

இலட்சத்தை மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கிடவும் தனியே நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

வரையறுக்கப்பட்ட நிதியில் மீதமுள்ள ரூபாய் 62 இலட்சத்து 50 ஆயிரத்தில் சட்டமன்ற உறுப்பினர் அவர் தம் விருப்பத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட வகையான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை மேற்கொள்ளலாம்.

3.5.1.1 ஊரகப் பகுதிகளில்

1. சூரிய ஒளி தெரு விளக்குகள் பொருத்துதல்
2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்
3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்ச்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார் சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்)
4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவைகளுக்குக் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய, ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகள் ஆகியவற்றிற்கு கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல்.
6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு அனாதை விடுதிகள் ஆகியவற்றிற்கு உள்கட்டமைப்பு வசதி செய்து கொடுத்தல்.
7. பாலங்கள் கட்டுதல்
8. இடுகாடு மற்றும் சுடுகாடு வசதி இல்லாத கிராம ஊராட்சிகளில் இவ்வசதிகளை அமைத்தல்.
9. இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்ட விதிமுறைகளின் அடிப்படையில் புதிய வீடுகள் கட்டுதல்.

[2011 ஆகஸ்ட் 18

3.5.1.2 நகர்ப்புறப் பகுதிகளில்

1. சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைத்தல்
2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்
3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்ச்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்)
4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்குக் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய, ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகள் ஆகியவற்றிற்குக் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல்.
6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு அனாதை விடுதிகள் ஆகியவற்றிற்குக் உட்கட்டமைப்பு வசதி செய்து கொடுத்தல்.
7. பாலங்கள் கட்டுதல்
8. சுடுகாடு / இடுகாடுகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்
9. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன்கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்
10. புதிய பொதுப் பூங்காக்கள் அமைத்தல்
11. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்
12. ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்களை வாங்குதல்.

2011 ஆகஸ்ட் 18]

3.5.2 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – வரையறுக்கப்படாத நிதியிலிருந்து எடுத்துச் செய்யக்கூடிய பணிகள்

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தடை செய்யப்பட்டுள்ள குளம், ஆறு, ஊரணிகள் மற்றும் கால்வாய்கள் தூர்வாரும் பணிகளை இத்திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யத் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டபட்டியலின்படி தடை செய்யப்பட்டுள்ள பணிகளைத் தவிர இதரப் பணிகளை வரையறுக்கப்படாத திட்ட நிதியான ரூ.87.50 இலட்சம் ஒதுக்கீட்டிலிருந்து சட்டமன்ற உறுப்பினரால் பரிந்துரை செய்யப்படலாம்.

3.5.3 தடை செய்யப்பட்ட பணிகள்

1. *மத்திய, மாநில அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள், அரசு முகமைகள்/நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் கட்டுதல்*
2. *தனியார், கூட்டுறவு மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான அலுவலகம், குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் இதர பணிகள்.*
3. *வணிக நோக்குடன்கூடிய அனைத்து வகையான பணிகள்*
4. *அனைத்து வகையான பராமரிப்புப் பணிகள்*
5. *அனைத்து வகையான புதுப்பித்தல் மற்றும் பழுது பார்த்தல் பணிகள்*
6. *மாவியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்குப் பங்களித்தல்*
7. *அனைத்து வகையான அசையும் சொத்துக்கள் வாங்குதல்*
8. *நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்*
9. *முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை மீள ஈடு செய்தல்*
10. *தனிநபர்/குடும்பப் பயனுள்ள சொத்துக்களை உருவாக்குதல்*

[2011 ஆகஸ்ட் 18

11. அனைத்து வகையான வருவாய் மற்றும் தொடர் செலவினங்கள்

12. மதவழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புக்கள், குழுக்களுக்குச் சொந்தமான நிலங்களில் பணிகள்

13. குளங்கள், ஊரணிகள், ஆறு மற்றும் கால்வாய்கள் தூர்வாரும் பணிகள்

14. சரளை/கப்பிச் சாலைகள் (தார்ச் சாலை வரை அமைக்கும் சாலைப் பணிகளை மட்டுமே எடுத்துக் கொள்ளலாம்)

15. உயர் கோபுர மின்விளக்குகள் பொருத்துதல்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில், ஊரகப் பகுதியில் 19 விழுக்காடு ஆதி திராவிடர் / பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி அல்லது நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் (Slums) வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

2011–2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.470 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

3.6 தன்னிறைவுத் திட்டம்

இவ்வரசு 2001 ஆம் ஆண்டில் பொதுமக்கள் பங்களிப்புடன்கூடிய கிராம தன்னிறைவுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் அமைத்தல், தெருவிளக்கு வசதி ஏற்படுத்துதல், கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி செயல்படுத்தியது. கலந்தாலோசித்து முடிவு செய்தல், சமுதாய சிந்தனை மற்றும் கருத்தொருமைப்பாடு ஏற்படுத்தும் முயற்சி ஆகியவற்றில் சமுதாயப் பங்களிப்பின் முக்கியத்துவத்தை இந்த அரசு அடையாளம் கண்டுகொண்டுள்ளது. இதன்மூலம் தனிநபர் மற்றும் குழுக்கள் தங்களது கருத்துகளைப் பரிமாற்றம் செய்து வெளிப்படையான மற்றும் பொறுப்புடன்கூடிய முயற்சியின்மூலம் பயன்தரத்தக்க சமுதாயச் சொத்துகளை உருவாக்க இயலும்.

மக்களின் பங்கேற்பினைக் குறிக்கோளாகக் கொண்டு கிராமப்புற மக்கள் தம்முடைய தேவைகளைத் தாமே பூர்த்தி செய்யும் மனப்பான்மையை உருவாக்கவும், வலுப்படுத்தவும்தான் தன்னிறைவுத்

2011 ஆகஸ்ட் 18]

திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டம், திட்டமிடுதல், நிதி ஆதாரங்களை திரட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளில் கிராமப்புற சமுதாயத்தை நேரடியாக ஈடுபடுத்துவதாக அமைந்தது. இத்திட்டத்திற்கு நிதி உதவி அளித்தும், தொழில்நுட்ப ரீதியாகவும் உதவி செய்து மக்களின் முயற்சியை அரசு ஊக்குவித்தது. மக்களின் தேவைகள் எளிதில் உணரப்பட்டு அவை இத்திட்டத்தின்கீழ் நிறைவு செய்யப்பட்டன.

ஊரகப் பகுதி மக்கள் தங்களுடைய தேவைகளை தாமே நிறைவு செய்யும் மனப்பான்மை, பொது மக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் தன்னிறைவுத் திட்டத்தினை 2011–2012 ஆம் ஆண்டு முதல் மீண்டும் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படும். பொதுமக்கள், தங்கள் பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகளைத் தேர்வு செய்வதுடன் (identify the work) வேலையின் மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பங்களிப்பு செய்ய வேண்டும்.

3.6.1 தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பணிகளை தேர்வு செய்வதற்கான நடைமுறைகள்

1. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் தேவையான பணிகளை எடுத்துச் செய்வதற்கான கருத்துரு, தனிநபர், குழு, தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் அல்லது சமுதாய மக்கள் மூலமாக உருவாகலாம்.

2. தேர்வு செய்யப்பட்ட பணி குறித்த விண்ணப்பத்தினையும் மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்குத் தொகையை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தினையும் பொது மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பெறலாம்.

3. தேவையின் அடிப்படையிலும், செய்யக்கூடியதாகவும் பணிகள் அமைந்தால் மட்டுமே மதிப்பீடுகள் தயார் செய்யப்படுதல் வேண்டும்.

4. ஒதுக்கீட்டைவிடத் தேவையான பணிகளின் எண்ணிக்கை அதிகமாகும் நிலையில், முன்னுரிமை அடிப்படையில் பணியினைத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

[2011 ஆகஸ்ட் 18

3.6.2 பணிகளின் பட்டியல்

1. அரசு ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், மலைவாழ் மக்களுக்கான பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகளுக்கு கட்டடங்கள், ஆய்வகங்கள், கழிவறைகள் மற்றும் சுற்றுச்சுவர் / சுற்று வேலி அமைத்தல்.

2. அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், துணை மையங்கள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை வளர்ப்பு மையங்கள் மற்றும் நூலகங்கள் ஆகியவைகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் சுற்றுச்சுவர் / சுற்று வேலி அமைத்தல்.

3. நகர்ப்புறப் பகுதிகளில் நூலகங்கள் கட்டுதல் மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் சத்துணவு மையங்கள், சத்துணவு மைய சமையல் கூடங்கள், அங்கன்வாடிகள் மற்றும் பொது விநியோகக் கடைகள் ஆகியவற்றிற்குக் கட்டடங்கள் கட்டுதல்.

4. கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் குடிநீர் ஆதாரங்கள் உருவாக்குதல், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் கதிரடிக்கும் களங்கள் போன்ற சமுதாயச் சொத்துகளை உருவாக்குதல்.

5. அனைத்து சமூகச் சொத்துகளையும் பராமரித்தல். முன்னுரிமை அடிப்படையில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தினை பராமரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படலாம்.

6. பாலங்கள் அல்லது சிறிய பாலங்கள் கட்டுதல், சரளை/ கப்பிச் சாலைகளை தார்ச்சாலைகளாக தரம் உயர்த்துதல், பழுதடைந்த தார்ச் சாலைகளை புதுப்பித்தல். தெருக்கள் மற்றும் சிறிய சந்துகளை செங்கல் அல்லது கப்பி கற்கள் அல்லது சிமெண்ட் பலகை அல்லது சிமெண்ட் கான்கிரீட் கொண்டு சீரமைத்தல்.

2011 ஆகஸ்ட் 18]

7. பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலை திட்டு (Traffic Island) நீரூற்று, தெருவிளக்குகள் (சூரிய ஒளி விளக்குகள் உட்பட) போன்றவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

8. பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், நூலகங்கள் மற்றும் கட்டடங்களுக்குத் தேவையான அறைகலன்கள் (Furniture), கணினிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை வாங்குதல். பழைய கணினிகள், உபகரணங்கள் மற்றும் அறைகலன்கள் வாங்கக்கூடாது.

9. 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ்வழிக் கல்வி பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டுதல்.

3.6.3 தடை செய்யப்பட்ட பணிகள்

சிறப்பினமாக எடுத்துச் செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர கீழ்க்காணும் தடை செய்யப்பட்ட பணிகளை தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது:

1. மத்திய, மாநில அரசுத் துறைகள் (பொதுத் துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவற்றிற்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

   விதிவிலக்கு — ஆரம்ப சுகாதார நிலையங்கள்/அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கு வசிப்பிடங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் சீரமைத்தல். அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்குக் கட்டடங்கள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல், பொது விநியோகக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுதல், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்தக் குளிர்பதன மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதல்.

[2011 ஆகஸ்ட் 18

2. அரசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

விதிவிலக்கு — அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அங்கன்வாடிகள், மதிய உணவு மையங்கள், அரசுக் கல்லூரிகள், அரசு மாணவர் தங்கும் விடுதிகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்குத் தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

3. அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

விதிவிலக்கு – 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் தமிழ் வழிக் கல்வி கற்பிக்கப்படும் பள்ளிகளில், பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளை எடுத்துச் செய்தல். நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்றுக்குத் தன்னிறைவு திட்டத்தில் அரசு மானியம் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்று தன்னிறைவுத் திட்டத்தில் எவ்வளவு நிதி உதவி பெற்றிருப்பினும், அப்பள்ளி அடுத்த மூன்றாண்டுகளுக்குப் பிறகே மீண்டும் இந்நிதி உதவியைப் பெற இயலும்.

மேற்காணும் பணிகளைப் பொறுத்தவரை, மாவட்ட ஆட்சித் தலைவர் உரிய விசாரணை மேற்கொள்ளுவதோடு, சம்பந்தப்பட்ட மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கீழ்க் காணும் சான்றிதழ்களைப் பணி மேற்கொள்வதற்குமுன் பெற வேண்டும்.

(i) இந்தப் பள்ளி 100 சதவீதம் தமிழ்வழி பயிற்றுவிக்கும் வகுப்புகள்/பிரிவுகள் கொண்டது. ஆங்கில வழி பயிற்றுவிக்கும் பிரிவுகள் கிடையாது.

(ii) இந்தப் பள்ளி 100 சதவீதம் அரசு உதவி பெறும் பள்ளி ஆகும். அதே நிர்வாகத்தால் ஒரே வளாகத்திலோ அல்லது வெவ்வேறு வளாகங்களிலோ நடத்தப்படும் இந்தப் பள்ளியில் சுய நிதி பிரிவுகள்/வகுப்புகள் இயங்கவில்லை.

2011 ஆகஸ்ட் 18]

4. அனைத்து வணிக நிறுவனங்கள் /அலகுகள் குறித்த பணிகள்.

5. மானியம், கடன் மற்றும் மாநில, யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்குப் பங்களித்தல்

6. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்

7. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகளுக்காக தொகை மீளச் செலுத்துதல்

8. தனிநபர்/குடும்பப் பயனுக்காக சொத்துகளை உருவாக்குதல்

9. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்

10. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள்/குழுக்களுக்குச் சொந்தமான நிலங்களில் பணிகள்

11. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்

விதிவிலக்கு – மாவட்ட ஆட்சியர் அவசியம் எனக் கருதினால், பொதுப் பணித் துறைக் கண்மாய்கள் தூர் வாருதல், கரைகளைப் பலப்படுத்துதல் மற்றும் மதகு / அணைகளைப் புதுப்பித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம். இதில் மக்கள் பங்களிப்புத் தொகை பொதுப் பணித் துறையினரால் தயாரிக்கப்படும் மதிப்பீட்டிற்கு 50 சதவீதத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும். தேவையிருப்பின் நீர்நிலைகள், வரத்து கால்வாய் மற்றும் உபரி நீர் கால்வாய் ஆகியவற்றைத் தூர்வாரும் பணியினைப் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம் / IAMWARM போன்ற திட்டங்களின்கீழ் மேற்கொள்ளலாம்.

12. சரளை / கப்பிச் சாலைகள் (தார்ச்சாலை வரை அமைக்கும் சாலைப் பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).

13. சோடியம் ஆவி விளக்குகள்/உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்

[2011 ஆகஸ்ட் 18

3.6.4 பணிகளைச் செயல்படுத்துதல்

சம்பந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998-ன்படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் செயல்படுத்தப்படும். மக்கள் பங்கேற்பினை அதிகப்படுத்தும் நோக்குடன் மதிப்பீட்டில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக பங்களிப்பு செய்த பணிகளை பொது மக்களோ, பணம் செலுத்தியவரோ நேரடியாக செயல்படுத்திட அனுமதி கோரும் நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கான அனுமதியை வழங்கலாம். ஆனால் பொதுப் பணித் துறைக் கண்மாய்கள் தூர்வாரும் பணியைப் பொறுத்த மட்டில் பொது மக்கள் பங்களிப்பு 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருந்தால்கூட ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியே பணிகள் செய்யப்பட வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் சொத்துகளை கூடுமானவரை, "பயன்படுத்துவோர் குழுக்கள்" தங்களிடமுள்ள நிதி ஆதாரத்தைக் கொண்டு பராமரிக்கலாம்.

2011-2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.100.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

3.7 ஊரக கட்டமைப்புத் திட்டம்

ஊரகப் பகுதிகளில் நிலையான சொத்துகளை உருவாக்குவதும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் உருவாக்கப்படும் சொத்துகளை நிலைப்படுத்துதலுமே, ஊரக கட்டமைப்புத் திட்டத்தின் நோக்கம் என்பதால் இந்த அரசு ஊரக கட்டமைப்புத் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தும். இதற்காக 2011-12 ஆம் ஆண்டில் மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து ரூ.380 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். பின்வரும் வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:

- தற்போதுள்ள மண் கிராவல் சாலைகளை கற்சாலைகளாகத் (WBM) தரம் உயர்த்துதல்.
- தற்போதுள்ள கற்சாலைகளைத் தார்ச்சாலைகளாகத் தரம் உயர்த்துதல்.

2011 ஆகஸ்ட் 18]

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பணிகளில் பொருட்கூறுடன் செயல்படுத்த வேண்டிய பணிகளான மதகு சீரமைத்தல், மறுகால் சீரமைத்தல், தடுப்புச் சுவர் கட்டுதல்.
- தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புதிய சாலைகளில் சிறுபாலங்கள் (Culvert)/ தடுப்புச் சுவர்கள் கட்டுதல்.

3.8 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் சீரமைப்பு

2001 ஆம் ஆண்டில் இந்த அரசு பதவியேற்றபோது பெண்களுக்கு மேம்பட்ட சுகாதாரத்தை ஏற்படுத்துவது என்பதே தாரக மந்திரமாயிருந்தது. முறையான சுகாதார வசதிகள் கிடைக்கப் பெறாததால், கிராமப் பெண்களின் வாழ்க்கை சிரமத்துக்குள்ளானது. பெண்கள் காலைக்கடனை மாலைக்கடனாக மாற்ற வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. இவ்வாறாக இருட்டும்வரை காத்திருந்து தங்களின் உபாதைகளைக் கழிக்க வேண்டிய கட்டாயம் இருந்ததால், மலச்சிக்கல் ஏற்பட்டு உணவு மற்றும் குடிநீர் உட்கொள்ளுவதில் சிக்கல் ஏற்பட்டு சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டன. ஏழ்மை மற்றும் கலாச்சாரப் பழக்கங்களால் சுகாதார வசதி இல்லாதிருந்த நிலையிலிருந்து அவர்கள் மீளவேண்டியிருந்தது. எனவே, ஊரகப் பெண்களுக்கான தனித்துவம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்து அவர்களின் பொதுச் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மிகவும் அவசியமானதும் முக்கியமானதும் ஆகும்.

தமிழகத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சுமார் 750 சதுர அடி பரப்பளவில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்ட, 2001 ஆம் ஆண்டில் இந்த அரசால் முடிவெடுக்கப்பட்டது. பெண்கள் எளிய முறையில் உபயோகப்படுத்தும் வண்ணமாக, அவை கட்டுவதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. ஒவ்வொரு வளாகமும், 14 கழிவறைகள், 2 குளியலறைகள், தண்ணீர் தொட்டி மற்றும் துணி துவைக்கத் தேவையான கல் ஆகியவற்றை உள்ளடக்கியதாயிருந்தது. குளிக்கவும் துணி துவைக்கவும் தேவையான தண்ணீர் விநியோகம் இவ்வளாகத்தில் உறுதிசெய்யப்பட்டது. இவ்வளாகத்திலுள்ள கழிவறைகளை ஒதுக்கீடு செய்ய உபயோகிப்பாளர்கள் இனங்கண்டு குழுவாக்கப்பட்டனர். தண்ணீர் விநியோகம் மற்றும் விளக்குகளுக்குத் தேவையான மின்வசதியைக் கிராம ஊராட்சிகள் செய்து கொடுத்து

[2011 ஆகஸ்ட் 18

சம்பந்தப்பட்ட குடும்பங்கள் அதனை பராமரிக்க ஏற்பாடு செய்யப்பட்டன. மகளிர் வசதிக்காக இவ்வளாகங்களில் எரியூட்டிகள் (Incinerators) அமைக்கப்பட்டன.

தொடக்கத்தில், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு மகளிர் சுகாதார வளாகம் என்ற அடிப்படையில் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர், அலகுத் தொகை ரூ.2.25 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 2001 முதல் 2004 ஆம் ஆண்டு வரை மாநிலத்தில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும், மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன.

குறைவான தண்ணீர் மட்டுமே உபயோகப்படுத்தக்கூடிய ஊரகக் கழிப்பறைகளைக் கட்டி ஊக்குவிப்பது மட்டுமில்லாமல் குளிப்பதற்கு உபயோகித்த தண்ணீரைக் கொண்டு தோட்டம் அமைத்து அதில் இருந்து உற்பத்தியாகும் காய்கறிகளை விற்பனை செய்வதன்மூலம் பெறப்பட்ட தொகை மகளிர் சுய உதவிக் குழுக்களால் சுகாதார வளாகம் பராமரிக்க உதவியாக இருந்தது. மகளிர் சுகாதார வளாகங்கள் நல்ல காற்றோட்டமான வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டன. மனிதக் கழிவு இணைந்த எரிவாயு கலன் அமைப்பதை ஊக்குவித்து அதன்மூலம் பெறப்படும் எரிவாயு மின் விளக்கு மற்றும் தண்ணீர் இறைப்பானுக்கும் பயன்படுத்தப்பட்டது. மொத்தத்தில், கிராம மக்களிடையே சுற்றுச்சூழல் சுகாதாரத்தின் அவசியங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலமே இத்திட்டத்தின் நோக்கம் முழுமை பெறும். முந்தைய அரசு, சுகாதார வளாகப் பராமரிப்பிற்கு போதிய முன்னுரிமை அளிக்காததால் பெருமளவில் மகளிர் சுகாதார வளாகங்கள் பயனற்றுப் போயின. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மகளிர் சுகாதார வளாகங்களையும் உடனடியாக சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள்.

3.9 ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டம்

பல்வேறு திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த கட்டடங்கள் முறையாக, தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வந்தால் மட்டுமே முழுமையாகப் பயன்படுத்த இயலும் என்பதால் இந்த அரசு ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தும். 2011-2012 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு மாநில நிதி ஆணைய

2011 ஆகஸ்ட் 18]

மானியத்திலிருந்து ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். நடப்பாண்டில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் சீரமைக்கப்படுவதற்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

3.10 தூய்மையான கிராம இயக்கம்

தமிழ்நாட்டில் சுகாதார புரட்சியின்மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு இந்த அரசால் 2003 ஆம் ஆண்டில் "தூய்மையான கிராம இயக்கம்" துவக்கப்பட்டது. இவ்வியக்கம் சுற்றுச்சூழல் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

தூய்மையான கிராம இயக்கத்தின் முக்கிய நோக்கம்:

1. திறந்தவெளியில் மலம் கழிப்பதனால் ஏற்படும் சுகாதார பாதிப்புகள் மற்றும் விளைவுகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

2. பல்வேறு தரப்பு மக்களின் சுகாதாரத் தேவைகளைக் கண்டறிவதுடன், சுகாதாரத்தில் குறிப்பிட்ட இலக்கான மகளிர் மற்றும் குழந்தைகள், இளவயதினர், வயதானோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு சுகாதாரத் தேவையின் முக்கியத்துவத்தை ஊக்குவித்தல்.

3. அங்கன்வாடிகள், பள்ளிகள் மற்றும் பொது இடங்கள் ஆகியவற்றில் சுற்றுச்சூழல் சுகாதாரங்களை மேம்படுத்துதல்.

4. பல்வேறு புவியமைப்புகளில், தண்ணீர் கிடைக்கும் நிலை, நீராதாரம் ஆகியவற்றைக் கண்டறிவதற்கான தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல்.

5. அறிவுசார் திறமைகள்மூலம் சுகாதாரப் பழக்க வழக்கத்தை ஊக்குவித்து சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

6. சுற்றுச்சூழல் சுகாதாரத்தைப் பேணுவதில், சமுதாயத்திற்கும் ஊராட்சி அமைப்புகளுக்கும் மேலாண்மைத் திறனைப் பலப்படுத்துதல்.

7. சுகாதாரத்தைப் பேணும் நோக்கில் பணியாற்றும் பலதரப்பட்ட அமைப்புகளை ஒருங்கிணைப்பதன்மூலம் அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் ஏற்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளை நிலைப்படுத்துதல்.

[2011 ஆகஸ்ட் 18

மேலும், தீவிர தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலமாக கிராம ஊராட்சிகள் மற்றும் இதரத் துறைகளையும் சமூகத்துடன் ஒருங்கிணைப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

தூய்மையான கிராம இயக்கத்தின் கூறுகள்:

1. திறந்த வெளியில் மலம் கழித்தலைத் தடுத்தல்.

2. மழை நீர் சேகரிப்பு மற்றும் கழிவு நீரினை மறு சுழற்சி செய்தல்.

3. திடக்கழிவு மேலாண்மை

4. மனிதக் கழிவுடன் இணைந்த எரிவாயு கலன் அமைத்தல்.

தனிநபர் இல்லங்கள், பள்ளிகள் ஆகியவற்றில் சுகாதார வசதி மற்றும் திறந்த வெளி மலங்கழித்தலை முழுமையாக அகற்றுவதன் மூலம் தூய்மையான சூழலை உருவாக்கியும், திடக்கழிவு மேலாண்மை மற்றும் நீர் சேகரிப்பு வாயிலாக நூறு விழுக்காடு சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகள் மாநில அரசு வழங்கும் ரூ.5 இலட்சம் ரொக்கப் பரிசு பெறத் தகுதியாகின்றன. அரசு ஒவ்வொரு ஆண்டும் 15 கிராம ஊராட்சிகளுக்கு ரொக்கம் மற்றும் செயலாக்க ஊக்கத் தொகை வழங்கியது. இருப்பினும், முந்தைய அரசால் கைவிடப்பட்ட இத்திட்டமானது ஊரகப் பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்தி நடைமுறைப்படுத்தும் நோக்கில் மீண்டும் இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும்.

3.11 தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்

நக்சலைட்டுகளின் செயல்பாட்டினை கட்டுப்படுத்தும் விதமாகவும், அவர்களின் வளர்ச்சியைத் தடுத்திடும் வகையிலும் தருமபுரி மற்றும் கிருஷ்ண கிரி மாவட்டங்களில் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டமாக 2003-2004 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் பழுது பார்த்தல், கிராமப்புற இளைஞர்களுக்குத் தேவையான பல்வேறு தொழில் சார்ந்த தளவாடக் கருவிகள் அளித்தல், மாற்றுத்திறனாளிகள், விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்குத் தனிநபர் உதவி வழங்குதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

2011 ஆகஸ்ட் 18]

இத்திட்டத்திற்கு 2011-2012 ஆம் ஆண்டில், ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3.12 பகுதி 2 திட்டங்கள்

கீழ்க்கண்ட ஆறு இனங்களுக்கு ரூ.2.00 கோடி அனுமதிக்க அரசு உத்தேசித்துள்ளது:

வ. எண்	இனம்	தொகை
1	தலைமைச் செயலகத்தின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் கணினி மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்துதல்	ரூ.14.20 இலட்சம்
2	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக அலுவலகத்தை நவீனப்படுத்துதல்	ரூ.56.40 இலட்சம்
3	தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு வாகனம் மற்றும் இதர வசதி ஏற்படுத்துதல்	ரூ.19.40 இலட்சம்
4	பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநருக்கு குடியிருப்புக் கட்டடம் கட்டுதல்	ரூ.35.00 இலட்சம்
5	அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநருக்குக் குடியிருப்புக் கட்டடம் கட்டுதல்	ரூ.35.00 இலட்சம்
6	ஏழு உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) / நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) ஆகியோருக்கு வாகனம் வழங்குதல்	ரூ.40.00 இலட்சம்
	மொத்தம்	ரூ.200.00 இலட்சம்

[2011 ஆகஸ்ட் 18

4. மத்திய அரசு திட்டப் பணிகள்

4.1 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் உருவாக்கப்பட்டு, திட்டத்திற்கு சட்டப் பாதுகாப்பு வழங்கிட நாடாளுமன்றத்தில் செப்டம்பர் 2005 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் இயற்றப்பட்டது.

ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆண்டில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலைவாய்ப்பினை அளிப்பதன் மூலம் அவர்களது வாழ்வாதாரப் பாதுகாப்பினை உயர்த்துவதே இச்சட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் உடலுழைப்பினால் செய்யப்படும் வேலைவாய்ப்பினை வழங்குவது இத்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளாகும். வறுமையை உருவாக்கும் காரணிகளான வறட்சி, காடுகள் அழிப்பு, மண் அரிப்பு போன்றவற்றைத் தடுக்கும் பணிகளை மேற்கொள்ளுவதன்மூலம் இயற்கை ஆதாரங்களின் மேம்பாட்டினை உறுதி செய்து, நிலையான வளர்ச்சியினை மேம்படுத்துவது இத்திட்டத்தின் துணைக் குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டில், முதலில் இத்திட்டம் 6 மாவட்டங்களில் 2-2-2006-ல் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் மற்ற மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.

2011 ஆகஸ்ட் 18]

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்
மூன்று கட்டங்களில் விரிவாக்கம்

முதற் கட்டம் (2.2.2006-லிருந்து)	இரண்டாம் கட்டம் (1.4.2007-லிருந்து)	மூன்றாம் கட்டம் (1.4.2008-லிருந்து)	
1. கடலூர்	1. தஞ்சாவூர்	1. காஞ்சிபுரம்	11. திருச்சி
2. விழுப்புரம்	2. திருவாரூர்	2. திருவள்ளூர்	12. பெரம்பலூர்
3. திருவண்ணாமலை	3. கரூர்	3. வேலூர்	13. அரியலூர்
4. நாகப்பட்டினம்	4. திருநெல்வேலி	4. சேலம்	14. புதுக்கோட்டை
5. திண்டுக்கல்		5. நாமக்கல்	15. மதுரை
6. சிவகங்கை		6. தருமபுரி	16. தேனி
		7. கிருஷ்ணகிரி	17. இராமநாதபுரம்
		8. ஈரோடு	18. விருதுநகர்
		9. கோயம்புத்தூர்	19. தூத்துக்குடி
		10. நீலகிரி	20. கன்னியாகுமரி
			21. திருப்பூர்

உண்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4.1.1 திட்டத்தின் சிறப்பம்சங்கள்

1. ஊரகக் குடும்பங்களில் உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பம் உள்ள வயது வந்தோர், எழுத்து மூலமாகவோ அல்லது வாய் மொழியாகவோ தமது விருப்பத்தினை, கிராம ஊராட்சிக்குத் தெரிவித்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.

2. புகைப்படம் மற்றும் பதிவு எண்ணுடன்கூடிய வேலை அட்டையினை கிராம ஊராட்சி இலவசமாக வழங்கும்.

[2011 ஆகஸ்ட் 18

3. எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ பெறப்பட்ட வேண்டுகோளின்படி 15 நாட்களுக்குள் வேலை அட்டை வழங்கப்படும்.

4. வேலை அட்டை உள்ளோர் எழுத்து மூலமாகவும் வேலை கோரலாம். அத்தருணங்களில், கிராம ஊராட்சி தேதியுடன் கூடிய ஒப்புகைச் சீட்டு வழங்கும். அது அவர்களுக்கு 15 நாட்களுக்குள் வேலை வழங்குவதற்கு உத்தரவாதமாக விளங்கும்.

5. வேலை நடைபெறும் இடம் கிராமத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திற்குள் இருக்கும். வேலை நடைபெறும் இடம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருந்தால், போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரத் தொகையாக ஊதியத்தில் 10 சதவீதம் கூடுதலாக வழங்கப்படும்.

6. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948-ன்படி, விவசாய தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

7. தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு நபருக்கு ஒரு நாளுக்கான ஊதியம் ரூ.119/- என மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

8. ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சம அளவிலான ஊதியம் வழங்கப்படும்.

9. பொதுவாக, வாரம் தோறும் ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும். 15 நாட்களுக்குள் ஊதியம் வழங்கப்படுதல் உறுதிசெய்யப்பட வேண்டும்.

10. மூன்றில் ஒரு பங்கு பயனாளிகள் பெண்களாக இருக்க வேண்டும்.

11. வேலை நடைபெறும் இடங்களில், குடிநீர், நிழற் கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

12. வழிகாட்டி நெறிமுறைகளின்படி, கிராமத்திற்கான திட்டத் தொகுப்பினை, கிராம சபை ஒப்புதல் அளித்தபின், அதில் 50 விழுக்காடு வேலைகள் கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்த ஒதுக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில், கிராம ஊராட்சியே அனைத்து வேலைகளையும் செயல்படுத்தி வருகிறது.

2011 ஆகஸ்ட் 18]

13. இத்திட்டத்தின் வேலைகளுக்கான ஊதியம் மற்றும் பொருட்களுக்கிடையேயான விகிதாச்சாரம் 60:40 என்று அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 100 விழுக்காடு முழுமையான மனித உழைப்பைக் கொண்டு செய்யப்படும் வேலைகள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன.

14. ஒப்பந்ததாரர்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தல் அனுமதிக்கப்படமாட்டாது.

15. திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு, கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியச் செலவில் 75 விழுக்காடு மத்திய அரசால் ஏற்கப்படுகிறது.

16. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் சமூகத் தணிக்கையினை, கிராம சபை, அதற்காக அமைக்கப்பட்டுள்ள "சமூகத் தணிக்கைக் குழு" மூலம் மேற்கொள்ளும்.

17. குறைகளைத் துரிதமாகத் தீர்க்கும் வகையில், குறை தீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை "1299" (Toll free Helpline '1299') ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.

18. இத்திட்டத்தின் அனைத்துக் கணக்கு மற்றும் ஆவணங்களை பொதுமக்கள் பரிசீலிக்கலாம்.

19. இத்திட்டச் செயல்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கிடவும், கண்காணிக்கவும் மற்றும் மதிப்பீடு செய்யவும், "தமிழ்நாடு அரசு மாநில வேலை உறுதி மன்றம்" என்ற அமைப்பு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் பிரிவு 12-ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

4.1.2 அனுமதிக்கப்பட்ட பணிகள்

1. நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்புப் பணிகள்.

2. வறட்சியினைத் தடுக்கும் வகையில், காடு வளர்ப்பு மற்றும் மரங்கள் நட்டு வளர்த்தல்.

3. சிறு மற்றும் குறு நீர்ப்பாசனப் பணிகள் உள்ளிட்ட பாசனக் கால்வாய்கள்.

4. தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், சிறு / குறு விவசாயிகள், நிலச் சீர்திருத்தத் திட்டப் பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டப் பயனாளிகள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளோர் ஆகியோரின் நிலங்களில் பாசன வசதிகளை ஏற்படுத்துதல், நில மேம்பாட்டுப் பணிகள் மற்றும் தோட்டக்கலை சார்ந்த பணிகள்.

5. குளங்கள் / ஏரிகள் தூர் வாருதல் உள்ளிட்ட பாரம்பரிய நீராதார அமைப்புகளைப் புனரமைத்தல்

6. நிலங்களை மேம்படுத்துதல்.

7. நீர் தேங்கக்கூடிய இடங்களில் வடிகால்களை ஏற்படுத்துதல் உள்ளிட்ட வெள்ளத் தடுப்புப் பணிகள்.

8. அனைத்துப் பருவகாலத்திற்கும் ஏற்ற சாலைகள் அமைத்தல் மற்றும் தேவையான இடங்களில் சிறு பாலங்கள் மற்றும் வடிகால்கள் ஏற்படுத்துதல்.

9. மாநில அரசினைக் கலந்தாலோசித்து மத்திய அரசால் தெரிவிக்கப்படும் இதர பணிகள்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்தும் பொருட்டு இவ்வரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது:—

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 8 மணிநேர வேலைக்கு ஒரு நபருக்கு ஒரு நாள் ஊதியமாக ரூ.89/— அறிவிக்கப்பட்டுள்ளது. ஊதியம், தொழிலாளர்களால் செய்யப்படுகின்ற வேலையின் அளவைப் பொறுத்தே வழங்கப்படுவதால், தொழிலாளர்கள், பெரும்பாலான

2011 ஆகஸ்ட் 18]

நேரங்களில் ரூ.80/- முதல் ரூ.90/- வரை மட்டுமே ஊதியம் பெறும் நிலை உள்ளது. ஆகையால், இத்திட்டத்தில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு இயக்கம் மற்றும் விரிவான விளம்பரங்கள் வாயிலாக இத்திட்டத்தில் செய்யப்பட வேண்டிய பணியின் அளவு குறித்து அறியச் செய்து முழு ஊதியமான ரூ.119/-ஐப் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.

- இத்திட்டத்தின்கீழ், தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், நிலச் சீர்திருத்தப் பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டப் பயனாளிகள், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்கள் ஆகியோரின் நிலங்கள் மேம்படுத்தப்படலாம். இவ்வாறான நிலச் சீர்திருத்தப் பணிகள் சில மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய பணிகளை இத்திட்டத்தின்மூலம் எடுத்துச் செய்வது குறித்து இவ்வரசு விரிவாக ஆய்வு செய்து நில மேம்பாட்டுப் பணிகள், பாசனப் பணிகள், தோட்டக் கலை போன்ற பணிகளை தகுதியுடையவர்களின் நிலங்களில் செயல்படுத்த வழிவகை செய்யும்.

- இத்திட்டத்தின்கீழ் செய்து முடிக்கப்பட்ட வேலைக்கான ஊதியத்தினை அவ்வார இறுதியில் ஊதியம் வழங்கும் நாளில் ரொக்கமாகப் பணம் வழங்கப்படும் நிலையை மாற்றி தொழிலாளர்களின் வங்கிக் கணக்கில் செலுத்துவதற்கான தக்க ஏற்பாடுகள் படிப்படியாக நிறைவேற்றப்படும். இதன் மூலம் முறைகேடுகள் தடுக்கப்படுவதுடன், திட்டச் செயல்பாட்டு முக்கியமும், பணம் வழங்கும் முக்கியமும் வெவ்வேறாக அமைவதை இந்த அரசு உறுதி செய்யும்.

- தற்போது இத்திட்டத்தின்கீழ் ஒரு கிராம ஊராட்சியில் ஒரே நேரத்தில் ஒரு பணி மட்டுமே எடுத்துச் செய்யப்படுகின்றது. இதனால், ஒரே பணித் தளத்தில் அதிக அளவு பணியாளர்கள் கூடுவதால் பணிகளை முறையாகக் கண்காணிக்க இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே, ஒரு கிராம ஊராட்சியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகள் செய்வதற்கு அனுமதிப்பதோடு அவற்றை கண்காணிக்க ஒவ்வொரு பணிக்கும் ஒரு பணித் தள உதவியாளர் (Work Site Assistant) நியமிக்கப்படுவார்.

[2011 ஆகஸ்ட் 18

- தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளைச் செய்வதற்குப் பெருமளவு பணியாளர்கள் சென்று விடுவதால், விவசாயப் பணிகளை மேற்கொள்வதற்கு பணியாளர்கள் உரிய காலத்தில் கிடைக்கவில்லை என விவசாயத்தைச் சார்ந்திருப்போரால் தொடர்ந்து முறையீடு செய்யப்படுகிறது. எனவே, விவசாயப் பணிக் காலத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் திட்ட இடைவேளை அளித்திட மத்திய அரசிடம் கோர முடிவு செய்யப்பட்டுள்ளது.

- இந்த அரசு, இத்திட்டத்திற்கான நிதியினை, திட்டச் செயலாக்க முகமைகளுக்குத் தாமதமாக மாற்றம் செய்திட முடிவு செய்துள்ளது. அதன்படி, தொடர்பு வங்கிகளில் நிர்வகிக்கப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியினை மின்னணு பரிமாற்றம் (Electronic Transfer) மூலம் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைகளுக்கு ஒரு மணி நேரத்திற்குள் மாற்றம் செய்திட வழிவகை செய்யப்படும்.

- செயற்கைக்கோள் உதவியுடன் தயாரிக்கப்பட்ட வரைபடங்களின்மூலம் நீராதாரங்களின் தற்போதைய நிலையினைக் கண்டறிந்து, நீராதாரப் பணிகள் மேற்கொள்ளப்படுவதில் முன்னுரிமை அளிப்பதில் சரியான நடைமுறை பின்பற்றப்பட்டு, பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் குட்டைகள், குளங்கள், ஊரணிகள் தூர்வாரும் பணிகளை அங்கொன்றும் இங்கொன்றுமாக மேற்கொள்ளப்படுவது தவிர்க்கப்படும்.

- அரசால் செயல்படுத்தப்படும் மிகப் பெரிய திட்டம் 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டமாகும்'. ஆகையால், இத்திட்ட செயல்பாட்டினைப் பணி நடைபெறும்போதே முறையாகக் கண்காணித்தல் (Real time monitoring) அவசியமானதாகும். அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஒரே நேரத்தில் இப்பணிகள் மேற்கொள்ளப்படுவதால், வட்டாரம் முதல் மாநில அளவிலான அலுவலர்கள் வரை பணிகளின் முன்னேற்றத்தினை உடனுக்குடன் தெரிந்துகொள்ளும் வகையில், இந்த அரசு குறுஞ்செய்தி மூலமான கண்காணிப்பை (SMS based monitoring) அறிமுகப்படுத்திட உள்ளது.

2011 ஆகஸ்ட் 18]

2011-12 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.3,472 கோடிக்கான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

4.2 இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒரு அங்கமாக இருந்த இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் தனித் திட்டமாக ஜனவரி 1996 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் வீடற்ற ஆதி திராவிடர், பழங்குடியினர், கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள், வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் ஆதி திராவிட, பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு இலவச வீடுகள் கட்டித் தருதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கிராம சபையினால் ஒப்பளிக்கப்பட்ட வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் நபர்களின் பட்டியலில் இருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டில் 60 விழுக்காட்டிற்குக் குறையாமல் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு (SC/ST) புதிய வீடுகள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும். அதிகபட்சமாக 40 விழுக்காடு ஒதுக்கீடு, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற வகுப்பினைச் சார்ந்த வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மேற்கண்ட இனங்களில் 3 விழுக்காடு உடல் ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு ஒதுக்கப்படுகிறது. ஒதுக்கப்பட்ட வீடுகளில் 15 விழுக்காடு சிறுபான்மையினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமெனவும் மாநிலங்களை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.45,000/- என மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு பங்களிப்பு 75:25 விழுக்காடு ஆகும். மத்திய அரசு ரூ.33,750/- மற்றும் மாநில அரசு ரூ.11,250/- வழங்குகின்றன. இதுதவிர, தமிழக அரசால் கூடுதலாக ரூ.30,000/- கான்கிரீட் கூரை அமைப்பதற்கு வழங்கப்பட்டு, 2010-2011 வரை தமிழகத்தில் ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.75,000/- ஆக இருந்தது. இந்த ஆண்டு முதல், மாநில அரசால் கான்கிரீட் கூரை அமைப்பதற்காக வழங்கப்பட்ட தொகையான ரூ.30,000/-, ரூ.55,000/-ஆக உயர்த்தப்படுகிறது. எனவே தமிழ்நாட்டில் இத்திட்டத்தில் கட்டப்படும் வீடு ஒன்றிற்கான அலகுத் தொகை ரூ.75,000/-லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்படுகிறது.

[2011 ஆகஸ்ட் 18

இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கக் கிராம சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வீடுகள், பெண்கள் பெயரிலோ அல்லது கணவர் மற்றும் மனைவி பெயரிலோ ஒதுக்கீடு செய்யலாம். முழு சுகாதாரத் திட்ட ஒதுக்கீட்டினை ஒருங்கிணைத்து அனைத்து வீடுகளிலும் கழிப்பறை வசதி ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயனாளிகளே வீட்டைக் கட்டிக்கொள்ள வேண்டும்.

2011-2012 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 1,00,553 வீடுகள் ரூ.1005.53 கோடி செலவில் கட்டப்பட உள்ளது. இதில், மாநில அரசின் நிதி ஒதுக்கீடு மட்டும் ரூ.666.16 கோடி (66.25 விழுக்காடு) ஆகும்.

4.3 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 1993-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் துவங்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூர் தேவைக்கேற்ப நிலையான சமுதாயச் சொத்துக்கள் மற்றும் சமுதாயக் கட்டமைப்புப் பணிகளை உள்ளடக்கிய அடிப்படை வசதிகளுக்கான வளர்ச்சிப் பணிகளை பரிந்துரைப்பர்.

நாடாளுமன்ற உறுப்பினரால் தேர்வு செய்யப்பட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் (மக்களவை, மாநிலங்களவை) ரூ.2 கோடி வீதம் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. மத்திய அரசு 2011-2012 ஆம் ஆண்டு முதல் தற்போதைய ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.2 கோடியினை ரூ.5 கோடியாக உயர்த்தியுள்ளது.

மக்களவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை, அவரவர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலேயே இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாநிலங்களவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை, அவரவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்திற்குள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் பணிகளைப் பரிந்துரைக்கலாம். நியமன உறுப்பினர்களைப் பொறுத்தவரை, இந்தியாவில் எந்தப் பகுதியிலும் பணிகளைச் செயல்படுத்தப் பரிந்துரைக்கலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர், தனக்குத் தேவையான ஒருங்கிணைப்பு மாவட்டத்தினை (Nodal District) தேர்வு செய்து, புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்துக்கு தெரிவிக்கலாம். மக்களவைத்

2011 ஆகஸ்ட் 18]

தொகுதிக்கு உட்பட்ட பகுதி ஒரு மாவட்டத்திற்கும் மேல் இருப்பின், மக்களவை உறுப்பினர் ஏதேனும் ஒரு மாவட்டத்தினை ஒருங்கிணைப்பு மாவட்டமாக தேர்வு செய்யலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் நிலையான சொத்துகளை உருவாக்கிட குறிப்பாகக் குடிநீர் பணிகள், கல்வி, மக்கள் நல்வாழ்வு, சுகாதாரம் மற்றும் சாலைப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பணிகளை பரிந்துரை செய்யலாம். நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் 15 விழுக்காடு தாழ்த்தப்பட்ட பிரிவினர் வசிக்கும் பகுதிகளுக்கும், 7.5 விழுக்காடு பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும். நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் பழங்குடியினர் வாழும் பகுதி இல்லையெனில் வரையறுக்கப்பட்ட நிதியினைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழும் பகுதிகளுக்கு பயன்படுத்தலாம். அதேபோல, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழும் பகுதி இல்லையெனில் பழங்குடியினர் வாழும் பகுதிக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

வெள்ளம், புயல், சுனாமி, பூகம்பம் மற்றும் வறட்சி போன்ற பேரிடர்களால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் பணிகளை பரிந்துரை செய்யலாம். பேரிடர் பாதிக்கப்படாத பகுதியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர், பேரிடர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் செய்யப்பட வேண்டிய பணிகளுக்காக இத்திட்டத்தினகீழ் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை பரிந்துரை செய்யலாம். ஒருவேளை, பேரிடரின் விளைவு கடுமையாக இருப்பின், பாதிக்கப்பட்ட மாவட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ.50 இலட்சம் வரை பணிகளுக்காக பரிந்துரை செய்யலாம்.

இத்திட்டத்திற்கான நிதி, மத்திய அரசால் இரண்டு தவணைகளாக விடுவிக்கப்படுகிறது. முந்தைய ஆண்டின் இரண்டாவது தவணை சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, முதல் தவணை, நிதி ஆண்டின் தொடக்கத்திலேயே விடுவிக்கப்படும். மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் அனுப்பப்பட்ட பயன்பாட்டுச் சான்றுகளின் அடிப்படையில் இரண்டாம் தவணைத் தொகை விடுவிக்கப்படும்.

[2011 ஆகஸ்ட் 18

மத்திய அரசால் விடுவிக்கப்படும் தொகையில், ஒரு நிதியாண்டில் செலவிடப்படாமல் இருப்பில் உள்ள தொகையினை அடுத்து வரும் நிதியாண்டிலும் பயன்படுத்தலாம். ஒரு நாடாளுமன்ற தொகுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில், பயன்படுத்தப்படாத நிதியினை அந்தத் தொகுதியில் அடுத்து வரும் நாடாளுமன்ற உறுப்பினரால் பயன்படுத்த ஒதுக்கீடு செய்யப்படும்.

ஒரு ஆண்டில் முடிக்கப்பட்ட பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத் தொகையில் 0.5 விழுக்காடு நிதியினை சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் எழுதுபொருள்கள், அலுவலகத் தளவாடங்கள், தொலைபேசி கட்டணம் போன்ற சில்லரைச் செலவினங்களுக்குப் பயன்படுத்தலாம்.

4.3.1. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் தடை செய்யப்பட்ட பணிகள் விவரம்

1. மத்திய, மாநில அரசு மற்றும் அது சார்ந்த துறைகள், அரசு முகமைகள்/நிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள்.
2. தனியார், கூட்டுறவு மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான அலுவலகம், குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் இதர பணிகள்.
3. வணிக நோக்குடன்கூடிய அனைத்து வகையான பணிகள்.
4. அனைத்து வகையான பராமரிப்புப் பணிகள்
5. அனைத்து வகையான புதுப்பித்தல் மற்றும் பழுது பார்த்தல் பணிகள்
6. மானியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்குப் பங்களிப்பு செலுத்துதல்.
7. உருவாக்கப்பட்ட சொத்துகளில் தனிநபர் பெயர் வைத்தல்
8. அனைத்து வகையான அசையும் சொத்துகள் வாங்குதல்
9. நிலஎடுப்பு அல்லது எடுக்கப்பட்ட நிலத்திற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்

2011 ஆகஸ்ட் 18]

10. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது பகுதியாக முடிக்கப்பட்ட பணிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை மீள ஈடு செய்தல்.

11. தனிநபர்/குடும்பம் பயன் பெறும் சொத்துகளை உருவாக்குதல்

12. அனைத்து வகையான வருவாய் மற்றும் தொடர் செலவினங்கள்

13. மத வழிபாட்டு இடங்கள் மற்றும் மத அமைப்புகள், குழுக்களுக்குச் சொந்தமான நிலங்களில் பணிகள்.

மத்திய அரசின் (புள்ளி விவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்) இணையதளத்தின்படி தமிழ்நாடு, தேசிய அளவில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 1993 ஆம் ஆண்டிலிருந்து ஒருங்கிணைந்த நிதிப் பயன்பாட்டில், 97.29 விழுக்காட்டை அடைந்து நாட்டிலேயே மூன்றாவது இடத்தில் உள்ளது.

2011-2012 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செய்யப்படும் பணிகளுக்கு ரூ.285 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4.4 முழு சுகாதார இயக்கம்

முழு சுகாதார இயக்கம் முதலாவதாக கடலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் தொடங்கப்பட்டு 2004 ஆம் ஆண்டு வரை அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டக் காலம் 1999 முதல் 2012 வரை ஆகும்.

ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி, திறந்த வெளி மலம் கழித்தலை அடியோடு ஒழிப்பதை உறுதி செய்யும் பொருட்டு மத்திய அரசின் ராஜீவ்காந்தி தேசிய குடிநீர் இயக்கத்தால் "முழு சுகாதார இயக்கம்" ஆரம்பிக்கப்பட்டது. ஊரக சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அனைத்து வீடுகளுக்கும் தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள், சுகாதாரப் பழக்கங்களில் முன்னேற்றம் ஆகியவற்றை ஏற்படுத்துவதாகும். தேவையின் அடிப்படையிலும், மக்களை மையப்படுத்தியும் ஊரக ஏழைக் குடும்பங்கள் குறைந்த

[2011 ஆகஸ்ட் 18

அளவு மானியத்துடன் கூடிய கழிப்பிடங்கள் கட்டுவதற்கு இத்திட்டம் ஊக்கம் அளிக்கிறது. ஊராட்சி அமைப்புகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளை ஈடுபடுத்தி, செய்தி, கல்வி மற்றும் தொடர்பு, திறன் வளர்த்தல் மற்றும் சுகாதாரக் கல்வி ஆகியவற்றைச் செம்மையாக அளிப்பதன்மூலம் ஊரக மக்களின் செயல்பாடுகளில் மாற்றம் கொண்டுவருவதை முழு சுகாதார இயக்கம் வலியுறுத்துகிறது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாக, தனிநபர் இல்லக் கழிப்பிடம், பள்ளி சுகாதாரம், சுகாதாரக் கல்வி, சமூகச் சுகாதார வளாகம் மற்றும் அங்கன்வாடிக் கழிப்பிடம் ஆகியவை இனங்காணப்பட்டுள்ளன.

மத்திய, மாநில அரசுகள் மற்றும் பயனாளிகளின் பங்களிப்பு கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:

(ரூபாயில்)

வ. எண்	கூறுகள்	மத்திய அரசு	மாநில அரசு	பயனாளியின் பங்குத் தொகை	மொத்த அலகுத் தொகை
1	தனிநபர் கழிப்பறை	2,200 (63%)	1,000 (28%)	300 (9%)	3,500
2	பள்ளிக் கழிப்பறை	24,500 (70%)	10,500 (30%)	0	35,000
3	அங்கன்வாடி கழிப்பறை	5,600 (70%)	2,400 (30%)	0	8,000
4	சுகாதார வளாகங்கள்	1,20,000 (60%)	40,000 (20%)	40,000 (20%)	2,00,000

இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.1064.25 கோடி ஆகும். அவற்றில் இதுவரை ரூ.725.73 கோடி விடுவிக்கப்பட்டு ரூ.609.47 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2011 ஆகஸ்ட் 18]

4.4.1 தனிநபர் இல்லக் கழிப்பிடங்கள்

இதன் முக்கிய நோக்கம்

- ஊரகப் பகுதிகளில், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
- ஊரகப் பகுதிகளில் சுகாதாரம் முழுமை பெறுவதை விரைவுபடுத்துதல்.
- சுகாதாரக் கல்வி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் சுகாதார வசதியின் அவசியத்தை உணரச் செய்தல்
- ஊரகப் பகுதிகளிலுள்ள பள்ளிகள் / அங்கன்வாடிகளில் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி அதன்மூலம் சுகாதாரக் கல்வி மற்றும் சுகாதாரப் பழக்கங்கள் மாணவர்களைச் சென்றடையச் செய்தல்.
- சுகாதாரத்திற்கான குறைந்த செலவுள்ள, சரியான தொழில் நுட்பங்களை ஊக்குவித்தல்.
- திறந்த வெளி மலங்கழிக்கும் பழக்கத்தை முற்றிலும் அகற்றி, தண்ணீர் மற்றும் உணவு மாசுபடுதலைத் தடுத்தல்
- உலர் கழிப்பிடங்களைத் (dry latrines), தண்ணீர் ஊற்றிப் பயன்படுத்தும் கழிப்பிடங்களாக (flush out latrines) மாற்றுவதன் மூலம் மனித கழிவுகளைத் துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு சுத்தப்படுத்தும் அவல நிலையை அகற்றுதல்.

ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்துக் குடும்பங்களையும் இத்திட்டத்தின்கீழ்கொண்டு வருவதே இதன் முக்கிய நோக்கமாகும். வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள அனைவருக்கும் ஊக்கத் தொகை அளிப்பதன்மூலம் சமுதாயத்தை முழு ஈடுபாட்டுடன் இத்திட்டத்தில் பங்கேற்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள மக்களும் அவர்களின் வீடுகளில் சொந்தச் செலவிலேயே கழிப்பிடங்களைக் கட்ட ஊக்கப்படுத்தப்படுகின்றனர். தனிநபர் இல்லக் கழிப்பிடங்களை வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள் தாங்களாகவே கட்டிக் கொள்கின்றனர். தமிழ்நாட்டில் கட்டப்பட வேண்டிய தனிநபர் இல்லக் கழிப்பிடங்களின் இலக்கு 44,22,133 ஆகும். அவற்றில் 31-7-2011 வரை 37,06,650 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள 7,15,483 கழிப்பிடங்களில் 5,22,214 தனிநபர் இல்லக் கழிப்பிடங்கள் 2011-2012 ஆம் ஆண்டில் கட்டப்பட உள்ளன.

[2011 ஆகஸ்ட் 18

தற்போதுள்ள விதிமுறைகளின்படி தனிநபர் கழிப்பிடத்திற்கு ரூ.3,500/- அலகுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டு, ரூ.2,200/- மத்திய அரசாலும் ரூ.1000/- மாநில அரசாலும் மானியமாக வழங்கப்படுகிறது. இதற்கான பயனாளிகளின் பங்குத் தொகை ரூ.300/- ஆகும்.

4.4.2 பள்ளி சுகாதாரமும், சுகாதாரக் கல்வியும்

மாணவர்கள், புதிய சிந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் திறன் கொண்டவர்களாதலால் திறந்த வெளி மலம் கழித்தலைத் தவிர்த்துக் கழிப்பிடங்களை உபயோகிப்பதைக் கல்வி மற்றும் ஊக்கப்படுத்துதல் மூலம் அவர்களின் எண்ணங்கள் மற்றும் நடவடிக்கைகளை மாற்றுவதில் பள்ளிகளும், அங்கன்வாடிகளும் சிறந்த பங்கு வகிக்கின்றன. ஆசிரியர்கள் புகட்டும் சுகாதாரக் கல்வி மற்றும் கழிப்பிடங்களை உபயோகிப்பதால் கிடைக்கும் அனுபவம், மாணவர்கள்மூலம் வீடுகளை அடைந்து அதன்மூலம் பெற்றோர்கள் சுகாதாரப் பழக்கங்களைக் கடைபிடிக்கின்றனர். எனவே, பள்ளி சுகாதாரம், முழு சுகாதாரத் திட்டத்தில் முக்கியப் பங்காற்றுகிறது. ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மற்றும் அங்கன்வாடி மையங்கள் என அனைத்து வகையான கல்வி நிறுவனங்களிலும் இத்திட்டத்தின்மூலம் கழிப்பிடங்கள் கட்டப்படுகின்றன. பெண்கள் பயிலும் பள்ளிகளில் கழிப்பறை கட்ட அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது.

சுகாதாரம் மற்றும் சுகாதாரக் கல்வி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் பள்ளிக் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்துப் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் கழிப்பிட வசதிகளை ஏற்படுத்தித் தருவதை இந்த அரசு உறுதி செய்யும்.

முழு சுகாதார இயக்கத் திட்டத்தில் பள்ளி சுகாதாரத்திற்கான மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதி 70:30 என்ற விகிதத்தில் அளிக்கப்படுகிறது. ரூ.118.09 கோடி மதிப்பீட்டில் 53,678 பள்ளிக் கழிப்பிடங்கள் கட்ட நிர்ணயிக்கப்பட்ட இலக்கில், இதுவரை 40,201 பள்ளிக் கழிப்பிடங்கள் ரூ.88.44 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. ரூ.47.170 கோடி மதிப்பீட்டில் மீதமுள்ள 13,477 பள்ளிக் கழிப்பிடங்கள் 2011-2012 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும்.

4.4.3 அங்கன்வாடிக் கழிப்பிடங்கள்

குழந்தைகளின் இளவயதிலேயே சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் அங்கன்வாடிக்

2011 ஆகஸ்ட் 18]

கழிப்பறைகள் அமைத்து அதனைப் பயன்படுத்தச் செய்வதன்மூலம் அவர்களிடையே சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றச் செய்து மாணவர்களுக்கும், அங்கன்வாடிகளில் இருந்து மாணவர்களை அழைத்துச் செல்ல வருகைதரும் தாய்மார்களுக்கும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அவசியமாகும். அங்கன்வாடிகளில் குழந்தைகள் பயன்படுத்துவதற்கேற்ற கழிப்பிடங்கள் அமைக்கப்படுகின்றன.

தமிழநாட்டில் 24,212 அங்கன்வாடிக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 3,758 கழிப்பிடங்கள் 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.3கோடி மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளன. எனினும், மாவட்டங்களில் பள்ளி மற்றும் அங்கன்வாடிகளின் தேவையை மீண்டும் கணக்கிட்டுக் கூடுதல் எண்ணிக்கையிலான கழிப்பிடங்கள் வரும் நிதியாண்டில் கட்டப்படும்.

4.4.4 சமூக சுகாதார வளாகங்கள்

முழு சுகாதார இயக்கத்தில், சமூக சுகாதார வளாகம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. கிராமத்தில் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய மற்றும் எளிதில் அணுகக்கூடிய இடத்தில் சுகாதார வளாகங்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வளாகங்களை, கிராம ஊராட்சிகள் முறையாகப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும் அல்லது அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சமுதாயப் பங்குத் தொகை 60:20:20 என்ற விகிதத்தில் அமைந்துள்ளது. கிராம ஊராட்சி, சமுதாயப் பங்களிப்பையும் அளிக்கலாம். 1,438 வளாகங்கள் கட்டப்பட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், இதுவரை 1,548 வளாகங்கள் ரூ.23.22 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

4.4.5 ஊரக சுகாதார அங்காடிகள்

ஊரக சுகாதார அங்காடிகள், சமூக நோக்குடன் உள்ள வர்த்தகச் செயல்பாட்டு அமைப்பு ஆகும். சுகாதார வளாகங்கள் கட்டுவதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள தனி நபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு கழிப்பறை கட்டத் தேவையான பொருட்களை வழங்குவதே ஊரக சுகாதார அங்காடிகளின் நோக்கமாகும். சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கேற்ற தொழில்நுட்பம் மற்றும் நிதி வசதிகளுக்கு ஏற்பக் கட்டப்படும் பல்வேறுவிதமான கழிப்பிடங்களுக்கான பொருட்கள், அவை சார்ந்த சேவை மற்றும்

[2011 ஆகஸ்ட் 18

ஆலோசனை வழங்குதல் ஆகியவை இதன் குறிக்கோளாகும். இந்த அங்காடிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், மகளிர் நிறுவனங்கள், ஊராட்சி அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளால் துவக்கப்பட்டு, நடத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்திலுள்ள 31 மாவட்டங்களில், 195 அங்காடிகள் ரூ.2.93 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.

4.4.6 உற்பத்தி மையங்கள்

குறைந்த செலவில், தரமான கட்டுமானப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த உற்பத்தி மையங்கள் உதவி புரிகின்றன. ஒவ்வொரு மையத்தினை அமைப்பதற்கும், கொத்தனார் பயிற்சி மற்றும் சுழல் நிதிக்காக அதிகபட்சம் ரூ.3.50 இலட்சம் வழங்கப்படுகிறது. இதுவரை, ரூ. 65 இலட்சம் செலவில் 65 உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

4.4.7 நிர்மல் கிராம புரஸ்கார் விருது

சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், நாட்டிலேயே முதன் முறையாக ஜூலை 2003 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "தூய்மையான கிராம இயக்கம் "என்ற விருது, சுகாதார திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து, மத்திய அரசாலும், முழு சுகாதார இயக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் நிர்மல் கிராம புரஸ்கார் விருது 2005—விருந்து வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது தங்கள் பகுதிகளில் முழு சுகாதாரத்தை எய்தும் ஊராட்சிகளுக்கும், இதர அமைப்புகளுக்கும் ஒரு அங்கீகாரமாகத் திகழ்கிறது.

இதன் நோக்கம்

1. சமூக மற்றும் அரசியல் தொடர்புகளை ஏற்படுத்தி இந்தியாவில் உள்ள ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதியினை மேம்படுத்தி வளர்ச்சி பெறச் செய்தல்.
2. திறந்த, வெளியில் மலம் கழித்தலைத் தடுத்தலும் தூய்மையான கிராமத்தை உருவாக்குதலும்.
3. முழு சுகாதார இயக்கத்தை, தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்படுத்த ஊராட்சி அமைப்புகளை ஊக்குவித்தல்.

2011 ஆகஸ்ட் 18]

4. முழு சுகாதாரத்தை எய்தப் பாடுபடும் அமைப்புகளை ஊக்குவிப்பதன்மூலம் சமூக ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.

இதுவரை தமிழ்நாட்டில் 5 வட்டார ஊராட்சிகள் மற்றும் 2,334 கிராம ஊராட்சிகள் சுகாதாரம் மற்றும் முழுமையான தூய்மைக்காக இவ்விருதினைப் பெற்றுள்ளன. இந்த விருதுக்குரிய தொகை ரூ.50,000/-ல் இருந்து ரூ.5 இலட்சம் வரை கிராம ஊராட்சிகளுக்கும் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சம் வரை வட்டார ஊராட்சிகளுக்கும் மக்கள் தொகைக்கேற்ப வழங்கப்படுகிறது.

முழு சுகாதாரத் திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில், சுகாதாரமான மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராமங்களை உருவாக்க பல ஊடக மக்கள் தொடர்பு சாதனங்கள் (Multi-media) மூலம் இந்த அரசு உறுதி செய்யும்.

4.5 பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி (BRGF)

தமிழகத்தில் பின்தங்கிய 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட தேசிய வளர்ச்சி மற்றும் புனரமைப்புத் திட்டம் (Rashtriya Sam Vikas Yojana) மத்திய திட்டக் குழுவிலிருந்து மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்திற்கு 2006—2007 முதல் மாற்றப்பட்டது. பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் இத்திட்டத்தைப் பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி (Backward Regions Grant Fund) என மாற்றியமைத்தது. இத்திட்டம், தற்போது தமிழ்நாட்டில் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளர்ச்சியில் பல்வேறு பகுதிகளில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்காக உருவாக்கப்பட்டதே பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி ஆகும். தற்போதுள்ள திட்டங்களின் செயல்பாடுகளால் வளர்ச்சியில் முழுமை பெறாத பகுதிகளுக்கு ஏற்றவாறு இது வடிவமைக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை மேம்படுத்துதல், அவற்றிற்கு ஒப்படைக்கப்பட்ட முக்கியக் கடமைகளை நிறைவேற்றுதலில் திறனை மேம்படுத்த உதவுதல் மற்றும் வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வுகளைக் களைதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

[2011 ஆகஸ்ட் 18

இத்திட்டத்தின்கீழ் இரு வழிகளில் நிதி அளிக்கப்படுகிறது.

1. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குப் பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படையான தன்மையை ஏற்படுத்தும் வகையில் திட்டமிடல், செயலாக்கம், கண்காணித்தல், கணக்குகளைப் பராமரித்தல் ஆகியவற்றிற்கான திறனை மேம்படுத்தப் பயிற்சி அளித்தல்.

2. ஊராட்சிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் பகுதிகளில் உள்ள அடிப்படை வசதிகளில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் களையும்விதமாக மக்களோடு இணைந்து திட்டமிடல் வாயிலாக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் வரையறுக்கப்படாத மானியத்தை வழங்குதல்.

விடுவிக்கப்பட்ட நிதி விவரம்

(அ) மறைமலை நகரிலுள்ள மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கு திறன்வளர் பயிற்சிக்காக ரூ.21.55 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) வரையறுக்கப்படாத நிதி 6 மாவட்டங்களுக்கு கீழ்க்கண்டவாறு விடுவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	விடுவிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்)
1	நாகப்பட்டினம்	36.94
2	சிவகங்கை	38.19
3	விழுப்புரம்	55.66
4	திருவண்ணாமலை	47.26
5	திண்டுக்கல்	45.85
6	கடலூர்	43.44
மொத்தம்		267.34

2011 ஆகஸ்ட் 18]

2011-12 ஆம் ஆண்டு செயலாக்கத் திட்டம் ரூ.117.14 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, நிதி விடுவிக்கும் பொருட்டு மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

4.6 தேசிய கரிம வாயுத் திட்டம்

காகிதம் மற்றும் சர்க்கரை உற்பத்திக் கழிவுகள், கால்நடைக் கழிவுகள் போன்ற கழிவுகளில் இருந்து கரிம வாயுவினை எளிதாக உற்பத்தி செய்யலாம். இது போன்ற கழிவுகளைச் சேகரித்து இயற்கையாக இரசாயன மாற்றத்திற்கு உட்படுத்தி எளிதில் எரிகின்ற தன்மையுடைய மீத்தேன் வாயுவினை உற்பத்தி செய்யலாம். அதிக அளவு எரிசக்தித் தேவைகளை நிறைவு செய்திடக் கரிம வாயு பெருமளவில் உதவி புரிகின்றது. சுற்றுச் சூழலுக்கு ஊறுவிளைவிக்காத, பல நன்மைகளை அளிக்கக்கூடிய மரபு சாரா எரிசக்தியை உற்பத்தி செய்வதே கரிம வாயுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இயற்கை எரிவாயு மற்றும் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் எரிபொருளின் உபயோகத்தைக் குறைக்கும் வகையில் சமையலுக்குத் தேவையான சுத்தமான எரிபொருளை உற்பத்தி செய்வதும் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

சாண எரிவாயு உருவாக்குவதன்மூலம் இரசாயன உரங்கள் பயன்பாட்டைக் குறைத்து இயற்கை உரங்கள் பயன்படுத்துதலை ஊக்குவிப்பதுடன், கிராமப்புற மகளிர், சமையலுக்காக விறகுகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் இன்னல்களை நீக்கி, காடுகளையும் பாதுகாக்கின்றது. மேலும், கரிம வாயுக்கலன்களுடன் கிராமங்களிலுள்ள கழிவறைகளை இணைப்பதன்மூலம் கிராம சுகாதாரத்தை மேம்படுத்த உதவுகிறது. அத்துடன் ஊறு விளைவிக்கக்கூடிய புகை வெளியேறுவதைக் கட்டுப்படுத்தி, நட்பவெட்ப மாறுதலைப் பாதுகாக்கின்றது.

2011-12 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் 1000 கரிம வாயுக் கலன்கள் அமைத்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கான நிதி பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

[2011 ஆகஸ்ட் 18

வ. எண்	விபரங்கள்	அமைக்கப்பட உள்ள அலகு	தொகை (ரூபாயில்)	மொத்தம் (ரூபாயில்)
1	மானியம்	100	8,000	80,00,000
2	திட்ட முகவர் ஊக்கத் தொகை	500	1,500	7,50,000
3	சான்ன எரிவாயு கலனுடன் சுழிவறை இணைப்பு	200	1,000	2,00,000
4	பயனாளிகளுக்கான பயிற்சி	50	2,000	1,00,000
5	கொத்தனார் பயிற்சி	2	37,500	75,000
	மொத்தம்			91,25,000

5. சாலைகள்

ஊரகப் பகுதிகளில் விரைவான மற்றும் தொடர்ந்து நிலையான வளர்ச்சி, வறுமை ஒழிப்பு மற்றும் சமூகப், பொருளாதார மாற்றம் ஏற்படுவதற்கு அனைத்து பருவ காலங்களிலும் பயன்படுத்தக்கூடிய வகையில் உள்ள ஊரக இணைப்புச் சாலைகள் மிகவும் அவசியம். வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டிற்குத் தரமான சாலை வசதி இன்றியமையாதது. ஒரு பகுதியின் சமூகப் பொருளாதார வளர்ச்சி அப்பகுதியில் அமைந்துள்ள தரமான சாலைகளின் நிலையினைப் பொறுத்தே அமையும்.

குக்கிராமங்களுக்கான இணைப்புச் சாலைகள் கிராமப்புற மக்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தும். குறிப்பாக, விவசாயத்திற்குத் தேவையான மூலப்பொருட்களின் இருப்பு, பயிரிடும் முறைகளின் மாற்றம், விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வசதி, விவசாய உற்பத்தி பொருட்களுக்கு போதிய விலை நிர்ணயம் மற்றும் பால் உற்பத்திப் பெருக்கம் ஆகியவற்றிற்கு போதிய இணைப்புச் சாலைகள் இருப்பது மிகவும் அவசியம்.

2011 ஆகஸ்ட் 18]

இந்த அரசு ஏற்கெனவே "மக்கள் தொகை 500-க்கு அதிகமாக உள்ள அனைத்து கிராமங்களுக்கும் தார்சாலைகள் அமைக்கப்படும். பிற குடியிருப்புகளுக்கு எல்லா பருவ காலத்திலும் பயன்படுத்தக்கூடிய வகையில் சாலைகள் அமைக்கப்படும்" என்று அறிவித்துள்ளது.

மாநிலத்தின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான நல்ல சாலை வசதிகளை ஏற்படுத்துவது இந்த அரசின் நோக்கமாகும். மேலும், தொலைதூரப் பகுதிகளிலுள்ள குக்கிராமங்களுக்கும் நல்ல சாலை வசதிகளை இந்த அரசு ஏற்படுத்தித் தரும். புதிய சாலைகளை அமைப்பது மற்றும் பழுதுபட்ட சாலைகளை மேம்படுத்துவதன் மூலமாக பொருட்கள் பரிமாற்றம் மற்றும் மக்களின் போக்குவரத்து அதிகரித்து வேலைவாய்ப்பு பெருகும்.

5.1 பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்

சாலை வசதியில்லாத குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலத்திற்கும் ஏற்ற சாலை வசதியினை ஏற்படுத்தித் தருவதற்காக மத்திய அரசால் 2000 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டம் துவங்கப்பட்டது. இத்திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

ஆண்டு முழுவதும், அனைத்து பருவகாலங்களிலும் பயன்படுத்தத் தக்கவகையில் தேவையான சிறு பாலங்கள் மற்றும் வடிகால் வசதிகளுடன்கூடிய சாலைகள் அமைப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

இத்திட்டத்தின் முதல் ஏழு கட்டங்களில், அதாவது 2000-2001-ல் இருந்து 2007-2008 (பாரத் நிர்மாண் கட்டம் II) வரை 9,984.32 கி.மீ. நீளமுள்ள 4,949 சாலைப் பணிகள், மொத்தம் ரூ.2,024 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில், 4,801 பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். தற்போது ரூ.577.90 கோடி மதிப்பீட்டில் 2,031 கி.மீ. நீளமுள்ள 1,176 சாலைகளை மேம்பாடு செய்ய பாரத் நிர்மாண் III-ன் (பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் கட்டம் VIII) கீழ் விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அதற்கான சுருத்துரு, தேசிய ஊரக சாலை மேம்பாட்டு முகமைக்கு அனுப்ப தயார் நிலையில் உள்ளது. இருப்பினும், மத்திய அரசின் தற்போதைய நெறிமுறைகளின்படி, கீழ்க்கண்ட வகையிலான சாலைப் பணிகளை

[2011 ஆகஸ்ட் 18

மட்டுமே பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய இயலும்:

(i) பாரத் நிர்மாண் திட்டத்தின் முதல் கட்டத்தில் விடுபட்டுப்போன குக்கிராமங்களுக்கான இணைப்புச் சாலைகள்.

(ii) உலக வங்கி மற்றும் ஆசிய வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.

(iii) இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டதாக கண்டறியப்பட்ட 33 மாவட்டங்களில் இணைப்புச் சாலைகள்.

(iv) எல்லைப் பகுதியில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட சிறப்புச் சாலைகளின் தொகுப்பு.

தேசிய ஊரகச் சாலை மேம்பாட்டு முகமையின் முன்னுரிமை மேற்கூறியபடியுள்ள நிலையில், தமிழ்நாட்டில் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்ட செயலாக்கம் தொடர்ந்து சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, 500-க்கு மேல் மக்கள் தொகை கொண்ட அனைத்து குக்கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுவிட்டதால் தேசிய ஊரக சாலை மேம்பாட்டு முகமை தெரிவித்துள்ள நெறிமுறைகளுக்கு ஏற்ற சாலைகள் நம் மாநிலத்தில் இல்லை. இச்சூழ்நிலையில், அடுத்த கட்டமாக 250 முதல் 500 வரை மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களுக்குத்தான் தற்போது இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட வேண்டிய நிலை உள்ளது. ஆனால், 500-க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்கள் அனைத்திற்கும் இணைப்புச் சாலை அமைக்கப்பட்டு விட்டதால், நம் மாநிலத்திற்கு பிரதம மந்திரி கிராம சாலைத் திட்ட நிதி, மேலே தெரிவிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மறுக்கப்படுகிறது. நம் மாநிலம் இத்திட்டச் செயலாக்கத்தில் விடுபட்டுவிடக் கூடாது என்பதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து மத்திய திட்டக் குழுத் துணைத் தலைவரிடம், 6-7-2011 அன்று புதுடெல்லியில் 2011-2012 ஆம் ஆண்டின் தமிழ்நாட்டிற்கான ஆண்டுத் திட்டத்தினை இறுதி செய்யும்பொழுது நேரில் எடுத்துரைத்துள்ளார்கள். மேலும், இந்த சந்திப்பின்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தற்போதுள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்கு தமிழ்நாட்டிற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி உள்ளார்கள்.

2011 ஆகஸ்ட் 18]

5.2 நபார்டு ஊரக உட்கட்டமைப்பு சாலைப் பணிகள்

மத்திய அரசின் வழிகாட்டுதலுக்கிணங்க, 1995-1996 ஆம் ஆண்டு நபார்டு வங்கி, கிராமப் பகுதிகளில் மாநில அரசு, அரசுத் துறை நிறுவனங்கள், கிராம ஊராட்சிகள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு, உட்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக நிதி உதவி வழங்கும் பொருட்டு, ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியை உருவாக்கியது. நபார்டு வங்கி பல்வேறு பகுதிகளாக இந்த நிதியினை விடுவித்து வருகிறது. இந்த நிதியின்மூலம் பெரும்பான்மையான கிராமப்புறச் சாலைகள், பாலங்கள், சிறுபாசனக் கட்டமைப்புகள், பள்ளிகள், சுகாதார மையங்கள் மற்றும் மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

நபார்டு வங்கி தமிழக அரசுக்கு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியினை கடனாக வழங்கி வருகிறது. சாலைகள் மற்றும் பாலங்களுக்கு நிதி வழங்குவது, ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி—II-வது பகுதியில் இருந்து துவங்கியது. இந்த நிதி, சாலைகள் அமைத்தல், ஏற்கெனவே உள்ள சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல், பழுதடைந்த தார்ச்சாலைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் மூலமாக இதுவரை மொத்தம் 4,307 சாலைப் பணிகள், ரூ.1,322.37 கோடி மதிப்பீட்டில் 10,580.46 கி.மீ. நீளத்திற்கு எடுக்கப்பட்டு, இதுவரையில் 3,888 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

ஊரக உட்கட்டமைப்பு நிதி XVII-ன்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்பாடு செய்திட, 2,837.06 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளுக்காக ரூ.452.12 கோடி மதிப்பீட்டிலான கருத்துருவினை தமிழக அரசு நபார்டு வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளது. இதில் முதல் கட்டமாக, நபார்டு வங்கியால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 902.07 கி.மீ நீளமுள்ள 333 சாலைப் பணிகள் ரூ.143.67 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தபடவுள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

5.3 தரமான திட்ட செயலாக்கத்திற்கான புதிய நடவடிக்கைகள்

- தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகளை பலப்படுத்தும் விதமாக முக்கியமான சோதனைக்கருவிகள் மாவட்டங்களில் உள்ள தரக்கட்டுப்பாடு ஆய்வகங்களுக்கு வழங்கப்படும். மேலும், அனைத்து ஆய்வகங்களிலும் ஒரே தரத்திலான சோதனைக்கருவிகள் இருப்பது உறுதி செய்யப்படும்.

- அரசு நிறுவனங்களால் நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்கள் மற்றும் சிறந்த பொறியியல் நிறுவனங்கள் மூலம் பல்வேறு தரக்கட்டுப்பாடு சோதனைகள் செய்வதன் மூலமாக பணிகள் உரிய தரத்தில் செயல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.

- ஒப்பந்தப்புள்ளி கோரும் அனைத்து அமைப்புகளும் ரூ.1000 லட்சம் மதிப்பீட்டிற்கு மேலுள்ள அனைத்து பணிகளுக்கும் மின் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வழிவகை செய்யப்படும்.

- ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தமட்டில், மாவட்ட மற்றும் வட்டார அளவில் மதிப்பீடுகள் தயாரித்தல், நிர்வாக அனுமதி வழங்குதல், ஒப்பந்ததாரர் மற்றும் பயனாளிகளுக்கு வேலை உத்தரவு வழங்குதல் மற்றும் இதர நிர்வாக நடவடிக்கைகள் மிக அதிகமான எண்ணிக்கையில் உள்ளது. இதனால், மாவட்ட மற்றும் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திற்கும், பொறியியல் பிரிவிற்கும் மிகுந்த பணிச்சுமை ஏற்படுகிறது. இப்பணிகளை எளிதாக்கி, மதிப்பீடுகளை துரிதமாக தயாரிக்க மென்பொருள் அறிமுகப்படுத்தப்படும். கணினி மூலமாக நிர்வாக அனுமதி மற்றும் வேலை உத்தரவு வழங்கி அதன்மூலம் நிர்வாகக் காரணங்களால் ஏற்படும் காலதாமதத்தினைத் தவிர்த்து, மேலும் திறமையான, வெளிப்படையான மற்றும் பொருத்தமான நிர்வாக முறைகள் அறிமுகப்படுத்தப்படும்.

- இந்த அரசு, பல்வேறு திட்டங்கள்மூலம் கட்டப்படும் கட்டடங்களின் மாதிரி வடிவமைப்புகளில் தேவையான மாற்றங்களைக் கொண்டு வர முடிவு செய்துள்ளது.

2011 ஆகஸ்ட் 18]

இக்கட்டடங்களின் பயனீட்டாளர்களைக் கலந்தாலோசித்து தேவைக்கேற்ப ஒரே மாதிரியான வடிவமைப்பில் மாற்றி அமைக்கப்படும்.

- பணிகளின் நிலை குறித்த விவரங்களை அவ்வப்போதே தெரிந்துகொள்வதற்காக கள ஆய்வின்போதே பணிகளைப் புகைப்படம் எடுத்து உடனடியாக விரைவு கைபேசி (smart phone) மூலம் அனுப்பும் வசதி அறிமுகப்படுத்தப்படும்.

தற்போது பல திட்டங்களின்கீழ் செயல்படுத்தப்படும் சாலைப்பணிகள் வெவ்வேறு தரத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இதைத் தவிர்க்கும் விதமாக, அனைத்துத் திட்டங்களின்மூலம் மேற்கொள்ளப்படும் சாலைப்பணிகளும் ஒரே தரத்தில் உள்ளவாறு அமைக்கப்படும்.

6. பணியமைப்பு

6.1. ஊராட்சி உதவியாளர் பணியிடம் தரம் உயர்த்துதல்

ஊராட்சி உதவியாளர்கள் தற்போது சிறப்புக் கால முறை ஊதியம் ரூ.2500-5000 மற்றும் தர ஊதியம் ரூ.500/- பெற்று வருகின்றனர். இவர்களுடைய பணியின் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு "ஊராட்சி உதவியாளர்" என்ற பதவிப் பெயரினை "ஊராட்சி செயலாளர்" என மாற்றம் செய்து, இவர்கள் ஏற்கெனவே பெற்றுவரும் ஊதியத்துடன், சிறப்புப் படியாக மாதம் ரூ.500/- வழங்கிடவும் அரசு உத்தேசித்துள்ளது.

6.2 காலிப் பணியிடங்களை நிரப்புதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள இணை இயக்குநர், உதவி இயக்குநர், வட்டார வளர்ச்சி அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், உதவியாளர், இளநிலை உதவியாளர், உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர், இளநிலைப் பொறியாளர், பணிப் பார்வையாளர்/இளநிலை வரைவாளர் மற்றும் சாலை ஆய்வாளர் ஆகிய பல்வேறு நிலையிலான பணியிடங்கள் பின்வரும் அட்டவணையில் கண்டுள்ளபடி காலிப் பணியிடங்களாக உள்ளன.

[2011 ஆகஸ்ட் 18

வ.எண்	பணியிட விவரம்	காலிப் பணியிடம்
1	இணை இயக்குநர்	8
2	உதவி இயக்குநர்	41
3	வட்டார வளர்ச்சி அலுவலர்	7
4	துணை வட்டார வளர்ச்சி அலுவலர்	130
5	உதவியாளர்	3,757
6	இளநிலை உதவியாளர்	870
7	உதவி செயற் பொறியாளர்	5
8	உதவிப் பொறியாளர்	451
9	இளநிலைப் பொறியாளர்	15
10	பணிப் பார்வையாளர்/இளநிலை வரைவாளர்	304
11	சாலை ஆய்வாளர்	536
மொத்தம்		6,124

இந்தக் காலிப் பணியிடங்களால், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பாதிப்புகள் ஏற்படும் என்பதால், காலிப் பணியிடங்கள் அனைத்தையும் நிரப்பிட இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

7. திறன் மேம்பாடு

திறன் மேம்பாடு என்பது வளர்ச்சித் திட்ட செயலாக்கத்தில் ஈடுபடும் குழுவினர், வளர்ச்சிக்கு சவாலாக உள்ள காரணங்களை அடையாள கண்டு அவற்றைக் களைந்து இலக்கை அடைவதற்கான திறமைகளை அதிகப்படுத்த ஏதுவாக உள்ள அணுகு முறையாகும். திறன் மேம்பாடானது ஒரு தொடர் நடவடிக்கை ஆகும். இதன் மூலம் வளர்ந்து வரும் சமூகத்தின் திறன்கள், தகுதிகள் மற்றும் முயற்சிகளை வலுப்படுத்துவதாகும். இது தனி மனித அளவிலும்,

நிறுவன மற்றும் சமுதாய அளவிலும் மேற்கொள்ளப்படுகிறது. ஆற்றல், திறமை மற்றும் சாதனை ஆகிய இலக்குகளை அடைவதற்கான அறிவு, திறன் மற்றும் திறமைகளைப் பெறுவதே பயிற்சியாகும்.

7.1 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் மற்றும் இத்துறையோடு தொடர்புடைய இதர துறை அலுவலர்களுக்கும் தொடர்ச்சியாக பல்வேறு பயிற்சிகளை வழங்கி வருகிறது. இப்பயிற்சி பெறுவோர் தங்களது கடமைகள் மற்றும் பொறுப்புகளை முழுவதுமாக அறிந்துகொள்ளும் வகையிலும், திறன் மேம்பாடு அடைந்து சிறப்பாகப் பணியாற்றும் வகையிலும் பயிற்சித்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மண்டல அளவில் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களும், மாநில அளவில் முதன்மை நிறுவனமாக ஊரக வளர்ச்சி நிறுவனமும் செயல்பட்டு வருகின்றன. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின்மூலம் ஊரக வளர்ச்சித் துறையில் கிராம ஊராட்சி உதவியாளர் தொடங்கி, ஊர் நல அலுவலர், இளநிலை உதவியாளர், உதவியாளர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், பணி மேற்பார்வையாளர், சாலை ஆய்வாளர் போன்ற அலுவலர்களுக்கும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் சார்புத் துறையினருக்கும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இத்தகைய மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சத்திய விஜய நகரம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி அணை, ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள தேகல்லுப்பட்டியிலும் அமைந்துள்ளன. ஒவ்வொரு பயிற்சி நிறுவனமும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள அலுவலர்கள் / உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்கின்றன.

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்தில், உதவி இயக்குநர் நிலையிலான விரிவுரையாளர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சார்புத் துறையிலிருந்து நியமிக்கப்படுகின்றனர். பண்ணை மேற்பார்வையாளர்கள், பணிமனை மேற்பார்வையாளர்கள், கம்மியர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள்

[2011 ஆகஸ்ட் 18

ஆகியோர் இந்த நிறுவனத்தின் நிர்வாக அமைப்பில் உள்ளனர். இந்நிறுவனங்களில் ஆண்டு முழுவதும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள், 10 வகையான பொதுவான பயிற்சிகளையும், 5 வகையான கணினிப் பயிற்சிகளையும் அளிக்கின்றன. மேலும், மத்திய மற்றும் மாநில அரசுகளால் அறிவிக்கப்படும் புதிய திட்டங்களுக்கான சிறப்புப் பயிற்சிகளும் இந்நிறுவனங்கள்மூலம் அளிக்கப்படுகின்றன. இவை தவிர, சார்புத் துறைகளால் நடத்தப்படும் பயிற்சிக்கான மையங்களாகவும் இந்நிறுவனங்கள் விளங்குகின்றன.

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் ஊதியம் மற்றும் ஊதியம் சாராத செலவினங்களுக்குத் தேவையான நிதியை மாநில அரசு வழங்குகிறது. இது தவிர மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் தொடர் செலவின மானியமாக ரூ.10 இலட்சத்தினை ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கும் வழங்குகின்றது. இத்துடன், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதி உதவியினையும் மத்திய அரசு அளிக்கிறது.

7.2 மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம்

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் அரசின் நலத் திட்டங்களை செவ்வனே செயல்படுத்துவதன்மூலம் கிராமப்புற மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றி வருகின்றனர். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் மற்றும் ஊராட்சி அமைப்பு பிரதிநிதிகளின் திறன் மேம்பாடு, அறிவை வளர்த்தல் மற்றும் தரமான சேவையை வழங்குவதற்கான மனப்பாங்கை வளர்த்திட திறன் மேம்பாட்டு பயிற்சி அவசியமான கருவியாக விளங்குகிறது. மாநில அளவில், திறன்வளர்த்தல் பயிற்சியினை அளிக்கும் பொறுப்பு மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் முதன்மையான பயிற்சி நிறுவனமான மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு பல்வேறு வகையான பயிற்சிகளை நடத்தி வருகிறது.

2011 ஆகஸ்ட் 18]

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், 1961 ஆம் ஆண்டு பவானிசாகரில் நிறுவப்பட்டது. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன் படி தன்னாட்சி அமைப்பாகப் பதிவு செய்யப்பட்டு 1991-ஆம் ஆண்டு முதல் மறைமலைநகரில் இயங்கி வருகிறது.

இந்நிறுவன நிர்வாக மேலாண்மை குறித்துத் தமிழக அரசு (1) ஆட்சிமன்றக்குழு, (2) செயற்குழு ஆகிய அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலர் அவர்கள் இதன் தலைவர் ஆவார். ஆட்சிமன்றக்குழு ஆண்டிற்கு ஒரு முறையும், செயற்குழு ஆறு மாதங்களுக்கு ஒரு முறையும் கூடுகிறது.

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் இயக்குநர் நிலையில் நியமிக்கப்படுகிறார். இவர், இக்குழுவின் உறுப்பினர்—செயலர் நிலையில் இந்நிறுவனத்தின் நிர்வாகத்தினைக் கண்காணித்து வருகிறார்.

7.2.1 விரிவுரையாளர்கள்

தமிழக அரசு, இந்நிறுவனத்திற்காக மொத்தம் 13 விரிவுரையாளர்கள் பணியிடங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. நேரடி நியமனம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தல நிதிக் கணக்குகள், வேளாண்மைத் துறை ஆகிய துறைகளில் இருந்து அயற்பணி மூலமும் மேற்கண்ட 13 விரிவுரையாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. மேலும், நிர்வாகப் பணிகளுக்காக 24 பணியிடங்கள் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கு தமிழக அரசு அனுமதித்துள்ளது. இதைத்தவிர மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை, 5 சிறப்பு விரிவுரையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்திட இந்நிறுவனத்திற்கு அனுமதியளித்துள்ளது.

7.2.2 நிதி ஆதாரம்

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் பயிற்சிகளை மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் நடத்துகிறது. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் கீழ்கண்டவாறு நிதி ஆதாரம் பெறுகிறது:

[2011 ஆகஸ்ட் 18

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து மக்களை நோக்கி செல்லுதல் போன்ற திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்திட அளிக்கப்படும் பயிற்சிகளுக்கு 100 விழுக்காடு நிதியுதவி மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அளிக்கிறது.

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் செயல்திறனை மேம்படுத்திட பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதித் திட்டத்தின்கீழ் நடத்தப்படும் பயிற்சிகளுக்கு 100 சதவீத நிதி, மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் துறை அளிக்கிறது. தற்போது இத்திட்டம், விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எஞ்சிய 25 மாவட்டங்களைப் பொறுத்தமட்டில் பயிற்சி செலவினங்களுக்காக, RGSY திட்டத்தின்கீழ் மத்திய அரசு 75 சதவீதமும், மாநில அரசு 25 சதவீதமும் நிதியினைப் பகிர்ந்து வழங்குகின்றன.

- தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம்— மைதாரபாத்தில் அமைக்கப்பட்டுள்ள தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனமானது, தேசிய அளவிலான பயிற்சி அளிக்கும் முதன்மை நிறுவனமாகத் திகழ்கிறது. இந்நிறுவனம், ஊரக வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்திடத் தேவையான ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி குறித்த பயிற்சி, மேலாண்மைத் திறன் வளர்த்தல் பயிற்சி மற்றும் புவியியல் தகவல் அமைப்புப் பயிற்சிகளை அளித்திட 100 விழுக்காடு நிதி உதவி அளிக்கிறது. மேலும், ஆராய்ச்சி மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள உதவி அளிக்கிறது.

- மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்கத் துறை, நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிப்பதற்காக நிதியுதவி அளிக்கிறது.

2011 ஆகஸ்ட் 18]

- மத்திய அரசின் சார்புச் செயலர்களுக்கான களப்பயிற்சிகளை அளித்திட மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கு மத்திய அரசின் பணியாளர்கள் மற்றும் பயிற்சித் துறை நிதியுதவி வழங்குகிறது.

7.2.3 நிர்வாகச் செலவினங்கள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், நிர்வாகச் செலவினத்திற்குக் கீழ்க்கண்டவாறு நிதியுதவி (Grants-in-Aid) பெறுகிறது.

7.2.4 ஊதிய மானியம்

- மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர செலவினங்களை மேற்கொள்ள மத்திய அரசு மற்றும் மாநில அரசு 50:50 என்ற விகிதத்தில் நிதியினைப் பகிர்ந்து வழங்குகிறது.
- சிறப்பு விரிவுரையாளர்களின் ஊதியச் செலவினம் முழுவதும் மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறையால் 100 விழுக்காடு வழங்கப்படுகிறது.

7.2.5 ஊதியம் அல்லாத மானியம்

- மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் அலுவலகச் செலவினங்களுக்காக தமிழக அரசு ஆண்டுதோறும் நிதி வழங்குகிறது.

7.2.6 தொடரான செலவின மானியம்

- இந்நிறுவனத்தின் உட்கட்டமைப்பினை வலுப்படுத்தி பயிற்சி வகுப்புகள் மற்றும் தங்கும் விடுதிகள் கட்டுதல், பயிற்சி அளிக்கத் தேவையான உபகரணங்கள் ஆகியவற்றிற்கான செலவினங்களை மேற்கொள்ள மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் நிதியுதவி அளிக்கிறது.

7.2.7 பயிற்சியாளர்கள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், பல்வேறு வகையான பயிற்சிகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு அளிக்கிறது. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் வட்டார வளர்ச்சி அலுவலர் முதல் கூடுதல் இயக்குநர் வரையிலும், வட்டாரப்

[2011 ஆகஸ்ட் 18

பொறியாளர்கள் முதல் செயற்பொறியாளர்கள் வரையிலும் பயிற்சி அளிக்கிறது. மேலும் இந்நிறுவனம், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புப் பிரதிநிதிகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் வங்கியாளர்களுக்குப் பயிற்சியினை அளிக்கிறது.

7.2.8 பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், உறைவிடப் பயிற்சிகளை நிறுவனத்திலும், வெளியிடப் பயிற்சிகளை மாவட்டங்கள், வட்டாரங்கள் மற்றும் ஊராட்சிகளிலும் பல்வேறு தொகுப்புகளாகப் பிரித்து நடத்தி வருகிறது. ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் யோஜனா (RGSY) குறித்த பயிற்சிகளை மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் மூலம் நடத்தி வருகிறது.

7.2.9 பயிற்சி வல்லுநர்கள்

பயிற்சிகளில் பெருமளவில் பயிற்சியாளர்கள் பங்கேற்பதையும் பயிற்சியின் தரத்தையும் உறுதி செய்யும் பொருட்டு மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் பின்வரும் சிறந்த நிறுவனங்களிலிருந்து கௌரவ விரிவுரையாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

- தேசிய தகவல் தொழில்நுட்ப மையம், சென்னை
- தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம், ஹைதராபாத்
- ஊரகத் தொலையுணர்வு மையம் (அண்ணா பல்கலைக்கழகம்), சென்னை
- அண்ணா மேலாண்மை நிறுவனம், சென்னை
- எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் காட்டாங்கொளத்தூர், காஞ்சிபுரம் மாவட்டம்
- கிரிஷ்ஷீ விக்யான் கேந்திரா, காட்டுப்பாக்கம். காஞ்சிபுரம் மாவட்டம்
- கால்நடை ஆராய்ச்சி நிலையம், பொத்தேரி, காஞ்சிபுரம் மாவட்டம்
- சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை
- பொது சுகாதார நிறுவனம், பூந்தமல்லி, திருவள்ளூர் மாவட்டம்
- வேளாண்மைப் பொறியியல் துறை, சென்னை

2011 ஆகஸ்ட் 18]

- டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம், சென்னை
- சி.பி.இராமசாமி ஆராய்ச்சி மையம், சென்னை
- பல துறைகளைச் சார்ந்த அலுவலர்கள்
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சார்ந்த அலுவலர்கள்
- தேசிய மற்றும் மாநிலத் தரக் கண்காணிப்பாளர்கள்.

சிறந்த ஊராட்சித் தலைவர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்களைக் கொண்டு பயிற்சிகளைச் சிறப்பாக நடத்தி வருகிறது.

பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்ட விவரங்கள்

வருடம்	ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்		அலுவலர்கள் மற்றும் இதர		மொத்தம்	
	பயிற்சிகளின் எண்ணிக்கை	பயிற்சியாளர்களின் எண்ணிக்கை	பயிற்சிகளின் எண்ணிக்கை	பயிற்சியாளர்களின் எண்ணிக்கை	பயிற்சிகளின் எண்ணிக்கை	பயிற்சியாளர்களின் எண்ணிக்கை
2003-04	19	593	52	1,670	71	2,263
2004-05	55	2,399	31	1,119	86	3,518
2005-06	38	1,374	83	3,077	121	4,451
2006-07	150	13,091	46	1,393	196	14,484
2007-08	71	5,559	95	4,643	166	10,202
2008-09	887	45,151	490	19,341	1,377	64,492
2009-10	1,495	71,582	372	17,826	1,867	89,408
2010-11	2,528	81,011	221	31,339	2,749	1,12,350
2011-12 (ஜூன் 2011 வரை)	14	1,197	32	1,985	46	3,182

[2011 ஆகஸ்ட் 18

7.2.10 உள்கட்டமைப்பு வசதிகள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பயிற்சிகளைச் செம்மையாக நடத்திட ஏதுவாக குளிர்சாதன வசதியுடன்கூடிய கூட்டரங்கம், பயிற்சிக் கூடம், படிக்கும் வசதியுடன்கூடிய நூலகம், இணையதள வசதி மற்றும் புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய 25 கணினிகள் கொண்ட கணினி அறை, 130 பயிற்சியாளர்கள் தங்கும் வசதியுடன் கூடிய விடுதி மற்றும் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட 40 பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி, தானியங்கி மின் ஆக்கி (125 KV-A) மற்றும் ஒலி, ஒளி சாதனங்கள் உள்ளன.

7.2.11 2011–12 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்குப் பயிற்சிகள் நடத்தக் கீழ்க்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:

- ஊராட்சி அமைப்புகள் நிர்வாகம்
- கணக்குகள் மற்றும் தணிக்கை
- பணியமைப்பு விபரங்கள்
- கணினி பயன்பாடு
- மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்
- மாநில அரசுத் திட்டங்கள்
- பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள்
- தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி
- சமூகத் தணிக்கை
- தகவல் அறியும் உரிமைச் சட்டம்
- பரவலாக்கப்பட்ட திட்டங்கள்

2011 ஆகஸ்ட் 18]

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் நடப்பு ஆண்டில் சிறப்புக் கவனத்துடன் செயல்படுத்தும் பயிற்சிகள்:

- முழு சுகாதார இயக்கம்
- மழைநீர் சேகரிப்பு
- சூரிய ஒளி சக்தி
- தமிழ்நாடு குக்கிராம மேம்பாட்டுத் திட்டம் (தாய்)
- ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்
- பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதித் திட்டம், ராஷ்ட்ரிய கிராம சுவராஜ் யோஜனா திட்டங்களின்கீழ் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்கான பயிற்சி
- ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து மக்களை நோக்கி செல்லுதல் திட்டம் குறித்த பாரத் நிர்மான் திட்டத் தன்னார்வலர்களுக்கான பயிற்சி
- மத்திய மற்றும் மாநில அரசுச் சார்புச் செயலாளர்களுக்கான களப்பயிற்சி
- பரவலாக்கத் திட்டம் குறித்த பயிற்சி

7.2.12 தற்போது நடவடிக்கையில் உள்ள பணிகள்

- ஊரகத் தொழில்நுட்ப ஆதார மையக் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்திட நிதியுதவி கோரி ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் யோஜனா திட்டத்தின்கீழ் கருத்துருக்கள் மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன.
- பரவலாக்கப்பட்ட திட்டங்கள் குறித்து ஊராட்சி அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்திட நிதியுதவி கோரி மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் துறைக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

[2011 ஆகஸ்ட் 18

2011-2012 ஆம் ஆண்டில் 2,879 அணிகளில் 2,46,746 நபர்களுக்கு ரூ.19.12 கோடி செலவில் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வெளி வளாகப் பயிற்சியாக 2,714 அணிகளில் 2,31,890 நபர்களுக்கு ரூ.15.45 கோடி செலவில் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

தமிழநாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் 1983ஆம் ஆண்டு துவக்கப்பட்டு மாநில அரசின் முழு நிதி உதவியுடன் மகளிர் மேம்பாட்டிற்கும் அதிகாரப்பகிர்வுக்கும் வழிவகுக்கும் "மகளிர் திட்டத்தை", தொண்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் கடன் இணைப்பு வழங்குதல், திறன் வளர்ப்பு, இளைஞர் திறன் பயிற்சி, பொருளாதார செயல்பாடுகளை மேம்படுத்துதல், உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதலுக்கு உதவுதல் மற்றும் ஊராட்சி அளவில் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை அமைத்தல் முதலிய செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் மத்திய அரசின் ஊரக வறுமை ஒழிப்புத் திட்டமான பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினையும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

8.1. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுத் திட்டம் (மகளிர் திட்டம்)

1991-1992 ஆம் ஆண்டு, தருமபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியைக் கொண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுத் திட்டம் பரிசோதனை முறையில் துவக்கப்பட்டது. பின்னர் இத்திட்டம் 1992-1994 ஆம் ஆண்டுகளில் சேலம், தென் ஆற்காடு, மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் பெண்களிடையே பரவலான வரவேற்பைப் பெற்றதால் வருங்கால வளர்ச்சிக்கு முன் மாதிரியாக எடுத்துக்கொள்ளப்பட்டு ஏழைக் குடும்பங்களையும் நலிவுற்ற பிரிவினரின் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு மாநில அரசின் நிதி உதவியுடன் 1995-96 ஆம் ஆண்டிலிருந்து பல கட்டங்களாக அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மாநிலத்தில் உள்ள சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் முக்கிய நிறுவனமாக இருப்பதால் மகளிர் அதிகாரப் பகிர்வு செயல்பாடுகளுக்கு அச்சாணியாக திகழ்கின்றது.

2011 ஆகஸ்ட் 18]

ஒத்த கருத்துடைய ஏழை மகளிர் தாமாகவே முன் வந்து தங்கள் வளர்ச்சிக்காக ஒன்று சேர்ந்து சேமிப்பினைப் பெருக்கிடவும், குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து ஆலோசித்து ஒரு குறிப்பிட்ட தொகையினை வாரம் அல்லது மாதந்தோறும் சேமித்து, தங்களுக்குள்ளேயே சிறுகடன் கொடுத்து உதவிக்கொள்ளும் ஒரு சிறு குழு அமைப்பதே சுய உதவிக் குழுவாகும். இக்குழுவில் 12 முதல் 20 மகளிர் வரை உறுப்பினர்களாக இருக்கலாம். குழு உறுப்பினர்கள் 18 முதல் 60 வயது உடையவர்களாக இருக்க வேண்டும். மகளிர் திட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு முறையான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சிகள் மகளிரின் சிந்தனையில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்கள் சிறப்பாகவும், ஒற்றுமையுடனும் செயல்பட வழி வகுக்கிறது.

8.1.1. தொண்டு நிறுவனங்களின் பங்கு

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், அங்கிரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளைப் பங்குதாரர்களாக இணைத்துக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், பயிற்சி அளித்தல், வழிநடத்துதல் மற்றும் அவர்களின் செயல்பாடுகளைக் கண்காணித்தல் போன்ற பணிகளைச் செயல்படுத்தி வருகிறது. வருங்காலத்தில் இந்நிறுவனமானது சுய உதவிக் குழு இயக்கத்தினை நிலைத்த தன்மை உடையதாக்கவும், கூட்டமைப்பு உருவாக்கத்தைத் தீவிரப்படுத்தவும், இக்கூட்டமைப்புகளை சமுதாயம் சார்ந்த அமைப்புகளாக உயர்த்துவதையும் மற்றும் இதுவரை சுய உதவிக் குழு அமைக்கப்படாத குடியிருப்புகள், நகர்ப்புற குடிசை பகுதிகளில் விரிவாக்கம் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இதுவரை 452 தொண்டு நிறுவனங்கள் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கிகரிக்கப்பட்டுள்ளன. பணியின் தரத்திற்கு முக்கியத்துவம் அளித்தல், அதற்கேற்ப செயல்திறன் ஊக்குவிப்புத் தொகை வழங்குதல் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பைச் சமுதாயம் சார்ந்த அமைப்பாக உருவாக்குதல் போன்ற சிறப்பம்சங்கள் தொண்டு நிறுவனங்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ளன. இது தவிர, சுய உதவிக் குழுக்களை அமைப்பதில் பயிற்சி தருவதற்காகத் தொண்டு நிறுவனங்களுக்கு குழு அமைப்புத் தொகை, குழு கண்காணிப்புத்

[2011 ஆகஸ்ட் 18

தொகை மற்றும் சுய உதவிக் குழுக்கள் வங்கியை அணுகி கடன் பெற உதவி செய்வதற்காக ஊக்கத் தொகை ஆகியன தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இத்தொண்டு நிறுவனங்களின் செயல் திறன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் மதிப்பீடு செய்யப்படுகிறது.

8.1.2 மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள்

1. குழு அமைத்தல்
2. திறன் மேம்பாடு
3. சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி
4. சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு
5. இளைஞர் திறன் பயிற்சி
6. மகளிருக்கான தொழில் திறன் பயிற்சி
7. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைத்தல்
8. நகர்ப்புறங்களில் குடிசைப்பகுதி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்புகளை அமைத்தல்
9. சந்தைப்படுத்த உதவுதல் மற்றும் விற்பனைக் கண்காட்சிகள் ஏற்பாடு செய்தல்

8.1.3 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

இதுவரை சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படாத மக்களிடையே குழுக்கள் அமைப்பதும், சுய உதவிக் குழுவில் இதுவரை இணைக்கப்படாத மகளிரை குழுக்களில் இணைப்பதும், குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், திருநங்கைகள், நலிவுற்றோர் மற்றும் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியோரை சிறப்புக் கவனம் செலுத்தி சுய உதவிக் குழுக்களில் சேர்ப்பதும் இந்த அரசின் நோக்கமாகும்.

2011-12 ஆம் ஆண்டில், 65,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்க இந்த அரசினால் திட்டமிடப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பெண் தொழிலாளர்களைக்

2011 ஆகஸ்ட் 18]

கொண்டும், நகர்ப்புற குடிசைப் பகுதிகள் மற்றும் குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத கிராம ஊராட்சிப் பகுதிகளிலும் முன்னுரிமை அடிப்படையில் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். மேலும் திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகள், எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களைக் கொண்டும் சிறப்புக் குழுக்கள் உருவாக்கப்படும். செயல்படாத குழுக்களை மீண்டும் இயங்கச் செய்யவும், மகளிர் திட்டத்தின்கீழ் இதுவரை சேர்க்கப்படாத சுய உதவிக் குழுக்களைக் கண்டறிந்து அவர்களை மகளிர் திட்டத்தில் இணைத்து அனைத்து அரசு நலத் திட்டங்களும் ஏழைப் பெண்களுக்கு சென்றடையவும் அனைத்துவகையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இதுவரை அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களின் விவரம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்கள் பற்றிய விவரம்

சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை	4,91,311
மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	76.60 இலட்சம்
ஊரக சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	3,32,092
ஊரக சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை	51,77,028
நகர்ப்புற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	1,59,219
நகர்ப்புற சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை	24,82,654
மொத்த சேமிப்புத் தொகை	ரூ.2,973 கோடி
வங்கிக் கடன் இணைப்பு பெற்ற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	4,51,248
மொத்த வங்கிக் கடன் தொகை	ரூ.11,603.83 கோடி

[2011 ஆகஸ்ட் 18

8.1.4 சமுதாய வள பயிற்றுநர்கள்

சுய உதவிக் குழுக்களின் இயக்கத்தை வலுப்படுத்தவும் அதை சமுதாயம் சார்ந்ததாக்கவும் சுய உதவிக் குழுக்களிலிருந்து சமுதாய வள பயிற்றுநர்கள் (CRPs) உருவாக்கப்பட்டனர். சமுதாய வள பயிற்றுநர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைச் சார்ந்த சமூக தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிப்பதுடன் சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சியினையும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்குவித்திடவும் உறுதுணையாக உள்ளனர். அவர்கள் சுய உதவிக் குழுக்களுக்கு மற்ற அரசு திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துபவர்களாகவும் உள்ளனர்.

8.1.5 சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி

மகளிர் திட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்ட குழுக்களுக்கும் குழுக்களின் நிர்வாகிகளுக்கும் ஒற்றுமையாகவும், சிறப்புடனும் செயல்பட முறையான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் பயிற்சி 4 பாடத் திட்டங்களாக 4 நாட்களில் அளிக்கப்படுகிறது. சுய உதவிக் குழு நிர்வாகிகளான ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோருக்கு 6 நாட்களில் 3 பாடத் திட்டங்களாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சிகள் குழுவை வழி நடத்திச் செல்லும் தலைமைப் பண்பு, குழுவாகச் செயல்படும் திறன் மற்றும் கணக்குப் பதிவேடுகளை பராமரிக்கும் முறை ஆகியவற்றை மேம்படுத்த உதவுகின்றன. இப்பயிற்சிகளில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவர்களின் வருமான இழப்பினை ஈடுகட்டும் தொகையாக ரூ.45/- வீதம் பயிற்சி நடக்கும் நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

8.1.6 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல்

குறைந்தபட்சம் ஆறு மாத காலம் முடிவுற்ற சுய உதவிக் குழுக்கள், முதல் தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்றிருப்பின் அக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்படுகிறது. குழுக்களின் ஆதார நிதி உயரவும், சிறிய வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களை மேற்கொள்ளவும், அல்லது உடல் நலம் பேணுவதற்காகவும் அல்லது கல்வித் தேவைக்காகவும் இந்த நிதியிலிருந்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடன் வழங்க பயன்படுத்தப்படுகிறது. ஆறு

மாதத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் பொருளாதாரக் கடன் பெறும் தகுதியினை சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதுவரை 4,47,081 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் 42,214 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்க இவ்வரசு திட்டமிட்டுள்ளது. ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் மானியத்துடன்கூடிய சுழல் நிதியாக ரூ. 15,000/- மற்றும் வங்கிக் கடனாக ரூ. 50,000/- வழங்கப்படும்.

8.1.7 திருநங்கை சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

இந்த அரசு இதுவரை சமுதாயத்தால் கவனிக்கப்படாத திருநங்கைகள் நல மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்தும். முதல் முறையாக திருநங்கைகளைக் கொண்டு 100 சுய உதவிக் குழுக்கள் இந்த அரசால் அமைக்கப்படும். இத்திருநங்கைகள் சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி, சுழல்நிதி மற்றும் பொருளாதாரக் கடன்கள் வழங்கப்பட்டு அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர உதவி செய்யப்படும்.

8.1.8 திருநங்கை சுய உதவிக் குழுக்களுக்கு மானியத்துடன்கூடிய கடன்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி தகுதியுள்ள திருநங்கை சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் துவங்க ரூ. 15 இலட்சம் வரை 25 சதவீத மானியத்துடன் பொருளாதாரக் கடன் வழங்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் அவர்கள் இலாபகரமான தொழில்களைத் தொடங்கி, தங்கள் வருவாயைப் பெருக்கி, சமுதாயத்தில் மதிப்புடன் வாழ வழி வகுக்கப்படும்.

8.1.9 வங்கிகள்மூலம் பொருளாதாரக் கடன்

சுய உதவிக் குழுக்கள் கந்து வட்டிக்காரர்களின் பிடியில் சிக்கி, நாளடைவில் கடனாளியாக மாறி விடுகின்றனர். வருமானம் ஈட்டக் கூடிய தொழில்களை மேற்கொள்ள வங்கிகள் குறைந்த வட்டியில் கடன் அளிப்பதால் சுய உதவிக் குழுக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைகின்றன. வங்கிகள்மூலம் முதல் கடன் இணைப்பாக வழங்கப்பட்ட ரூ.50,000/- பின்னர் தொடர் கடன் இணைப்புகளாக ரூ.1 இலட்சமாகவும் ரூ.1.50 இலட்சமாகவும் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட

பொருளாதார நடவடிக்கைகள் நிலைத்த தன்மையை அடைய இரண்டாவது மறுகடன் மற்றும் தொடர் மறுகடன் இணைப்பு, வங்கிகள் மூலமாக வழங்குவது அவசியமாகிறது.

மகளிர் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை ரூ.11,603.83 கோடி ஆகும். 2011-12 ஆம் ஆண்டில் வங்கிக் கடன் பெற்று சுய உதவிக் குழுக்களுக்கு வழங்க உயரிய இலக்காக ரூ.4,000 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

8.1.10 சுய உதவிக் குழுக்களுக்கு உயர்த்தப்பட்ட பொருளாதாரக் கடன் உதவி

கடந்த காலங்களில் பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.5 இலட்சம் வரை பொருளாதாரக் கடன் உதவி 50 சதவீத மானியத்துடனோ அல்லது அதிகபட்ச மானியமாக ரூ.1.25 இலட்சமாகவோ வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு மாண்புமிகு தமிழநாடு முதலமைச்சர் அவர்கள் பொருளாதாரக் கடன் உதவியை ரூ.10 இலட்சம் வரை உயர்த்தி 25 சதவீதம் வரையிலான மானியத்துடன் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

8.1.11 இளைஞர்களுக்கு உறுதி செய்யப்பட்ட வேலை வாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சி

இன்று மாநிலத்தில் ஏற்பட்டு வரும் பெரும் தொழில் வளர்ச்சியின் காரணமாக உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் தொழில்திறன் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருகிறது. வளர்ந்து வரும் பொருளாதாரச் சூழலில் பெருகி வரும் வேலை வாய்ப்புகளைப் பயன்படுத்தி உரிய வேலை பெற்றிட, திறன் பெறாத மற்றும் குறை திறன் பெற்ற இளைஞர்களுக்கு தேவையான தொழில் திறன் பயிற்சி அளிப்பது இன்றியமையாததாகும். இளைஞர் தொழில் திறன் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படுவதால் ஊரக இளைஞர்களை வேலை வாய்ப்பிற்கேற்ப உருவாக்கிடவும், அவர்கள் அதிக வருமானம் ஈட்டக்கூடிய வேலை வாய்ப்பினைப் பெற்றிடவும் வழிவகை செய்யப்படுகிறது. இதுவரை 93,762 இளைஞர்கள் பல்வேறு வகையான தொழில்களில் திறன் பயிற்சி பெற்றுள்ளனர். இதில் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள இளைஞர்களைத் தவிர 60,408 இளைஞர்களுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2011 ஆகஸ்ட் 18]

2011—12 ஆம் ஆண்டில் 25,000 இளைஞர்களுக்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் தொழில்திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்க இந்த அரசினால் திட்டமிடப்பட்டுள்ளது.

8.1.12 தொழில் மேம்பாட்டுப் பயிற்சி திட்டம்

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, குறிப்பாக நகர்ப்புற குழு உறுப்பினர்களுக்கு அவர்கள் ஆர்வம் காட்டும் தொழில்களில் சிறந்த நிறுவனங்களின்மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 12,329 உறுப்பினர்கள் பல்வேறு தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

இந்த அரசினால் 2011-2012 ஆம் ஆண்டில் 4,000 பெண்களுக்கு இப்பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

- நகர்ப்புற சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராக உள்ள 18 முதல் 60 வயதுடைய பெண்களில் 35 வயதிலிருந்து 50 வயதிற்குள் உள்ள பெண்களுக்கு முன்னுரிமை தரப்பட்டு அவர்களுக்கு தொழில் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது.
- ஒரு பயிற்சியாளருக்கு போக்குவரத்து செலவுடன்கூடிய உதவி தொகை ஒரு நாளைக்கு ரூ.25/- வீதம் வழங்கப்படுகிறது.
- பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள், தொழில் ஆகியவை பயிற்சி பெறவுள்ள பெண்களின் விருப்பத்திற்கேற்ப, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவிலான குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகிறது.
- சிறந்த, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்மூலம் சுய தொழில்களில் ஈடுபட பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் பயிற்சி அளிப்பதற்குப் போதுமான கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலப்பொருட்கள் கொள்முதல், இயந்திரங்கள், மதிப்புக்கூட்டல், பேக்கேஜிங், பெயரிடுதல், விலை நிர்ணயம், தரமதிப்பீடு மற்றும் சான்றிதழ் போன்றவற்றில் பயிற்சி அளிக்க வல்ல தகுதிவாய்ந்த பயிற்றுநர்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.
- பயிற்சி பெற்ற பெண்கள் சுய தொழில் மேற்கொள்வதற்கு ஏதுவாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வசதி பெற்றுத் தர முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

- சுய தொழில் மேற்கொள்ளும் பெண்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விளம்பரப்படுத்தவும், சந்தைப்படுத்தவும் ஏதுவாக மாநில மற்றும் மாவட்ட அளவில் விற்பனை கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

8.1.13 சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

மகளிர் சுய உதவிக் குழுக்களின் இயக்கத்தை வலுப்படுத்தி நிலைத்த தன்மை உடையதாக்க ஊராட்சி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழுக் கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சுய உதவிக் குழுக்கள் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், குறைகளை வெளிப்படுத்துவதற்கும், ஒன்றுகூடித் தீர்வு காண்பதற்கும் ஒரு பங்கேற்புக் களமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அமைகிறது. சுய உதவிக் குழுக்கள் தனியாக சாதிக்க முடியாததை, அவை கூட்டமைப்பில் இணைந்துத் தங்களுடைய ஒட்டுமொத்த ஆற்றலையும் வளங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலமாக சாதிக்கலாம். பொருட்களை கொள்முதல் செய்வதிலும் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதிலும் கூட்டமைப்புகள் பயனுள்ள வகையில் செயலாற்றலாம். கூட்டமைப்புகள் தங்களது ஊராட்சிகளில் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்து பயிற்சிகள் வழங்கி அவற்றை வழிநடத்தி கண்காணிக்கும் பணியையும் மேற்கொள்ளலாம். சுய உதவிக் குழுக்களின் பொதுவான இலட்சியங்களை பிரதிபலிக்கின்ற வலுவான மற்றும் ஒற்றுமையான கூட்டமைப்புகளை அமைப்பதே வருங்காலங்களில் நிலைத்த தன்மையினை அடைய வழிவகுக்கும்.

- கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு பயிற்சியளித்தல், ஆதார நிதி வழங்குதல் மற்றும் சிறந்த கூட்டமைப்புகளுக்கு விருது வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை வலுப்படுத்துகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கி வெளிப்படையான முறையில் அனைவரின் பங்கேற்புடன் செயல்படும் வகையிலும், சீரான நிர்வாகம் மற்றும் நிலைத்த தன்மை அடையும் வகையிலும் செயல்படுவது மிகவும் முக்கியமாகும்.

2011 ஆகஸ்ட் 18]

- மொத்தமுள்ள 12,618 ஊராட்சிகளில் இதுவரை மகளிர் திட்டத்தின்கீழ் 7,646 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. 2011-12ஆம் ஆண்டில் மேலும் 4,972 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு, கூட்டமைப்பு மற்றும் குடியிருப்பு அளவிலான மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு நிர்வாகம், நிதி மேலாண்மைப் பயிற்சிகள் வழங்குவதன்மூலம் வலுப்படுத்தப்படும். அத்துடன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு சமூகத் தணிக்கை, தொழில் வாய்ப்புகளைக் கண்டறிதல் மற்றும் மதிப்புக்கூட்டல் போன்ற இனங்களில் பயிற்சி வழங்கப்படும்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு 6 மாதங்கள் முடிவுற்ற பின் அவை அனைவரின் பங்கேற்பு, உள்ளடக்கம், சிறந்த மற்றும் வெளிப்படையான நிர்வாகம், கடன் ஒழுக்கம் மற்றும் சமூக மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் போன்ற நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளின் அடிப்படையில் தர மதிப்பீடு செய்யப்படும்.

8.1.14 மறுசீரமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத்தொகை

தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்று சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்கப்படுத்தும் வகையில் கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக ஒவ்வொன்றிற்கும் ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படுகிறது. இதுவரை தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற 2,825 கூட்டமைப்புகளுக்கு ரூ.1 இலட்சம் வீதம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையில் இருந்து கிடைக்கும் வட்டித் தொகை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகச் செலவினங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

2011-2012 ஆம் ஆண்டில் 3,000 தகுதி வாய்ந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஒவ்வொன்றிற்கும் ரூபாய் ஒரு இலட்சம் வீதம் வழங்க ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

8.1.15 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன்

கடன் வசதிகளைப் பெற்றுத் தரும் நிதியிடையிட்டாளராக செயல்படுவது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் முக்கியப் பணிகளில் ஒன்றாக உள்ளது. நாளடைவில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சமுதாய அளவிலான நிதி நிறுவனங்களாக மலரும். இந்த வகையில் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நிதி இணைப்பு பெறுவதற்கும், வங்கிகள் மூலம் பெருங்கடன் பெற்று உறுப்பினர்களுக்கு கடனாகக் கொடுப்பதற்கும் தகுதி பெறுகின்றன. சில மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக மறுசீரமைக்கப்பட்ட கூட்டமைப்புகளுக்குப் பெருங்கடன் வழங்கப்பட்டது. இந்த கூட்டமைப்புகளிடமிருந்து பெற்ற அனுபவத்தின் மூலம் வங்கிகளிடமிருந்துக் கூட்டமைப்புகள் பெருங்கடன் பெற்று, அதனை சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வழங்குவதிலும், கொடுத்த கடனை வட்டியோடு திரும்பப் பெற்று அதனை முறையாக தவணை தவறாமல் வங்கிகளுக்கு மீளச் செலுத்துவதிலும் வெற்றிகரமாக செயல்பட முடியும் எனத் தெரிய வந்துள்ளது. இதுவரை 300 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 73.48 கோடி பெருங்கடன் பல்வேறு வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது. 2011-2012 ஆம் ஆண்டில் இவ்வரசின் மூலம் 400 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குப் பெருங்கடன் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

8.1.16 சிறந்த மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான விருதுகள்

மகளிர் சுய உதவிக் குழுக்களையும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகள் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் 5 சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில், ஒரு சிறந்த சுய உதவிக் குழு கூட்டமைப்பு மற்றும் மூன்று சிறந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்விருதுகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மத்தியில் பெருமிதம் மிக்கதாகவும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளைச் சிறப்பாக செயல்பட வைக்கும் காரணிகளாகவும் அமைந்துள்ளன.

2011 ஆகஸ்ட் 18]

8.1.17 வங்கியாளர்களுக்கு விருதுகள்

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அவர்கள் சந்து வட்டி மற்றும் பிற நிறுவனங்களில் வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்தவும், தொழில் முதலீடு மற்றும் அன்றாட செலவினம் போன்ற பல்வேறு கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் வங்கியாளர்கள் மகளிர் பொருளாதார மேம்பாட்டில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றனர். சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்குவதில் மிகச் சிறப்பாக செயலாற்றும் வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளை கௌரவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவில் வங்கியாளர்களுக்கான விருது வழங்கப்படுகிறது. இவ்விருதுகள் சிறப்பாகச் செயல்படும் வங்கியாளர்களை மேலும் ஊக்கப்படுத்துவதோடு வங்கியாளர்கள் மத்தியில் ஆரோக்கியமான போட்டியையும் ஏற்படுத்துகிறது.

மாநில அளவில் சிறந்து மூன்று வங்கிகளுக்கும், ஐந்து வங்கிக் கிளைகளுக்கும், மாவட்ட அளவில் ஒரு வங்கி மற்றும் மூன்று வங்கிக் கிளைகளுக்கும் விருதுகள் வழங்கப்படும்.

8.1.18 சுய உதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்

சுய உதவிக் குழுக்கள் வங்கிகள், அரசுத் துறைகள் மற்றும் பிற நிறுவனங்களை அணுகுவதில் பல்வேறு சிரமங்களை சந்திக்கின்றன. சுய உதவிக்குழு மகளிர் சமுதாயத்தில் அங்கீகாரம் பெறவும், வங்கிகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களை எளிதில் அணுகி பயன் பெறவும் அடையாள அட்டை உதவுகிறது. இந்த அடையாள அட்டையில் சேமிப்பு, தர மதிப்பீட்டின் நிலை, குழு பெற்ற கடன் மற்றும் குழு உறுப்பினர்களின் விவரங்கள் இருக்கும். இந்த அடையாள அட்டைகள் ஒரே உறுப்பினர், ஒன்றிற்கும் மேற்பட்ட குழுவில் உறுப்பினராக இருப்பதைத் தவிர்க்கும். தகுதி வாய்ந்த மற்றும் செயல்படும் அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் இந்த நிதியாண்டில் அடையாள அட்டை அரசினால் வழங்கப்படும்.

8.2 பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SGSY)

பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்பு திட்டம், 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் மத்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டு, மாநில அரசினால் செயல்படுத்தப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு ஒரு

[2011 ஆகஸ்ட் 18

குறிப்பிட்ட கால இடைவெளியில் போதுமான மற்றும் நிலையான வருமானத்தை ஏற்படுத்தித் தருவதன் மூலம் வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்தும் முக்கியமான வறுமை ஒழிப்புத் திட்டமாக இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழை மகளிரைச் சென்றடையவும் அவர்களை நுண்கடன் பெறும் நிலையிலிருந்து சிறுதொழில்கள் முனைவோர் நிலைக்குப் படிப்படியாக உயர்த்தும் நோக்கத்திற்கும் சுய உதவிக் குழு முறை கடைப்பிடிக்கப்படுகிறது. இக்குறிக்கோளை அடைவதற்கு இவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பதுடன், பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்றுத் தந்தும் இவர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் செலவினத்தை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

8.2.1 பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் கூறுகள்

1. சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல்
2. சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார உதவி வழங்குதல்
3. சிறந்த நிறுவனங்கள் மூலமாக தரமிக்க திறன் வளர்ச்சி பயிற்சி வழங்குதல்
4. கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்
5. பயிற்சி அளுதல்

மாநில அளவில் சுய உதவிக் குழுக்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை மேற்பார்வையிடும் மற்றும் கண்காணிக்கும் பொறுப்பு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

2011-2012 ஆம் ஆண்டிற்கு மத்திய மாநில அரசுகளால் இத்திட்டத்திற்கு ரூ.135.25 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் ரூ.284.10 கோடி கடன் வழங்க இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறும் வகையில் செயலாக்கம் செய்ய கீழ்க்கண்ட முயற்சிகள் 2011-2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்:

2011 ஆகஸ்ட் 18]

- ஊரகப் பகுதிகளில் உள்ள 22,214 தகுதி பெற்ற குழுக்களுக்கு சுழல் நிதி மானியமாக ரூ.23.32 கோடி வழங்கப்படும்.
- 7,464 சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதாரக் கடன் வழங்கப்படும்.
- சுய உதவிக் குழுக்கள் பெரிய அளவில் முக்கியத் தொழில்களை தேர்வு செய்யவும், அதனை ஊக்கப்படுத்தவும் மாவட்ட மற்றும் வட்டார அளவில் சரியான தொழில் தொகுப்புகளை உருவாக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- 22,214 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.7.77 கோடி மதிப்பீட்டில் தரமான திறன் வளர்ப்பு பயிற்சி சிறந்த நிறுவனங்களின்மூலம் வழங்கப்படும்.
- 4,860 தனி நபர்களுக்கு ரூ.5.832 கோடி மதிப்பீட்டில் பொருளாதார கடனுதவி வழங்கப்படும்.

8.2.2 சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல்

சுய உதவிக் குழுக்கள் தங்களது பொருட்களை சந்தையில் விற்பனை செய்ய சந்தை நிலவரம் தெரியாமலும் மற்றும் வணிகப் பேச்சுவார்த்தை நடத்தப் போதுமான திறமை குறைவாக உள்ளதாலும், அவர்களுக்கு உதவிடும் வகையில், சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பையும், இணக்கத்தையும் ஏற்படுத்த இந்த அரசினால் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சுய உதவிக் குழுக்களின் பொருட்களை சந்தைப்படுத்த மாநில அளவில் ஒரு நிரந்தரமான வணிக வளாகம் சென்னையில், நுங்கம்பாக்கத்தில் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இங்கு சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. மேலும் இதே போன்று ஊரகப் பகுதிகளில் விற்பனையை மேம்படுத்தும் வகையில் ரூ.12.90 கோடி மதிப்பீட்டில் 30 மாவட்டங்களில் கட்டப்பட்டு வரும் 86 கிராமச் சந்தைகள் இந்த ஆண்டில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

[2011 ஆகஸ்ட் 18

நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் சுய உதவிக் குழுக்களின் விற்பனையை மேம்படுத்தும் வகையில் விற்பனை மற்றும் கண்காட்சி அட்டவணை ஆண்டுதோறும் தயாரிக்கப்பட்டு மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. 2011—12 ஆம் ஆண்டில் மாநில அளவில் இரண்டு, மாவட்ட அளவில் 64 மற்றும் வட்டார அளவில் 130 விற்பனைக் கண்காட்சிகளும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

8.2.3 சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு வணிகச்சின்னம் மற்றும் பேக்கேஜிங்

சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் தரமாகவும், குறைந்த விலையில் இருந்தும்கூட, பொதுவான வணிகச்சின்னம் மற்றும் சிறப்பான பேக்கேஜிங் இல்லாத காரணத்தினால் சந்தையில் நிலையான இடத்தினைப் பெற இயலவில்லை. 2011-2012 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்களின் சந்தைத் திறனை மேம்படுத்தி, சுய உதவிக் குழுக்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாநில / மாவட்ட அளவிலான அலுவலர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு சிறந்த நிறுவனங்கள்மூலம் பயிற்சி அளிக்கும். மாநில அளவில் ஒரு சிறந்த நிறுவனத்தை தேர்வு செய்து பொதுவான வணிகச்சின்னம் வழங்குவதற்கும், கண்கவரும் பேக்கேஜிங் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் ஐந்து வருட வணிக மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

8.3 தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

மத்திய அரசு, பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்பு திட்டத்தினை மறுசீரமைத்து தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற திட்டத்தினை அறிவித்துள்ளது. இந்த அரசினால் இத்திட்டம் 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து" தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்" என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள அனைத்து குடும்பங்களையும் சுய உதவிக் குழுவில் இணைப்பது, மாவட்ட, வட்டார மற்றும் ஊராட்சி அளவில் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை உருவாக்குவது, உறுப்பினர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்குவதற்காக வரையறுக்கப்படாத நிதியினை கூட்டமைப்புகளுக்கு வழங்குவது மற்றும் ஊரக இளைஞர்களுக்கு

வேலை வாய்ப்புடன்கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி அளிப்பது போன்ற அம்சங்கள் திட்டமிடப்பட்டுள்ளது.

பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தைவிட மேம்படுத்தப்பட்ட இந்தத் திட்டம், கிராமப்புறத்தில் வாழும் ஏழைகளின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துதலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது. இத்திட்டம் மக்களின் பங்கேற்பு முறைகளின்மூலம் அவர்களின் தேவைகளுக்கேற்ப செயல்படுத்தப்படும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டம் கிராமப்புற ஏழை மக்களை ஒன்று திரட்டி தங்களைத் தாங்களே நிர்வகிக்கும் நிறுவனங்களை உருவாக்கும் தளமாக விளங்குகிறது. குழுக்களாகவும் கூட்டமைப்புகளாகவும் மற்றும் தொழில் உற்பத்திக்கான அமைப்புகளாக விளங்கும் இந்த நிறுவனங்கள் பல்வேறுபட்ட நிதி மற்றும் தொழில்நுட்ப வசதிகளை மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தின் மூலமாகவும் வங்கிகளின் மூலமாகவும் பெறுவதற்கு வழிவகை உள்ளது.

8.4 நடப்பாண்டில் (2011–2012) செயல்படுத்தப்படவுள்ள முக்கிய பணிகள்

1. சுய உதவிக் குழுக்களின் பொருளாதார தரத்தை மேம்படுத்த ரூ.10.00 இலட்சம் வரை தொழிற் கடன் 2.5 சதவீதம் வரையிலான மானியத்துடன் வழங்கப்படும்.

2. சிறப்புக் கவனம் செலுத்தி திருநங்கையர் குழுக்கள் அமைத்து அவற்றில் தகுதி வாய்ந்த குழுக்களுக்கு ரூ.15.00 இலட்சம் வரை கடன் வழங்கி பொருளாதார நடவடிக்கைகளில் முன்னேறவும் மேலும் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் வழிவகை செய்யப்படும்.

3. 65,000 சுய உதவிக் குழுக்கள் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் அமைக்கப்படும். சுய உதவிக் குழுக்கள் விடுபட்ட பகுதிகளிலும் குறைவாக அமைக்கப்பட்ட பகுதிகளிலும் முன்னுரிமை அளிக்கப்படும். சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் விளிம்புநிலை மக்களைக் கொண்டும் சிறப்பு குழுக்கள் அமைக்கப்படும்.

4. சுழல் நிதி மானியமாக தலா ரூ.15,000/- வீதம் 42,214 சுய உதவிக் குழுக்களுக்கு (ஊரகம் 22,214 மற்றும் நகர்ப்புறம் 20,000) ரூ.63.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வங்கிகளிலிருந்து கடன் தொகை பெற்றுத் தரப்படும்.

[2011 ஆகஸ்ட் 18

5. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார மேம்பாடு அடைவதற்காக வங்கிகள்மூலம் ரூ.4,000 கோடி கடன் பெற ஏற்பாடு செய்யப்படும். சுய உதவிக் குழுக்களுக்கு அவர்களின் தேவையை கண்டறிந்து அதன் அடிப்படையில் கடன் உதவி வழங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

6. மறுசீரமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெறும் 3000 ஊராட்சி அளவிலான கட்டமைப்புகள் ஒவ்வொன்றிற்கும் ரூ.100 இலட்சம் வீதம் ஊக்கநிதியாக இந்த நிதியாண்டில் வழங்கப்படும்.

7. நகர்ப்புற குடிசைப்பகுதி அளவிலான 300 கட்டமைப்புகள் அமைத்து அவற்றை மேலும் வலுப்படுத்தும் வகையில் தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெறும் 150 குடிசைப்பகுதி அளவிலான கட்டமைப்புகள் ஒவ்வொன்றிற்கும் ரூ.100 இலட்சம் வீதம் ஊக்கநிதி வழங்கப்படும்.

8. சிறந்த நிறுவனங்கள்மூலம் 25,000 இளைஞர்களுக்கு பல்வேறுபட்ட தொழிற் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அந்த நிறுவனங்கள்மூலம் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

9. பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் 7,464 சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதாரக் கடன் வழங்கப்படும். திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.1.25 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.

10. தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் / தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் (75% மத்திய அரசு மற்றும் 25% மாநில அரசு நிதி உதவியுடன்) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டம் என்னும் பெயருடன் இந்த ஆண்டு 15 மாவட்டங்களில் 60 வட்டார ஊராட்சிகளில் தீவிரமாக செயல்படுத்தப்படும்.

2011 ஆகஸ்ட் 18]

9. உலக வங்கி உதவி பெறும் புதுவாழ்வு திட்டம்

9.1 முன்னுரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நவம்பர் 2005 ஆம் ஆண்டு "புதுவாழ்வு" என்ற பெயரில் இத்திட்டம் துவக்கப்பட்டது. "வாழ்ந்து காட்டுவோம்" என 2006-ல் மறு பெயரிடப்பட்ட இத்திட்டம் 2011 முதல் மீண்டும் "புது வாழ்வு" என்றே அழைக்கப்படும். உலக வங்கி நிதி உதவியுடன் 5.8 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன் பெறும் வகையில் 16 மாவட்டங்களில் இத்திட்டம் ரூ.717 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்ட காலம் செப்டம்பர் 2014 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. கூடுதல் நிதி ஆதாரத்துடன் மேலும் 3.8 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன் பெற்றிடும் வகையில் ரூ.950 கோடி நிதி ஆதாரத்துடன் 10 மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டு செப்டம்பர் 2014-ல் நிறைவடையவுள்ளது.

மக்களே முன்நின்று தங்களின் வளர்ச்சிக்கு பொறுப்பேற்று நடத்துதல் என்ற அணுகுமுறையின் அடிப்படையில் திட்ட வடிவமைப்பு அமைந்துள்ளது. ஏழை எளிய மக்கள் குறிப்பாக பெண்களின் குரல் எடுபடும் வகையில் அவர்கள் பங்கேற்று அதிகார பங்களிப்பு பெற்றிட மக்கள் அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் இவர்கள் முக்கிய முடிவு எடுக்கின்ற அதிகாரம் பெறுவதுடன் வளர்ச்சிக்கான முயற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் வகையில் ஆற்றலளிப்பு பெறுகின்றனர். இந்த அணுகுமுறையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- முடிவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆதாரங்களை மேலாண்மை செய்யும் பொறுப்பு மக்கள் அமைப்புகளுக்கு பெற்றுத் தருதல்.
- மிகவும் ஏழை, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் நலனில் அதிக கவனம் செலுத்துதல்.
- ஊராட்சி அமைப்புகளுடன் வலுவான இணைப்புகளை ஏற்படுத்துதல்.
- வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருதல்.

[2011 ஆகஸ்ட் 18

- மக்களின் தேவைகளுக்கு செவி சாய்த்து, பொறுப்புடன் மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் அனைத்து நிலைகளிலும் செயலாற்றுதல்.

9.2 திட்ட விரிவாக்கத்திற்கான கூடுதல் நிதி ஆதாரம்

மக்களை முன் நிறுத்தி, அவர்களை தங்களின் வளர்ச்சிக்கு பொறுப்பாக்கும் வழிமுறை மற்றும் புதுவாழ்வு திட்ட வடிவமைப்பு எதிர்பார்க்கும் பலன்களை அளிக்கவல்லதா என்பதை கண்டறியும் முகத்தான், குறிப்பிட்ட சில வட்டாரங்களில் இத்திட்டம் முன்னோடியாக செயல்முறைப்படுத்தப்பட்டது. இம்முயற்சி அடைந்த வெற்றியின் அடிப்படையில் இத்திட்டம் 16 மாவட்டங்களில் குறிப்பிட்ட 70 வட்டாரங்களில் அடங்கும் 2509 கிராம ஊராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டில் உள்ள மொத்த கிராம ஊராட்சிகளில், 20 சதவீத ஊராட்சிகளும், மொத்தமுள்ள வட்டாரங்களில், 18 சதவீத வட்டாரங்களும், திட்ட செயலாக்கத்தின்கீழ் வந்துள்ளன. புது வாழ்வு திட்டம் அடைந்த வெற்றியே இதை மேலும் சில மிகவும் பின்தங்கியுள்ள மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த ஊக்குவித்தது.

திட்ட விரிவாக்கத்திற்கான மேலும் 10 மாவட்டங்கள் கண்டறியப்பட்டு அவற்றில் திட்ட செயலாக்கத்திற்கு தகுதியானவை என 46 வட்டாரங்கள் தெரிவு செய்யப்பட்டன. மேலும், ஏற்கெனவே திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாவட்டங்களில் 4 வட்டாரங்கள் கூடுதலாக எடுக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே திட்ட செயலாக்கத்திற்கு உட்படும் 70 வட்டாரங்கள் நீங்கலாக இவ்விரிவாக்கத்தின்மூலம், புதிதாக எடுக்கப்பட்டுள்ள 50 வட்டாரங்களில் 3.8 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயனடையும்.

9.3 திட்ட செயலாக்கப் பகுதிகள்

தமிழ்நாட்டில் உள்ள 385 வட்டாரங்களில், ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு வட்டாரங்களான 120 வட்டாரங்களில் திட்ட செயலாக்கம் நடைபெறும். மேலும், 2011 செப்டம்பர் மாதம் முடிவடைய இருந்த திட்ட காலம், செப்டம்பர் 2014 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திட்டம் ஏற்கெனவே செயல்படும் வட்டாரங்கள் மற்றும் புதிதாக எடுத்துக்கொள்ளப்பட்ட வட்டாரங்கள் இவற்றில் அடங்கும் ஊராட்சிகள் தொடர்பான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

2011 ஆகஸ்ட் 18]

9.3.1 திட்டப்பகுதிகள்

திட்டம்	வட்டாரங்கள்	கிராம ஊராட்சிகள்	மொத்த குடும்பங்கள் (இலட்சத்தில்)	மொத்த இலக்கு குடும்பங்கள் (இலட்சத்தில்)
திட்டம் நடைமுறையில் உள்ள பகுதிகள்	70	2,509	16.97	5.8
புதிதாக எடுத்துக் கொள்ளப்பட்ட பகுதிகள்	50	1,661	11.24	3.8
மொத்தம்	120	4,170	28.21	9.6

திட்ட நிதி ஆதாரம் – திட்டம் நடைமுறையில் உள்ள பகுதிகள்

நிதி ஆதாரம்	ரூ. (கோடியில்)	சதவீதம்
உலக வங்கி (பன்னாட்டு வளர்ச்சி நிதியம் – IDA)	541	75
தமிழ்நாடு அரசு	122	17
மக்கள் பங்களிப்பு	54	8
மொத்தம்	717	100

திட்ட நிதி ஆதாரம் – புதிய திட்டம் நடைமுறையில் உள்ள பகுதிகள்

நிதி ஆதாரம்	ரூ. (கோடியில்)	சதவீதம்
உலக வங்கி (பன்னாட்டு வளர்ச்சி நிதியம் – IDA)	760	80
தமிழ்நாடு அரசு	132	14
மக்கள் பங்களிப்பு	58	6
மொத்தம்	950*	100

** ரூ.222.85 கோடி ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டப் பகுதிகளுக்கும், ரூ.727.15 கோடி புதிய பகுதிகளுக்குமான ஒதுக்கீடாகும்.*

[2011 ஆகஸ்ட் 18

9.4 திட்ட செயலாக்க அமைப்புகள்

திட்டத்தை செம்மையாக செயல்படுத்த மாநில சங்கம் ஏற்படுத்தப்பட்டு திட்ட இயக்குநர் தலைமையில் பல்முனை திறன் படைத்த வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்று உள்ளது. புது வாழ்வு திட்ட விரிவாக்கத்தால் ஏற்படும் அதிக பளுவை கருத்தில் கொண்டு இவ்வலுவலகத்தில் கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திட்ட செயல்பாடு மற்றும் அதன் மேற்பார்வையை ஏற்று வழி நடத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவிலான ஒரு சங்கம் உள்ளது. இச்சங்கத்தின்கீழ் பல்துறை வல்லுநர்களை அடக்கிய செயலாக்க அமைப்பு இயங்குகிறது.

களத்தில் திட்ட அமலாக்கத்தை செவ்வனே மேற்கொள்ள 10—15 கிராம ஊராட்சிகள் அடங்கிய ஒவ்வொரு பகுதிக்கும் 5 பணியாளர்கள் கொண்ட திட்ட ஒருங்கிணைப்பு அணி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வணி கிராம அளவிலான அமைப்புகளுக்கு உறுதுணையாக நிற்கும்.

கிராம ஊராட்சி அளவில், இலக்கு மக்களை உள்ளடக்கிய சுயமாக செயல்படக்கூடிய தற்சார்பு அமைப்பான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், திட்ட செயல்பாட்டிற்கு பொறுப்பாகிறது.

9.5 திட்ட செயலாக்க கட்டங்கள்

திட்ட செயல்பாட்டின் பல்வேறு கட்டங்கள் பின்வருமாறு:

புதிய திட்ட பகுதிகளில் செயல்பாடுகள்

1. துவக்க நிலை செயல்பாடுகள்
2. மக்கள் அமைப்புகள் அமைத்தல்
3. வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்

ஏற்கெனவே உள்ள திட்ட பகுதிகளில் செயல்பாடுகள்

4. கிராம அளவில் நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்
5. கிராமங்களுக்கு இடையேயான மக்கள் அமைப்புகளை ஏற்படுத்துதல்

2011 ஆகஸ்ட் 18]

6. கிராமங்களுக்கு இடையில் வாழ்வாதார நடவடிக்கைகளை உருவாக்குதல்

7. சுய சார்பு நிலை அடைதல்

(கூடுதல் விவரங்கள் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளன)

9.5.1 துவக்க நிலை செயல்பாடுகள்

1. திட்ட தொலைநோக்கு, குறிக்கோள்கள், உயிர் மூச்சுக் கொள்கைகள் மற்றும் திட்டம் பல்வேறு கட்டங்களில் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளில் பங்கேற்பாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய தகவல்கள் மக்களை சென்றடைவதற்கான செறிவான தகவல் தொடர்பு நடவடிக்கைகள் ஆரம்பக் கட்டத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

2. மக்களின் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வு நடத்தப்பட்டு, சமூக வரைபடம் மற்றும் பொருளாதார நிலை அடிப்படையில் திட்ட இலக்கு மக்களாகிய ஏழை எளியோர், விளிம்பு நிலையில் உள்ளோர் மற்றும் மாற்றுத் திறன் படைத்தோர் கண்டறியப்படுகின்றனர். இம்முறை இலக்கு மக்களை வெளிப்படைத்தன்மையுடன் கண்டறிய உதவுவதுடன், திட்ட செயற்பாங்கு மற்றும் அதன் வெளிப்பாடு இலக்கு மக்களால் அங்கீகரிக்கப்பட்டு முழுமையாக உரிமை கொண்டாடப்படுகிறது.

9.5.2 மக்களமைப்புகள் மேம்பாட்டு நடவடிக்கைகள்

1. கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், சமூக தணிக்கைக் குழுக்கள், சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்புகள் மற்றும் ஒத்த தொழில் குழுக்கள் (பூச்சரம்) போன்ற மக்கள் அமைப்புகளை உருவாக்கி, வலுப்படுத்தி, இவற்றின் திறன் வளர்த்தல்.

2. சுய உதவிக் குழுக்கள் கிராம அளவிலான ஏழை மக்களின் அடிப்படை அமைப்புகளாகும். விடுபட்ட இலக்கு மக்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் இத்திட்டத்தால் உருவாக்கப்படுகின்றன. பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறன் படைத்தோரின் நலனுக்காக இவர்களை உள்ளடக்கிய சிறப்புக் குழுக்களும் ஏற்படுத்தப்படுகின்றன.

3. கூராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்களுக்கு தேவைப்படும் நிதி மற்றும் பிற உதவிகளை புரிந்திடும் சிறப்பு அமைப்புகளாகும். இவை, ஏழை எளிய குடும்பங்கள் பயன்பெறும் வகையில் குறைந்த செலவினத்தில் நிதி மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை சிறந்த முறையில் வழங்குகின்றன.

4. கிராம அளவில் ஒரே மாதிரியான வாழ்வாதார நடவடிக்கையில் ஈடுபடுவோரை ஒருங்கிணைத்து பூச்சரமாக வடிவமைத்து இவர்களுக்கு தேவைப்படும் உதவிகள், பொது கொள்முதல், சந்தைப்படுத்துதல் போன்ற பொதுவான சேவைகளை பெற்றுத் தரும் அமைப்பாக ஒத்த தொழில் குழு செயல்படும்.

9.5.3 வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள்

இலக்கு மக்கள் குடும்பங்கள் தங்களது வருவாயைப் பெருக்குவது, சொத்துகள் உருவாக்குவது மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் வாழ்வாதார மேம்பாட்டு கொள்கையாகும். இக்குடும்பங்கள் நிலையான வருவாயை ஈட்ட வழிவகை செய்யும் விதத்தில் வாழ்வாதார நடவடிக்கைகள் பேணப்பட்டு அவற்றின் வளர்ச்சிக்கான யுத்திகள் மேற்கொள்ளப்படும். இந்தக் குறிக்கோளை எட்டுவதற்காக கீழ்க்கண்ட அணுகுமுறைகள் கையாளப்படுகின்றன.

1. நிதிப் பற்றாக்குறை நிலையால் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக உரிய காலத்தில் தேவையான நிதி ஆதாரம் பெறுவதற்கான சாதகமான சூழலை ஏற்படுத்துதல்.

2. தனியார் மற்றும் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களிலுள்ள வேலை வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் கிராமப்புற இளைஞர்களுக்கு தக்க தொழிற் பயிற்சி தந்து இவர்களைத் தயார் செய்தல்.

3. கிராம அளவிலான வாழ்வாதார வாய்ப்புகளை கண்டறிந்து இவற்றை தக்க முறையில் பயன்படுத்தி பலனடைய தேவையான நடவடிக்கைகள், உற்பத்தி பொருட்களுக்கான தேவை மற்றும் சந்தை வாய்ப்புகள் கண்டறிதல், தொழில் தொடர்பான இடையூறுகளைத்

தவிர்ப்பதற்கான அறிவுரைகள் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளுதல். கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் பிற அமைப்புகளிலிருந்து, தனிநபர் வாழ்வாதார மேம்பாட்டிற்கு சிறு கடன் வசதிகள் பெற வழிவகை செய்தல்.

4. தேவையான அடிப்படை வசதிகள், உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துதலுக்கான உதவி, மதிப்பு கூட்டும் நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தி தொடர்பான இடையூறுகளை தவிர்த்தல் ஆகியவற்றின் அடிப்படையில் தனிநபர் வாழ்வாதார நடவடிக்கைகளை ஒத்த தொழிற் குழுக்களாகவும், தொழில் கூட்டமைப்புகளாகவும் உயர்த்திட ஆவன செய்தல்.

9.5.4 கிராம அளவிலான நடவடிக்கைகளை வலுப்பெறச் செய்தல்

இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் அனைத்தும் கிராம ஊராட்சி அளவிலானவை. முதல்நிலை மக்கள் அமைப்புகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டிய நிலை தற்போது தோன்றியுள்ளது. திட்டத்தின் சாதனைகள் நிலைத்திட, மக்கள் அமைப்புகள் தாங்களே தங்களது பணிகளை கவனித்துக்கொள்ளும் வகையிலும், திட்ட காலத்திற்கு பின்னர் திட்டப் பணியை இவ்வமைப்புகளே மேற்கொள்வதற்கான முயற்சிகளுடன் திட்ட செயல்பாடுகளை தீவிரப்படுத்துவதற்கு வேண்டிய சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அரசு துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் வாயிலாக தேவையான வளங்கள், உள்ளீடுகள், திறன், அறிவாற்றல் ஆகியவற்றை இத்திட்டம் திரட்டும். இதற்காக மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் தனிக் குழுக்கள் அமைக்கப்படும். இவை, திட்டத்தால் தோற்றுவிக்கப்பட்டுள்ள மக்கள் அமைப்புகளுக்கும், அரசுத் துறை மற்றும் பிற நிறுவனங்களுக்கிடையே ஒரு கூட்டாண்மை ஏற்பட பாடுபடும்.

இத்திட்டத்தால் உருவாக்கப்படும் சமூக வல்லுநர்கள் என்ற சமூக மூலதனத்தை இத்திட்டத்தின் பல்வேறு செயல்பாடுகளுக்கு பெருவாரியாக பயன்படுத்தப்படுகிறது. இந்த சமூக வல்லுநர்கள் தங்களது களப்பணி மூலம் பெற்றுள்ள அறிவு, திறன் ஆகியவற்றை சமுதாய அமைப்புகள், அரசுத் துறைகள் மற்றும் பிற நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிறது. திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்து

[2011 ஆகஸ்ட் 18

மாவட்டங்களிலும் சமூக வல்லுநர்களை உள்ளடக்கிய மக்கள் கற்றல் மையங்கள் (மகமை) தோற்றுவிக்கப்பட்டு இவர்களுக்கென தனித்துவமுடைய அமைப்புச் சார்ந்த அங்கீகாரம் பெற்றுத்தரப்பட்டுள்ளது.

9.5.5 கிராமங்களுக்கு இடையிலான அமைப்புகளை உருவாக்குதல்

முதல் தலைமுறை மக்களமைப்புகளாகிய சுயஉதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றை ஊக்குவித்து வழிநடத்திட மக்கள் கற்றல் மையம், தொழில் கூட்டமைப்புகள் போன்ற இரண்டாம் தலைமுறை மக்கள் அமைப்புகளை உருவாக்கி அவற்றைப் பேணுதல். திட்ட காலத்திற்குப் பின்னரும் மக்கள் தொடர்ந்துத் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்திடவும் நிலையான சேவைகளைப் பெற்றிடவும் இரண்டாம் தலைமுறை மக்களமைப்புகள் செயலாற்றும்.

இந்த இரண்டாம் தலைமுறை அமைப்புகள் கிராமங்களுக்கு இடையே, பகுதி அளவில், வட்டார அளவில் மற்றும் மாவட்ட அளவில் அமைக்கப்பெற்று கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் சேவை புரியும்:

1. கிராம அளவில் உள்ள முதல் தலைமுறை மக்கள் அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் இந்த அமைப்புகள் மக்களுக்கு தரமான சேவை புரிதலை உறுதி செய்தல்.

2. திட்ட காலத்திற்குப் பின்னரும் முதல் தலைமுறை மக்கள் அமைப்புகள் அடைந்துள்ள சாதனைகளை நிலைக்கச் செய்து அனைத்து இலக்கு மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிகோலுதல்.

3. இலக்கு மக்களின் வாழ்வாதார தொழில் வாய்ப்புகளைக் கண்டறிந்து மக்களின் முயற்சிகளை ஒருமுகப்படுத்தி, தொழில் மேம்படைய தேவையான அடிப்படை வசதிகள், உபகரணங்கள், தொழில்நுட்ப உதவிகள் மற்றும் சந்தை இணைப்புகள் ஏற்படுத்துதல்.

4. கிராமங்களுக்கு இடையே தோன்றக்கூடிய பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்ப்பதற்கான வழிவகை காணுதல்.

2011 ஆகஸ்ட் 18]

5. நிதி நிறுவனங்களுடன் முறையான தொடர்புகள் ஏற்படுத்தித் தருதல், வாழ்வாதார நடவடிக்கைகள் குறித்த அடிப்படை தகவல் பரிமாற்றம், தேவைப்படும் கடன்களை எளிதில் பெறுவதற்கான முயற்சிகள் மற்றும் காப்பீடு வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்துதல்.

9.5.6 கிராமங்களுக்கிடையேயான வாழ்வாதார மேம்பாடு

இதுவரை மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் ஒன்றுக்கொன்று உறுதுணையாக அமைந்திடவும் மேலும் அவற்றை வளர்ச்சி அடையச் செய்யவும் தேவையான முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் வாழ்வாதார நடவடிக்கைகள் கிராமம் என்ற எல்லையைத் தாண்டி, பல கிராமங்களுக்கு இடையே விரிவடையச் செய்வதன்மூலம் வளர்ச்சி பரிணாமத்தின் அனுகூலங்களை பெறுதல் எளிதாகும். இந்தத் திட்டம் ஒத்த தொழில் குழுக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை இணைத்து முனைப்பாக செயல்படுத்தி நிலைத்து தழைத்திட வழிவகை செய்ய அனைத்து முயற்சிகளையும் உயர்நிலை கூட்டமைப்புகள்மூலம் உருவாக்கும்.

ஒத்த தொழில் குழுக்களின் பரிணாம வளர்ச்சிக்கான செயல்பாடுகளை உயர்நிலை கூட்டமைப்பு கவனித்துக்கொள்ளும். இவ்வுயர்நிலை கூட்டமைப்புகள் தகவல் பரிமாற்ற இணைப்பு, தொழில்நுட்ப உதவிகள், மதிப்பு கூட்டுதல், கூட்டு கொள்முதல் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற பொது சேவைகளை மேற்கொண்டு ஒத்த தொழில் குழுக்கள் தங்களது வாழ்வாதார நடவடிக்கைகளை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்று நிலையான பலன்கள் பெற்றிட உதவிடும்.

9.5.7 கிராம சுயசார்பு நிலை

கிராமங்களுக்கு இடையேயான திட்ட நடவடிக்கைகளை வலுப்பெறச் செய்து நிலை நிறுத்துவதே கிராம சுய சார்பு ஆகும். இதன்மூலம் திட்டத்தின் வறுமை ஒழிப்பு முயற்சிகளின் தாக்கத்தைப் பெருக்கி, திட்ட காலத்திற்குப் பின்னர் மேற்கொள்ள வேண்டிய வழிமுறையை உருவாக்கி, திட்டத்தை ஒவ்வொரு நிலையிலும் முனைப்பாகச் செயல்படுத்திட சமுதாயத்தை தயார் செய்திடவும், திட்ட கோட்பாடுகள் மற்றும் யுக்திகளை கிராம அளவிலும் கிராமங்களுக்கிடையிலும் வலுப்பெறச் செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

[2011 ஆகஸ்ட் 18

திட்ட காலத்திற்குப் பின்னரும் உயர்நிலை மக்கள் அமைப்புகள் சமுதாயத்திற்கு தேவைப்படும் சேவைகளை சரியான கட்டணத்தில் வழங்கிட, திறன் வளர்ப்பு மற்றும் அனைத்து ஊக்குவிக்கும் உறுதுணை முயற்சிகள் எடுத்து நிலைக்கச் செய்ய கவனம் செலுத்தும். உயர்நிலை மக்கள் அமைப்புகளை வலுப்பெறச் செய்து அவற்றை நிலைப்படுத்துவதன்மூலம் திட்ட காலம் முடிவடையும் தருணத்தில் மக்கள் இடர்பாடின்றி திட்ட செயல்பாடுகளை பொறுப்பேற்று நடத்திச் செல்ல தயார் செய்தல் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இலக்கு மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்பாடடையச் செய்து, மக்களை சுயசார்புடையவர்களாக ஆக்கி, நிர்வகிக்க பொறுப்பாக்கி, தங்களின் செயல்பாடுகளை தாமே கூர்ந்தாய்வு செய்து, தங்களின் சிறப்பு செயலாக்கங்களை பிறரும் பின்பற்றும் வகையில் முன் உதாரணமாக நடந்திட ஏதுவான நடவடிக்கைகள் திட்டத்தால் மேற்கொள்ளப்படும்.

9.6 திட்ட முன்னேற்றம்

வ எண்	நடவடிக்கைகள்	31.3.2011 வரை	31.7.2011 வரை
திட்ட நிதி செலவின சாதனைகள்			
1	மக்கள் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வு செய்து இலக்கு மக்களை கண்டறிந்து கிராம சபையில் ஒப்புதல் பெறுதல்	முடிவடைந்துள்ளது	முடிவடைந்துள்ளது
2	கிராம வறுமை ஒழிப்பு சங்கம் ஏற்படுத்துதல்	முடிவடைந்துள்ளது	முடிவடைந்துள்ளது
3	பெண்கள் மற்றும் இளைஞர்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல்	14,688	14,846
4	மாற்றுத் திறனாளிகளைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல்	7,877	7,962

5	மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு வாழ்வாதார நடவடிக்கைகள் தொடங்குவதற்கு வழங்கப்பட்ட நிதி உதவிகள்	1,50,039	1,58,826
6	வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்கள்	1,44,733	1,57,661
7	வேலை வாய்ப்பு பெற்றுள்ள இளைஞர்கள்	1,02,979	1,21,553
8	மறு சீரமைக்கப்பட்டுள்ள ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகள்	2,335	2,367
9	வழங்கப்பட்டுள்ள வாழ்வாதார நிதி	ரூ.127.92 கோடி	ரூ.133.67 கோடி
10	அமைக்கப்பட்ட ஒத்த தொழில் குழுக்கள் (யூச்சாம்)	1,849	2,344
	திட்ட நிதிக்குட்படாத சாதனைகள்		
11	சுழல் நிதி பெற்ற புதிய மாற்றும் மாற்று திறனாளிகளுக்கான சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	17,394	18,022
12	சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட முதல் நிதியுதவி	ரூ.101.54 கோடி	ரூ.108.67 கோடி
13	இரண்டாம் தவணை நிதியுதவி பெற்ற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	5,254	5,666
14	சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட இரண்டாம் நிதியுதவி	ரூ.68.68 கோடி	ரூ.74.72 கோடி
15	திட்டத்தின் முயற்சியால் பராமரிப்புத் தொகை பெற்ற மாற்று திறனாளிகளின் எண்ணிக்கை	6,459	8,075
16	உபகரணங்கள் மற்றும் கருவிகள் பெற்ற மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை	14,081	15,014

17	திட்ட முயற்சியின் பலனாக முதியோர் உதவித் தொகை பெற்றவர்களின் எண்ணிக்கை	52,914	56,765

திட்டத்தின் முக்கிய சாதனைகள்

9.7 நிதி செலவினம்

இத்திட்டத்தில் தொடக்கம் முதல் 31-3-2011 வரை ரூ.589.19 கோடி நிதி ஏற்கெனவே திட்டம் செயலாக்கத்தில் உள்ள பகுதிகளில் செலவிடப்பட்டுள்ளது.

01-04-2011 முதல் 31-07-2011 வரை ஏற்கெனவே திட்ட செயலாக்கத்தில் உள்ள மற்றும் புதிய திட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.51.83 கோடி ஆகும்.

நடப்பு நிதியாண்டிற்கு (2011-2012) ஏற்கெனவே உள்ள திட்டப் பகுதிகள் மற்றும் புதிய பகுதிகளுக்கான செயல்பாட்டிற்காக ரூ.315.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்

சுனாமி என்கிற எதிர்பாராத இயற்கைப் பேரழிவு 2004-ஆம் ஆண்டு டிசம்பர் 26-ஆம் நாள் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளைத் திடீரென்று கடுமையாகத் தாக்கி மிகப் பெரிய அளவில் கடலோர சமுதாயத்தின் உயிருக்கும், உடைமைக்கும் வாழ்வாதார உட்கட்டமைப்புகளுக்கும் பெருத்த சேதங்களை விளைவித்தது. ஆயினும், தமிழ்நாடு அரசு தன்னுடைய அனைத்து சக்தியையும் முழு அளவில் ஒன்று திரட்டி, கடும் முயற்சிகள் மேற்கொண்டு மிகக் குறுகிய காலத்திலேயே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கியும் அவர்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தியும் விரைவில் இயல்புநிலை வாழ்க்கைக்குக் கொண்டு வந்தது. அரசின் இந்தத் திறன்மிகு சீரிய முன்முயற்சிகளால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுடைய மனதில் நம்பிக்கையூட்டப்பட்டு சுனாமி அதிர்ச்சியிலிருந்து அவர்கள் விரைவில் மீண்டு வந்தனர்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் ஒரு அங்கமான சுனாமி திட்ட செயலாக்க அலகு இத்துறைக்கு ஒப்படைக்கப்படும் சுனாமி மறுவாழ்வுத் திட்டப் பணிகளை 12 கடலோர

2011 ஆகஸ்ட் 18]

மாவட்டங்களில் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் 01-08-2005-ல் ஏற்படுத்தப்பட்டது. இவ்வலகு கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

10.1. சுனாமி அவசர கால உதவித் திட்டம் (Tsunami Emergency Assistance Project)

சுனாமி அவசர கால உதவித் திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் 6-4-2005 முதல் செயல்படுத்தப்பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 கடலோர மாவட்டங்களான திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகியவற்றில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதலும் மற்றும் சேதமடைந்த உட்கட்டமைப்புகளைச் சீரமைத்தலும், இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். இத்திட்டத்தின்கீழ் ரூ.292.50 கோடி செலவிடப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட இரண்டு முக்கிய உட்கூறுகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

(1) வாழ்வாதார மேம்பாட்டு உட்கூறின்கீழ் 12 கடலோர மாவட்டங்களில் உள்ள 2,70,308 பயனாளிகளுக்கு ரூ.183.23 கோடி செலவில் உதவிகள் வழங்கப்பட்டன. இந்த உட்கூறின்கீழ் சுய உதவிக் குழுக்களுக்குப் பொருளாதார உதவி, சுழல் நிதி உதவி வழங்குதல், மாற்றுத் திறனாளிகளுக்கு மானியம், மீனவ சங்கங்களுக்கு உதவுதல், இளைஞர்கள், கடலோர சமுதாயத்தினர் மற்றும் பெண்களுக்குத் திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி அளித்தல், சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் பல்வேறு சமுதாய உட்கட்டமைப்புகளை உருவாக்குதலும் ஆசிய வளர்ச்சி வங்கியின் மானிய உதவியுடன் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டது.

(2) ஊரக உட்கட்டமைப்பு உட்கூறின்கீழ் தார்ச்சாலை அமைத்தல், பொதுக் கட்டடங்கள் கட்டுதல், நேரடிக் நெல் கொள்முதல் மையங்கள் அமைத்தல் போன்ற 821 பணிகள் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் உதவியுடன் ரூ. 96.27 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

[2011 ஆகஸ்ட் 18

10.2. இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டம் (Rajiv Gandhi Rehabilitation Package)

இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டம், மத்திய அரசின் நிதியுதவியுடன் 2006-ல் ஆரம்பிக்கப்பட்டு சுனாமி திட்டச் செயலாக்க அலகினால் ரூ.716 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இத்திட்டம், கீழ்க்கண்ட உட்கூறுகளைக் கொண்டுள்ளது.

10.2.1 தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய வீடுகளைக் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் செய்தல்

திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி ஆகிய ஐந்து மாவட்டங்களில் தொண்டு நிறுவனங்கள் முதலில் கட்டுவதற்கு முன்வந்து பின்னர் கட்டாமல் விலகிய 2,687 வீடுகள் ரூ.375 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகள் உள்ள பகுதிகளில் ரூ. 804 கோடி செலவில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், குடிநீர்ப் பணிகள், தெரு விளக்குகள், வீட்டு மின் இணைப்பு வழங்குதல், நிலத்தைச் சமன்படுத்துதல், பொதுக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற 3,009 அடிப்படை வசதிப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

10.2.2 தொண்டு நிறுவனங்கள் வீடுகள் கட்டிய இடங்களில் அடிப்படை வசதிகள் செய்தல்

தொண்டு நிறுவனங்கள் தங்கள் நிதியில் கட்டிய வீடுகள் இருக்கும் பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், சுகாதார வசதிகள், நிலத்தைச் சமன்படுத்துதல், தெரு விளக்குகள் மற்றும் வீட்டு மின் இணைப்பு வழங்குதல் போன்ற 32,301 அடிப்படை வசதிப் பணிகள் ரூ.54.27 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

10.2.3 எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகளைச் செய்தல்

கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 0-200 மீட்டர் வரை உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளும், 01-01-2006 அன்று 10 ஆண்டுகள் பழமையான மற்றும் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 1,000 மீட்டருக்குள் அமைந்த இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மற்றும் சிங்காரவேலர் மீனவர் குடியிருப்புத் திட்டம் போன்ற திட்டங்களில் கட்டப்பட்டுப் பழுதடைந்த வீடுகளும் மீண்டும் வலுவுள்ளதாகக் கட்டுவதற்கு எடுக்கப்பட்டன.

2011 ஆகஸ்ட் 18]

11 கடலோர மாவட்டங்களில் 18,299 வீடுகள் ரூ.499 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு இதுவரை 17,219 வீடுகள் ரூ.454 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் நிலுவையில் உள்ள 1,080 வீடுகள் பணி முன்னேற்றத்தில் உள்ளன. இவ்வீடுகள் யாவும் விரைவில் முடிக்கப்படும்.

இந்த வீடுகள் கட்டும் பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர்ப் பணிகள், தார் சாலைகள், எரிமேடைகள், பொது கட்டடங்கள் கட்டுதல், சுகாதாரம் மற்றும் வடிகால் அமைத்தல் போன்ற 3,246 அடிப்படை வசதிப் பணிகள் ரூ.56.67 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்ட சேமிப்பு நிதியிலிருந்து 138 கூடுதல் அடிப்படை வசதிப் பணிகள் ஜூலை, 2010-ல் ரூ.736 கோடி மதிப்பில் எடுக்கப்பட்டு இதுவரை 70 பணிகள் ரூ.3 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகளை டிசம்பர் திங்கள் 2011-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

10.3 அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம்—கடலோர சமுதாயத்தின் பாதிப்புக்குள்ளாகும் நிலையைக் குறைக்கும் திட்டம் (ETRP-VRCCP)

இத்திட்டம், முதலில் உலக வங்கியின் கடனுதவியுடன் 2005-ல் (அரசு ஆணை (நிலை) எண் 384, வருவாய்த் துறை (எண்.சி.4(1), நாள் 01-07-2005) தொடங்கப்பட்டது. சுனாமியின் பாதிப்புகளைக் குறைப்பதற்காக மாநில அரசினால் நிறைவேற்றப்பட்ட மீட்பு மற்றும் மறுகட்டமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. மேலும் அக்டோபர் 2007-க்குள் இத்திட்டம் நிறைவுறும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அடுத்து வந்த காலங்களில் தொடர்ந்து கொண்டே இருந்த நடைமுறைகளால் இத்திட்டம் டிசம்பர் 2009-ல்தான் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு சுமார் ரூ.670 கோடி ஆகும். மேலும், இத்திட்டத்தின் காலஅளவு 31-12-2011 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம், எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல் மற்றும் வழிநாட்டும் பலகைகளுடன் கூடிய வெளியேறும் சாலைகள் அமைத்தல் ஆகிய இரண்டு முக்கிய உட்கூறுகளைக் கொண்டுள்ளது.

[2011 ஆகஸ்ட் 18

10.3.1 எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல்

11 கடலோர மாவட்டங்களில் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1,000 மீட்டருக்குள் அமைந்துள்ள 15,056 எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் வருவாய்த் துறையால் மீண்டும் கட்டுவதற்கு அடையாளம் காணப்பட்டு தொண்டு நிறுவனங்களால் மறுஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த வீடுகள் 157 தொகுப்புகளில் மீளக்கட்டப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்ட பின் பகுதி I-ல் (மே-ஜூலை, 2010) 61 தொகுப்புகளில் 5,619 வீடுகளும் பகுதி II-ல் (ஆகஸ்ட் - அக்டோபர், 2010) 96 தொகுப்புகளில் 9,437 வீடுகளும் மீண்டும் கட்டப்படுவதற்கு எடுக்கப்பட்டுள்ளன. இந்த 15,056 வீடுகளில் 14,385 வீடுகள் தகுதியானவை எனக் கண்டறியப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

10.3.2 இடமாற்றுப் படி மற்றும் மாத வாடகைப் படி வழங்குதல்

வீடுகள் கட்டி முடிக்கப்படும் கால அளவு 15 மாதங்களாகும். இவ்வீடுகள் கட்டி முடிக்கப்படும் வரை பயனாளிகளுக்கு ஒரே தவணையாக ரூ.1,000 இடமாற்றுப் படியாகவும் 15 மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் வாடகைப் படியாகவும் வழங்கப்படுகிறது.

கட்டப்படும் புதிய வீடுகளை இயற்கை இடர்ப்பாடுகளிலிருந்து காப்பீடு செய்வதற்காக ரூ.1,000 வரை வழங்கப்படுகிறது.

பயனாளிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், வீடுகளின் தரம் குறித்து பயிற்சி அளிக்கவும் வீட்டின் உரிமையாளர் என்ற உணர்வை உருவாக்கவும் செயல்பாட்டின் அடிப்படையில் 11 தொண்டு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட மற்றும் கிராம அளவில் குறை தீர்க்கும் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், தலைவராகவும், மாவட்ட திட்டச் செயலாக்க அலகின் திட்ட ஒருங்கிணைப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர் (நிவாரணம் மற்றும் மறுவாழ்வு), வட்டாட்சியர்,

2011 ஆகஸ்ட் 18]

செயற் பொறியாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த தோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர். கிராம அளவிலான குறை தீர்க்கும் குழுவிற்கு கிராம ஊராட்சித் தலைவர், தலைவராகவும், துணைத் தலைவர், கிராம நிருவாக அலுவலர், திட்டப் பொறியாளர், ஊராட்சியின் ஒரு பெண் உறுப்பினர், ஒரு ஆதி திராவிடர்/பழங்குடியின உறுப்பினர் மற்றும் தொண்டு நிறுவனத்தின் சார்பாக ஒருவரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

10.3.3 வழிகாட்டும் பலகைகளுடன்கூடிய வெளியேறும் சாலைகள் அமைத்தல்

புயல், அலைச்சீற்றம் மற்றும் சுனாமி போன்ற அவசர காலத்தில் கடலோர சமுதாயத்தினர் பாதுகாப்பான பகுதிகளை எளிதாகவும், விரைவாகவும் அடைவதற்கு ஏதுவாக கடலோரப் பகுதிகளில் வழிகாட்டும் பலகைகளுடன்கூடிய வெளியேறும் சாலைகள் அமைக்கும் பணி, இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 65 கோடி மதிப்பில் 12 கடலோர மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளன. உலக வங்கியின் அனுமதி பெற்ற தனியார் வல்லுனர்மூலம் மதிப்பீடுகளும் வடிவமைப்பும் இறுதி செய்யப்பட்டுள்ளன. இதுவரை 64 கி.மீ. நீளமுள்ள வெளியேறும் சாலைகளுக்கான மதிப்பீடு ரூ. 35.53 கோடி மதிப்பில் தயார் செய்யப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன.

II. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தில் (IFAD) உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (PTSLP)

11.1 திட்டக் குறிக்கோள் மற்றும் நோக்கம்

நிலைத்த தன்மையுடன்கூடிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்தி அவற்றை சீரிய முறையில் நிர்வகிக்க ஏதுவாக தற்சார்பான கடலோர சமுதாயத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர சமுதாயத்தின் உதவியுடன் பெண்களால் நிர்வகிக்கப்படும் தொழில்கள் மற்றும் வள ஆதார அமைப்புகள் ஆகியவைமூலம் இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறும்.

[2011 ஆகஸ்ட் 18

11.1.1 திட்ட விவரங்கள்

திட்ட காலம்	:	8 வருடங்கள் (2007 - 2015)
மொத்த நிதி	:	ரூ.283.69 கோடி
திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்	:	திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி
திட்டப் பகுதி	:	25 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 109 ஊராட்சிகள்

11.1.2 திட்டப் பயனாளிகள்

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கிழக்கண்ட கடலோரப் பகுதியில் வசிக்கும் மக்கள்:—

- வள்ளம், சிறு படகு போன்றவற்றைப் பயன்படுத்தி கரையோரங்களில் மீன்பிடிக்கும் மீனவர்கள்.
- கடலோரப் பகுதிகளில் மீன்பிடித் தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள்.
- சிறிய அளவில் மீன் வியாபாரம் செய்யும் மகளிர் மற்றும் பதப்படுத்துவோர்
- சிறு மற்றும் குறு விவசாயிகள்
- பிற சிறு தொழில் செய்வோர் (உ.ம்:—சங்கு, சிப்பி சேகரிப்போர்)
- சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட பரம ஏழைகள் மற்றும் ஏழைகள்

11.1.3 திட்டக்கூறுகள்

i) கடலோர வள ஆதார மேலாண்மை

2011 ஆகஸ்ட் 18]

அ. சமுதாய ஆதரவு

கடலோர கிராம ஊராட்சிகள் பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மொத்தம் 30 கூட்டு வள ஆதார மையங்கள் திட்டத்தைச் செயலாக்க துணைபுரியும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களால் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டு வள ஆதார மையத்திலும் தொகுதி ஒருங்கிணைப்பாளர், தொகுதி ஊக்குவிப்பாளர், தொகுதி தொழில் ஊக்குநர் ஆகிய மூன்று பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். கூட்டு வள ஆதார மையம் அது அமைந்துள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் உதவி புரிகிறது.

ஆ. சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடுதல்

மக்கள் பங்கேற்புடன் வளங்களை ஆய்வு செய்வதிலும், வாழ்வாதார ஆய்வு செய்து, வாழ்வாதார விளக்கப்படம் தயாரித்தல் மற்றும் உட்கட்டமைப்பு தேவைகளைக் கண்டறிந்து அவற்றை முன்னுரிமைப்படுத்துவதிலும் கூட்டு வள ஆதார மையம் ஈடுபடுகிறது. கண்டறியப்பட்ட உட்கட்டமைப்புத் தேவைகளை நிறைவேற்ற, நுண்திட்டங்களைப் பயனாளிகளின் பங்கேற்புடன், வாழ்வாதாரத் தேவைகள், மற்றும் சுற்றுச்சூழல் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்படுகின்றன.

உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்றத் திட்ட நிதியாக 90 விழுக்காடு நிதியும், சமுதாயத்தின் பங்குத் தொகையாக 10 விழுக்காடு நிதியும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இ. மீன் வள மேலாண்மை

மீன்பிடித் துறையில் அனுபவம் பெற்ற நிறுவனங்களின் உதவியுடன் மீன் வள மேலாண்மை மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் பொறுப்பான மற்றும் பாதுகாப்பான மீன்பிடி வழிமுறைகளை ஊக்கப்படுத்துதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மீனவர் சார்ந்த பிரச்சினைகளை ஆய்வு செய்து கலந்துரையாட கருத்துப் பட்டறைகளும், விழிப்புணர்வு பயிற்சிகளும் நடத்துதல் ஆகியவற்றை இத்திட்டம் மேற்கொண்டு வருகிறது.

[2011 ஆகஸ்ட் 18

11.1.4 ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள்

1. சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவி

வருவாய் ஈட்டும் தொழில்களைக் கண்டறிந்து அவற்றில் ஈடுபட ஏதுவாக சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக தேவையான கடனை வங்கிகளிடமிருந்து பெற்றுத் தருதல் போன்ற பணிகளைச் கூட்டு வள ஆதார மையம் மேற்கொள்ளும். மாவட்ட செயலாக்க அலுவலகம், கூட்டு வள ஆதார மையங்களுடன் இணைந்து, இது தொடர்பான பட்டறிவுப் பயிற்சிகளை வங்கிப் பணியாளர்களுக்கும் இதர நிதி நிறுவனங்களுக்கும் நடத்தும். தகுந்த நேரத்தில் கடனுதவி வழங்கும் அவசியத்தை உணர்த்துவதற்காக வங்கிப் பணியாளர்களுக்குப் பட்டறிவுப் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2. இடர் மேலாண்மை மற்றும் காப்பீடு

கிராமிய சமுதாயத்தின் இடர் மேலாண்மைத் தேவைகள் தொடர்பாக விவாதிக்க மாவட்ட செயலாக்க அலுவலகங்கள் பல்வேறு கருத்தரங்குகளை நடத்தி வருகின்றன. இடர் பாடு காரணமாக ஏற்படும் சேதம், கால்நடை இழப்பு மற்றும் விபத்து ஆகியவற்றால் ஏற்படும் வருமான இழப்பை ஈடுகட்டத் தேவையான துயர் துடைப்பு நிதியை குறைந்த வட்டிக்கு வழங்க வகை செய்யப்படுகிறது. இந்த நிதியில் 4/5 பங்கு திட்ட நிதியாகவும், 1/5 பயனாளிகளின் பங்குத் தொகையாகவும் இணைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. மேலும், நுண்காப்பீடு தொடர்பான பட்டறைகள் நடத்தப்பட்டு, நுண்காப்பீடு திட்டங்கள் விளக்கப்பட்டு தகுந்த திட்டத்தைத் தேர்ந்தெடுக்கச் செய்தல் மற்றும் மீனவர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு இது தொடர்பான பயிற்சிகள் அளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. தொழில் முயற்சிக்கான மூலதன நிதி

சுய உதவிக் குழுக்களும் மீனவர் சங்கங்களும் வங்கிகளிலிருந்து அவர்கள் பெறும் கடன் தொகைக்கு அதிகமாக நிதி தேவைப்படின் இந்த நிதியிலிருந்து உதவி பெறலாம். இந்நிதி, தொழில் துறை

2011 ஆகஸ்ட் 18]

சார்ந்த வல்லுநர்களைக் கொண்ட அமைப்பினால் நிர்வகிக்கப்படும். இந்த அமைப்பு IFAD நிறுவனத்தின் கொள்முதல் நடைமுறைப்படி தேர்வு செய்யப்படும்.

11.1.5 வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி

1. சுய உதவிக் குழுக்களுக்கான உதவி

சுய உதவிக் குழுக்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டமைப்புகளின் தரம் மதிப்பிடு செய்யப்பட்டுள்ளன. அதில் கண்டறியப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் வாயிலாக சரிவர செயல்படாத குழுக்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு அவற்றிற்கு வங்கிக் கடன் இணைப்புகள் அளிக்கப்பட்டு சுய உதவிக் குழுக்களுக்கான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2. மீன் விற்பனை சங்கங்கள் ஏற்படுத்துதல்

திட்ட மேலாண்மை அலகு (Project Management Unit) தென்னிந்திய மீன் விற்பனைச் சங்கங்களின் கூட்டமைப்பு (South India Federation of Fishermen's Societies) ஆகியவை இணைந்து மீன் விற்பனைச் சங்கங்கள் நிறுவ புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன. இந்த மீன் விற்பனைச் சங்கங்களில் சொந்தமாக கட்டு மரம், வள்ளம் மற்றும் சிறு படகுமூலம் மீன் பிடிப்போர் மட்டுமே உறுப்பினர் ஆவர். சங்கங்களின் உறுப்பினர்களை கடலிலிருந்து மீட்க, தென்னிந்திய மீன் விற்பனைச் சங்கங்களின் கூட்டமைப்புக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், இக் கூட்டமைப்புமூலமாக படகு கட்டும் தளம் மற்றும் படகு இயந்திரம் பழுது நீக்கும் நிலையம் தொடர்பாக பெறப்படும் முன்மொழிவுகள் ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டு வருகிறது.

3. இளைஞர்களுக்கான தொழில் கல்விப் பயிற்சி

வள ஆதார அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் (Resource NGOs) இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் தொழில்கள் மற்றும் அவற்றில் பயிற்சி அளிப்பதில் சிறந்த நிறுவனங்களைக்

[2011 ஆகஸ்ட் 18

கண்டறிகின்றன. இத்தொழில்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அங்கு அளிக்கப்படும் வேலைவாய்ப்புப் பயிற்சிகளின் கால அளவு, மாணவர்களுக்கான உதவி தொகை, ஊக்கத் தொகை ஆகியவை தொண்டு நிறுவனங்களால் நிர்ணயம் செய்யப்படுகின்றது. பெறப்படும் விண்ணப்பங்களைக் கூட்டு வள ஆதார மையங்கள் ஒருங்கிணைக்கின்றன. வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கப்படும் இளைஞர்களில் 25 சதவீதம் பெண்களாக இருக்க வேண்டும்.

4. நுண் தொழில் மேம்பாடு

தொழில்நுட்ப வல்லுநர்கள்/சிறந்த நிறுவனங்கள்/கல்விக் கூடங்கள் ஆகியவை மாவட்ட வாரியாக தொழில் உட்பிரிவுகளையும் அவை தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொள்கின்றன. மேலும் திட்ட மேலாண்மை அலகு, நுண் தொழில் மேம்பாட்டில் அனுபவம் உள்ள அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து குறிப்பிட்ட தொழில் உட்பிரிவில் தொழில் தொகுப்புகள் (Clusters) ஏற்படுத்த முனைகிறது.

11.1.6 சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை

கடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மீனவர்களுக்குப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டு கடல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடல் பாதுகாப்பை உறுதிப்படுத்திட ஏதுவான நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பான விழிப்புணர்வுக்காக துறை சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களால் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன. கடலோர பள்ளிக் குழந்தைகளுக்குப் பேரிடர் மேலாண்மை தொடர்பாக கற்பித்தலின் அவசியம் குறித்து விளக்கும் பணி வல்லுநர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. துவக்கப் பள்ளிகளில் சுற்றுச்சூழல் கல்வி மற்றும் அதற்கான கையேடுகள் தயாரித்தல் குறித்து கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. இப்பணிகளில் பள்ளி ஆசிரியர்களும் ஈடுபடுத்தப்படுகின்றனர். கையேடுகள் தயாரித்தல், அச்சடித்தல், விநியோகித்தல், அவற்றின் சீராய்வு மற்றும் விழிப்புணர்வு, கல்வியில் சிறந்த பள்ளிகளுக்கு பரிசுகள் வழங்குதல் ஆகியவையும் இந்த உட்பிரிவில் அடங்கும்.

11.2 திட்ட நிர்வாக அமைப்பு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது.

	அலகு	வழிகாட்டுதல்
மாநில அளவில்	தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்துடன் கூடிய திட்ட மேலாண்மை அலகு	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் தலைமையில் திட்ட வழிகாட்டுக் குழு செயல்படும்
மாவட்ட அளவில்	மாவட்ட செயலாக்க அலுவலகம்	மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான திட்டத்தைச் செயல்படுத்தும் ஆலோசனைக் குழு
கிராம அளவில்	கிராம கூட்டு வள ஆதார மையம்	ஊராட்சித் துறை நிறுவனங்கள் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மரபு சார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளின் தலைமையில் கிராம கூட்டு வள ஆதார ஆலோசனைக் குழு

11.3 திட்ட நிதி ஒதுக்கீடு

நிறுவன வாரியாக நிதி ஒதுக்கீடு

வ. எண்	நிறுவனம்	தொகை (ரூ.கோடியில்)	சதவீதம்
1	பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் கடன்	132.32	47
2	தமிழ்நாடு அரசு	12.00	4
3	வங்கி மற்றும் நுண்கடன் நிறுவனங்கள்	100.61	35
4	பயனாளிகளின் பங்களிப்பு	38.76	14
	மொத்த தொகை	283.69	100

[2011 ஆகஸ்ட் 18

திட்டக் கூறு வாரியாக நிதி ஒதுக்கீடு

வ. எண்	கூறுகள்	தொகை (ரூ.கோடியில்)	சதவீதம்
1	கடலோர பகுதியில் வள ஆதார மேலாண்மை	41.16	14.51
2	ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு நீக்கும் வழிமுறைகள்	159.50	56.23
3	வேலைவாய்ப்புகள் உருவாக்குதல் மற்றும் திறன் பயிற்சி அளித்தல்	66.31	23.37
4	சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை	1.80	0.63
5	திட்ட மேலாண்மை	14.92	5.26
	மொத்தம்	283.69	100

செயல்பாடு வாரியாக நிதி ஒதுக்கீடு

(ரூ. ஆயிரத்தில்)

வ. எண்	கூறுகள்	தொகை (ரூ.)	மொத்த தொகையில் சதவீதம்
அ.	கடலோர பகுதியில் வள ஆதார மேலாண்மை		
1	சமுதாய வளத் திட்டமிடல் (திறன் மேம்பாடு)	11,800	
2	சமுதாயத்தின் பங்கு (கிராம கூட்டு வள ஆதார மையங்களை நிறுவுதல்)	1,07,802	4
3	மீன்வள ஆதார மேலாண்மை (கருத்துப்பட்டறை, ஆய்வு மற்றும் மேம்பட்ட மீன்வள மேலாண்மைக்கான முன்னோடி நிதி)	27,500	1

2011 ஆகஸ்ட் 18]

4	சமுதாய உள்கட்டமைப்பு நிதி	2,64,500	9
	கூடுதல் தொகை	4,11,602	14
ஆ	ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் வழிமுறைகள்		
1	புதிய தொழில் முயற்சிக்கான மூலதன நிதி	36,000	1
2	வங்கிகள் மற்றும் நுண்நிதி நிறுவனங்களுக்கு உதவி அளித்தல் (மாவட்ட அளவில் நுண்நிதி நிறுவனங்களை நிறுவுதல், வங்கி மற்றும் நுண்நிதி பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் கருத்துப்பட்டறை ஏற்பாடு செய்தல்)	12,120	–
3	இடர்ப்பாடு தவிர்த்தல் (காப்பீடு ஆய்வு மற்றும் முன்னோடி திட்டத்தால் அளிக்கப்படும் பேரிடர் மேலாண்மைக்கான பங்கீடு மற்றும் சுய உதவிக் குழுக்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு காப்பீடுப் பயிற்சி அளித்தல்.)	39,170	1
4	பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் பதுமையை புகுத்துதல் (பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்த நுண் நிறுவனங்களுக்கு நிதி அளித்தல், நுண்நிதி நிறுவனங்களுக்கு உதவி அளித்தல், ஆய்வு மற்றும் பட்டறிவுப் பயணம்)	11,000	–
5	தொடர் கூடுதல் கடன் நிதி (சுய உதவிக் குழுக்களுக்கு நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளால் வழங்கப்படும் கடன்) நுண் நிறுவனங்கள் மற்றும் மீன் விற்பனைப் சங்கங்கள்	14,96,765	52
	கூடுதல் தொகை	15,95,055	56

இ.	வேலைவாய்ப்புகள் உருவாக்குதல் மற்றும் திறன் பயிற்சி அளித்தல்		
1	சுய உதவிக் குழுக்களுக்கு உதவி அளித்தல் (சுய உதவிக் குழுக்களுக்கு உதவி: வரைபடம், பயிற்சி, பொருட்கள் மற்றும் கூட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவன ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்தல்)	17,388	1
2	வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்கு உதவியளித்தல் (பயிற்சி அளித்தல், வியாபார அபிவிருத்தி, சிறப்பான வணிக யுக்திக்குப் பயிற்சி, புதிய தொழில்நுட்பப் பயிற்சி, வணிக இணைப்பு கருத்துப் பட்டறை)	36,970	1
3	மீன் விற்பனைச் சங்கங்கள் (கடன் சுமையிலிருந்து விடுவிக்க நிதி அளித்தல் மீன் விற்பனை கூடத்திற்கு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், பழுது பார்க்கும் பகுதி அமைத்தல், படகுத் துறை ஏற்படுத்துதல் மற்றும் நிர்வாக செலவினங்கள்)	3,16,800	11
4	சிறு தொழில் மேம்பாடு (உப தொழில் கணக்கெடுப்பு, ஆய்வு, வணிக மேம்பாட்டு சேவை, தொழில்நுட்ப முன்னோடி, தொழில்நுட்ப உதவி, வெளிநாட்டு பயிற்றுவிப்பவர்கள், பயிற்சி மற்றும் கருத்துப் பட்டறை)	2,06,855	7
5	வேலைவாய்ப்புகள் கல்வி பயிற்சிகள் அளித்தல் (ஆய்வு, வாழ்வாதார பயிற்சிக்கு உதவி அளித்தல், மீன்பிடித் தொழில் திறன் வளர்ப்பு - பயிற்சி மற்றும் கருத்துப் பட்டறை)	85,075	3
	கூடுதல் தொகை	6,63,088	24

ஈ.	சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை		
1	கடல் பாதுகாப்பு மேம்படுத்துதல் (ஒரு மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளல், செல் பேசி மானியம், பயிற்சி மற்றும் விளம்பரம்)	3,000	–
2	கடலோர பள்ளிகளுக்கு உதவியளித்தல் (தேவையை ஆய்வு செய்தல், கருத்துப் பட்டறை, கல்வியளிக்கும் பயிற்சிக்கான கருவிகளை மேம்படுத்துதல், அச்சிடுதல், வெளியிடுதல்)	15,000	1
	கூடுதல் தொகை	18,000	1
உ.	திட்ட மேலாண்மை		
1	திட்ட மேலாண்மை அலகு (வாகன வசதி, சாதனங்கள், ஊதியம், அலுவலக செலவினங்கள், பயிற்சி)	25,739	1
2	மாவட்ட அலுவலகங்கள் (வாகன வசதி, சாதனங்கள், ஊதியங்கள், அலுவலக செலவினங்கள், பயிற்சி)	1,05,156	4
3	திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (வாகனங்கள், சாதனங்கள், ஊதியங்கள், தொழில் நுட்ப உதவி அளித்தல்)	18,277	1
	கூடுதல் தொகை	1,49,172	5
	மொத்தத் தொகை	28,36,917	100

[2011 ஆகஸ்ட் 18

31–07–2011 முடிய திட்டக் கூறு வாரியான செலவின விவரம் கீழ்வருமாறு:–

(ரூபாய் இலட்சத்தில்)

திட்டக் கூறு	மொத்த திட்ட மதிப்பீடு	2007 –08 முதல் 2010-11 வரை		01- 04- 2011 - 31- 07- 2011		மொத்த செலவினம்	மொத்த திட்ட மதிப்பீட்டிற்கான செலவின சதவீதம்
		ஒதுக்கீடு	செலவினம்	ஒதுக்கீடு	செலவினம்		
கடலோர பகுதியின் வள ஆதார மேலாண்மை	4116	3341	2645	1379	310	2955	72
மரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள்	983	446	62	487	17	79	8
வேலை வாய்ப்பு உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி	5631	1646	350	1964	217	567	9
சமுதாய அடிப்படையிலான கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை	180	205	140	5	0	140	78
திட்ட மேலாண்மை	1492	778	770	383	118	888	60
மொத்தம்	13402	6418	396	4218	662	4629	35

2011 ஆகஸ்ட் 18]

2010-11 ஆம் ஆண்டு முடிய, 22 மீன் விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன (நாகப்பட்டினம்—6, திருவள்ளூர்-5, கன்னியாகுமரி-6, கடலூர்-4 மற்றும் விழுப்புரம்-1) 9 மீன் விற்பனைச் சங்கங்களைச் சேர்ந்த 442 மீனவர்களுக்குக் கடன் நிவாரணமாக ரூ.69.32 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் விதிமுறைகளின்கீழ் 1,297 பயனாளிகளுக்கு சமுதாய பங்களிப்புடன் தூயர் குறைப்பு நிதியுதவியாக ரூ.62.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினத்தில் ஒரு மீனவர்கள் கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது. 30,215 கடலோரப் பள்ளி மாணவர்களுக்கு ரூ.20.25 இலட்சம் செலவில் போர்டர் மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த தகவல், கல்வி தொடர்பு புத்தகங்கள் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டன.

1-04-2011 முதல் 31-07-2011 முடிய உள்ள காலத்தில் ரூ.479.46 இலட்சம் மதிப்பீட்டிலான 128 சமுதாய கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 14,470 கிராம மக்களுக்கு காப்பீடு மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. ரூ.129.00 இலட்சம் மதிப்பீட்டில் 28 வாழ்வாதார முன்னேற்றத்திற்கு பரிட்சார்த்த முறையில் செயல்படுத்தப்படும் தொழில் மற்றும் 28 பண்ணை மற்றும் பண்ணை சாரா குறுந்தொழில் வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரு மீன் விற்பனைச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.59.03 இலட்சம் கடன் மீட்பு நிதி வழங்கப்பட்டு 238 மீனவர்கள் கடனிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

11.3 இந்த அரசு 2011-12 ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது:

- கடலோரப் பகுதிகளின் வள ஆதார மேலாண்மையின் கீழ் 414 சமுதாய கட்டுமானப் பணிகளும் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆறு செயற்கை பவளப் பாறைகள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

- வங்கிக் கடனுடன்கூடிய சிறு தொழில்கள் வளர்ச்சிக்காக புதிய முயற்சிக்கான மூலதன நிதி (Venture Capital Fund) ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விடுவிக்கப்படும்.

[2011 ஆகஸ்ட் 18

- ஆயுள் காப்பீடு மற்றும் துயர் குறைப்பு நடவடிக்கைகளுக்காக ரூ.127.00 இலட்சம் நிதி மதிப்பீட்டில் பயிற்சி மற்றும் சம்மந்தப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படும்.

- 27 மீன் விற்பனைச் சங்கங்கள் தேவையான உட்கட்டமைப்புகளுடன் அமைக்கப்பட்டு மீனவர்களைக் கடனிலிருந்து மீட்க நிதி உதவி அளிக்கப்படும். திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு மீனவர் கூட்டமைப்பு அமைக்கப்படும்.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு படகு எந்திரம் பழுது நீக்கும் நிலையம் (Out Board Motor Repair Centre) மற்றும் ஒரு படகு கட்டும் துறை (Boat Yard) முறையே ரூ.10.00 இலட்சம் மற்றும் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும் .

- ரூ. 250.00 இலட்சம் செலவில் 2,500 இளைஞர்களுக்கு வாழ்க்கை கல்விப் பயிற்சி (Vocational Training) அளிக்கப்படும்.

- மேலும், இத்திட்டம் நிதி மேலாண்மை நீங்கலாக பாலினம், வறுமை மற்றும் அறிவு சார் மேலாண்மையை மையப்படுத்தி செயலல்படுத்தப்பட உள்ளது.

- 2011-12 ஆம் நிதி ஆண்டுக்கு ரூ.42.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. வரவு–செலவுத் திட்டம் 2011–12

2011-12 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 9,150.31 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் எதிர்பார்க்கப்படும் வருவாய் செலவினம் ரூ.7,200.30 கோடி மற்றும் மூலதனச் செலவினம் ரூ.1,950.01 கோடி ஆகும்.

13. முடிவுரை

ஊரகப் பகுதிகளிலுள்ள ஏழை, எளிய மக்களின் துயர்களைக் களைவதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது. உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவது இந்த அரசின் தலையாய நோக்கங்களில் ஒன்று. இந்த அரசால்தான் தமிழ்நாடு ஊராட்சிகள்

2011 ஆகஸ்ட் 18]

சட்டம் 1994-ல் இயற்றப்பட்டது. ஊரகக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்தவும் இவ்வரசால் 2001-2006 வரையிலான காலத்தில், பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டன. மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துவதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தியதன்மூலம் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயர்ந்தது. இந்த அரசின் மிக முக்கியமான, இன்றியமையாத குறிக்கோளான "சுகாதாரம்" (Sanitation) கடந்த 5 ஆண்டுகளில் முழுமையாக கவனிப்பாரற்று, ஒதுக்கப்பட்டது. 'மழைநீர் சேகரிப்பு' மற்றும் 'சுகாதாரம்' ஆகியவை தற்போது தீவிரமாகவும் முழுமையாகவும் செயல்படுத்தப்படும்.

சுதந்திரம் அடைந்த 64 ஆண்டுகளாக பல திட்டங்களைச் செயல்படுத்திய பின்னரும் பல குக்கிராமங்களில் அடிப்படை வசதிகள் முழுமையாக கிடைக்கப் பெறவில்லை. அனைத்து அடிப்படை வசதிகளையும் குக்கிராம அளவில் ஏற்படுத்தி அதன் மூலம் ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. ஆனால், அனைத்து குக்கிராமங்களில் தேவைப்படும் அடிப்படை வசதிகள் அனைத்தையும் அமைத்துக் கொடுக்காமல் அரசின் இந்த எண்ணம் ஈடேறாது. இதை நன்கு உணர்ந்த அனைத்து குக்கிராமங்களிலும் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திட ஒரு புதிய திட்டமான 'தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்' (தாய் திட்டம்) என்ற புதிய முன்னோடி திட்டத்தினை, முதல்முறையாக இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் ஊரக வளர்ச்சியின் பரிமாணத்தையே மாற்றும் வகையில் செயல்படுத்த உள்ளது.

உணவு மற்றும் உடைக்கு அடுத்தபடியாக "வீடு" தான் மனிதனின் மிக அத்தியாவசியமான தேவையாகும். ஏற்கெனவே குறிப்பிட்டபடி முந்தைய அரசால் செயல்படுத்தப்பட்ட வீட்டிற்கான அலகு தொகை மிகவும் குறைவாக இருந்ததைக் கருத்திற்கொண்டு இந்த அரசு தனித்தன்மையான "சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள்" திட்டத்தினைச் செயல்படுத்தி ஊரகக் குடியிருப்புத் தேவையை உண்மையான வகையில் நிறைவேற்றும்.

கட்டுமானப் பொருட்கள் விலையேற்றம் மற்றும் கட்டுமான தொழிலாளர்களின் ஊதிய உயர்வினை கருத்திற் கொண்டு, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு வழங்கும்

[2011 ஆகஸ்ட் 18

ரூ.33,750/— மற்றும் மாநில அரசின் பங்குத் தொகையான ரூ.11,250/— உடன், மேலும் கூடுதலாக ரூ.55,000/—ஐ இந்த அரசு ஒதுக்கீடு செய்து ஒரு வீட்டிற்கான அலகுத் தொகையினை ரூ.1 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய அளவு ரூ.119/— என்ற போதிலும் சராசரி ஊதிய விகிதம் ரூ.90/— ஆக மட்டுமே தற்போது உள்ளது. தொழிலாளர்கள் முழுமையான ஊதியமான ரூ.119/— பெறுகின்ற வகையில் தேவைப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்கும். ஒரு கிராம ஊராட்சியிலுள்ள பல்வேறு குக்கிராமங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் இத்திட்டத்தில் பங்கேற்கும் வகையில் "ஒரு ஊராட்சியில் ஒரு பணி" என்கிற நிலையை மாற்றி ஒரே ஊராட்சியில் பல பணிகள் எடுக்கப்படும்.

எந்தவொரு வளர்ந்து வரும் சமுதாயமும் முழுமையான மற்றும் சீரான வளர்ச்சிக்கு, சிறார் மற்றும் இளைஞோர் நலத்தில் அக்கறை செலுத்தும். இதனைக் கருத்திற் கொண்டு இந்த அரசு 'ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்' எனும் புதிய திட்டத்தைச் செயல்படுத்தும்.

மக்கள் பங்கேற்புடன் உருவாக்கப்படும் எந்த ஒரு சொத்தும்/கட்டமைப்பும் சிறந்த பராமரிப்பையும் பயன்பாட்டையும் உடையதாக இருக்கும். எனவேதான் மக்கள் பங்களிப்பினை ஊக்குவிக்கும் விதத்தில் தன்னிறைவுத் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தப்பட்டது. மக்கள் பங்கேற்பினை மேலும் ஊக்குவிக்க "தன்னிறைவுத் திட்டம்" நிதி ஒதுக்கீடு இரட்டிப்பாக்கி செயல்படுத்தப்படவுள்ளது.

அதிகரித்து வரும் எரிசக்தி தேவையைக் கருத்திற்கொண்டு தனியாக சூரிய ஒளி சக்தி கொள்கையை இவ்வரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அதற்கேற்ப, ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள தெருவிளக்குகள், சூரிய ஒளிசக்தி தெருவிளக்குகளாக மாற்றி அமைக்கப்படும். இது ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதிச்சுமையை பெருமளவில் குறைத்திடும்.

மகளிர் திட்டம், ஏழை மற்றும் விளிம்பு நிலை மகளிரை சுய உதவிக் குழு இயக்கத்தின் அரவணைப்பில் கொண்டுவந்த பல்வேறு நலத் திட்டங்கள்மூலம் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வித்திட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க

2011 ஆகஸ்ட் 18]

மாற்றத்தை ஏற்படுத்துவதில் அச்சாணியாகத் திகழ்ந்து வருகிறது. இதுவரை வளர்ச்சித் திட்டங்களில் விடுபட்ட திருநங்கைகள் மகளிர் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படுவர். பயனாளிகளாக இருந்த சுய உதவிக் குழுக்கள் தற்பொழுது அரசு திட்டங்களைச் செயல்படுத்தும் நிலைக்கு உயர்ந்துள்ளனர். திறன் வளர்த்தல், சுழல் நிதி வழங்குதல், தொழில் மேம்பாட்டு பயிற்சி, பொருளாதார உதவி, சந்தைபடுத்த உறுதுணை போன்ற அரசின் தொடர் முயற்சிகள் மற்றும் திடமான நடவடிக்கைகள்மூலம் மட்டுமே இப்பயணம் சாத்தியமானது. ஊராட்சி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழுக்களை கூட்டமைப்புகளாக உருவாக்குதலே சுய உதவிக் குழு இயக்கம் நிலைத்த தன்மையை அடைய வழி வகுக்கும். இதைக் கருத்தில் கொண்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு, வலுவூட்டப்பட்டு மற்றும் திறன் வளர்க்கப்பட்டு உறுப்பினர் சுய உதவிக் குழுக்களை வழி நடத்த ஏதுவாக உருவாக்கப்பட்டு வருகின்றன. இவ்வரசு, இந்த நிதியாண்டில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை மேம்பாட்டிற்காக தனித்தன்மையுடன்கூடிய வணிகச் சின்னம், பொருத்தமான பேக்கேஜிங் மற்றும் சந்தைப்படுத்துதலுக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கும். இந்த நிதியாண்டு முதல் புதிதாக செயல்படுத்தப்பட உள்ள "தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்", மகளிர் திட்டத்தின்மூலம் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தி நிலைத்தன்மை உடையதாக்கி ஊரக ஏழைகளின் ஒருமித்த முன்னேற்றத்திற்கும் உயர்வுக்கும் வழிவகுக்கும்.

கிராமப்புற ஏழை மக்களின் வறுமையை போக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தமிழ்நாடு அரசு 2005 ஆம் ஆண்டு மேற்கொண்ட முயற்சியின் விளைவாக, "புது வாழ்வு திட்டம்" துவக்கப்பட்டது. இத்திட்டம் மக்களை முன்நிறுத்தி அவர்களின் வளர்ச்சிக்கு அவர்களையே பொறுப்பாக்குதல் என்ற அணுகுமுறையின் அடிப்படையில் முனைப்பான நடவடிக்கை எடுத்து வருகிறது. அதிகார பங்களிப்பு, வேலை உத்திரவாதத்துடன்கூடிய திறன் வளர்ப்பு, சுய வேலை வாய்ப்பு, வங்கிக்கடன் இணைப்பு, சந்தைப்படுத்துதல், தகவல் இடைவெளியை குறைத்தல், சமுதாய மூலதனம் உருவாக்குதல், பிற திட்டங்கள்மூலம் பலன்களை பெற்று தருதல், மாற்று திறனாளிகள் நலம் பேணுதல் என்ற முயற்சிகளின் அடிப்படையில் இலக்கு மக்கள் வறுமையின் பிடியில்

[2011 ஆகஸ்ட் 18

இருந்து மீட்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம் முழுமையான வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளின்மூலம் விடுபட்ட மிகவும் ஏழை, நலிவுற்றோர், மற்றும் திக்கற்றோரின் வாழ்க்கைத் தரத்தை மாற்றியமைத்து தன்னுடைய முத்திரையை பதித்துள்ளது. தொய்வின்றி முனைப்பாக எடுக்கப்பட்ட திட்ட நடவடிக்கைகள் நிலைத்த விளைவுகளை தோற்றுவித்ததன் காரணமாக இவ்வரசால் திட்ட விரிவாக்கமும் செய்யப்பட்டுள்ளது. இதுவரை பெற்ற திட்ட பலன்களை நிலைக்கச் செய்யும் வகையில் கிராம அளவிலான மற்றும் கிராமங்களுக்கு இடையேயான திட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கு ஒரு தளம் அமைத்திடவும், வாழ்வாதார முயற்சிகளை மேம்படுத்தவும் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கும் இவ்வரசு இந்த ஆண்டு முதல் தனிக் கவனம் செலுத்தும்.

இந்த அரசானது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் ஊரக ஏழைகளுக்கான வீட்டுவசதியை மேம்படுத்துவதற்கும் சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்தி, மகளிருக்கு போதிய அதிகாரமளிப்பதற்கும் தொலைநோக்குப் பார்வையுடன் திட்டமிட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமை மற்றும் தன்னிகரற்ற வழிகாட்டுதலின்படி ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் அனைத்து முயற்சிகளையும் இவ்வரசு மேற்கொண்டு அதில் மகத்தான வெற்றி பெறும்.

தமிழ்நாட்டில் உள்ள ஊரகச் சாலைகள்

தமிழ்நாட்டில் உள்ள ஊரகச் சாலைகளின் விவரம்

ஊராட்சி ஒன்றியச் சாலைகள்



மண்சாலை	-	1,232 கி.மீ.
செஞ்சரள் சாலை	-	1,209 கி.மீ.
கப்பி சாலை	-	2,438 கி.மீ.
தார்ச்சாலை	-	26,708 கி.மீ.
கான்கிரீட் சாலை	-	214 கி.மீ.
மொத்தம்	-	**31,801 கி.மீ**

ஊராட்சி சாலைகள்



மண்சாலை	-	11,500 கி.மீ.
செஞ்சரள் சாலை	-	9,896 கி.மீ.
கப்பி சாலை	-	11,918 கி.மீ.
தார்ச்சாலை	-	36,290 கி.மீ.
கான்கிரீட் சாலை	-	1,799 கி.மீ.
மொத்தம்	-	**71,403 கி.மீ**


மாவட்ட வாரியாக மறுமுட்சி ஆன்றுபயங்களின் எண்ணிக்கை
25
20
15
10
5
0


மாவட்ட வாரியாக கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை
0
200
400
600
800
1000
1200
மாவட்டங்கள்


மாவட்ட வாரியாக குக்கிராமங்களின் எண்ணிக்கை
7000
6000
5000
4000
3000
2000
1000
0
மாவட்டங்கள்

2011–12 ஆம் ஆண்டு மூன்றாம் கூறாட்சிகளுக்கான மானியங்கள்

2011 ஆகஸ்ட் 18]

மாவட்ட வாரியாக மகளிர் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களின் விவரம் (31–3–2011 வரை)



தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (என்.ஆர்.எல்.எம்) மற்றும் தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் (என்.ஆர்.எல்.பி) கீழ் செயல்பட உள்ள மாவட்டம் மற்றும் வட்டாரம்



புதுவாழ்வு திட்டம்
திட்ட செயலாக்கப் பகுதிகள்



Copies can be had from the Assistant Director, Government Publiction Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu LegislativeAssembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.